வருவாள் காதல் தேவதை...

வித்யா சுப்ரமணியம்

வருவாள்,

காதல் தேவதை...

வித்யா சுப்ரமணியம்

தேவி வெளியீடு

தபால் பெட்டி எண்: 668

23/11, காசிம் சாகிப் தெரு,

இராயப்பேட்டை, சென்னை - 600 014.

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	வருவாள் காதல் தேவதை
ஆசிரியர்	வித்யா சுப்ரமணியம்
உரிமை	: ஆசிரியருக்கு
மொழி	: தமிழ்
முதல் பதிப்பு	
தாள்	11.6 kg. வெள்ளைத் தாள்
நூலின் அளவு	1 x 8 கிரவுன்
அச்சு எழுத்து	: 11 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	
பைண்டிங்	: சாதா அட்டை
நூல் வெளியிடுவோர்	: தேவி வெளியீடு தபால் பெட்டி எண்: 668 23/11, காசிம் சாகிப் தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.

விலை: ரூ.

கணினி அச்சு	: வேலன் லேசர் - 94441-01753
அச்சிட்டோர்	: கே.வி.எஸ். ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-14.

வருவாள்,
காதல் தேவதை...

வருவாளா,

காதல் தேவதை...

வருவாளா,
காதல் தேவதை...

காதல் பெண்களை உயர்த்தி வைக்கிறது
அவர்களுக்கு சக்தி அளிக்கிறது
ஆனால் ஆண்களை பலவீனப்படுத்தி விடுகிறது.
– டால்ஸ்டாய்

மும்பை செல்லும் எக்ஸ்பிரஸ் புறப்படத் தயாராக இருந்தது. முதல் வகுப்பு பெட்டியில் வேகமாக வந்து ஏறினான் ஆகாஷ், இன்னும் ஐந்து நிமிடம் லேட்டாக வந்திருந்தால் வண்டி கிளம்பிப் போயிருக்கும். சென்னையில் வாகன நெரிசல் அதிகரித்து விட்டது. சீக்கிரமே கிளம்பியும் கூட டிராபிக் ஜாமிலும், சிக்னலிலும் மாட்டிக் கொண்ட ஆட்டோ கட்டை வண்டிபோல்தான் ஊர்ந்தது. நல்ல காலம் வண்டி புறப்படுவதற்குள்ளாக வந்து சேர்ந்துவிட்டான்.

ஆகாஷ் தன் பிரிஃப்கேஸை பாதுகாப்பாக வைத்துவிட்டு ஜன்னலோரம் இருந்த சீட்டில் அமர்ந்தான். மூன்றாவது விசில்

ஊதப்பட வண்டி மெல்லக் கிளம்பியது. யாரோ திபுதிபுவென்று ஓடி வந்தார்கள். ஆகாஷ் ஜன்னல் வழியே பார்த்தான். ஜீன்ஸும் டீ-ஷர்ட்டும் அணிந்த இளம் பெண் ஒருத்தி காற்றில் கேசம் பறக்க ஓடி வந்து பெட்டியில் ஏற முயன்றாள். கூட்டம் அவளை பதற்றத்தோடு பார்த்தது. ஆகாஷ் சட்டென்று எழுந்து கதவருகில் வந்து நின்று ஒரு கை கொடுத்து அவளை லாவகமாய் உள்ளே இழுத்துக் கொண்டான். தேங்க்யூ என்றவளை முறைத்துப் பார்த்தான்.

''அறிவிருக்கா உனக்கு? ஓடற டிரெயின்ல ஏறப் பார்க்கறயே...! ஏதாவது ஆயிருந்தா...? பத்து நிமிஷம் முன்னாடி வர வேண்டியது தானே?''

''ஒரு மணி நேரம் முன்னாடியே கிளம்பியாச்சு. நா என்ன செய்ய மேம்பாலம் கட்டறோம்னு அங்கங்க ரோடை நோண்டி வெச்சிருக்காங்க. ஒரே டிராஃபிக் ஜாம்... பொறுமை எல்லாம் போய் ஒரு வழியா வந்து சேர்ந்தா மூணாவது விசில் ஊதறாங்க. நல்ல காலம் நீங்க ஒரு கை கொடுக்காட்டி என் பிரயாணம் தடைப்பட்டிருக்கும்?'' அவள் வியர்வையைத் துடைத்துக் கொண்டு தன் சீட் நம்பரைத் தேடிப் பிடித்து அமர்ந்தாள். அவனுக்கு எதிர் வரிசையில் கதவோரம் இருந்தது அவள் சீட்.

தனக்கேற்பட்ட அதே சோதனைதான் அவளுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்றறிந்ததும் அவளைப் பரிவோடு பார்த்தான்.

வண்டி வேகமெடுத்திருந்தது. நாலு பேர் அமரக்கூடிய அந்த அறையில் அவர்களைத் தவிர கேரளத்தை சேர்ந்த நடுத்தர வயதான தம்பதிகளும் பிரயாணம் செய்தனர். வண்டி புறப்பட்ட சற்று நேரத்தில் அவர்கள் இருவரும் மேல் பர்த்தில் ஏறி நிம்மதியாகப் படுத்துவிட அந்த இளம் பெண் காற்றுக்காக ஜன்னலருகில் வந்து ஆகாஷின் எதிரில் அமர்ந்தாள். அவள் கையில் ஒரு கிரீம் பிஸ்கட் பாக்கெட்.

''எடுத்துக்கோங்க.'' அவனிடம் நீட்டினாள்.

''நோ தேங்க்ஸ். டிரெயின்ல யார் எது கொடுத்தாலும் வாங்கி சாப்பிடறதில்ல.''

''ஓ மயக்க மருந்து கலந்து கொடுத்து கொள்ளையடிக்கற கும்பலோன்னு சந்தேகப்படறீங்களா...?''

''அப்டின்னு இல்ல... எப்பவுமே அப்டிதான்.''

''எனி ஹவ். நல்ல பழக்கம்தான். உங்க பேர்?''

''ஆகாஷ்! உங்க பேர் எனக்கு தெரியும். சுஜிதா! கரெக்டா?''

''மை காட்...எப்டி...?''

''ரொம்ப சிம்பிள். ரிஸர்வேஷன் சார்ட்ல இருக்கே!'' அவள் சிரித்தாள். ''நீங்க மும்பைக்காரரா இல்ல சென்னை வாசியா?''

''மும்பைக்கு பிரயாணம் செய்யற சென்னைவாசி.''

''நா மும்பைவாசிதான். ஆனா இப்போதைக்கு சென்னை வாசி! ஃபேஷன் டிஸைன் படிப்புக்காக ஹாஸ்டல் வாசம். வெக்கேஷனுக்காக போறேன்.''

''தமிழ் நல்லா பேசறீங்க!''

மும்பைல செட்டிலான தமிழ்க் குடும்பம்தான் எங்க குடும்பம். நா பிறந்து வளர்ந்ததெல்லாம் அங்கதான். வீட்ல தமிழ். வெளில ஹிந்தி, இங்கிலீஷ். ஸோ.. மூணு மொழி சரளமா தெரியும். ஊர் விட்டு ஊர் போய் செட்டிலாறதுல இது ஒரு வசதி இல்லையா?

''டெஃபனட்டா! இப்ப பாருங்க. நானும் தமிழ்நாட்டுக் காரன்தான். ஆனா ஹிந்தி தெரியாதே. இங்கயே வளர்ந்ததன் பலன்!''

''ஒரு வாரம் மும்பைல இருங்க. நூறு வார்த்தையாவது கத்துப்பீங்க. ஆமா என்ன வேலையா மும்பை வரிங்க?''

''ஆபீஸ் வேலை தவிர வேறென்ன?''

''எங்க வேலை பார்க்கறீங்க?''

''ஒரு விளம்பரக் கம்பெனில முக்கிய பொறுப்புல இருக்கேன். விளம்பரப்படம் சம்பந்தமாதான் மும்பை போயிட்ருக்கேன்.''

''உங்களுக்கொரு விஷயம் சொல்லியே ஆகணும்!''

''என்ன சொல்லுங்க''

''நான் கூட ஒரு மாடல்தான் தெரியுமா?''

''இஸ் இட்...!'' ஆகாஷ் வியப்போடு அவளைப் பார்த்தான். சட்டுனு நினைவுக்கு வரல. ''என்ன பொருட்களுக்கு மாடலிங் பண்ணிட்ருக்கீங்க?''

''இதோ இந்த பிஸ்கட்டுக்கு தான்.'' அவள் சலங்கை குலுங்கினாற் போல் சிரித்தாள். ''இப்ப நா ஓடற வண்டில ஸ்டைலா உட்கார்ந்து பிஸ்கட் சாப்டறதை படம் எடுத்தா நானும் மாடல் தானே அதுவும் விளம்பரம்தானே!''

''இவ்ளோதானா...? நா நிஜமாவே மாடலாக்கும்னு நினைச்சேன். பரவால்ல. நல்லாவே பேசறிங்க. நிஜமாவே மாடலிங் பண்ணலாமே நீங்க...?''

''ஆசைதான். ஆனா வீட்ல ஒத்துக்க மாட்டாங்களே. மும்பைல எங்கப்பா பெரிய பணக்காரர். கோடிகளில் புரள்றவர். இப்பக்கூட நா பிளைட்ல வராம டிரெயின்ல வரது தெரிஞ்சா கத்து கத்துன்னு கத்துவார். அவர் மானம் மரியாதையே போய்ட்டாப்பல அலறுவார்.''

''அப்புறம் ஏன் டிரெயின் பிரயாணம்?''

''சும்மா ஒரு த்ரில்லுக்காகத் தான். அதுலயும் ஒரு நல்லது இருக்கு பாருங்க. நா பிளைட்ல போயிருந்தா உங்களை சந்திச்சிருக்க முடியுமா?''

அவள் சொல்ல அவன் சட்டென்று ஒருவித குளிர்ச்சியை உணர்ந்தான் அந்த வார்த்தைகளில்.

''உங்களுக்கு கல்யாண மாய்டுச்சா?'' சில நிமிட இடைவெளிக்குப் பிறகு அவள் கேட்டாள்.

''ம்... ஆய்டுச்சே... எதுக்கு கேக்கறீங்க?''

''இஸ்... இட்...! பார்த்தா தெரியலையே....

''என்னைப் பார்த்தா எப்டிங்க தெரியும்? எம் பெண்டாட்டியைப் பார்த்தா இல்ல தெரியும்! ஏழு மாசம். மூணாவது குழந்தை!''

''நம்பவே முடியல.''

''எனக்கே நம்பத்தான் முடியல. காலேஜ் படிச்சுட்ருக்கும் போதே இழுத்துப் பிடிச்சு கட்றா தாலியன்னாங்க. லவ்வு கிவ்வுன்னு கெட்டுப் போய்டுவேனாம்! அதான் கால்கட்டாம். வீட்டுக்கு பயந்தவனாச்சே. கட்டிட்டேன்.''

''சரி தாலி கட்டிட்டீங்க. அட்லிஸ்ட் குழந்தைங்க விஷயத்துலயாவது ஜாக்கிரதையா இருந்திருக்கலாமே. இந்தக் காலத்துல மூணாவது குழந்தையா... வெரி பேட்...! அது சரி.. எனக்கென்ன? நீங்க யாரு நான் யாரு. இதையெல்லாம் சொல்ல!'' அவள் அதற்கு மேல் பேச விரும்பாதவள் போல் தன் லெதர் பேகிலிருந்து ஒரு தடித்த ஆங்கில நாவலை எடுத்து பிரித்து படிக்க ஆரம்பித்தாள்.

''சிட்னி ஷெல்டன்னா பிடிக்குமா உங்களுக்கு? எனக்குக் கூட பிடிக்கும் ஜெஃப்ரி ஆர்ச்சர் படிச்சிருக்கீங்களா? எனக்கு அதுவும் பிடிக்கும்.''

''நா கேட்டேனா உங்களை? என்னைப் படிக்க விடுங்களேன்.''

அவன் சிரிப்போடு ஜன்னல் பக்கம் திரும்பி வேடிக்கை பார்த்தான். சற்றுபொறுத்து மீண்டும் அவளைப் பார்த்தான்.

''நைட் தூங்கும்போது எனக்காக ஒரு பிரார்த்தனை செய்வீங்களா சுஜிதா?''

அவள் நிமிர்ந்தாள். ''என்ன பிரார்த்தனை?''

''மூணாவது குழந்தையாவது என்னை மாதிரி ஸ்மார்ட்டா ஆண் குழந்தையா பிறக்கணும் எனக்குன்னு வேண்டிக்கோங்களேன். கூட்டுப் பிரார்த்தனைக்கு வலு அதிகமே. அதான் பார்க்கறவங்க எல்லார் கிட்டயும் சொல்லி வேண்டிக்கச் சொல்றேன்.''

அவள் எரிச்சலோடு அவனை ஒரு வினாடி பார்த்து விட்டு மீண்டும் படிக்க ஆரம்பித்தாள்.

''என் ஒய்ஃப் பேரு என்னன்னு கேக்கலையே நீங்க. ஸ்வேதா நல்ல பேர் இல்ல? குலோப்ஜாமூன் மாதிரி இருப்பா. அவ்ளோ அழகு! நீயெல்லாம் என்ன கலர்? கலர்னா அவதான். பூ விழுந்தா கூடகன்னிச்சி வந்துடும்னா பார்த்துக்கோங்க! அவ அழகுக்கு உதாரணமே கிடையாது. இன்ஃபாக்ட் அந்த அழகைப் பார்த்து மயங்கிப் போய்தான் படிக்கற வயசுல நா கல்யாணத்துக்கே சம்மதிச்சேன். அவ்ளோ லவ்! மூணு என்னங்க அவகிட்ட முப்பது கூட...''

''எக்ஸ்கியூஸ்மி.. நா கேட்டேனா இதையெல்லாம்? உங்க பெண்டாட்டிய நீங்க ஜொள்ளு விட்ட கதையெல்லாம் எனக்கெதுக்குசார்... போரடிச்சா நீங்களும் ஏதாவது படிங்க இல்ல படுத்து தூங்குங்க. என்னைப் போட்டு அறுக்காதீங்க''

அவள் சிடுசிடுத்து விட்டு மீண்டும் புத்தகத்தில் மூழ்கினாள்.

அவன் மீண்டும் மௌனமானான். பிறகு வெகு நேரம் எதுவும் பேசாமல் வேடிக்கை பார்த்தபடி வந்தான். இடையில் சுடச்சுட வந்த டிபன் வகையறாக்களில், கப் நூடுல்ஸ் ஒன்று வாங்கி சாப்பிட்டு விட்டு ஒருகிளாஸ்பாலும் குடித்தான். அவள் இட்லி பாக்கெட் வாங்கி சாப்பிட்டு விட்டு மீண்டும் சிட்னி ஷெல்டனில் மூழ்கினாள். ரயிலின் தடக் தடக் சப்தத்தை தவிர வேறு எவ்வித சப்தமும் இல்லை.

ஒன்பது மணிக்கு மேல் அவள் கொட்டாவி விட்டபடி புஸ்தகத்தை மூடினாள். தன் பையைத் திறந்து புத்தகத்தை

பத்திரப்படுத்தி விட்டு, ஏர் பில்லோ எடுத்து ஊதி பருமனாக்கினாள். பெட்ஷீட் ஒன்றை எடுத்து உதறி போர்த்திக் கொண்டு படுத்தாள்.

''எனக்காக இன்னும் ஒரே ஒரு பிராத்தனை செய்யுங்களேன். அதுக்கப்பறம் தூங்குங்க''

அவள் மௌனமாய் முறைத்தாள்.

''நா சொன்ன பழைய பிரார்த்தனை இல்லை. இது வேற! அது வேண்டாம்! இதுமட்டும் வேண்டிக்கிட்டா போதும். ப்ளீஸ்...''

அவள் என்ன என்பது போல் பார்த்தாள்.

''சீக்கிரமே கல்யாணமாய்டுச்சா. அதனால இந்த காதல் கீதல்னு எந்த த்ரில்லுமே எனக்கு கிடைக்கல. அதனால பஸ்ட் கிளாஸா, கல்கத்தா ரஸகுல்லா மாதிரி ஒரு காதலி எனக்குகிடைக்கணும்னு வேண்டிக்கோங்களேன்.''

''ஷட்.. அப்.. என்னை என்ன மிஸ்டர் நினைச்சீங்க நீங்க...? உங்க சீப்பான ஆசையெல்லாம் நிறைவேற நா பிரார்த்தனை செய்யணுமா...? இனிமே நீங்க வாயத் திறந்தீங்க... நா பொல்லாதவளாய்டுவேன். ஏதோ கையப் பிடிச்சு வண்டில ஏற உதவினிங்களேன்னு மதிச்சு ரெண்டு வார்த்தை பேசினா... மட்டமா பிஹேவ் பண்றீங்களே!''

''ஓ..கே... ஓகே... இனிமே பேசல.. கோச்சுக்காதீங்க. அதென்னமோ தெரியல...ஜெனரலா நா லேடீஸ் கிட்டல்லாம் பேசவே மாட்டேன். உங்க கிட்டதான் இப்டி.. ரொம்ப ஜென்மமா பழகினாப்போல பேசறேன். எனக்கே ஆச்சர்யமார்க்கு.''

''இதுல ஆச்சர்யம் என்ன? இதான் ஆம்பளை புத்தி. அலையற புத்தி!''

''இது ஆம்பளை புத்தின்னா, பொம்பளை புத்தி எதுன்னு நா சொல்லவா.. ஒருஆம்பளைக்கு கல்யாணமாய்டுச்சுன்னு

தெரிஞ்சா உடனே பேச்சை நிறுத்திக்கறது பொம்பளை புத்தி, நா சொல்றது சரியா...?''

''நீங்க அதிகம் பேசறீங்க...''

''சரி இனிமே பேசல. நிம்மதியா தூங்குங்க மிச்சத்தை நாளைக்கு பேசிப்போம்.''

அவன் திரும்பிப் படுத்தான்.

ரயில் இரவைக் கடந்து விரைந்து கொண்டிருந்தது.

வண்டியின் மெல்லிய அசைவில் அரைத் தூக்கம்தான் தூங்க முடிந்தது. ஐந்து மணிக்கு அவனுக்கு விழிப்பு வ்ரும்போது அவள் இழுத்துப் போர்த்திக் கொண்டு நல்ல உறக்கத்தில் இருந்தாள். மலையாளத் தம்பதிகள் சூடாக டீ குடித்துக் கொண்டிருந்தனர். மயக்க மருந்து கொள்ளைக்காரர்களின் பயத்தால் இப்போதெல்லாம் ரயில் சிநேகம் வெகுவாக குறைந்துவிட்டது. மனிதனைக் கண்டு மனிதன் பயப்படுவது எவ்வளவு கேவலம்! அன்பென்ற பிரபஞ்ச வட்டத்திற்குள் வராமல் பயமென்ற எலிப்பொறிக்குள் மனிதர்கள் முடங்கிப் போய்விட்ட கொடுமை எதனால்...? பயத்தினால் பாதுகாப்பு உணர்வு கூடுகிறது. ஒன்றுமில்லாதவன் எதைப் பாதுகாக்க வேண்டும்? எதற்கு பயப்பட வேண்டும்? மனிதரில் ஒரு சிலர் மனிதத்தை இழந்து ஐந்தறிவு மிருகங்களாய் மாறும்போது மற்றவர்களுக்கு பயம் ஏற்படத்தான் செய்யுமோ? மனிதனிடமிருந்து மனிதன் தன்னை பாதுகாத்துக் கொள்ள தன்னைச் சுற்றி சந்தேக வலை விரித்து, பேச்சடக்கி, புன்சிரிப்படக்கி, நட்படக்கி, அன்பையடக்கி... சின்னச் சின்ன வளையங்களுக்குள் வெறுமையாய் முடங்கி... எங்கே போகிறது உலகம்?

ஆகாஷ் பெருமூச்சு விட்டான். அவனால் இப்படி முடங்க முடியாது. சளசளவென்று பேசிக் கொண்டேயிருக்க வேண்டும் அவனுக்கு. எதிரில் யாருமில்லாவிட்டாலும் கவலையில்லை. மனிதனைத் தவிர எத்தனை ஜீவராசிகள்

இருக்கின்றன! அவற்றோடு பேசுவான். தூரத்து மலைகள், நதிகள், முகத்தில் மோதும் காற்று, மேகத்தில் ஓடும் நிலவு, பரந்து விரிந்த ஆகாயம், கண் சிமிட்டும் நட்சத்திரங்கள் என்று எல்லாவற்றோடும் பேசுவான். பேச்சுக்கு சப்தம் அவசியமில்லை. விழிகளும், எண்ணங்களும் போதும். மௌனமாய் எவற்றோடும் பேச முடியும். அப்படித்தான் எதிரில் உறங்கிக் கொண்டிருந்த சுஜிதாவோடும் பேச ஆரம்பித்தான்.

நீ யார் பெண்ணே... எங்கே பிறந்தாய்? யாருக்கு பெண்ணாகப் பிறந்தாய். எதற்காக வளர்ந்தாய்? இன்று ஏன் என்னோடு பிரயாணம் செய்கிறாய்...? நாம் இன்று சேர்ந்து பிரயாணம் செய்ய வேண்டும் என்ற விதிக்குப் பின்னால் இருக்கும் சூட்சுமம்தான் என்ன...? உன்னை ஏன் எனக்கு பிடித்திருக்கிறது? உன்னைச் சீண்டிப் பார்க்க ஏன் எனக்கு ஆசை வந்தது? கல்யாணமாகி மூன்றாவது குழந்தை பிறக்கப் போகிறது என்று ஏன் உன்னிடம் பொய் சொல்லி விளையாடத் தோன்றியது? என் கேள்விகளுக்கெல்லாம் உனக்கு விடை தெரியுமா...? தெரிந்தால் சொல்வாயா? உன் கையைப் பிடித்து வண்டியில் ஏற்றியபோது உள்ளங்கை வழியே எதுவோ பாய்ந்து என் அடி வேர் வரை சென்றதே அதன் பெயர் என்ன? உனக்கும் அப்படி இருந்ததா? எல்லாவற்றிற்கும் மேலாக இந்த ரயில் பிரயாணம், வாழ்க்கைப் பயணமாக தொடர வேண்டும் என்று எனக்குள் ஒரு ஆசை முளைக்கிறதே, உனக்குப் புரிகிறதா... ஏன் என்று...? அவன் அவளையே பார்த்துக் கொண்டு வந்தான். சற்று நேரத்தில் அவள் போர்வை மெல்ல நகர்ந்து, கிரகணம் விட்ட நிலவு மாதிரி அவள் எழுந்தமர்ந்து தன் உருவம் காட்டினாள். அவனைப் பார்த்து விட்டு மௌனமாய் எழுந்து கொண்டாள்.

''குட் மார்னிங்'' அவன் சொல்ல வேறு வழியின்றி அவளும் பதிலுக்கு சொல்லிவிட்டு பாத்ரூம் பக்கம் சென்றாள். பதினைந்து நிமிடத்திற்குப் பிறகு பளிச்சென்று திரும்பி வந்தாள்.

''நல்லா தூங்கினீங்களா?''

''ம்''

''எனக்கு அரைத் தூக்கம்தான்.''

''ஓஹோ...''

''காபி சொல்லவா?''

''நோ தேங்க்ஸ்...''

''மயக்க மருந்து பயமா?''

அவள் பதில் சொல்லாமல் குனிந்து சிட்னி ஷெல்டனை எடுத்தாள்.

உள்ளே ஒரு துண்டுச் சீட்டு இருக்க புருவம் சுருக்கியபடி அதைப் பிரித்தாள்.

எனக்காக நீங்கள் பிரார்த்தனை செய்து கொண்டதற்கு நன்றி. உங்கள் பிரார்த்தனை வீண் போகவில்லை. எனக்கொரு காதலி கிடைத்து விட்டாள்.

இப்படிக்கு

கல்யாணமாகிவிட்டது என்று

பொய் சொன்ன கட்டை பிரம்மச்சாரி ஆகாஷ்.

அவள் சட்டென்று நிமிர்ந்து பார்க்க, அவன் விஷமச் சிரிப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

சற்று நேரத்தில் மீண்டும் சலங்கை மணிகள் சிதறியது. முகம் சிவக்க சிரித்தாள் அவள்.

''ஆனாலும் ரொம்ப மோசம் நீங்க..

''நானா...? நீங்கதான் மோசம்.. ஏங்க கல்யாணமான ஆம்பளைன்னா அவ்ளோ கேவலமா?''

அதெல்லாம் இல்ல, மனைவி மூணாவது கர்ப்பம்னு சொன்னிங்க பாருங்க. அப்பொதான் எரிச்சல் வந்தது. ஏன் இப்டி பொய் சொன்னீங்க?''

''மாடல்னு நீங்க சின்ன பொய் சொன்னதுக்கு பழிக்குப் பழி!''

''அது சரி பிரார்த்தனை நிறைவேறிடுச்சு. நன்றின்னு ஏதோ எழுதியிருக்கீங்க...? எப்பொ சார் உங்களுக்கு காதலி கிடைச்சா.. கேண்டீன்லேர்ந்து கொண்டு வந்து கொடுத்தாங்களா...?''

''அப்டித்தான் வெச்சுக்கறது!''

''சொல்லமாட்டீங்களாக்கும்.''

''சொல்லுவேன் இப்பொ இல்ல. இறங்கும்போது ஆளைக் காட்டி இவதான்னு சொல்லுவேன்.''

''அவள் புதிருக்கு விடை தெரியாமல் அவனையே பார்த்தாள்.''

உன் மகனுக்கு நல்ல மனைவி கிடைத்தால்
உனக்கொரு மகள் கிடைப்பாள், கிடைக்கவில்லையென்றால்
உன் மகனை நீ இழப்பாய்.

– பெர்னாட்ஷா.

சம்பத் கடிகாரத்தையும், மூடியிருந்த அந்த அறைக் கதவையும் மாறி மாறிப் பார்த்தார். அவர் அருகில் அமர்ந்திருந்த ஆகாஷ் பிஸினஸ் இண்டியாவின் கடைசி பக்கத்திற்கு வந்திருந்தாள்.

''ஏண்டா ஆகாஷ்... உள்ள என்னதான் பண்றாங்க அம்மாவும் பெண்ணும், மூடின கதவை சொர்க்க வாசல்

''என்னப்பா நீ, லேடீஸ் டிரெஸ்ஸிங்னா சும்மாவா? பீரோல இருக்கற அத்தனை புடவையையும் இழுத்து போட்டு பரப்பி வெச்சுக்கிட்டு எதை உடுத்திக்கறதுன்னு தீர்மானம் பண்ண ஒரு மணி நேரம். அத்தனை புடவை இருந்தும் ச்சே ஒரு புடவை கூட ஒழுங்கால்லன்னு ஒரு முணுமுணுப்போட ஒருபுடவையை எடுத்து கட்டிக்க அரைமணி அப்பறம் நகைப் பெட்டியை காலி பண்ணி உடம்புல சார்த்திக்க முக்கா மணி அப்புறம், பவுடர், பொட்டு, தலை வாரல் பூச்சுடல் இத்யாதி இத்யாதி... எவ்ளோ இருக்கு!

அதுக்குள்ள அங்க கல்யாண முகூர்த்தம் போய் சீமந்த முகூர்த்தமே வந்துடும்.

''நீ வேற! குழந்தைக்கு ஆயுஷ் ஹோமமே வந்துடும்னு சொல்லு'' ஆகாஷ் சிரித்தான்.

சம்பத் எழுந்து சென்று அறைக்கதவைத் தட்டினார். ''ஆச்சா சாரதா. மணியாறதே!''

''இதோ வந்துட்டோம்.. அடடாடா... நிம்மதியா டிரெஸ் பண்ணிக்க விட மாட்டீங்களே!''

''முகூர்த்தத்துக்கு போய்ட்டு வந்தப்பறம் நாள் முழுக்க வேணா டிரெஸ் பண்ணிக்கயேன் யார் கேக்கப் போறாங்க?''

மேலும் கால் மணி நேரம் கடந்த பின்பே கதவு திறந்தது. முழு அகலத்திற்கு ஜரிகையோடு கூடிய பட்டுப் புடவையும், தங்க வைர ஆபரணங்களுமாய் வெளியில் வந்த மனைவியைக் கண்டதும் கண் கூசுவது போல் பாவனை செய்தார் சம்பத்.

''என்னடி இது... வீதி உலா புறப்பட்ட அம்மன் சிலையாட்டம்?''

''உங்க சொந்தக்காரங்க வீட்டு கல்யாணமாச்சே அதான் இப்டி வரேன். அப்பதான் உங்களுக்கு மரியாதை!''

''சரிதான்..., உம்பொண்ணு எங்க...?''

''நா ரெடிப்பா'' சங்கீதா குரல் கொடுத்தபடி வெளியில் வந்தாள்.

ரோஜா நிறத்தில் சுரிதாரும், அதே நிறத்தில் துப்பட்டாவும், ஹேர் கிளிப்பில் அடக்கிய தலைமுடியும், நெற்றியில் சின்ன கறுப்பு பொட்டுமாக எளிமையான அழகோடு வந்து நின்ற பெண்ணை வியப்போடு பார்த்தார்.

''என்னம்மா... நீ பட்டுப்புடவை கட்டிக்கலையா? இந்த டிரஸ் பண்ணிக்கவா இவ்ளோ நேரம் ஆக்கின?''

''நா அஞ்சு நிமிஷத்துல ரெடியாய்ட்டேம்ப்பா அம்மாக்கு ஹெல்ப் பண்ணிட்ருந்தேன்.''

''சம்பத் மனைவியை கிண்டலாகப் பார்த்தார்.''

''சரி கிளம்பலாமா... இல்ல இன்னும் ஏதாவது அலங்காரம் பாக்கியிருக்கா...?''

''கிளம்பலாம்...''

''அப்பாடா.. பிழைச்சேன். ஆகாஷ் சட்டுனு புறப்படுடா. காரை ஸ்டார்ட் பண்ணி ரெடியா வெச்சுக்கோ.. இவ ஏறினதும் உடனே கிளம்பிடணும்.''

''இந்த கிண்டலுக்கு ஒண்ணும் குறைச்சலில்ல.''

''பின்ன என்னம்மா.. மணி என்ன ஆறது பார். முகூர்த்தம் முடிஞ்சு சாப்பாடு கூட முடிஞ்சிருக்கும்.

''அதுவும் தீர்ந்திருக்கும்டா. மிச்சம் மீதி காய்கறில ஒரு சாலட் பண்ணித் தந்து சாப்டுன்னு சொல்லப் போறாங்க பார்.''

''போறும்பா ரொம்பத்தான் வாராதிங்க. கிளம்புங்க..

சங்கீதா ஓடிப்போய் காரில் ஏறிக் கொண்டாள். ஒரு வழியாக அனைவரும் கல்யாணத்திற்கு புறப்பட்டார்கள். ஆகாஷ் காரை ஓட்டினான்.

சம்பத்தின் ஒன்றுவிட்ட தங்கையின் பெண்ணுக்குத்தான் கல்யாணம். தங்கை இறந்து விட்டாள். தகப்பனின் நிழலில் வளர்ந்த இரு பெண்களில் மூத்தவள் சத்யாவுக்குத்தான் திருமணம். இந்த திருமணத்திற்காக சம்பத் மனைவிக்குத்

தெரியாமல் இருபதாயிரம் ரூபாய் பணம் கொடுத்திருக்கிறார். சம்பத்தின் உறவுகளோடு சாரதா நெருங்கிப் பழகுவதில்லை. தன் ஜபர்தஸ்ஸைக் காட்டிக் கொள்வதற்கு மட்டுமே விரும்புவாள். இருப்பினும் சம்பத் அவளுக்கும் தெரியாமல் தன் உறவுகளின் வீடுகளுக்கு சுமூகமாக போய் வருவார். சின்னச் சின்ன உதவிகள் செய்வார்.

முக்கியமாக தாயின்றி வளர்ந்த சத்யா, சரண்யா இருவரின் மீதும் அவருக்கு தனி அன்பு உண்டு.இன்னும் சொல்லப் போனால் சத்யாவின் தங்கை சரண்யாவைத் தன் மகன் ஆகாஷுக்கு கட்டி வைத்து மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அவர் உள் மனதில் ஒளிந்து கொண்டிருந்தது. இந்த ஆசை நிச்சயம் நிறைவேறாது என்பது அவருக்குத் தெரியும். அவருடைய உறவு என்றாலே சாரதாவுக்கு இளப்பம். அதிலும் தங்களை விட அந்தஸ்தில் பல மடங்கு கீழே உள்ள கோபாலனின் பெண்ணையாவது அவள் மருமகளாய் ஏற்றுக் கொள்வதாவது! இருந்தாலும் சம்பத்தின் உள் மனசுக்குள் அப்படி ஒரு ஆசை ஏற்பட்டிருந்தது.

ஆகாஷ் இதுவரை சரண்யாவைப் பார்த்ததில்லை. பொதுவாய் அவன் எந்த இடத்திற்கும் வரமாட்டான். இப்போது கூட அப்பா மிகவும் வற்புறுத்தியதால் தான் அரை மனதோடு கிளம்பியிருந்தான். ஒரே ஒரு முறை அவன் சரண்யாவைப் பார்த்து விட்டால் போதும் நிச்சயம் அவனுக்கு அவளைப் பிடித்து விடும். பிறகு தன் விருப்பம் நிறைவேறுவது சுலபமாகி விடும் என்று நினைத்தார் சம்பத். சரண்யாவைப் பார்ப்பதற்கு இந்த கல்யாணம் ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது. குடும்பத்தோடு வந்து விடுவதாக கோபாலனுக்குக் கொடுத்த வாக்கையும் காப்பாற்ற வேண்டுமே..!

''இந்த கல்யாணத்துல நாம தான் சீஃப் கெஸ்ட்டாம். நீதான் உன் திருக்கையால தாலியை ஆசீர்வாதம் பண்ணி எடுத்துக்

கொடுக்கணும்னு கோபாலன் ஆசைப்படறார். அவர் இவ்ளோ மரியாதை கொடுக்கும் போது நாமளும் காப்பாத்திக்க வேண்டாமா? குடும்பத்தோட போகணும். நம்ம கௌரவத்தைக் காப்பாத்திக்கணும் சரியா...?'' மனைவியை வார்த்தை வலைகளால் பிடித்தார்.

''போய்ட்டா போச்சு...

மனைவி சம்மதித்தாளே என்று சந்தோஷப்பட்டால் மகன் சிணுங்கினான்.

''அவங்களை எல்லாம் எனக்கு பழக்கமே இல்லப்பா. நா எதுக்கு? நீங்க மட்டும் போனா போறாதா?''

''என்னடா இப்டி சொல்ற... பழக்கமே இல்லன்னா எப்டி...? பழகினாதானே பழக்கம் ஏற்படும்? நம்ம உறவுகளை எல்லாம் தெரிஞ்சுக்க வேண்டாமா.. நாளைக்கு நம்ம நல்லது கெட்டதுக்கு நாலு பேர் வர வேண்டாமா? நீ இன்னும் சின்னப்பையனில்ல நாளைக்கு எனக்கப்பறம் நீதான் இந்த குடும்பத் தலைவன் எல்லாரையும் தெரிஞ்சுக்கணும் நீ. கிளம்பி வா நான் சொல்றேன்.''

அவர் வற்புறுத்த அரை மனதோடு அவனும் கிளம்பி விட்டான். சங்கீதாவைப் பற்றி பிரச்சனை இல்லை. அவள் அப்பா பெண். அவர் எது சொன்னாலும் அவளுக்கு வேதவாக்கு.

எப்படியோ வெற்றிகரமாக அவரும் குடும்பத்தோடு புறப்பட்டு விட்டார். இதுவே நல்ல சகுனம்தான். அவர் மனசு சந்தோஷமாய் இருந்தது.

முகூர்த்தத்திற்கு இன்னும் அரை மணியே இருந்தது. கோபாலன் சத்திரத்து வாசலுக்கு வந்து வீதியைப் பார்த்தார். குடும்பத்தோடு சீக்கிரமே வந்து விடுவதாகச் சொன்ன சம்பத்தை இன்னும் காணவில்லை. அவர்களுடைய ஆசிர்வாதத்திற்காக தாலி காத்திருக்கிறது. இது சம்பத்தின்

வேண்டுகோள். எம் பொண்டாட்டி வரணும்னா அவளுக்கு கிலோ கிலோவா ஐஸ் வெச்சு உபசாரம் பண்ணனும் அப்பதான் வருவா... ''நீதான் தாலியை ஆசிர்வாதம் பண்ணிக் கொடுக்கணுமாம்னு சொல்லி கூட்டிட்டு வரேன். மறந்துடாம அவகிட்ட தாலியைக் கொடுத்து வாங்கிடு இல்லாட்டி நா அவ்ளோதான் சரியா...?'' என்று முன்பே அவர் சொல்லியிருந்தார்.

சம்பத் நல்லவர். இந்த கல்யாணத்திற்கு இடது கைக்குக் கூடத் தெரியாமல் இருபதாயிரம் கொடுத்திருக்கிறார். இது தவிர, கோகிலா இறந்ததற்குப் பிறகு இன்று வரை எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறார். எவ்வளவு நேரமானாலும் சரி அவரும் அவர் மனைவியும் தொட்டு ஆசிர்வதித்த பிறகுதான் இந்த கல்யாணம் நடக்கும்.

கோபாலன் உள்ளுக்கும் வாசலுக்கும் நடந்தார்.

''என்னப்பா.. இன்னுமா சம்பத் மாமா வரல...?'' பின்னால் சரண்யாவின் குரல் கேட்க திரும்பினார்.

''இன்னும் காணலையே.. ஒருவேளை உங்க மாமி வரமாட்டேன்னு சொல்லிட்டாங்களா...?''

''அப்டியெல்லாம் இருக்காது. வழில கார் ஏதாவது ரிப்பேராகியிருக்கும். எப்டியும் வந்துடுவாங்க. நீ உள்ள வாப்பா... அய்யர் உன்னைக் கூப்பிடறார்..''

கோபாலன் உட்புறம் செல்ல திரும்பியபோது சற்று தூரத்தில் ஹாரன் ஒலி கேட்டது.

''சம்பத்தான் வந்தாச்சு... நீ போய் பூவும் சர்க்கரையும் கொண்டா பன்னீர் சொம்பும் கொண்டா..''

சரண்யா உள்ளே ஓடினாள். அடுத்த வினாடி டிரே நிறைய பூவும் சந்தனமும், கல்கண்டுமாய் ஒரு கையில் பன்னீர் சொம்போடு திரும்பி வந்தாள்.

கார் நின்றது. சம்பத் மாமா முதலில் இறங்கினார். அவருக்குப் பின்னால் ஜெக ஜோதியாய் மாமி,

அவளையடுத்து மலர்ந்த ரோஜாவாய் சங்கீதா. மூவரும் இறங்கியதும் ஆகாஷ் காரை ஒரு ஓரமாக ஓட்டிச் சென்று நிறுத்தினான்.

''வாங்க வாங்க...''

கோபாலன் கை கூப்பி பணிவோடு வரவேற்றார்.

சரண்யா பன்னீர் தெளித்து டிரேயை நீட்டினாள்.

''இது யாரு தெரியுதா? சரண்யா. கோகிலாவோட ரெண்டாவது பொண்ணு. கம்ப்யூட்டர் சையின்ஸ் படிச்சுட்ருக்கா. நல்லா பாடுவா. சங்கீதம் கத்துக்கறா. கோபாலனுக்கு வலது கை இவதான். புத்திசாலி, பொறுமைசாலி.. பக்குவம்...''

சாரதா அவரை திரும்பிப் பார்க்க அதோடு நிறுத்திக் கொண்டார்.

''ஐ ஆம் சங்கீதா. பேர்லதான் சங்கீதம் இருக்கு. பாட எல்லாம் தெரியாது'' சங்கீதா முகம் நிறைய சிரிப்போடு தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டாள். கொஞ்சம் சந்தனம் எடுத்து கழுத்தில் பூசிக் கொண்டு சரண்யாவுக்கும் பூசிவிட்டாள். சட்டென்று நட்பு கொள்ள அவளால் மட்டும்தான் முடியும் என்பது போல் சரண்யாவின் கைகளைக் கோர்த்துக் கொண்டு உள்ளே போனாள். சம்பத் அவர்கள் போவதை சற்று ஏமாற்றத்தோடு பார்த்தார். காரை பார்க் பண்ணப் போன ஆகாஷை இன்னும் காணவில்லை. அவனை சரண்யா வாசலிலேயே சந்திக்க வேண்டும் என்று நினைத்தார் அவர். அதற்குள் இவர்கள் உள்ளே போய்விட்டார்கள். அவர், பிள்ளைக்காக காத்திருந்தார்.

''என்னடா இவ்ளோ நேரம்...?''

''சட்டுனு ரிவர்ஸ் எடுக்கறா மாதிரி இடமா பார்த்து விட்டுட்டு வந்தேன்.''

''சரி வா, உங்கம்மாக்கு உபசாரமோ உபசாரம். பன்னீரால குளிப்பாட்டியாச்சு. நீயும் இருந்திருந்தா உனக்கும் வரவேற்பு நடந்திருக்கும்.''

''ப்ஸு... ஆகாஷ் அலுத்து கொண்டு, அவரோடு நடந்தான். யாரோடும் அதிக பழக்கமில்லை என்பதால் ஒரு ஓரமாக சேரில் அமர்ந்து விட்டான். மணமேடையில் அம்மா கம்பீரமாக தாலியை ஆசிர்வதித்து கொடுத்துக் கொண்டிருக்க முகூர்த்த நேர பரபரப்பும் நாயன சத்தமும் சத்திரத்தை நிரப்பியது.

''ஏம்மா சரண்யா... என் பிள்ளைக்கு கல்கண்டு கொடுத்தாயா நீ..? அவன் வரதுக்குள்ள உள்ள ஓடிட்டயே.. அவன் கோச்சுக்கிட்டு ஒரு ஓரமா உக்காந்துட்டான் பாரு யாருமே தன்னை வரவேற்கலன்னு..''

முகூர்த்தம் முடிந்த பின் எல்லோருக்கும் கல்கண்டும், குங்குமமும் சந்தனமும் கொடுத்துக் கொண்டிருந்த சரண்யாவை அருகில் அழைத்துச் சொல்லி ஆகாஷை அவளுக்கு சுட்டிக் காடடினார்.

''சாரி அங்கிள்.. நா கவனிக்கல.. இதோ இப்ப குடுத்துடறேன் சரியா?''

சரண்யா கல்கண்டு தட்டோடு ஆகாஷை நோக்கி நடந்தாள்.

''அப்பா நீ இங்க இருக்கயா.. அம்மா தேடறா பார் உன்னை'' சங்கீதா அவரிடம் வந்தாள்.

''எதுக்காம்?''

''தெரியாது, கல்யாணப் பரிசு கொடுக்கவா இருக்கும். அம்மாவைப் பார்த்தயா.. ஒரே பூரிப்புதான். பணக்கார கல்யாணம்னா அவளை யார் சட்டை பண்றதுக்கிருக்காங்க. இங்க ஒரே உபசார மயம். அவ புடவையையும் நகைகளையும் பாராட்டோ பாராட்டு பாலாபிஷேகம் பண்ணின விக்ரகம் மாதிரி குளிர்ந்து போய் நிக்கறா''

''இரு இரு.. உங்கம்மாவை கிண்டலா பண்ற... அவகிட்ட சொல்லி உன்னை...''

பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்தாலும் அவர் பார்வை ஆகாஷிடமே இருந்தது.

''அங்க யாரைப்பா பார்க்கற...?'' சங்கீதா அவர் பார்வை சென்ற திசையில் திரும்பிப் பார்த்தாள். தூரத்தில் சரண்யா ஆகாஷிடம் கல்கண்டு தட்டை நீட்டி ஏதோ பேசிக் கொண்டிருக்க சங்கீதா அப்பாவைத் திரும்பிப் பார்த்தாள்.

''இந்த சரண்யா எவ்ளோ அழகார்க்காப்பா. ரொம்ப நல்ல சுபாவமும் கூட..! இதுக்கு முன்னாடி நீ இவங்களை எல்லாம் எனக்கு அறிமுகப்படுத்தினதே இல்லையே ஏன்...?''

அவர் புன்னகைத்தார். ''எல்லாத்துக்கும் ஒரு நேரம் வர வேண்டாமா? அதான் நீ சொல்லு சங்கீதா ஆகாஷையும் அவளையும் சேர்த்து பார்த்தா நல்லால்ல...?''

''அ..ப்..பா...'' சங்கீதா விழியகல அவரைப் பார்த்தாள். ''இதான் உன்பிளானா..? அப்டிப் போடு.. இதுக்குதான் எல்லாரையும் இழுத்துக்கிட்டு வந்தயா...? என்னடா.. இப்டி கெஞ்சறயேன்னு பார்த்தேன். இப்பதானே புரியுது.''

''நா கேட்டதுக்கு பதில் சொல்லேன்.''

''பஸ்ட் கிளாஸ் ஜோடிப்பா. அதுல சந்தேகமே இல்ல. ஆனா மேல இருக்கறவன் முடிச்சு போட்டு வெச்சிருக்கணுமே!''

''மேல இருக்கறவன் போட்டுட்டா போதாதுடி நான் போடணும்.''

பின்னால் அம்மாவின் குரல் கேட்க சங்கீதா திடுக்கிட்டு திரும்பினாள். அப்பாவை பயத்தோடு பார்த்தாள்.

''சோழியன் குடுமி என்னடா இப்டி ஆடுதேன்னு பார்த்தேன். இப்பதானே புரியுது! இந்த ஆசையை இங்கயே விட்டுவிட்டு கிளம்பற வழியப் பாருங்க. சாப்பாட்டுக்காகக் கூட நிக்க வேணாம். உடனே புறப்படுங்க.''

சாரதா கோபத்தில் ஜ்வலித்த முகத்தோடு விறுவிறுவென்று வாசலை நோக்கி நடந்தாள்.

காதல் எனும் உணர்வுபாதரசம் போல்
கனமாக இருந்தாலும்கைகளில்அகப்படாதது
(வாய்க்கால் மீன்களில் கோமயன்புலின் வரிகள்)

நேஷனல் ஜியாக்ரபி சானலில் ராஜஸ்தான் பற்றிய டாக்குமென்டரி ஓடிக் கொண்டிருந்தது. அந்த மக்களின் கலையும் கலாச்சாரமும், வாழ்க்கையும், ரோஜா நிற கட்டிடங்களும், கண்ணாடிகள் பதித்த ஆடைகளும், வர்ணமயமான ஆபரணங்களும் அற்புதமாக படமாக்கப் பட்டிருந்தது. பிரம்மிப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள் சரண்யா. சத்யா இருந்தால் இதெல்லாம்பார்க்க விட மாட்டாள். அவளுக்கு எல்லா தமிழ் சீரியலையும் பார்த்தாக வேண்டும். அது எவ்வளவு மட்டமாக இருந்தாலும் மாய்ந்து மாய்ந்து பார்ப்பாள். கனமான மேக்கப் போட்டுக் கொண்டு கிளிசரின் உதவியோடு கண் மை கலையாமல்அழும் பெண்களையும் உப்பு சப்பில்லாத ஜவ்வு மிட்டாய்க் கதைகளையும் எப்படித்தான் அவளால் பார்க்க முடிகிறதோ என்று புரியாமல் தலையைப் பிடித்துக் கொள்வாள் சரண்யா.

மாத்தி மாத்தி எவளாவது மேக்கப் போட்டுக்கிட்டு அசிங்கமா அழறா. எப்டிடி சத்யா உக்கார்ந்து பார்க்கற? ஒரு முறை கேட்டே விட்டாள்.

''உனக்கு பிடிக்காட்டா யார் பார்க்கச் சொல்றாங்க?'' சத்யா டி.வி.யிலிருந்து கண் எடுக்காமல் சொல்லுவாள்.

''இந்த மாதிரி டி.வி. சீரியல்லாம் பார்த்தா இருக்கற அறிவும் மழுங்கிப் போய்டும் சத்யா. உன் நல்லதுக்குத்தான் சொல்றேன்.. நீ தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம் எவ்ளவோ

இருக்கு. உலகத்தின் பல அதிசயங்களையும், உண்மை களையும், மருத்துவ வளர்ச்சியையும் புதிய கண்டுபிடிப்புகளையும் பத்தி எல்லாம் தெரிஞ்சுக்கற ஆசையே இல்லையா உனக்கு. இப்டி உப்பு சப்பில்லாத தொடர்களைப் பார்த்து உன் நேரத்தை வீணடிக்கறதைப் பார்த்தா எனக்கு கஷ்டமார்க்கு.''

''அப்டின்னா பொழுது போக்கு தப்புங்கறயா?''

''இல்ல, அதுவே உன் வாழ்க்கையாய்டக் கூடாதுன்னு சொல்றேன். வாழ்க்கைன்னா என்னன்னு உனக்கு புரிய வெக்கற நல்ல தொடர் ஒண்ணு ரெண்டு பாரு போதும்ங்கறேன்.''

''இதோ பார் சரண்யா, போகிற போக்குல நா வாழ்க்கையைப் பத்தி தெரிஞ்சுக்கிட்டு போறேன். என் அறிவுக்கும் எந்த குறைச்சலும் இல்ல. இப்போதைக்கு என் சந்தோஷம் எதுவோ அதைத்தான் நா அனுபவிக்கறேன். அட்வைஸ்ங்கற பேர்ல என்னை அறுக்காதயேன்.''

''அய்யோ அக்கா.. உன் சந்தோஷம் எனக்கு சங்கடமார்க்கே! அதுக்கென்ன செய்யலாம்? வீட்ல ஒரு டி.வி.தானே இருக்கு. நீ இப்டி பேய், பூதம் ரத்தக்காட்டேரின்னு உக்காந்துட்டா, எனக்கு பிடிச்சதை நா எப்பொதான் பார்க்கறது?''

''நா இல்லாதப்போ பாரு. நீ மட்டும் பெரிசா என்ன பார்த்துடப் போற, டிஸ்கவரில ஒரு பெங்குவின் மனுஷன் மாதிரி நடந்து வரும். இல்ல ஒரு புலி மானைத் துரத்தியடிச்சு கொன்னு கிழிச்சு சாப்ட்டுட்ருக்கும். ஒருபாம்பு எலியைத் துரத்தும். இதுல என்ன பெரிய அறிவு கிடைச்சுடுமாம்?''

''இயற்கையைப் பத்தி, மிருகங்களைப் பத்தி துருவங்களைப் பத்தி எவ்ளோ விஷயம் அதுல சொல்றாங்கன்னு தெரியுமா உனக்கு?''

''போதுமே சரண்யா. நா முட்டாளாவே இருந்துட்டு போறேன் விடு!''

தர்க்கம் பண்ணவோ சண்டை போடவோ சத்யா இப்போது இல்லை. தனக்கு பிடித்த விஷயத்தை நிம்மதியாய் உட்கார்ந்து பார்க்க முடிந்தாலும் கூட அக்கா இல்லாத வீடு ஒரு மாதிரிதான் இருந்தது.

டிஸ்கவரியில் மற்றொரு டாக்குமென்டரியைப் பார்க்க ஆரம்பித்ததில் நேரம் போனதே தெரியவில்லை. அப்பாவை இன்னும் காணவில்லை. வழக்கமாக அவர் வரும் நேரம்தான்.

சரண்யா உள்ளே போய் சாம்பாரையும் ரசத்தையும் பொரியலையும் சூடு பண்ணினாள். அக்கா இருந்தவரை அடுக்களை வேலை முழுக்க அவள்தான் செய்தாள். சரண்யா உதவி செய்யப் போனாலும் விடமாட்டாள். எனக்கு எல்லாமே நானே செய்தால்தான் திருப்தி என்பாள். இப்போது எல்லா வேலையும் இவள் தலையில் இருப்பது இரண்டே பேர்தான் என்பதால் சமையல் வேலை பிரமாதமில்லை. அப்பாவுக்கும் சரி அவளுக்கும் சரி சாப்பாடு ஒரு பெரிய விஷயமும் இல்லை. நிறைய சாப்பிடறவனாலயும், நிறைய தூங்கறவனாலயும் எதுவும் சாதிக்க முடியாது என்பார். அடிக்கடி சத்யாவுக்கும் சரண்யாவுக்கும் அவர் அப்பா மட்டும் இல்லை. நல்ல வழிகாட்டியும் கூட, அறுவை ஜோக்ஸ் முதல் கார்ல்மார்க்ஸ் வரை அவரோடு பகிர்ந்து கொள்ளலாம்.

''சரண்யா அடுப்புக்கு முன்னாடி நின்னுக்கிட்டு என்ன யோசனை? பொரியல் கரியலாய்டுச்சு பார்!''

அப்பாவின் குரல் கேட்க சரண்யா திடுக்கிட்டு திரும்பினாள். அவசரமாய் அடுப்பை அணைத்தாள்.

''என்ன யோசனைம்மா, ஆகாஷ் ஞாபகமா? அடுப்பை கோட்டை விட்டுட்டு நிக்கற?''

''ச்சீ நிஜமா இல்லப்பா...''

''நீங்க இல்லன்னு சொன்னா நாங்க நம்பிடுவோமாக்கும். நானும் பார்த்துக்கிட்டுதானே இருக்கேன். சத்யா கல்யாணத்துக்கு ஆகாஷ் வந்ததுலேர்ந்து நீ பூமிலயே இல்ல.''

''சரி அப்டியே வெச்சுக்கோ. அதுக்கென்ன இப்பொ?''

''அதுக்கொண்ணுமில்ல. பொரியலுக்குதான் நேரம் சரியில்ல.''

அப்பா சிரிக்க சரண்யாவின் முகம் சிவந்தது.

சாரிப்பா...

''போனாப் போகட்டும். கொஞ்சம் சிரிப்பா''

''ஓ கேப்பா...!'' சரண்யா பளிச்சென்று சிரித்தாள். ''போய் கை கழுவிட்டு வாங்க. இருக்கறதை சாப்டுவோம்.''

சரண்யா தனக்கும் அப்பாவுக்கும் தட்டு வைத்தாள்.

''எனக்கொரு சந்தேகம்ப்பா'' சாம்பார் சாதத்தை பிசைந்தபடி கேட்டாள்.

''என்ன சந்தேகம்?''

''இதெல்லாம் நடக்கும்னு நம்பறீங்களா?''

''எதெல்லாம்?''

''சம்பத் மாமாவோட ஆசையைச் சொல்றேன்.''

''திடீர்னு என்ன சந்தேகம் அதுல?'' ''இல்ல.. மாமியப் பார்த்தா அவங்க கிட்டக்கூட நாம நெருங்க முடியாதுன்னு தோணுது. அவ்ளோ பந்தா. அவங்க இதுக்கு ஒத்துப்பாங்களா? அவங்க ஆசைக்கெல்லாம் உங்களால தீனி போட முடியுமா?''

''எனக்கும் இந்த கவலை இல்லாம இல்லம்மா. இது சம்பத்தோட விருப்பம். உனக்கு ஆகாஷைப் பிடிக்கணுமேங்கற கவலை இத்தனை நாள் இருந்தது. சத்யா கல்யாணத்துல நீயும் அவனும் பேசிக்கிட்டதைப்

பார்த்ததும் அந்த கவலை போய்டுச்சு. அவனுக்கும் உன்னைப் பிடிச்சிருக்கும்னுதான் தோணுது. நா கொடுத்துதான் அந்த வீடு நிறையணும்னு இல்ல. இருந்தாலும் உன் கௌரவத்துக்கு எந்த குறையும் ஏற்படாம என்னால முடிஞ்சதை செய்துடணும்னு இருக்கேன். அதுக்கேத்தா மாதிரி எனக்கு ஒரு வழியும் கிடைச்சிருக்கு.''

''என்ன வழிப்பா?''

''கூடுதல் வருமானத்துக்கு ஒரு வழி. சினிமால சின்னச் சின்ன வேஷங்கள் செய்ய கூப்பிடறாங்க. சின்ன வேஷத்துக்கு கூட சினிமால கணிசமா காசு பார்க்கலாம். தெரிஞ்சவங்க ரெண்டு மூணு பேர் உதவறேன்னு சொல்லியிருக்காங்க.''

''எதுக்குப்பா...''

''இதுல என்ன தாயி தப்பு..? ஹீரோ வேஷமா போடப் போறேன்?''

''அந்த ஆசை வேற இருக்கா?''

''நீ வேற என்னை விட ரெண்டு வயசு கூடுதலா இருக்கறவங்க கூட விக்கும் அரும்பு மீசையும் வெச்சுக்கிட்டு ஆடிப்பாடறாங்க. தெரியுமா? அதுக்கெல்லாம் மச்சம் வேணும்.''

''நா வேணா ஒரு மச்சம் வெச்சு விடவா மையால...?''

''நமக்கு வேணாம்மா. எனக்கு சின்ன வேஷம் போதும். ஒரு சீன்ல வந்து ஊசி குத்திட்டு போற டாக்டரா, இந்த பக்கமும் அந்த பக்கமும் திரும்பி திரும்பி பார்த்துக்கிட்டு பொம்மை உட்கார்ந்துக்கிட்டு கட சீல தீர்ப்பெழுதி வாசிக்கற நீதிபதியா, ரெண்டு சீன்ல வந்துட்டு குத்துப்பட்டு சாகற ஹீரோவோட அப்பாவா, படம் முடியறப்ப வந்து வில்லன்கள் கையில் விலங்கு மாட்டற இன்ஸ்பெக்டரா, இது போதும் நமக்கு.''

அப்பா சொல்லச் சொல்ல சிரிப்பு வந்தது அவளுக்கு.

''என்னமோ செய்ப்பா. நீ எப்டி நடிச்சா என்ன. நா எந்த தமிழ் சினிமாவும் பாக்கறதில்ல. அப்பறம் என்ன? ஒண்ணு மட்டும் நிஜம்மா. எனக்கு தெரிஞ்சு சில பேர் நடிக்க வந்தப்ப ஒரு ஹீரோயினோட நடிச்சாங்க. பத்து பதினஞ்சு வருஷம் கழிச்சு அந்த ஹீரோயினோட பொண்ணோட நடிச்சாங்க. இப்ப ரீஸன்டா அந்த ஹீரோயினோட பேத்தியோட நடிக்கறாங்க. மேக்கப் போட்ட மார்க்கண்டேயர்கள் ஜனங்களும் ரசிக்க பாக்கறாங்களே அதை சொல்லுங்க!''

''அதுசரி உன்னை மாதிரி எல்லாரும் இருந்துட்டா சினிமாவை நம்பியிருக்கற லட்சக்கணக்கான வங்கள்ளாம் பட்னி கிடக்க வேண்டியதுதான். அதை விடு, அன்னிக்கு அப்டி என்னம்மா பேசின அந்த ஆகாஷோட? சிரிச்சு சிரிச்சு பேசிட்ருந்தீங்க!''

''சிரிச்சு பேசினோமா.. சரிதான். உனக்கு அப்டியா தெரிஞ்சுது? சாதாரணமாதான் பேசிட்ருந்தோம். ஆனா அதை உங்கிட்ட சொல்றதால்ல.''

''ரகசியமா?''

''ரகசியம் எல்லாம் இல்ல. மறந்து போச்சு அதான் உண்மை!''''நா இதை நம்பணுமா...?''

''அது உன் இஷ்டம். சரண்யா சாப்பிட்டு முடித்து எழுந்தாள். காலி பாத்திரங்களை சிங்க்கில் போட்டு நீர் ஊற்றினாள். அப்பா எழுந்ததும் சாப்பிட்ட இடத்தை சுத்தம் செய்து துடைத்தாள்.

மறுநாள் கல்லூரியில் ஒரு டெஸ்ட் இருந்தது. அதற்குரிய புத்தகத்தோடு படிக்க உட்கார்ந்தாள். அப்பா பத்து மணி செய்திகள் பார்க்க ஆரம்பித்தார்.

சரண்யாவுக்கு பாடத்தில் கவனம் செல்லவில்லை. மறந்து விட்டது என்று அப்பாவிடம் சொல்லியது பொய். நன்றாகவே நினைவிருந்தது அவளுக்கு. என் பிள்ளைக்கு கல்கண்டு

கொடுத்தாயா என்று சம்பத் மாமா கேட்ட பிறகு கல்கண்டு டிரேயோடு ஆகாஷை நோக்கிச் சென்றாள்.

''குட்மார்னிங் ஆகாஷ். நா சரண்யா. கல்யாணப் பெண்ணோட தங்கை.''

''ஓ...''

''கல்கண்டு எடுத்துக்குங்க.''

அவன் இரண்டே இரண்டு டைமன் கல்கண்டை நாசூக்காக எடுத்துக் கொண்டு அவளைப் பார்த்து சிரித்தான்.

''நீ என்ன பண்ணிட்ருக்க?''

''படிச்சுட்ருக்கேன். பி.எஸ்சி. கம்யூட்டர் சையின்ஸ் பைனல் இயர் இது.''

''வெரிகுட். மேல என்ன செய்யப் போற?''

''வேலைக்கு போகலாம். இல்ல தொடர்ந்து எம்.சி.ஏ.வோ, எம்.எஸ்ஸோ கூட பண்ணலாம். கடவுள் என் தலையில என்ன எழுதியிருக்கான்னு தெரியலையே.''

''நாம முயற்சி பண்ணினாதானே எந்த வெற்றியும் கிடைக்கும். சும்மா கடவுள் மேல பழியைப் போட்டா எப்டி?''

''அப்டி சொல்லுங்க ஆகாஷ். அப்புறம் ஏன், மனிதன் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும்னு பழமொழி வந்துது?''

''வாழ்க்கைல தோற்றுப் போனவங்க யாராவது அப்டி சொல்லியிருப்பாங்க.''

''வாழ்க்கைல தோக்கறவங்க அதிகமா ஜெயிக்கறவங்க அதிகமா?''

''உங்க வீட்டு கல்யாணத்துல இப்டி ஒரு இண்டர்வியூ உண்டுன்னு அப்பா சொல்லவேல்லயே சொல்லியிருந்தா

முன்ஜாக்ரதையா நிறைய புக்ஸ் ரெஃபர் பண்ணிட்டு வந்திருப்பேன்'' ஆகாஷ் சிரித்தான்.

''இந்த கேள்விக்கு நானே பதில் சொல்லவா?''

''தாராளமா..''

''ஜெயிக்கறவங்கதான் அதிகம். ஆனா நா சொல்றது குறுக்கு வழில ஜெயிக்கறவங்களைப் பத்தி.''

''அப்பொ நேர்மை ஜெயிக்காதுங்கறயா?''

''இன்னிக்கு நாட்டுல நடக்கற விஷயங்களை எல்லாம் பார்த்தா அப்டிதான் தெரியுது.''

''ஆகாஷ் அவளை வியப்போடு உற்றுப் பார்த்தான்.

''பரவால்லயே அப்பாவோட சொந்தத்துல இப்டி பேசறவங்க கூட இருக்காங்கன்னா ஆச்சர்யமார்க்கு!''

''ஏன் உங்கப்பாவோட சொந்தக்காரங்கன்னா கேவலமா உங்களுக்கு?''

''ச்சேச்சே அப்டி சொல்லலை. பொதுவா அப்பாவோட சொந்தக்காரங்ககிட்ட எங்களுக்கு பழக்கமே கிடையாது.''

''யாராவது பழக வேண்டாம்னாங்களா?''

''வாய்ப்பு கிடைச்சதில்ல. அதான் உண்மை.''

''அப்பொ இனிமே பழகுவீங்களா?''

''ஒஷ்யூர். உங்கூட பேசிட்ருந்தா சுவாரசியமாதான் இருக்கு. நிறைய விவாதம் பண்ணலாம்னு தோணுது. நேரம் கிடைக்கும்போது வீட்டுக்கு வாயேன்.''

''நீங்களும் வரலாமே எங்க வீட்டுக்கு?''

''வந்தா போச்சு?''

''எப்பொ?''

''இன்னும் பத்து நாள் நா ஊர்ல இருக்க மாட்டேன். அதுக்கப்பறம் வரேன்.''

''ரொம்ப நன்றி!'' அவள் எழுந்து சென்றாள். அம்மாவைப் போல் பந்தாவோ பணத்திமிரோ இல்லாமல் அவன் சகஜமாய் வெகுநாள் பழகினாற்போல் பேசிய விதம் அவளுக்கு பிடித்திருந்தது. அவன் சுலபத்தில் அவள் மனசை உடைத்துக் கொண்டு உள்ளே போவதை அவளால் உணர முடிந்தது.

அதற்குப் பிறகு இரண்டு மூன்று முறை எதிர்பாராத இடங்களில் அவனை சந்திக்க நேர்ந்தது. முதல் முறை பிரிட்டிஷ் கவுன்சில் லைப்ரரி வாசலில் அவனைப் பார்த்தாள்.

''ஹலோ... நீ எங்க இங்க...?''

''ஏன் நா வரக்கூடாத இடமா இது?''

''இங்கயும் ஆர்க்யுமென்ட்டா? நா வரலப்பா இந்த விளையாட்டுக்கு'' ஆகாஷ் சிரித்தான்.

''ஆமா நீங்க எங்க இங்க?''

''ஹேர் கட் பண்ண வந்தேன்.''

''பண்ணிக்கிட்டாச்சா?''

''நீதான் நல்லா பண்ணுவயாம்! உள்ள சொன்னாங்க. அதான் வெயிட் பண்ணிட்ருக்கேன்.''

''அதுக்கென்ன சரச்சுட்டா போச்சு. ஆமா ஃபுல்லா? பாதியா?

''அப்டின்னா?''

''ஃபுல்லுன்னா மொட்டை. பாதின்னா சம்மர் கட்.''

''சரியான ஆள்தான் நீ! உன்கிட்ட பேசி ஜெயிக்க முடியாது போல்ருக்கு!''

''அப்டியா சொல்றிங்க?''

''பட் ஐ லைக் இட். இந்த மாதிரி கலகலன்னு பேசறவங்களை எனக்கு ரொம்ப பிடிக்கும்.''

''தேங்கஸ்''

''நீ எங்க போணும் சொல்லு. நா டிராப் பண்ணிடறேன்.''

''காலேஜுக்குதான் வேறெங்க!''

''அப்பொ சரி வா...

அவன் அவளை கல்லூரி வாசலில் இறக்கி விட்டுச் சென்றான்.

அதன்பிறகு இரண்டாவது முறையாக பீச் ரோடில் கார் திடீரென்று ரிப்பேர் ஆகியதால் வேறு வழியின்றி அந்த பக்கம் வந்த பஸ்சில் ஏறியவனை, ஏற்கனவே அந்த பஸ்சுக்குள் அமர்ந்திருந்தவள் வியப்போடு பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்து விட்டான்.

''ஆச்சர்யமார்க்கு! நீங்க பஸ்ஸுலயா?''

''ஏன் என்ன ஆச்சர்யம் இதுல? அவன் அவளருகில் காலியாயிருந்த இடத்தில் அமர்ந்தான்.

''இது பணக்காரங்க வாகனமில்லையே அதான் ஆச்சர்யம்.''

''பணக்காரங்கன்னா என்ன கொம்பா? பணக்காரனார்ந்தாலும் ஏழையார்ந்தாலும், ராஜாவா இருந்தாலும், சேவகனா இருந்தாலும் கடைசில போறது பச்சை ஓலை கட்டின பாடைல தானே அப்புறம் எதுக்கு பந்தாவும் தேவையில்லாத இளக்காரமும்?''

அவள் அவனை வியப்போடு பார்த்தாள்.

''அப்புறம்? உங்கக்கா எப்டியிருக்கா? மாமியார் மருமக சண்டை கிண்டை உண்டாமா?''

''இதுவரை இல்லை. அப்டியே வந்தாலும் எங்கக்கா சமாளிச்சுப்பா. எங்க வீட்டுக்கு வரதா சொன்னிங்க! வரவேல்லயே?''

''வரேன்! மாத்தி மாத்தி ஏதாவது வேலை.''

அடையாறில் அவன் இறங்கிக் கொண்டான்.

கடைசியாக அவனை சந்தித்தது ஒரு ரத்த தான முகாமில். பல சமூக நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து ஏற்பாடு செய்திருந்த முகாமில் மாணவர்களோடு பல துறையைச் சார்ந்தவர்களும் ரத்த தானம் செய்தார்கள். சரண்யா தன் முறை வந்து உள்ளே போகும்போது ஆகாஷ் வெளியில் வந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் வியப்போடு பார்த்துக் கொண்டார்கள்.

சரண்யா உள்ளே போனாள். அவள் திரும்பி வரும் வரையில் அவன் தன் காருக்குள் காத்திருந்ததைக் கண்டதும் இன்னும் வியந்தாள்.

''நீங்க கிளம்ப வேண்டியது தானே...? எனக்காகவா வெயிட் பண்றீங்க?''

''நீ டயர்டா வருவயே. டிராப் பண்ணிட்டே போலாமேன்னு வெயிட் பண்ணினேன், ஏறு.''

''அவள் ஏறிக் கொள்ள கார் கிளம்பியது. தெருமுனையில் இறக்கி விட்டான் அவன்.

''வீட்டுக்கு வரலையா?''

''இன்னொரு நாள் வரேனே... வெறுங்கையோட எப்டி வரது?'' அவன் காரைக் கிளப்பினான்.

அவனுடைய அக்கறையும் பரிவும், பழகிய விதமும் அவளுக்கு இனம் புரியாத சந்தோஷத்தைத் தந்தன. அவனும் தன்னை விரும்புகிறான் என்று தீர்மானித்துக் கொண்டது அவள உள்ளம.

பெண்கள் பெரும்பாலும் காதலுக்கு சம்மதிப்பது
ஒரு ஆடவன் தங்களை காதலிப்பது
மகிழ்ச்சியாயிருப்பதால்தான். அந்த மகிழ்ச்சியே
அவர்களின் காதல்

– அல்: பொன்மேகா.

புதிய உடைக்கான புது டிஸைனை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தாள் சுஜிதா. சுற்றிலும் வர்ணப் பேனாக்கள் இறைந்து கிடக்க நடுவில் மைக்கேல் ஜாக்ஸனின் பாடல ஒன்றை முணுமுணுத்தபடி வெள்ளைத்தாளில் டிஸைன்களை வரைவதும், திருப்தியின்றி கசக்கிப் போடுவதுமாக இருந்தாள். இன்னும் பத்து நாட்களுக்குள் இந்த டிஸைன் முடிக்கப்பட்டு உடை தயாராக வேண்டும். பத்து நாள் கழித்து மாணவர்கள் டிஸைன் செய்த பேஷன் உடைகளின் அணிவகுப்பு நடைபெறுகிறது. அதில் முதல் பரிசு வாங்கியே ஆகவேண்டும். அவள் தயாரிக்கப் போகும் ஆடைக்கு அவளே மாடலாக இருந்து ஒய்யாரமாக நடந்து வரப் போகிறாள். பார்க்கிறவர்கள் ஆடையில் மயங்குவதா அவள் அழகில் மயங்குவதா என்று தெரியாமல் விழி விரியத் திணற வேண்டும். அவளோடு உடன் படிக்கும் மாணவிகள் சாதாரணமானவர்கள் அல்ல. கற்பனைத் திறமையில் இவளுக்கு கொஞ்சமும் சளைத்தவர்கள் அல்ல.

போட்டி மிகக் கடுமையாகவே இருக்கும். எப்படியும் ஜெயித்து விட வேண்டும். சுஜிதா தன் கற்பனைத் திறத்தோடு யுத்தம் புரிந்தாள். பலவித டிஸைன்களையும் காகிதத்தில் கிடுகிடுவென வரைந்தாள். முப்பது விதமான உடைகளை

டிஸைன் செய்ததில் இருபதை ஒதுக்கிவிட்டு பத்தை தேர்ந்தெடுத்து அவற்றில் சிற்சில மாற்றங்கள் செய்ததில் ஐந்து ஓரளவுக்கு திருப்தியா வர அவற்றையும் இன்னும் நவீனமாக்கி, வர்ணங்களை மாற்றி, மேலும் மெருகேற்றியதில் ஒரு டிஸைன் அற்புதமாக வந்து முழு திருப்தியைத் தர, சுஜிதா உய் என்று சந்தோஷமாய் சத்தம் எழுப்பியபடி குதித்தாள். உடம்பை வளைத்து கைகளைத் தூக்கி கால்களால் தாளமிட்டு டான்ஸ் ஆடினாள்.

போட்டியில் ஜெயித்து விட்டால் அவளைத் தன் காரில் ஏற்றிக் கொண்டு ஒருநாள் முழுக்க ஊர் சுற்றுவதாக வாக்களித்திருக்கிறான் ஆகாஷ், ஒருநாள் முழுக்க அவனது அருகாமையில் இருப்பதற்காகவாவது ஜெயிக்க வேண்டும். வந்திருக்கும் டிஸைனைப் பார்த்தால் கண்டிப்பாக ஜெயித்து விடுவாள் என்றுதான் தோன்றியது.

ஆகாஷின் நினைவு வந்ததும் முதன் முதலில் அவனை ரயிலில் சந்தித்ததிலிருந்து ரயிலை விட்டு இறங்கியது வரை நடந்தவைகள் அவள் மனசுக்குள் மறுபடியும் ஓடியது.

தன் காதலி யாரென்பதை ரயிலை விட்டு இறங்கும்போது சொல்லுவதாக அவன் கூறியதும் அவளுக்கு ஆர்வம் கூடியது. அதை மறைத்துக் கொண்டு அவனை எரிச்சலோடு பார்த்துவிட்டு முகத்தை திருப்பிக் கொண்டு வெளியில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள். ரயில் மும்பையை அடையும் வரை அவனிடம் எதுவும் பேசவில்லை. பேசா விட்டாலும் உள் மனதால் அவனையேதான் கவனித்துக் கொண்டிருந்தாள்.

ரயில் மும்பையில் நின்றது. அவன் காதலி யாரென்பதை அறியும் ஆவல் இல்லாதவள் போல தன் சாமான்களை தோளில் ஒன்றும் கையில் ஒன்றுமாய் எடுத்துக் கொண்டு இறங்கத் தயாரானாள் அவள்.

''கிளம்பியாச்சா...?''

''யெஸ்''

''என் காதலியைப் பத்தி தெரிஞ்சுக்க வேண்டாமா?''

''எதுக்கு தெரிஞ்சுக்கணும்? ஏதோ ஒரே ரயில்ல பிரயாணம் பண்ணினோம். அவ்ளோதான். இதுவரை பேசிட்டு வந்ததுக்கு நன்றி.''

''ஒரு நிமிஷம் நீங்க கேட்டாலும் கேட்காட்டாலும் சொல்றேன்னு நா சொன்ன வார்த்தையை நா காப்பாத்திடறேன். வாங்க என் காதலியைக்காட்டிடறேன்.'' அவன், அவள் கையைப் பிடித்துக் கொண்டு வாஷ்பேசின் இருந்த இடத்துக்குச் சென்றான். கண்ணாடியில் தெரிந்த அவளை ஒரு வினாடி உற்றுப் பார்த்தான்.

''என்ன பாக்கற? உன் பிரார்த்தனைப்படி எனக்கு கிடைச்ச காதலி இவதான் நல்லார்க்காளா?''

அருகில் நின்றவளைச் சுட்டிக் காட்டி, கண்ணாடியில் தெரிந்த உருவத்திடம் கேட்டான். அவள் ஒரு வினாடி திகைப்போடு அவனைப் பார்த்தாள். பிறகு சட்டென்று அவன்கையை உதறிவிட்டு, திரும்பி நடந்தாள். அவன் சன்னமாய் சிரித்தான். அவளைப் பின் தொடர்ந்து வந்து கீழே இறங்கினான்.

''இந்த கோவம் சும்மா தானே?''

''மிஸ்டர் ஆகாஷ், ஒண்ற நாள் உங்களோட பிரயாணம் பண்ணிட்டா உடனே காதலா? அபத்தமாருக்கு. கிளம்புங்க. ஜவிஷ் யூ ஆல் தி பெஸ்ட். நீங்க மறுபடி சென்னைக்கு இதே ரயில்ல போவீங்க இல்ல. அப்ப உங்களுக்கு என்னைவிட பெட்டரா இன்னொரு காதலி கிடைப்பா. நா வரட்டுமா?''

''அவள் கிண்டலாகச் சொல்ல அவன் சிரித்தான்.''

''என்ன சிரிக்கறீங்க?''

''உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு காலத்துக்கும் எனக்கு வேணும்னு எனக்காக இன்னொரு

பிரார்த்தனை பண்ணுங்களேன் ப்ளீஸ். இது என் கெஸ்ட் ஹவுஸ் அட்ரஸ். டைம் கிடைச்சா வாங்க. அட்லீஸ்ட் போனாவது பண்ணு''

அவன், அவள் கையில் ஒரு கார்டைத் திணித்துவிட்டு தன் ப்ரீஃப்கேஸோடு வேகமாக நடந்து சென்று கும்பலில் மறைந்தான். அவள் சில விநாடிகள் அப்படியே நின்றாள். பிறகு ஒரு ஆட்டோ பிடித்து வீட்டிற்கு வந்தாள்.

அவள் தலையைக் கண்டதும் வேலைக்காரர்கள் பரபரப்பானார்கள்.

அம்மா வேகமாக கீழே வந்தாள்.

''ஏண்டி ரயில்லயா வந்த...?''

''ஆமா..''

''உங்கப்பாவுக்கு தெரிஞ்சா என்னாகும் தெரியுமா?''

''சும்மா ஒரு த்ரில்லுக்காகத்தான் வந்தேன். இதுக்கு போய் ஏன் இப்டி பதர்ற...?''

''அவள் நாலு கால் பாய்ச்சலில் மாடியிலிருந்த தன் அறைக்கு வந்தாள். ஏஸியை ஓடவிட்டு, கட்டிலில் மல்லாந்து விழுந்தாள்.

''சாப்ட என்ன அனுப்பட்டும்?'' அம்மா இன்டர்காமில் கேட்டாள்.

''ஆப்பிள் ஜூஸ், போர்ன்விடா, ஐஸ்கிரீம், வறுத்த முந்திரி, சாம்பார் சாதம், தொட்டுக்க ஜாங்கிரி எல்லாம் அனுப்பு.''

''என்னடி ஆச்சு உனக்கு... இதுக்குத்தான் ரயில்ல வரக்கூடாதுங்கறது!''

''சுஜிதா சிரித்தாள். ஏனோ தெரியவில்லை. உடம்பு லேசாகி பறப்பது போலிருந்தது. பட்டாம்பூச்சியாய் பறந்து சுற்றி வர வேண்டும் போலிருந்தது. இதற்கு காரணம் கேட்டால் சொல்லத் தெரியாது.

அம்மா ஆப்பிள் ஜூஸ் அனுப்பினாள்.

''மத்ததெல்லாம் எங்கே?''

''தெரியாதும்மா அம்மாஇதான் தரச் சொன்னாங்க. குளிச்சுட்டு கீழ வரச் சொன்னாங்க டிபன் சாப்ட..

''ஆப்பிள் ஜூஸை வைத்துவிட்டு அவன் போனதும் சுஜிதா எழுந்தாள். தன் கைப்பையை திறந்து அவன் கொடுத்த விலாச அட்டையை எடுத்துஅந்த எண்ணிற்கு போன் செய்தாள். மறுமுனையில் ரிங் போக ஒருவித படபடப்போடு காத்திருந்தாள்.

''யெஸ்...''

''மிஸ்டர் ஆகாஷ் ப்ளீஸ்...''

''ஜஸ்ட் எ மினிட்...'' என்ற குரலைத் தொடர்ந்து ஆகாஷின் அறையிலிருந்த டெலிபோன் அடிக்கும் சத்தம் கேட்க, படபடப்பு இன்னும் அதிகமாயிற்று.

''ஹலோ... ஆகாஷ் ஹியர்...''

சட்டென்று போனை வைத்தாள். ஐந்து நிமிடம் கழித்து மீண்டும் போன் பண்ணினாள். அவன் குரல் கேட்டதும் போனை வைத்தாள். இப்படியே ஐந்தாறு முறை செய்தவளுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. பித்தம் தலைக்கேறுகிறது என்று இதைத்தான் சொல்கிறார்களா? அவன் தவித்துக் கொண்டிருப்பான் யார் போன் செய்தார்கள் என்று. தவிக்கட்டும். நன்றாகத் தவிக்கட்டும்.

அவள் குளிக்கப் போனாள். ஏதோ பாடலை ஹம்பண்ணியபடி வெகு நேரம்குளித்தாள். உடை மாற்றி டிரஸ் பண்ணிக் கொண்டு கீழே வந்தாள். டைனிங் டேபிளில் மொத்த குடும்பமும் ஒன்றாய் அமர்ந்து டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அப்பா, சித்தப்பாக்கள், அவர்கள் குழந்தைகள், அம்மா, சித்திகள் என்று எல்லோரும் ஒரு சேர அமர்ந்திருந்தார்கள்.

''ஹாய் சுஜி... சென்னை லைஃப் எப்டி இருக்கு? இப்டி வந்து உட்கார்.''

''சித்தி பெண் தன் அருகிலிருந்த சேரைக் காட்டினாள்.''

''உன் படிப்பெல்லாம் எப்படியிருக்கு?''

''இதுவரை எவ்ளோ துணியைக் கிழிச்சிருப்ப?''

''கிண்டலா..?''

''எவ்ளோ நாள் லீவு...?''

''ஒரு வாரத்துல கிளம்பிடுவேன்..

''என்னடி இவ்ளோ சீக்கிரம்..?''

''போய் நிறைய ஒர்க் இருக்கு?''

''ஊரை விட்டு ஊர் போய் தனியா இருந்து இப்டி படிக்கணுமா? இங்க இல்லாத படிப்பா?''

''இங்க இருந்தா ஹாஸ்டல்ல இருக்க விடுவீங்களா?''

''ஹாஸ்டல் லைஃப் அவ்ளோ நல்லாருக்கா இந்த வீட்டை விட..''

''அது ஒரு ஜாலிதானே! அதைவிடு. இங்க என்ன விசேஷம்?''

''என்ன பெரிய விசேஷம். வழக்கம்போல வண்டி ஓடுது. ஒரு த்ரில்லும் இல்ல'' சித்தி பெண் இவளுக்கு மட்டும் கேட்கும்படி சலித்துக் கொண்டாள். அப்பா, சித்தப்பாக்கள் எல்லாரும் ரத்னச் சுருக்கமாக இரண்டொரு கேள்விகள் கேட்டுவிட்டு தங்கள் டிபனை முடித்துக் கொண்டு எழுந்து சென்றார்கள். அவர்கள் அப்படித்தான். தேவையின்றி ஒரு நிமிடம் யாரிடமாவது பேசினால் ஒரு கோடி நஷ்டமாகி விடும் என்று நினைப்பவர்கள். சதாசர்வ காலமும், வியாபாரம், பணம், பிஸினஸ் போட்டிகளை சமாளிப்பது பற்றிய சிந்தன்ன... இதைத்தவிர வேறு எது பற்றியும் நினைக்க

அவர்களுக்கு நேரமில்லை. அவர்களது கௌரவங்களை எல்லாம் தங்கள் தலையில் சுமந்து கட்டிக் காப்பதே தங்கள் முழு நேரப்பணி என்பது போல் இருபத்தி நாலுமணி நேரமும் அலங்கார பூஷிதைகளாக அவர்களது மனைவிகள்.

சுஜிதாவுக்கு தன் வீடும் அதன் அலங்காரமும் பணமும் பதவிசும், சுத்தமும் பிடிக்கும். அவள் படித்த பள்ளியில் அம்மாவோ அப்பாவோ ஏதாவது நிழ்ச்சிக்கு வரும்போது, ஆசிரியர்களும் மற்றவர்களும் அவர்களுக்கு கொடுக்கும் மரியாதையிலும் காட்டும் பவ்யத்திலும் பிரம்மித்துப் போவாள். இன்னார் வீட்டுப் பெண் என்று சொன்னால் எந்த இடத்திலும் தனக்கு கிடைத்த மரியாதையிலும் உபசரிப்பிலும் குளிர்ந்து போவாள். ஒரு விதத்தில் பெருமையாக இருந்தது பிடித்துமிருந்தது. எங்கு போனாலும் வி.ஐ.பி. உபசாரம் எல்லாருக்கும் கிடைத்து விடுமா என்ன? அதே நேரம் தங்களை விட அந்தஸ்து குறைந்த இடம் என்றால் உபசரிப்பு இன்னும் அதிகமாகவே கிடைக்கும் என்பதையும் உணர்ந்திருந்தாள் அவள். கிராமத்து மனிதர்களுக்கு ஒரு சாதாரண பட்டணத்து மனிதன் என்றால் உசத்திதான். பிரம்மிப்பு தான். பட்டணத்தில் ஈ எறும்பு கூட மதிக்காதவனுக்கு அந்த உபசாரமும் மரியாதையும் போதையேற்றும்.

அதே போல் சென்னை வாசிகளுக்கு மும்பைக்காரர்கள் என்றால் கொஞ்சம் உயரத்திலிருப்பவர்களாகத் தோன்றும். மும்பை கல்லூரிகளில் இவளுக்கு சமமான பணக்காரக் கூட்டம் அதிகமிருந்தது. இவள் ஜம்பம் அங்கே எடுபடவில்லை. என்னை விட நீ என்ன உசத்தி என்ற பாவனை எல்லாரிடமும் இருந்தது. சுஜிதாவுக்கு இது பிடிக்கவில்லை. அவளுக்கு உபசாரமும் மரியாதையும் வேண்டும். சின்ன வயதிலிருந்து இது பழகிவிட்டது. இது ஒருவித போதையாய் மனதில் படிந்து விட்டது. எனவேதான் கல்லூரிப் படிப்பை மும்பையில் தொடராமல் சென்னையில்

இடம் பெற்று தொடர்ந்தாள் சென்னை பெண்களுக்கு இவள் நாகரீகம் நாலு மடங்கு அதிகம்தான். இவளிடம் பேசக்கூட பயந்தார்கள். அப்படி பேசியவர்களும் மரியாதையாய் குழைந்து பேசினார்கள். எல்லாவற்றுக்கும் அவளை முன்னிறுத்தினார்கள். தலையில் கிரீடம் வைத்து தலைவியாய் ஏற்றுக் கொண்டார்கள். இதுதான் சுஜிதா எதிர்பார்த்ததும், இப்போது அவள் அங்கு முடிசூடா ராணி. அந்த மகுடத்தை இறக்கி வைத்துவிட்டு அவளாவது இங்கு வருவதாவது.

டிபன் சாப்பிட்டு விட்டு மாடிக்கு வந்தவள் மறுபடியும் ஆகாஷின் கெஸ்ட் ஹவுசுக்கு போன் பண்ணினாள். அவள் வெளியில் போய் விட்டதாகச் சொன்னார்கள்.

அடுத்த இரண்டு நாளும் அவனை போனில் பிடிக்க முடியவில்லை. ச்சே என்றாயிற்று? போரடித்தது. எதற்காக அவனுக்குத் தான் திரும்பத் திரும்ப போன்செய்கிறோம் என்று ஆச்சர்யமாக இருந்தது. ரயில் சிநேகம் என்று வீராப்பாய் பேசிவிட்டு வந்தாயிற்று. அதோடு விட்டு விட வேண்டியது தானே? எதற்கு அவனை நினைத்துக் கொண்டு, போன் செய்து...? நீதான் என் காதலி என்று அவன் சொல்லி விட்டதால் இந்த புளகாங்கிதமா? எப்படியோ.. ஆக மொத்தம் அவளுக்கு அவனைப் பிடித்து விட்டது. அவன் ஞாபகமாகவே இருந்தது. இந்த பரந்து விரிந்த மும்பையில் அவன் எங்கே சுத்திக் கொண்டிருக்கிறானோ?

''சுஜி ஷாப்பிங் வரயா?'' சித்தப்பா பெண் லாவண்யா அறைக்குள் எட்டிப் பார்த்து கேட்டாள்.

''என்ன வாங்கப் போற?''

''பர்ட்டிகுலரா எதுவுமில்ல. போற போக்குல பிடிச்சதை வாங்கலாம்னு. ஷாப்பிங்கா முக்கியம்? சுத்தறதுதானே எங்க பிளான்.

''சுத்தறது எதுக்கு. சைட் அடிக்கவா? இல்ல ஆள் பிடிக்கவா?''

''பல்லை உடைப்பேன். சைட் அடிக்கன்னே வெச்சுக்கோயேன். அவங்க நம்பள அடிக்கல? அத மாதிரிதான்?''

சுஜிதா சிரித்தபடி எழுந்து உடை மாற்றிக் கொண்டு கிளம்பினாள். ஒன்றுவிட்ட சகோதரிகளோடு சத்தமாய் பேசி சிரித்தபடி காரில் ஏறிச் சென்றாள்.

ஒவ்வொரு இடமாய் காரை நிறுத்தி கண்களை சுண்டியிழுக்கும் இளமையும் அழகும் கொண்டு அவர்கள் நடக்க, பல பேர் திரும்பிப் பார்த்தார்கள். கடைசியாக கடற்கரையில் பொழுதைப் போக்க வந்தார்கள். காரை பார்க் பண்ணிவிட்டு கடற்கரை சாலையில் காற்றில் கூந்தல் பறக்க நடந்தார்கள். சுஜிதாவின் விழிகள் நாலாபக்கமும் சுழன்றது. ஒரு இடத்தில் நிலைத்தது. ஆகாஷா... அது? ஆம்.. அவனேதான். கையில் ஏதோ பார்சலோடு ஒரு காரின் அருகில் சென்று பார்சலை உள்ளே வைத்து விட்டு காரில் ஏறப் போனான்.

சுஜிதா தன் சகோதரிகளிடமிருந்து நைசாக நழுவினாள். அவனை நோக்கி வேகமாக நடந்தாள். ஆகாஷ் காரைக் கிளப்பினான்.

''ஆகாஷ்...''

குயிலாய் அவள் அழைத்தது கடலின் இரைச்சலில் கரைந்தது.

அவள் இன்னும் வேகமாய் ஓடி அவன் காரை நெருங்க, கார் சர்ரென்று கிளம்பிச் சென்றது.

''ச்சட்... அவளைப் பார்த்தானா பார்க்கவில்லையா? பார்த்துவிட்டு வேண்டுமென்றுதான் சென்று விட்டானா? அவ்வளவு கத்தி அழைத்தது காதில் விழாமலா இருந்திருக்கும்!

சுஜிதா எரிச்சலோடும் ஏமாற்றத்தோடும் திரும்பி நடந்தாள். பத்தடி நடந்திருப்பாள்.

''ஹலோ...''

''பின்னால் குரல் கேட்க சட்டென்று நின்றாள். விஷமச் சிரிப்போடு நின்றிருந்தான் ஆகாஷ்.''

குப்பென்று முகம் மலர்ந்தது.

''பார்த்துட்டுதானே பார்க்காத மாதிரி போனீங்க...?''

''யெஸ்''

''ஏன் அப்டி... போனீங்க...''

''ரயில் சிநேகம் எல்லாம் என்ன பார்வை? எதுக்கு நிக்கணும்?''

''அப்புறம் இப்ப எதுக்கு கூப்ட்டீங்க? அப்டியே போய்த் தொலைய வேண்டியதுதானே?''

''ஒரு விஷயம் சொல்லிட்டு போலாம்னுதான்.''

''என்ன?''

''பேசறதுக்கு தில் இல்லாதவங்க எதுக்கு டெலிபோன் பண்ணனும்.''

''யாரைச் சொல்றீங்க..?''

''வேற யாரை, உன்னைத்தான். என் டெலிபோன் நம்பர் இப்போதைக்கு உன்னைத் தவிர வேற யாருக்கும் தெரியாது.''

''நா பண்ணல.''

''பொய்.''

''இருந்துட்டு போகட்டும்.''

''இருந்தாலும் தேங்க்ஸ் சொல்லிட்டு நா கிளம்பறேன்.''

''எதுக்கு தேங்க்ஸ்?''

''என்னை நீயும் விரும்பறயே அதுக்கு!''

''நா சொன்னேனா அப்டி?''

''சில விஷயங்கள் சொல்லித் தெரியவதில்லைன்னு தெரியாதா உனக்கு?''

''கனவு காண்றீங்க.''

''திங்கட்கிழமை நா ஊருக்கு திரும்பறேன். உனக்கும் சேர்த்து டிக்கெட் புக் பண்ணியாச்சு. மறுபடியும் ரயில்ல சந்திப்போம் ஓகேயா...

''எனக்கு டிக்கெட் புக் பண்ண நீங்க யாரு? நா வரமாட்டேன்.''

''வருவ!'' அவன் புன்சிரிப்போடு கிளம்பிச் செல்ல அவள் சிலையாக நின்றுவிட்டாள்.

ஒரு தாய் கிருபது வருடங்களுக்கு மேலாக பாடுபட்டு தன் மகனை நல்லதொரு ஆண்மகனாக உருவாக்குகிறாள் காதலி என்ற பெயரில் மற்றொரு பெண் கிரண்டே நாளில் அவனை அடிமையாக்கி விடுகிறாள்.

-ஷான்

திங்கட்கிழமை ரயில் புறப்படும் வரை அவளை எதிர்நோக்கி கதவருகிலேயே தவமிருந்தான் ஆகாஷ். கூட்டத்தில் விழிகளை செலுத்தி அவளைத் தேடினான். ரயில் புறப்படும் வரை அவளைக் காணவில்லை. கண்கள் வலித்ததுதான் மிச்சம். ரயில் புறப்பட்டு மெதுவாக நகரத் தொடங்கியது. அப்போதும் நம்பிக்கையிழக்கவில்லை அவன். அவள் நிச்சயம் வருவாள் என்ற நம்பிக்கையோடு கதவருகிலேயே நின்றபடி கூட்டத்தில் அவள் ஓடி வருகிறாளா என்று பரிதாபமாக பார்த்துக் கொண்டு வந்தான்.

ரயில் வேகமெடுத்து ஸ்டேஷனை விட்டு முழுவதுமாக வெளியேறி விரைந்தது. ஒரு பெருமூச்சோடு கதவை விட்டு நகர்ந்து உள்ளே வந்து தன் இருக்கையில் அமர்ந்தவன் மனம் கனத்தது.

அப்படியானால்அவள் மனதில் எதுவுமில்லையா? இது வெறும் ரயில் சிநேகம் தானா?

அவன் தன் சூட்கேஸை பத்திரப்படுத்தி விட்டு பேண்ட்டிலிருந்து லுங்கிக்கு மாறினான். இருக்கையில் அமர்ந்து அன்றைய நாளிதழில் தன் ஏமாற்றத்தை கரைத்துக் கொள்ள முயன்றான். சற்று நேரத்தில் டி.டி.ஆர். வந்து டிக்கெட் செக்கிங் செய்ய ஆரம்பித்தார்.

எதிர்பக்க மேல் பர்த்தில் படுத்திருந்த உருவத்தை தட்டி எழுப்பினார். யாரது... டிக்கெட் எடுங்க ப்ளீஸ்.. ஹிந்தியில் குரல் கொடுத்தார். அந்த உருவம் பதிலுக்கு ஹிந்தியில் ஏதோ பதிலுரைத்தபடி ஆகாஷை நோக்கி கைகாட்டிவிட்டு திரும்பி படுத்துக் கொண்டது.

''ஏன் சார் அவங்க டிக்கெட் உங்ககிட்ட இருக்கா?'' டி.டி.ஆர். அவனைப் பார்த்து கேட்டார்.

ஐ டோண்ட் நோ ஹிந்தி... இங்கிலிஷ்ல சொல்லுங்க.

''அவங்க டிக்கெட் காட்டுங்க''

''எங்கிட்ட கேட்டா?''

''உங்ககிட்டதான் இருக்குன்னு சொல்றாங்க!''

''சாரி.. பொய் சொல்றாங்க. என் கூட யாரும் வரல''

''ஹலோ.. டி.டி.ஆர்.'' மறுபடியும் அவளை எழுப்ப, கீழே இறங்கிய உருவத்தைப் பார்த்ததும் ஆகாஷ் திகைத்தான். ''நீயா?'' என்றான் பிரம்மிப்போடு.

''எனக்கும் சேர்த்து டிக்கெட் புக் பண்ணினதா சொன்னதெல்லாம் பொய்தானா...? அவள் லேசான

சிணுங்கலோடு கேட்க அவன் அசடு வழிய டி.டி.ஆ.ரைப் பார்த்தான். பர்ஸ் திறந்து டிக்கெட்டைக் காட்டினான். டி.டி.ஆர். ஒரு மாதிரி அவர்களைப் பார்த்தபடி நகர்ந்தார்.

''நீ எப்பொ வந்த...?''

''ம்... கதவருகில் இப்படியா தேவுடு காப்பாங்க! எப்பவும் லேட்டாதான் வருவாங்களா? முன்னாடியே வந்து உள்ள உக்கார மாட்டோமா?''

''ம்... நா தேவுடு காக்கறதை நீ பார்த்துட்ருந்தயாக்கும். வந்து கூப்ட வேண்டியதுதானே?''

''அதெப்டி... அப்புறம் என்ன சுவாரசியம் இருக்கும் அதுல? பாவம் நா வரலன்னதும் முகம் தொங்கிப் போனதைப் பார்க்கணுமே.''

''இருந்தாலும் உனக்கு இவ்ளோ அழுத்தம் ஆகாது. என் அவதியை ரசிச்சு பார்த்தயாக்கும்!''

''இந்த மாதிரி காட்சி இனிமே கிடைக்குமா?''

''அப்டியா? என்னை அலைக்கழிச்சதுக்கு உனக்கு தண்டனை உண்டு.''

''என்ன தண்டனை?''

''சென்ட்ரல்ல இறங்கும் வரை உன்னோட ஒரு வார்த்தை பேசப் போறதில்ல..''

''பார்க்கலாமா? உங்களால முடியாது தோத்துடுவீங்க''

''நிச்சயமா பேசமாட்டேன்.''

''பார்ப்போம்'' அவள் தன்லெதர்பேக் திறந்து ஒரு ஆங்கில நாவலை எடுத்து வைத்து படிக்க ஆரம்பிக்க அவன் தன்கையிலிருந்த நாளிதழால் அவளை மறைத்துக் கொண்டு வெளியில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

மறுநாள் மதியம், உடன் பயணித்த இருவர் நடுவில் ஒரு ஸ்டேஷனில் இறங்கிக் கொள்ள ஆகாஷும் அவளும் தனித்து

விடப்பட்டார்கள். அவன் அவள் பக்கம் கூட திரும்பவில்லை. அவளும் அதை சட்டை செய்யாதது போல் தன்பையிலிருந்து ஒரு பிஸ்கட் பொட்டலத்தை எடுத்து பிரித்து சாப்பிட ஆரம்பித்தாள்.பத்து நிமிடம் கூட ஆகியிராது. பிஸ்கட் பொட்டலம் நழுவி கீழே விழ அவள் ஒரு பக்கமாய் மயங்கிச் சரிந்தாள். ஆகாஷ் பதறிப்போய் அவளைப் பார்த்தான்.

''என்னாச்சு சுஜி...?'' சட்டென்று எழுந்து வந்து அவளைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டான்.

''என்னாச்சு... அவளைத் தட்டி எழுப்ப முயன்றான்.. அவள் துளியும் அசையவில்லை. தன் வாட்டர் பாட்டில் திறந்து கொஞ்சம் தண்ணீர் எடுத்து அவள் முகத்தில் அடித்தான்.

''சுஜி.. என்னாச்சு.. நா பேசறது கேக்கறதா?'' பதறியபடி கேட்டான்.

அவள் முனகியபடி லேசாக கண்ணைத் திறந்து அவனைப் பார்த்து விட்டு மீண்டும் மூடிக் கொண்டாள்.''தண்ணி வேணும்..'' ஈனஸ்வரத்தில் முனகினாள்.

''என்ன செய்யுது..?'' அவன் கொஞ்சம் தண்ணீர் எடுத்து அவள் வாயில் ஊற்றினான்.

''என்னமோ செய்யுது ஆகாஷ்! தொண்டை எல்லாம் எரியுது...

''என்ன பிஸ்கட் அது.. எங்க வாங்கின?''

''நல்ல கடைலதான். பிஸ்கட்ல மிஸ்டேக் இல்ல''

''அப்பறம்?''

''தெரியல.. வாந்தி வராப்பல இருக்கு..''

''எழுந்தரு.. நா கூட்டிட்டு போறேன்.''

அவள் எழுந்திருக்க முயன்று, முடியாமல் மறுபடியும் மயங்கிஅவன் தோளில் சாய அவன் பதறிப் போனான். அவளை சரியாக படுக்க வைத்து விட்டு என்ன செய்வதென்று

புரியாமல் திகைத்துப் போய் பார்த்தான்.அவளிடமிருந்து எந்த சத்தமும் அசைவும் இல்லை. ஆகாஷ் அவளை கவலையோடு பார்த்தான். ஓடும் ரயில் என்ன செய்வது? அவளுக்கு ஒன்றுமில்லாமல் இருக்க வேண்டுமே என்று வேண்டிக் கொள்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

ஒரு மணி நேரம் கழித்து அவள் மீண்டும் மெல்ல கண் திறக்க அவன் பரபரப்போடு அவளருகில் அமர்ந்தான்.

''சுஜி.. இப்பொ எப்டியிருக்கு?''

''குளுருது ஆகாஷ்..''

''என்ன செய்யுது.. ஜுர மடிக்குதா? அவன் அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். லேசாய் சுட்டது. தன் பெட்ஷீட் எடுத்து அவளுக்கு போர்த்தி விட்டான்.

''ஒண்ணுமே சாப்டலையே.. ஏதாவது சாப்பிடறியா?''

''என்ன இருக்கு?''

''பிரெட்..?''

''வெறும் பிரட்டா?''

''பால் கிடைக்குதான்னு பாக்கறேன்'' அவன் எழுந்திருக்க அவள் வேண்டாம் என்றபடி அவன் கையைப் பற்றி உட்காரச் சொன்னாள்.

''திடீர்னு என்னாச்சு..

''புறப்படும் போதே உடம்புசரியில்லதான். வராட்டி நீங்க வருத்தப்படுவீங்களேன்னுதான் வந்தேன்.''

அவன் இரக்கத்தோடு அவளைப் பார்த்தான். கனிவோடு அவள் கேசத்தை ஒதுக்கி விட்டான்.

சென்ட்ரல் வந்து சேரும் வரை நிமிடத்திற்கு ஒரு முறை எப்டியிருக்கு ஏதாவது வேணுமா என்று கேட்டுக்கொண்டே வந்தான். அவளுக்கு சோர்வு தெரியாமலிருக்க சின்னச் சின்ன

நகைச்சுவை சம்பவங்களை சுவாரசியமாய் சொல்லிக் கொண்டு வந்தான். சென்ட்ரல் வரும் வரை அவள் தண்ணீர் தவிர வேறு எதுவும் சாப்பிடவில்லை.

''பசிக்கலையா உனக்கு?'' கவலையோடு கேட்டான்.

''பசிக்குது. ஆனா சாப்ட பயம்மார்க்கு. மறுபடியும் வாந்தி மயக்கம்னு வந்துட்டா உங்களுக்கு தானே கஷ்டம்?''

ஒரு வழியாய் சென்ட்ரலில் வண்டி நுழைய அவன் அப்பாடா என்றான்.

''நல்ல காலம் நல்ல படியா வந்து சேர்ந்துட்டோம். எழுந்திரு ஜூஸ் ஏதாவது வாங்கித்தரேன். நடக்க முடியுமா இல்ல தூக்கிட்டு போகணுமா?''

அவன் இருவரது லக்கேஜையும் எடுத்து தயாராய் வைத்துவிட்டு எழுந்தான்.

''ரொம்ப தேங்க்ஸ்.. அவள் எழுந்து தன் லக்கேஸை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டாள்.

''அப்டி என்ன பண்ணிட்டேன்னு தேங்க்ஸ்?''

''சென்ட்ரல் வரைக்கும் சுவாரசியமா சளசளன்னு பேசிக்கிட்டே வந்தீங்களே அதுக்குதான்.''

அவள் கண்ணடித்து சிரித்தபடி அலட்சியமாய் நடக்க அவன் பேந்தபேந்த விழித்தபடி நின்றான். கிலோ கிலோவாய் முகத்தில் அசடு வழிந்தது.

''முகத்தை துடைச்சுகிட்டு வாங்க சார்'' அவள் கீழே இறங்கி ஜன்னல் வழியே குரல்கொடுத்தாள்.

சுதாரித்துக் கொண்டு அசட்டு சிரிப்போடு அவன் கீழே இறங்கினான்.

''எப்டி நம்ம நடிப்பு...? பேச மாட்டேன்னு சவால் எல்லாம் விட்டீங்க...!''

''உன்னை அப்புறம் கவனிச்சுக்கறேன். குறுக்கு வழில என்னை ஏமாத்திட்டு பெருமை பீத்திக்க வேண்டாம்.''

''சரி பீத்திக்கல. நாம மறுபடியும் எப்பொ பார்க்கறது?''

''எதுக்கு பார்க்கணும்?''

''சரிதான்.கோவமாக்கும். அப்படின்னா இனிமே பாக்கவே மாட்டீங்களா என்னை?''

''வேணாம் ஆகாஷ், சவால் மட்டும் விடாதிங்க. நா விதவிதமா உங்களைத் தோற்கடிப்பேன்.''

''வேணாம் தாயே. நீ கெட்டிக்காரிதான் ஒத்துக்கறேன்?''

''அப்டி வாங்க வழிக்கு. மறுபடியும்நாம எப்பொ சந்திக்கலாம்?''

''உன் ஹாஸ்டல் போன் நம்பர் கொடு. நான் போன் பண்றேன். நாம நிறைய பேசணும் மனசு விட்டு..''

''என்ன பேசணும்?''

''நீ என்னைப் பத்தி தெரிஞ்சுக்கணும். என் வீட்டை பத்தி,அம்மா பத்தி அப்பா பத்தி தங்கை பத்தி எல்லாம் தெரிஞ்சுக்கணும். அதே மாதிரி நான் உன்னைப் பத்தி தெரிஞ்சுக்கணும். நா அடுத்த வாரம் போன் பண்ணுவேன்.''

''அடுத்த வாரம் எனக்கு ஒரு காம்படிஷன் இருக்கு டிஸைனிங் காம்படிஷன். பஸ்ட் பிரைஸ் வாங்கிடணும்னு இருக்கேன்.''

''வாங்கு. பஸ்ட் பிரைஸ் வாங்கிட்டா ஒருநாள் முழுக்க என் கார்ல உன்னை ஏத்திக்கிட்டு பெட்ரோல் காலியாகற வரை சுத்தறேன்.''

''ஒரே ஒரு லிட்டர் போட்டுக்கிட்டு வந்து ஒரு நிமிஷம் ஓட்டிட்டு இறக்கி விட்ருவீங்க..

''ச்சேச்சே.. புல் டேங்க் போட்ருவேன். நா ஒண்ணும் உன்னை மாதிரி ஏமாத்த மாட்டேன். ரொம்ப நல்ல பையன்!''

இப்போது நினைத்தாலும் சிரிப்பு வந்தது சுஜிதாவுக்கு. ரயில் சிநேகம் இப்படி காதலாய் மாறும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. நினைவு தெரிந்த நாளிலிருந்து பணத்திலும் படாடோபத்திலும் வளர்ந்து விட்டதாலோ என்னமோ எந்த ஆணைப் பார்த்தாலும் அலட்சியம்தான். அவன் பணக்காரனாக இருந்தாலும் சரி, சாதாரண மனிதனாய் இருந்தாலும் சரி, துச்சமாய்த்தான் பார்ப்பாள். சக வயது தோழிகள் எல்லாம் சாருக்கானையும் சல்மான்கானையும் நினைத்து உருக, இவள் ப்பூ.. என்ன பெரிய ஆளுன்னு இப்படி உருகறிங்க என்பாள் அலட்சியமாக. ஹீரோக்களின் புளோ அப்களை அறைச்சுவர்களிலும் கதவுகளிலும் ஒட்டி வைத்துக் கொண்டு பூஜிக்கும் தோழிகளை கேலியாய்ப் பார்த்து சிரிப்பாள்.

''உனக்கு திமிருடி.. பெரிய இவள்னு நினைப்பு! ஆம்பளைன்னா என்ன பெரிய கொம்பான்னு அலட்சியம்.. நாங்கள்ளாம் சராசரி லேடீஸ்மா. எங்களை விட்ரு. நாங்க இப்படித்தான் இருப்போம்.

தோழிகள் தங்கள் பக்கத்து நியாயத்தைச் சொல்லுவார்கள்.

இப்போது எல்லாமே மாறிவிட்டது. அவளையும் ஒரு ஆண் கவர்ந்து விட்டான் என்பது அவளுக்கே வியப்பாக இருந்தது. இதனால்தான் காதலை சக்தி வாய்ந்த தென்கிறார்களா? கதை, சினிமா என்று எல்லாம் காதலை மையமாய் வைத்து பின்னப்படுகிறதா? இந்த விஷயம் தெரிந்தால் தோழிகள் என்ன சொல்வார்கள்? யூ டூ சுஜிதா என்று வியப்பார்களா?

அவளுக்கு சிரிப்பு வந்தது. ஒரு வழியாக அவள் டிஸைன் செய்த உடை ரெடியாயிற்று. தானே அதை அணிந்து கண்ணாடி முன் நின்றவள் வாவ்... என்று வியப்போடு மகிழ்ந்தாள். பிரமாதமாக வந்திருப்பதாகத் தோன்றியது.

நிச்சயம் ஆகாஷ் அவளை காரிலேற்றிக் கொண்டு ஊர் சுற்றுவான்.

சுஜிதா புது உடைகளை கழட்டி பத்திரப்படுத்தி விட்டு நைட்டி அணிந்து கொண்டு படுத்தாள்.

அதற்கடுத்த வாரம் ஆடைகளின் அணிவகுப்பு நடந்தது. பெரிய பெரிய மனிதர்களும், சினிமா நட்சத்திரங்களும், மில் அதிபர்களும் வந்திருந்தனர்.

சுஜிதா வரும்போது ஹாலில் கைத் தட்டல் ஒலி சீராக கேட்டது. நான்கைந்து வித உடைகளில் மாறி மாறி வந்து போனாள்அவள்.

அணிவகுப்பு முடிந்து நீதிபதிகள்தங்களுக்குள் கலந்தாலோசித்துக் கொண்டிருக்க தோழிகள் சுஜிதாவுக்கு அட்வான்ஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். சந்தோஷத்தில் அவள் முகம் மலர்ந்தது.

முடிவுகளை அறிவிக்க ஒருவர் மேடையேறினார். அவை நிசப்தமாயிற்று.

மிஸ் சுஜிதா..

''அவர் பெயர் சொல்லி அழைக்க கரகோஷம் எழும்பியது.''

''மூன்றாவது பரிசு.''

'சுஜிதாவின் முகம் சுருங்கியது.அத்தனை சந்தோஷமும் வடிந்து அவமானத்தில் முகம் சிவந்தது.'

''பரவால்ல விடு சுஜி மூணாவதாவது கிடைச்சுதேன்னு சந்தோஷப்படு'' தோழி ஒருத்தி சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தாள்.

பரிசை வாங்கி கொண்டு யாரிடமும் ஒரு வார்த்தையும் பேசாமல் வேகமாக வெளியில் வந்து ஒரு ஆட்டோ பிடித்து ஹாஸ்டலுக்கு வந்தாள். தான் டிஸைன் செய்து அன்று அணிந்த அத்தனை உடைகளையும் டார் டாராகக் கிழித்து

நாலா பக்கமும் எறிந்தாள். பரிசுப் பொருளை சுவற்றில் விட்டெறிந்து உடைத்தாள்.

ஒரு ஆண் உலகிற்கே அரசனாக இருப்பது பெருமையல்ல. அவன் ஒரு பெண்ணின் இதயத்தில் சிம்மாசனமிட்டு அமர்வதே பெரிய விஷயம்.

-கிங்கர்சால்

''நீ எதுக்கு சுஜி இவ்ளோ டென்ஷனாறே? தர்ட் பிரைஸ்னா ஏன் மட்டமா நினைக்கற ஏதோ ஒரு பரிசு கிடைச்சிருக்கு இல்ல? அப்பறம் என்ன?'' ஆகாஷ் அவளை சமாதானப்படுத்த முயன்றான்.

''இல்ல ஆகாஷ். அவங்கள்ளாம் சீட் பண்ணிட்டாங்க. முதல் இரண்டு பரிசு வாங்கின டிஸைன்களை விட என் டிஸைன் நல்லாவே இருந்துதுன்னு எனக்கே தெரிஞ்சுது. அவங்க ஜட்ஜ்மென்ட் சரியில்லதான்.''

''அப்டியெல்லாம் சொல்லாத. அவங்க பார்வைல உன் டிஸைனை விட அந்த டிஸைன் ஏதோ ஒரு விதத்துல இன்னும் கூடுதலா அட்ராக்ட் பண்ணியிருக்கலாம். உனக்கு பரிசு கிடைக்கலங்கறதுக்காக ஜடஸ்மென்ட்டை குத்தம் சொல்றது தப்பும்மா. கோபத்தை விட்டுட்டு அந்த டிஸைன்ஸ் எதனாலமுதல் பரிசை வாங்கிச்சுன்னு யோசி. அடுத்த முறை முதல் பரிசு வாங்க இன்னும் எப்டி அழகா டிஸைன் பண்ணலாம்னு பாரு. அதை விட்டுட்டு நடந்து போன விஷயத்தையே நினைச்சுக்கிட்டு இப்டி அப்ஸெட் ஆய்ட்டா மேற்கொண்டு எதுவுமே சாதிக்க முடியாம போய்டும். ஸோ.. டென்ஷனை விட்டுட்டு கிளம்பு. நாம சிட்டி முழுக்க கார்ல சுத்தப் போறோம்.''

''நான் தான் தோத்துட்டேனே. எப்டி உங்களோட வரமுடியும்?''

''என்னைப் பொறுத்தவரை இது தோல்வி இல்ல. நீயும் ஒரு பரிசு வாங்கியிருக்க இல்ல? ஸோ... நாம போறோம். ஸ்பென்சர் கிட்ட வெயிட் பண்றேன். அரைமணில பளிச்சுனு வந்துசேரு. சரியா?'' ஆகாஷ் போனை வைத்துவிட்டு எழுந்தான். தன் அலுவலக அறையை ஒட்டியிருந்த டாய்லட்டிற்குச் சென்று முகம் கழுவித் துடைத்து தலையை சரி செய்து கொண்டான். வாசனை பவுடரை லேசாய் முகத்தில் பூசி கர்ச்சிப்பால் துடைத்துக் கொண்டு பிரெஷ்ஷாக வெளியில் வந்தான். இன்டர்காமில் தன் பி.ஏ.வை அழைத்தான். அவசரமான சில வேலைகளை கொடுத்து முடித்து வைக்கச் சொல்லி விட்டு தன் கார் சாவியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

ஸ்பென்சரில் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கியவன் சற்று தூரத்தில் யாருக்காகவோ காத்திருப்பது போல் நின்றிருந்த சரண்யாவைப் பார்த்ததும் வியப்போடு அருகில் சென்றான்.

''ஹலோ.. இதான் உன் காலேஜா..?'' அவன் குரல் கேட்டு திரும்பியவள் முகம் மலர சிரித்தாள்.

''இதான் உங்க ஆபீஸா?''

''சம்பாதிக்கற வயசுல சுத்தலாம். படிக்கற வயசுலயே சுத்தினா எப்டி?''

''இதானே வேண்டாங்கறது! இங்க வரச் சொன்னதே நீங்கதானே! அப்பறம் என்ன அட்வைஸ்?''

''நானா...? நா எப்பொ?'' விழி பிதுங்க அவளைப் பார்த்தான்.

''நீங்களேதான் நேத்து ராத்திரி என் கனவுல.''

''மைகாட்!'' அவன் சட்டென்று சிரித்தான்.

''பயந்துட்டீங்களா?''

''பயப்படல. பிரம்மிச்சுட்டேன். அதுசரி என்ன இங்க நிக்கற?''

''என் பிரண்டோட வந்தேன். என்னை நிக்க வெச்சுட்டு இதோ வந்துடறேன்னு போனா. இன்னும் காணும். ஆமா நீங்க எங்க இங்க?''

''நானும் ஒரு பிரண்டுக்காகத் தான் வெயிட் பண்றேன்னு வெச்சுக்கோயேன்.''

''வீட்டுக்கு வரேன்னு சொன்னதா ஞாபகம்.''

''கண்டிப்பா வரேன். நேரம் கிடைக்கல.''

''நேரம் கிடைக்காது. நாமதான் ஏற்படுத்திக்கணும். எங்க வீட்டுக்கு வரது கௌரவக் குறைச்சல்னு நினைச்சா வர வேணாம்.''

''இதுக்கு பேர்தான் தாழ்வு மனப்பான்மைங்கறது. உங்க வீட்டைப் பத்தி நீயே மட்டமா நினைக்கறேன்னு அர்த்தம்.''

அவள் அடிபட்டாற்போல் அவனைப் பார்த்தாள். அவன் சொல்வது சரிதான் என்பது போலிருந்தது. தான் அப்படி சொல்லியிருக்கக் கூடாது என்று தோன்றியது. தன் பேச்சு தனக்கே வெட்கம் தர அவள் மௌனமாய் தலை குனிந்தாள்.

''பரவால்ல விடு. நாளைக்கு நிச்சயமா வரேன். உங்க வீட்லதான் டிபன். ஆலு சப்பாத்தி செய்யத் தெரியமா? தெரிஞ்சா பண்ணி வை. வந்து ஒரு வெட்டு வெட்டறேன். சாப்டுக்கிட்டே நிறைய பேசலாம்.. சரியா?''

அவன் கிளம்பினான். தூரத்தில் சுஜிதா வந்து கொண்டிருந்ததைப் பார்த்து விட்டான். போகும் வழியிலேயே அவளை ஏற்றிக் கொள்ளும் எண்ணத்தோடு சரண்யாவிடம் விடை பெற்றுக் கொண்டு வேகமாக வந்து காருக்குள் அமர்ந்து அதை கிளப்பினான்.

அவன் செல்வதையே இமைக்காமல் பார்த்தாள் சரண்யா. ஆலு சப்பாத்தி எப்படி செய்வது? யாரிடம் கேட்டால் தெரியும் என்று யோசித்தாள்.

''ஏய் சரண் என்னயா யோசனை? நா வந்து அஞ்சு நிமிஷமாச்சு.''

தோழியின் குரல் கேட்க திடுக்கிட்டு மீண்டாள். ஒண்ணுல்ல வா போலாம் என்றபடி நடந்தாள்.

பிரிட்டிஷ் கவுன்சில் போய் சில புத்தகங்கள் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தவளுக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. அப்பா சீக்கிரமே வந்திருந்தார். சரண்யா ஆகாசத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

''மழையெல்லாம் வராது உள்ள வா''

''என்னப்பா விஷயம்? உடம்புக்கொண்ணுமில்லையே.''

''அதெல்லாம் இல்ல. மூணு மணிக்கு முதல் முதலா ஒரு ஷூட்டிங் போறேன்.''

''அடி சக்கை! யார் படம்? யாரெல்லாம் நடிக்கிறாங்க?'' சரண்யா உற்சாகமாக கேட்டாள்.

''அதெல்லாம் தெரியாது. ஏவி.எம்.முக்கு வரச் சொல்லி என் பிரண்டு சொல்லியிருக்கான். என் போட்டோஸ் பார்த்து டைரக்டரும் புரொடியூசரும் ஓகேன்னு சொல்லிட்டாங்களாம். நாலஞ்சு சீன்ல தலை காட்டறாப்பல சின்ன வேஷம்தான்னு சொன்னான்.''

''பாத்துப்பா கூட்டத்தோட கூட்டமா உன் தலைய மட்டும் காட்டிட்டு விட்ரப் போறாங்க.''

''கிண்டலா.. பார்த்துக்கிட்டேயிரு. இன்னும் ரெண்டு வருஷத்துல நேஷனல் அவார்டு வாங்கிக் காட்டறேனா இல்லையான்னு.''

''வாழ்த்துக்கள்ப்பா..உங்கிட்ட ஒண்ணு கேக்கணுமே.''

''சொல்லு.''

''ஆலு சப்பாத்தி பண்ணத் தெரியுமா உனக்கு?''

''ஆலு சப்பாத்தி தானே? சாப்ட தெரியும். எதுக்கு கேக்கற?''

''சுத்த வேஸ்ட்டுப்பா நீ! இதெல்லாம் தெரிஞ்சுக்காம எப்டி குடித்தனம் பண்ணின நீ?''

''அது சரி..நாளைக்கே நா ஆலு சப்பாத்திபண்ண கத்துக்கறேன். குடித்தனம் பண்ண நீ ஒரு நல்ல பொண்ணா ஐஸ்வர்யா ராய் கணக்குல பார்..''

''ஓஹோ.. கிழவனுக்கு இப்டி ஒரு ஆசை வேற இருக்கோ?''

''அதிருக்கட்டும். ஆலு சப்பாத்தி யாருக்கு?''

''வேற யாருக்கு.. ஆகாஷ் வராராம் நாளைக்கு இங்க. ஆலு சப்பாத்தி, சப்ஜின்னு அவரே மெனுவும் கொடுத்துட்டார்.''

''அப்டி போடு! இப்ப என்ன பண்ணப்போற?''

''என்ன பண்ண சொல்லு''

''சத்யாக்கு தெரிஞ்சிருக்கும். போய் கேட்டுக்கிட்டு வாயேன்.''

''அய்யோடா! இதுக்கோசரம் அண்ணா நகர் வரை யார் அலையறது.''

''அப்பொ விடு. நாளைக்கு ஆகாஷ் வந்தா அவனையே பண்ணி சாப்டச் சொல்லு. இப்பொலேர்ந்தே பிராக்டிஸ் பண்ணிண்டாதானே பின்னாடி சௌகர்யமார்க்கும்!''

''ரொம்ப மோசம்ப்பா நீ!''

''டி.வி. போட்டுப் பாரேன் பெண்ணே! ஏதாவது சானல்ல யாராலது ஆலு சப்பாத்தி பண்ணிட்டிருந்தாலும் இருக்கலாம் இல்ல?''

''அப்பா சொல்ல சரண்யா அடுத்த நிமிடம் டி.வி.யை ஆன் செய்தாள். வரிசையாய் சானல்களை மாற்றினாள். சோதனை மாதிரி எந்த சானலிலும் யாரும் சமைக்கவில்லை.

''இப்பொ என்னப்பா செய்யலாம்?''

''நீ எது பண்ணினாலும் அதுதான் ஆலு சப்பாத்தி! அடிச்சு சொல்லிடு. அவனுக்கு மட்டும் தெரியவா போறது?''

''என்ன பெரிய ஆலு சப்பாத்தி. நானே புது மாதிரியா பண்றேன். நீ போய் கோதுமை மாவும், உருளைக் கிழங்கும் வாங்கிட்டு வந்து கொடுத்துட்டு கிளம்பு. ஒரு கை பார்த்துடறேன். அதென்ன பெரிய பிரும்ம வித்தையா? வராம போக.''

''என்னமோ செய்! ஆனா வந்தவனை ஓட ஓட விரட்டிடாதே உன் சப்பாத்தியால...''

''மாட்டேன். கட்டிப் போட்டுட்டுதான் சப்பாத்தியே கொடுப்பேன்.''

''பி வேர் ஆஃப் ஆலு சப்பாத்தின்னு வாசக் கதவுல எழுதி வெச்சுடவா?''

''கிண்டலடிக்காம போய் வாங்கிண்டு வாப்பா'' சரண்யா அப்பாவை கடைக்கு அனுப்பி விட்டு உடை மாற்றிக் கொண்டாள். பழைய மாகஸீன்களை எடுத்து புரட்டினாள். ஒரே ஒரு பத்தகத்தில் ஆலு பரோட்டா என்று போட்டிருக்க அவசரமாய் படித்தாள். பரோட்டாவுக்கு பதில் சப்பாத்தி! செய்முறை ஒரே மாதிரி தானே இருக்கும் என்று நினைத்தாள். தானே ஒரு புது செய்முறையை மனசுக்குள் ஏற்படுத்திக் கொண்டாள். கொஞ்சமாய் மாவு பிசைந்து ஒரே ஒரு உருளைக்கிழங்கு வேக வைத்து ஐந்தே ஐந்து சப்பாத்தி செய்து பார்த்தாள். டேஸ்ட் பார்த்ததில் நன்றாகவே இருப்பதாகத் தோன்றியது. டிரையல் பார்த்தாகிவிட்டது. நாளைக்கு இதைவிட நன்றாக செய்து விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

அப்பா வர இரவு பத்து மணியாயிற்று.

''என்னப்பா நேஷனல் அவார்டு கிடைச்சுடுமா? உன் முதல் நாள் அனுபவம் எப்டி?''

''நீ வேறம்மா. போனதுலேர்ந்து மேக்கப் போட்டு ஒரு பக்கமாக உக்கார்ந்ததுதான் மிச்சம். இதோ இதோன்னு சொன்னாங்களே தவிர என் ஷாட்ஸ் எடுக்கவேல்ல. ஹீரோயின் டயர்டா ஆய்ட்டாங்களாம். டைரக்டர் பேக் அப் சொல்லிட்டார். இனிமே நாலு நாள் கழிச்சுதான் இந்த காட்சியை எடுப்பாங்களாம். ஆட்டோ பிடிச்சு போனதுதான் மிச்சம். இருபத்தி அஞ்சு ரூபா வேட்டு!''

''பரவால்ல விடு. எல்லாம் நல்லதுக்குன்னு நினைப்போம்! இந்த ஆலு சப்பாத்தி எப்டியிருக்குன்னு சொல்லு.''

''அட... பண்ணியே ஆச்சா? இப்பவே பண்ணி வெச்சுட்டயே! நாளைக்கு ஊசிப்போய்டாது?

''குசும்புப்பா உனக்கு! இது டிரையல் சப்பாத்தி!''

''தைரியமா சாப்டலாமா?''

''அறுக்காதப்பா. எப்டியிருக்குன்னு சொல்லு.''

''அவர் ஒரு வில்லல் எடுத்து சாப்பிட்டார்.

''பரவால்லயே... நல்லாவே இருக்கு!''

''அவள் முகம் மலர்ந்தது. இரவு முழுக்க தூக்கம் வரவில்லை. எப்போதுடா பொழுது விடியும் என்றிருந்தது. அவனோடு என்னவெல்லாம் பேச வேண்டும் என்று மனசுக்குள் ஒத்திகை பார்த்தாள். அதுசரி ஒத்திகை பிரகாரம் இவள் பேசலாம். அவன் எப்படி பேசுவான்? இவள் ஒத்திகை பார்ப்பது அவனுக்கு தெரியுமா என்ன? சிரிப்பு வந்தது அவளுக்கு புரண்டு புரண்டு படுத்து உறங்காமலேயே பொழுதைத் தள்ளினாள்.

''எங்க போலாம் சொல்லு'' காரை மெதுவாக ஓட்டியபடி அவளிடம் கேட்டான் ஆகாஷ்.

''எங்கயோ போங்க. உங்க இஷ்டம்'' விட்டேற்றியாகச் சொன்னாள் சுஜிதா.

''என்னடா கண்ணா இவ்ளோ விரக்தி? இன்னும் அந்த மூணாவது பரிசை மறக்கலயா? கமான் சுஜி போரடிக்காதே, வாழ்க்கைன்னா இப்டித்தான் ஜெயிச்சுக்கிட்டே இருக்கறதுல என்ன சுவாரசியம் இருக்கும்? ஒரு முறைதோக்கணும், மறுபடியும் ஜெயிக்கணும். சுத்தி சுத்தி வர ராட்டினத்தை விட மேலும் கீழும் ஏறிஇறங்கி சுத்தற ஜெயன்ட் வீல்தானே த்ரில்லிங்கா இருக்கும்! அதுல சுத்தர த்ரில்லைத்தானே எல்லாரும் விரும்புவோம்! அதே மாதிரி வாழ்க்கையைக் கூட ஜெயன்ட் வீல் மாதிரிதான் நினைக்கணும். ஏற்றத் தாழ்வுகளை ஜாலியா ஏத்துக்கணும். வாழ்க்கைங்கறது சக்கரம் மாதிரி இருந்தாதான் முன்னேறி ஊர் போய்ச் சேர முடியும்.

''அட சாமியே! நீங்க எங்க வேலை செய்யறிங்க? ஆபீஸ்லயா இல்ல ஏதாவது மடத்துலயா? உபதேச மழையா கொட்றிங்க!''

''நல்ல உபதேசம் தானே! தப்பா எதுவும் சொல்லலையே.''

''பட் ஐ டோண்ட் லைக் தீஸ் உபதேசம்ஸ். உபதேசம் பண்ற அளவுக்கு யாரும் இங்க நூத்துக்கு நூறு உத்தமர்கள் இல்ல.''

ஆகாஷ் புருவம் சுருக்கி அவளைப் பார்த்தான். ''அப்டி சொல்லாதே சுஜி. தப்பு செய்து திருந்தறவன்தான் இந்த தப்பை செய்யாதேன்னு உண்மையா உபதேசம் பண்ண முடியும்.''

''அப்டியா? அப்பொ நீங்களும் நிறைய தப்பு செய்திருக்கீங்கன்னு சொல்லுங்க! என்னல்லாம் தப்பு பண்ணினீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''தெரிஞ்சோ தெரியாமலோ சின்னச் சின்ன தவறுகள் செய்யாதவன்தான் யார்?யாரையும் பாதிக்காத அளவுக்கு நானும் நிறைய சின்னச் சின்ன தப்பு பண்ணியிருக்கேன். அசட்டுக் குற்றங்கள்! அதெல்லாம் எதுக்கு இப்பொ?''

''வேணாம். செஞ்ச தப்பும் சொல்ல வேணாம். உபதேசமும் பண்ண வேண்டாம். ஆளை விடுங்க. வேற ஏதாவது பேசுங்க.''

''நம்பளைப் பத்தி பேசலாமா?''

''ஓ.. எஸ்..''

ஆகாஷ் வண்டி ஓட்டியபடியே தன்னைப் பற்றியும், தன் வீட்டைப் பற்றியும் நிறைய சொன்னான்.

''அப்பா ரொம்ப கஷ்டப்பட்டு தான் இந்த நிலைமைக்கு எங்களைக் கொண்டு வந்தார். ஒரு ஜெனரேஷனை விட அடுத்த ஜெனரேஷன் நல்ல நிலைமைக்கு முன்னேறி வரணும்டா ஆகாஷ்னு சொல்லுவார். என் அப்பாவோட தாத்தா பீச்சுல சுண்டல் வித்துதான் என் அப்பாவோட அப்பாவை படிக்க வெச்சாராம். என் தாத்தா கவர்ன்மென்ட் ஆபீஸ்ல சாதாரண கிளார்க். அதுக்கே என் கொள்ளுத் தாத்தா சந்தோஷப்படுவாராம். தன்னைவிட தன் மகன் நல்ல நிலைக்கு வந்துட்டான்னு தாத்தா தன் அரசாங்க சம்பளத்துல என் அப்பாவை என்ஜினீயராக்கி இன்னும் உயரத்துக்கு ஏத்திப் பார்த்து சந்தோஷப்பட்டார். அப்பா அவரை விட என்னை உயரமான இடத்துக்கு கொண்டு வந்துட்டதா சொல்றார். உன் வீட்டை பத்தி சொல்லேன்.''

''எனக்குத் தெரிஞ்சு எனக்கு முந்தி எந்த தலைமுறையும் கஷ்டப்பட்டதா சரித்திரமே கிடையாது. பரம்பரை பரம்பரையா பணத்துல தான் படுத்து எழுந்திருக்கோம். ராஜ பரம்பரைன்னு கூட சொல்லிக்கலாம். இன்னும் எட்டு தலைமுறை உட்கார்ந்து சாப்பிடற அளவுக்கு செல்வமிருக்கு.

''போரடிக்கல உனக்கு?''

''ஏன் போரடிக்கணும்?''

''ஒரேயடியா இனிப்பா சாப்ட்டா திகட்டும்னு சொல்வாங்களே!''

''இனிப்பு பிடிக்கறவங்களுக்கு திகட்டாது.''

ஆகாஷ் யோசித்தான். அவள் சித்தாந்தம் சரியா என்று.

''அதுசரி ஆகாஷ்...உங்க வீட்ல நம்பளுக்கு பச்சைக் கொடி காட்டுவாங்களா.. இல்ல கத்துவாங்களா?''

''பிரச்சனை எதுவும் வர சான்ஸ் இல்ல. உங்க வீடு எப்டி?''

''எங்க வீட்லயும் பிரச்சனை வராது. உங்க கொள்ளுத் தாத்தா சுண்டல் வித்த கதையைச் சொல்லாத வரைக்கும்!''

அவள் சிரித்தபடி சொல்ல ஆகாஷ் முகம் சுருங்க அவளைப் பார்த்தான்.

மனித மனம் விசித்திரமானது. ஒரு பொருளை அடைவதற்கும் ஒருவரின் அன்பை பெறுவதற்கும் எத்தகைய தன்பங்களையும் அனுபவிக்கத் தயாராகி விடுகிறது. தன் ஆசைகள் பூர்த்தியாகும்பொது அதற்காகப்பட்ட தன்பத்தையும் தயரத்தையும் மனம் வெகு விரைவில் மறந்து விடுகிறது.

-பிரம்மஞானம்

சாயங்காலம் வரப்போகிற ஆகாஷுக்காக காலை யிலிருந்தே வீட்டை ரெண்டு படுத்திக் கொண்டிருந்தாள் சரண்யா. வீட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் ஒழித்து ஒட்டடை அடித்து சுத்தப்படுத்தி பளிச்சென்று வைத்தாள். சோபாவின் மீது பழைய காட்டன் புடவையை விரித்து ஓரங்களை மடித்து விட்டாள். வரவேற்பறை ஓரளவுக்கு திருப்தியான தோற்றத்திற்கு வந்ததும் குக்கரில் உருளைக்கிழங்கை வேகப் போட்டு விட்டு குளிக்கப் போனாள்.

மனதுக்குப் பிடித்தமானவனுடன் தனிமையில் அமர்ந்து பேசுவதைப் போல சந்தோஷமான நிமிடங்கள் வேறெதுவும் இருக்க முடியாது. எத்தனையோ பேரோடு எவ்வளவோ

விஷயங்கள் தினமும் பேசுகிறாள். அப்போதெல்லாம் ஏற்படாத பரபரப்பும் படபடப்பும் இன்று ஏற்படுவதை நினைத்தால் அவளுக்கே ஆச்சர்யமாக இருந்தது. அவன் எத்தனை மணிக்கு வருவான் என்று தெரியவில்லை. எப்போது வேண்டுமானாலும் வந்து நிற்கலாம், என்பதால் சப்பாத்தி சப்ஜி எல்லாவற்றையும் தயார் செய்து வைத்துக் கொண்டாள். வேண்டுமானால் சூடு செய்து கொண்டால் போதும். கடிகார முள் சோதனை செய்தது. நேரம் இவ்வளவு மெதுவாக நகர்ந்து இப்போதுதான் பார்க்கிறாள். எதையாவது படித்துக் கொண்டிருந்தாலாவது அது வேகமாய் நகராதா என்ற நப்பாசையில் ஒரு புத்தகத்தை எடுத்து பிரித்து வைத்துக் கொண்டு அமர்ந்தாள்.

மனம் ஒரு நிலையில் இல்லாவிட்டால் அது எதிலும் பதிவதில்லை. புத்தகத்தில் கண்கள் வரி வரியாய் மேய்ந்தது.நாலு முழு பக்கங்களைத் திருப்பியும் மனதில் ஒன்றும் பதியவில்லை என்பதுதான் சிரிப்பான விஷயம். இதுவரை இப்படி இருந்திருக்கிறதா என்று யோசித்தாள். பொதுவாக காதல் என்ற விஷயமே அவளுக்கு நம்பிக்கையற்றதாகத்தான் இருந்தது. காதலிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு ஒரு இடம் பாக்கி வைக்காமல் ஜோடி ஜோடியாய் சுற்றும் இளைஞர்களைக் கண்டு கவலையும் எரிச்சலும் அடைந்திருக்கிறாள். வாழ்க்கையில் மிகப் பெரிய லட்சியங்கள் எதுவுமில்லாமல், காதலே தங்கள் லட்சியம் போல் பொன்னான காலத்தையும் தங்கள் வாழ்வையும் ஏன் இப்படி வீணடித்துக் கொள்கிறார்கள். இவர்கள் என்று வருத்தப்பட்டிருக்கிறாள். அப்பாவிடம் கூட இது பற்றி பேசியிருக்கிறாள்.

''ஏம்ப்பா இந்த காதலைப் பத்தி நீ என்ன நினைக்கற?''

''திடீர்னு என்னம்மா.. அதைப்பத்தி...? நீ யாரை யாவது...''

''அய்யோ.. புத்தி போறதே உனக்கு! எதைப் பத்தியாவது கேட்டா உடனே நீ அதைப் பண்றயான்னு கேக்கறதை விட்டா வேற கேள்வியே கிடையாதா?''

''பின்ன எதுக்கு கேட்ட?''

''ஏன் அதைப்பத்தி நா தெரிஞ்சுக்கக் கூடாதா? அதுக்காக அப்டி உயிரை விடறாங்களே எல்லாரும்னு கேட்டேன். அதென்ன அவ்ளோ பெரிய விஷயமா?''

''யார் கண்டா? சொல்றதுக்கு எனக்கு எந்த அனுபவமும் இல்ல. இனிமே ஏதாவது ஏற்பட்டா வேணா உனக்கு எக்ஸ்ப்ளெயின் பண்றேன்.''

''ஓ... ஹோ... அந்த ஆசை வேற இருக்கோ...? நா சீரியசா கேக்கறேன். விளையாடதப்பா. ஒழுங்கா சொல்லு.''

''இதப்பார்ரா மிரட்டறதை! சரி சொல்றேன். கேட்டுக்கோ. காதல்ங்கறது கற்சிலை மாதிரி. நீ எப்டி பார்க்கறயோ அப்டி தெரியும். கல்லைக் கண்டா நாயைக் காணும்னு சொல்வோமே அந்த மாதிரி. காதல் உன்னதமானதுன்னு உன் மனசு சொன்னாதான் அது உன்னதமா தெரியும். இல்லாட்டா ஆபாசமாதான் தோணும். காதல்ங்கறது இன்னிக்கு நேத்திக்கு இருக்கற விஷயமில்ல. யுகம்யுகமா இருக்கு. ஒவ்வொரு யுகத்துலயும் அற்புதமான காதல் சம்பவங்கள் இருந்திருக்கு. திரேதா யுகத்துல ராமன் சீதை, துவாபர யுகத்துல ராதா கிருஷ்ணன், இதெல்லாம் இதிகாசக் காதல்கள். அதே யுகத்துல எத்தனையோ மனுஷாளும் காதலிச்சிருப்பா. ஒண்ணு சேர்ந்திருப்பா, அல்லது பிரிஞ்சிருப்பா, அதுக்கெல்லாம் சாட்சியில்ல. சரித்திரமாகற காதல் சில பேரோடதுதான் அம்பிகாபதி அமராவதி, லைலா மஜ்னு, அனார்கலி சலீம்னு சொல்லலாம். இவாள்ளாம் காதலுக்காக உசிரை விட்டவங்க. உயிரை விட்டதாலயே உன்னதமான காதலர்கள்னு சொல்லப்பட்டவர்கள். ஆனா இன்றைய காதல்ங்கறது ஏதோ ஒரு எதிர்பார்ப்பின் அடிப்படையில்தான்

பெரும்பாலானவர்களுக்கு ஏற்படறதோன்னு எனக்கொரு சந்தேகம் இருக்கு.

உன்னதமான காதல் எல்லாம் இப்பொ முப்பது பர்ஸன்ட் கூட இருக்காது. முக்கால்வாசி பேர் டைம் பாஸிங்க்காக லவ் பண்றா. பாதி பேர் ஒரு த்ரில்லுக்காக, இன்னும் பாதி பேருக்கு காதலிக்கிறது ஒரு பேஷன். சில பேர் நானும் ஒருவரால் காதலிக்கப்படறேன்னு பெருமைப்பட்டுக்கறதுக்காக காதலிக்கறாங்க. ஸோ.. இந்த அபத்தங்களுக்கு நடுல உன்னதம் எங்கேர்ந்து தெரியம்? காதல்ங்கறது நல்ல விஷயம்னு நினைக்கிறவங்க கூட இந்த அசிங்கங்களுக்கு நடுல காதலிக்க பயப்படுவாங்கன்னு நினைக்கிறேன். எங்கே தன்னோட காதலையும் இப்டி அபத்தமா நினைச்சுடப் போறாங்களோன்னு. அந்த அளவுக்கு இன்னிக்கு இளைஞர்கள் ஜஸ்ட் லைக் தட்னு சகட்டு மேனிக்கு காதலிக்கறாங்க. இவங்களைத் தூண்டி விடறா மாதிரி திரைப்படங்கள், டி.வி. சானல்கள், பத்திரிகைகள், சலனத்தையெல்லாம் காதல்னு நினைச்சுக்க வேண்டியது. இப்டி ஒரு லுக் விட்ட உடனேயே அடுத்த சீன்ல ஆஸ்திரேலியா லண்டன்னு டூயட் பாடப் போயிடற சினிமா காதலர்களை தங்கள் ரோல் மாடலா எடுத்துக்கிட்டு தப்பான வழில போற அவசரக் காதலர்கள்தான் இப்பொ அதிகம்.

கரெக்ட்ப்பா! போன வாரம் போரடிச்சுதேன்னு ஏதோ ஒரு சானல்ல ஏதோ ஒரு தமிழ்ப்படம் பாக்கறேன். அதுல அல்ட்ரா மாடர்னா ஒரு பொண்ணு ஒரு ஆளை மிரட்டிட்டிருக்கா. பத்து எண்ணி முடிக்கறதுக்குள்ள நீ என்னைக் காதலிக்காட்டா நா இந்த கிளாஸ் துண்டால என் கையை அறுத்துக்குவேன். அதுவும் முக்கியமான இரத்தக் குழாயை. அப்புறம் சாவுதாங்கறா! அப்பறம் எண்ண ஆரம்பிக்றா. பத்துன்னு சொல்றதுக்குள்ள நோன்னு அவன் ஸ்லோமோஷன்ல ஓடி வந்து அவளைத் தடுத்து கட்டிக்கறான். அடுத்த பாட்டு காஷ்மீர்ல அரைகுறை டிரெஸ்ல. அடச்சேன்னு அடுத்த

சேனல் திருப்பறேன். இது மாதிரி இன்னொரு அபத்தம் அங்க ஓடிட்ருக்கு! பாஷை தான் வேற!''

''காதலனுக்காக புழு பூச்சியெல்லாம் கூட சாப்டுவாங்களே!''

''அதெப்டி உனக்கு தெரியும்? நீ பார்த்தாயா.. பார்த்துட்டுதான் வியாக்யானமா? மோசம்ப்பா நீ?''

''ச்சேச்சே.. யார் தியேட்டர்ல பார்த்தா, டி.வி.ல பார்த்ததுதான்.''

''அதான் பார்த்தேன். இந்த வயசுக்கு நல்ல படமா பாருப்பா. போயும் போயும்...''

''எல்லாத்தையும் பாத்தா தானேம்மா எது நல்லது எது கெட்டதுன்னு தெரிஞ்சுக்க முடியும்'' அப்பா சமாளித்தார்.

இப்போது நினைத்தாலும் சரண்யாவுக்கு சிரிப்பு வந்தது. அப்பா சொன்னது நிஜம்தான். காதல் என்பது கற்சிலைதான். ஆபாசமாய் நினைத்தால் ஆபாசம். உன்னதமாய் நினைத்தால் உன்னதம். இரண்டும் நம் மனதைப் பொறுத்ததுதான். எது எப்படியோ காதல் என்பது எல்லாருக்குமே இப்படி ஒரு ஏக்கத்தையும் பரபரப்பையும் கொடுக்கும் என்பதை மட்டும் இப்போது அனுபவபூர்வமாக ஒத்துக் கொள்ள முடிந்தது. ஆகாஷைப் பார்க்கும் வரை தானும் ஒருவனை நேசிப்போம் என்று அவள் எண்ணியதேயில்லை. சம்பத் மாமா எப்பொழுதாவது சொல்லுவார். ஆகாஷுக்கு உன்னை கல்யாணம் பண்ணி கூட்டிட்டு போறேனா இல்லையா பார் என்று.

''அதெல்லாம் ஆளைப் பார்க்காம நா யாரையும் கட்டிக்க மாட்டேன். உங்க ஆகாஷ் என்ன பெரிய மன்மதனோ? எனக்கு பிடிக்க வேண்டாமா?''

''நீ மட்டும் அவனைப் பார்த்த.. அடுத்த முகூர்த்தம் எப்பொ மாமான்னு நச்சரிப்ப.''

''முதல்ல காட்டுங்க உங்க பிள்ளையை. அப்பறம் சொல்றேன் ஆள் எப்டின்னு.''

''இப்படி சொல்லி இரண்டாண்டுகள் கழித்துதான் அக்காவின் கல்யாணத்தில் ஆகாஷைப் பார்த்தாள். மாமா சொன்னது போல் ஆள் நன்றாகத்தான் இருந்தான். ஆனால் அதனால் மட்டும் அவளுக்குபிடித்துப் போய் விடவில்லை. அவனுடைய பேச்சு, கண்ணியமான தோற்றம், அலையாத பார்வை, அந்தஸ்து பார்க்காது பழகிய விதம் இதெல்லாம்தான் அவள் காதலைத் தூண்டி விட்டது. அதன் பிறகு இரண்டு மூன்று முறை அவனை சந்தித்ததில் அந்த அன்பு ஆழமாய் வேர் ஊன்றியது. அவன் தன்னை விரும்புகிறானா இல்லையா என்று நிச்சயம் தெரியாது. தன் காதலையும் அவனுக்குச் சொல்லவில்லை. இருப்பினும் உள்ளே ஒரு அழகிய காதல் விருட்சம் நாளொரு மேனியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அவனுக்கும் நிச்சயம் உள்ளூர ஒரு அன்பு தன்மீது இருக்கும் என்று அவள் உள் மனம் நம்புகிறது.

வாசற்கதவு தட்டப்படும் சத்தம் கேட்க சட்டென்று கலைந்து எழுந்தாள்.

ஒருக்களித்து திறந்திருந்த கதவில் சாய்ந்து நின்றிருந்தான் ஆகாஷ்.

''ஹலோ வாங்க...''

''ஆமா.. நா வந்து பத்து நிமிஷமாச்சு. கண்ணைத் திறந்துக்கிட்டே அப்டி என்ன கனவு.''

''என்னமோ யோசனை. அதுசரி பத்து நிமிஷமாச்சா வந்து? நா நம்ப மாட்டேன்.''

''நீ வேற நா உள்ள போய் நாலு ஆலு சப்பாத்தி எடுத்து சாப்ட்டுட்டு போனா என்னன்னு கூட பார்த்தேன்.

''கிண்டல்!''

''ஆமா..அப்டி என்ன பலமான யோசனை?''

''என் யோசனைக்கென்ன? எப்பவும் எதையாவது யோசிச்சுட்ருக்கறதைத் தவிர எனக்கு வேறென்ன வேலை?''

''அவன் உள்ளே வந்து அமர்ந்தான்.

''சின்ன வீடா இருந்தாலும் பளிச்சுனு இருக்கு. நீட்டா வெச்சிருக்க. ஆமா புக்ஸ் நிறைய படிப்பயோ அந்த ஷெல்ஃப் நிறைய புக்ஸா இருக்கு! பார்க்கலாமா?''

''ஓ... நீங்க பார்த்துட்டே இருங்க. நா உங்களுக்கு டிபன் கொண்டு வரேன்.''

''ரெண்டு பேருக்குமே கொண்டு வா. தனியா சாப்ட எனக்கு பிடிக்காது'' அவன் அலமாரியிலுள்ள புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்து புரட்ட ஆரம்பித்தான்.

அவள் டீபாய் மீது டிபன் பிளேட்டுகளையும் சப்ஜி பாத்திரத்தையும் கொண்டு வந்து வைத்தாள்.

''பரவால்லயே நிறைய புக்ஸ் கலெக்ட் பண்ணி வெச்சிருக்க ரொம்ப ஆர்வமோ?''

''ஏன் உங்களுக்கும் புக்ஸ் பிடிக்கும் தானே?''

''பிடிக்கும். எங்க போனாலும் முதல்ல நுழையற கடை புக்ஸ் ஷாப்பாதான் இருக்கும். என்னென்னமோ புக்ஸ் வாங்கி குமிச்சி வெச்சிருக்கேன். ஆனா பாரு வேலை என்னை தின்னுட்ருக்கு. படிக்கதான் நேரமில்ல. மேம்போக்கா படிக்கறதெல்லாம் எனக்குபிடிக்காது. அதனால எல்லாம் பத்திரமா இருக்கு. எப்பவாவது நேரம் கிடைச்சா படிப்பேன். முந்தியெல்லாம் வெறி பிடிச்சா மாதிரி படிப்பேன்.

''யாரோட ரைட்டிங் உங்களுக்கு பிடிக்கும்.''

''லேசான நகைச்சுவை கலந்ததான நடைதான் ரொம்ப பிடிக்கும். இங்கிலீஷ்ல நம்மவரான ஆர்.கே. நாராயணன்

படிப்பேன். தமிழ்ல கல்கி, சோ.. இவங்க ரைட்டிங்ஸ் ரொம்ப பிடிக்கும்.''

புத்தகங்கள் பற்றி ஆரம்பித்த பேச்சு பல விஷயங்களுக்கும் தாவி சுவாரசியமாய் நீண்டு கொண்டே போயிற்று. நேரம் போனதே தெரியவில்லை. திடீரென்று மணி பார்த்த ஆகாஷ் வியந்து போனான்.

''அடேயப்பா மணி ஆறா? நேரம் போனதே தெரியல!'' அவன் வியப்போடு எழுந்தான்.

''அப்பொ நா வரேன் சரண்யா. இதுவரை இப்டி யாரோடயும் பேசினதில்ல. முந்தியாவது யாராவது பிரெண்ட்ஸோட பேசுவேன். இப்பொ என்னை மாதிரியே எல்லாரும் பிஸி. யாரையும் சந்திக்க முடியறதில்ல. எனி ஹவ் உனக்கு ரொம்ப நன்றி. இங்க இருந்த கொஞ்ச நேரம் உபயோகமா போச்சு. உங்கிட்ட நல்ல விஷயங்கள் பேசின சந்தோஷத்தோட கிளம்பறேன். ஆலு சப்பாத்தி பிரமாதம்! அதுக்கும் ஒரு தேங்க்ஸ். அப்பாகிட்ட கேட்டதா சொல்லு.''

''அவன் புறப்பட்டுச் சென்றதும் அந்த இடமே இருண்டு வறண்டு விட்டாற் போலிருந்தது. அவனோடு பேசியதையெல்லாம் அசை போட்டபடி சற்று நேரம் அமர்ந்திருந்தாள். அவன் வந்ததும் பேசியதும் சென்றதும் ஒரு கனவு மாதிரி இருந்தது. எங்கோ மிதப்பது போலிருந்தது. கை, கால்களெல்லாம் சில்லிட்டாற் போலிருந்தது. பத்து நிமிடம் பெய்த மழை, பூமியின் சூட்டை கிளப்பி விட்டாற்போல் காதல் சூட்டில் நெஞ்சு தகித்தது.

வெகுநேரம் அப்படியே அமர்ந்திருந்தாள் அவள். பத்து மணிக்கு அப்பா வந்தார்.

''என்னம்மா பிரமை பிடிச்சாப்பல உட்கார்ந்துட்ட ஆகாஷ். இந்த வீட்டுக்குள்ள வந்துட்டு போன சந்தோஷமா? சப்பாத்தி எப்டியிருந்துதாம்.''

''சூப்பர்னு சொன்னார். புக்ஸ் எல்லாம் பார்த்துட்டு ரொம்ப ஆச்சர்யப்பட்டார். என்னென்னவோ பேசிட்டிருந்தோம்.

''என்னென்ன?''

''பொதுவா எல்லா விஷயத்தையும்பத்தி பேசினோம்.''

''நீ சொல்றதைப் பார்த்தா அவனுக்கும் உன்னைப் பிடிச்சிருக்குன்னுதான் தோணுது.''

''அய்யோ நாங்க அதெல்லாம் எதுவும் பேசலப்பா.''

''உன் கல்யாணமும் நல்லபடி நடந்துட்டா அப்பறம் நா நிம்மதியா எப்ப வேணா காலன் வரட்டும்னு தைரியமா இருப்பேன்.''

''அப்பா சொல்ல சரண்யாவின் முகம் சுருங்கியது. திடீர்னு என்னப்பா காலன் கீலன்னு.''

''நெருப்புன்னு சொன்னா வாய் வெந்துடுமா?''

''அதுக்காக நெருப்பு நெருப்புன்னே சொல்லிட்ருக்கணுமா? எல்லாரும் ஒருநாள் சாக வேண்டியதுதானே.''

''உங்கிட்ட ஒண்ணு கேக்கட்டுமா சரண்யா?''

''என்ன?''

''நாம ஏதோ ஒரு திட்டம் போடறோம். கட சில அது ஏதோ ஒண்ணா ஆய்டலாம். எதுவுமே நம்ம கைல இல்லையே. ஒருவேளை ஆகாஷைக் கல்யாணம் பண்ணிக்க முடியாம கூட போய்டலாம். அப்பொ நீ அதை சாதாரணமா நினைச்சு தாண்டிப் போவயா இல்ல அங்கயே தவிச்சுப் போய் நின்னுடுவயா?''

சரண்யா அப்பாவை உற்றுப் பார்த்தாள்.

''இதுக்கு நா என்ன பதில் சொல்லணும்னு நீ எதிர்பார்க்கறப்பா?''

''சில நேரம் பயம்மார்க்கு தாயி. நானும் சம்பத்தும் சேர்ந்து ஏதோ நினைச்சு, சும்மா இருக்கற சங்கை ஊதறோமோன்னு தோணுது. இதோட நெட் ரிஸல்ட் நல்லதாயிருந்துட்டா பரவால்ல. ஒருவேளை எதிர்மறையார்ந்துட்டா....? இதோட பாதிப்பு எங்களைவிட உன்னைத் தாம்மா அதிகமா தாக்கும். ஆனா நீ திடமா இருந்தா எப்பேர்ப்பட்ட தோல்விலேர்ந்தும் மீண்டு வந்துடலாம். உலகத்துல எத்தனையோ நல்லவங்க இருப்பாங்க. நமக்கும் யாராவது கிடைப்பாங்க. நா சொல்றது புரியுதாம்மா?''

''புரியுதுப்பா. உங்களுக்கு நா ஒண்ணு சொல்லட்டுமா?''

''சொல்லும்மா''

''இது ஒத்தையா ரெட்டையா விளையாட்டில்லப்பா. என்னைப் பொறுத்தவரைக்கும் காதல்ங்கறதுக்கு அர்த்தம் காத்திருத்தல்! ஜெயித்தல்! நானும் காத்திருப்பேன். என்ன தடங்கல் வந்தாலும் காத்திருந்து ஜெயிப்பேன்.''

சரண்யாவின் முகத்தில் அசாத்தியமான உறுதி தெரிந்தது. அப்பா அவளை திகைப்போடு பார்த்தார்.

எவ்வளவு ஞானியான ஆணும் ஏதாவது ஒரு பெண்ணிடம்
ஏமாந்து விடுகிறான். எவ்வளவு ஏமாளியான பெண்ணும் எந்த ஆணிடமும்
எச்சரிக்கையுடனே இருப்பான்.

-ஹியோடர் ரிங்க்.

பொறுமையின்றி மணியைப் பார்த்தாள் சுஜிதா. ஆறு மணிக்கு வருவதாகச் சொன்ன ஆகாஷை இன்னும்

காணவில்லை. அத்தனை பேரும் தியேட்டருக்குள் போயாகி விட்டது. எரிச்சலோடு தியேட்டர் கேட் பக்கம் மீண்டும் பார்த்தாள். அவன் வரும் சுவடே காணவில்லை. போய்விட்டால் என்ன என்று தோன்றியது. வந்து பார்த்துவிட்டு அவனும் திரும்பி போகட்டும். ஒரு பெண்ணைக் காத்திருக்கச் சொல்லியிருக்கிறோம் என்ற நினைப்பு கொஞ்சமாவது இருந்தால் இப்படி லேட்டாக வருவானா? கடிகாரத்தையும் வாசலையும் பார்த்தபடி எவ்வளவு நேரம் நிற்பது? தனியாக நின்று கொண்டிருந்தவளை உற்று உற்று பார்த்து விட்டுப் போன ஆண்களின் பார்வை வேறு ஆத்திரத்தைக் கிளப்பி விட ஹாஸ்டலுக்கே போய்விடலாம் என்ற எண்ணத்தோடு அவள் ஒரு ஆட்டோவைக் கை காட்டி நிறுத்த, அதே நேரம் ஆகாஷின் கார் தியேட்டர் காம்ளக்ஸுக்குள் நுழைந்தது. அவள் அவனைப் பார்த்து விட்டாலும் வேண்டுமென்றே ஆட்டோவில் ஏறியமர்ந்தாள்.

''சுஜி.. நில்லு..'' அவன் வேக வேகமாக கிட்டே வந்து அவளை நிறுத்தினான்.

''நா வரல. என் பொறுமையெல்லாம் போயாச்சு. நீங்க போய் தனியா உட்கார்ந்து பார்த்துக்குங்க. இல்ல இங்க யாராவது ஜோடி கிடைச்சா கூட்டிட்டு போய் என்ஜாய் பண்ணுங்க.''

''பார்த்தயா, ஜஸ்ட் ஒரு பதினஞ்சு நிமிஷம் தானே லேட்! இதுக்கு போய் கோச்சுக்கறயே.''

''அவள் ஆட்டோவை விட்டு இறங்கினாள்.''

''பதினஞ்சு நிமிஷம் தானேவா? நேரத்தோட அருமை தெரியுமா உங்களுக்கு?''

''டிரைவர் நீ போப்பா'' ஆகாஷ் ஒரு ஐந்து ரூபாயைக் கொடுத்து அவனை அனுப்பினான்.

''கமான் சுஜி. சாரிம்ஃபார்திடிலே. வா போலாம்.''

''போங்க ஆகாஷ்... எல்லாரும் என்னை எப்டி பார்த்தாங்க தெரியுமா.. இப்டியெல்லாம் யாருக்காகவும் காத்திருந்து எனக்கு பழக்கமில்ல.''

''ஓகே.. ஓகே.. இனிமே இப்டி ஆகாது'' அவன் அவளை சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றான்.

''ஆமா ஏன் லேட்?''

''எங்க ரிலேடிவ் ஒருத்தர் வீட்டுக்கு போயிருந்தேன். அங்க பேசிட்ருந்ததுல டைம் போனதே தெரியல.''

''எந்த ரிலேடிவ்? அங்க பொண்ணு யாராவது இருக்காங்களா?''

''சொல்லப்போனா எங்க அத்தையோட பொண்ணுகிட்டதான் பேசிட்ருந்தேன். அடேயப்பா அந்த பொண்ணு எவ்ளோ விஷயம் தெரிஞ்சு வெச்சுட்ருக்காங்கற!''

''என்ன வயசாகுது அவளுக்கு?''

''என்ன ஒரு இருபது வயசிருக்கும். உன் வயசும் அதானே?''

''இருபது வயசு பொண்ணோட பேசிட்ருந்ததுல என்னை மறந்துட்டீங்க இல்ல''

ஆகாஷ் சிரித்தான். ''ஓ... நீங்க அந்த மாதிரி போறிங்களோ? அய்யோ என் சந்தேகப் பிசாசே!''

இருட்டில் ஒருவர் இடம் காட்ட இருவரும் தட்டித் தடுமாறிச் சென்று அமர்ந்தார்கள்.

''இனிமே என்னைக் கேக்காம எந்த அத்தையின் வீட்டுக்கும் போகக் கூடாது புரிஞ்சுதா?''

''அவன் சத்தமின்றி சிரித்தான்.''

''இன்டர்வெல் விடும் வரை உம்மென்றிருந்தாள். படம் வேறு போரடித்தது. சண்டையும் பாட்டுமாய் சரியான மசாலாப்படம்.

''ச்சட் என்ன படம்! வேற நல்ல படமே கிடைக்கலையா உங்களுக்கு?'' இன்டர்வெல்லில் எரிச்சலோடு சொன்னாள்.

''என்ன செய்யச் சொல்ற. இதுக்குதான் டிக்கெட் கிடைச்சுது. பிடிக்காட்டி போயிடலாம் வா.''

''அதைச் செய்வோம். வாங்க போலாம்'' அவள் எழுந்து நடந்தாள்.

அங்கிருந்து எங்கு செல்லலாம் எனக் கேட்டபடி அவனும் பின்னால் நடந்தான்.

''நல்ல ஹோட்டலா போலாம். பசிக்குது.

காரை நியூ உட்லண்ட்ஸுக்கு ஓட்டினான்.

ஏ.சி. ஹாலின் ஒரு மூளைல டேபிளில் அமர்ந்தார்கள். டிபனுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு அவளைப் பார்த்தான்.

''இந்த கோபம் தாபம் இதெல்லாம் நீ கொஞ்சம் குறைச்சுக்கணும் சுஜி. கோபம் மனுஷ முகத்தை விகார மாக்கிடும்னுவாங்க.''

''அது என் சுபாவம் ஆகாஷ். எனக்குஎல்லாமே நினைச்சநேரத்துல நடந்தாகணும். நா பிறந்த இடமும் வளர்ந்த விதமும் அப்டி.''

''இனிமே நீ உன்னை மாத்திக்க முயற்சிக்கலாம் இல்லையா? என்னை எடுத்துக்கோ. நா அனாவசியமா டென்ஷன் ஆனதே இல்லை. முடிஞ்ச வரை எல்லா ஏமாற்றங்களையும், தோல்விகளையும் ஈஸியா எடுத்துக்க முயற்சிப்பேன். அதனால எப்பவுமே ஃபிரெஷ்ஷா இருக்கா மாதிரியே தோணும்.

''பாருங்க ஆகாஷ். ஒவ்வொருத்தர் குணமும் ஒவ்வொரு மாதிரி அப்டியே இருந்துட்டு போய்டுவோம் விட்டுடுங்க. விமர்சனமே பண்ணாதீங்க.''

''அப்டி சொல்லாதே சுஜி. என்கிட்ட உனக்கு மைனஸ் ஏதாவது தெரிஞ்சு நீ சொன்னா நா திருத்திக்க முயற்சிப்பேன். நாம பரஸ்பரம் ஒருத்தரை ஒருத்தர் கரெக்ட் பண்ணிக்கறதுல ஒரு தப்பும் இல்லன்னு நினைக்கறேன் நான்.''

''அப்டியா? அப்பொ உங்ககிட்ட எனக்குதெரிஞ்ச ஒரு மைனஸ் பாயிண்ட்டை சொல்லலாமா?''

''தாராளமா.''

''உங்க உபதேசம்தான். வேறென்ன? உபதேசிக்கிற வங்களை எப்பவுமே எனக்கு பிடிக்காது.''

''ஆகர்ஷ் முகம் சுருங்க அவளைப் பார்த்தான். இருந்தாலும் அவள் அப்படி வெளிப்படையாக சொன்னதற்காக அவளைப் பாராட்டும் விதமாக சிரித்தான் அவன்.''

''ஒருத்தரோட பேஸிக் இயல்புகளையோ குணங்களையோ உபதேசத்தால மாத்திட முடியாது ஆகாஷ். அதான் நா அப்டி சொன்னேன். தப்பா நினைச்சுக்காதீங்க.''

''நா எதுவும் நினைச்சுக்கல அதைவிடு நம்ம விஷயத்துக்கு வருவோமா?''

''என்ன?''

''காதல்ங்கறது இப்டி அடிக்கடி சந்திக்கறதும் ஊர் சுத்தறதும் மட்டும் இல்ல சுஜி. நமக்குள்ள சில லட்சியங்களும் திட்டங்களும் இருக்கணும். எதிர்காலத்தை பத்தி ஒரு தீர்மானம் இருக்கணும்.''

''அதைப்பத்தி இப்பொ என்ன?''

''சரி சொல்லு எவ்ளோ நாள் நாம காதலிக்கலாம் எப்பொ கல்யாணம் பண்ணிக்கலாம்?''

''இன்னும் அஞ்சு வருஷத்துக்கு கல்யாணத்தைப் பத்தி நினைச்சுக் கூட பார்க்க என்னால முடியாது.''

''அவள் சொல்ல ஆகாஷ் புன்னகைத்தான்.

''என்ன சிரிக்கறீங்க?''

''அட்லீஸ்ட் இந்த ஒரு விஷயத்துலயாவது நம்ம ரெண்டு பேர் எண்ணமும் ஒத்துப் போயிருக்கே! அதுக்குதான் சிரிச்சேன்!

''அப்டின்னா உங்களுக்கும் அந்த எண்ணமில்லையா? எனக்கு, படிக்கணும். நல்ல புரொபஷன்ல் செட்டிலாகணுங்கற லட்சியம். அதனால சொன்னேன் உங்களுக்கென்ன?''

''இன்னும் கூட உயரமான இடத்துக்குப் போகணுங்கற லட்சியம் எனக்கிருக்கக் கூடாதா? அது தவிர என் தங்கையோட படிப்பு முடிஞ்சு அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்த பிறகுதான் என் கல்யாணம் பத்தி என்னால யோசிக்க முடியும். காதலை எதாலயும் கட்டுப்படுத்த முடியாதே. அதனால காதலிக்க ஆரம்பிச்சுட்டோம்.ஆனா மத்த விஷயங்களை நம்மால நம்மகட்டுப்பாட்டுக்குள்ள வெச்சுக்க முடியாதா என்ன?''

''இப்பதான் எனக்கு நிம்மதியாச்சு ஆகாஷ். எங்கடா,நீங்க, அடுத்தது கல்யாணம், அதுக்கடுத்தது குழந்தைகள்னு என்னை ஒரு கூண்டுக்குள்ள அடைச்சுடத் துடிப்பீங்களோன்னு நினைச்சேன்.''

''பாத்தயா நீ என்னை புரிஞ்சுக்கவேல்ல. என் வீடு கூண்டா இருக்காது சுஜி. உனக்கு சகல சுதந்திரமும் அங்க இருக்கும். ஆனா கல்யாணம்னா விட்டுக் கொடுத்தல், புரிந்து கொள்ளல், அனுசரித்து போறது, குழந்தை பெத்துக்கறது, அதை வளர்க்கறது எல்லாம்தான். இந்த எல்லாத்துலயும் நம்ம ரெண்டு பேருக்குமே பங்குண்டுங்கறது எனக்கு தெரியும் எல்லா பொறுப்பையும் உன் தலைல கட்டிட்டு கழண்டுக்கற ஆசாமியில்ல நான். அதனால இப்பவே உன் பயத்தை

விட்டுடலாம். ரெண்டு பேர் சந்தோஷமா சரிசமமா இருக்கறது தான் வாழ்க்கை. சண்டை போட்டுக் கிட்டு எதிரெதிர் திசைல திரும்பி நிக்கறதுக்கு எதுக்கு ஒண்ணு சேரணும்?''

''சரி அஞ்சு வருஷம் கழிச்சு கல்யாணம் பண்ணிக்கப் போறோம். ஓகே. அதுவரை வீட்டுக்கு தெரியாம காதலிக்கப் போறிங்களா இல்ல. வீட்ல ஒரு வார்த்தை சொல்லிடுவீங்களா?''

''ஐஸ்க்ரீமை ருசிபார்த்தபடி கேட்டாள் அவள்.''

''தேவை ஏற்பட்டா சொல்லுவேன்.''

''உங்கம்மா எப்டிப்பட்டவங்க?''

''கொஞ்சம் அந்தஸ்து பாக்கறவங்கதான். ஆனா நல்லவங்க. பிடிச்சுட்டா தலைல தூக்கி வெச்சுப்பாங்க!''

''என்னைப் பிடிக்குமா அவங்களுக்கு?''

''உன்னை யாருக்காவது பிடிக்காம இருக்குமா?''

''பேரர் பில் கொண்டு வந்து வைக்க ஆகாஷ் பர்ஸ் திறந்து பணத்தை எடுத்து வைத்துவிட்டு எழுந்தான்.

இருவரும் காரில் ஏறிக் கொண்டார்கள்.

''அப்பறம் நாம எப்பொ பார்க்கலாம்.''

''சுஜிதா ஆவலோடு கேட்டாள்.''

''நோ சுஜி. இனிமே மாசத்துக்கு ஒரு முறைதான் நாம சந்திக்கணும். அடிக்கடி சந்திச்சா அர்த்தமில்லாம பேசுவோம். அதனால அபூர்வமா சந்திப்போம். அறிவுப் பூர்வமா நிறைய விஷயங்கள் பேசுவோம் சரியா?''

''மாசத்துக்கொரு முறையா? சுஜிதாவின் முகம் சுருங்கியது.

''மாசா மாசம் கடைசி ஞாயித்திக்கிழமை சந்திப்போம்'' ஆகாஷ் அவளை ஹாஸ்டலின் முன்பு இறக்கி விட்டுக் கிளம்பினான்.

காரை ஷெட்டில் விட்டு பூட்டி விட்டு பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி உள்ளே வந்தான்.

வராண்டாவில் பிரம்பு சேரில் அமர்ந்திருந்த அப்பா அவனைப் பார்த்ததும் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்தார்.

''எங்கடா போய்ட்ட.. காலேல போனவனை இன்னும் காணுமேன்னு உங்கம்மா புலம்பிட்ருக்கா.''

''நா சின்ன குழந்தையாப்பா?''

''அதுக்கில்லடா லீவு நாள்ள கூட இப்படி சுத்தணுமா வீட்ல இருக்கக் கூடாதான்னுதான்.''

பேச்சுக்குரல் கேட்டு உள்ளிருந்து தங்கை வந்தாள்.

எல்லாரும் சேர்ந்து இன்னிக்கு வெளில போலாம்னு இருந்தோம். ஜாலியா ஒரு சினிமா, அப்பறம் நல்ல ஹோட்டல்ல டிபன்னு என்ஜாய் பண்ணலாம்னு நினைச்சா இப்டி காணாம போய்ட்டயேண்ணா. உனக்கே நல்லார்க்கா?''

சங்கீதா வருத்தத்தோடு சொல்ல ஆகாஷ் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''சாரிடா.. நீ காலேலயே சொல்லியிருந்தா எங்கயும் போயிருக்க மாட்டேன் இல்ல.''

''யாருக்குத் தெரியும் நீ இவ்ளோ நாழி வெளில சுத்துவன்னு! முந்தியெல்லாம் லீவு நாள்னா எங்கயும் போக மாட்ட. இப்பல்லாம் நானும் பார்க்கறேன். நீ காணாம போயிடற. அப்டி எங்கதான் சுத்துவ? புதுசா பிரண்ட்ஸ் கிடைச்சிருக்காங்களா?''

''அதெல்லாம் இல்ல...

''பின்னே...?''

''அய்யோ சங்கீதா வாசல்ல வெச்சே விசாரணை கமிஷனா? ஆளை விடு!'' ஆகாஷ் கையெடுத்து கூப்பியவாறு உள்ளே ஓடினான்.

அண்ணா எதையோ மறைக்கறாம்ப்பா. ஏதோ விஷயமிருக்கு! உன்னை விட மாட்டேண்ணா...''

சங்கீதா அவன் பின்னால் ஓடினாள்.

டெலிபோன் அடித்தது. சம்பத் புன்சிரிப்போடு வந்து அதை எடுத்தார்.

''நா கோபால் பேசறேன்.''

''அடடே என்ன மாப்ள.. இந்த நேரத்துல.. என்ன விஷயம்?''

''ஒரு சந்தோஷமான விஷயம்தான். இன்னிக்கு ஆகாஷ் எங்க வீட்டுக்கு வந்திருந்தான் தெரியுமோ...?''

''நிஜம்மாவா...?''

''பின்னே.. ஆலு சப்பாத்தி பண்ணி வைன்னு முத நாளே எம் பொண்ணுகிட்ட டிபன் மெனு கொடுத்தாச்சு தெரியுமில்ல...? எம் பொண்ணு தரைல நடக்கறுமே! பறந்துட்ருந்தா. வீடே ரெண்டு பட்டாச்சு ஆலு சப்பாத்தி சாப்பிட்டு! ரொம்ப நாழி பேசிட்ருந்தானாம். மொத்தத்துல ரெண்டு பேரும் ஒருத்தர் கிட்ட ஒருத்தர் காலியாய்ட்டாங்க.''

''ச்சட்.. என்ன தமிழ் இது! நேசிக்கறாங்கன்னு அழகா சொல்லக் கூடாதா?''

''அதில்லப்பா. ஒரு சந்தோஷம்.. அதுல நா காலி!''

''ஓஹோ.. அதான் பிள்ளையாண்டன் மூஞ்சில ஒரு மந்தஹாசமோ! சரி நீ போனை வெச்சுடு நா பார்த்துக்கறேன் அவனை.''

''உம்பிள்ளை தயவுல ஒரு புது டிபன் கிடைச்சுது தேங்க்ஸ் சொல்லணும்ப்பா அவனைப் பார்த்தா.''

சம்பத் போனை வைத்தார். அவர் முகம் மலர்ந்திருந்தது. அவர் உள் மனதின் ஆசை நிறைவேறப் போகும் சந்தோஷம். இதுவரை அந்த வீட்டில் சாரதா வைத்ததுதான் சட்டமாயிருந்தது. அவள் விருப்பப்படிதான் எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. மற்ற எதைப் பற்றியும் சம்பத் இதுவரை கவலைப்பட்டதில்லை. ஆனால் கல்யாணம் என்பது மனிதனின் மொத்த சந்தோஷத்திற்கும் வேட்டு வைக்கும் விஷயமாகி விடக்கூடாது என்பது தான் அவர் கவலை. மனைவியின் ஆளுமைகளை அவர் பெரிதாய் நினைத்ததில்லை. இருந்தாலும் சாரதாவின் சில குணங்கள் அவரை கவலைப்பட செய்திருக்கின்றன. அதில் முக்கியமான ஒன்று வறட்டு கௌரவம். இந்த வறட்டு கௌரவத்தால் ஆகாஷின் சந்தோஷங்களுக்கு சமாதி கட்டும்விதமாக அவனுக்கு ஒரு பெண்ணைப் பார்த்து விடப் போகிறாளோ என்று அவர் வெகுவாக கவலைப்பட்டிருக்கிறார். அப்படி ஒரு பெண்ணை அவள் பார்ப்பதற்குள் சரண்யாவை அவன் பார்த்து அவனுக்கும் அவளைப் பிடித்துவிட்டால் அதன் பிறகு சாரதாவால் எதுவும் செய்ய முடியாது என்று நினைத்தார். அதன் முதல் படியாகத்தான் சத்யாவின் கல்யாணத்திற்கு குடும்பத்தோடு சென்றார்.

ஆகாஷ் சரண்யாவிடம் கசஜமாக பேசியது கண்டு மகிழ்ந்தார். ஆனால் சாரதாவுக்கு சந்தேகம் ஏற்பட்டு அவள் கத்த ஆரம்பித்து விட்டாள். அதையும் மீறி ஆகாஷ் சரண்யாவை அவள் வீட்டிற்கே போய் சந்தித்து பேசியிருக்கிறான் என்றால் அவருடைய ஆசை நிறைவேறப் போகிறது என்றல்லவா அர்த்தமாகிறது. அவர் மன நிறைவோடு அன்று தூங்கினார். மறுநாள் காலை நான்கு பேரும் ஒன்றாகச் சேர்ந்து டிபன் சாப்பிடும்போது அவருக்கு ஆலு சப்பாத்தி நினைவுக்கு வந்தது. மகனைச் சீண்டினால் என்ன என்று தோன்றியது.

''ஏன் சாரதா இந்த இட்லி தோசை பொங்கல் பூரியை விட்டா உனக்கு வேற எந்த டிபனும் செய்ய வராதா?''

''ஏன் வேறென்ன சாப்டணும்னு மசக்கை உங்களுக்கு?''

''ஒரு மாறுதலுக்கு இந்த ஆலு சப்பாத்தி இல்ல ஆலு சப்பாத்தி. அது செய்யேன் ஒருநாள்.''

''வயசாக ஆக வாய்க்கு ருசி அதிகமாறதோ?''

''எனக்கில்லடி.. பாவம் பசங்களுக்காகத்தான் சொன்னேன். சொல்லேண்டா ஆகாஷ்... உனக்கு பிடிக்காதா ஆலு சப்பாத்தி?''

''ம்? பிடிக்குமே! ஆகாஷ் அசடு வழிய சிரித்தபடி அப்பாவைப் பார்த்தான்.

''அப்டி போடு. பாருடி அவனுக்கு பிடிக்குமாம் ஆலு சப்பாத்தின்னா ரொம்ப பிடிக்குமாம்.''

''அப்பா விஷமமாக சிரிக்க சங்கீதா அப்பாவையும் அண்ணனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அடிமைத்தனம், சர்வாதிகாரம் கலை கிரண்டல் ஏதேனும் ஒன்று பெண்ணிடம் வெகுகாலமாக ஒளிந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் பெண்ணுக்கு நட்பு என்பது சாத்தியமாக இருப்பதில்லை. அவளுக்கு காதல்தான் தெரியும்.

-நீட்சே

''ஏன் சாரதா வீட்ல இன்னிக்கு ஏதாவது விசேஷமா என்ன?'' சம்பத் அவசரமாக அடுக்களைக்கு வந்து கேட்டார்.

''உங்களுக்குத் தெரியாம என்ன விசேஷம் நடக்கும் வீட்ல?''

''பின்ன வாசல் வராண்டால ஒரே பெண்கள் கூட்டமா இருக்கு!''

''அதுவா.. வீட்டு வேலைக்கு ஆள் வேணும்னு கேபிள் டிவில ஒரு விளம்பரம் கொடுத்திருந்தேன். அதைப் பார்த்துட்டு வந்துர்ப்பாங்களா இருக்கும்.''

''வீட்டு வேலைக்காக...? நா நினைச்சேன். நீ ஏதோ சினிமாதான் எடுக்கப் போற போல்ருக்குன்னு போய்ப் பார் எல்லாம் ஃபுல் மேக்கப்ல வந்துர்க்கு.''

''ஆள் பார்க்க டூஸன்ட்டா அழகா இருக்கணும்னு சொல்லியிருந்தேன்.''

''உனக்கேன் இந்த வேலை. வீட்டு வேலை பார்க்கப் போற பொண்ணு எப்டியிருந்தா என்ன...?''

''அதுக்காக அழுக்குப் புடவையும் மீன் வாசனையுமா வந்தா நல்லாவா இருக்கும்? உங்களை யார் சஜஷன் கேட்டாங்க. இதெல்லாம் லேடீஸ் டிபார்ட் மென்ட். வேலைக்காரி கூட நம்ம அந்தஸ்துக்கேத்தா மாதிரி இருக்கணும்.''

''சாரதா தன் தோற்றத்தை சரி பார்த்துக் கொண்டு வந்திருக்கும் பெண்களை இண்டர்வியூ செய்யக் கிளம்பினாள். அம்மா அவர்களைத் தேர்வு செய்யும் அழகைக் காண விரும்பிய சங்கீதா அப்பாவை இழுத்துக் கொண்டு வராண்டாவுக்கு அருகிலிருந்த அறைக்குச் சென்றாள்.

''இந்த பத்து பேர்ல அம்மா யாரை செலக்ட் பண்ணுவான்னு நினைக்கறப்பா நீ?''

''ஒவ்வொரு மூஞ்சியையும் பாரேன் சங்கீதா இதுங்கள்ளாம் வீட்டு வேலை செய்யும்னு நீ நினைக்கற? சீப் ரேட் மேக்கப்பும்

டிரெஸ்ஸுமா தெருக்கூத்து ஆடறாப்பல வந்துர்க்குங்க. உங்கம்மாக்கு புத்தி எங்க போறதுன்னு தெரியலயே! இப்டியா வீட்டு வேலைக்கு ஆள் தேடுவாங்க?

அப்டியே யாராவது தேறி வந்தாலும் உங்கம்மாகிட்ட அவ குப்பை கொட்டிடப் போறாளாக்கும்! மிஞ்சிப் போனா மூணு மாசம்! அவ இந்த வீட்டு வாசல்ல நின்னு அசிங்க அசிங்கமா திட்டிட்டு போவா. தேவையா இதெல்லாம்?''

''உனக்கேம்ப்பா அந்த கவலை எல்லாம். நடக்கறதை எல்லாம் வேடிக்கை பார்த்து ஜாலியா சிரியேன்!'' சங்கீதா அம்மாவையும் அவர்களையும் பார்த்தாள். வாயைப் பொத்திக் கொண்டு அப்பாவும் அவளும் அடிக்கடி சிரித்தார்கள். அம்மா அனைவரையும் அனுப்பி விட்டு அலுப்போடு உள்ளே வந்தாள். சங்கீதா அம்மாவுக்கு ஓடிப் போய் சுடச்சுட காபி கொண்டு வந்து கொடுத்தாள்.

''சாப்டும்மா ஒரே டயர்டா ஆய்ட்டயே!''

''என்னாச்சு எவளாவது தேறினாளா?'' சம்பத் சிரிப்பை அடக்கியபடி கேட்டார்.

''ப்ஸு.. வேலைக்காரி நல்லா அமையக்கூட கொடுத்து வெச்சிருக்கணும் போல்ருக்கு!''

''தப்பு சாரதா.. வேலைக்காரி அமையத்தான் நிறையவே கொடுத்து வெச்சிருக்கணும். நீ இப்டி சொல்ற, ஒரு வேலைக்காரிகிட்ட கேட்டா நல்ல வீடும் எஜமானியும் அமையக் கொடுத்து வெச்சிருக்கணும்னு சொல்லுவா.''

''அப்டின்னா நா நல்ல எஜமானி இல்லன்னு சொல்றீங்களா?''

''பாத்தயா எங்கிட்டயே இந்த பாய்ச்சல் பாயற! வேலைக்காரியெல்லாம் எம்மாத்திரம்!''

''பின்ன.. வேலைக்காரிய நடு வீட்ல உட்கார வெச்சு உபசாரம் பண்ணணுமா?''

''யாரு உபசாரம் பண்ணச் சொன்னா? அவளை மனுஷியா நடத்தினாதானே அவளுக்கும் இங்க வேலை செய்யற ஆசை இருக்கும்!''

''மனுஷியா நடத்தாம பின்ன எப்டி நடத்தறேன்? உங்களுக்கென்ன தெரியும். அவளுக்கு நா எவ்ளோ எல்லாம் கொடுக்கறேன் செய்யறேன்னு! மாசம் ஒரு பழைய புடவை, தினமும் டிபன் காபி, மிச்சம் மீதி சாதம் குழம்பு, கேக்கறப்பொ எல்லாம் பணம்.. வேற எந்த வீட்ல கிடைக்கும் இப்டி..? ஏதோ ஏழை பாழைக்கு சாப்பாடு போட்டு, தானம் பண்ணின புண்ணியம் கிடைக்கட்டுமேன்னு சொன்சா அதே மாதிரி அவளும் வேலை ஒழுங்கா செய்ய வேண்டாமா?''

''தர்மம் பண்ணிட்டு சொல்லிக் காட்டினா ஒரு புன்யமும் இருக்காது. அப்டின்னு நா சொல்லல. பகவத் கீதை சொல்றது.''

''யத் து ப்ரத்யுபகாரார்த்தம் ஃபலம் உத்திஷ்ய வா புன:

கீயதே ச பரிக்லிஷ்டம் தத் தானம் ராஜஸம் ஸ்ம்ருதம்

என்ன அர்த்தம் தெரியுமா இதுக்கு? எதையாவது எதிர் பார்த்தோ, பலன் கருதியோ, விருப்பமின்றியோ கொடுக்கப்படும் தானம் ரஜோ குணத்தைச் சார்ந்ததுன்னு சொல்லியிருக்கு. எதையும் எதிர் பார்க்காம செய்யற தானம் சத்வ குண தானம், தகுதியற்ற மனிதனுக்கு கொடுக்கப்படும் தானம் தமோகுண தானம் உனக்கு புண்யம் வேணும்னுநினைச்சா கொடுத்ததை அடுத்த வினாடியே மறந்துடு. கொடுத்தோமே கொடுத்தோமே ஒரு பலனும் இல்லையேன்னு புலம்பினா அதுக்கு பேர் தானமில்ல. அதைவிட எதுவும் செய்யாமயே இருக்கலாம்.''

''என்னடா இன்னும் உபதேசம் எதுவும் ஆரம்பிக்கலை யேன்னு நினைச்சேன். ஆரம்பிச்சாச்சா?''

''கரெக்ட்.. தகுதியற்றவரிடத்தில் உபதேசமும் பலன் தராது'' சம்பத் சிரிக்க அவள் முறைத்தாள்.

''என்னம்மா இங்க யுத்தம்?'' ஆகாஷ் அப்போதுதான் கீழே வந்தவன் அம்மாவிடம் கேட்டான்.

''யுத்தம்தான். நீ யார் பக்கம் நிக்கப் போற சொல்லு'' அப்பா புன்னகையோடு கேட்டார்.

''தர்மத்தின் பக்கம்ப்பா!'' ஆகாஷ் வலது கையை அருள் பாலிப்பது போல் வைத்துக் கொண்டு சொன்னான். சங்கீதா வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.

''நீயே சொல்லுடா ஆகாஷ். நா பொல்லாதவளா?'' அம்மா ஆதங்கத்தோடு கேட்டாள்.

''யார் சொன்னாம்மா அப்டி உன்னை?''

''வேற யார் உங்கப்பாதான். ஒரு வேலைக்காரி கூட இந்த வீட்ல நிக்காததுக்கு காரணம் என் பொல்லாத்தனம்தானாம் முழ நீளத்துக்கு உபதேசம் வேற பண்றார். நா என்ன ராட்சஸியா என்ன?''

''நீ என்னப்பா சொல்ற?'' ஆகாஷ் அப்பாவைப் பார்த்துக் கேட்டான்.

''வேலைக்காரியும் மனுஷிதான். ஓயாம வேலை கொடுத்தா எந்த வேலைக்காரி இங்க நிக்க விரும்புவா. சோறு தண்ணி கொடுத்தா ஆச்சா? அவ மூச்சு விட நேரம் கொடுக்க வேண்டாமா?''

''நீ என்னம்மா சொல்ற இந்த குற்றச்சாட்டுக்கு?''

''நா ஒண்ணும் யாரையும் அப்டி மூச்சுவிட முடியாம வேலை வாங்கல! இதெல்லாம் அபாண்டம். வெளில

போயிடறவங்களுக்கு வீட்டுல என்ன நடக்கறதுன்னு எப்டி தெரியும்?''

''இதுக்கு நீ என்னப்பா சொல்ற?''

''இங்க யார் உனக்கு ஜட்ஜ் உத்யோகம் கொடுத்தா?''

''கேட்ட கேள்விக்கு பதில்''

''கடசியா வேலையை விட்டு நின்ன அந்த தங்கமோ வைரமா.. அவளைப்பார்த்தேன். கோடி ரூபா கொட்டிக் கொடுத்தாலும் உன் வீட்ல எவளும் வேலை செய்ய மாட்டாங்கய்யா அப்டிங்கறா! அதுக்கென்ன அர்த்தம்? உங்கம்மா படுத்தற பாடு தாங்க முடியலன்னுதானே.''

''இதுக்கு நீ என்னம்மா சொல்ற?''

''அந்த வேலைக்காரிய இவர் எதுக்கு பார்த்தார்? அவளோட இவருக்கு என்ன பேச்சு?''

''எதுக்கு பார்த்த? ஏன் பேசின?''

''ஏதேச்சையா பார்த்தேன். பேசினேன்! அதுக்கென்ன இப்பொ?''

''அதுக்கென்ன இப்பொவா...? உங்கப்பா பொய் சொல்றார்டா ஆகாஷ். இவர் ஏதோ கசமுச பண்றார்.''

''அதென்னப்பா கசமுச..?''

''அவ பாஷைக்கு அர்த்தம் யாருக்கு தெரியும்?''

''சங்கீதா விழுந்து விழுந்து சிரித்தாள்.

''ஓ.கே. ஓ.கே...'' ஆகாஷ் இருவரையும் கையமர்த்தினான். ''இந்த வழக்கை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கேன். என் தீர்ப்பு என்னன்னா இந்த வீட்டுல எந்த வேலைக்காரியும் தங்கறதில்லங்கறது அம்மாவோட வருத்தம். வேலைக் காரியை சரியா நடத்தலங்கறது அப்பாவோட வருத்தம். இவங்க ரெண்டு பேர் வருத்தமும் மறையணும்னா அதுக்கு

ஒரே வழிதான் இருக்கு. ஒரு நல்ல வேலைக்காரியா பார்த்து அப்பா கல்யாணம் பண்ணிக்க வேண்டியது. அப்பொ அந்த வேலைக்காரிக்கு ஒரு மரியாதையும் கிடைச்சுடும். அவ இந்த வீட்ல நிரந்தரமா தங்கி அம்மாவின் வருத்தத்தையும் போக்கிடுவா.. இதான் என் தீர்ப்பு...''

''உதைடி அவனை..'' அம்மா டீபாய் மீதிருந்த பூச்சாடியை எடுத்துக் கொண்டு அவனை அடிக்கப் போக ஆகாஷ் வீடு பூராவும் சுற்றி சுற்றி ஓடினான். சங்கீதாவும் அப்பாவும் அவர்களைத் துரத்தினார்கள்.

''படவா.. இந்த வயசுல சித்தி கேட்குதோ உனக்கு...? கொன்னுடுவேன் கொன்னு...''

''நல்ல தீர்ப்பு இல்லம்மா?'' சங்கீதா அம்மாவை சீண்டினாள்.

''நாளைக்கு பேப்பர் கால் பக்கத்துக்கு விளம்பரம் கொடுத்துடு சங்கீதா. ஸ்மார்ட்டா, இளமையா அழகான பெண்கள் வேலைக்குத் தேவை. பதவியின் பெயர் இரண்டாவது மனைவி.'' அப்பா தன் பங்குக்கு சீண்ட அம்மா கையில் கிடைத்த சாதனங்களையெல்லாம் எடுத்து எல்லார் மீதும் எறிந்தாள்.

''ச்சீ பாவம்ப்பா..'' கடைசியாக சங்கீதா ஒரு வழியாய் எல்லாரது ஓட்டத்தையும் நிறுத்தி உட்கார வைத்தாள்.

''ஆனாலும் உனக்கு ரொம்ப கொழுப்பு அண்ணா''

''சும்மா தமாஷ்தானே''

''இதுக்கு பனிஷ்மெண்ட் என்ன தெரியுமா?''

''என்ன...?''

''அப்பாக்கு கல்யாணம் பண்ணச் சொன்ன உனக்குதான் கல்யாணம்.''

''அது சரி...'' ஆகாஷ் தோளைக் குலுக்கியபடி எழுந்தான்.

''ஏண்டா ஆகாஷ். ஓடற.. நீ என்ன இன்னும் குழந்தையா படிப்பு முடிச்சு கை நிறைய சம்பாதிக்கற. இனிமே என்ன கல்யாணம்தானே? பண்ணிக்கிட்டா என்ன?''

''முதல்ல சங்கீதா கல்யாணம் ஆகி இந்த வீட்டை விட்டு போகட்டும்.''

''அவளுக்கென்னடா அவசரம் இப்பொ? அவ படிப்பு முடிய இன்னும் ரெண்டு வருஷமாவது ஆகும். அதுக்கப்பறம்தான் அவளுக்கு கல்யாணம்.''

''ஆகட்டுமே. அதுக்கப்பறமே நானும் பண்ணிக்கறேனே. என்ன அவசரம் இப்பொ.''

''அப்டி சொல்லாதண்ணா.. ஒரு அண்ணியும் இந்த வீட்டுக்கு வந்தா நம்ம வீடு இன்னும் கலகலன்னு ஆய்டும். அண்ணியோட நானும் ஜாலியா பேசி பொழுதைப் போக்குவேன். அப்பப்பொ சின்னச் சின்ன சண்டை போடுவேன். அம்மாவைப்பாரு. பாவமால்ல? அவளே எல்லா வேலையும் செய்யறா. மருமக வந்தா அவ வேலை குறையும் இல்ல?''

''ஓஹோ உனக்கு சண்டைபோட ஒரு ஆளும், அம்மாக்கு வேலை செய்ய ஒருஆளும் வேணும்னா நா கல்யாணம் பண்ணிக்கணுமா? நல்ல கதைதான்!''

''த பாருண்ணா... ரொம்ப பிடிவாதம் பிடிக்காதே..அப்பறம் நா எல்லாத்தையும் போட்டு ஓடச்சுடுவேன் சொல்லிட்டேன்.''.

''என்னத்தை போட்டு உடைப்ப?''

''நீ எங்கெங்க போற, யார் யாரை பார்த்து பேசறன்னு சொல்லிடுவேன்.''

''ஆகாஷ் திகைப்போடு அவளைப் பார்த்தான். ஒருவேளை தன்னையும் சுஜிதாவையும் எங்கேயாவது சேர்ந்து பார்த்திருப்பாளோ என்ற சந்தேகம் ஏற்பட்டது.

''என்னடா இப்டி முழிக்கற... அவ எதையோ போட்டு உடைப்பேங்கறா.. என்ன கசமுச பண்ணின?''

''அப்பா, அம்மாவின் பாஷையில் கிண்டலாகக் கேட்டார். ஆகாஷ் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டான்.

''நா பாவம்ப்பா.. பச்சை குழந்தை மாதிரி ஒண்ணும் தெரியாது. இந்த குட்டிப் பிசாசு வேணும்னே ஏதேதோ சொல்றது.''

''ஆமாமா.. அண்ணா பாவம்ப்பா. பச்சைக் குழந்தை!

''வாய்ல விரல் வெச்சா கூட கடிக்கத் தெரியாது.

''ஆனா ஆலு சப்பாத்தி வெச்சா ஆசையா சாப்டுவான்.''

''ஆகாஷ் திகைப்போடு அப்பாவையும் தங்கையையும் பார்த்தான். நேற்றிலிருந்து ஆலு சப்பாத்திஆலு சப்பாத்தி என்று இருவரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்றால்... மை காட் சரண்யாவின் வீட்டிற்குப் போய் சப்பாத்தி சாப்பிட்டது இவர்களுக்குத் தெரிந்து விட்டதா..? அதனால் சரண்யாவை அவன் காதலிப்பதாக முடிவு செய்து விட்டார்களா? அடராமா.. சிநேகத்தோடு ஒரு பெண்ணின் அறிவு பூர்வமாக பேச விரும்பிச் சென்றால் உடனே அதற்கு காதல் முலாம் பூசி விட்டார்களா? யார் சொல்லியிருப்பார்கள் தான் அங்கு சென்றதை?

''என்னடா ஆகாஷ், இவ என்ன சொல்றா நீ என்ன பண்ணின அப்டி?'' அம்மா குழப்பத்தோடு கேட்டாள்.

''எனக்கே புரியலம்மா''

''பொய் சொல்றான். பொய் சொல்றான்.''

''நீதான் போட்டு உடையேண்டி!''

''அண்ணா யாரையோ லவ் பண்றாம்மா.''

''தெய்வமே... இவ என்னடா சொல்றா.''

''கொழுப்பும்மா! உன்னைக் குழப்பறா, அப்டி எல்லாம் எதுவுமில்ல.''

''எல்லாரும் பூசணிக்காயைத் தான் சோற்றுல மறைப்பாங்க. அண்ணா பூமி உருண்டையே மறைக்கறான்.''

''ஏய்...''

''ஆலு சப்பாத்தின்னா அவனுக்கு உயிர்...''

''என்னடா சொல்றா இவ?''

''சரண்யான்னா அதைவிட உயிர்! பாத்தயா எப்டி உடைச்சேன் உண்மைய!''

''ஆகாஷ் ஸ்தம்பித்துப் போனான். கோபம் ஒரு பக்கம் தர்மசங்கடம் ஒரு பக்கம் என தங்கையை விழித்துப் பார்த்தான்.''

சாரதா முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க பிள்ளையைத்துளைப்பது பார்த்தாள்.

''யாருடா சரண்யா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா இவ ஏதோ கதை விடறா.''

''யாரந்த சரண்யா?'' அம்மா அடிக்குரலில் கேட்டாள்.

''கோபாலன் மாமாவோட பொண்ணும்மா. ஆனா இவ சொல்றா மாதிரி...''

''நிறுத்துடா.. உன்னை புத்திசாலின்னு நினைச்சேன். போயும் போயும் அவதானா கிடைச்சா உனக்கு.. உன்னைச் சொல்லி குத்தமில்லடா மகனே. இதெல்லாம் யார் வேலைன்னு எனக்குத் தெரியும். இந்த நிமிஷம் சொல்றேன் கேட்டுக்கோ. யாரும் பகல் கனவு காண வேண்டாம். அவ இந்த வீட்டுக்கு மருமகளா வர முடியாது.

''ஏன் சாரதா அவளுக்கென்ன குறை?''

''எனக்கு பிடிக்கல.''

''உம் பிள்ளைக்கு பிடிச்சிருக்கே. அப்பறம் என்ன?''

''அப்பா!'' ஆகாஷ் எரிச்சலோடு குறுக்கிட்டான்.

''நா சொன்னேனாப்பா அப்டி?''

''பின்ன அவளோட ஏண்டா அடிக்கடி பேசற? அவ வீட்டுக்கு போற! அவ கையால டிபன் சாப்பிடற. இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?''

''ஷிட்! என்னப்பா நீங்க. இதெல்லாம் பண்ணினா உடனே காதல்னு நினைச்சுடறதா? சரண்யா புத்திசாலியார்ந்தா நிறைய விஷயங்கள் பேசினா. அதனால ஜஸ்ட் ஃபிரெண்லியா.. அவளோட பேசினேன். நம்ம உறவுப் பெண்தானேன்னு உரிமையோட அவங்க வீட்டுக்கு போய் டிபன் சாப்ட்டேன். அதுக்கு இவ்ளோ அபத்தமான அர்த்தம் கற்ப்பீங்கன்னு நா நினைக்கல!''

''அப்பா அவனைத் திகைப்போடு பார்த்தார்.''

''டேய் ஆகாஷ்.. நிஜமாவாடா சொல்ற.. இல்ல அம்மாக்கு பயந்துக்கிட்டு பொய் சொல்றயா?''

''எனக்கென்னப்பா பயம்? நா யாருக்கும் பயப்படறவன் இல்ல. சரண்யாவோட சத்தியமா எனக்கு காதல் கீதல்னு எதுவும் கிடையாது.''

''அதானே பார்த்தேன்'' அம்மா நிம்மதியாக புன்னகைத்தாள். அப்பா அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தார்.

''தேங்க்ஸ்டா கண்ணா. என் வயத்துல பாலை வார்த்த. நம்ம அந்தஸ்துக்கேத்தாப் போல உனக்கு நா பார்க்கறேன் பொண்ணு. நீ கவலைப்படாதே'' அம்மா சொல்ல ஆகாஷ் அவளையும் எரிச்சலோடு பார்த்தான்.

''நீயும் கனவு காண வேணாம்மா. நா சரண்யாவைக் காதலிக்கலன்னு சொன்னது உண்மைதான். ஆனா வேற எந்த

பொண்ணையுமே நா காதலிக்கலன்னு சொன்னா அது பொய்!''

''என்னடா சொல்ற..'' அம்மா விழி பிதுங்க அவனைப் பார்த்தாள்.

மௌன மனிதன் தேடுவது அவனுக்குள்ளேயே கருக்கிறது.
சாதாரண மனிதன் தேடுவது மற்றவர்களிடம் கருக்கிறது.
-கன்ஃபூசியஸ்

திட்டங்கள் தீட்டுவதில் மனிதன் திறம் வாய்ந்தவன். பிறப்பு முதல் இறப்பு வரை அவன் போடும் திட்டங்கள் கணக்கிலடங்காதவை. அவை நிறைவேறுமா நிறைவேறாதா என்பதைப் பற்றியெல்லாம் எவரும் யோசிப்பதில்லை. தன் திட்டங்கள் தோல்வியடைந்தாலும் அதற்காக தன் குணத்தை மாற்றிக் கொள்ளவும் முயற்சிப்பதில்லை. அடுத்த திட்டம் பற்றி அவன் யோசிக்க ஆரம்பித்து விடுகிறான். திட்டமிடுவது மனித இயல்பெனில் அதை மாற்றிக் காட்டுவதே தன் இயல்பு என்பது போல் தெய்வம் மனிதனைச் சீண்டி பார்த்து பொழுது போக்கும் போலும். சரண்யாவை அவன் சந்தித்து விட்டால் நிச்சயம் அவனுக்கு அவளை பிடித்து விடும். அவனுக்கு பிடித்து விட்டால் சாரதாவால் கூட அதைத் தடுக்க முடியாது. தன் விருப்பப்படி சரண்யாவை அவனுக்கு கட்டி வைத்து விடலாம் என்று சம்பத் போட்டிருந்த திட்டமும், தன் அந்தஸ்துக்கேற்றபடி ஒரு பெண்ணைத்தான் அவனுக்கு கட்டி வைக்க வேண்டும் என்று விரும்பிய அம்மாவின் திட்டத்தையும் காதல் என்ற மூன்றெழுத்து மந்திரத்தால்

தவிடு பொடியாக்கி விட்டான் ஆகாஷ். இருந்தாலும் அவர்கள் மனம் தளரவில்லை. மனம் விட்டு தனித்தனியே அவனோடு பேச முயன்றார்கள். சாரதாவை விட சம்பத்தின் மனம்தான் அதிக கவலையில் ஆழ்ந்திருந்தது. மகன் வேறொரு பெண்ணை விரும்புகிறான் என்பதைவிட, இவன் தன்னைக் காதலிக்கிறான் என்று எண்ணி இவன் மீது காதலாகி கசிந்துருகிக் கொண்டிருக்கும் சரண்யாவை நினைத்துதான் அவர் அதிகம் கவலைப்பட்டார்.

சும்மா கிடந்த சங்கை அவர்தான் ஊதினார். அது தவறோ என்று தோன்றியது இப்போது. சரண்யாவுக்கு உண்மை தெரிந்தால் அவளால் இதைத் தாங்க முடியுமா? எல்லாவற்றிற்கும் காரணம் நீங்கள்தானே மாமா என்று அவள் அவரிடமே நியாயம் கேட்டால் என்ன செய்யப் போகிறோம் என்று குழம்பினார். எந்த முகத்தோடு இனி கோபாலனையும் சரண்யாவையும் பார்க்கப் போகிறோம் என்று புரியவில்லை. ஆகாஷ் ஒருவேளை அம்மாவுக்கு பயந்து பொய் சொல்லுகிறானோ என்ற சந்தேகம் ஏற்பட்டது அவருக்கு. எனவே அவனிடம் தனிமையில் பேசினால் அவன் மனதில் என்ன இருக்கிறது என்பது தெரிந்துவிடும் என்று நம்பினார். அதற்கான நேரம் பார்த்துக் கொண்டிருந்தவருக்கு நாலு நாள் கழித்துதான் ஒருநாள் மாலை கிடைத்தது. அதிசயமாக அன்று வீட்டிலிருந்தான் அவன். சாரதா சங்கீதாவை அழைத்துக் கொண்டு கோயிலுக்குப் போயிருந்தாள். மொட்டை மாடியில் வாக்மேனில் பாட்டு கேட்டபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் ஆகாஷ்.

''என்ன பாட்டுடா இவ்ளோ சுவாரசியமா கேக்கற?''

''ஆகாஷ் திரும்பினான். அப்பாவைப் பார்த்ததும் வாக்மேனை அணைத்துவிட்டு ஹெட் போனைக் கழற்றினான்.

''என்னப்பா?''

''என்ன கேஸட்னு கேட்டேன்.''

''யேசுதாசோட செமி கிளாஸிகல் மலையாளப் பாடல் கள்ப்பா. பிரெண்டு ஒருத்தன் கொடுத்தான். அவ்ளோ இனிமையா இருக்கு. நமக்கும் ரெக்கார்டு பண்ணி வெச்சுக்கணும். கேக்கறயா?''

''இருக்கட்டும். அப்பறம் கேக்கறேன். நா உங்கிட்ட ஒரு விஷயம் பேசணும்னு வந்தேன்.''

''என்ன விஷயம்?''

''அன்னிக்கு நீ சொன்னயேடா ஆகாஷ்... அது நிஜமா... இல்ல அம்மாக்கு பயந்துக்கிட்டு சரண்யாவை லவ் பண்ணலன்னு பொய் சொன்னயா?''

''ஆகாஷ் புருவம் நெறிய அப்பாவைப் பார்த்தான்.

''இப்பவும் அதையேதாம்பா சொல்றேன். சரண்யாவோட சாதாரணமாதான் பேசினேன். வீட்டுக்கு வரச் சொல்லி அவ கூப்ட்டதால போனேன். உறவுக்காரங்கன்ற உரிமைல ஆலு சப்பாத்தி பண்ணி வெக்க சொல்லி சாப்ட்டேன். அவ்ளோதான். இதுக்கு வேற எந்த உள் நோக்கமும் இல்ல.''

''அப்டின்னா சரண்யாவை உனக்கு பிடிக்கலையா?''

''பிடிக்காம என்ன? அவ புத்திசாலித்தனம், பேச்சு, சுறுசுறுப்பு, எளிமை எல்லாமே பிடிச்சதனால தானே அவளோட பேசறேன். ஆனா உடனே அதுக்கு காதல்னு ஒரு தலைப்பு வெக்கறதைத்தான் என்னால சகிச்சுக்க முடியல.''

''சரண்யாகிட்ட எதுவுமில்ல சரி. ஆனா வேற யாரையோ... அது உண்மையா?''

''ஆகாஷ் அப்பாவைப் பார்த்து சிரித்தான்.

''உண்மைதாம்ப்பா. ஏன் என்னைப் போய் எவ காதலிக்கறான்னு சந்தேகமா?''

''ச்சீ அப்டியில்லடா.. உனக்கு உன் ஆபீஸ், பிஸினஸ்.. இதுக்கே நேரம் பத்தலையே. அப்பறம் எங்க இதுக்கெல்லாம் கூட நேரம் இருக்கப் போறதுன்னு நினைச்சேன். ஆனா இருக்கே. அதான் அதான் ஆச்சர்யம். அதுசரி யாரந்த பொண்ணு. இதே ஊரா இல்ல வெளியூரா..?

''மும்பை பொண்ணு. இப்போதைக்கு இங்கே பேஷன் டிஸைனிங் படிக்கறா?''

''எவ்ளோ நாளா பழக்கம்?''

''இப்பொதான் ஒரு நாலஞ்சு மாசமா.''

''நல்ல பொண்ணா? நல்ல குடும்பம்தானா?''

''எதையும் விசாரிக்காம இயல்பா ஏற்படறதுதாம்பா காதல். இருந்தாலும் நீ கவலைப்பட வேண்டாம். நல்ல குடும்பம்தான். நல்ல பொண்ணுதான். என்ன.. அம்மா மாதிரி கொஞ்சம் அலட்டலும் ஜபர்தஸ்ஸும் உண்டு.''

''போச்சுடா... அதானே வம்பே..! கடசில உன் வாழ்க்கையும் என்னாட்டமாதான் ஆகணுமா?''

ஆகாஷ் சிரித்தான். ''நிறையும் குறையும் நிறைஞ்சவங்கதான் மனுஷங்கப்பா. நிறைகளை மட்டும் பார்ப்போமே! அம்மா நல்லவதான். அந்தஸ்து பார்க்கறது பெரிய குறைன்னு நினைச்சா குறைதான்.''

''பொண்ணு பணக்காரியா?''

''ம்... நம்பளை விடன்னே சொல்லலாம்.. ஆனா நா அதுக்காக காதலிக்கல.''

''நா அப்டி சொல்லலையே. ஒருவேளை அவ நம்பளை விட அந்தஸ்து குறைஞ்சவளா இருந்திருந்தா அப்பொ உங்க அம்மாவோட குணம் உனக்கு பெரிய குறையா தெரியும். உபத்திரவமில்லாத வரைக்கும் எந்த குறையும் பெரிசா தெரியாது.''

ஆகாஷ் அடிபட்டாற்போல் அப்பாவைப் பார்த்தான். அவர் சொல்வதிலும் ஒரு நிஜமிருக்குமோ என்று தோன்றியது. இருந்தாலும் ஒருவேளை சுஜிதா ஏழையாகவே இருந்தாலும் கூட அம்மாவை எதிர்த்துக் கொண்டு கல்யாணம் செய்து கொள்ள தான் தயங்க மாட்டோம் என்று நினைத்தான் அவன்.

அப்பா அவன் தோளைத் தொட்டார். ''இனிமே உங்கிட்ட பேசறதுக்குளதுவுமில்லடா ஆகாஷ். நாமஏதேதோ கணக்கு போடறோம். ஆண்டவனும் கணக்கு போடறான். அவன் கணக்கு நம்ம கணக்கும் சரியார்க்கும்போது நாம நினைக்கறது நடக்கறதா நினைக்கறோம். தப்பா போகும்போது? மேன்புரொபோஸஸ் காட் டிஸ்போஸஸ்னு வேதாந்தம் பேசுவோம்.''

''இதை எதுக்குப்பா இப்பொ சொல்ற?''

''உனக்கு சொல்லலடா. எனக்கு சொல்லிக்கிட்டேன். ஓகே நீ பாட்டு கேளு.. நா போறேன்'' சம்பத் கீழே இறங்கிச் செல்ல ஆகாஷ் அப்பாவையே எதுவும் புரியாமல் பார்த்தான்.

''அப்பா பேசியதற்குப் பிறகு நாலைந்து நாள் கழித்து அம்மா அவனிடம் அதே பேச்சை மெதுவாக ஆரம்பித்தாள்.''

''ஏண்டா ஆகாஷ்.. அன்னிக்கு ஏதோ லவ்வு கிவ்வுன்னு உளறினயே.. அதெல்லாம் சும்மா தானே! வழக்கம் போல விளையாட்டுக்குதானே சொன்ன?''

''உனக்கெப்டி தோண்றது?''

''சும்மா விளையாட்டுக்கு சொன்னாப்பலதான்தோண்றது.''

''சும்மால்லாம் இல்ல. நிஜமாதான் சொன்னேன்.''

''அம்மா கவலையோடு அவனைப் பார்த்தாள்.

''யாருடா அந்த பொண்ணு? நம்ம அந்தஸ்துக்கு ஏத்தவதானா?''

''அந்தஸ்துக்கு ஏத்தவளா இருந்தாதான் காதலிக்கணுங்

''அந்தஸ்துக்கு ஏத்தவளா இருந்தாதான் காதலிக்கணுங் கறயா?''

''நிச்சயமா!''

''அந்தஸ்துல என்னம்மா இருக்கு?''

''எனக்கு இருக்குடா.. எல்லாமே அதுலதான் இருக்கு. இப்பொ இளமைத் திமிர்ல உங்களுக்கெல்லாம் கண்ணு மண்ணு தெரியாது. புத்தி வேலை செய்யாது. புரட்சி பண்றதா நினைச்சு அபத்தமா பேசுவீங்க.''

''ஆகாஷ் அம்மாவை அமைதியாகப் பார்த்தான்.

''அந்தஸ்துங்கறது மனுஷனுக்கு எப்டி வரதும்மா?''

''அம்மா பதில் சொல்லத் தெரியாமல் விழித்தாள்.

''நீ பொறக்கும்போது இதைப்பத்தி உனக்கு தெரியுமா? யாரும் ஏழையா விரும்பி பிறக்கறதில்லையே. பணம் அந்தஸ்து எல்லாம் போகிற போக்கில் மனிதன் தானா தேடிக்கற விஷயங்கள்மா. அதுக்கு போய் நீ இவ்ளோ முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம்னு தோண்றது. இருந்தாலும் இப்போதைக்கு நா உண்மையைச் சொல்லிடறேன். அந்த பொண்ணு நம்மளை விட பணக்காரி. படிச்சவ. கோடீஸ்வர குடும்பத்துல பொறந்து கஷ்டம்னா என்னன்னே தெரியாம வளர்ந்தவ. இதெல்லாம் காதலிக்க ஆரம்பிச்சப்பறம் எனக்கு தெரிஞ்ச விஷயங்கள். ஒருவேளை அவ ஏழையா இருந்திருந்தாலும் நா கவலைப்பட்ருக்க மாட்டேன். ஒருவேளை இனிமே ஏழையா ஆனாலும் வருத்தமில்ல. அவளை எனக்கு பிடிச்சிருக்குங்கறதுதான் எனக்கு முக்கியம்.''

''அவன் நிறுத்திவிட்டு அம்மாவைப் பார்த்தான். அவள் முகம் மலர்ந்து பிரகாசமாயிருந்தது. அவன் அறிவுரைகள் அவளுக்குள் ஏறியதாய்த் தெரியவில்லை. பெண் கோடீஸ்வரி என்ற விஷயத்தில் அவள் அகமகிழ்ந்து போயிருந்தாள்.அவன்

கவலையும் பயமும் காணாமல் போயிருந்தன. ஒரு வேளை ஏழையாயிருந்தால் என்று அவள் யோசிக்க முற்படவேயில்லை. ஏதோ ஒரு அடைப்பு சட்டென்று நீங்கி விட்டதாய் நினைத்து நிம்மதி பெருமூச்சு விட்டாள். ஒரு புன்னகையோடு போய் விட்டாள். ஆகாஷ் கவலையோடு அவளைப் பார்த்தான். அம்மா நல்லவள்தான். அதில் எந்த சந்தேகமும் அவனுக்கில்லை. தூய்மையான கங்கை நீரில் மாசுகள் கரைவது போல் அவளுக்குள் கலந்திருக்கும் அழுக்குகளைப் பற்றி தான் அவன் கவலைப்பட்டான். மாசு படிந்தவன்தான் மனிதன். தெளிவாயிருப்பவன் ஞானி. தெளிவதற்கு பெரும்பாலானோர் முயற்சிப்பதில்லை என்பதுதான் நிஜம்.''

''எப்போது வேறு வித எண்ணம் மற்றவர்களுக்குஏற்பட்டு விட்டதோ அதன் பிறகு சரண்யாவோடு சகஜமாய் பழகுவதற்கு யோசித்தான் ஆகாஷ். அவள் மனதில் என்ன இருக்கிறதோ தெரியாது. ஒருவேளை அவளும் எவ்வித நோக்கமுமின்றி பேசியிருந்தால், இந்த விஷயங்கள் அவள் மனதையும் காயப்படுத்தக் கூடும் என்று நினைத்தான். அல்லது அவள் மனதில் காதல் என்ற எண்ணம் இருக்குமாயின் அது ஆரம்பத்திலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். தான் சகஜமாகப் பேசுவது, அவளது நம்பிக்கையை வளர்த்து விடக் கூடாது. இப்படி நினைத்தவன் அதன்பிறகு சரண்யாவின் வீட்டுக்கு இனி செல்ல வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தான்.''

''அவன் வீட்டில் நடந்தவை எதுவும் தெரியாத சரண்யா அதன்பிறகு ஏன் அவன் வரவேயில்லை என்று யோசித்தாள். ரொம்பவும் பிஸி போலிருக்கிறது என்று சமாதானம் செய்து கொண்டாள். முன் போல் வழியில் எங்காவது கூட அவனைப் பார்க்க முடியவில்லை. அவன் வராதது பற்றி கூட அவள் கவலைப்படவில்லை. மாமாவைக் கூட ஏன் காணவில்லை என்றுதான் குழம்பினாள். மாதத்தில் நாலைந்து முறையாவது

இந்தப் பக்கம் எட்டிப் பார்த்து பத்து நிமிஷமாவது பேசி விட்டுப் போகிறவர் ஒரு மாசமாக ஒரு முறை கூட வராமலிருந்தது என்னவோ போலிருந்தது. பொறுக்க முடியாமல் அப்பாவிடம் கூடக் கேட்டு விட்டாள்.

''சம்பத் மாமா ஏம்ப்பா வரதேல்ல. உடம்பு கிடம்பு சரியில்லையா? உனக்கேதாவது தெரியுமா?''

''அதானே எங்க அவரை ஆளைக் காணும்?''

''அப்பா அவளையே திருப்பிக் கேட்டார்.

''நா உன்னைக் கேட்டா நீ என்னைக் கேக்கறயே!''

''நானும் அவரைப் பார்த்து நாளாச்சும்மா. ஒருவேளை சம்பந்தியாகப் போறோம்னு பந்தா எல்லாம் பண்ணிக் கறாரோ என்னவோ.''

''அதெல்லாம் ஒண்ணும் இருக்காது. அவருக்கு எவ்ளோ வேலையோ.''

''ஆகாஷ் கூட அப்பறம் வரல இல்ல?''

''வரேன்னு அவர் ஒண்ணும் சொல்லலையே. இதைவிடு. உங்க படம் எப்டி? வேலை வேகமா நடக்கறாப்பல இருக்கு!''

''ம்... நடந்துட்ருக்கு!'' அப்பா சுரத்தில்லாமல் சொல்ல சரண்யா கேள்வியோடு அவரைப் பார்த்தாள்.

''என்னப்பா...?''

''என்னமோ போறது. மனசுக்கு பிடிச்சா செய்யறோம்? காசுக்கு தானே?''

''பிடிக்காட்டி ஏன் சிரமப்படணும்?''

''உன் கல்யாணத்துக்கு நாலு காசு சேர்த்ததும் ஒதுங்கிடுவேன். பெரிய இடத்துக்கு போகப் போற. அங்க இல்லாத காசா பணமா? இருந்தாலும் நம்ம மரியாதையக் காப்பாத்திக்கணும் இல்ல?''

''சரண்யா அப்பாவை பரிதாபத்தோடு பார்த்தாள். இரண்டு பெண்களும் திருமணமாகிபோய் விட்டால் தான் தனித்து இருக்க வேண்டி வருமே என்று அவர் ஒரு போதும் கவலைப்பட்டதில்லை என்றாலும் சரண்யாவுக்கு அந்த கவலை இருந்தது. இப்போது பரவாயில்லை. உடலில் வலு இருக்கிறது. எப்படியோ சமாளித்துக் கொள்வார். ஆனால் காலம் இப்படியே இருந்து விடுமா.. முதுமை படரப் படர வலு விழந்து உடல் தளரும்போது உதவிக்கு ஆளில்லாமல் என்ன செய்வார் என்ற கவலை அவளுக்குள் நிறைய இருந்தது. சில நேரம் அதை நினைத்தே தான் திருமணமே செய்து கொள்ளாமல் அப்பாவுக்குத் துணையாய் இப்படியே இருந்து விடுவது என்று கூட இருந்திருக்கிறாள். ஆகாஷைப் பார்த்த பிறகுதான் அந்த எண்ணம் மெல்ல மெல்ல வலுவிழந்திருக்கிறது.''

''ஒரு பக்கம் ஆகாஷ் மீது அன்பு மற்றொரு பக்கம் அப்பாவைப் பற்றிய கவலை, இரண்டுக்கும் இடையில் அவள் மனம் அல்லாடியது.பெண்களைக்கட்டிக் கொடுத்த இடத்தில் போய்காலம் கழிப்பது கௌரவக் குறைச்சல் என்று எவர் விதி எழுதி வைத்தார்களோ தெரியவில்லை. எல்லா பழக்க வழக்கங்களையும் மனிதன் தனக்குள் மிக அழுத்தமாக பதித்துவைத்துக் கொண்டிருக்கிறான். ஏன் எதற்கு என்ற கேள்வியின்றியே தலைமுறை தலைமுறையாய் அவை தொடர்கின்றன. பெண் என்றால் பொன்னும் பொருளும் கொடுத்தனுப்புவது, கல்யாணச் சீர், தலை தீபாவளிச் சீர்,சீமந்தச் சீர், பிள்ளைப் பேறு சீர் என்று எல்லா செலவுமே பெண்ணைப் பெற்றவனுக்குதான். பொறுமையாயிரு, அனைவரையும் அனுசரித்துப் போ, புருஷன் மனம் கோணாமல் நடந்து கொள் என்று எல்லா உபதேசமும் பெண்ணுக்குதான். இந்த உலகம் எந்த ஆணுக்கும் உபதேசம் செய்ததாய் சரித்திரமே இல்லை. முற்காலத்தில் பெண் படிப்பறிவோ, சம்பாத்யமோ இன்றி எல்லா வகையிலும்

ஆணைச் சார்ந்திருந்தாள். எனவே அத்தகைய சூழலில் அவளுக்கு உபதேசம் செய்யப்பட்டிருக்கலாம். அவள் நல்லபடி வாழ பொன்னும் பொருளும் கொடுத் தனுப்பியிருக்கலாம். அதே பழக்க வழக்கங்கள், இன்றும் தொடர்வதுதான் விந்தையாயிருக்கிறது. இன்று பெண் தன் காலில் நிற்கிறாள். கல்வியறிவோடு இருக்கிறாள். இருந்தும் திருமண விஷயத்தில் மட்டும் இன்னும் விலை பொருளாகவே இருக்கிறாள் என்பது வேதனையான உண்மை. சில பழக்க வழக்கங்களிலிருந்து மனிதன் மீளவில்லை என்பதற்கு இதுவே சான்று. இதுபற்றி யாரும் யோசிப்பதில்லையா. இல்லை யோசிக்க விரும்புவ தில்லையா?''

''கதவு தட்டப்பட அவள் சிந்தனை கலைந்தது. அப்பா போய் கதவைத் திறந்தார். வெளியில் அக்கா நின்றிருந்தாள். தனியாக! அவள் முகம் சரியில்லை.

''என்னம்மா நீ மட்டும் வந்திருக்க? மாப்ள வரலையா உன் கூட.''

''அக்கா பதில் சொல்லாமல் உள்ளே வந்தாள். அப்பாவின் முகத்தில் கவலை படர்ந்தது.

''என்ன தாயி... ஏன் என்னமோ போல இருக்க? புருஷனோட ஏதாவது மனஸ்தாபமா...?''

''அக்கா பதில் சொல்லாமல் முழங்காலில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தாள்.

''அப்பா சரண்யாவை பதற்றத்தோடு திரும்பிப் பார்த்தார். சரண்யா அக்காவிடம் வந்தமர்ந்தாள்.''

''என்னக்கா நடந்தது. உன்னை அங்க சரியா நடத்தலையா? படுத்தறாங்களா? சொன்னாத்தானே என்ன ஏதுன்னு கேட்கலாம்.

''சத்யா அழுகையை நிறுத்தவில்லை.''

திருமணம் செய்யுங்கள். நல்ல மனைவி கிடைத்தால் மகிழ்ச்சியடைவீர்கள். கெட்ட மனைவி கிடைத்தால் தத்துவஞானி ஆவீர்கள்.

-சாக்ரடீஸ்.

"எல்லாரும் நல்லவங்க தாம்ப்பா."

"அப்புறம் என்ன பிரச்சனை? எதுக்கு அழற?"

"திடீர்னு வேலைக்குப் போன்னு சொன்னா?"

"யார் சொன்னாங்க?"

"வேற யார் எம் புருஷன்தான்"

"இதுல கோச்சுக்கிட்டு வரதுக்கோ, அழறதுக்கோ என்ன இருக்கு?"

"என்னடி பேசற நீ? திடீர்னு போன்னாவேலைக்கு போய்ட முடியுமா? முதலாவதாக வேலைக்கெல்லாம் போக எனக்கு பிடிக்கல. பழக்கமும் இல்ல. இங்க நா வீட்லதானே இருந்தேன்! அது தெரிஞ்சுதான கட்டிக்கிட்டார்! இப்பொ போ போன்னா போய்ட முடியுமா? நா முடியாதுன்னேன். அவர் குத்தல் குத்தலா பேசினார். பொண்டாட்டிக்கு சோறு போட முடியாத புருஷன் என்ன ஆம்பளை?"

"ஷட் அப் சத்யா.. முட்டாள் தனமா உளறாதே" சரண்யா எரிச்சலோடு அவள் பேச்சைக் குறுக்கிட்டு தடுத்தாள்.

"நீ பேசறதெல்லாம் அபத்தமா இருக்கு சத்யா. பெண்டாட்டியை வேலைக்கு அனுப்புற ஆம்பளை கையாலாகாதவன்னு யார் சொன்னா உனக்கு? எந்த

நூற்றாண்டுல இருக்க நீ? உன் சிந்தனைகளும் பேச்சும் குப்பையார்க்கு சத்யா. நல்லா யோசிச்சு பார். வேலைக்குப் போற பெண்தான் வேணும்னா உம் புருஷன் எதுக்கு உன்னைக் கட்டிக்கணும்? ஊர்ல வேலைக்குப் போற பெண்ணுக்கா பஞ்சம்? வேலைக்குப் போக உனக்கு சோம்பேறித் தனம்ங்கறதால ஆம்பளைய குத்தம் சொல்லாதே. உன்நேரம் பயனுள்ளதா கழியணுமங்கறதுக்காக உன்னை வேலைக்குப் போன்னு சொல்லியிருப்பாரே தவிர நிச்சயம் காசுக்காக சொல்லியிருக்க மாட்டார்னுதான் எனக்கு தோணுது.''

''அப்டியே இருக்கட்டும். ஆனா எனக்குப் பிடிக்காதப்பொ என்னை எப்டி வற்புறுத்தலாம். வற்புறுத்தறது கூட ஒருவித கொடுமைதானே!''

''வாயக்கழுவு சத்யா, உன்னைச் சொல்லி குத்தமில்ல. நீ இங்க இருந்த விதம் அப்டி, வீட்டு வேலை செய்யறதும் மிச்ச நேரம் பூரா ஒண்ணு விடாம நல்லார்க்கோ நல்லால்லயோ. அத்தனை டி.வி. சீரியலையும், சினிமாக்களையும் .பார்க்கறதும்தான் உனக்கு வாழ்க்கையார்ந்துது. இதைத்தான் சுதந்திரம் சுகம்னு நீ நினைச்சுட்ருக்க. வெளில என்ன நடக்குதுன்னு தெரியாது. நாலு பேரோட பேச பழக பயம், கூச்சம். மொத்தத்துல வீட்டுப் பறவையா வளர்ந்துட்ட அதான் வெளில போறதை சுமையா நினைக்கற. அது தப்பு சத்யா. உன்னை நீ மாத்திக்கணும். டி.வி. சீரியல்ல உன்னைத் தொலைச்சுக்காதே. அதெல்லாமே மிகைப்படுத்தப் பட்டவை! யதார்த்தமில்லாதவை. வாழ்க்கைங்கறது வேற இதுல யாரோ எழுதிக் கொடுத்த வசனத்தை நாம பேசறதில்ல. பேசவும் முடியாது. நம்ம தலையெழுத்தை நாமதான் நிர்ணயிச்சுக்கணும். இப்டி கோச்சுக்கிட்டு வந்திருக்கயே. என்ன உத்தேசத்துல வந்திருக்க? இங்கயே இருந்துடலாம்னா? இல்ல உம் புருஷன், பின்னாலயே ஓடிவந்து கெஞ்சி கூட்டிக்கிட்டு போவார்ங்கற

நம்பிக்கைலயா? சரிதாம் போடின்னு அவர் விட்டுட்டா என்ன செய்வ? இங்கயே இருந்துடுவயா? முடியுமா உன்னால?''

''சரண்யா பேசப்பேச முகம் வெளிறியது சத்யாவுக்கு. அப்பா அவள் பேச்சை ஆமோதிப்பது போல் மௌனமாய் அமர்ந்திருந்தார். ஒரு குழந்தையின் கோபத்தோடு அக்கா புறப்பட்டு வந்திருக்கிறாள் என்பது புரிந்தது சரண்யாவுக்கு. அக்காவை இரக்கத்தோடு பார்த்தாள்.

தண்ணிக்குள்ள இறங்கற வரைதான் குளிரும் சத்யா. சடக்குன்னு இறங்கிப் பாரு. எதைப் பார்த்து பயந்தயோ அதுவே பின்னால சுகமாய்டும். சரி சொல்லு. வேலை தேடிக்கோன்னு உம்புருஷன் சொல்றாரா இல்ல அவரே வேலை தேடித் தந்து போன்னு சொல்றாரா?''

''அவர் பிரண்டு ஒருத்தர் ஏதோ கம்பெனி வெச்சிருக்காராம். அதுல ரிஸப்ஷன் பார்த்துக்கணுமாம்.''

''என்ன சத்யா நீ.. வேலை தேடி தெருத்தெருவா அலைன்னு சொல்லாம தானே வாங்கிக் கொடுத்து போன்னு சொல்ற புருஷனைப் போய்குத்தம் சொல்றயே. வீட்ல வெட்டியா உட்கார்ந்து டி.வி. பார்க்காதேன்னு சொன்னா நீகேப்பயா? அப்டி சொன்னா நீ வருத்தப்படுவன்னுதான்வேலை வாங்கிக் கொடுத்து போன்னு சொல்றார். வெளிய போனா நிறைய விஷயங்கள் தெரிஞ்சுப்பன்னு நினைக்கறார். இதல என்ன தப்பிருக்கு? கிளம்பு சத்யா நானும் உன்கூட வரேன் வா. அவசரப்பட்டு இங்க வந்துட்டேன்னு சொல்லி அவர்கிட்ட மன்னிப்பு கேட்டுட்டு அவர் சொல்ற வேலைக்குப் போய்ப்பாரு. நாலு நாள் செஞ்சாதானே அது கஷ்டமா ஈஸியான்னு தெரியும்! கஷ்டம் கஷ்டம்னு நினைச்சா எல்லாமே கஷ்டமாதான் தெரியும்.''

''எனக்கு பயம்மார்க்கு. ஏண்டி வந்தன்னு கேட்டா?''

''இப்ப பயந்து என்ன பிரயோஜனம்? இங்க வரதுக்கு முந்தியே ஒரு முறைக்கு நாலு முறை போறது சரியான்னு யோசிச்சிருக்கணும். ஒண்ணு உன் புருஷன் மனசை நீ மாத்தி உன் வழிக்கு கொண்டு வந்திருக்கணும், இல்ல அவர் சொல்றதுல தப்பில்லன்னு புரிஞ்சுக்கிட்டு அவர் வழிக்கு நீ போயிருந்திருக்கணும். ரெண்டையும் விட்டுட்டு வெடுக்குனு கிளம்பி வந்துட்டு திரும்பிப் போனா என்ன மரியாதை இருக்கும்? மூஞ்சியைக் காட்டத்தான் செய்வாங்க. அதுக்கெல்லாம் பயந்தா ஆகுமா. வா நாந்தான் கூட வரேனே. மாமாகிட்ட நா பக்குவமா பேசி விட்டுட்டு வரேன்.''

''சரண்யா அவளை சாப்பிட வைத்து பின்னர் அழைத்துக் கொண்டு கிளம்பினாள். ஒரு மரியாதைக்கு அப்பாவும் உடன் சென்றார்.

இவர்கள் பயந்த அளவுக்கு அங்கே யாரும் முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை. எதுவுமே நடக்காதது போல் சர்வ சாதாரணமாகவே வரவேற்றார்கள்.

''உன் படிப்பெல்லாம் எப்டியிருக்கு சரண்யா?''

''சாதாரணமாகவே பேசினார் மாமா. சத்யாவின் மாமியார் சுடச்சுட காபியும் ஒரு தட்டில் மிளகு வடைகளும் கொண்டு வந்து வைத்தாள்.

''ஆஞ்சநேயர்க்கு சாத்தினது, சாப்டுங்க.''

''சற்று நேர சம்பிரதாயப் பேச்சுக்குப் பிறகு அக்காவின் சார்பில் சரண்யா அவள் மாமியாரிடமும் புருஷனிடமும் தானே மன்னிப்பு கேட்டாள்.

அக்காவோட நாங்க ராத்திரி முழுக்க பேசியிருக்கோம். வேலைக்குபோகப் பிடிக்காம இல்ல அவளுக்கு. மாட்டேன்னு சொன்னதுக்கு காரணம் பயம். பழக்கமில்லாமை! பயப்பட இதுல எதுவுமில்லன்னு அவகிட்ட சொல்லியிருக்கோம். உங்க விருப்பப்படி அவ

வேலைக்குப்போகத் தயாரா இருக்கா. சட்டுனு வீட்டை விட்டு அவ கிளம்பிப் போனதை தப்பா எடுத்துக்காம பெருந்தன்மையா எங்களை வாங்கன்னு கூப்ட்டதுக்கு ரொம்ப தேங்க்ஸ். அவளோட வட்டம் ரொம்ப சின்னதாகவே இதுவரை இருந்துடுத்து. அதனால தான் பயந்துட்டா. இனிமே பயப்பட மாட்டா. கேட்டுப் பாருங்களேன் அவகிட்டயே.''

சரண்யா சொல்ல, அவன் சத்யாவை அப்படியா என்பது போல் புன்னகையோடு பார்த்தான். குற்ற உணர்ச்சியும் குறுகுறுப்புமாக சத்யா தலகுனிந்தாள்.

''எங்கிட்டயும் தப்பிருக்கு சரண்யா. போ போன்னு அவளை சொல்றதை விட்டுட்டு, வேலைக்குப் போக அவளை முதல்ல மனசால தயார் பண்ணியிருக்கணும். அப்புறம் போகச் சொல்லியிருக்கணும். போகட்டும். இனிமே நா அவளை வற்புறுத்தப் போறதில்ல. பெண்ங்கறவ பொருளாதார ரீதியா சுதந்திரமா இருக்கணும்னு நினைக்கறவன் நான். அதுக்கு அர்த்தம் அவ சம்பளத்துல லக்சுரியா வாழலாம்னு நினைச்சு இல்ல. அவ அப்படித்தான் என்னை தப்பா புரிஞ்சுக்கிட்டா. இஷ்டமில்லாதவளை ஏன் வற்புறுத்தினன்னு அம்மா கூட என்னைத் திட்டினாங்க. இப்ப சொல்றேன். வேலைக்குப் போறதும் போகாததும் அவ இஷ்டம். போனா அவளுக்கு ஒரு தன்னம்பிக்கையும் தெளிவும் எற்படும்ங்கறதை அவ எப்பொ புரிஞ்சுக்கறாளோ அப்பொ போகட்டும். மத்தபடி அவளை வெச்சு காப்பாத்தற அளவுக்கு எனக்கு வலிமையும் வசதியும் இருக்கு.''

சரண்யா அக்காவைப் பார்த்தாள்.இவ்வளவு நல்ல மனிதர்களைப் புரிந்து கொள்ளாமல் எடுத்தெறிந்து பேசிவிட்டு வந்து விட்டாயே என்ற ஆதங்கம் அதில் தெரிந்தது.

''மாமா சொன்னதைக் கேட்ட இல்ல சத்யா? நீ வெளிலதான் வேலைக்குப் போய் சம்பாதிக்கணும்னு இல்ல.

சாமர்த்தியமும் தைரியமும் இருந்தா வீட்டுக்குள்ளயே இருந்து கூட கை நிறைய சம்பாதிக்கலாம். உனக்கு என்ன தெரியுமோ அதை நேர்மையான முறைல காசாக்கு. பணம் சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டன்னா உனக்கே இன்ட்ரஸ்ட் வந்துடும். உம்மேல உனக்கே மரியாதை ஏற்படும்.

சற்று நேரம் கழித்து அங்கிருந்து கிளம்பின போது மனசு அப்பாடா என்று நிம்மதியடைந்திருந்தது. அப்பா சரண்யாவை பெருமை பொங்கப் பார்த்தார். தங்கையா தாயா இது என்று யோசித்தார். இந்த வயதில் அவள் நிதானமும் தெளிவும் அவரை வியக்க வைத்தது. நல்லதொரு வாழ்க்கை இதற்கு அமைய வேண்டுமே என்ற பிரார்த்தனை உள்ளே ஓடியது. கூடவே சம்பத் ஏன் வீட்டுக்கு வரவில்லை என்ற கேள்வியும் எழும்பியது. ஆகாஷ் வந்து விட்டுப் போன மறுநாள் சம்பத்தோடு பேசியதுதான் ஆகாஷுக்கும் சரண்யா மீது விருப்பம் இருப்பதைத் தெரிவித்த பிறகு சரி நான் பார்த்துக்கறேன் மிச்சத்தை என்று போனை வைத்தவர்தான். அதன்பிறகு இன்று வரை வரவில்லை. என்ன காரணமென்று தெரியவில்லை.

''அப்பா அங்க பாரேன்..'' திடீரென்று சரண்யா அழைத்ததும் சிந்தனை கலைந்து அவள் காட்டிய திசையில் பார்த்தவர் முகம் மலர்ந்தது.

''அட... சம்பத்..! இவரைப் பத்திதான் நினைச்சுட்டிருந்தேன். நினைச்சதும் எதிர்க்க காட்சி கொடுக்கறார்!''

கோபாலன் வியப்போடு நடையை எட்டிப் போட்டு ஆடியோ கடை ஒன்றினுள் நுழைந்து கொண்டிருந்த சம்பத்தை நிறுத்தினார். திரும்பிய சம்பத்தின் முகத்தில் கோபாலனைப் பார்த்ததும் ஒருவித தர்மசங்கடம் பரவியது.

''என்ன கோபாலா இந்த பக்கம்?''

''நீ எங்க இந்த பக்கம்?''

''கேஸட் கடைக்கு வெல்லம் வாங்கவா வருவேன். கேஸட் வாங்கத்தான்.''

''அதுசரி வீட்டுப் பக்கம் வரவேல்லயே. ஊருக்கு எங்கயாவது போய்ட்டயான்ன?''

''அதெல்லாம் இல்ல. கொஞ்சம் பிஸி அதான் வர முடியல.''

''அப்புறம் ஆகாஷ் என்ன சொல்றான்? ஏதாவது பேசினயா பையன்கிட்ட?''

''நா வீட்டுக்கு வந்து எல்லா விவரமும் சொல்றேனே கோபாலா.''

''எப்பொ வர..?''

''ரெண்டு நாள்ல வரேனே..?''

''சௌக்கியமா மாமா?'' சரண்யா கிட்டே வந்து கேட்டாள்.

''வெரிஃபைன் சரண்யா! ஆமா அப்பாவும் பொண்ணுமா எங்க கிளம்பிட்டீங்க?''

''சத்யா வீட்டுக்கு போய்ட்டு வரோம்.''

''சத்யா எப்டியிருக்கா? எல்லாரும் நல்லபடியா இருக்காங்களா அவகிட்ட?''

''ஒரு பிரச்சனையுமில்ல மாமா. ரொம்ப நல்ல மனுஷங்க!''

''வெரிகுட். அப்பொ நா வரட்டுமாம்மா. ரெண்டு நாள்ல வீட்டுக்கு வரேன்.''

''சம்பத் கேஸட்டுகளோடு தன் காரில் ஏறிச்செல்ல, அவர் போகும்வரை நின்று பார்த்துக் கொண்டிருந்த கோபாலன், ஏதோ யோசனையோடு மௌனமாய் நடந்தார்.

''என்னப்பா?''

''ம்... ஒண்ணுல்லயே.''

''ஸைலன்ட்டா வர!! சம்பத் மாமா என்ன சொன்னார்? ஏன் வீட்டுக்கு வரலையாம்?''

''தெரியல.. டைம் இல்லன்னார். ஆனா எனக்கென்னமோ வேற ஏதோ இருக்கும்னு தோணுது.''

''ஏன் அப்படி சொல்ற?''

''நல்ல விஷயம்னா சட்டுனு சொல்லி சந்தோஷப்படத் தோணுமா இல்ல ரெண்டு நாள் கழிச்சு வந்து சொல்லத் தோணுமா?''

''மாமா என்ன சொன்னார்?''

''ஆகாஷ்கிட்ட பேசினயான்னு கேட்டேன். ரெண்டு நாள்ல வீட்டுக்கு வந்து விவரமா சொல்றேனென்னு சொன்னார். அப்பொ ஏதோ பிரச்சனைன்னுதானே தெரியுது? ஆனா நிச்சயம் ஆகாஷால இருக்காது. மாமிதான் ஏதாவது பிரச்சனை பண்றாங்களோ என்னமோ.''

''இருந்துட்டு போகட்டுமேப்பா. அதைப்பத்தி நீ எதுக்கு மண்டைய உடைச்சுக்கற, ஒண்ணு சொல்றேன் கேட்டுக்கப்பா. எது நடக்கணுமோ அது நன்றாகவே நடக்கும். யாராலயும் தடுத்து நிறுத்திட முடியாது. அதனால மனசைப் போட்டு குழப்பிக்காதே. அனாவசியமா கவலையும் படாதே. எது வந்தாலும் ஏத்துக்க பழகிப்போம்.''

''நீ சுலபமா சொல்லிடற சரண்யா. என் ஸ்தானத்துல இருந்து பார்த்தாதான் என் கவலை உனக்கு புரியும்.''

''அப்பொ சரி கவலைப்படு, நீ கவலைப்பட்டதும் எல்லாம் நல்லபடி முடிஞ்சிடும்னு நீ நம்பினா தாராளமா கவலைப்பட்டுக்கோ. யார் வேண்டாம்னா.''

''கிண்டல் பண்ற பாத்தயா? ஆகாஷுக்காக காத்துட்ருப்பேன்னு நீ சொல்ற. ஒருவேளை அவங்க ஆகாஷுக்கு வேற ஒரு பொண்ணை கட்டி

வெச்சுட்டாங்கன்னு வெச்சுக்கோ. அதுக்கப்புறமும் அவனுக்காக நீ காத்திருக்க முடியுமா? நல்லாதான் இருக்குமா? அப்டி ஒரு சூழ்நிலை ஏற்பட்டா அவனை மறந்துட்டு இன்னொரு வாழ்க்கையை சகஜமா ஏத்துக்கத் தயார்னு நீ ஒரு வார்த்தை சொல்லு. கவலைப்படறதை நா விட்டுடறேன்.''

அப்பா சொல்ல சரண்யா மௌனம் சாதித்தாள். சட்டென்று அவளால் அதற்கு பதில் சொல்ல முடியவில்லை. அப்படி ஒரு நிலை வந்தால் என்ன செய்யப் போகிறேன்? அவள் தன்னையே கேட்டுக் கொண்டாள். கேள்விக்கு பதில் வரவில்லை. உள்ளம் மௌனம் சாதித்தது.

இரண்டு நாளில் வருகிறேன் என்று சொன்ன சம்பத் மாமா வரவேயில்லை. நிச்சயம் ஏதோ ஒரு தர்மசங்கடத்தால் அவர் கட்டுண்டிருக்க வேண்டும் என்பது புரிந்தது. இல்லாவிட்டால் இப்படி வராமல் இருக்க மாட்டார். ஒருவேளை மாமிக்கு இதில் இஷ்டமில்லையா? அவளை மீறி அவரால் இங்கு வர இயலவில்லையா? எதுவாயிருந்தால் என்ன? பட்டென்று சொல்லிவிட வேண்டியது தானே? எதற்கு இப்படி ஒரு சஸ்பென்ஸ்? என் வீட்டுக்கு நீ மருமகளாக முடியாது என்று சொல்லிவிட்டால் மாமா மீது அன்பும் மரியாதையும் குறைந்து விடுமா என்ன?

''அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் மற்றொரு வாழ்க்கைக்கு நீ தயாராக வேண்டும்.''

''அப்பா சொன்னது நினைவுக்கு வந்தது. அடி வயிறு சிலீரென்றது. இடுப்புக்கு கீழே பலமற்று போவது போல் தோன்ற கண்களை இறுக மூடிக் கொண்டாள். மற்றொரு வாழ்க்கையை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. அப்பாவின் கவலைக்கு அர்த்தம் புரிந்தது.

காதல் ஓர் நெருப்பு, ஆயினும் குளுமையானது.
காதல் ஒரு நோய்தான், எனினும் சாகடிக்காது.
காதல் குருடானது. ஆயினும் வர்ணமயமானது.
காதல் எல்லாமுமாகும்; எனினும் காதலில் ஒன்றுமேயில்லை.
-தாமஸ் மிடில்டன்

''சார் உங்களுக்கு ஒரு கால் வருது. கனெக்ட்க் பண்ணவா?'' ஆபரேட்டர் கேட்க ஆகாஷ் எரிச்சலடைந்தான்.

''நா மீட்டிங்ல இருக்கேன். இன்னும் ரெண்டு மணி நேரத்துக்கு என்னை தொந்தரவு செய்ய வேண்டாம்.''

''ஓ கே சார்.''

''இரண்டு மணி நேரம் கடந்து மீட்டிங் முடிந்து சோர்வோடு தன் அறைக்கு வந்து அமர்ந்தான். தலை வலித்தது. டேபிள் மீது அவசர கோப்புகள் நிறைய வைக்கப்பட்டிருந்தது. இன்டர்காம் எடுத்து சூடாக காபிக்கு சொல்லிவிட்டு ஒரு கோப்பை எடுத்து பிரித்தான்.

போன் மறுபடியும் அடித்தது.

''சார் மறுபடியும் ஒரு கால் வருது.''

''நோ ஆபரேட்டர். ப்ளீஸ். ஐ ஆம் வெரி பிஸி. யாராரந்தாலும் நா இல்லன்னு சொல்லிடுங்க. வீட்லேர்ந்து ஏதாவது முக்கியமா பண்ணினாங்கன்னா மட்டும் குடுங்க போதும். பட் யாரும் பண்ண மாட்டாங்க. ஜஸ்ட் சொல்லி வெச்சேன்.''

''ஓ கே சார்.''

ஆகாஷ் ரிஸிவரை வைத்தான். காபி வந்தது. டேபிள் மீதிருந்த அத்தனை கோப்பையும் படித்து கையெழுத்திட்டு அனுப்பி விட்டு சோம்பல் முறித்த போது மணி எட்டுக்கு மேல் ஆகியிருந்தது. வீட்டுக்குப் போய் படுத்தால் போதும் என்று உடம்பு கெஞ்சியது. டேபிள் மீதிருந்த கார் சாவியும் ப்ரீப்கேஸும் எடுத்துக் கொண்டு கிளம்பினான். மீட்டிங் நேரத்தில் தொந்தரவு வேண்டாம் என்று தற்காலிகமாக அணைத்து வைத்திருந்த செல்போனை ஆன் பண்ணி இடுப்பில் செருகிக் கொண்டு காருக்கு வந்து ஏறியமர்ந்தான் பத்தடி தொலைவு கூட கார் வந்திருக்காது. செல்போன் சிணுங்கியது.

''ஹலோ''

''எங்கிட்ட கூட பேச நேரமில்லாத அளவுக்கு அப்டி என்ன பிஸி.''

''மறுமுனையில் சுஜிதாவின் குரலில் கோபம் தெரிந்தது.

''ஓஹோ. நீதான் அப்பொ போன் பண்ணினயா என்ன விஷயம் சொல்லு?''

''போசாதிங்க எங்கிட்ட.''

''அதுசரி போன் பண்ணினது நீ! பண்ணிட்டு பேசாதிங்கன்னா என்ன அர்த்தம்?''

''சிரிக்காதிங்க ஆகாஷ். நா ரொம்ப ரொம்ப கோவத்துல இருக்கேன். நீங்க என்னை ரெண்டு முறை இன்ஸல்ட் பண்ணிட்டீங்க! இதுக்கான தண்டனை நிச்சயம் உங்களுக்கு உண்டு.''

''லுக் சுஜி! நீதான் பண்ணினன்னு எனக்கென்ன ஜோசியமா தெரியும்? நா ரொம்ப ரொம்ப பிஸியார்ந்தேம்மா.''

''நா என்ன வெட்டியாவா இருக்கேன். நானும் உங்களை விட நாலு மடங்கு பிஸியாதான் இருக்கேன். தெரியுமா? என் வேலையெல்லாம் விட்டுட்டு உங்களோட பேசணும்னு நினைச்சேன் பாருங்க. என்னை செருப்பாலதான் அடிச்சுக்கணும்.''

''ஓகே ஓகே.. போதுமே கோபம்! எதுக்கு போன் பண்ணினன்னு சொல்லு.''

''இனிமே சொல்லி என்ன பிரயோசனம்?''

''என்ன விஷயம்னாவது சொல்லேன்.''

''என் பிரண்டோட நிச்சயதார்த்தம் ரொம்ப கிராண்டா ஸ்ரீலேகால வெச்சு நடக்குது. உங்களை பத்தி அவகிட்ட சொல்லியிருந்தேன். கண்டிப்பா உங்களையும் கூட்டிட்டு வரணும்னு சொல்லியிருந்தா. ரெண்டு நாளா உங்க ஆபீஸ்க்கு எப்பொ போன் பண்ணினாலும் இல்லஇல்லன்ற பதில்தான். நிஜமாவே இல்லையா இல்ல அப்படி சொல்லச் சொன்னிங்களா? செல்லை வேற கட் பண்ணி வெச்சிருக்கிங்க. என்னாச்சு ஆகாஷ். என் ஞாபகம் கூட மழுங்கிப் போற அளவுக்கு அப்படி என்ன வேலை?''

''இயர் எண்டிங் ஆச்சே! ஆபீஸ்ல பயங்கர வேலை. ஏகப்பட்ட டென்ஷன். ரெண்டு நாளா வீட்டுக்கு கூட போகல தெரியுமோ..? இப்பதான் போயிட்ருக்கேன்.''

''நீங்க என்ன சொன்னாலும் ஒத்துக்கமாட்டேன். உலகமே தலைகீழா புரண்டாலும் என்னை மறக்கறதோ என்கிட்டப் பேசக்கூட நேரமில்லாத மாதிரி பாவ்லா பண்றதையோ நா ரசிக்க மாட்டேன். என்ன டென்ஷன் இருந்தாலும் அதைக் குறைக்கற சக்தி வேறெதுக்கு இருக்கோ இல்லையோ காதலுக்கு மட்டும்தான் உண்டு.''

''ஆகாஷ் சிரித்தான்.''

''நா சொல்றது சிரிப்பாவா இருக்கு?''

''நீ சொல்றது ரொம்ப சரி. அதனாலதான் சிரிச்சேன். இப்பொ உன்னோட பேச ஆரம்பிச்சதும் ரிலாக்ஸ்டா ஆய்ட்டேன்.''

''பட் நா டென்ஷனாய்ட்டேன். உங்களை பழிக்கு பழி வாங்கறேனா இல்லையா பாருங்க.''

''எதுக்கு?''

''என்னை அலட்சியப்படுத்தினதுக்குதான்! என்னைத் தேடி நீங்க லோ லோன்னு அலையணும். என் குரலைக் கேட்க தவியாத் தவிக்கணும். குறைஞ்சது ஒரு பத்து நாளாவது உங்களை அழ வெக்கல எம்பேர் சுஜிதா இல்ல.''

''தேங்க்யூ. நானே உன் பேரை மாத்திக்க சொல்லணும்னு நினைச்சேன். என்ன பேர் இது. சுஜிதா! அசிங்கமார்க்கு. பாப்பம்மா முனியம்மா அருக்காணின்னு எவ்ளோ அழகழகான பேர் எல்லாம் இருக்கு!''

''உங்களை கவனிச்சுக்கறேன்!''

''சுஜிதா பட்டென்று போனை வைக்க ஆகாஷ் சிரித்தபடி செல்லை கீழே வைத்தான்.

''சொன்னபடியே செய்தாள் அவள். புது வருஷத்தன்று அவன் எவ்வளவு முயற்சி செய்தும் அவளோடு பேச முடியவில்லை. அவளது ஹாஸ்டல் வாசலில் காத்திருந்தும் அவளைப் பார்க்கவும் முடியவில்லை. இவ்வளவு வைராக்கியமும் பிடிவாதமும் அவளுக்குள் இருந்தது அவனுக்கு என்னமோ போல் இருந்தது. இந்த க்ணம் நல்லதல்லவே என்ற நினைப்பை அவனால் தவிர்க்க முடியவில்லை. காதல் என்பது வாழ்க்கையில் மிக அழகிய வர்ணம் என்பதில் அவனுக்கு மறுப்பில்லை. ஆயினும் அந்த வர்ணம் மட்டுமே வாழ்க்கை என்பதை அவன் நம்பவில்லை. அதைவிட முக்கியமான விஷயங்கள் வாழ்க்கையில்

இருக்கின்றன. இதைப் புரிந்து கொள்ளாதவர்களின் நாட்கள் காதலிலேயே கழிந்து ஒன்றுமில்லாமல் போகும். காலத்தை அப்படி காதலில் மூழ்கடிக்க அவன் விரும்பவில்லை. இரண்டு நாள் அவளோடு பேச முயற்சித்து தோல்வி கண்ட பின் மூன்றாவது நாள் முயற்சியை விட்டு விட்டு வேறு வேலைகளை கவனிக்க ஆரம்பித்தான். பிடிவாதம் குறைந்து அவளே மீண்டும் அழைக்கட்டும் என நினைத்தான். பத்து நாள் கரைந்தும் அவளிடமிருந்து எவ்வித அழைப்பும் இல்லை என்றானதும் அவனுக்கும் வைராக்கியம் கூடியது.''

''இரவு பன்னிரெண்டு மணிக்கு தூங்கிக் கொண்டிருந்த அப்பாவை எழுப்பி புத்தாண்டு வாழ்த்து சொன்னாள் சரண்யா.''

''ஆயிரமாவது ஆண்டு ஆரம்பம்னு உலகமே கொண்டாடிண்ருக்கு. நீ மட்டும் இப்டி தூங்கறயே. பைத்தியம் மாதிரி நா டி.வி.யோட பேசிண்டுருக்கேன் தனியா உக்காந்து.''

''பன்னண்டு மணிக்கு எழுப்பி இப்டி அர்ச்சனை பண்ணனுமா?''

''பகலா ராத்திரியான்னு தெரிய்ல. வெளில ஒரே கோலாகலமா இருக்கு. எழுந்து வாயேம்ப்பா. ஒரு சின்ன வாக் போய் எல்லாத்தையும் ரசிச்சு பார்த்துட்டு வருவோம்.''

''வேணாந்தாயி.. கோலாகலம்ங்கற பேர்ல சிலபேர் பொறுக்கித்தனமும் பண்ணுவா எதுக்கு வம்பைத் தேடி போகணும்.''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது வாப்பா. ஊரே முழிச்சுண்டுருக்கு. எவ்ளோ வெடி சத்தம் பார். காதைப் பிளக்கறது. எழுந்து வா.''

''சரண்யா எழுந்து கொடியில் தொங்கிய சல்வாரின் துப்பட்டாவை எடுத்து கழுத்தில் போட்டுக் கொண்டு பூட்டு

சாவியை எடுத்தாள். ஷர்ட்டை மாட்டிக் கொண்டு வேட்டியோடு புறப்பட்டார் அப்பா.''

''அந்த தெருவின் எல்லா வீடுகளிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. எல்லாருமே சந்தோஷமாக இருந்தார்கள். தெருவைச் சேர்ந்த இளைஞர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து டென் தௌசன்ட் வாலாவை கொளுத்தத் தயாரானார்கள். சுருட்டி வைத்திருந்த பட்டாசை, பாய் விரிப்பது போல ஒருவன் உருட்டி விரித்துக் கொண்டு செல்ல, சரண்யா அப்பாவோடு ஒரு ஓரமாய் நின்று, அது வெடிப்பதைப் பார்க்கத் தயாரானாள். திரியில் தீ வைப்பதற்கு முன்பு அவர்கள் உற்சாகமாக கானா பாட்டு பாடிக் கொண்டு குதித்து குதித்து ஆட அந்த உற்சாகம் அத்தனை பேருக்கும் தொற்றிக் கொண்டது. வீடுகளிலிருந்து இன்னும் பலர் கூட வந்து ஆட்டத்தில் கலந்து கொண்டார்கள்.''

''ஜாலியா இல்லப்பா? எனக்கு கூட ஆடணும் போல இருக்கு. சரண்யா அப்பாவிடம் கிசுகிசுத்தாள்.''

''சரிதான். இந்த ஆசை வேற இருக்கா?''

''இன்னும் யாராவது பொண்ணுங்க ரெடின்னு வந்தா நாங்களும் ஆடுவோம். என்ன சொல்லு ஆம்பளையா பொறந்தா இதெல்லாம்தான் சௌகர்யம்.''

''ஆதங்கத்தோடு சொன்னாள் அவள்.

இளைஞன் ஒருவன் திரியைப் பற்ற வைக்க அடுத்த அரை மணிநேரத்திற்கு விடாது வெடித்தது. கடைசி பட்டாசு வெடித்து முடித்த போது ஒரே புகை மயம். இளைஞர்கள் கோரசாக உச்சஸ்தாயியில் ஹேப்பி நியூ இயர் என்று கத்தினார்கள். தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்ற வித்தியாசமோ தயக்கமோ இன்றி கண்ணில் பட்டவர்களுக்கெல்லாம் புத்தாண்டு வாழ்த்து சொல்லிக் கொண்டார்கள் அனைவரும். மிக மிக சந்தோஷமான

ஆரம்பம். ரேஷன் அரிசி, கேஸ் விலை உயர்வு, டீசல் பிரச்சனை. கார்கில் போர், விலைவாசி உயர்வு, நிதிநிலை நெருக்கடி, விமானக் கடத்தல் எல்லாவற்றையும் மறந்து மக்கள் சந்தோஷமாயிருந்தார்கள். இந்த சந்தோஷம் நிலைத்து நின்று விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! கிருத யுகத்தில் அதர்மம் என்பதே இல்லாதிருந்ததாமே.

மனிதர்கள் அவ்வளவு பேருமே உத்தமர்களாயிருந் தார்களாமே. அதே போல் மீண்டும் உலகம் மாறி விட்டால் எப்படியிருக்கும்! லஞ்சமில்லாத அரசாங்க அலுவலகங்கள், ஊழலற்ற அரசாங்கம், விரைவாய் நகரும் கோப்புகள், ஜாதிகளற்ற சமுதாயம், மதவெறியற்ற மனிதர்கள், சுரண்டலற்ற நேர்மையான அரசியல்வாதிகள், ரூபாய்க்கு ஐந்து படி அரிசி, ஐந்து ரூபாய்க்கு ஒரு பவுன் தங்கம், கொலை, கொள்ளைகளற்ற உலகம்...! எவ்வளவு அற்புதமாயிருக்கும் இப்படியிருந்தால்! சரண்யா பெருமூச்சு விட்டாள்.''

''என்னம்மா பெருமூச்சு விடற?'' அப்பா கேட்க சரண்யா தான் நினைத்ததைச் சொன்னாள்.''

''நீ நினைக்கறதெல்லாம் நடக்கும்.''

''நிஜம்மாவாப்பா? எப்டி?''

''டிசம்பர்க்கு அப்பறம் மறுபடியும் ஜனவரிதானே? பங்குனிக்கப்புறம் சித்திரை தானே? அதே மாதிரிதான். கலியுகம் முடிஞ்சதும் மறுபடியும் கிருதயுகம்தான். தர்மம் மட்டுமே நிறைந்திருக்கும் யுகம்! என்ன...அதுவரை இந்த அதர்ம சகதிலதான் வாழ்ந்தாகணும். வேற வழியே இல்ல. தர்மம் குறைஞ்சுக்கிட்டே வரும். மனுஷத்தன்மை கேள்விக்குறியாகும். பண வெறியும் பதவி வெறியும் பிடிச்ச அரசியல்வாதிங்க கைல ஜனநாயகம் சிக்கித் தவிக்கும். ஓட்டுப் போடவும் வரி கட்டவும் மட்டும்தான் நமக்கு உரிமை உண்டு. கேள்வி கேட்க இல்ல!''

''தொட்டதுக்கெல்லாம் வரி கட்டறோம். அப்பறம் பட்ஜெட்ல எப்டிப்பா துண்டு விழுது!''

''அப்பா சிரித்தார்.''

''வரிப்பணங்கறது மழை உருவாகறா மாதிரிம்மா. கடல் நீர் ஆவியாகி மேகமாகி குளிர்ந்து மறுபடியும் பூமிக்கே மழையா மாறி பொழியும். அதே மாதிரிதான் வரியும். மக்கள்கிட்டேர்ந்து வசூலிக்கப்பட்டு மறுபடியும் பல விதங்களில் மக்களுக்கே உபயோகமா திரும்பி வரணும். அதான் நியாயம். ஆனா எங்க வருது? அது சுரண்டல்காரங்க கஜானாக்கு இல்ல போகுது! மொத்தத்துல மனுஷனுக்கு ஒரே ஒரு எய்ட்ஸ்தான். ஆனா நாட்டுக்கு? லஞ்சம், ஊழல், சுரண்டல், தீவிரவாதம், மதவெறி, பணவீக்கம், பதவி வெறின்னு நிறைய எய்ட்ஸ். இத்தனை நோய்லேர்ந்து இந்த நாட்டை காப்பாத்த ஒரு காந்தியும் நேருவும் போறாது! ஒவ்வொரு மனுஷனுமே அஹிம்சைங்கற ஆயுதத்தோட சத்யாக்கிரகம் பண்ணத் தயாராகணும். ஆனா எங்கே...? எல்லாரும் வேடிக்கை தானே பாத்துட்ருக்கோம்!''

அப்பாவின் குரலில் உண்மையான கவலையும் வருத்தமும் தெரிந்தது.

''ஏம்பா சம்பத் மாமா முழிச்சுட்ருப்பாரா?'' திடீரென்று பேச்சை மாற்றி கேட்டாள் சரண்யா.

''ஏன் கேக்கற?''

''ஒரு போன் பண்ணி எல்லார்க்கும் புது வருஷ வாழ்த்து சொல்லுவோமா?''

''ஒருவேளை தூங்கிட்ருந்தா?''

''எழுப்புவோம்ப்பா! என்ன தூக்கம் வேண்டிக்கிடக்கு! ஆனா முழிச்சுட்ருப்பாங்கன்னுதான் தோணுது.''

''சரி பண்ணு. நம்பர் தெரியுமா?''

''இதுவரை பண்ணினதில்லன்னாலும் நம்பர் மட்டும் மறக்கல.''

''அதெப்டி மறக்கும். ஆகாஷ் வீட்டு நம்பராச்சே!''

சரண்யா புது வருஷத்தை முன்னிட்டு நள்ளிரவிலும் திறந்திருந்த பி.சி.ஓ. ஒன்றில் நுழைந்தாள். ஆகாஷ் வீட்டு எண்களை வரிசையாய் அழுத்தினாள்.

''எதிர்முனையில் ரிங் போன போது மனசக்குள் பட்டாம்பூச்சி பறந்தது. அடிவயிற்றில் ஜிவ்வென்று ஏதோ பரவியது.''

''நாலைந்து ரிங் போன பிறகுதான் போன்எடுக்கப்பட்டது.''

''ஹலோ'' எதிர்முனையில் மாமியின் அதட்டலான குரல் கேட்க சரண்யாவின் சப்த நாடியும் ஒரு விநாடி ஒடுங்கியது.

''யாரது...?''

''சரண்யா சட்டென்று போனை அப்பாவிடம் கொடுத்தாள். ரிஸிவரை மூடிக் கொண்டு அவரிடம் சொன்னாள்.

''அப்பா, மாமி! நீயே பேசு. மாமாக்கு வாழ்த்து சொல்ல பண்ணினதா சொல்லு. மாமா லைன்ல வந்ததும் எங்கிட்ட கொடு.''

''அப்பா போனை வாங்கினார்.''

''ஹலோ... நா... நான்தான் கோபாலன்.''

''ஒண்ணுல்ல புதுவருஷ வாழ்த்து சொல்லலாம்னு. சம்பத் இல்லையா?''

''என்ன விஷயம் இந்த நேரத்துல?''

''எல்லாரும் தூங்கிட்ருக்கா.''

''பரவால்ல. நா காலேல பண்ணிக்கறேன் எழுப்ப வேண்டாம்.''

''விடியற்காலேல நாங்க வெளில போறோம். உங்க சார்பா நானே வாழ்த்து சொல்லிடறேன். நீங்க சிரமப்பட வேண்டாம்.''

எதிர் முனையில் ரிஸீவர் நிர்த்தாட்சண்யமாய் வைக்கப்பட கோபாலன் முகம் சுருங்க பெண்ணைப் பரிதாபமாய் பார்த்தார்.

அழகிற்காக உண்டாகும் காதல், அழகிய பூ விரைவில்
வாடிப்போகும்
பணத்திற்காக உண்டாகும் காதல் ஒரு கண்ணாடி டம்ளர்-
எந்த நிமிடமும் உடையும்
அன்பிற்காக உண்டாகும் காதல் அழுந்தா ஓவியம் என்றும் வர்ணமிழக்காது.
-அரு. ராமனாதன்.

''ஃபேஷன் டிஸைன் பற்றிய மேல்நாட்டுப் புத்தகம் ஒன்றை பார்த்துக் கொண்டிருந்தாள் சுஜிதா.''

''அறைக்கதவை யாரோ தட்டினார்கள். புத்தகத்தை வைத்து விட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள். அறைத் தோழி நிஷா இரண்டு கைகளிலும் நாலைந்து பார்சல்களோடு நின்றிருந்தாள்.''

''எங்க போய்ட்டு வர?''

''ஷாப்பிங்தான்.''

''என்ன வாங்கின?''

''நா எங்க வாங்கினேன். எல்லாம் என் பாய் பிரண்டு வாங்கித் தந்தான்.''

''நிஷா கட்டிலில் உட்கார்ந்து ஒவ்வொரு பார்சலாகப் பிரித்தாள். இரண்டு செட் சுரிதார்கள். அதற்கு ஜோடியாக விலை உயர்ந்த ஹீல்ஸ் செருப்புகள். இம்போர்ட்டட் மேக்கப் கிட் ஒன்று. யார்ட்லி சென்ட் பாட்டில், கற்கள் பதித்த விலை உயர்ந்த நவநாகரீக பொட்டு அட்டைகள், லெதர் பேக், கூலிங் கிளாஸ் என்று ஏகப்பட்ட சாமான்கள்.

''என்னடி அலிபாபா குகைக்குள்ள போய்ட்டு வந்தயா? வித விதமா எடுத்து போட்டுக்கிட்டேடர்க்க!''

''மொத்த செலவு இருபதாயிரம்.''

''ஒட்ட சரச்சுட்டயா உன் ஆள் தலைய?''

''இதுக்குதான் பாய் பிரண்டு வெச்சுட்ருக்கேன். என்னதான் நம்ம கைலேர்ந்து லட்சக்கணக்குல செலவழிச்சாலும், ஓசில வர சந்தோஷத்துக்கு ஈடாகுமா சொல்லு.''

''எல்லாம் சரி இவனையே கல்யாணம் பண்ணிப்ப இல்ல.''

''யார் கண்டா?''

''என்னடி இவ்ளோ கூலா சொல்ற?''

''பண்ணிக்கலாம். பண்ணிக்காம போகலாம். அதைப்பத்தி இப்பொ என்ன? இப்போதைக்கு அவன் மூலம் கிடைக்கறதை அனுபவிக்கறதா இருக்கேன் அவ்ளோதான். என் கதையை விடு. உன் ஆளைப் பத்தி ஒண்ணும் சொல்ல மாட்டேன்ற! ஆள் எப்டி? நல்லார்ப்பாரா? நல்ல வசதியா? சும்மா பாய் பிரண்ட் மட்டும்தானா? இல்ல அதுக்கும் மேலயா?''

''உன்னைமாறின்னு நினைச்சயா?''

''காவியக்காதலா? அதை விடு. லேசுல உனக்கு யாரையும் பிடிக்காதே! எல்லார்கிட்டயும் ஒரு குறை சொல்லுவ! இவனை மட்டும் எப்டி பிடிச்சுது? உன் பின்னால சுத்திட்ருந்தானே ஒரு பாப்புலர் பாப் சிங்கர். அவனை விடவா இவன் ஸ்மார்ட்டா இருப்பான்? இல்ல பிரபலமான ஆளா?''

''நீ எப்டி நோண்டிக் கேட்டாலும் ஒரு தகவலும் உனக்கு சொல்றதால்ல.''

''சொல்லாட்டா போயேன்? நீங்க சொல்லாட்டி நாங்க கண்டுபிடிச்சுக்க மாட்டோமாக்கும். அவனோட வெளியில சுத்தாமயா இருக்கப் போற? சி.ஐ.டி. வேலை பண்ணி உனக்கே அவனைப் பத்தி புதுப்புது தகவல் சொல்றேனா இல்லையா பார்.''

''தாராளமா! முடிஞ்சா கண்டுபிடிச்சுக்கோ.''

சுஜிதா புன்சிரிப்போடு எழுந்து சென்று டி.வி.யை ஆன் பண்ணினாள்.

''விளையாட்டு போல் பத்து நாளாகி விட்டது ஆகாஷோடு பிணங்கிக் கொண்டு. சுத்தமாய் அவனிடமிருந்து எந்த பேச்சும் இல்லை. அவள் நினைத்ததற்கு நேர்மாறாயிருந்தது. அவன் செயல். அவளுக்காக தவமாய் தவமிருப்பான், பரிதவிப்பான், சினிமா காதலன் போல இடைவிடாது முயற்சிப்பான். நள்ளிரவில் சுவரேறி குதித்து வந்து அவளை சந்தித்து வம்பு செய்வான் என்றெல்லாம் நினைத்தவள் சுத்தமாய் ஏமாந்து போனாள். முதல் இரண்டு நாள் அவனிடமிருந்து ஏழெட்டு முறை போன் வந்தது. தான் இல்லை என்ற தகவலைச் சொல்லி அவனோடு பேசுவதை வேண்டுமென்றே தவிர்த்தாள் அவள். போனில் பேசவில்லை என்றதும் நேரிலேயே வந்து அவளை மடக்குவான் என்று நினைத்தவளுக்கு மறுநாள் ஏமாற்றம்தான் காத்திருந்தது. ஆகாஷ் என்ன ஆனான் என்றே தெரியவில்லை. போனும் வரவில்லை. ஆளும் வரவில்லை. இரண்டு மூன்று நாள் வீராப்பாக இருந்தவளுக்கு அதன் பிறகு மெல்ல மெல்ல வீராப்பு குறைந்து அந்த இடத்தில் ஆதங்கமும் வெறுமையும் படர்ந்தது. இன்றோடு பத்து நாளாகிறது. இவளை விட வைராக்கியமாய் இருக்கிறான் அவன். இப்படியே போனால் அவளை மறந்தே போனாலும் கூட ஆச்சர்யப்படுவதற்கில்லை. இதற்கு மேல் அவனிடம்

பேசாமல் இருக்க முடியாது என்று தோன்றிய அதே நேரம் நாமாகப் போய் முதலில் எப்படி பேசுவது என்ற தயக்கமும் ஏற்பட்டது. பார்த்தாயா நீ தோற்றுவிட்டாய் நான் ஜெயித்து விட்டேன் என்பது போல் அவன் இளக்காரமாய்ப் பார்த்தால்...? பார்ப்போம் இன்னும் நாலு நாள் பார்ப்போம். அவன் மனசில் மட்டும் ஆசை இருக்காதா என்ன? அவன் காதல் உண்மையானால் அவனே இந்த மௌனத்தை உடைப்பான்.''

''பேசலாம் என்று ஒரு பக்கம் தோன்றிய சிறிய சபலத்தை உள்ளுக்குள் இருந்த ஈகோ என்னும் பைசாசம் அடக்கி விட்டது.''

''மேலும் நாலு நாட்கள் சாதாரணமாகவே கடந்தது. போகி, பொங்கல் என்று ஒவ்வொரு பண்டிகையாய் வந்து சென்றது. கல்லூரி விடுமுறை, ஊருக்குச் செல்லவும் பிடிக்கவில்லை. ஆகாஷோடும் பேச இயலவில்லை என்ற நிலையில் என்னடா வாழ்க்கை இது என்ற அலுப்பும் வெறுப்பும் ஏற்பட்டது. அதற்குமேல் பொறுக்க முடியாதவள் திருவள்ளுவர் தினத்தன்று அவனோடு பேசி விடுவது என்று முடிவு செய்தாள். தன் வைராக்கியத்தை தானே உடைப்பது என்பது ஒரு மாதிரி இருந்தாலும் வேறு வழியில்லை.''

தலைப்பொங்கல் என்பதால் சத்யாவும் அவள் புருஷனும் வந்திருந்தார்கள். பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் புதுத் துணியும் பொங்கல் சீரும் செய்தார் கோபாலன். மாப்பிள்ளையை விழுந்து விழுந்து கவனித்தார்.''

''சத்யாவும் சரண்யாவும் முற்றத்தில் பொங்கலிட்டு சூரியனுக்கு படைத்து கும்பிட்டார்கள்.''

''வேலைக்கு போயிட்ருக்கயா சத்யா.. வேலை பழகிடுச்சா?''

''சாப்பிடும்போது அக்காவிடம் கேட்டார் அப்பா. மாப்பிள்ளை சிரித்தான்.''

''என்ன சிரிக்கிறிங்க?''

''புருஷனால வந்த தொந்தரவு புள்ளையால போய்டுச்சு. அப்டித்தானே?'' மனைவியைப் பார்த்து சிரித்தான்.

''என்ன சொல்றிங்க?''

''உங்கக்கா ஒண்ணும் சொல்லலையா?''

''ஒண்ணும் சொல்லலையே என்ன விஷயம்?''

''இப்ப பாருங்க இன்னும் ரெண்டு நிமிஷத்துல சொல்லாமயே தெரிஞ்சுடும்'' அவன் விஷமமாய்ச் சிரித்தபடி சாப்பிட்டான். ரெண்டு வாய் சர்க்கரைப் பொங்கல் சாப்பிட்ட அக்கா மூன்றாவது வாய்க்கு குமட்டிக் கொண்டு வர எழுந்து ஓடினாள்.''

''இதானா விஷயம்? சரண்யா சிரிப்போடு மாமாவைப் பார்த்து விட்டு அவள் பின்னால் ஓடினாள்.''

''இந்த நேரத்துல எங்கேர்ந்து வேலைக்கு அனுப்ப?'' மாப்பிள்ளை மாமாவிடம் சொல்ல அவர் சந்தோஷம் பரவிய முகத்தோடு ஆமோதித்தார்.

''கங்கிராட்ஸ்! சரண்யா திரும்பி வந்து சத்யா புருஷனின் கையைப் பிடித்து குலுக்கினாள்.''

''இந்த சந்தோஷத்தைக் கொண்டாடனுமே! என்ன செய்யலாம்?''

''சினிமாக்கு போலாமா?''

''கரெக்ட் சிக்ஸ்த் சென்ஸ்ன்னு ஒரு பஸ்ட் கிளாஸ் மூவி வந்திருக்கு போலாமா?''

''இங்கிலீஷ் படமா ஒரு எழவும் எனக்கு புரியாது. எத்தனை தமிழ்ப் படம் ரிலிசாயிருக்கு. அதுல ஏதாவது போலாம்'' சத்யா பின் பக்கமிருந்து சொல்லிக் கொண்டே வந்தாள்.''

''நல்ல தமிழ்ப்படத்துக்கெல்லாம் இன்னிக்கு டிக்கெட் கிடையாது சத்யா. டப்பா படத்துக்கு போறதை விட பேசாம வீட்லயே இருந்து டி.வி.ல படம் பார்க்கலாம்.''

''அவ சொல்றதும் சரிதான். இங்கிலீஷ் படம்தான் பாரேன். பார்க்காமயே புரியாது புரியாதுன்னா எப்டி?''

''என்னமோ செய்ங்க..'' சத்யா அரை மனதோடு சம்மதம் சொன்னாள்.

''அப்பா வரவில்லை என்று சொல்லிவிட்டதால் மூன்று பேரும் மட்டும் கிளம்பினார்கள்.''

''பொங்கல் டைம் என்றதால் எல்லா தியேட்டரிலுமே கும்பலாக இருந்தது. தமிழ் படத்துக்கு டிக்கெட் கிடைக்காதவர்கள் ஏதோ படம் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஆங்கிலப் படத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தார்கள்.''

''சத்யாவின் புருஷன் இருவரையும் நிற்க வைத்துவிட்டு எங்கோ சென்றான். பிளாக்கில் டிக்கெட் கிடைக்கிறதா என்று பார்த்தான்.''

''ஹலோ... எக்ஸ்கியூஸ்மி.. பின்னால் குரல் கேட்க சரண்யா திரும்பினாள்.''

''மூணு டிக்கெட் இருக்கு வேணுமா? நவநாகரீக உடையணிந்திருந்த இளம் பெண் ஒருத்தி கேட்க சரண்யா சட்டென்று அதை வாங்கிக் கொண்டாள். ''சத்யா நீ போய் மாமாவைக் கூட்டிட்டு வந்துடு'' அக்காவிடம் சொல்லியபடி ஹேண்ட்பேக் திறந்து டிக்கெட்டுக்கு பணம் எடுத்து அந்த பெண்ணிடம் கொடுத்து நன்றி சொன்னாள். பணத்தை

வாங்கிக் கொண்டு அலட்சியமாய் நடந்து சென்ற அந்த பெண் வேறு யாருமில்லை. சுஜிதாவேதான். தோழிகளோடு சினிமாவுக்கு வந்தவள் சற்று தூரத்தில் தன் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த ஆகாஷைப் பார்த்ததும் வியப்படைந்தாள். அவனும் அந்த படத்திற்கு வருவான் என்று அவள் நினைக்கவில்லை. அதே நேரம் பதினைந்து நாளாக தன்னை சுத்தமாக மறந்தது மில்லாமல் தன்னை விட்டு விட்டு அவன் பாட்டுக்கு சினிமா பார்க்க வந்திருப்பது அவள் மனதை உறுத்தியது. ஒருவேளை அவள் வந்திருப்பது தெரிந்துதான் அவனும் வந்திருக்கிறானோ என்ற சந்தேகமும் எழும்பியது. தான் அவனைப் பார்க்காதது போல் அவன் பார்வையில் படுமாறு, அவன் பார்க்க வேண்டுமே என்ற படபடப்போடு ஒரு இடத்தில் நின்றாள். பத்து நிமிடத்திற்குப் பிறகும் யாரும் அருகில் வராமல் போக மெல்ல திரும்பினவள் எரிச்சலடைந்தாள். அவளைக் கடந்து அவன் நடந்து கொண்டிருந்தான். ஏற்கனவே ரிஸர்வ் செய்துவிட்டு வந்திருப்பான் போலும். சுஜிதா பல்லைக் கடித்தபடி வேகமாய் நடந்து சென்று அவனுக்கு முன்னால் சென்று நின்று முறைத்துப் பார்த்தாள்.''

''ஹலோ... சௌக்கியமா?'' அவன் புன்சிரிப்போடு கேட்டான்.

''நா வரது தெரிஞ்சுதானே வந்திங்க?''

''யார் சொன்னா அப்டி?' எனக்கு ஜோசியமெல்லாம் தெரியாது தாயே. நா சாதாரணமாதான் படம் பார்க்க வந்தேன். எனி ஹவ் உன்னைப் பார்த்ததுல ரொம்ப சந்தோஷம்.''

''எனக்கு சந்தோஷமில்ல. என்னைப் பார்க்காம எங்கிட்ட பேசாம நீங்க ஜாலியாதானே இருக்கீங்க?''

''சரி விடு. ரெண்டு பேரும் பழம் விட்ருவோம். ஒண்ணா உக்காந்து படம் பார்ப்போம் என்ன சொல்ற?''

''நோ...! வரல. நீங்க தனியாவே என்ஜாய் பண்ணுங்க. நா போறேன்.''

''ஏய்.. சுஜி... நில்லு...''

''அவன் கூப்பிடுவதை காதில் வாங்கிக் கொள்ளாமல் அவள் விறுவிறுவென்று நடந்தாள். டிக்கெட் கிடைக்காமல் நாலா பக்கமும் பார்த்தபடி நின்றிருந்த சத்யா, சரண்யாவை நெருங்கி டிக்கெட்டை விற்று விட்டு, அவன் பக்கம் கூடப் பார்க்காமல் சென்று மறைந்தாள்.''

''டிக்கெட் கிடைத்த சந்தோஷத்தில் மூவரும் தியேட்டருக்குள் நுழைந்தார்கள்.''

''படம் ஆரம்பித்து ஒரு மணி நேரத்திற்குள் இரண்டு மூன்று முறை எழுந்து சென்று வாந்தி எடுத்துவிட்டு வந்துவிட்டாள் சத்யா. உட்காரவும் முடியவில்லை. படமும் புரியவில்லை, என்ற நிலையில் சிரமமாகி விட்டது அவளுக்கு.''

''ஏங்க என்னால முடியல. போயிரலாமா?''

''பாதி படத்துல எப்டி?''

''குமட்டிட்டே இருக்கே. எல்லாரும் திரும்பித் திரும்பி பார்க்கறாங்க பாருங்க.''

''என்னக்கா?''

''என்னால முடியல. போய்டலாமா?''

''படம் நல்லார்க்கே. கொஞ்சம் கண்ட்ரோல் பண்ணிக்க முடியாதா? புளிப்பு மிட்டாய் வேணா வாங்கிட்டு வரச் சொல்லவா?''

''வேணாம். தலையெல்லாம் கனக்குது.''

''ஒண்ணு செய் சரண்யா. நீ இருந்து படத்தை பார்த்துட்டு வா. நா இவளைக் கூட்டிட்டு போறேன்.''

''என்ன பேசறிங்க. அவ தனியா வருவாளா?''

''எனக்கொண்ணும் பயமில்ல சத்யா நீ கிளம்பு.''

''அப்பா திட்டுவார் தனியா விட்டுட்டு வந்துட்டயான்னு.''

''மாட்டார். நீங்க கிளம்புங்க.'' சரண்யா இருவரையும் அனுப்பி விட்டு படத்தில் கவனம் செலுத்தினாள். இருட்டில் இருவரும் நடக்க நிறைய பேர் உச்சுக் கொட்டி அதிருப்தியைத் தெரிவித்தார்கள். வரிசைக் கோடியில் ஆகாஷைப் பார்த்ததும் அடையாளம் புரிந்து கொண்டு சத்யா ஒரு வினாடி தயங்கி நின்றாள்.''

''ஆகாஷ் தானே. சம்பத் மாமா பிள்ளை?'' கேட்டு விட்டாள்.

''ஆமா...''

''நா சத்யா. கோபாலன் பொண்ணு.''

''ஓ...கல்யாணத்துல பார்த்தது.சௌக்யமா?'' ஆகாஷ் எழுந்து மரியாதை நிமித்தம் அவள் கணவனின் கை பற்றி குலுக்கினான்.

''படம் பார்க்கலையா? போறிங்க?''

''இல்ல கொஞ்சம் உடம்பு முடியல. ஒரு ஹெல்ப் பண்ண முடியுமா ஆகாஷ்?''

''என்ன?''

''சரண்யாவை தனியா விட்டுட்டு போறோம். முடிஞ்சா அவளை பஸ் ஏத்தி விட்டுட்டு போறிங்களா போகும்போது?''

''டிராப் பண்ணிட்டே போறேன். கவலைப்படாம கிளம்புங்க.''

''ஆகாஷ் அவர்களை அனுப்பி விட்டு உள்ளே வந்தான். இருட்டில் சரண்யாவைத் தேடினான். காலியாயிருந்த இரண்டு சீட்டுக்கு அடுத்து அமர்ந்திருந்தவளைப் பார்த்துவிட்டு அவள் அருகில் சென்றான்.''

''அருகில் யாரோ அமர்வதைப் பார்த்ததும் யாரென்று திரும்பியவளுக்கு ஆகாஷைப் பார்த்ததும் வியப்பில் மூச்சே அடைத்து விடும் போலிருந்தது.''

''நீங்களா...?''

''ஏன்.. இது நா பார்க்கக் கூடாத படமா?''

''அதில்ல.. என்னை எப்டி...?''

''சத்யாவைப் பார்த்தேன். உன்னை பத்திரமா வீட்ல சேர்க்கணும்னு உத்தரவு.''

''உடம்பெல்லாம் புளகாங்கிதத்தில் என்னமோ செய்தது. இப்படி ஒரு இனிய அதிர்ச்சியை அவள் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராமல் கிடைத்திருக்கும் இன்பத்தில் மனம் திக்குமுக்காடியது. இந்த மணித்துளிகள் நகராமல் அப்படியே நிலைத்து விடாதா என்றிருந்தது.''

நல்ல மனிதனுடைய வாழ்க்கையில் சிறந்த பகுதி எதுவென்றால் அல்லற்போது அவன் அன்புடன் சிறுசிறு செயல்களைச் செய்வதுதான். அவை அற்பமானவையாயிருந்தாலும், அவற்றால் பலனடைகிறவர்களின் நெஞ்சில் நிலைத்து விடுகிறது.

-வேட்ல் வொர்த்

''இடைவேளையின்போது அவளை வெளியில் அழைத்துச் சென்று கோக் வாங்கிக் கொடுத்தான். அவன் வாங்கித் தந்து, குடிப்பது பெருமையாக இருந்தது. தான் அவனுடைய பாதுகாப்பில் இருக்கிறோம். தன்னை பத்திரமாக வீட்டில்

விட்டுச் செல்லும் பொறுப்பை அவன் ஏற்றுக் கொண்டிருக்கிறான் என்பது அதைவிட பெருமையாக இருந்தது.

இடைவேளைக்குப் பிறகு படத்தில் ஆழ்ந்து போனார்கள். படத்தின் பிரம்மிக்கத்தக்க திரைக்கதையும், புருஸ் வில்லிஸின் பக்குவப்பட்ட நடிப்பும், ஆழமான காட்சிகளும் புருவத்தை உயர்த்தின. இதை இயக்கிய இளைஞன் இந்தியாவைச் சேர்ந்தவன் என்ற உணர்வு பெருமையளித்தது. படம் முடிந்து வரும்போது மனசு கனத்திருந்தது.''

''எப்டியிருந்துது படம்?'' கார்க்கதவைத் திறந்தபடி கேட்டான் ஆகாஷ்.

''எக்ஸலண்ட். என்ன சொல்றதுன்னு தெரியல. பிரம்மிப்பார்க்கு.''

அவன் டிரைவர் சீட்டில் அமர்ந்து முன்பக்க கதவை அவளுக்காக திறந்து விட்டு ஏறச் சொன்னான். ஒருவித கர்வம் துளிர்க்க ஏறி அவனருகில் அமர்ந்தாள்.

''பஸ்ட்கிளாஸா ஒரு காபி சாப்ட்டுட்டு போலாமா சரண்யா.''

''தாராளமா''

''அவன் டிரைவ் இன்னில் காரை நுழைத்து நிறுத்தி காப்பிக்கு சொன்னான்.''

''அப்புறம் ஏன் வீட்டுப் பக்கமே வரல?''

''வரக்கூடாதுன்னெல்லாம் இல்ல. டைம் கிடைக்கல.''

''அதெல்லாம் இல்ல. பயம்தானே?''

''எனக்கென்ன பயம்?''

''ஆலு சப்பாத்தியை நினைச்சு! அதுவே ஜென்மத்துக்கும் போதும்னு ஆய்டுத்து இல்ல?''

''ம்... அப்படியும் வெச்சுக்கலாம்'' அவன் சிரிக்க அவள் பொய்யாய் கோபித்துக் கொண்டாள்.

''அவள் மனசைக் கஷ்டப்படுத்த வேண்டாமே என்று மற்றவர்கள் தப்பாக எடுத்துக் கொண்ட விஷயத்தை அவளிடம் சொல்லவில்லை அவன்.''

''அட்லீஸ்ட் புது வருஷத்தன்னிக்காவது வந்து வாழ்த்து சொல்லுவீங்கன்னு நினைச்சேன்.''

''வரணும்தான் நினைச்சேன். ஆனா ஒரே வேலை. சாரி தப்பா எடுத்துக்க வேண்டாம் என்ன?''

''இல்ல.. இல்ல. ஆனா நீங்க மறந்தாலும் நாங்க மறக்கல. உங்களுக்கு விஷ் பண்ணினோம்.''

''அப்டியா.. எப்பொ..?''

''ராத்திரி பன்னண்டு மணிக்கு. நியூ இயர் பொறந்ததுமே..''

''யார்ட்ட பேசின?''

''நா பேசல.. அப்பாதான் பேசினார். உங்கம்மாதான் எடுத்தாங்க போனை. நீங்கள்ளாம் தூங்கறதா சொன்னாங்க. சரி புத்தாண்டு வாழ்த்துக்களை எல்லார்க்கும் சொல்லிடுங்கன்னு அவங்ககிட்டயே சொல்லி வெச்சுட்டோம்.''

''ஓ...!''

''அம்மா சொல்லலையா?''

''ம்? அப்பாட்ட சொல்லியிருப்பா. எங்கிட்ட சொல்ல மறந்துட்டாளோ என்னமோ? பரவால்ல அதைப் பத்தி என்ன? இப்ப சொல்லேன். நீ எனக்கு சொல்லு. நா உனக்கு சொல்றேன்.''

''ஹேப்பி நியூ இயர்?''

''விஷ் யூ எ வெரி வெரி ஹாப்பி அண்ட் புராஸ்பரஸ் நியூ இயர்'' அவன் அவள் கைப்பற்றி குலுக்கியவாறு சொல்ல, தனக்குள் ஒருவித சிலிர்ப்பு காலோடு தலை பரவுவதை உணர்ந்தாள் அவள்.''

''போலாமா?'' அவன் பில் பணத்தை வைத்துவிட்டு காரைக் கிளப்பினான்.

அவளை தெருமுனையில் இறக்கிவிட்டு விட்டு வீட்டுக்கு வந்தான்.

இரவு ஒன்பது மணிக்கு சங்கிதா வந்து சாப்பிட அழைக்கும்போது அவன் அலுப்பாகப் படுத்திருந்தான். வேண்டுமென்றே டிக்கெட்டை யாருக்கோ விற்று விட்டுப் போன சுஜிதாவை நினைத்துக் கொண்டிருந்தான் அவன். அவள் அப்படி செய்தது மனதில் மெல்லிய வேதனையை ஏற்படுத்தியிருந்தது.ஏன் இப்படி இருக்கிறாள் என்ற கேள்வி எழும்பியது. பணத்திலேயே பிறந்து புரண்டு வளர்ந்ததால் இந்த திமிரோ? இப்போது பரவாயில்லை. எப்படி யிருந்தாலும் ரசிக்கலாம். இதே ஈகோவும் திமிரும் திருமணத்திற்குப் பிறகும் இருந்தால் அது சரியாகுமா? அவன் கவலைப்பட்டான்.''

''அண்ணா''

''கண்களைத் திறந்தான்.

''சாப்ட வரயா?''

''ம். நீ போ வரேன்.''

''எங்க போயிருந்த நீ?''

''படத்துக்கு. சிக்ஸ்த் சென்ஸ்.''

''ஓ! அதான் இவ்ளோ சைலன்ட்டா படுத்துட்டயா? இன்னும் ஒரு வாரத்துக்கு அசை போடுவ பார்.''

சங்கீதா கீழே போய்விட்டாள். சற்று நேரம் கழித்து ஆகாஷ் கீழே வந்தான்.

''ஏம்மா நியூ இயர் அன்னிக்கு யாராவது போன்ல விஷ் பண்ணினாங்களா?'' கேஷிவலாக அம்மாவிடம் கேட்டான்.

''யாரு பண்ணினா. ஞாபகம் இல்லையே?''

''நா சொல்லவா? கோபாலன் மாமா பண்ணியிருக்கார். புது வருஷ வாழ்த்து சொல்லியிருக்கார். நாங்கள்ளாம் முழிச்சுட்டு தானே இருந்தோம். தூங்கறோம்னு சொல்லி ஏம்மா போனை வெச்ச?''

''குற்றம் சாட்டுவது போல் அவன் கேட்க அம்மா புருவம் சுருங்க அவனைப் பார்த்தாள்.

''ஆமா கோபாலன் பண்ணினார். அதைச் சொல்லாதது அவ்ளோ பெரிய குத்தமா? இதுவரை எத்தனை புது வருஷம் வந்து போயிருக்கு! இவ்ளோ நாள் இல்லாம இப்பொ என்ன போன் பண்ணி வாழ்த்து சொல்ற புதுப் பழக்கம்?''

''இவ்ளோ நாள் இல்லாம இருந்திருக்கலாம். அதுக்காக அவமானப்படுத்தணுமா?''

''யார்ரா அவமானப்படுத்தினா? யார் சொன்னா உங்கிட்ட? அவர் பண்ணின விஷயம் உனக்கெப்டி தெரியம்? அவரே சொல்லியிருந்தாலொழிய தெரிய சான்ஸ் இல்லையே.''

''ஆமா அவர்தான் சொன்னார். அதா இப்பொ முக்கியம்? இதே ஒரு பெரிய வி.ஐ.பி. யாராவது பண்ணியிருந்தா உடனே எங்களைக் கூப்ட்ருப்பயா மாட்டயா?''

''இவரென்ன வி.ஐ.பி.யா கூப்ட? அதான் சொல்லல போறுமா?''

''தப்பும்மா வாழ்த்து சொல்ல வி.ஐ.பி.யாதான் இருக்கணும்னு அவசியமில்ல. மனுஷனார்ந்தா போதும். அந்தஸ்து பார்த்துதான் பழகணும்ங்கற உன் சித்தாந்தத்தை

உடைப்புல போடு. நாளைக்கே நாம செத்தா தூக்கறதுக்கு எந்த அந்தஸ்துள்ள மனுஷனும் வரமாட்டான். ஒரு மலர்வளையம் வெச்சுட்டு போய்டுவான். சாதாரணப் பட்ட நாலு கூலிக்காரன் வந்து தூக்கணும்.''

''நா சீக்கிரமே செத்துடணும் அப்டித்தானே?'' அம்மா முகம் சிவக்க ரௌத்ரத்தோடு கேட்டாள்.

''புரிஞ்சுக்காம கத்தாதம்மா.''

''புரிஞ்சுதாண்டா பேசறேன். ஆனா ஒன்றுதான் புரியல. அப்பாவுக்கும் பிள்ளைக்கும் அந்த குடும்பத்து மேல அப்டி என்ன கரிசனம்னுதான் புரியல.''

''அந்த குடும்பத்து மேல உனக்கு ஏன் இவ்ளோ வெறுப்புன்னு எங்களுக்கும் தான் புரியல. அவங்க அப்பா பக்கத்து உறவுங்கறதாலயா? இல்ல நமக்கு சமமா பணக்காரங்க இல்லன்றதாலயா?''

''ரெண்டும்தான் காரணம். இதுக்கு மேல எனக்கு யாரும் உபதேசம் பண்ணத் தேவையில்ல.''

''ஆகாஷ் மேற்கொண்டு ஏதோ சொல்ல வாயெடுத்தபோது, அப்பா சட்டென்று இடது கையால் அவன் தோளை அழுத்தி பேச வேண்டாம் என்று அடக்கினார்.''

இரவு அவன் அறைக்கு வந்தார். ''யார் சொன்னா ஆகாஷ் போன் பண்ணினதா உங்கிட்ட? கோபாலன் தானா?''

''உண்மையைச் சொல்லணும்னா கோபாலன் இல்லப்பா, சரண்யாதான்''

''அவர் வியப்போடு அவனைப் பார்த்தார்.''

''அவளை எப்பொ பார்த்த நீ?''

''தியேட்டர்ல பார்த்தேன். குடும்பத்தோட வந்திருந்தா'' ஆகாஷ் தியேட்டரில் நடந்ததையும் சரண்யாவை தான் டிராப் பண்ணி விட்டு வந்ததையும் அப்பாவிடம் மறைக்காமல் சொன்னான்.''

சரண்யான்னு சொன்னா அம்மா அனாவசியமா சந்தேகப்படுவா. என்னால அந்த பொண்ணை ஏன் சந்தேகப்படணும்னுதான் சொல்லலை.''

''உங்கம்மா குணம் உனக்குத் தெரியாதாடா ஆகாஷ். அப்பறம் ஏன் அவகிட்ட வீணா வாங்கிக் கட்டிக்கற? நீ என்ன சொன்னாலும் அவ சுபாவம் மாறப்போவதில்ல. புரிஞ்சுக்காதவங்கிட்ட பேசறது வீண் வேலை. டைம்தான் வேஸ்ட்.''

''டைம் வேஸ்ட்டுன்னு பார்த்தா இந்த சுபாவத்தால வாழ்க்கைல நிறைய வேஸ்ட் ஏற்படும்ப்பா.''

''ஏற்படட்டுமே! கஷ்டமோ நஷ்டமோ அனுபவிச்சு தெரிஞ்சுக்கட்டும்! சொன்னா புரிஞ்சுக்காதவங்க பட்டுதான் புரிஞ்சுக்கணும் விட்ரு.''

''அப்பா எழுந்தார். சிந்தனையோடு தன்அறைக்கு வந்தார். கோபாலனை நினைத்தால் பாவமாயிருந்தது. வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லி விட்டாரே தவிர எப்படி போவது, அவர்களிடம் ஆகாஷ் சரண்யாவை விரும்பவில்லை என்பதை எப்படி சொல்வது என்று புரியாமல் அங்கு செல்லவே தயக்கமாக இருந்தது. அந்த பெண்ணின் ஏமாற்றத்தைப் பார்க்கும் சக்தி அவருக்கில்லை. சும்மா இருந்தவள் மனதில் ஆசைத்தீயை கிளப்பிவிட்டவர் அவர்தான். இப்போது அவரே அதை அணைக்கவும் வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவு நாள்தான் சொல்லாமலிருப்பது? இதோ இன்று சினிமா தியேட்டரில் ஏதேச்சையாக சந்தித்து அவளை வீட்டில்

விட்டு விட்டு வந்திருக்கிறான். இதையும் அவள் காதலின் ஒரு சம்பவமாகவே நினைத்து நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளக்கூடும். இந்த நம்பிக்கை இறுகுவதற்குள் அவளிடம் உண்மையைக் கூறாவிட்டால் பின்னால் அது பெரிய பிரச்சனையில் கொண்டு விட்டு விடும். இப்படி நினைத்தவர், அடுத்த நாளே கோபாலனின் வீட்டிற்குச் செல்ல தீர்மானித்தார்.

''திடுதிப்பென்று வந்து நின்ற சம்பத்தைப் பார்த்ததும் முகம் மலர வரவேற்றாள் சரண்யா.''

''ஆச்சர்யமார்க்கு!''

''ஏன்?''

''எங்க வீடு மறந்து போச்சோன்னு நினைச்சேன்.''

''எப்டி மறக்க முடியும்? வராட்டா மறந்துட்டேன்னா அர்த்தம்.''

''என்ன சாப்பிடறீங்க?''

''அப்பா இல்லையா?''

''மதுரைல ஷூட்டிங்னு போயிருக்கார்.''

''ஷூட்டிங்கா?''

''ம்!அப்பா சினிமால சின்ன சின்ன ரோல்ல எல்லாம் நடிக்கறார் தெரியுமில்ல?''

''திடீர்னு என்ன நடிப்பாசை அவனுக்கு?''

''எனக்காகத்தான். அக்கா கல்யாணத்துக்கு வாங்கின கடன் கொஞ்சம் இருக்கு. அதுபோக, என் கல்யாணத்துக்கும் பணம் சேர்க்கறாராம். நீங்க ஒண்ணும் கேக்காட்டாலும் ஒரளவு கௌரவமா செய்யணுமாம்.''

சரண்யா சொல்ல சம்பத்தின் முகம் சங்கடத்தில் இறுகியது. பெருமூச்சொன்று வெளிப்பட்டது அவரிட மிருந்து.

''சரண்யா உள்ளே போய் அவருக்கு காபி கொண்டு வந்தாள்.

''கல்யாணம்ங்கறது தெய்வம் போடற முடிச்சுன்னு எல்லாரும் சொல்றதுல உனக்கு நம்பிக்கையிருக்கா சரண்யா?''

''திடீர்னு என்ன..?''

''பதில் சொல்லேன்.''

''நிச்சயமா நம்பிக்கையிருக்கு. எல்லாத்துக்கும் மேல ஒரு சக்தி இருக்குங்கறதை நா நம்பறேன். எதுக்காக கேட்டீங்க?''

''இல்ல நாம நினைக்கறோம். தெய்வம் ஒருவேளை முடிச்சை மாத்தியும் போட்ருக்கலாம். அல்லது நாம நினைச்சபடியே கூட முடிச்சு போட்டு வெச்சிருக்கலாம். ஸோ.. எது நடந்தாலும் ஏத்துக்கற பக்குவத்துக்கு நம்ம மனசை பழக்கப் படுத்திக்கறது நல்லதுதானே?''

சரண்யா அவரை ஒரு வினாடி உற்றுப் பார்த்தாள். இந்த வேதாந்தத்திற்குப் பின்னால் ஏதோ ஒரு நிஜம் மறைந்திருப்பதாக தோன்றியது அவளுக்கு. ஒருவேளை அந்த நிஜம்தான் மாமாவை தர்மசங்கடத்தில் ஆழ்த்தி இந்த வீட்டுப் பக்கம் வரமுடியாமல் செய்திருக்க வேண்டும். அது என்ன என்பது புரியவில்லை. புரிந்து கொள்ளவும் அவள் விரும்பவில்லை. உனக்கும் ஆகாஷுக்கும் ஒருவேளை திருமணம் நடக்கலாம். நடக்காமலும் போகலாம். எதுவாயிருப்பினும் ஏற்றுக் கொள்ள நீ தயாராக இருக்க வேண்டும் என்று மறைமுகமாய் அவர் சொல்கிறார் என்றால் ஒருவேளை இதற்கு தடங்கலாய் இருப்பது மாமியின் குணமா, அல்லது ஆகாஷுக்கே அவள் மீது காதல் இல்லையா? ஆனால் ஆகாஷ் பழகுவதைப் பார்த்தால் அப்படி தெரியவில்லையே அவளிடம் அன்பிருப்பதாகத் தானே தோன்றுகிறது. பின் என்னவாகத்தான் இருக்க முடியும்? மாமிதான் இதற்கு காரணமா? அப்படித்தான் இருக்க வேண்டும்.

சரண்யா மாமாவைப் பார்த்தாள். ''தெய்வத்தின் தீர்மானப்படிதான். எல்லாம் நடக்கிறது என்றால் நாம எல்லாருமே மனுஷா தானே மாமா? யாராலயுமே எதையும் தடுத்துடவோ மாத்திடவோ முடியா தில்லையா? எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. நீங்க கவலைப்பட வேண்டாம். எதுவாயிருந்தாலும் நேருக்கு நேர் சந்திச்சு ஏத்துக்க நா தயாராவே இருக்கேன்.''

மாமா பரிவோடு அவள் தலையைத் தடவினார்.

''நீ என்ன புரிஞ்சுக்கிட்டயோ எனக்கு தெரியாது சரண்யா. ஆனா நீதான் என் வீட்டுக்கு மருமகளாகணும்ங்கறதுதான் என் பிரார்த்தனையாயிருக்கும். பார்ப்போம் அதுக்கு மேல தெய்வ சித்தம்.''

சம்பத் எழுந்தார். ''அப்பொ நா வரேன். அப்பா வந்தா சொல்லு. அதுசரி தனியா இருப்பயா நீ? எவ்ளோ நாள் ஷூட்டிங்?''

''பக்கத்து வீட்டம்மா வந்து துணைக்கு படுத்துக்கறாங்க. ஒண்ணும் பயமில்ல.''

''சம்பத் புறப்பட்டார்.''

''இரவு முழுக்க அவர் பேசி விட்டுச் சென்ற வார்த்தைகளே உள்ளுக்குள் சுற்றி சுற்றி வந்தன.''

''மறுநாள் பிரிட்டிஷ் கவுன்சிலில் சில புத்தகங்களை மாற்றிக் கொண்டு பஸ்ஸுக்காக காத்திருக்கும்போது முன்பொருமுறை ஆகாஷ் அந்த இடத்தில் சந்தித்து அவனோடு காரில் சென்றது நினைவுக்கு வந்தது. இப்போதும் கண்கள், அவன் தென்பட மாட்டானா என்று சுழன்றது.''

''சிக்னலுக்காக வரிசையாக கார்களும் வண்டிகளும் காத்திருக்க ஒரு காரில் ஆகாஷின் உருவமும் தெரிந்தது. அட என்று வியப்போடு பார்த்தவள் விழிகள் அவன் அருகில் அவன் தோளில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்த பெண்ணைக்

கண்டதும் சுருங்கியது. கருமேகம் படர்ந்தாற்போல் முகம் கறுத்தது.''

மனிதன் பார்த்து வியக்கும் நட்சத்திரம் காதல் ;

அதைப் பார்த்தபடி அவன் கடலிலும் பருகுமி திருமணம்.

-மென்கென்

''எதுக்காக என்னை அவசரமா கூப்ட்ட?'' கடற்கரை சாலையில் காரை நிறுத்திவிட்டு சுஜிதாவிடம் கேட்டான் ஆகாஷ்.

''சொல்றேன். சொல்லத்தானே கூப்ட்டேன். அதுக்கு முன்னால ஏதாவது சாப்டலாமே.''

''சுண்டல் வாங்கலாமா?''

''பரம்பரை புத்தி போகுதா பார்'' அவள் கிண்டலடிக்க அவன் முகம் ஒரு வினாடி சுருங்கியது.

''அந்த ரெஸ்ட்டாரண்ட்ல சமோசா சுண்டல் சாப்ட்படி சொல்றேன் வாங்க'' அவள் காரை விட்டிறங்கி நடந்தாள். காலியாயிருந்த ஒரு டேபிளில் அமர்ந்தார்கள்.

''அன்னிக்கு சினிமா தியேட்டர்ல கண்டுக்காம போனதுக்கு இன்னும் கூட உங்களை பழி வாங்கணும்னு தான் நினைச்சேன். அதுக்குள்ள வேற ஒரு பிரச்சனை வந்துதோ நீங்க பிழைச்சீங்களோ!''

''என்ன பிரச்சனை...?'' அவன் சமோசாவுக்கு சொல்லி விட்டுக் கேட்டான்.

''நம்ம காதல் மும்பை வரை நாற ஆரம்பிச்சுடுச்சு தெரியுமா?''

''ஆக நம்ம காதலை சாக்கடைன்னு சொல்லாம சொல்றயா?''

''ச்சீ.. அப்டியில்லப்பா..''

''பின்ன எப்டியோ?''

''போன மாசம் என் அங்கிள் ஒருத்தர் பிஸினஸ் விஷயமா இங்க வந்திருக்கார். அவர் ஏதேச்சையா நம்ம ரெண்டு பேரையும் சேர்த்தாப்பல எங்கயோ பார்த்திருக்கார். அப்பறம் ஹாஸ்டலுக்கு வந்திருக்கார். அப்பவும் நா இல்ல. உடனே கிளம்பி ஊருக்குப் போய் விஷயத்தை சந்தேகம்ங்கற பேர்ல அம்மாகிட்ட போட்டுக் கொடுத்துட்டார் போல்ருக்கு. அம்மா ரெண்டு நாள் முந்தி போன் போட்டு என்னைக் காய்ச்சி எடுத்துட்டாங்க.''

''உங்க வீட்ல எதிர்ப்பு இருக்கும்ங்கறது தெரிஞ்ச விஷயம்தானே.''

''ஆனா இவ்ளோ சீக்கிரம் விவகாரம் தெரிஞ்சு போய்டும்னு நா நினைக்கலை. எப்டியாவது சமாளிச்சுடலாம்னு நினைச்சேன். அதுக்குள்ள கதை மாறுது.''

''என்ன சொல்றாங்க அம்மா?''

''படிச்சு கிழிச்சது போறும். உடனடியா ஊர் வந்து சேருன்னு வழக்கமா எல்லாரும் சொல்றா மாதிரி சொல்றாங்க.''

''என்ன செய்யப் போறே?''

''முடியாதுன்னு அம்மாகிட்ட உறுதியா சொல்லிட்டேன்.''

''அதுக்கு அவங்க என்ன சொன்னாங்க?''

''நாங்க பணம் அனுப்பினா தானே அங்க இருப்ப? பணத்தை கட் பண்ணிட்டா என்ன செய்வேன்னு கேட்டாங்க.''

''ரொம்ப இக்கட்டான நிலைமையாச்சே'' ஆகாஷ் கவலையோடு பார்த்தான் அவளை.

''எங்கம்மா என்னை மாதிரி அஞ்சு மடங்கு பிடிவாதக்காரி ஆகாஷ். படிப்பு பாதில நிக்கறது பத்தி கூட நா கவலைப்படல. ரெண்டு நாள் முந்தி வந்த ஒரு செய்திதான் என்னைக் கலங்கடிக்குது.''

''என்ன செய்தி?''

''என்னைப் பிடிச்சு சம்சாரக் கடல்ல தள்ளிவிட அவசர அவசரமா ஏற்பாடுகள் நடந்துட்ருக்கு. அடுத்த வாரம் என்னைக் கூட்டிட்டு போக அம்மாவும் மாமாவும் இங்க வராங்க. நினைச்சாலே உடம்பெல்லாம் நடுங்குது. எனக்கு என்ன செய்யறதுன்னு புரியல. எப்டி இந்த பிரச்சனைலேர்ந்து தப்பிக்க போறேன்னுதெரியல. அதான் உங்களை உடனே வரச் சொன்னேன்.''

''என்ன செய்யலாம் சொல்லு.''

''என்ன ஆகாஷ் நா பதறிட்ருக்கேன். நீங்க இவ்ளோ கேஷூவலா கதை கேக்கறா மாதிரி கேக்கறீங்க.''

''காதல்னாலே பிரச்சனைகள் வரத்தானே செய்யும் சுஜி? பயந்தாலோ பதறினாலோ சரியாய்டுமா? யோசிப்போம். இதுலேர்ந்து மீண்டு வர வழி ஏதாவது யோசிப்போம்.''

''நீங்க யோசிச்சு சொல்றதுக்குள்ள அவங்க என்னை அள்ளிட்டுப் போய் எல்லா விஷயத்தையும் முடிச்சுடுவாங்க.''

''அவசரப்படாதே சுஜி. சட்டப்படி உன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது. அதுக்கு யாருக்கும் உரிமையில்ல. யோசிக்காம எந்த முடிவும் நாம இப்போ எடுக்க முடயாது. ரெண்டு நாள் எனக்கு டைம் கொடு. ஒரு நல்ல முடிவா எடுப்போம். நீயும் யோசி. உனக்கு தோன்ற வழி நல்ல வழியார்ந்தா நாம அதையே டிஸைட் பண்ணுவோம்.''

''ஊருக்குத் திரும்பிப் போற நிலைமை வந்தா உங்களை நா சும்மா விடமாட்டேன் ஆகாஷ்.''

ஆகாஷ் சிரித்தான். ''மிரட்டாதே எழுந்து வா.''

'அவளை ஹாஸ்டல் அருகில் இறக்கிவிட்டு விட்டு வீட்டுக்குவந்தான். அவளிடம் நிதானமாக இருப்பதுபோல் பேசி விட்டானே தவிர உள்ளூர அவனுக்கு கவலையாகத்தான் இருந்தது. காதலில் மட்டும் தோல்வி என்பது ஏற்படவே கூடாது. காதலென்பது அபூர்வமான உணர்வு. அது எல்லோருக்கும் ஏற்பட்டு விடுவதில்லை. காதல் தோன்றி காதலிக்கப்படுபவராலும் அது ஏற்கப்பட்டு, பின்னர் மற்றவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, திருமணம் என்ற சடங்கில் காதலில் ஒரு நிலை முடிந்து மற்றொரு நிலை, முன்பிருந்ததை விட ஆழமான, அமைதியான நிலை ஆரம்பிப்பதென்பது அற்புதமான தெய்வீகமானது. அப்படி ஒரு அற்புதமான நிலையைத்தான் காதலிக்கும் ஒவ்வொரு மனசும் எதிர்பார்க்கும். காத்திருக்கும். அது கிடைக்கவில்லையெனில் உயிரை மாய்த்துக் கொள்ளும் முடிவுக்கு கூட சில உள்ளங்கள் செல்லத் தயங்குவதில்லை. காதலின் சக்தி அப்படி ஆயினும் மரணத்தில் எல்லாம் ஆகாஷுக்கு நம்பிக்கையில்லை. காதல் ஜெயிப்பதற்காக, வாழ்வதற்காக என்பதில் அவனுக்கு நம்பிக்கையுண்டு. போராட வேண்டும். ஜெயிக்க வேண்டும். வாழ வேண்டும்.'

'ஆகாஷ் வாழ்வதற்காக என்ன செய்யலாம் என்று யோசித்தான். அம்மாவிடமும் அப்பாவிடம் சொல்லி கல்யாணம் செய்து கொள்ளலாம். ஆனால் அதிலும் ஒரு பிரச்சனை இருக்கிறது. அம்மா நிச்சயம் அதற்கு சம்மதிக்க மாட்டாள். அவள் இந்த காதலுக்கு பச்சைக்கொடி காட்டியிருப்பதே பெண் தங்களை விட பணக்காரி என்பதாலும், எனவே சீரும் சிறப்புமாக அவள் இந்த வீட்டுக்கு வந்தால் தன் மரியாதை பல மடங்கு உயர்ந்து விடும் என்பதாலும்தான். எனவே திருட்டுக் கல்யாணத்தையோ

பெண் தன் வீட்டைப் பகைத்துக் கொண்டு கட்டிய புடவையோடு வருவதையோ அவள் நிச்சயம் விரும்பவும் மாட்டாள். ஆதரிக்கவும் மாட்டாள். எனவே திருமணம் என்பது இப்போதைக்கு சரியான முடிவல்ல. பின் என்ன செய்யலாம்? அவன் தொடர்ந்து யோசித்தான். இரவு முழுக்க யோசித்ததில் விடியும் வேளையில் ஒரு வழி தேவலை என்று தோன்றியது.'

''எட்டு மணி வாக்கில் ஹாஸ்டலுக்குப் போன் பண்ணினான். சுஜிதா வெளியில் போய்விட்டதாகக் கூறினார்கள். ஏதாவது புராஜக்ட் ஒர்க்கிற்காகப் போயிருக்கக் கூடும்.''

''மாலை மூன்று மணி வாக்கில் மீண்டும் போன் செய்தான். அப்போதும் அவள் இன்னும் வரவில்லை என்ற தகவல்தான் கிடைத்தது. எங்கேதான் போய் விட்டாள் அப்படி? ஆகாஷ் கவலையோடு போனை வைத்தான். ஒருவேளை ஹரிலிருந்து யாராவது வந்து விட்டார்களா? ஹருக்கு வரச்சொல்லி அவளை மிரட்டுகிறார்களா. அல்லது அழைத்தே சென்று விட்டார்களா? ஒன்றும் புரியவில்லை! இரவு ஒன்பது மணிக்கு மறுபடியும் ஹாஸ்டலுக்கு போன் பண்ணினான்.''

''நல்ல காலம் ஒரு நிமிடம் இருங்கள் என்று சொல்லிவிட்டு போனார்கள். ஐந்து நிமிடத்தில் சுஜிதா லைனில் வந்தாள்.''

''எங்க போய்ட்ட சுஜி...?''

''போனை வெச்சுருங்க ஆகாஷ். நா அப்பறம் உங்ககிட்ட பேசறேன்.'' சுஜிதா கிசுகிசுப்பான குரலில் சொல்லிவிட்டு போனை வைக்க என்னாயிற்று ஏது ஆயிற்று என்று எதுவும் புரியாமல் குழப்பத்தோடு போனை வைத்தான் அவன். ஏதோ பிரச்சனை என்பது மட்டும் புரிந்தது. கவலையாக இருந்தது.. அவளிடமிருந்து எப்போது போன் வரும் என்று தவியாய்த் தவித்தான்.''

''மறுநாள் மாலைதான் அவன் செல்போன் அவள் குரலைச் சுமந்து வந்தது.''

''என்னாச்சு சுஜி?''

''அப்பாவும் அம்மாவும் வந்திருந்தாங்க ஆகாஷ். ஹோட்டல் ரூம்ல வெச்சு நேத்து ஒரு கோடீஸ்வரன் என்னை பொண்ணு பார்த்துட்டு போயிருக்கான். அடுத்த மாசம் கல்யாணம்ங்கறா மாதிரி பேசிட்ருந்தாங்க. நா எந்த எதிர்ப்பும் காட்டல. புலி பதுங்கறதுக்குப் பேர் பயமில்ல அது ஒரு தந்திரம். நாம ஒரு திட்டம் தீட்டிருக்கோம்ங்கற சந்தேகம் அவங்களுக்கு வரக் கூடாதுங்கறதுக்காக அவங்க வழிக்கே போறாப்பல நடிச்சேன். அவங்களும் நம்பி ஊருக்கு கிளம்பிப் போய்ட்டாங்க. இனிமேலும் நாம நிதானமார்ந்தா காரியம் கை மீறிடும். கல்யாண ஏற்பாடுகளை ஆரம்பிச்சு நின்னு போய் எங்கப்பா அம்மா அவமானப்படறதையோ தலை குனியறதையோ நா விரும்பல. அதுக்கு முன்னாடி நாம ஒரு முடிவுக்கு வந்து அது அவங்க காதுக்கு போகணும். முன்னாடியே தெரிஞ்சா ஏதாவது சொல்லி சமாளிச்சுப்பாங்க. அவமானம் மிஞ்சும். உங்களுக்கு ஏதாவது வழி தோணிச்சா...?''

''ஒரே ஒரு வழிதான் இருக்கு. இப்போதைக்கு அதைத் தவிர வேற வழி இல்ல.''

''சொல்லுங்க''

''நீ யார்கிட்டயும் எதுவும் சொல்லாம கிளம்பி எங்க வீட்டுக்கு வந்துடணும்.''

''மை காட்..! உங்க வீட்ல இதுக்கு ஒத்துப்பாங்களா?''

''நா அம்மாவை ஏதாவது சொல்லி கன்வின்ஸ் பண்ணிடறேன். ஆனா ஒரே ஒரு விஷயம். நீ வீட்டுக்கு பயந்துக்கிட்டுதான் இங்க வரங்கறது மட்டும் அவங்களுக்கு இப்போதைக்குத் தெரியக்கூடாது. உன் வீட்லேர்ந்து யாரும்

வந்து தகராறு பண்ணினாதான் பிரச்சனையாய்டும். அவங்களுக்கு நா யாரு, எங்க இருக்கேங்கற விவரம் ஏதாவது தெரியுமா?''

''இல்ல தெரியாது. என் பிரண்ட்ஸுக்கே நா இன்னும் விவரம் சொல்லலையே.''

''நல்லதாப் போச்சு. அப்பொ ஒண்ணு செய். ஞாயித்திக்கிழமை காலேல ஹாஸ்டல்ல ஏதாவது பொய் சொல்லிட்டு கிளம்பிடு. நா அதுக்குள்ள அம்மாகிட்ட ஏதாவது சொல்லி அவளை சமாளிக்கிறேன்.''

''தேங்க் யூ ஆகாஷ். நீங்க குடுக்கற தைரியம்தான் இப்பொ எனக்கு டானிக்.''

''சுஜிதா குரல் கம்ம சொல்லிவிட்டு போனை வைத்தாள்.''

''செல்லை கீழே வைத்த ஆகாஷ் அம்மாவை எப்படி சமாளிக்கலாம் என்று அடுத்த திட்டத்திற்கு யோசிக்க ஆரம்பித்தான்.''

''ஏண்டா சாதத்தை உருட்டிக்கிட்டே இருந்தா பசியடங்கிடுமா? என்ன யோசனை அப்டி?'' இரவு சாப்பிடும்போது அம்மா தோளைத் தட்டிக் கேட்க திடுக்கிட்டுத் திரும்பினான்.

''ஒண்ணுல்லயே...''

''ரொம்பத்தான் வழியாதண்ணா! அவளைத்தான் நினைச்சுட்ருக்கேம்மான்னு உண்மையைச் சொன்னா குறைஞ்சா போய்டுவ...?'' சங்கீதா கிண்டலடித்தாள்.

''ஏண்டா ஒரு நாள் அவளை வீட்டுக்கு கூட்டிட்டு வரலாம் இல்ல? அவ எப்டித்தான் இருக்கான்னு நாங்களும் பார்க்கறோமே'' அம்மா இன்னொரு கரண்டி குழம்பு ஊற்றியபடி சொன்னாள்.

''நாளைக்கு என்ன கிழமை?'' அவன் யோசனையோடு கேட்டான்.

''நாளைக்கா.. ஒரு வினாடி யோசித்த சங்கீதா.. நகைச்சுவைத் திங்கள்!'' என்றாள் ராகத்தோடு. ''நாளன்னிக்கு காதல் செவ்வாய்!'' என்றாள் தொடர்ந்து.

அப்பா பக்கென்று சிரிக்க, மற்றவர்களுக்கும் அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது. ஆகாஷ் தங்கையின் தலையில் செல்லமாகத் தட்டினான்.

''எதுக்கு என்ன கிழமைன்னு கேட்ட?''

''இல்ல... புதன் கிழமையன்னிக்கு அவளே இங்க வரதா சொன்னா. அதான் கேட்டேன்.''

''அப்பொ காவிய புதன்தான்னு சொல்லு''

''அப்பறம் இன்னொரு விஷயம்மா?''

''என்னடா...''

''அவளுக்கொரு பிரச்சனை...''

''என்ன?''

''ஹாஸ்டல் சாப்பாடு ஒத்தக்கலை. அடிக்கடி ஏதாவது உடம்புக்கு வரது. இது தெரிஞ்சதும் அவங்க வீட்ல கத்தறாங்க. படிச்சது போதும் அதை விட்டுத் தொலைச்சுட்டு ஊரோட வந்து சேரு. அந்த படிப்பை இங்க படி. உன்னை நாங்க பாத்துக்கறோம்ங்கறாங்களாம். ஆனா அவளுக்கு இதுல இஷ்டமில்ல. இன்னும் ரெண்டே வருஷம்தான். படிப்பு முடிஞ்சுடும். அதுவரை நம்ம வீட்லயே பேயிங்கெஸ்ட்டா தங்கிக்கலாமான்னு கேக்கறா. திடீர்னு அவ அப்டி கேட்டதும் எனக்கு ஒண்ணும் புரியல. நா உன்னைக் கேட்டுக்கிட்டு பதில் சொல்றேன்னு சொல்லிட்டேன். ஏம்மா கல்யாணத்துக்கு முந்தியே அவ இங்க வந்து இருந்தா அது நல்லார்க்குமா? வேணாம்மா நா அவகிட்ட எங்கம்மாக்கு இஷ்டமில்ல நீ வேற ஏதாவது இடம் பார்த்துக்கன்னு சொல்லிடறேன்.''

''இருடா... என்ன நீ! நீயே கேக்கற நீயே பதிலும் சொல்லிக்கற.. என்னாச்சு உனக்கு?''

''அவளுக்கு வயத்துவலின்னா இவருக்கு பேதியாகுதாம்! என்ன கேள்விம்மா இது. அவங்களுக்கு பிரச்சனைன்னா அய்யா மனசு துடிக்காம என்ன செய்யும்? இவர் வாழ்க்கையே இப்பொ உன் பதில்லதான் இருக்கு! சரியாண்ணா?''

''ஆகாஷ் சரிதான் என்பது போல மௌனம் சாதித்தான். அம்மா யோசித்தாள்.''

''கல்யாணத்துக்கு முன்னாலயே இங்க இருந்தா நாலு பேர் நாலு விதமா பேசத்தான் செய்வாங்க. ஆனா அதையெல்லாம் பார்த்தா முடியுமா...? என்ன இருந்தாலும் நம்ம வீட்டுக்கு பொண்ணாகப் போகிறவ. அவளுக்கொரு பிரச்சனைன்னா நாம சும்மார்க்க முடியுமா...?''

அம்மா பேசப் பேச ஆகாஷின் கண்கள் சந்தோஷத்தில் பளிச்சிட ஆரம்பித்தது.

''ஹாஸ்டலை காலி பண்ணிக்கிட்டு அவளை எப்பொ வேணா வரச்சொல்லு. ஆனா ஒரே ஒரு கண்டிஷன்!''

''என்ன...?''

''அவ இங்க இருக்கான்னு எப்பப்பாரு அவகிட்ட பேசிக்கிட்டு நின்ன... அவளை அனுப்பிடுவேன். சங்கீதா ஒருத்தி வீட்ல இருக்கான்ற ஞாபகம் இருக்கட்டும்!''

ஆகாஷ் மகிழ்ச்சியோடு அம்மாவைக் கட்டிக் கொண்டான். ''நல்ல அம்மா!'' என்றவாறு கொஞ்சினான்.

''டேய் டேய் விடுடா.. நா சொன்ன கண்டிஷனை மீறின...!''

''உம்மேல சத்தியமா மீற மாட்டேன் சரியா? அவளை எப்பொம்மா கூட்டிட்டு வரட்டும்? வியாழக்கிழமை?''

''ஓ... அதிரடி வியாழனா.. பேஷ் பேஷ்'' சங்கீதா அவனைக் கிண்டலடித்தபடி அப்பாவைத் திரும்பிப் பார்த்தாள். அவர் முகத்தில் சிரிப்பில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தது. இந்த ஏற்பாட்டை அவர் விரும்பவில்லை என்பதை அவர் முகம் சொல்லியது. இருந்தாலும் மௌனமாய் இருந்தார்.

நல்ல சிகரெட் குடிப்பது ஆணுக்கு ஆறுதல்.
நன்கு அழுவது பெண்ணுக்கு ஆறுதல்.
-லிட்டன்.

''இஸ் இட்...! என்னால நம்பவே முடியல ஆகாஷ்! உங்கம்மா இப்டி சட்டுனு ஒத்துப்பாங்கன்னு நா நினைக்கவேல்ல.''

''நானும்தான் நினைக்கல. அம்மாக்கு என்னவோ நல்ல மூட்! அவங்க போட்ருக்கற கண்டிஷனை மட்டும் நாம எந்த நிலையிலும் மறந்துடக்கூடாது.''

''தப்பு.. அப்பப்பொ மறந்துடணும்.''

''உதைப்பாங்க. உன்னை அனுப்பிட்டுதான் மறுகாரியம் பார்ப்பாங்க. அப்பறம் முதலுக்கே மோசம் வந்துடும்.''

''சும்மா விளையாட்டுக்கு சொன்னேன். பயப்படாதீங்க.''

''அதிருக்கட்டும் சுஜி. என் வீட்டுக்கு வந்தப்பறம் உன்னை அவங்க சும்மா விட்ருவாங்களா? காலேஜ்-க்கு வந்து இழுத்துக்கிட்டு போனா என்ன செய்வ?''

''உங்க வீட்ல ஒரு இடமும், உங்க சப்போர்ட்டும் இருந்தா போதும். அவங்களை எதிர்க்கறதும், அவங்க கூட போக மறுக்கறதும் எனக்கு சுலபமாய்டும். சட்டமும் எனக்கு துணை செய்யும். பாதுகாப்புக்கு இடமில்லாத வரைதான் பயமெல்லாம். இப்பொ எனக்கு அசுர பலம் வந்துடுச்சு. யாருக்கும் பயப்படப் போறதில்ல.''

''அப்பொ வியாழக்கிழமை நல்ல நேரம் பார்த்து கிளம்பிடு.''

''நீங்க வீட்ல இருப்பீங்க இல்ல.''

''நா இல்லாட்டி என்ன? உன் மாம்னார், மாமியார், நாத்தனார் எல்லாரும் இருப்பாங்க.''

''பயம்மார்க்கு ஆகாஷ்.''

''பயம்னு நீ சொல்றது எனக்கு ஆச்சர்யமார்க்கு. உனக்குக் கூட பயம் வருமான்ன?''

''பயமா... பரபரப்பான்னு எனக்கே தெரியல. உங்க வீட்ல எல்லாரும் எப்டி ஆகாஷ்? நல்லா பழகுவாங்களா?''

''நீதான் பார்க்கப் போறயே!''

''எனக்கு த்ரில்லிங்கார்க்கு.''

''எனக்கு த்ரில்லிங் போய்டுமோன்னு பயம்மார்க்கு.''

''ஏன் அப்படி சொல்றீங்க? நா வரது உங்களுக்கு பிடிக்கலையா?''

''அப்டியில்ல. நீ தள்ளியிருக்கணும். நா உன்னையே நினைச்சுட்ருக்கணும். உன்னை எப்பொ பார்க்கப் போறோம்னு நாளை எண்ணணும். உன்னோட இருக்கற நேரம் குறைஞ்சுக்கிட்டே வருதேன்னு உன்னை சந்திக்கறப்ப எல்லாம் கவலைப்படணும். இப்டியே ரெண்டு மூணு வருஷம் காதலிச்சு அப்பறம் உன் கழுத்துல தாலி கட்டி உன்னை என் மனைவியா என் வீட்டுக்குக் கூட்டிட்டு போற த்ரில் இப்பொ இருக்காது இல்ல. கல்யாணமாகி மனைவியா வரது எப்டி அதுக்கு முன்னாடி காதலியா வரது எப்டி? ரெண்டுக்கும் வித்யாசம் இருக்கில்ல?''

''அடப் போங்க ஆகாஷ். நீங்க சொல்ற த்ரில் வழக்கமா எல்லா ஆம்பளைக்கும் இருக்கற த்ரில்தான். அதுல ஒரு சுவாரசியமும் இருக்காது. கல்யாணத்துக்கு முன்னால்

புருஷன் வீட்டுல வந்து இருக்கற த்ரில் எத்தனை பேருக்கு கிடைச்சுடும்? எனக்கு கிடைக்கப் போறதுன்னு நினைச்சு நா எவ்ளோ சந்தோஷமார்க்கேன் தெரியுமா?''

''ஆகாஷ் சிரித்தான்.''

''எதுக்கு சிரிக்கறீங்க...?''

''கல்யாணத்துக்கு முந்தி என் வீட்டுக்கு வரது த்ரில்லான விஷயம்தான். அதே நேரம் கல்யாணத்துக்கு முந்தியே மாமியார் மாட்டுப்பெண் சண்டை, நாத்தனார் அண்ணி சண்டைன்னு வந்துடாம இருந்தா சரி, அதை நினைச்சுதான் சிரிச்சேன்.''

''அதென்ன சிரிக்கற விஷயமா?''

''எனக்கு சிரிப்பான விஷயம்தான். நீயே பாரேன். காலம் காலமா இந்த மாமியார் மருமக, நாத்தனார் அண்ணி, ஓரகத்திகள், இவங்களுக்குள்ளதான் அல்ப விஷயத்துக்கெல்லாம் சண்டை வரும். எந்த வீட்லயாவது மாமனார் மருமகன், மைத்துனன் மாமன், சகலைகள் சண்டை போட்டதா கேள்விப்பட்ருப்பயா...?''

''ஏன் போடாம...?''

''சும்மா பேச்சு. ஆம்பளைங்க அல்ப விஷயத்துக்கெல்லாம் சண்டை போட்டுக்க மாட்டாங்க. அதெல்லாம் பொம்பளைங்க சமாச்சாரம்!''

''எங்க ஜாதியைக் கிண்டலடிக்கலன்னா உங்களுக் கெல்லாம் தூக்கம் வராதே... நிறுத்துங்க ஹாஸ்டல் வந்துடுச்சு.''

அவள் இறங்கிக் கொண்டாள். முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

''தொட்டாச்சிணுங்கி! அவன் மனசுக்குள் சொல்லியபடி புன்னகையோடு காரைக் கிளப்பினான்.''

''பொள்ளாச்சியில் ஒரு ஷூட்டிங் என்று கிளம்பிக் கொண்டிருந்தார் கோபாலன். இரண்டு நாள் ஷூட்டிங்தான். இந்த படத்தில் ஏழெட்டு சீன்களில் வந்து ஓரளவுக்கு வசனமும் பேசக்கூடிய வாய்ப்பு கிடைத்திருந்தது. கமிஷன் போக ஓரளவுக்கு காசும் கிடைக்கும். அதெல்லாம் விட நல்லா நடிக்கறீங்க சார் என்று அந்த இளம் புது டைரக்டர் சொன்னது அவர் மகிழ்ச்சியைக் கிளறி விட்டிருந்தது. அந்த வார்த்தைக்கே உள்ளுக்குள் கனவு விரிந்தது. வயதான பிறகும் சாருஹாசன் ஒரு படத்தில் நேஷனல் அவார்டு வாங்கினாற்போல் ஒரே ஒரு படம் நன்கு செய்து தனக்கும் அவார்டு கிடைத்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தவருக்கு உடம்பு புல்லரித்தது. டைரக்டர் பாராட்டியதை சரண்யாவிடம் சொல்லி சொல்லி மகிழ்ந்தார்.''

''நீ தப்பு பண்ணிட்டப்பா! லேட்டா நடிக்க வந்துட்ட. வாலிப வயசுலயே நடிக்க ஆரம்பிச்சிருந்தா அன்னிக்கு நடிச்சுட்ருந்த அத்தனை பேருக்கும் அஸ்தில புளி கரைச்சிருக்கும். இந்நேரம் நாம பங்களால இருந்திருப்போம். வீடு முழுக்க அவார்டும் கேடயமுமா இருந்திருக்கும்!''

''இது கிண்டலா, ஆதங்கமா?''

''உனக்கு எப்படி தோண்றது?''

''பொதுவா நீ படோடோபத்துக்கு ஆசைப்படற டைப் இல்ல. அதனால கிண்டல்னு தான் தோண்றது.''

''பேராசைப்படலன்னு வேணா சொல்லலாம். ஆனா நியாயமா சம்பாதிச்சு நமக்கு வேணுங்கற அடிப்படை வசதிகளோட நாமளும் இருக்கணும்ங்கற ஆசை எனக்கும் இருக்கு. கார் பங்களான்னெல்லாம் வேண்டாம். ப்ரிஜ்ஜும், வாஷிங் மெஷினும் ஒரு கம்ப்யூட்டரும் வேணும்னு எனக்கும் ஆசை உண்டு.''

''கவலையே படாதே ஆகாஷ் வீட்ல நீ நினைக்கறதுக்கு மேலயே வசதியோட இருக்கலாம்.''

''அப்பா ப்ளீஸ்..

''சரண்யா குறுக்கிட்டு நிறுத்தினாள்.''

''என்னம்மா..?''

''நடக்காத விஷயத்துக்கு நம்பிக்கை கொடுக்க வேண்டாமே!''

''ஏம்மா அப்டி சொல்ற... சம்பத் இந்தப் பக்கம் வரதே இல்லன்னா...?''

''அதெல்லாம் இல்லப்பா, அங்கிள் ஒரு தரம் வந்தார். நீங்க இல்ல அப்பொ...?''

''என்ன சொன்னார்?''

''மனுஷா நினைக்கறதெல்லாம் நடந்துடறதில்ல. தெய்வம் நினைச்சபடிதான் இங்க எல்லாமே நடக்கறது. அதனால உனக்கும் ஆகாஷுக்கும் தெய்வம் முடிச்சு போட்டு வெச்சிருந்தா உங்க கல்யாணம் நடக்கும். இல்லாட்டி நடக்காது. அதனால நம்பிக்கையிழக்கவும் வேண்டாம். அதீத கற்பனையும் வளர்த்துக்க வேண்டாம்னு சொல்லிட்டுப் போனார்.''

''அப்டியா சொன்னார்? ஏன் அப்டி சொன்னார் ரெண்டுங் கெட்டானா? வேற ஏதாவது காரணமிருக்குமோ?''

''இருக்குமோ என்ன? இருக்கு!''

''என்னம்மா சொல்ற?''

''ஆமாம்ப்பா. ஒரு பொண்ணு இருக்கா''

''அப்பா திகைப்போடு அவளைப் பார்த்தார்.''

''உனக்கெப்படிம்மா தெரியும்?''

''நா பார்த்தேம்ப்பா. இந்த விஷயம் மாமாக்கும் தெரிஞ்சிருக்கும்னு நினைக்கறேன். அதனாலதான் அந்த வேதாந்தம். இனிமே மாமாகிட்ட இந்த விஷயத்தைப் பத்தி கேட்டு அவரை தர்மசங்கடப்படுத்தக் கூடாதுன்னு தான் நா இதை உங்கிட்ட சொல்றேன்.''

''அப்பா ஒரு நிமிடம் மௌனமாக இருந்தார்.''

''ஏம்ப்பா.. டல்லாய்ட்ட? பரவால்ல விடுப்பா. மாமா சொல்றா மாதிரி எது நடக்கணுமோ அது நன்றாகவே நடக்கட்டும். எனக்கு இதுல எந்த வருத்தமும் இல்ல.''

''அப்டின்னா.. நா உனக்கு வேற ஒரு வரன் பார்த்தா மறுப்பு சொல்லாம கட்டிக்குவயா...?''

''சரண்யா ஒரு நிமிடம் மௌனமாய் எங்கோ வெறித்துப் பார்த்தாள்.

''பண்ணிக்கறேம்ப்பா. உன் சந்தோஷத்துக்காக கண்ணை மூடிக்கிட்டு யாருக்கு வேணா கழுத்தை நீட்டறேன். ஆனா இப்ப வேண்டாம். என் படிப்பு முடியட்டும். ஒரு வேலை கிடைச்சு என் கால்ல நா நிக்கணும்னு ஆசைப்படறேன். அதுக்கப்பறம் கண்டிப்பா நீ பார்க்கற மாப்பிள்ளையை நா கட்டிக்கறேன்.''

''யார் உன்னை இப்பொ கல்யாணம் பண்ணிக்க சொன்னா? பயப்படாதே. நீ படிச்சு வேலைக்குப் போகணும்ங்கற ஆசை எனக்கும் இருக்கு. இன்னும் ஒரு நாலு வருஷம் கழிச்சுதான் கல்யாணமெல்லாம். கவலைப்படாம நல்லா படி. மாப்பிள்ளை ஆகாஷ்னா காத்திருக்க வேண்டாம். உடனே கட்டிக் கொடுத்துடலாம். மாமா உன் படிப்பை நிறுத்தாம அவரே கூட படிக்க வெச்சு உத்யோகத்துக்கும் அனுப்பிடுவார்னு நினைச்சேன். எப்பொ அந்த கனவு கலஞ்சு போச்சோ இனிமே நம்ம பிழைப்பைப் பார்த்துக்கறதுதான் புத்திசாலித்தனம். என்ன சொல்ற?''

''சரண்யா பதில் சொல்லாமல் புன்னகைத்தபடி அப்பாவின் இரவு சாப்பாட்டிற்கு நாலு சப்பாத்தியை வாழையிலையில் கட்டி எடுத்து வைத்தாள்.''

''எதுக்கும்மா? அவங்க சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணியிருப்பாங்க.''

''ராத்திரி வேளைல எண்ணையும் மசாலாவுமா அவங்க ஏதாவது தருவாங்க. உன் உடம்புக்கு ஆகாது. நீ இந்த சப்பாத்தி சாப்ட்டா போதும். மத்த நேரத்துல கூட கூடிய வரை கண்டதையும் சாப்டாம லைட்டா உடம்பு ஒத்துக்கறதா சாப்டு. உனக்கு மசாலா வாசனைன்னா அல்ப ஆசை வந்துடும். அதான் சொல்றேன்.''

''இல்ல சாப்ட மாட்டேன். இப்பல்லாம் ஒரு பயம் வந்துடுச்சு சரண்யா. உனக்குஒரு வாழ்க்கை தேடிக் கொடுக்கற கடமை முடியற வரை என்னை நானே பத்திரமா பாத்துக்கணும்னு தோணுது. உன்கழுத்துலயும் மூணு முடிச்சு விழுந்து நல்ல வீட்ல நீ வாழ்க்கைப் பட்டுட்டன்னா, அடுத்த நிமிஷம் சாவு வந்தா கூட சிரிச்சுக்கிட்டே சாகத் தயாராய்டுவேன்.''

''போறுமே.. ஊருக்கு புறப்படும்போது நல்ல வார்த்தை பேசிட்டு போப்பா...

''அதுசரி நெருப்புன்னா வாய் வெந்துடுமா?''

''அதுக்காக நெருப்பு நெருப்புன்னே சொல்லிட்ருக்கணுமா? வேற நல்ல வார்த்தை சொல்லக்கூடாதா.''

''சரி அப்பொ நா புறப்படறேன். நீ ஜாக்ரதையாரு. பாட்டி வந்து துணைக்கு படுப்பாங்க இல்ல?''

''வருவாங்க''

''சரண்யா வாசல் வரை வந்து அவரை வழி அனுப்பி விட்டு கதவை சார்த்திக் கொண்டு உள்ளே போனாள்.

எந்த ஏமாற்றமும் இல்லை. எல்லாம் நடக்கிறபடி நடக்கும் என்று அப்பாவிடம் சொல்லி விட்டாளே தவிர உள்ளூர ஏற்பட்டிருந்த ஏமாற்றமும் வேதனையும் வார்த்தைகளில் அடக்க முடியாமலிருந்தது அப்பாவுக்கு எதிரில் அழ முடியாத நிலையில் அழுவதற்குதனிமை தேடி காத்திருந்தாள். அந்த தனிமை இப்போது கிடைத்திருந்தது. அப்பா போனதும் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தவள் சாமிக்கு முன்னால் சம்மணம் கட்டிக் கொண்டு அமர்ந்து எல்லா படங்களையும் வெறித்துப் பார்த்தவள், ஏன்? ஏன்? என்ற ஆயிரம் கேள்விகளோடு சத்தமின்றி குலுங்கியழ ஆரம்பித்தாள். தடுக்க ஆளின்றி ஏன் அழுகிறாய் என்று கேட்கவோ, பரிதாபப்படவோ ஆளில்லாமல் தனிமையில் அழும்போது அழுகை கூட இதமாகவே இருந்தது. அழுது அழுது தனக்குள் தானே சமாதானமாகி ஓய்ந்து போகலாம். அப்படித்தான் அழுது ஓய்ந்தாள் அவளும்.

''தன் துணிமணிகள் அனைத்தையும் இரண்டு சூட்கேஸ்களில் அடைத்து அழுத்தி மூடி பூட்டினாள்.''

''ஏய் சுஜி எங்கடி...? ஊருக்கா? எதுக்குடி.. லீவு கூட இல்ல. திடீர்னு புறப்படற!'' தோழி வியப்போடு கேட்டாள்.

''யெஸ் போறேன். படிப்பை நிறுத்திட்டு பாதில போலாம்னுதான் பார்த்தேன். ஆனா மனசு வரல. அதனால ஹாஸ்டலை விட்டு மட்டும் போறேன். ஒரு பத்து நாள் கழிச்சு வரேன்.''

''என்னடி சொல்ற நீ... ஒண்ணும் புரியலயே.''

''புரிய வேண்டாம். இப்போதைக்கு எதுவும் புரியாம இருக்கறதுதான் நல்லது. ஸீ யூ...

''அவள் கிளம்பினாள். ஒரு ஆட்டோவில் பெட்டிகளை ஏற்றி விட்டு தானும் ஏறினாள். ஆட்டோக்காரரிடம் ஆகாஷ் வீட்டு விலாசத்தைக் கூறிவிட்டு சாய்ந்து அமர்ந்தாள். மனசு

படபடப்பாக இருந்தது. எல்லோரும் நல்லபடி பழகுவார்களா? மரியாதை எப்படியிருக்கும்? மருமகளாகப் போவது வேறு இப்படிப் போவது வேறு. இதற்கு மரியாதை கிடைக்குமா என்பது கேள்விக்குறிதான். ஆனால் அவர்கள் சம்மதத்தோடுதான் ஆகாஷ் தன்னை அழைத்திருக்கிறான் என்பதால் மரியாதை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.''

ஆட்டோ அவன் பங்களாவினுள் நுழைந்து நின்றது. போர்டிகோவில் பெரிசாய் கோலம் போட்டிருந்தது. ஆட்டோ சத்தம் கேட்டதும் உள்ளிருந்து ஆகாஷும் அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் வெளியில் வந்தனர்.

''வாம்மா..'' அவன் அம்மா இறங்கி வந்து அவள் தோளோடு அணைத்து வரவேற்றாள்.

''வாங்க'' சங்கீதா புன்சிரிப்போடு அழைத்தாள்.

''சம்பத் மட்டும் பிள்ளையின் மனது நோகக்கூடாது என்பதற்காக ஒப்புக்கு அழைத்து விட்டு உள்ளே போனார்.

''சாரி... நா உங்களுக்கெல்லாம் திடீர்னு தொந்தர வாய்ட்டேனா...? வரதுக்கு முந்தி நிறைய யோசிச்சேன். இதைவிட நல்ல இடமா எனக்கு வேற எதுவும் தோணல.''

''எங்களுக்கு ஒரு தொந்தரவு இல்ல. நீ இதை உன் வீடா நினைச்சுக்கலாம்.''

''அம்மா வேலைக்காரனை அழைத்து பெட்டிகளை உள்ளே கொண்டு போய் வைக்கச் சொன்னாள்.''

''உனக்கு மாடில ஒரு ரூம் கிளின் பண்ணி வெச்சிருக்கும்மா. உனக்கு வேணுங்கற வசதியெல்லாம் இருக்கும். இன்னும் ஏதாவது வேணும்னாலும் சொல்லு பண்ணிடுவோம்.''

''தேங்க்ஸ்மா. நீங்கள்ளாம் இவ்ளோ நல்லவங்களா இருக்கறது நா பண்ணின புண்ணியம்.''

''பெரிய வார்த்தை எல்லாம் வேண்டாம். கேஷூவலா இரு. உங்கம்மா மாதிரி என்னை நினைச்சுக்க.''

''மை காட். அது மட்டும் முடியாதே''

''ஏம்மா?''

''உங்களை அம்மா மாதிரி நினைச்சா ஆகாஷ் எனக்கு அண்ணனாய்டுவாரே. அதனால அத்தையாவே நினைச்சுக் கறேன்.''

''சுஜிதா சொல்ல சாரதா பெரிய ஜோக் கேட்டு விட்டாற்போல் சிரித்தாள். அப்பாவும் சங்கீதாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.''

''என் ரூம் எது அத்தை?'' சுஜிதா கேட்டபடி குதிரை மாதிரி அலட்சியமாக நடக்க, சம்பத் முகம் சுளிததபடி மாடிக்குப் போனார்.

தங்களுக்குத் தெரிந்ததைப் பற்றி ஆண்கள் பேசுகிறார்கள்.
தங்களுக்குத் திருப்தி தருவதைப் பற்றி மட்டுமே பெண்கள் பேசுகிறார்கள்.

-ரூலோ.

''குட்மார்னிங்''

''வெரிகுட்மார்னிங். என்ன இவ்ளோ சீக்கிரம் எழுந்துட்ட? சாரதா காபி மேக்கரில் பொடி போட்டு நீர் விட்டபடி அருகில் வந்து நின்ற சுஜிதாவைப் பார்த்து சிரித்தாள்.''

''உங்களுக்கு ஹெல்ப் பண்ணலாம்னுதான் எழுந்து வந்தேன்.''

''சாரதா உச்சி குளிர்ந்து போனாள்.''

''அப்படி ஒண்ணும் பெரிய வேலை எதுவுமில்ல நீ போய் இன்னும் கொஞ்ச நேரம் தூங்கும்மா.''

''போச்சுடா எங்க வீட்லதான் பூமில கூட கால் படாம என்னைத் தாங்கறாங்கன்னா நீங்களுமா? போரடிச்சு போச்சு அத்தை. எனக்கும் இந்த கிச்சன் வேலையெல்லாம் சொல்லித் தாங்களேன்.''

''நீ எதுக்கும்மா செய்யணும்?''

''அது சரி. எங்கம்மாவாட்டமே சொல்றீங்க! ஒண்ணு தெரியுமா. இப்பதான் நான் கிச்சனே பாக்கறேன் தெரியுமோ?''

''நிஜமாவா...?''

''சத்தியமா ஆண்ட்டி. எங்க வீட்டு கிச்சன் பக்கம் நா இன்னும் போனதே இல்ல. பங்களாக்கு பின்னால கிச்சனே இன்னொரு பங்களா மாதிரி இருக்கும். டே அண்ட் நைட் வேலை செய்ய மொத்தம் பதினஞ்சு பேர் அங்க வேலைக்கு இருக்காங்க. ஹோட்டல் மாதிரிதான். எங்க ரூம்ல இருந்து என்னென்ன வேணும்னு மெனு சொல்லிட்டா போதும். ரூமுக்கே வந்துடும். அல்லது டைனிங் ஹால்க்கு போயும் சாப்ட்டுக்கலாம். ஜெனரலா எல்லாரும் அவங்கவங்க ரூம்லதான் சாப்ட்டுப்போம். ஏதாவது பார்ட்டி, பண்டிகை, விசேஷம்னா கண்டிப்பா டைனிங் ஹால்லதான் சாப்பாடு. டைனிங் ஹால்னா சாதாரணமானது இல்ல. பெரிய டேபிள் இந்த கோடிலேர்ந்து அந்த கோடி வரை நீள் வட்டமா இருக்கும். நூறு பேர் வரை ஒரே சமயம் உட்கார்ந்து சாப்டலாம். பயங்கர ஜாலியா இருக்கும்.''

சுஜிதா சொல்லச் சொல்ல சாரதாவின் விழிகள் விரிந்தது. மருமகளாய் வரப் போகிறவளின் செல்வமும் அந்தஸ்தும் பெருமையாயிருந்த அதே நேரம் அவளிடம் ஒருவித பயத்தையும் ஏற்படுத்தியது. இப்பேர்ப்பட்ட கோடீஸ்வரப்

பெண் காதலிக்கும் அளவுக்கு ஒரு கம்பீரமான ஆண் மகனைப் பெற்றதற்காக உள்ளூர பெருமிதமும் கர்வமும் ஏற்பட்டது. அவள் இந்த வீட்டில் சந்தோஷமாக இருப்பது மிகவும் முக்கியம். எனவே எந்த குறையும் இல்லாது அவளை கவனித்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

''என்ன ஆண்ட்டி.. திடீர்னு சைலன்ட்டாய்ட்டிங்க? நா பொய் சொல்றேன்னு தோணுதா..?''

''ச்சேச்சே... அதெல்லாம் இல்ல. ஆமா சுஜிதா உனக்கு இந்த வீடு வசதியார்க்கா? இது உங்க வீடு அளவுக்கு மாளிகை இல்ல. இருந்தாலும் உனக்கு என்ன வசதி வேணும்னாலும் தயங்காம சொல்லு. உடனே பண்ணிக் குடுத்துடச் சொல்றேன்.''

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம் ஆண்ட்டி. இருக்கற வசதி போதும். இங்கயாவது சாதாரணமா இருக்கேனே...''

சாரதா வியப்போடு அவளைப் பார்த்தாள். நல்ல பொண்ணு என்று பாராட்டினாள்.

''சரி கார்த்தால என்ன குடிப்ப சொல்லு பாலா, போர்ன்விடவா, காபியா''

''ஜஸ்ட் காபி போதும்''

''ஆச்சர்யமார்க்கு!''

''நீங்க வேற. எங்க வீட்ல கார்த்தால எட்டுவித டிரிங்க்ஸ் வரும். எதுவேணா குடிச்சுக்க வசதியார்க்கும்னு. அதெல்லாம் பார்த்து பார்த்து அலுத்துப் போச்சு. அந்த பக்கிங்ஹாம் பேலஸ் வாழ்க்கைலேர்ந்து ஒரு சேஞ்ச் வேணும்னுதானே படிப்பை சாக்கா வெச்சு நானே இந்த ஊருக்கு வந்தேன்!'' சுஜிதா சொல்லிக் கொண்டிருக்கும்போது சங்கிதா பல் தேய்த்து விட்டு உள்ளே வந்தாள்.

''குட்மார்னிங் சங்கிதா'' என்றபடி சுஜிதா காபி டம்ளரோடு ஹாலுக்குப் போனாள்.

''அம்மா போர்ன்விடாதரயா?''

''போர்ன்விடாவா... அதோ பார் கோடீஸ்வரன் வீட்டுப் பொண்ணு, சிம்பிளா காபி போதும்னு குடிக்கறா! உனக்கு போர்ன்விட்டா கேக்குதா? இனிமே காப்பிதாண்டி உனக்கும்!''

''அதுசரி!'' சங்கீதா அயர்ந்து போய் அம்மாவைப் பார்த்தாள்.

''நல்லார்க்கும்மா. நா காப்பி வேணும்னு கேட்டப்பொல்லாம் நம்ம அந்தஸ்துக்கு இதாண்டி குடிக்கணும்னு நீதானே போர்ன்விட்டாவைப் பழக்கின.''

''இப்பதானே தெரியுது காபி கூட அந்தஸ்துள்ள பானம்தான்னு.''

''ம்ம்...!'' சங்கீதா ஒரு மாதிரி தலையாட்டியபடி அம்மா கொடுத்த காபியை வாங்கிக் கொண்டு ஹாலில் வந்து அமர்ந்தாள்.

''உனக்கு என்ன டிபன் பிடிக்கும். சுஜிதா?'' சாரதா வெளியில் வந்து கேட்டாள்.

''இங்க என்ன டிபன் செய்வீங்க.''

''இன்னிக்கு பூரி சென்னா செய்யலாம்னு இருக்கேன்.''

''ஒரு நாளைக்கு ஒரு டிபன்தான் செய்வீங்களா?''

''நாலே நாலு பேருக்கு எத்தனை வெரைட்டி செய்யறது? பொதுவா ஏதாவது ஒரு டிபன்தான். உங்க வீட்ல எப்டி...?''

''அதை ஏன் கேக்கறீங்க அத்தை? ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் கெட்டுது. அவ்ளோ வெரைட்டி! இட்லி தோசைலேர்ந்து தந்தூரி ஐட்டம்ஸ் வரை அம்பது ஐட்டம் இருக்கும். எது வேணும்னாலும் கிடைக்கும்.''

''உனக்கு எது வேணும்னு சொல்லேன் செஞ்சுட்டா போச்சு.''

''நீங்க வேறு! எனக்கு ஒரு டம்ளர் கஞ்சி இருந்தா கூட போதும் திவ்யமா குடிச்சுட்டு போய்டுவேன். என்னைப் பத்தி கவலையே படாதிங்க. நீங்க எது செய்தாலும் சாப்டுவேன். நா போய் குளிச்சுட்டு வரேன். ஆண்ட்டி'' சுஜிதா மாடிக்கு துள்ளி ஏறினாள்.

''ஏய் சங்கிதா கொஞ்சம் வந்து அந்த பூரியை இட்டுத்தாயேன். அவ கிளம்பறதுக்குள்ள டிபன் ரெடியா''

''நானா.. பூரியா... என்னாச்சும்மா உனக்கு?''

''ஏண்டி...?''

''இதுவரை ஒரு கருவேப்பிலைக் கொத்தைக் கூட உருவித்தரச் சொன்னதில்ல எங்கிட்ட இப்ப திடீர்னு பூரி இட்டுத் தரச் சொல்ற...! எவ்ளோ நான் நா ஆசையா பூரிக்குழவியக் குடு, நா வட்ட வட்டமா இட்டுத் தரேன்னு ஆசையா கேட்ருப்பேன். கொடுத்திருப்பயா நீ? உனக்கெதுக்குடி சமையக்காரி வேலைன்னு விரட்டியடிப்ப...''

''ஆமா அடிச்சேன். அப்பொ கூட மாட ஒத்தாசைக்கு ஒரு வேலைக்காரி இருந்தா. அதனால உன்னை செய்ய வேணாம்னேன். இப்ப தனியா இல்ல செய்யறேன்! கொஞ்சம் உதவினா என்ன?''

''எனக்கும் மணியாய்டுச்சும்மா. சாரி நீயாச்சு உன் வருங்கால மருமகளாச்சு. என்னை ஆளை விடு. எனக்கு டிபனே வேணாம். வேணும்னா ஒண்ணு செய். அப்பாவோ அண்ணனோ ஃப்ரீயார்ந்தா வந்து பூரி இட்டுத் தரச் சொல்லு சரியா...''

''அடி... அம்மா கத்துவதற்குள் சங்கிதா சிரித்தபடி மறைந்து விட்டாள்.

''சாரதா வியர்க்க விறுவிறுக்க எல்லோருக்கும் பூரியும் சென்னாவும் செய்ய ஆரம்பித்தாள்.''

"என்னம்மா அடுக்களைல என்ன மாறாடு?" காலேஜுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த பெண்ணிடம் கேட்டார் சம்பத்.

"உங்க தர்ம பத்தினிக்கு தலைகாவ் புரியல ப்பா"

"என்னம்மா சொல்ற?"

"கோடீஸ்வர மருமகள் வந்து வீட்ல தங் கியிருக்காளாம். ஊர்ல இருக்கற எல்லாரும் வந்து அவளுக்கு சேவகம் பண்ணணுங்கறா"

"செய்ய வேண்டியதுதானே?"

"கொழுப்புப்டா உனக்கு! சொல்ல மாட்டே! சாரதாம்பாள் புருஷன்தானே நீ? இப்டிதான் பேசுவ."

"விளையாட்டுக்கு சொன்னேன் தாயி. ஆமா உன் வருங்கால அண்ணி எப்டி பழகறாங்க?"

"இதுவரை பிரச்சனையில்ல, இனிமே எப்டியோ. ஊகத் போகத்தானே தெரியும்!"

"அதுசரி ஒரு நாள்ள என்ன தெரிஞ்சுடும். இருந்தாலும் அண்ணியாச்சேன்னு நேத்து ரொம்ப சந்தோஷமா கூப்ட்ட போல்ருக்கு உள்ள!"

"பின்ன... விரட்டவாப்பா முடியும்? நமக்கு பிஞ்சாலும் பிடிக்காட்டியும் அண்ணனுக்கு பிடிச்சிருக்கே. அவனோட மனசுக்கு நாம மரியாதை கொடுக்க வேண்டாமா? இது அவன் வாழ்க்கை. அவனோட சந்தோஷம் தானேப்பா நமக்கு முக்கியம்? அதான் அவங்களை வாய் நிறையக் கூப்ட்டேன்!"

"அப்பா அவளை புன்னகையோடு பார்த்தார்."

"என்னப்பா சிரிக்கற?"

"பெருமையார்க்கும்மா. என் குழந்தைக்கு எவ்ளோ பக்குவம்னு நினைச்சு சந்தோஷமார்க்கு."

"ஏம்பா அவங்களை உனக்கு பிடிக்கலையா?"

''இந்த கேள்விக்கு உனக்கே பதில் தெரியுமே தாயி!''

''புரியுதுப்பா. சரண்யா வரணும்னு நாம விரும்பினோம். ஆனா அண்ணன் மனசு இவங்ககிட்டல்ல சரணடைஞ்சிருக்கு! போகட்டும் விடுங்க. சரண்யாவோட குணத்துக்கு இன்னும் நல்ல இடம் கிடைக்கட்டும். ஒருமுறை அவங்க வீட்டுக்கு போய்ட்டு வரலாமாப்பா. அவளைப் பார்த்தும் ரொம்ப நாளாச்சு.''

''போலாமே. அதுக்கென்ன? ஆனா உள்ளுக்குள்ள ஒரு குற்ற உணர்ச்சி இருக்கும்மா. சும்மா கிடந்த சங்கை ஊதி விட்டுட்டோமேன்னு இந்த ஏமாற்றத்தை அந்த பொண்ணு தாங்குவாளான்னு தெரியல.''

''ஒரு நிமிஷம்ப்பா போன் அடிக்குது யாருன்னு பார்த்துட்டு வரேன்'' சங்கீதா விரைந்து சென்று போனை எடுத்தாள்.

''சம்பத் மாமா இருக்காரா?''

''நீங்க...?''

''சரண்யா..''

''மை குட் நெஸ். நூறு ஆயுசு உனக்கு இப்பதான் பேசிட்ருந்தோம்.''

''என்னைப் பத்தியா ஆச்சர்யமார்க்கு!''

''என்ன சரண்யா.. நாங்க என்ன உன்னை மறந்துட்டமான்ன? என்ன விஷயம் சொல்லு.''

''அப்பா இல்லையா?''

''இருக்கார். கூப்டவா?''

''சங்கீதா அப்பாவை அழைத்து போனைக் கொடுத்தாள்.

''சரண்யாப்பா!''

''என்னம்மா என்ன விஷயம்?''

''அப்பா ஊர்ல இல்ல மாமா. சத்யாக்கா இங்க ரெஸ்ட்டுக்காக வந்திருக்கா. வந்து ரெண்டு நாளாச்சு. இன்னிக்கு திடீர்னு வயத்த வலிக்குதுன்னா. டாக்டர்கிட்ட கூட்டிட்டு வந்தேன். அபார்ஷன் ஆய்டுச்சுங்கறாங்க. உடனே டி.என்.சி. பண்ணனும்ங்கறாங்க. எனக்கு ஒண்ணும் புரியல. பாங்க்ல கொஞ்சம் பணமிருக்கு. ஆனா அப்பா இல்லாம எடுக்க முடியாது. ப்ளிஸ் மாமா நீங்க கொஞ்சம் பணத்தோட வந்தா நல்லார்க்கும்.''

''ஓ காட்! நா உடனே வரேம்மா... நீ கவலைப்படாதே. தைரியமாயிரு. எந்த ஹாஸ்பிடல்...? ஒகே சரி நா இன்னும் அரை மணில வந்துடறேன்.''

''என்னப்பா ஆச்சு?''

''சம்பத் அவளிடம் விவரம் சொல்லிவிட்டு அவசரமாகக் கிளம்பினார். ''நானும் வரேம்ப்பா'' சங்கிதாவும் அவரோடு புறப்பட்டாள்.''

''ஏங்க டிபன் கூட சாப்டாம அப்பாவும் பொண்ணும் எங்க புறப்பட்டுட்டீங்க?''

''அவசர வேலை போற வழில பார்த்துக்கறேன்.''

''சம்பத் ப்ரிஃப்கேஸை காரில் போட்டு விட்டு ஏறியமர்ந்தார். சங்கிதா அவரருகில் ஏறியதும் கார் கிளம்பியது.''

''அவர்கள் புறப்பட்டுச் சென்ற பத்து நிமிடத்தில் ஆகாஷ் டிபன் சாப்பிடக் கீழே வந்தான்.''

''நல்ல காலம் நீயாவது டிபன் சாப்ட வந்தயே.''

''என்னம்மா அலுத்துக்கற?''

''பாரேன். நா கூப்டக் கூப்ட அப்பாவும் பொண்ணும் துளிக்கூட சட்டை பண்ணாம போய்ட்டாங்க.''

''டிபன் கூட சாப்டாமயா?''

''பின்னே?''

''சரி விடு. என்ன டிபன் இன்னிக்கு? சுஜிதா சாய்ப்படாச்சா?''

''இன்னும் இல்ல. குளிக்கப் போயிருக்கா.''

''ஆமா... என் ஆளு எப்டி பழகறா?''

''அதை ஏன் கேக்கற? கோடீஸ்வரன் வீட்டு பொண்ணு மாதிரியேல்ல. ரொம்ப சிம்ப்பிள். ஆண்ட்டி ஆண்ட்டின்னு உசிரை விடறா!''

''அப்பொ மருமகளை ரொம்ப பிடிச்சிடுச்சுன்னு சொல்லு!''

''ஏதாவது ஹெல்ப் பண்ணட்டுமான்னு வந்து கேட்டா காலேல.''

''என்ன ஹெல்ப் பண்ணினா?''

''நீ வேற, அவ வீட்டைப் பத்தி அவ சொல்லச் சொல்ல பிரம்மிச்சுப் போய்ட்டேன். தரைல கால் படாம வளர்ந்த பொண்ணை நா என்னத்த வேலை வாங்கறது! தோ பாருடா ஆகாஷ். அந்த பொண்ணு எதுவும் கேக்க மாட்டா. அவளுக்கு வேணுங்கற வசதியெல்லாம் நாமதான் செஞ்சு குடுக்கணும். என்ன வேணுமோ செய்து குடுத்துடு.''

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம். அவ இதுவரை இருந்த வீடு அரண்மனையாவே இருக்கட்டுமே. இனிமே இருக்கப் போற இடம் இதுதான். இதுக்கேத்தா மாதிரி அவதான் தன்னை மாத்திக்கணுமே தவிர அவளுக்காக இந்த வீடு மாறணும்னு அவசியமில்ல. அவ அளவுக்கு இல்லாட்டாலும் நம்ம வசதிக்கொண்ணும் குறைச்சலில்ல. இது போதும்.''

''ஆகாஷ் கை கழுவி விட்டு கிளம்பினான். சுஜிதா மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள்.''

''நீ ரெடியா சுஜி? உன்னை டிராப் பண்ணிட்டு போட்டுமா?''

''இல்ல நா ஒரு வாரம் லீவுதான். நீங்க கிளம்புங்க. எனக்கு வெளில போற வேலை கொஞ்சம் இருக்கு. நா ஒரு அரை மணி கழிச்சு போய்க்கறன்.''

''ஓகே அப்ப நா கிளம்பறேன்.''

''ஆகாஷ் தன் காரில் ஏறிப் போன பிறகு சுஜி டைனிங் டேபிளுக்கு வந்து அமர்ந்தாள்.''

''அங்கிள் சாப்ட்டாரா ஆண்ட்டி?''

''எங்க...? அப்பாவும் பொண்ணும் சாப்டாமயே போயாச்சு. நீ உக்காரு நாம சாப்டுவோம். பசிக்குது.''

''அடடா நாக்குல எச்சில் ஊறுது! அங்கிள் இப்டி சாப்டாம போய்ட்டாரே, ஆமா யாரு ஆண்ட்டி சரண்யா?''

''சுஜித்தா கேட்க சாரதா சட்டென்று நிமிர்ந்து புருவம் சுருக்கிப் பார்த்தாள்.''

''எதுக்கு கேக்கற?''

''இல்ல சரண்யான்னு யாரோ போன் பண்ணவும்தான் அங்கிளும் சங்கீதாவும் பரபரப்பா புறப்பட்டு போய்ட்டாங்க என்ன விஷயம்? உங்களுக்குத் தெரியுமா?''

''சரண்யா போன் பண்ணினான்னு உனக்கு யாரும்மா சொன்னா?''

''சங்கீதா, அங்கிள்கிட்ட சரண்யா பேசறதா சொன்னது காதுல விழுந்துச்சு. ஏன் ஆண்ட்டி ஏதாவது பிரச்சனையா? யாரது சரண்யா? டிபன் கூட சாப்டாம ரெண்டு பேரும் போய்ட்டாங்க! அதுவும் உங்ககிட்ட கூட என்ன விஷயம்னு சொல்லாம!''

''சுஜிதா கேட்க, சாரதாவின் முகம் சுருங்கியது. உள்ளுக்குள் எரிமலை ஒன்று வெடிக்கத் தயாராயிற்று.''

கோபமுள்ள மனைவி அருப்பிலிருந்து எருக்க மறந்து விட்ட கிருக்கி போன்றவள். அந்த கிருக்கி தானாகவேதான் ஆற வேண்டும்.

-பாபுராவ்

சம்பத்தும், சங்கிதாவும் வரும்போது சரண்யா மட்டும் தனியாக தலைகுனிந்து மௌனமாக அமர்ந்திருந்தாள்.

''என்ன பண்ணின சரண்யா? டாக்டர் என்ன சொல்றாங்க?''

சம்பத் மாமாவின் குரல் கேட்டதும் சட்டென்று நிமிர்ந்தாள். தனிமையும் சங்கடமும் துக்கமும் கொஞ்சம் மறைந்து உதவிக்கு ஒரு ஆள் வந்துவிட்ட நிம்மதி தெரிந்தது. அதுவரை அடக்கி வைத்திருந்த சங்கடமும் பயமும் உருமாறி கண்ணீர்ப் படலமாய் பளபளத்தது.

உள்ள கூட்டிட்டு போயிருக்காங்க. மூவாயிரம் ரூபா உடனே கட்டச் சொல்லியிருக்காங்க. ஒரு மணி நேரத்துல கட்டிடறேன்னு பிராமிஸ் பண்ணினப்பறம்தான் தியேட்டருக்கு கூட்டிட்டு போனாங்க.

''சத்யா புருஷனுக்கு தகவல் சொல்லிட்டயா?''

''இன்னும் இல்ல. அவங்க வீட்ல போன் இல்ல. எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியல. அவர் ஆபீஸுக்கு வந்துர்ப்பாரான்னு தெரியல. அக்காவைத் தனியா விட்டுட்டு போகவும் முடியல.''

''சரி நா பார்த்துக்கறேன் விடு. நீ ஏதாவது சாப்ட்டயா...?''

''பசியில்ல மாமா''

''சம்பத் ஒரு சேரில் உட்கார்ந்து தன் ப்ரிப்கேஸ் திறந்து உள்ளிருந்த பணத்திலிருந்து மூவாயிரம் ரூபாயை எடுத்து சங்கிதாவிடம் கொடுத்தார். நீ இவளைக் கூட்டிட்டு போய் பணத்தைக் கட்டிட்டு வா சங்கிதா'' என்றவர் அவர்கள் சென்றதும் தன் செல்போன் எடுத்து ஆகாஷின் செல் நம்பரை அழுத்தினார்.

''யெஸ்...''

''ஆகாஷ் நாந்தான் பேசறேன்.''

''என்னப்பா.. டிபன் கூட சாப்டாம அப்டி எங்க அவசரமா கிளம்பிட்டீங்க..''

''முக்கியமான விஷயம்தான். கோபாலனோட பொண்ணு சத்யா இல்ல...''

''ஆமா சொல்லு..''

''அவளுக்கு அபார்ஷன் ஆய்டுச்சு. தீபா நர்ஸிங் ஹோம்ல அட்மிட் பண்ணிட்டு எனக்கு போன் பண்ணினா சரண்யா, நா அங்கேர்ந்துதான் பேசறேன். நீ ஒரு காரியம் செய். உடனே சத்யா வீட்டுக்குப் போய் விஷயத்தை சொல்லி அவ புருஷனை உன் கார்லயே கூட்டிட்டு இங்க வந்துடு சரியா?''

''போறேன். அட்ரஸ்...?''

''ஓ... அட்ரஸ் வேணுமில்ல.. ஒரு நிமிஷம் லைன்லயே இரு''

''சம்பத் ரிஸப்ஷன் நோக்கி வேகமாகச் சென்றார். சரண்யாவை அழைத்து செல்லை அவள் கையில் கொடுத்தார்.

''ஆகாஷ் லைன்ல இருக்கான். சத்யாவோட அட்ரஸை அவன்கிட்ட சொல்லு.''

''சரண்யா மெல்லிய குரலில் ஆகாஷிடம் விலாசம் சொன்னாள்.''

''டோண்ட் ஓர்ரி சரண்யா. தைரியமா இரு நா இன்னும் ஒரு மணில சத்யா புருஷனோட வரேன்'' ஆகாஷ் அவளுக்கு தைரியம் சொல்லி விட்டு செல்லை அணைத்து கீழே வைத்தான். அடுத்த ஐந்தாவது நிமிடம் அவனது கார் சத்யாவின் வீடு நோக்கிச் சென்றது.''

''பேஷண்ட் நல்லார்க்காங்க. இன்னும் ஒரு மணி நேரத்துல மயக்கம் தெளிஞ்சுடும். சாயங்காலம் பார்த்துட்டு டிஸ்சார்ஜ் பண்ணிடறேன்.''

''டாக்டர் சில மருந்துகளை வாங்கி வரச் சொன்னார். சங்கீதா அருகிலிருந்த பார்மஸியிலிருந்து மருந்துகளை வாங்கிக் கொண்டு வந்து நர்ஸிடம் கொடுத்தாள்.''

''சரி வா சரண்யா. இனிமே பயப்பட ஒண்ணுமில்ல. நாம ஏதாவது சாப்ட்டுட்டு வரலாம் வா.''

''சம்பத் இருவரையும் அழைத்துக் கொண்டு அருகிலிருந்த ரெஸ்ட்டாரண்ட்டுக்குச் சென்றார்.''

''அவர்கள் சாப்பிட்டு விட்டு வரும்போது ஆகாஷும், சத்யாவின் கணவரும் வந்திருந்தனர். சத்யா புருஷனின் முகம் வாடியிருந்தது. சம்பத் அவனுக்கு ஆறுதல் சொன்னார்.''

சத்யாவுக்கு மயக்கம் தெளிந்திருந்தாலும் பலவீனமாக இருந்தாள்.

''போறும் ரொம்ப தொந்தரவு கொடுக்க வேண்டாம். நாம வெளில போய்டுவோம்'' ஆகாஷ் வெளியில் வந்தான். அவனைத் தொடர்ந்து ஒவ்வொருவராக வெளியில் வந்தனர்.

''எவ்ளோ சார் பணம் கட்டினீங்க நா குடுத்துடறேன்.''

''அட வைப்பா...'' சம்பத் அவன் கையைப் பிடித்து பர்ஸை வாங்கி அவன் பாக்கெட்டிலேயே வைத்தார்.

''பரவால்ல சார். நா கொண்டு வந்திருக்கேன். உங்களுக்கு எதுக்கு சிரமம்?''

''ஒரு சிரமமுமில்ல. நீ இப்டி பிரிச்சு பேசறதுதான் சிரமமார்க்கு. சத்யா என் பொண்ணு மாதிரி. அவளுக்கு செலவு பண்ணினதுக்கு யாராவது கணக்கு சொல்லு வாங்களா?''

''மனசுக்கு ரொம்ப கஷ்டமார்க்கு சார். அம்மாகிட்ட இன்னும் சொல்லல. ரொம்ப அப்செட் ஆய்டுவாங்க..''

''விடுங்க. நீங்க ரெண்டு பேரும் நல்லார்க்கிங்க இல்ல. எவ்ளோ வேணா குழந்தை பெத்துக்கலாம். போனதை நினைச்சு வருத்தப்பட வேணாம். அது அரை குறையா பிறந்திருந்தா இன்னும் கஷ்டம்தானே? ஏன் சரண்யா டிஸ்சார்ஜ் பண்ணி கூட்டிட்டு போய் தனியா உன்னால பார்த்துக்க முடியுமா?''

''இனிமே என்ன மாமா? பார்த்துக்கறேன். பயம் ஒண்ணும் இல்ல.''

''சரி அப்பொ நா மறுபடியும் சாயங்காலம் வரேன். உனக்குத் துணையா சங்கிதா வேணா இருப்பா. நா வந்ததும் வீட்ல கொண்டு விட்டுடறேன் சரியா.''

''சாரி மாமா உங்க வேலையெல்லாம் கெட்டுப் போச்சு இல்ல.''

''ஒரு வேலையும் கெட்டுப் போகல நா வரட்டுமா?''

''நானும் கிளம்பவா சரண்யா.. ஏதாவது வேணும்னா என் செல் நம்பருக்கு போன் பண்ணு சரியா?'' ஆகாஷும் கிளம்பிச் சென்றான்.

''நீங்க கூட கிளம்புங்க. இங்க இருந்து என்ன செய்யப் போறீங்க. நாலு மணிக்கு வந்தா போறும்'' சங்கிதா சத்யாவின் கணவனையும் அனுப்பி வைத்தாள்.

''அப்புறம் மாமி எப்டியிருக்காங்க சங்கிதா?''

''யாரு எங்கம்மாவா... அவங்களுக்கென்ன ஜாம் ஜாம்னு இருக்காங்க. ஒருமுறை வீட்டுக்கு வாயேன் சரண்யா?''

''வரேன்''

''எப்பொ?''

''அப்பா வரட்டும். ஒருநாள் வரேன். நீ வரலாம் இல்ல?''

''சாயங்காலம்தான் வரப் போறேனே. வரது மட்டும் இல்ல. இன்னிக்கு முழுக்க உங்களோடதான் இருக்கப் போறேன்.''

''நிஜமா...?'' சரண்யா வியப்போடு கேட்டாள். ''ரொம்ப தேங்க்ஸ் சங்கீதா. ரொம்ப ஆறுதலா இருக்கு. ஆனா.. எங்க வீட்ல தங்க அம்மா விடுவாங்களா...? ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா...?''

''நா போனாத்தானே? அப்பாகிட்ட மட்டும் சொல்லிட்டு வந்துடப் போறேன். அப்பா சமாளிச்சுப்பார்.''

''சரண்யா நெகிழ்வோடு அவளைப் பார்த்தாள்.''

''அன்று மாலை சத்யாவை டிஸ்சார்ஜ் செய்தார்கள். சம்பத் சரியாக ஐந்து மணிக்கு வந்து அவர்களை அழைத்துச் சென்று வீட்டில் விட்டார்.''

''நா இங்கேயே இருந்துட்டு நாளைக்கு வரேம்ப்பா..''

''டிரெஸ் எல்லாம் வேண்டாமா?''

''சரண்யா இருக்க பயமேன்? அவ டிரெஸ் எனக்கு சரியார்க்கும். நீங்க கவலைப்படாம கிளம்புங்க அப்புறம் மிஸஸ் சம்பத்கிட்ட நா ரொம்ப கேட்டதா சொல்லுங்க.''

''உதைச்சேன்னா...

''சம்பத் சிரித்தபடி கிளம்பினார். ஹோட்டலிலிருந்து அவர்கள் மூவருக்கும் இரவுக்கான டிபன் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டு வீட்டுக்கு கிளம்பினார். டிராபிக் நெரிசலில் சிக்கி அவர் வீட்டை அடையும்போது மணி எட்டை நெருங்கியிருந்தது. போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டு உள்ளே வந்தார். வீடு அமைதியா யிருந்தது.

விடிவிளக்கை மட்டும் எரியவிட்டு ஹால் சோபாவில் சுருண்டு படுத்திருந்தாள் சாரதா.''

''ப்ரிஃப்கேஸை வைத்துவிட்டு அவளருகில் வந்தார்.

''உடம்புக்கென்ன சாரு?'' அவள் நெற்றியைத் தொட்டுப் பார்க்க, சாரதா வெடுக்கென்று தட்டி விட்டபடி எழுந்து உட்கார்ந்தாள்.

''காலேலேர்ந்து எங்க போயிருந்தீங்க?''

''தினம் எங்க போவேன் நான்? இதென்ன புதுக்கேள்வி?''

''பொய் சொல்லாம சொல்லுங்க. உங்க வேலையா மட்டும்தான் போனிங்களா?''

''ஆமா...''

''எம்மேல சத்தியமா?''

''என்ன சாரதா.. என்னாச்சு உனக்கு இன்னிக்கு?''

''ஆக... உண்மையைச் சொல்ல மாட்டீங்க!''

''என்ன உண்மை... எனக்கொண்ணும் புரில?''

''சரி நா கேக்கற பதில் சொல்லுங்க போதும். சரண்யா போன் பண்ணினாளா?''

''ஓ.. அதைக் கேக்கறயா... ஆமா பண்ணினா.. ஏன் கேக்கற?''

''எதுக்கு பண்ணினா?''

''அவங்கக்காக்கு அபார்ஷன் ஆய்டுச்சு சாரதா. கோபாலன் ஊர்ல இல்ல. சின்ன பொண்ணு தனியா என்ன செய்வா. என்னை விட்டா அவங்களுக்கு யார் இருக்காங்க?''

''பணம் கொடுத்தீங்களா ஏதாவது?''

''அதெல்லாம் இல்ல. அந்த பொண்ணு பணமெல்லாம் வெச்சிருந்தா. ஒரு மனுஷ சகாயத்துக்குதான் போனேன்.''

''கார்த்தால உங்க கூடயே புறப்பட்டு வந்தாளே உங்க செல்லப் பொண்ணு. அவ எங்கே?''

''அவங்களுக்கு துணையா இருக்கட்டும்னு நாந்தான் அவளை அங்க விட்டுட்டு வந்தேன்.''

''ரொம்ப நல்லார்க்கு. துணைக்கு இருக்க இவ என்ன நூத்துக் கிழவியோ? உடனே போய் அவளை அழச்சுக்கிட்டு வாங்க.''

''என்ன சாரு. மணி என்னாச்சு பாரு. காலம்பற அவளே வந்துடுவா. எனக்கு சாப்பாடு எடுத்து வை...''

''முடியாது. விட்டுத் தொலைங்க அந்த உறவைன்னா ஏன் கேக்க மாட்டேன்றீங்க. ஒட்டிப் பிறந்த தங்கையான்ன.. உறவு கொண்டாட? ஒண்ணுவிட்ட தங்கைதானே? எதுக்கு இப்டி அவங்களுக்கு கொட்டிக் கொடுத்துட்ருக்கீங்கன்னு எனக்கு புரியவேல்ல. அல்லது அடிமனசுல இன்னும் ஏதாவது திட்டம் மிச்சம் இருக்கா? இருந்தா இப்பவே அந்த நப்பாசைக்கெல்லாம் சமாதி கட்டிருங்க சொல்லிட்டேன்.''

சம்பத் அமைதியாக தன் அறைக்குச் சென்றார். பதில் பேசுவதால் ஒரு பயனும் இருக்கப் போவதில்லை என்று அவருக்குத் தெரியும். விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கவும் விரும்பவில்லை. எனவே மௌனம் சாதிப்பதே உத்தமம் நினைத்தார். அந்த மௌனம் சாரதாவின் ஆத்திரத்தை இன்னும் அதிகமாகக் கிளறிவிட்டது. விறுவிறுவென்று அவளும் அவர் பின்னால் அவர் அறைக்குள் நுழைந்தாள்.

''எனக்குத் தெரியாது. நீங்க எக்கேடோ கெட்டொழிங்க. ஆனா ஏன் எம் பசங்களையும் கெடுக்கறீங்க...? அவங்களுக்கு அந்த உறவுதேவையில்ல. மரியாதையா போய் சங்கீதாவை அழைச்சுக்கிட்டு வரப்போறீங்களா இல்லையா?''

சம்பத் ஒரு வினாடி அவளை வெறித்துப் பார்த்தார். ''முடியாது என்ன செய்வ?'' என்று அழுத்தமாகக் கேட்டார்.

''போறேன் நானே போய், தரதரன்னு தலமுடியப் பிடிச்சு இழுத்துக்கிட்டு வரேன். மாட்டேன்னா நினைச்சிங்க.''

விறுவிறுவென்று வெளியில் வந்து புறப்படத் தயாரானாள். அவள் புடவை மாற்றி வெளியில் வருவதற்குள் சம்பத் கார் சாவியை எடுத்துக் கொண்டு வந்து பத்திரப்படுத்தி வைத்தார். கார் பூட்டியிருப்பது கண்டு எரிச்சலோடு திரும்பி வந்தாள்.

''சாவி எங்கே... கொடுங்க?''

''நீ போக வேண்டாம்.''

''அவ அங்க இருக்கக் கூடாது.''

''அது ஒண்ணும் தங்கக் கூடாத இடமில்ல. என் தங்கை வீடுதான். இவ இருந்தா ஒண்ணும் தப்பில்ல.''

''எனக்கு பிடிக்கல''

''எனக்கும் தாண்டி சில விஷயங்கள் பிடிக்கல. இருந்தாலும் சகிச்சுட்டுருக்கல...?''

''எதைச் சொல்றீங்க? உங்களுக்கு பிடிக்காததை அப்டி என்ன செஞ்சுட்டேன் நான்..''

''முன்ன பின்ன தெரியாத ஒரு பெண்ணை இந்த வீட்ல தங்க வெச்சிருக்கயே. அது நல்ல விஷயம்னு நினைக்கறயா நீ? ஒரு உறவும் இல்லாத ஒரு பொண்ணு வந்து இந்த வீட்ல தங்கலாமனா, என் பொண்ணு தன் அத்தை வீட்ல தங்கறதுல ஒரு தப்பும் இல்ல.''

''நிறுத்துங்க. எதை எதோட முடிச்சு போடறீங்க நீங்க? சுஜிதா ஒண்ணும் யாரோ இல்ல... நாளைக்கு இந்த வீட்டுக்கு மருமகளாகப் போறவ.''

''நாளைக்குத்தானே... இன்னிக்கில்லையே! அதுக்குள்ள எதுக்கு உள்ள வரணும்?''

''அதை உங்க பிள்ளைகிட்ட கேக்க வேண்டியதுதானே? அவன் தானே கூட்டிட்டு வந்தான்!''

''அவன் அனுமதிதான் கேட்டான். இது சரிப்படாதுடான்னு நீ மறுத்திருக்கலாமே! அதை விட்டுட்டு அனுமதி கொடுத்தயே என்னைக் கேட்டுக்கிட்டா கொடுத்த?''

''இப்ப புரியுதுங்க அந்த பொண்ணு இங்க இருக்கறதுல உங்களுக்கு இஷ்டமில்ல. உங்க தங்கை பெண்ணை ஆகாஷ் காதலிக்கலங்கற ஆத்திரம் உங்களுக்கு! அவனுக்கு இவதான்னு ஆண்டவன் முடிச்சுபோட்டு வெச்சிருக்கான்னு இப்ப புரிஞ்சிருக்குமே!''

''புரிஞ்சுக்க வேண்டியது நா இல்ல. நீதான், இன்னும் காலமிருக்கு. யார் கழுத்துல அவன் தாலி கட்டணும்னு விதியிருக்கோ அவதான் உன்மருமகளாக முடியும். காதலிங்கற உரிமை கிடைச்சுட்டதாலயே கற்பனையை அதிகம் வளர்த்துக்க வேணாம்னு அந்த பொண்ணுகிட்ட சொல்லி வை.''

''இப்ப புரியுதுங்க! உங்க மனசுல என்ன இருக்குன்னு. நீங்க என்ன சதித்திட்டம் போடறிங்கன்னும் புரியுது. வரட்டும் ஆகாஷ். அவன் வந்ததும் இதையெல்லாம் பத்தி பேசிடறேன். உங்கப்பா தாண்டா உன் காதலுக்கு வில்லன்னு கிளியர் கட்டா சொல்லிடறேன். தைரியமிருந்தா எங்கிட்ட சொன்னதை அவங்கிட்ட சொல்லுங்க. அவன் என்ன சொல்றான்னு பார்த்துடுவோம்.''

''சாரதா வெளியில் வந்து ஆகாஷ் எப்போது வருவான் என்று உறுமலோடு காத்திருந்தாள்.''

''சம்பத் கவலைப்படவில்லை. இருந்தாலும் பிள்ளை தன்னை தவறாக நினைத்து விட்டால் என்ன செய்வது என்ற குறுகுறுப்பு அவரையும் மீறி உள்ளே ஏற்படத்தான் செய்தது.''

காதலிப்பவனாலும் கருப்புக் கண்ணாடி அணிபவனாலும் எதையும் தெளிவாகப் பார்க்க இயலாது. துன்பத்தில்தான் உண்மைகள் தெளிவாகத் தெரியும்.

-ஒரு அனுபவஸ்தர்

"சம்பத்தின் நல்ல நேரமோ, சாரதாவின் கெட்ட நேரமோ ஆகாஷ் நள்ளிரவுக்கு மேல்தான் வீடு திரும்பினான். வந்தவன் சோர்வோடு சாப்பாடு கூட வேண்டாமென்று சொல்லிவிட்டு விறுவிறுவென்று மாடிக்குச் சென்றுவிட அந்த நள்ளிரவில் பிரச்சனையை ஆரம்பிக்க வேண்டாமெனக் கருதி பேசாமலிருந்து விட்டாள் சாரதா."

"மறுநாள் காலையிலும் அவன் சீக்கிரம் எழுந்து வரவில்லை."

"எட்டு மணிக்கு சங்கீதா ஒரு ஆட்டோவில் வந்து இறங்கினாள்."

"எங்கடி வந்த?" வாசல் தாண்டி உள்ளே வந்தவளை சாரதாவின் குரல் தடுத்து நிறுத்தியது. அம்மாவுக்கு கோபம் என்பது புரிய சங்கீதா மௌனமாக நின்றாள்.

"இதென்ன வீடா சத்திரமாடி? இஷ்டத்துக்கு போகவும் கண்ட இடத்துல தங்கிட்டு வரவும்!"

"கோபால் மாமா வீடு ஒண்ணும் கண்ட இடமில்ல" சங்கீதா தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னாள்.

"பேசாதடி நாயே! எதிர்த்து பேசின நாக்கை அறுப்பேன். இனி அந்த வீட்டுப் பக்கம் போன... காலை ஒடிப்பேன் சொல்லிட்டேன்."

''அவங்க மேல அவ்ளோ என்னம்மா துவேஷம்?''

''துவேஷமில்லடி, பயம்! நல்ல மரத்தைச்சுத்தி ஒட்டுண்ணிகள் படர்ந்து மரத்தோட சத்துக்களை உறிஞ்சி அது கொழுத்துடும்னு படிச்சதில்ல நீ? அந்த மாதிரிதான் இந்த பிச்சைக்காரக் கூட்டமும், எதையாவது சொல்லி சொல்லி உங்க இரக்கத்தைக் கிளறிவிட்டு இருக்கறதையெல்லாம் பிடுங்கிட்டு போய் கடசில நம்மளையே நடுத்தெருவுல நிறுத்திடும். அந்த பயம்தான்.''

''நீ நினைக்கறா மாதிரி இல்ல இவங்க. அனாவசியமா நல்ல மனுஷங்களை சந்தேகப்படாதே. பணத்தை நஷ்டப்பட்டா மறுபடியும் சம்பாதிக்கலாம் மனுஷங்களை இழந்துட்டா சம்பாதிக்கறது ரொம்ப கஷ்டம்.''

''போறும்டி பாட்டி...! உன் திருவாயை மூடிக்கிட்டு உள்ள போ. உபதேசம் பண்ண வந்துட்டாளாம். உபதேசம்! எல்லாம் அந்த மனுஷன் குடுக்கற இடம். பாத்துக்கறேன். உங்க எல்லாரையும் அடக்கிக் காட்டறேன்!''

''சாரதா யாருமற்ற ஹாலில் நின்று தன்னந்தனியே பொருமினாள்.''

''யாரை ஆண்ட்டி திட்டறிங்க?'' பின்னால் சுஜிதாவின் குரல் கேட்டது.

''வரவர இந்த வீட்டுல யாருமே என் பேச்சைக் கேக்கறதில்லம்மா சுஜி. அதான் புலம்பிட்ருக்கேன்.''

''என்ன ஆண்ட்டி விஷயம்? யார் உங்க பேச்சைக் கேக்கல?''

''எம் பொண்ணுதான். வேற யாரு? நேத்து காலேல போன கழுதை இப்பதான் திரும்பி வருது.''

''மை காட் நைட் ஸ்டேயா. வெளிலயா. எப்டி விட்டீங்க? எங்க வீட்லல்லாம் வெட்டிடுவாங்க. ஹாஸ்டல்ல விடறதுக்கே அவ்ளோ யோசிச்சாங்க. எல்லாரும் தைரியம் சொல்லிதான் என்னை அனுப்ப அப்பா சம்மதிச்சார்.''

''ஹ்ம்ம்! இங்கல்லாம் யார் பெரியவங்க பேச்சைக் கேக்கறாங்க!''

''எங்க தங்கியிருந்தாங்களாம்?''

''நேத்து போன் பண்ல சரண்யான்னு அவ வீட்லதான்.''

''யாரு ஆண்ட்டி அந்த சரண்யா..? இப்டி எல்லாரையும் கைல போட்டு வெச்சிருக்கா!''

''அதை ஏன் கேக்கற சுஜி? எல்லாம் இந்த மனுஷனோட உறவுக் கூட்டம்தான். பாதிநாள் பருப்பில்லாத ரசமும் சுட்ட அப்பளமும் சாப்டும் போதே இந்த கொழுப்புன்னா, இன்னும் நல்ல சாப்பாடு சாப்ட்டா என்ன பாடு படுத்தும்னு யோசி! இந்த லட்சணத்துல இந்த மனுஷனுக்கு அவளை இந்த வீட்டுக்கு மருமகளா கொண்டு வரணும்னு வேற திட்டம்! ஆனா அந்த திட்டம் ஆண்டவனுக்கே பொறுக்கல. ஆகாஷ் உன்னை விரும்பினானோ நா பிழைச்சேனோ..? இல்லாட்டி எல்லாம் ஒண்ணு சேர்ந்து எனக்கெதிரா சதி செய்யக் கூடத் தயங்காது. அதனாலதான் நா அந்த கூட்டத்துகிட்ட முகம் கொடுத்து கூட பேசறது கிடையாது. நீயே சொல்லு சுஜி. இந்த வீட்டுக்குள்ள காலடி எடுத்து வெக்கவும் ஒரு அந்தஸ்து வேணாம்? மகாராணி மாதிரி நீ எங்கே.. பிளாட்பாரமாட்டம் அவ எங்கே...? இது இந்த ஜென்மங்களுக்கு எங்கே புரியுது?''

ஓஹோ... உங்க கோவத்துக்குப் பின்னால இவ்ளோ விஷயமிருக்கா..? சுஜிதா வியந்தாள். இதனால்தான், ஆகாஷின் அப்பாவும் தங்கையும் தன்னிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லையா? அதற்குக் காரணம் அந்த சரண்யாவா..? இனி ஆகாஷை இழுத்துப் பிடிக்க வேண்டியதுதான். யார் கண்டார்கள் நாளைக்கு அந்த பசப்புக்காரி இவனையும் வளைத்துப் போட முயற்சிக்க மாட்டாள் என்பது என்ன நிச்சயம்? சுஜிதாவிற்கு முகம் தெரியாத அந்த சரண்யாவின் மீது சொல்லத் தெரியாத வெறுப்பேற்பட்டது. நல்ல காலம் அந்த வீட்டின் சர்வ

அதிகாரமும் படைத்த ஆகாஷின் அம்மாவுக்கும் சரண்யாவைப் பிடிக்காது என்பதும், ஆகாஷும் அவளை விரும்பவில்லை என்பதும் அவளுக்கு சற்று ஆறுதலைத் தந்தது. ஆனாலும் கூட அடி மனசுக்குள் ஒரு விழிப்புணர்வும் எச்சரிக்கையும் ஏற்பட்டது. உள்ளுர ஒருவித பயம் அவளுக்கு இருந்து கொண்டிருந்தது. அப்பா ஒரு வேளை இங்கு வந்து கலாட்டா செய்தால் இங்கிருப்பவர்கள் இவளை ஆதரித்தால்தான் இவளால் அவரை எதிர்க்க முடியும். அவர் ஆத்திரப்படுவார். தொடர்ந்து ஏதாவது தொந்தரவு கொடுப்பார். அதையெல்லாம் சமாளிக்க இவர்களது அன்பும் ஆதரவும் அவளுக்கு நிச்சயம் தேவை. இந்நிலையில் இந்த வீட்டில் தனக்கு இன்னும் முக்கியத்துவம் கிடைத்தால்தான் நல்லது. அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தாள். இங்கு சாரதா வைத்ததுதான் சட்டம் என்பதை அவள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறாள்.

ஆனால் அந்த சரண்யாவுக்காக சம்பத்தும், சங்கீதாவும், சாரதாவை அலட்சியப்படுத்தி யிருப்பதைக் காணும்போது எதிர்காலத்தில் சாரதாவின் சொல்லுக்கு மரியாதை இருக்குமா இருக்காதா என்ற கேள்வி எழும்பியது. அதே நேரம் ஆகாஷிடம் சம்பத்தும், சங்கீதாவும் பாசமும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். எனவே ஆகாஷை இன்னும் இறுக்கி பிடித்து தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டால்தான் அவன் மூலம் மற்ற இருவரையும் இழுத்துப் பிடிக்க முடியும் என்று புரிந்தது. சாரதா, ஆகாஷ் இருவரும்தான் இப்போதைக்கு தன்னுடைய பிடிமானம். இவர்கள் இருவர் மூலமும் இந்த வீட்டை ஆட்டி வைக்க ஆரம்பித்து மெல்ல மெல்ல இதன் அதிகாரங்களைக் கைப்பற்றிவிட்டால், அப்பாவை எதிர்த்துக் கொண்டாலும் தன்னுடைய வசதிக்கோ, செல்வாக்கிற்கோ ஒரு பங்கமும் வராமல் பார்த்துக் கொள்ளலாம். இங்கும் இவள்தான் மகாராணி என்றாகி விடுவாள். இப்படியெல்லாம் கணக்கு போட்டு

சிந்தித்தது அவள் மனம் தனக்குத் தானே பட்டம் சூட்டிக் கொள்ளும் வழிகளை யோசிக்க ஆரம்பித்தாள் அவள்.

''ஹலோ.. காலங்கார்த்தால என்ன பலமான யோசனை?'' பின்னால் ஆகாஷின் குரல் கேட்க சட்டென்று திரும்பினாள்.

''நூறு ஆயுசுதான். உங்களைப் பத்திதான் யோசிச்சுட் ருந்தேன்.''

''தாயே நூறு வயசெல்லாம் வேணாம் ஆளை விடு. அவ்ளோ வயசிருந்து உங்கிட்ட யார் அவதிப்படறது?''

''உதைப்பேன்.. என்னைப் பார்த்தா ராட்சஸியாட்டமா தெரியுது?''

''அதை விடு.. என்னைப் பத்தி என்ன யோசனை?''

''ஹாஸ்டல் வாழ்க்கையே தேவலைன்னு தோணுது. அப்பக்கூட நாம அடிக்கடி சந்திச்சோம்னு பேரு. இப்பொ உங்க வீட்லயே உங்க பக்கத்து ரூம்லயே இருந்து என்ன பிரயோஜனம். உங்களைப் பார்க்க முடியுதா, பேச முடியுதா..? என் ஞாபகமாவது உங்களுக்கு இருக்கான்னு சந்தேகமார்க்கு.

''அசடு! முந்தியாவது கொஞ்ச நேரம்தான் உன் நினைப்பு வரும். இப்ப நாள் முழுக்கவே உன் நினைப்புதான் தெரியுமா? ஆனாலும் அதுக்காக உன்னையே சுத்தி சுத்தி வரமுடியுமா? வீட்ல இருக்கற பெரியவங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டாமா? கல்யாணமாகற வரை கட்டுப்பாட்டோட இருந்தாதான் மத்தவங்க நம்மை மதிப்பாங்க. அதனாலதான் கிட்டயே வரதில்ல. எவ்ளோ பெருந்தன்மையோட உன்னை இங்க தங்க வெச்சிருக்காங்க. அதுக்கு நாம மரியாதை கொடுக்க வேணாமா சொல்லு.''

''கரெக்ட்தான். பாவம் உங்கம்மா தனியா வேலை செய்யறதைப் பார்த்தா கஷ்டமார்க்கு. அவங்களுக்கு ஹெல்ப் பண்ணணும்னு ஆசையாதான் இருக்கு. ஆனா என் ஸ்டடீசும்,

புராஜக்ட் ஒர்க்ஸும், அலைச்சலும்... எங்க முடியுது.. ஆனா இந்த கஷ்டமெல்லாம் கொஞ்சநாள்தான்.''

''ஏன்?''

''அப்பாவைப் பகைச்சுக்கிட்டு நா எங்கேர்ந்து படிக்க முடியும். எனக்கு அனுப்பற பணத்தை முதல்ல கட் பண்ணிடுவார். அப்பறம் காலேஜுக்கு பணம் கட்டமாட்டார்.

''பணத்தால எனக்கு கஷ்டம் கொடுத்து, காய வெச்சு போதும்டா சாமின்னு நானா ஓடிப்போய் அவர் கால்ல விழற வரை ஓயமாட்டார். இந்த நிலை ஏற்பட்டா படிப்பு நின்னுடும். அதுக்கப்பறம் உங்கம்மா ஏன் காலேஜுக்கு போகலன்னு கேட்டா நா என்ன சொல்லப் போறேனோ தெரியல. பட் நா தயாராய்ட்டேன். இந்த வீட்ல ஒரு சர்வன்ட்டா இருந்தாலும் இருப்பேனே தவிர என் வீட்ல ராணியா இருக்க மாட்டேன். யாருக்கு வேணும் அந்த கிரீடமும் வசதிகளும்?''

''ஆகாஷ் அவளையே பார்த்தான். காதலால் ஏற்கனவே குழைந்திருந்த மனம், அவளுடைய வார்த்தைகளில் மேலும் நெகிழ்ந்து குழைந்தது. அவளை பரிவோடு பார்த்தான்.''

''என்னை நம்பி வந்த உன்னை நா அம்போன்னு விட்ருவேனா? உங்கப்பாவோட பணம் யாருக்கு வேணும்? அவரே வெச்சுக்கட்டும். அவர் அனுப்பாட்டி இங்க குடி முழுகிடுமோ? நா இல்ல உனக்கு? எந்த ஆம்பளைக்கு காதலியைப் படிக்க வெச்சு கல்யாணம் பண்ணிக்கற சான்ஸ் கிடைக்கும்? அப்டி ஒரு சான்ஸ் எனக்கு கிடைக்கட்டுமே. நா இருக்கற வரை நீ யாருக்கும் பயப்பட வேணாம். எதுக்கும் கவலைப்படத் தேவையில்லை புரிஞ்சுதா?''

''சுஜிதா சற்று நேரம் எதுவும் பேசவில்லை.''

''என்னப்பா ஸைலன்ட் டாய்ட்ட...?''

''இல்ல ஆகாஷ், நீங்க எனக்காக உயிரையும் கொடுப்பீங்க. அதுல எனக்கு எந்த சந்தேகமும் இல்ல. நா கவலைப்படறது உங்கம்மாவை நினைச்சுதான்.''

''ஏன் அவங்க உன்னை நல்லா தானே நடத்தறாங்க?''

''இப்ப நல்லாதான் நடத்தறாங்க. இந்த அன்பு கடசீ வரை இருக்கணுமே.. ஒருவேளை என் வீடு என்னை தலைமுழுகிடுச்சுன்னா கட்டின துணியோடதான் நா உங்களுக்கு கழுத்தை நீட்ட வேண்டி வரும். உங்கம்மா ஒத்துக்குவாங்களா? உங்களை விட எங்க வீடு இன்னும் வசதியானதுன்றதாலதான் உங்கம்மா நம்ப காதலை அக்ஸெப்ட் பண்ணியிருக்காங்கன்னு நல்லாவே தெரியுது. அந்த மாதிரி இருக்கறவங்க நா ஒண்ணுமில்லாம வந்தா சும்மார்ப்பாங்களா? ஏன் கேக்கறேன்னா.. என்னால கண்டிப்பா சொத்தும் சீரும் கிடைக்கும்னு சொல்ல முடியாது. அவங்க மனசு மாறலாம். மாறாம போகலாம். அது நம்ப அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. பணம் இருந்தாலும் இல்லாட்டியும் என்னை ஏத்துக்கற மனசு இங்க எல்லார்க்கும் இருக்குமாங்கறதுதான் என் சந்தேகம். அப்டி இவங்களும் ஒத்துக்காட்டி நீங்க என்ன செய்வீங்க ஆகாஷ்? என்னை விட்ருவீங்களா? வெளியே போன்னு விரட்டிடுவீங்களா?''

''சுஜிதா மிகப் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்க ஆகாஷ் உருகிப் போய்விட்டான். அவள் கையை இறுகப் பிடித்துக் கொண்டான்.''

''மாட்டவே மாட்டேன் சுஜி. அம்மா அப்பா மேல எனக்கு மரியாதை உண்டு. ஆனா பணம்தான் பெரிசுன்னு அவங்க நிறம் மாறினாங்கன்னா. நானும் மாறுவேன். அவங்களை உதறிட்டு உன்னைக் கூட்டிட்டு இங்கேர்ந்து வெளியேறிடுவேன். அந்தஸ்து பார்க்கறவங்க யாரும் நமக்கு வேண்டாம். என்ன நடந்தாலும் நா உன் பக்கம்தான் சரியா? நீ அனாவசியமா பயப்பட வேண்டாம். தேவையில்லாம எதையாவது நினைச்சு குழப்பிக்கவும் வேணாம். ப்ரியா இரு. உனக்கு பணம் வேணும்னா எங்கிட்ட கூச்சப்படாம கேளு புரிஞ்சுதா?''

''சுஜிதா எழுந்தாள். அவனை அணைத்துக் கொள்ள கிட்டே வந்தாள்.''

''நோ சுஜி.. கல்யாணத்துக்கு முன்னால இதெல்லாம் எதுவும் வேணாம். அம்மாகிட்ட நா பிராமிஸ் பண்ணியிருக்கேன். ஓ கே யா...''

''ஆகாஷ் அவன் அறையிலிருந்து வெளியில் வந்தான்.''

''ஆகாஷ் டிபன் ரெடி, சுஜியையும் வரச்சொல்லு'' அம்மா கீழிருந்து குரல் கொடுத்தாள்.

''அப்பாவும், சங்கீதாவும் கீழ வந்தாச்சா?''

''அவங்க வந்தா வரட்டும். பாக்கு வெத்தலை வெச்சு அழைக்க வேண்டாம். நீ வா.''

''ஆகாஷ் கீழே இறங்கி வந்தான்.''

''என்னம்மா இன்னும் நேற்றைய கோவம் போகலையா உனக்கு?''

''உனக்குத் தெரியாதுடா ஆகாஷ் உங்கப்பாவும் உன் தங்கையும் என்னல்லாம் செய்யறாங்கன்னு.''

''என்ன செய்யறாங்க அப்டி?''

''நா சொல்லுவேன். நீயும் தலையை ஆட்டிக்கிட்டு கேப்ப. எல்லாத்தையும் கேட்டுட்டு கடசீல உங்கப்பா பக்கம்தான் சாய்வ. தேவையில்லாம உங்கிட்ட சொல்லி என் தொண்டைத் தண்ணிய வத்த விடணுமா?''

''பாத்தயா அலுத்துக்கறயே.''

''நீயே சொல்லுடா ஆகாஷ், இனிப்பைச் சுத்தித்தான் ஈயும் எறும்பும் மொய்க்கும்னு சொன்னா அது தப்பா?''

''எதுக்கு சுத்திவளைக்கற? என்ன விஷயம்னு பளிச்சுனு சொல்லேன்.''

''பளிச்சுனு சொல்லணும்னா உங்கப்பாக்கு நீ காதலிக்கறதும், சுஜிதாவை இங்க கூட்டிட்டு வந்து வெச்சிருக்கறதும் சுத்தமா பிடிக்கல''

''அப்டின்னு உங்கிட்ட சொன்னாரா?''

''நேரடியா சொல்வாரா? சுத்தி வளச்சுதான் சொல்லுவார். அவர் கனவெல்லாத்தையும் நீ கலைச்சுட்டயே அந்த எரிச்சல் அவருக்கு. அந்த கோபாலன் பொண்ணை உன் தலைல கட்டணும்னு பார்த்தார். நீ சுஜிதாவைக் கூட்டிட்டு வந்துட்ட. அதோட விட்ருவார்னு பார்த்தேன். ஆனா மனுஷன் விட்ருவாரா? சதி பண்றாராம் சதி. உன் காதலியை வெளியேத்திட்டுதான் மறுவேலைன்னு சவால் விட்டுட்டு போறார். அது மட்டுமில்லையாம். அந்த கோபாலன் பொண்ணுக்குதான் எல்லாத்தையும் கொட்டிக் கொடுப்பாராம். அப்டி என்ன அவ உசத்தியாப் போய்ட்டான்னு தெரியல. இல்ல இந்த சுஜிதாதான் பாவம் என்ன குத்தம் பண்ணிட்டாளாம்? உன்னைக் காதலிக்கறது அவ்ளோ பெரிய தப்பா? நா இவகிட்ட அன்பா நடந்துக்கறது உங்கப்பாக்கும் இந்த சங்கீதா கழுதைக்கும் கூட சுத்தமா பிடிக்கல. எனக்கும்தான் அவங்க செய்யற காரியங்கள் பிடிக்கல. சரண்யா சரண்யான்னு உருகறது பிடிக்கல. நிறுத்திடுவாரா அவர்? இதைச் சொன்னா உங்கப்பா என்ன சொல்றார் தெரியுமா? முன்ன பின்ன தெரியாத ஏதோ ஒரு கழுதை கிட்ட நீ கொஞ்சலாம், என் ஒண்ணுவிட்ட தங்கை பொண்ணை நா சீராட்டக் கூடாதாங்கறார். சுஜிதா கழுதையாம்! அந்த பொண்ணு காதுல விழுந்தா எவ்ளோ வருத்தப்படும் சொல்லு.''

''அம்மா நீளமாய் குறை சொல்லி நிறுத்த, ஆகாஷ் குழம்பினான். அப்பா அப்படியெல்லாம் பேசியிருப்பார் என்று நம்ப முடியவில்லை.''

''என்னடா நா சொல்றத நம்ப முடியலையா? எனக்கு தெரியும் நீ நம்பமாட்டன்னு. உனக்கு உங்கப்பாதான் உசத்தி. ஆனா பார்த்துக்கிட்டே இரு. அவர் உனக்கு வேட்டு வெக்கும்போதுதான் அவரைப் பத்தி நீ புரிஞ்சுக்கப் போற!''

''அம்மா மிரட்டலாய் நிறுத்த, ஆகாஷ் இன்னும் குழம்பினான். எந்த முடிவுக்கும் அவனால் வர முடியவில்லை. கவலையோடு எழுந்தான் அவன்.''

மாடியிலிருந்து அப்பா பரபரப்பாக கீழே வந்தார்.

''ஆகாஷ்... கிளம்பு உடனே என்னோட வா.''

''எங்கப்பா?''

''கோபாலன் வீட்டுக்குத்தான்.''

''எதுக்குப்பா?''

''சொல்றேன் வா''

''இல்லப்பா எனக்கு வேலையிருக்கு. நீங்க போய்ட்டு வாங்க.''

''ஆகாஷ்!'' சம்பத் அவனை திகைப்போடு பார்த்தார். அவருக்கு புரிந்துவிட்டது. சாரதா ஏதோ சொல்லியிருக்கிறாள். அதான் அவன் இப்படி விட்டேற்றியாக மறுக்கிறான். அவர் வேதனையோடு பார்த்தார். ''ஓ.கே. ஆகாஷ், நீ வரவேண்டாம். நா போறேன். சங்கீதாவைக் கூட்டிட்டு போறேன். நாங்க திரும்பி வர பத்து நாளாகும்.''

''ஆகாஷ் புருவம் சுருக்கி அவரைப் பார்த்தான்.''

''தாராளமா... இதுக்கு எதுக்கு எங்கிட்ட அனுமதி கேக்கணும்? உங்க தங்கை வீடு. பத்து நாளென்ன.. பத்து மாசம் தங்கினாலும் ஏன்னு கேக்க முடியுமா?''

''அப்பா பரிதாபமாக அவனைப் பார்த்தார். ''உனக்கென்ன ஆச்சு ஆகாஷ்? ஓ..கே.. நீ எதுவும் சொல்ல வேண்டாம். நீ வந்தாலும் வராட்டாலும் உனக்கு இன்ஃபார்ம் பண்ண வேண்டியது என் கடமை.''

''அப்பா எடுத்து சொன்ன வார்த்தைகளில் ஆகாஷ் அதிர்ந்து போனான். சாரதா கூட ஒரு வினாடி அதிர்ச்சியோடு நின்று

விட்டாள். சம்பத் வேகமாக வெளியேறினார், சங்கீதாவையும் அழைத்துக் கொண்டு.''

பிறந்தன கிறக்கும், கிறந்தன பிறக்கும்
தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும் மறந்தன உணரும்

-பட்டினத்தார்.

''படாரென்று அந்த கயிறு அறுந்தது. பலமாயிருந்த கயிறு எப்படி அறுந்ததென்று தெரியவில்லை. பட்டென்று இப்படி அறுந்து போகுமென்றும் நினைக்கவில்லை. இருந்த ஒரே ஒரு பிடிமானமும் நழுவி கீழே.. கீழே அதல பாதாளம் நோக்கி செல்லும் நிலை. பயத்தில் கண்கள் பிதுங்க முகம் வெளிற.. இதயம் உறைந்து போக...

சரண்யா முகத்தைப் பொத்திக் கொண்டு தலையை முழங்காலில் புதைத்துக் கொண்டாள். மற்றவர்கள் அவளது துக்கம் கண்டு, அழ அந்த இடமே அழுகையில் நிறைந்தது.''

''சம்பத்தும் சங்கீதாவும் வந்ததும் கூட்டம் விலகி வழிவிட்டது. அவர்களைத் தொடர்ந்து ஆகாஷும் வந்தான். சத்யாவின் புருஷனிடம் சம்பத் நெருங்கி நின்று தணிந்த குரலில் ஏதோ கேட்டார். ஆகாஷும் அவர்களருகில் வந்தான். அப்பா அவனை சட்டை செய்யவில்லை. வாசல் பக்கம் போனார்.''

''சாரிப்பா'' அவர் பின்னால் வந்தவன் குறுகுறுத்த குரலில் சொன்னான்.''

''இட்ஸ் ஓகே..'' சுரத்தில்லாத குரலில் அவர் சொன்னார்.''

''இப்ப நாம என்ன செய்யணும்ப்பா? பாடி எங்க இருக்காம்?''

''பாடி...!'' அவர் ஒரு வினாடி ஆடிப் போனார். எல்லாம் அடங்கிப் போனதும் மனிதனுக்கு பெயர் வெறும் உடல்...! ஊர், பெயர் எல்லாம் உயிரோடு மறைந்து விடுமோ? அது இப்போது கோபாலனல்ல. வெறும் உடல்! சம்பத்தின் கண்கள் கலங்கியது.''

''போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சு புரொடியூசரே உடம்பை வாங்கி தனி வேன் மூலம் அனுப்பி வெச்சுட்டாராம். இன்னும் ஒண்ணு ரெண்டு மணி நேரத்துல வந்துடும்.''

''எப்டியாம்மா?''

''ரோடு ஆக்ஸிடென்ட். துணை நடிகர்கள் எல்லாரும் வந்த மினி வேனும், டூரிஸ்ட் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதினதுல நாலஞ்சு பேர் ஸ்பாட்லயே.. ஒண்ணும் புரியலடா ஆகாஷ் இந்த குடும்பத்துக்கு மட்டும் ஏன் ஏதாவது சோதனை மேல சோதனை வரணும்? நல்லவங்களா இருக்கறது அவ்ளோ பெரிய தப்பா? இப்டி கஷ்டம் குடுக்கறான் கடவுளே!''

''ஆகாஷ் வேதனையோடு மௌனம் சாதித்தான். துணியாய் துவண்டு சுவற்றில் தலைசாய்த்து கண் மூடி, முழங்கால் பிடித்தபடி அமர்ந்திருந்த சரண்யாவைப் பார்க்க கண்றாவியாக இருந்தது. இருந்த ஒரே துணையையும் இவளிடமிருந்து எதற்கு அவ்வளவுஅவசரமாக பிரித்து அழைத்துக் கொண்டது அந்த தெய்வம்? தெய்வங்களுக்கு கண்ணில்லை என்று சிலர் சொல்வது சரிதானா? இனி இந்த சின்னப் பெண் என்ன செய்வாள், இவளுடைய எதிர்காலம் பற்றி யார் கவலைப்படுவார்கள்? யார் பொறுப்பேற்றுக் கொள்வார்கள்? அக்கா என்ற ஸ்தானத்தில் சத்யா இருக்கிறாள் என்றாலும் அவளால் முழுப் பொறுப்பும் ஏற்க முடியுமா? அவள் வீடு

அதற்கு சம்மதிக்குமா..? ஆகாஷ் கவலையோடு யோசித்தான்.''

வீட்டுக்கு முன் ஆட்கள் கூடிக் கொண்டிருந்தார்கள். கோபாலனின் எதிர்பாராத மரணம் எல்லோரது முகத்திலுமே அதிர்ச்சியைப் படரவிட்டிருந்தது. நல்ல மனிதன். யாருக்குமே தொந்தரவில்லாமல் வாழ்ந்தவர் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர். ஒரு மனிதன் இறந்த பின் அவன் தனக்கு மிகவும் நெருங்கியவன் என்று காட்டிக் கொள்ளும் ஆர்வம் அவர்கள் பேச்சில் தெரிந்தது.

''அம்பாஸடர் கார் ஒன்று வந்து நின்றது. இரண்டு மூன்று பேர் அதிலிருந்து இறங்கினார்கள். காருக்குள் ரோஜா மாலைகள் தயாராக இருந்தன.''

''வேன் வந்துட்ருக்கு. இன்னும் பதினஞ்சு நிமிஷத்துல வந்துடும்'' செல் போன் வைத்திருந்த ஒருவர் சொன்னார்.

''அடுத்த படத்துல வெயிட்டான ரோல் குடுக்கறதா இருந்தோம். அந்த அளவுக்கு இயல்பா நடிக்கற நடிகர். பாவம் இப்டி அநியாயமா போய்ட்டார்.''

''யூனிட்ல எல்லார்கிட்டயும் பணிவா பேசுவார். யாரையும் நோகடிக்க மாட்டார். நல்ல மனுஷன் எல்லாருக்கும் பிடிச்சு போய்டுச்சு. லேட்டா என்ட்ரி ஆயிருக்கிங்களேன்னு எல்லாருமே வருத்தப்பட்டு கேட்டுட்டோம். இன்னும் ஏழெட்டு வருஷம் முந்தி வந்திருந்தாரு... நிச்சயம் நல்ல குணச்சித்திர நடிகராகி நிறைய அவார்ட்ஸ் வாங்கியிருப்பார்.''

''வந்திருந்தவர்களின் வார்த்தைகளில் உண்மையான வருத்தம் தெரிந்தது.''

''வேன் தெரு முனை திரும்ப, திடீரென்று அங்கு பரபரப்பு சூழ்ந்தது.''

''சரண்யா எழுந்திரும்மா வேன் வருது பாடி கொண்ட வராங்க'' யாரோ சொல்ல சரண்யா காதைப் பொத்திக் கொண்டாள்.

''ப்ளிஸ்... அப்பான்னு சொல்லுங்க. எங்கப்பாவை வெறும் உடம்பாக்கிடாதிங்களேன்.''

''தினமாய் அழுதவளை நாலைந்து பேர் சமாதானப்படுத்தி அணைத்துக் கொண்டனர்.''

கோபாலனின் உடல் இறக்கப் பட்டு கூடத்தில் கிடத்தப்பட்டது. முகம் சலனமற்று இருந்தது. உடல் முழுக்க வெள்ளைத் துணியால் சுற்றியிருந்தது.

''அதிக நேரம் வெச்சுக்கறது நல்லதில்ல. ஆக்ஸிடென்ட் கேஸ்'' யாரோ சம்பத்திடம் சொல்ல. அவர் தலையாட்டினார். ஏற்பாடுகள் ரெடியாய்ட்ருக்கு போயிருக்காங்க என்றவர் சரண்யாவிடம் வந்தார்.

''அப்பாவைப் பாரு சரண்''

''என்னால முடியல அங்கிள்... என்னை விட்ருங்க. எங்கப்பாவை நா இப்டி பார்க்க மாட்டேன்.''

''இப்டி பிடிவாதம் பிடிச்சா எப்டி? போனவர் இனி வரப்போறதில்ல. ஆகற காரியத்தை கவனிக்கத் தானே வேணும். கிட்டப் போய் உக்காந்து வாய்விட்டு அழுவயா?''

''தூரத்து உறவு ஒன்று அவளைப் பிடித்திழுக்க முயல, சம்பத் அந்த பெண்மணியை கண்களால் விரட்டினார். சரண்யாவைப் பரிவோடு உள்ளறைக்கு அழைத்துச் சென்றார்.''

''சரி.. பார்க்க வேண்டாம். நீ இப்டி உட்கார்.''

''அவளை அழுத்தி உட்கார்த்தி விட்டு தானும் அருகில் அமர்ந்தார். சில நிமிடங்கள் மௌனமாய் நகர்ந்தது. கூடத்திலிருந்து அழுகை ஒலிகள் காதைக் கிழித்தன. அழ வேண்டியவள் அதீத துக்கத்தில் இறுகிப் போய் ஆழ்ந்த அமைதியில் உறைந்திருந்தாள். அத்தனை துக்கமும் உள்ளுக்குள் அழுத்திக் கொண்டிருக்க, அவற்றை வெளிப்படுத்தாது அவள் இறுகிப் போயிருந்தது சம்பத்திற்கு

கவலையாக இருந்தது. உள்ளே உறையும் துக்கம் ஆபத்து. பல தொந்தரவுகளை உடம்பிற்குக் கொடுக்கும். துக்கமோ சந்தோஷமோ வெளிப்படுத்தப்பட்டு விட வேண்டும். மரண வீட்டில் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழும் பழக்கத்திற்குப் பின்னால் இதயத்திற்கு கேடு வருவதைத் தடுக்கும் மருத்துவ உண்மையும் இருப்பது நிறைய பேருக்கு தெரியாது.

''நீ அழ வேண்டாம் சரண். ஜஸ்ட் அப்பாவை வந்து ஒரு பார்வை பார்த்துடு. இதுக்கப்பறம் நீ ஏங்கினாலும் தவிச்சாலும் இந்த வாய்ப்பு உனக்கு கிடைக்காது. இது கடைசி முக தரிசனம். வேற வழியில்ல. துக்கத்தைத் தாங்கிண்டாவது நீ அவரைப் பார்த்துதான் ஆகணும்.''

''மெல்லிய குரலில் அவர் சொல்ல, சரண்யா அசைவின்றி அமர்ந்திருந்தாள்.''

''இங்க பாரு சரண், பிறக்கும்போதே மனுஷனோட மரணமும் தீர்மானிக்கப்பட்டுடறது. எங்கோ எப்பொ, எப்டிங்கறது மனுஷ அறிவுக்கு எட்டாத விஷயம். சுகம் துக்கம், வலி வேதனை எல்லாம் உடம்புக்குதான். ஆத்மாவுக்கு இல்ல. அதுக்கு அழிவும் கிடையாதுன்னு படிச்சதில்லையா நீ. நீ யாரை உன் அப்பான்னு நினைச்சுட்ருந்த? இந்த உடம்பையா இத்துக்குள்ள இருந்த உசிரையா..? இது வெறும் சட்டை சரண்யா. உன் அப்பா சிரஞ்சீவி. அவருக்கு மரணமே கிடையாது. இருந்தாலும் எந்த கை உன்னை தடவிக் கொடுத்து வளர்த்துதோ, எந்த நெஞ்சு உன்னை பாசத்தோட அணைச்சு அன்பைப் பொழிஞ்சுதோ, எந்த முகம் உன்னை புன்னகையோடயும் கருணையோடயும் உங்கிட்ட பேசித்தோ, எந்த விரல்கள் உனக்கு அட்சரம் எழுதக் கற்றுக் கொடுத்ததோ அதையெல்லாம் நீ கடைசியா ஒருமுறை பார்க்க வேண்டாமா? உங்களுக்காக ஓடி ஓடி உழைச்ச சரீரமில்லையா அங்க கிடக்கிறது! எழுந்திரு தாயி... வந்து ஒரு முறை பாரு. எனக்காக இல்ல. உனக்காக இல்ல.

யாருக்காகவும் இல்ல அவருக்காக, உங்கப்பாக்காக வந்து பாரு...''

சரண்யா அவர் தோளில் சரிந்தாள். அவர் அவளை எழுப்பி நிறுத்தி மெல்ல அழைத்துக் கொண்டு கூடத்திற்கு வந்து கோபாலனின் சடலத்திற்கு முன் நிறுத்தினார். சலனமற்றிருந்த அப்பாவின் முகத்தை அவள் கண்கள் வெறித்து நோக்கியது. யார் யாரோ வந்து போட்டிருந்த மாலைகள் அவர் உடம்பை மறைத்திருந்தது. முகம் நிர்மலமாயிருந்தது. தூக்கம் மாதிரிதான் தெரிந்தது.

''கடைசி நேரத்தில் என்ன நினைத்தாய் அப்பா? முடிக்க வேண்டிய வேலைகளும் கடமைகளும் ஏராளமாய் இருக்க இப்படி எல்லாவற்றையும் பாதியில் விட்டு விட்டுச் செல்கிறோமே என்று வேதனைப்பட்டாயா...? சரண்யாவுக்கு இனி யார் துணை என்று கண்கலங்கினாயா? என் பெண்ணுக்கு எதுவும் சேர்த்து வைக்கவில்லையே இனி அவள் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று உருகினாயா...? எவ்வளவு கனவு கண்டாய் அப்பா? எனக்காக உன் சுகங்களைக் கூட சுருக்கிக் கொண்டாயே...! 'இப்பல்லாம் ஒரு பயம் வந்துடுச்சு சரண்யா, உனக்கு ஒரு வாழ்க்கை தேடிக் கொடுக்கற கடமை முடியற வரை என்னை நானே பத்திரமா பாத்துக்கணும்னு தோணுது. உன் கழுத்துல மூணு முடிச்சு விழுந்து நல்ல வீட்ல நீ வாழ்க்கைப் பட்டுட்டன்னா, அதுக்கடுத்த நிமிஷமே சாவு வந்தா கூட சிரிச்சுக்கிட்டே சாவத் தயாராய்டுவேன். புறப்படறதுக்கு முந்தி நீ சொன்ன வார்த்தைகள்தான் நினைவிருக்காப்பா.' நீ உன்னை ரொம்ப பத்திரமாதான் பாத்துட்ருப்ப. ஆனாலும் எப்படிப்பா இதெல்லாம்? ஏன் இவ்ளோ அவசரமா? யார் செய்த சதி.. கடவுளா? அக்கிரமம் பண்றவங்களும், அடுத்தவங்களை வாழ விடாம பண்றவங்களும், நாட்டைச் சுரண்டற நாய்ங்களும் கைல வெடிகுண்டு வெச்சுக்கிட்டு திரியறவங்களுமா எவ்ளோ பேர் இருக்காங்க! அவங்களையெல்லாம் விட்டுட்டு ஒரு ஈ

எறும்பைக் கூட நசுக்க மனசு வராத, அன்பே மூச்சா வாழ்ந்த உன்னைப் போய்இப்டி பாதி வாழ்வுல பலி வாங்க அந்த தெய்வத்துக்கு மனசு வந்துது? என்ன கணக்குல அது மனுஷங்களைக் கொண்டு போவுது...?''

''சரண்... துக்கத்தை அடக்காதே... வாய் விட்டு அழுதுடு..'' சம்பத் மெல்லிய குரலில் சொல்ல, சரண்யா கொஞ்சம் கூட அசையாது அதே வெறித்த பார்வையில் நின்றிருந்தாள்.

''ஓ.. கே... நீ வா.. சரண்... நாழியாறது. மத்த காரியங்களை கவனிக்கணும். போய் தலைக்கு தண்ணி விட்டுக்கிட்டு ஈரத்துணியோட வா. அய்யர் வந்துட்டாரு சத்யா இவளைக் கூட்டிட்டு போய் தண்ணி விட்டு கூட்டிட்டு வா''

''சரண்யா அவர்களோடு மரம் மாதிரி சென்றாள். ஏன் எதற்கு என்ற கேள்வியின்றி பொம்மை மாதிரி அவர்கள் சொன்னதைச் செய்தாள். அப்பாவின் உடல் அலங்கரிக்கப் பட்ட பாடையில் ஏற்றப்பட்டதும் யாரோ அவளை பாடைக்கு முன் அழைத்துச் சென்று கையில் தீச்சட்டி கயிறை திணித்து விட்டு போக சம்பத் மாமாவின் அரவணைப்பில் அணிச்சையாய் நடந்தாள். மூளை எதனையும் உணரவில்லை. விழிகள் எதையும், யாரையும் கவனிக்கவில்லை, சுடுகாடு வந்தது கூடத் தெரியவில்லை. கட்டைகளும், வரட்டிகளும் அடுக்கி, பேருக்கு கொஞ்சம் நெய்யும், கெரஸினும் ஊற்றியதும், ''வா சரண், அப்பாக்கு கொள்ளி வை,'' மாமாவின் குரல் காதருகில் கேட்டதும் திடீரென்று உடம்பு தூக்கிப் போட்டது, தூங்கி விழித்தாற்போல் மலங்க மலங்கச் சுற்றிலும் பார்த்தாள். தான் நிற்குமிடம் எதுவென்று அப்போதுதான் உணர்ந்தாற்போல் மாமாவையும் கட்டை அடுக்கியிருந்த அப்பாவின் உடலையும் மாறி மாறிப் பார்த்தாள்.''

''நெருப்பு வைம்மா..'' யாருடைய குரலோ கேட்க மீண்டும் அவள் தேகம் துடித்து ஆடியது.

''முடியாது மாமா.. நா எப்டி.. அப்பாக்கு... எப்டி மாமா... என்னை விட்ருங்க... என்னால முடியாது.''

''நீ தைரியமான பொண்ணுன்னு நினைச்சேன்! இது ஒரு உரிமை சரண்யா. யாருக்கும் விட்டுக் கொடுத்துடாதே. எழுந்து வா. நா கூட இருக்கேன் இல்ல? வா வந்து வை.''

மாமா அவளை இழுத்துச் சென்று கொள்ளி பிடித்திருந்த அவள் கரத்தை தூக்கிப் பிடித்தார். ''வை சரண்யா''

ஜடம் மாதிரி அப்பாவுக்கு நெருப்பு வைத்தாள்.

''திரும்பிப் பார்க்கக் கூடாதுன்னுவாங்க. அங்க கிணறு இருக்கு மறுபடியும் ஒருமுறை தண்ணி ஊத்திக்கிட்டு கிளம்புங்க.''

''உறவுக்காரர் ஒருவர் சொல்ல அனைவரும் கிளம்பினார்கள்.''

''தண்ணீர் ஊற்றிக் கொள்ளும்போது கட்டுப்பாடு மிறி கண்கள் அப்பாவின் சிதைப்பக்கம் சென்றது. திகுதிகுவென்று செந்நிறத் தீ சிதை முழுக்கப் பரவி சிவதாண்டவமாய் காற்றில் ஆடி எரிந்து கொண்டிருந்தது. அப்பாவா... அப்பாவையா அந்த நெருப்பு...? படாரென்று உள்ளே ஏதோ வெடித்தது.. அடைந்து கிடந்த அழுத்தம் அமானுஷ்ய அலறலாய் பிரசவமாயிற்று. உச்சஸ்தாயியில் அவளுடைய அழுகையொலி கேட்டு மயானமே ஸ்தம்பித்தது. சம்பத்தும், ஆகாஷும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். உடன் வந்த பெண்மணிகள் அவளை சமாதானப்படுத்தச் செல்ல, சம்பத் அவர்களைத் தடுத்தார்.''

''அவ அழட்டும் விட்ருங்க... நீங்கள்ளாம் போங்க. நாங்க கூட்டிட்டு வரோம்.''

''அவர் அனைவரையம் அனுப்பி வைத்தார். ஆகாஷும் அவரும் மட்டும் பொறுமையாகக் காத்திருந்தார்கள். அழுகை

அடங்கி, மனமும் உடலும் பதட்டம் குறைந்து அமைதியானதும் ஒரு பெருமூச்சோடு கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தவள் சுற்று முற்றும் பார்த்தாள்.''

''போலாமா?'' ஆகாஷின் குரல் கேட்க மெல்லிய கூச்சத்தோடு நடந்தாள். கார் அமைதியாக வீடு நோக்கி விரைந்தது.

''ஆகாஷை அனுப்பிவிட்டு அன்றிரவு சம்பத்தும் சங்கீதாவும் அங்கேயே தங்கினார்கள்.''

''மரணம் இவ்ளோ சீக்கிரம் கோபாலனுக்கு வந்திருக்க வேண்டாம்தான். ஆனா வந்துடுச்சே! இந்த உலகத்தின் இயக்கங்களும், ஜனன மரணங்களும் நம்ம கைல இல்லையே. என்ன செய்ய? தாங்கித்தான் ஆகணும். பட்டினத்தார் மாதிரி பட்டுனு அறுத்துட்டு போய்ட முடியாதுதான். அவரே கூட அம்மா செத்தப்பொ அழுது துடிச்சவர்தான். அந்த மரணத்தின் துக்கத்தில் எத்தனையோ பாட்டெழுதிதான் தன் துக்கம் தீர்த்துக்கிட்டார். ஆக துக்கம்ங்கறது மனுஷ இயல்பு. ஆனா அதுலயே துவண்டு போய் நின்னுடக் கூடாது சரண்யா. பூமியின் சுழற்சி எதனாலயும் நிக்காது. அதே மாதிரிதான் நம்ம கடமைகளும். தொடர்ந்து நடந்துக்கிட்டே இருக்கணும். அப்பா என்னென்னல்லாம் ஆசைப்பட்டாரோ அதையெல்லாம் நிறைவேற்றி அவர் ஆத்மாவை சந்தோஷப்படுத்த வேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கு. உனக்கு பக்க பலமா நாங்கள்ளாம் இருக்கோம். நீ எதுக்கும் கவலைப்பட வேண்டாம். சரியா...?''

சரண்யா அப்பாவின் படத்தைப் பார்த்தபடி தலையசைத்தாள்.

''நீ என்ன செய்யப்போறே சத்யா? இனி இவ இந்த வீட்ல தனியார்க்க முடியாது. இதுக்கு ஒரு வழி பண்ண வேணாமா?''

''எங்க வீட்டுக்கு கூட்டிட்டு போயிடறேன் மாமா. நாங்க இருக்கும்போது இவ ஏன் இங்க தனியார்க்க முடியும். அப்டி இருக்க விட்ரதான் முடியுமா?''

''குட்.. பத்து நாள் காரியம் முடியறதுக்குள்ள சாமான்களையும் வேண்டாததை வித்துட்டு வேணுங்கறதை கட்டி எடுத்து வெச்சுக்குங்க. நானும் முடிஞ்சப்பொ எல்லாம் வந்து பார்த்துக்கறேன். உங்களுக்கும் எப்பொ என்ன வேணும்னாலும் எனக்கு போன் பண்ணி தயங்காம கேக்கலாம்.''

''நீங்க மட்டும் ஆதரவா இல்லன்னா நாங்க ரொம்பவே கஷ்டப்பட்ருப்போம்.''

''அதிருக்கட்டும் உன் உடம்பு எப்டி இருக்கு இப்பொ?''

''பரவால்ல. அப்ப வந்தா அபார்ஷன் ஆய்ட்ட விஷயத்தை எப்டி சொல்றது, அவர் துடிச்சுடுவாரேன்னு சரண்யாதான் ரொம்ப தவிச்சுப் போய்ட்டா. அதைக் கேக்கறதுக்கு முந்தியே அவர் போய்ச் சேர்ந்துடுவார்னு நினைச்சுக் கூடப் பார்க்கல.''

சம்பத் பெருமூச்சு விட்டார். பத்து நாள் சமைப்பதற்கு ஒரு மூதாட்டியை ஏற்பாடு செய்திருந்தார். சாப்பாடு தயார் என்று அவள் வந்து சொல்ல ஆளுக்கு ஒரு பிடி சாப்பிட்டு விட்டு படுத்தார்கள். விடி விளக்கும் அகல் விளக்கும் மட்டும் எரிய அலுப்பில் சம்பத் படுத்ததும் தூங்கிப் போனார். சற்று நேரத்தில் சங்கீதாவும் சத்யாவும் பேசியபடி உறங்கிப் போக சரண்யாவுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. கண்ணை மூடினால் அப்பாவின் முகம் வந்து நின்றது. அடிபட்டு அவர் மரண அவஸ்தையில் துடிக்கும் காட்சி கண்ணில் விரிந்து இதயத்தில் வலியை ஏற்படுத்தி கண்களைப் பொங்க வைத்தது. சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். தூக்கத்தில் சத்யா ஏதோ குழறலாய் உளறினாள்.

''அக்காவும் அத்தானும், அவர்கள் வீட்டினரும் நல்ல மாதிரிதான். அதில் எந்த சந்தேகமும் இல்லை. இருந்தாலும்

அங்கே போய் தங்குவதென்பது சரிப்படுமா? முழுக்க முழுக்க ஒருவரை வீட்டில் வைத்து பராமரிப்பதென்பது இன்றைய சூழலில் யாருக்காயிருந்தாலும் கஷ்டம்தான். அப்படி ஒரு கஷ்டம் தன்னால் ஏற்பட்டு, அது அக்காவுக்கு சிரமத்தைக் கொடுத்து விட்டால்...?''

'சரண்யா கவலையோடு யோசித்தாள்.'

விழிக்க மாட்டார்கள் வியாபாரிகள் நீங்கள்!
பணங்காய்த்தால் மட்டுமே நீங்கள் மரம் பாய்ச்சீர்கள்.
வைரத்துண்டுகள் விழுந்தால் மட்டுமே நீங்கள் மழை பாய்ச்சீர்கள்.
தங்கம் விழுகிறது என்று தலைல் வந்தாலொழிய
நீங்கள் தனிர் பார்க்க மாட்டார்கள்.
(சிரோங்களை நோக்கி-வைரமுத்து)

பத்து நாளும் சம்பத் காலையில் வந்து இரவில் வீடு திரும்பினார். அம்மாவின் அடக்குமுறையால் சங்கீதாவாலும் அங்கு தங்க முடியவில்லை. சாரதா ஊர் வாய்க்கு பயந்து முதல் நாள் ஒரு அரை மணி வந்து இருந்ததோடு சரி. அன்றும் கூட அதிகம் பேசவில்லை. அவளோடும் யாரும் பேச முயற்சிக்கவுமில்லை. பத்தாவது நாள் காரியத்திற்குக் கூட அவள் வரவில்லை. சம்பத்தோடு சங்கீதாவும் ஆகாஷும் வந்து அன்று முழுக்க அங்கிருந்தார்கள்.

சாயங்காலத்திற்கு மேல் சங்கீதாவை அழைத்துக் கொண்டு ஆகாஷ் கிளம்பினான்.

''நாமளும் கொஞ்ச தூரம் நடந்துட்டு வரலாம் வா சரண்'' மாமா அழைக்க சரண்யா உடனே கிளம்பினாள். சத்யா

டயர்டாக இருக்கிறது என்று சொல்லி வீட்டிலேயே தங்கிவிட்டாள்.''

''நீங்க வாக்கிங் போக கூப்ட்டதும் ஒரு விதத்துல நல்லதா போச்சு மாமா. எனக்கு உங்ககிட்ட கொஞ்சம் பேசணுமார்ந்துது.''

''என்ன விஷயம்?''

''அக்காவும் மாமாவும் அவங்க வீட்ல எல்லாரும் ரொம்ப நல்லவங்கதான். இருந்தாலும் முழுக்க முழுக்க நா அங்கயே போய் இருக்கறது எந்த அளவுக்கு சரிப்படும்னு எனக்கு தெரியல. தூரத்து பச்சைதான் என்னிக்கும் குளுமை. கிட்டப் போணுமான்னு யோசிக்கறேன்.''

''போகாம... தனியாவா இருப்ப...?''

''எங்கயாவது ஹாஸ்டல்ல என்னை சேர்த்து விட முடியாதா மாமா...?''

''இந்த வார்த்தையை சத்யாகிட்டயும் அவ புருஷன்கிட்டயும் சொன்னா அவங்க எவ்ளோ வருத்தப்படுவாங்கன்னு யோசிச்சயா சரண்?''

''நிச்சயம் வருத்தப்படுவாங்கதான். ஆனா அதே நேரம் அவங்களுக்கு பாரமாய்டக் கூடாதுங்கற என் எண்ணத்தை புரிஞ்சுக்கிட்டா வருத்தத்துக்கு இடமேயில்லையே!''

''நா எது சொன்னாலும் கேப்பயா சரண்?''

''சொல்லுங்க மாமா.''

''நல்லவங்களை நமக்கு தெரியாம கூட காயப்படுத்தக் கூடாது சரண். என்னோட அபிப்ராயம். நீ சத்யாவோட போய் இருக்கறதுதான் எல்லா விதத்துலயும் உனக்கு நல்லது. நீ ஹாஸ்டல்ல போய் தங்கினா, ஊர், அவங்களைத்தான் தப்பா பேசும். அதுக்கு இடம் கொடுக்கலாமா. நீ? எதைப்பத்தியும் நீ இப்போ குழப்பிக்காம அவங்க வீட்ல போய் இரு சரண்.

உன்னால அவங்களுக்கு எந்த பிரச்சனையும் வரப் போறதில்ல. நீ என்ன குழந்தையா பிரச்சனை கொடுக்க..? எங்க இருந்தாலும் அந்த சூழலுக்கு ஒத்துப்போய் நடந்துக்கற பக்குவம் உங்கிட்ட இருக்கும்போது என்ன பிரச்சனை வந்துடப் போறது? பணம் கூட ஒரு பிரச்சனையாகப் போறதில்ல. மாசா மாசம் உன் செலவுக்குன்ன ஒரு தொகையை நா குடுத்துடறதா இருக்கேன். தவிர ஆக்ஸிடென்ட் கேஸ்ங்கறதால நஷ்ட ஈடா ஒரு தொகை வாங்கவும் ஆகாஷ் முயற்சி பண்ணிட்ருக்கான். அந்த பணம் உன்னோட மேல் படிப்புக்கு உதவியா இருக்கும். அதனால இப்போதைக்கு எந்த கவலையுமில்லாம, படிப்புல மட்டும் கவனம் செலுத்து. என்னல்லாம் கத்துக்கணும்னு நினைக்கறயோ கத்துக்க. எப்பொ எந்த உதவி வேணும்னாலும் எனக்கோ ஆகாஷ்க்கோ போன் பண்ணு. இதையெல்லாம் மீறி பிரச்சனைன்னு உனக்கு ஏதாவது அங்க ஏறபட்டால... எதுவும் ஏறபடாது.. அபடி ஏறபட்டால... அப்பொ ஹாஸ்டலைப் பத்தி யோசிப்போம் சரியா?''

''மாமா சொல்வதும் சரிதான் என்று தோன்றியது. அதற்கு மேல் அதைப்பற்றி பேசவில்லை. நீங்க சொல்றாப்பல சத்யா வீட்டுக்கே போயிடறேன் மாமா. அதான் சரி என்றாள்.''

''குட்... இப்பொ குழப்பம் எதுவுமில்லையே''

''இல்ல''

''வீட்டுக்குப் போலாமா? ரொம்ப தூரம் நடந்துட்டோம்.''

''அவர்கள் திரும்பி நடந்தார்கள்.''

''அதற்கடுத்த வாரம், தேவையில்லாத சாமான்களையும் வந்த விலைக்கு கடையில் போட்டு விட்டு முக்கியமான வற்றை மட்டும் வண்டியில் ஏற்றிக் கொண்டு வீட்டை காலி செய்து கொண்டு கிளம்பினார்கள்.''

''வீட்டைப் பூட்டும்போது அழுகை வந்தது. நினைவு தெரிந்த நாளாய் வளைய வந்த வீடு, அப்பாவோடு சிநேகமாய் உட்கார்ந்து எவ்வளவோ விஷயங்கள் பேசிய இடம்!''

''அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் என்ற சங்கப் பாடல்தான் நினைவுக்கு வந்தது. நாடு, வீடு, தந்தை எல்லாவற்றையும் இழந்த ராஜகுமாரிகளின் சோகம்தான் இன்று அவளுக்குள்ளும் நிறைந்திருக்கிறது. அன்றொரு நாள் இதே வெண்ணிலவு நேரத்தில் அப்பா இருந்தார். அரண்மனை இருந்தது. அரசாள நாடிருந்தது. இன்று நிலவு மட்டும் இருக்கிறது. மற்ற எதுவும் இல்லை.. சோகத்தை இவ்வளவு அழகாய்ச் சொல்ல முடியுமா? சோகத்திலும் வியப்பேற்பட்டது அவளுக்கு. அப்பாவை இழந்து, வீட்டை காலி செய்து கொண்டு கிளம்ப வேண்டிய நிலை தனக்கேற்படும் என்று பதினைந்து நாளுக்கு முன் நினைத்திருப்போமா...?''

''வா சரண்..!'' பூட்டிய கதவையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்ற தங்கையை அழைத்துக் கொண்டு வேனில் ஏறினாள் சத்யா.

''என்ன ஆண்ட்டி தனியா சாப்பிடறீங்க'' சற்று லேட்டாக வீடு திரும்பிய சுஜிதா தனியே சாப்பிட்டுக் கொண்டிருந்த சாரதாவின் அருகில் வந்து அமர்ந்தாள்.

''பத்து நாளா எம்புருஷனுக்கும் பிள்ளைக்கும் அங்கதானே சாப்பாடு! பத்து நாளாவே தனியாதான் சாப்ட்டுட்ருக்கேன். நீ காலேல போனா ராத்திரிதான் வர. வர வர இந்த வீட்ல என்னை யாரும் சட்டையே பண்றதில்ல சுஜி..''

''என்னையும் சேர்த்துதான் சொல்றீங்களா?''

''ச்சேச்சே நா உன்னைச் சொல்லலம்மா எம் பசங்களைச் சொன்னேன்.''

''ஹாய் சுஜி... இப்பதான் நீயும் வந்தயா?'' ஆகாஷின் குரல் கேட்க சுஜி எழுந்தாள்.

''சாப்ட்டயா நீ?''

''இப்பதான் வந்தேன். இனிமேதான், ஏன் ஆகாஷ் அம்மாவை யாருமே கவனிக்கறதில்லையாம். அத்தை எவ்ளோ வருத்தப்படறாங்க பாருங்க.''

''யார் கவனிக்கல? எப்பவும் போலதானே நாங்க இருக்கோம்.''

''ஒண்ணு சொன்னா வருத்தப்பட மாட்டீங்களே?''

''என்ன?''

''சொந்தக்காரங்க தேவைதான். அதுக்காக பத்து நாள் ராப்பகலா அங்கேயே கிடக்கறது நல்லாவா இருக்கு? அத்தை மனசை நோக விட்டுட்டு என்ன வேண்டியிருக்கு மத்த உறவு?''

''ஒருத்தருக்கொருத்தர் இந்த மாதிரி சந்தர்ப்பங்கள்ள உதவிக்கறதுக்குதான் தெய்வம் உறவுகளை உருவாக்கி இருக்கு. நாளைக்கு நமக்கும் கஷ்டம் வரலாம். நாலு பேர் உதவி தேவைப்படலாம். எப்பவும் இப்டியே இருந்துட மாட்டோம்.''

''சரி... அதுக்காக அம்மாவை அலட்சியப்படுத்தி பேசறது சரியா?''

''யார் அப்டி பேசினாங்க இப்பொ?''

''நீங்க பேசல, உங்கப்பாவும் தங்கையும் பேசறாங்க. அத்தையை அழ வெக்கறாங்க. அதெல்லாம் தப்புன்னு நீங்கதான் அவங்ககிட்ட சொல்லணும்.''

''அப்டி என்ன இப்பொ இங்க பிரச்சனை? உப்புப் போறாத விஷயத்தையெல்லாம் பெரிசாக்கறதே உனக்கு வேலையாப் போச்சும்மா.''

''நா சொல்லல சுஜி. அவங்க மூணு பேரு ஒரே கட்சிதான். அப்டி என்னதான் அந்த வீடு வசியம் போட்டுதோ.. இப்டி போய் எல்லாத்தையும் அங்க கொட்டிட்டுருக்காங்க.''

''எதுக்கும்மா நீ இப்பொ வார்த்தையைக் கொட்ற?''

''ஆமாண்டா நா வாயைத் திறந்தாலே உங்களுக்கெல்லாம் குத்தம்தான்.''

''நீ எதுக்கு இப்படி கத்தறன்னே எனக்கு புரியல. நா மேல போறேன்.''

''ஆகாஷ் விறுவிறு என்று மாடிக்குப் போனான்.''

''என் நிலைமையைப் பார்த்த இல்ல சுஜி. என்னைவிட அந்த பொண்ணு முக்கியமாப் போய்ட்டா இவங்களுக்கு! இவங்க கேக்கறப்ப எல்லாம் வாயப் பொத்திக்கிட்டு பணத்தை எண்ணிக் கொடுக்க மட்டும்தான் நான். இன்னும் கொஞ்ச நாள் இப்டியே போச்சுன்னா அவளை சட்டமா இந்த வீட்டுக்கே கூட்டிட்டு வந்துடுவாங்க. என் இடுப்புலேர்ந்து சாவிக் கொத்தைப் பிடுங்கி அவ இடுப்புல சொருகினாலும் ஆச்சர்யப்படறதுக்கில்ல. அப்பவும் நா ஏன்னு வாயைத் திறந்துடக் கூடாது.''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது ஆண்ட்டி. நீங்க அனாவசியமா பயப்படறீங்க?''

''இல்ல சுஜி.. இதான் நடக்கப் போவுது பார்''

''அப்படியே நடந்தாலும் நாம என்ன செய்ய முடியும்?''

''அவர் திட்டம் வேற சுஜி. அந்த திட்டத்தை முறியடிக்கணும்னா ஒரே வழி, உங்க கல்யாணம் சீக்கிரம் நடந்து, இந்த சாவிக் கொத்து உன் கைக்கு வரணும்.''

''மை காட்.. என் கைல சாவிக் கொத்தா? ரொம்ப நல்லார்க்கு ஆண்ட்டி. எனக்கு வேணாம்ப்பா. நா ஜாலியார்க்கறது உங்களுக்கு பிடிக்கலையா?''

''என்னிக்கிருந்தாலும் நீதானே பொறுப்பேத்துக்கணும்?''

''நோ ஆண்ட்டி. அதுக்காக இப்ப திடுதிப்புனு கல்யாணம் பண்ணிக்குங்கன்னா எப்டி? என் ஸ்டடீஸ் முடியணும். எங்க வீட்டை நாகன்வின்ஸ் பண்ணணும். அப்பறம் தான் கல்யாணம். வேணும்னா ஒண்ணு செய்ங்க. உங்களுக்கு மாமாகிட்ட பேச பயமார்ந்தா ஜஸ்ட் ஒரு மாசத்துக்கு எங்கிட்ட சாவிக் கொத்தை கொடுத்துட்டேன்னு பொய்

சொல்லுங்க. சாவிக் கொத்து எங்கிட்ட தர வேண்டாம். மாமாவோ, ஆகாஷோ, சங்கீதாவோ பணம் வேணும்னா எங்கிட்ட கேக்கட்டும். ஏன் எதுக்கு என்ன செலவுன்னு நா பக்குவமா கேக்கறேன். அவங்க சொல்றதை நா உங்ககிட்ட சொல்றேன். ஓகேன்னா நீங்க பணம் குடுங்க. இல்லாட்டி கிடையாதுன்னு சொல்லிடுங்க.''

''நீ வேற.. இதெல்லாம் சரிப்படாது சுஜி. அவங்க எங்கிட்ட பணம் கேக்கறதே அபூர்வம்தான். ரெண்டு பேரும் கிரெடிட் கார்டு வெச்சிருக்காங்க.''

''கிரெடிட் கார்டை காணாமடிச்சுட்டீங்கன்னா?''

''அப்டி செய்யலான்றயா?''

''டெம்ப்ரவரியாத்தானே. எப்டியாவது ரெண்டு பேர் கிரெடிட் கார்டையும் எடுத்து ஒளிச்சு வெச்சுருங்க. ஒரு மாசம் அழ வைங்க. பணத்துக்கு உங்ககிட்ட தானே வந்தாகணும். நாம கஷ்டப்பட்டு சம்பாதிக்கற பணம் ஏன் நாலா பக்கமும் வழிஞ்சு ஓடணும் ஆண்ட்டி?''

''சாரதா யோசனையோடு தலையாட்டினாள்.''

''அதற்கடுத்து வந்த நாட்களில் சுஜிதா சொன்னது போல் இரண்டு பேரின் கிரெடிட் கார்டையும் எடுத்து தன் பீரோவில் பத்திரப்படுத்தினாள்.''

''முதல் இரண்டு நாளுக்கு கிரெடிட் கார்டு காணாமல் போனது கூட இருவருக்கும் தெரியவில்லை. செலவும் ஏற்படவில்லை. காரில் பெட்ரோல்ஃபுல்லாக இருந்ததால், போவதும் வருவதுமாக இருந்தார்கள்.''

''நாலாவது நாள்தான் சம்பத் தன் காருக்கு பெட்ரோல் போட வேண்டியிருந்தது. கிரெடிட் கார்டு இல்லை என்பது புரிய ஒரு வினாடி யோசித்தார். வீட்டிலேயே விட்டு விட்டோமோ என்று நினைத்தபடி பெட்ரோல் போடாமலேயே வீட்டுக்கு வந்தார்.''

''தன் அறை முழுக்க கார்டை தேடிவிட்டு சாரதாவிடம் கேட்டார்.''

''எனக்கென்ன தெரியும்? நீங்க எங்க விட்டீங்களோ? நாலு நாளா எந்தெந்த வீட்டுக்கெல்லாம் போனிங்கன்னு யோசிச்சு பாருங்க.''

''சம்பத் அவளை முறைத்தார். சரி ஒரு ஆயிரம் ரூபா பணம் கொடு அப்பறம் நிதானமா கார்டை தேடிக்கறேன்.''

''சாரி எங்கிட்ட இல்ல. சாவிக்கொத்தை என் வருங்கால மருமககிட்ட கொடுத்து ரெண்டு மாசமாகுது. நானே செலவுக்கு அவகிட்ட தான் பணம் கேக்கறேன். நம்மளை விட அந்த பொண்ணு பொறுப்பா இருக்கா தெரியுமோ. செலவு கொஞ்சம் கட்டுப்படட்டும்னுதான் பொறுப்பை அவகிட்ட கொடுத்தேன். என்னிக்கிருந்தாலும் பொறுப்பேத்துக்க வேண்டியவ அவதானே. அவ கீழ வந்ததும் அவகிட்ட கேட்டுக்கங்க.''

''சம்பத் திகைப்போடு அவளைப் பார்த்தார். ஒரு வினாடிதான் தன் முக மாற்றத்தை மறைத்துக் கொண்டு அவளை உற்றுப் பார்த்தார்.''

''ரொம்ப சந்தோஷம் யாரோ ஒரு பொண்ணுகிட்ட கையேந்தி நிக்க வேண்டிய அவசியம் எனக்கில்ல. ஆகாஷ் வரட்டும் அவன் கார்டுல பெட்ரோல் போட்டுக்கறேன்.''

''உங்க இஷ்டம். நா செய்யற எந்த நல்ல காரியத்தை நீங்க பாராட்டியிருக்கீங்க?''

''நல்ல காரியமார்ந்தா நிச்சயம் பாராட்டி இருப்பேன்.''

''சம்பத் தன் அறைக்கு வந்தார். அவருடைய செல்போன் அடித்தது.''

''ஹலோ...''

''அப்பா நாந்தான் பேசறேன். என் கிரெடிட் கார்டை வீட்லயே விட்டுட்டேன்னு நினைக்கறேன். ஸ்பென்சர்

பிளாசாலேர்ந்து பேசறேன் என் பிரண்டுக்கு அனுப்பறதுக்காக கொஞ்சம் சாமான் எல்லாம் வாங்கினேன். கார்டைக் காணும். நீங்க உடனே உங்க கார்டோட வாங்க. இல்லாட்டி ஒரு ஐயாயிரம் கேஷ் கொண்டு வாங்க. ரொம்ப அர்ஜன்ட்.''

''அவர் பதில் சொல்வதற்குள் அவன் தொடர்பைத் துண்டித்துவிட சம்பத் அட ராமா என்பது போல் ஒரு நிமிடம் உட்கார்ந்து விட்டார். திடீரென்று இருவரது பர்ஸிலும் ஒரே நேரத்தில் கிரெடிட் கார்டு இல்லாமல் போயிருப்பது சந்தேகத்தைக் கிளறிவிட்டது. இது திட்டமிட்ட சதியாக இருக்குமோ என்று தோன்றியது. இப்போது என்ன செய்வது. ஆகாஷ் அவசரத்தில் இருக்கும்போது முதலில் அந்த பிரச்சனையைத் தீர்க்காமல் சாரதாவிடம் சண்டை போடுவது சரியாக இருக்காது. அவர் எப்போதுமே கைவசம் நூறு இரு நூறுக்கு மேல் வைத்திருக்க மாட்டார். செலவு என்று பெரிதாக அவருக்கு இருக்காது. கிரெடிட் கார்டு உபயோகித்தே பழக்கமாகி விட்டது. வீட்டுச் செலவுகளை எல்லாம் சாரதா பார்த்துக் கொண்டு விடுவதால் தனிப்பட்ட செலவு என்று ஒன்றும் அவருக்கு ஏற்படுவதில்லை. வெளியில் எதுவும் வாங்கி சாப்பிடும் வழக்கமும் கிடையாது என்பதால் பணமாக அதிகம் வைத்துக் கொள்வதில்லை. சம்பத் யோசித்தார். வேறு வழியில்லை. உடனடியாக ஒரு ஐயாயிரமும் பெட்ரோலுக்கு பணமும் கேட்டுதான் ஆக வேண்டும்.''

''மறுபடியம் சாரதாவிடம் வந்தார்.''

''உம் பிள்ளை போன் பண்ணினான். அவன் கிரெடிட் கார்டையும் காணுமாம். ஸ்பென்சர் பிளாசால ஐயாயிரத்துக்கு பர்ச்சேஸ் பண்ணிட்டு பணமில்லாம நிக்கறான். அவகிட்ட சொல்லி உடனே பணத்தைக் கொண்டு குடுக்க சொல்லு. நா சொல்றதைச் சொல்லிட்டேன். உன் இஷ்டம். இல்ல உம் பிள்ளை வந்து கணக்கு கேட்டுட்டு தான் பணம் குடுப்பன்னா அவன் செல் நம்பர்ல அவங்கிட்ட இந்த திடீர் உத்தரவைப் பத்தி சொல்லிடு.''

''பொறுப்பை அவள் தலையிலேயே கட்டிவிட்டு நகர்ந்தார்.''

''சற்று நேரம் திருதிருவென்று விழித்த சாரதா அவசரமாக சுஜியை கீழே அழைத்து விஷயத்தைச் சொன்னாள்.''

''இப்ப என்ன செய்யலாம் ஆண்ட்டி?''

''ஆகாஷ் கிட்ட இப்ப எதுவும் பிரச்சனை பண்ணிக்க வேண்டாம். நா பணம் தரேன். நீ போற வழில பெட்ரோல் போட்டுக்கிட்டு போய் பணத்தைக் குடுத்துட்டு வந்துடு. மத்ததெல்லாம் அப்பறம் பேசிப்போம்.''

''சரி எடுத்து வைங்க. நா டிரெஸ் மாத்திக்கிட்டு வந்துடறேன்.''

''சுஜிதா மாடிக்கு போய் உடை மாற்றிக் கொண்டு சம்பத்தின் காரை தானே ஓட்டிக் கொண்டு கிளம்பினாள். போகும் வழியில் பத்து லிட்டர் பெட்ரோல் போட்டுக் கொண்டாள்.''

''உன்னை அனுப்பிட்டாரா அப்பா?'' ஆகாஷ் வியந்தான். பணத்தைக் கட்டிவிட்டு சாமான்களை காரில் ஏற்றியவன் சுஜியின் வண்டியருகில் வந்தான்.''

''ஓ கே சுஜி நீ கிளம்பு. நா வந்துடறேன். உனக்கு சிரமம் குடுத்துட்டேன் இல்ல. சாரிமா..''

''பரவால்ல'' சுஜி வண்டியில் ஏறி கதவை சார்த்தும்போது நாலைந்து பேர் அவள் வண்டியைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களைப் பார்த்ததும் அதர்ந்து போனாள் அவள். ஆகாஷ் பதறிப் போய் கிட்டே வந்தான்.

பணம் என்பது ஆழங்காண முடியாத பெருங்கடல்
அதில் பெருமை, மனசாட்சி, உண்மை
எல்லாமே மூழ்கி விடும்.

-கோன்லே.

"அப்பாவையும் சித்தப்பாக்களையும் அந்த இடத்தில் எதிர்பார்க்கவில்லை சுஜிதா. ஒரு பக்கம் உடம்புக்குள் நடுக்கமேற்பட்டாலும் அதை மறைத்துக் கொண்டு, தான் மிகவும் தைரியசாலி என்பதைக் காட்டிக் கொள்ள அவர்களை நேருக்கு நேர் பார்த்தபடி காரை விட்டிறங்கினாள்."

"யார்...யார் சுஜி இவங்கள்ளாம்...?" பதறியபடி கிட்டே வந்த ஆகாஷை அவர்கள் அலட்சியமாகப் பார்த்தார்கள்."

"ஸோ... இந்த பிச்சைக்காரனைத்தான் நீ கட்டிக்கப் போற...!"

"மிஸ்டர் என்ன பேசறீங்க... யாரைப் பார்த்து..."

"ஷட் அப்..! நீ பிச்சைக்காரன்தாண்டா எங்களை பொறுத்தவரை. உன் வீட்ல ரெண்டு கார் இருந்துட்டா நீ பணக்காரனா. எங்களுக்கு ரெண்டு கப்பலே இருக்கு தெரியுமா உனக்கு..? இந்தியால விரல் விட்டு எண்ணிடற மல்ட்டி மில்லியன்கள்ள நானும் ஒருத்தன்னு எம் பொண்ணு உங்கிட்ட சொல்லலையா..? இல்ல அதெல்லாம் தெரிஞ்சுதான் அவளை வளைச்சுப் போட்டயா...? ஜஸ்ட்... இப்படி ஒரு சொடக்கு போட்டு, உங்க அத்தனை பேரையும் ஏதாவது கேஸ் போட்டு உள்ள தள்ளிட்டு என் பொண்ணை

இழுத்துக்கிட்டு போக ரெண்டு நிமிஷம் ஆகாது எனக்கு. போனாப் போகட்டும் பிழைச்சுப்போன்னு விட்டுடறேன். அவளை எங்கூட அனுப்பி வை. உனக்கேத்த ஒரு பிச்சக்காரியா பார்த்து தாராளமா நீ கல்யாணம் பண்ணிக்க. ஒரு ரெண்டு லட்சமோ மூணு லட்சமோ நானும் மொய் எழுதிட்டு போறேன்.''

''அவர் பேசப்பேச ஆகாஷின் முகம், ரத்தச் சிவப்பாய் மாறியது. காதும், தாடையும் துடித்தன. அவர்களை முறைத்துப் பார்த்தான்.''

''உங்க பொண்ணு வந்தா தாராளமா கூட்டிட்டு போய்யா... ஆனா அவளை இழுத்துட்டு போனா நீதான் உள்ள இருப்ப. சட்டம் உன் பாக்கெட்ல இல்ல. எனக்கும் சட்டம் தெரியும்னு எச்சரிக்கறேன் உன்னை.''

''அவர் சுஜிதாவைப் பார்த்தார்.''

''இதோ பார் நா உன்னை இழுத்துட்டு போய் அசிங்கப்படத் தயாரால்ல. ஆனா உன்னைப் பெத்தவங்கற முறைல கேக்கறேன். உங்கம்மா சரியா சாப்பிட்டு ஒருமாசமாவுது. இப்ப அவளும் இங்கதான் இருக்கா, உடம்பு வேற சரியில்ல அவளுக்கு. ஒரு முறை அவளை வந்து பாரு. ஒரு மணி நேரம் உன்னோட நாங்க பேசினா போறும். உன் மனசு மாறிடும்ங்கற நம்பிக்கை எங்களுக்கிருக்கு. ஒவ்வொரு நிமிஷமும் எங்களுக்கு லட்ச ரூபாய்னு உனக்கு நல்லா தெரியும். உனக்காக பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும் பரவால்லன்னு இங்க வந்திருக்கோம் பிஸினஸை எல்லாம் விட்டுட்டு. ஜஸ்ட் ஒரு மணி நேரம் எங்களோட வா. எங்களுக்கு உன் கூட மனசு விட்டு பேச ஒரு சந்தர்ப்பம் கொடு. அதுக்கப்பறமும்இவனைத் தான் கட்டிப்பேன்னு நீ சொன்னா நாங்க தடுக்க மாட்டோம். தாராளமா நீ இவனோடயே போலாம். உனக்கு இங்கயே தலை முழுகிட்டு நாங்க போயிடறோம். என்ன சொல்ற. உன் காதல்ல உனக்கு

நம்பிக்கையிருந்தா தைரியமா எங்களோட வரலாமே? நா வேணா கியாரண்ட்டி தரேன். ஒரு மணி நேரத்துக்கு மேல நாங்க உன்னைப் பிடிச்சு வெச்சிருக்கோம்னு நினைச்சா இவன் தாராளமா போலீஸோட வரட்டும். இந்தா என் கார்டு.''

''அவர் தன் கார்டையும் தற்காலிகமாக தங்கியிருக்கும் ஹோட்டல் விலாசத்தையும் ஆகாஷிடம் நீட்டினார். சுஜிதா தர்ம சங்கடத்தோடு ஆகாஷைப் பார்த்தாள்.''

''ஓகே...திஸ் இஸ் ஜென்டில்மென் அக்ரிமென்ட் சுஜி. அவர் சொல்றதும் நியாயம்தான். நீ தைரியமா இவங்களோட போ. ஒரு மணி நேரம் என்ன? ஒரு வாரம் கூட இரு. எனக்கு உன் மேல நம்பிக்கையிருக்கு. நீ மனசு மாறமாட்டன்னு உங்கம்மாவைப் பார்த்து பேசிட்டு வா. காரை நானே ஆள் வெச்சு எடுத்துட்டு போயிடறேன்.''

''சுஜிதா ஒரு வினாடி யோசித்தவள் பிறகு அப்பாவோடு கிளம்பினாள். ஆகாஷ்தன் பிரண்டு ஒருவனுக்கு போன் பண்ணி உடனே வரச் சொன்னான். அவன் மூலம் சுஜிதா வந்த காரை வீட்டுக்கு ஓட்டி வந்தான்.''

''சுஜி எங்கடா...?''

''அவங்கப்பா வந்திருக்காரு. ஸ்பென்சர்ல பாத்தோம். அவங்கம்மாக்கு உடம்பு சரியில்லையாம். இவளை அவசரமா அழைச்சுக்கிட்டு போயிருக்காரு.''

''மும்பைக்கா..?''

''இல்ல இங்கதான் இருக்காங்க.''

''ஏண்டா அவங்களை வீட்டுக்கு வரச்சொல்லக் கூடாதா..? வழில கூட்டிட்டு போயிருக்காங்க.''

''அவங்க அவசரம் அவங்களுக்கு ரெண்டு நாள்ல வந்துருவா விடு. நீ போய் இவனுக்கு காபி கொண்டா.''

''இல்லடா டைம் ஆய்டுச்சு. சாப்பிடற நேரம். நா கிளம்பறேன்.''

''ரொம்ப தேங்க்ஸ்டா. நீ ஒரு ஆட்டோ பிடிச்சு போய்டு. இந்தா'' அவன் பாக்கெட்டில் நூறு ரூபாயைத் திணித்து வாசல் வரை வந்து வழியனுப்பி விட்டு உள்ளே வந்தான்.''

''என் கிரெடிட் கார்டு பாத்தயாம்மா?''

''எனக்குத் தெரியாது. எங்கயாவது விட்ருப்ப.''

''அதெப்டிடா ஆகாஷ் ரெண்டு பேரோட கிரெடிட் கார்டும் ஒண்ணா காணாம போகும்?''

''அப்டின்னா உங்களதும் காணுமா?''

''காணாமல்லாம் போகலடா. கடத்தி வெச்சிருக்காங்க யாரோ.''

''நாந்தான் எடுத்து ஒளிச்சு வெச்சுட்டேன்னு நேரடியா சொல்ல வேண்டியதுதானே. இந்த வீட்ல என்னைத்தவிர வேற யார் இருக்கா பழி ஏத்துக்க?'' சாரதா வெடித்தாள்.

''நா உன்னையா சொன்னேன். உனக்கு ஏன் பொத்துக்கிட்டு வருது?''

''பின்ன.. எப்பப்பாரு எங்கிட்ட சண்டை. தொட்டதுக் கெல்லாம் குத்தம்! இவருக்கு இந்த வீடு பிடிக்கலடா ஆகாஷ், என்னைப் பிடிக்கல, உன்னைப் பிடிக்கல, உன் காதல் பிடிக்கல, சுஜிதா வந்திருப்பது பிடிக்கல, மருமகளாகப் போறவதானேங்கற ஆசைல அவகிட்ட நா இந்த வீட்டுப் பொறுப்பைக் கொடுத்தது பிடிக்கல. சாவிக் கொத்தை எப்டி அவகிட்ட குடுக்கலாம்னு எங்கிட்ட ஒரே சண்டை! அப்டி என்ன பெரிய தப்பு நா பண்ணிட்டேன்? வரப்போற மருமககிட்ட ஆசையார்க்கறது தப்பா? நீயே சொல்லுடா ஆகாஷ். நா சுஜிதாகிட்ட பிரியமார்க்கறது இவருக்கு பிடிக்கல. நீ இவளை லவ் பண்ணினதுக்கு பதிலா அந்த

சரண்யாவை லவ் பண்ணியிருந்தன்னா இவர் ரொம்ப சந்தோஷப்பட்ருப்பார். இவளுக்கு பதிலா அவ வந்து இந்த வீட்ல இருந்திருந்தா சாவிக்கொத்தென்னடா... சகல சொத்தையும் அவ பேருக்கு மாத்தி எழுதி குடுத்திருந்தா கூட ஒண்ணும் சொல்லமாட்டார். உண்டா இல்லையான்னு அவரையே கேளு. சுஜியை இந்த வீட்டை விட்டு விரட்ட இவர் நடத்தற நாடகத்தோட முதல் காட்சிதான் இந்த கிரெடிட் கார்டு நாடகம். இதுக்கு மேல புரிஞ்சுக்கிட்டு நடக்கற சமர்த்து உன்னோடது!''

''அம்மாவின் குற்றச்சாட்டில் ஒரு வினாடி ஸ்தம்பித்துப் போனான் ஆகாஷ். அம்மா சொல்வதை நம்பவும் முடியவில்லை. நம்பாமலிருக்கவும் முடியவில்லை. அப்பா சுஜியிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை என்று சுஜிதாவே அவனிடம் பலமுறை வருத்தப்பட்டிருக்கிறாள். சரண்யா நல்ல பெண்தான். ஆனால் சுஜிதாவின் மீது அவன் மனம் சென்ற பிறகு, அவன் காதலை மதிப்பதுதான் தர்மம் என்பது அப்பாவுக்கு தெரியவில்லையா?''

''அவன் தர்ம சங்கடத்தோடு அப்பாவைப் பார்த்தான். அவர் ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்தார். சாரதாவின் சாதுர்யம் அவரை அசத்தியிருந்தது. என்ன அழகாக அப்பாவுக்கும் பிள்ளைக்குமிடையில் விரிசலை ஏற்படுத்தி அதன் மூலம் சுஜிதாவின் ஸ்தானத்தை பலப்படுத்தி சரண்யாவின் மீது அவனுக்கு வெறுப்பு வரும் வழியை உருவாக்கி... அடேயப்பா என்ன சாதுர்யம் என்று வியந்தார். அதே நேரம் ஆகாஷின் மௌனம் அவரை என்னவோ செய்தது. என்ன பேசற நீ அபத்தமா..? என்று அம்மாவை அவன் அடக்குவான் என்று நினைத்தவருக்கு அவன் மௌனம் ஏமாற்றத்தையளித்தது. அவன் மனசில் ஏதோ ஒரு கோப விதை விழுந்துவிட்டது புரிந்தது.''

ஆகாஷ் மௌனமாக அங்கிருந்து நகர்ந்ததைக் கண்டதும் வேதனை இன்னும் கூடியது.

சாரதாவை ஒரு பார்வை பார்த்து விட்டு அவரும் மௌனமாகத் தன் அறைக்குச் சென்றார்.

''ஏண்டி உனக்கென்ன பைத்தியம் பிடிச்சிடுச்சா? நம்ம பரம்பரை என்ன, அந்தஸ்து என்ன, குலப்பெருமை என்ன, கௌரவம் என்ன... போயும் போயும் ஒரு லட்சாதிபதிதான்... அதுவும் ரெண்டு தலைமுறைக்கு முன்னாடி சுண்டல் வித்த குடும்பம்தான் உனக்கு காதலிக்கக் கிடைச்சுதாடி...?''

''கட்டிலில் அமர்ந்திருந்த அம்மா முகம் சிவக்க கத்திவிட்டு புஸ்ஸீ புஸ்ஸென்று மூச்சு வாங்கினாள். சுஜிதா தலைகுனிந்து அமர்ந்திருந்தாள்.''

''ஒரு நிமிஷம் யோசிச்சு பார் சுஜி. உன்னை எப்டியெல்லாம் வளர்த்தோம்! நாங்க உனக்கு பார்த்திருக்கற பையனோட பத்து நிமிஷம் பழகிப் பார்த்தன்னா சொல்லுவ. நீ எவ்ளோ அபத்தமான ஒரு ஆளை பிடிச்சிருக்கன்னு. லண்டன்ல பக்கிங்ஹாம் அரண்மனை மாதிரி ஒருமாளிகையே இருக்கு. அட்லாண்டிக் கடல்ல ஒரு குட்டித் தீவே சொந்தம். சொந்தமா ஹெலிகாப்டர், சொகுசுக்கப்பல், கிட்டத்தட்ட இங்கிலாந்துல வாழற ஒரு இந்திய பிரபு, பணக்கார சிநேகிதங்கள், பக்கா மேல் நாட்டு பழக்க வழக்கங்கள், எல்லாத்தையும் விட ரொம்ப நல்லவனா, கண்ணியவானா, கம்பீரமா இருக்கான். அவன் காதலுக்காக ஒரு கூட்டமே காத்துட்ருக்கு.. அப்பேர்ப்பட்டவன் நம்ம குடும்பத்தோட சம்பந்தம் வெச்சுக்க முன் வந்துருக்கறது நாம செஞ்ச பாக்யம்டி. இப்ப காதல் உன் கண்ணை மறைக்குது. அதை கொஞ்சம் தள்ளி வெச்சுட்டு நிஜத்தைப் பாரு. நிஜத்தை யோசி. உன் எதிர்காலத்துக்கு ஏத்த முடிவா எடு.''

''ஆகாஷும் நல்ல டைப்தாம்மா. அவங்க வீட்லயும் எல்லாரும் நல்லவங்கதான். முக்கியமா அவங்கம்மா கொத்து சாவியவே எங்கிட்ட குடுக்க ரெடியார்க்காங்க.''

''பைத்தியம், ஆகாசத்தைக் கட்டி ஆள்ற சந்தர்ப்பத்தை தரோம்னு சொல்றோம். ஒரு குட்டையைக் கட்டிட்டு அழறேன் போதும்னு சொல்றயே''

''இதோ பார் சுஜி. நீ இருபது வயசு பொண்ணு குழந்தையில்ல. உன்னை கட்டாயப்படுத்த சட்டத்துல இடமில்லை. அப்டி நாங்க செய்யறதாவும் இல்ல. உன் வாழ்க்கை உன் கைலதான். உனக்கு முன்னால ரெண்டு சாய்ஸ் இருக்கு எது பெட்டர் சாய்ஸ்னு நீயே முடிவு பண்ணிக்க. நாங்க சொல்ற ஆளை நீ தேர்ந்தெடுத்தா சந்தோஷமா உலகமே மூக்குல விரலை வெக்கற அளவுக்கு உனக்கு கல்யாணம் பண்ணிப் பார்ப்போம். இல்ல இந்த ஆகாஷ் தான் உசத்தின்னு உனக்கு தோணிச்சுன்னா தாராளமா இப்பவே நீ புறப்பட்டுப் போகலாம். நாங்க யாரும் உன்னைத் தடுக்க மாட்டோம். ஆனா போற இடத்துல உனக்கு கஷ்டமோ, நஷ்டமோ சந்தோஷமோ, துக்கமோ எது ஏற்பட்டாலும் நீயேதான் அனுபவிச்சுக்கணும்.''

''எதையும் நாங்க வந்து ஷேர் பண்ணிப்போம்னு எதிர்பார்க்கக் கூடாது. உனக்கு சீர் சினத்தி பண்ணுவோம். ஆனா நம்ம தகுதிக்கு ஏத்தாப்ல குடுக்க மாட்டோம். அவங்க தகுதிக்கு இது போதும்ங்கறா மாதிரி செய்வோம். ஆயிரம் பவுன் நகை போடறதுக்குப் பதிலா அம்பது பவுன் குடுப்போம். ரெண்டு கிலோ வெள்ளி குடுத்துடறோம். உன் பேர்ல அஞ்சு லட்ச ரூபாய் டெபாஸிட் பண்ணித்தருவோம் அவ்ளோதான். உன் கல்யாணத்துக்கு நிச்சயம் நாங்க யாரும் வர மாட்டோம். அதுக்கப்புறமும் வரமாட்டோம். உனக்கு தோணிச்சுன்னா நீ எப்ப வேணா நம்ம வீட்டுக்கு வா. ஆனா நடு வீட்ல வெச்சு உன்னைக் கொண்டாட மாட்டோம். கெஸ்ட் ஹவுஸ்ல ஒரு விருந்தாளியா நாலஞ்சு நாள் தங்கிட்டு போலாம். அவ்ளோதான். நாங்க உன்னை மிரட்டறதா நினைச்சுக்க வேண்டாம். எங்களுக்கும் வேதனை இருக்கும் இல்ல? எங்க மனசை நீ மதிக்கலன்னு ஆனப்புறம்

எங்ககிட்டயும் மரியாதையை எதிர்பார்க்காதேன்னு சொல்றோம். நா பேசி முடிச்சுட்டேன். இனி முடிவு உன் கைல. ஒரு நிமிஷத்துல எடுக்கறயோ ஒரு வாரம் ஆக்கறயோ உன் எதிர்காலம் உன் முடிவுலதான்.''

''அப்பா அவளைத்தனியே விட்டு விட்டு அனைவரையும் அழைத்துக் கொண்டு மற்றொரு அறைக்குச் சென்றார்.''

''சுஜி மிரண்டு போனாள். அப்பா பேசியதைக் கேட்டதும் கலக்கமாக இருந்தது. இருந்தாலும் இந்த அளவுக்கு சீர் சினத்தியாவது செய்கிறேன் என்று அவர் சொன்னது ஓரளவு ஆறுதலாக இருந்தது. இது போதும். இதை வைத்துக் கொண்டே அந்த வீட்டை கலக்கி விடலாம். அந்த வீட்டில் மெல்ல முக்கியத்துவம் பெற்று உரிமைகளை எடுத்துக் கொண்டு விட்டால் பிறகு தான் வைத்ததுதான் சட்டம். இவள் படிப்பு முடிந்து ஒரு நல்ல பேஸன் டிஸைனர் என்ற பேர் வாங்கி விட்டால் நிச்சயம் லட்சக்கணக்கில் சம்பாதிக்கலாம். திரைப்படங்களில் வாய்ப்பு பெற்று விட்டால் குறுகிய காலத்திற்குள் அப்பாவே மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு உயர்ந்து விடலாம். பணத்திற்கு பணம், புகழுக்கு புகழ். தவிர ஆகாஷும் நிறைய சம்பாதிப்பான். இது போதாதா..? அப்பாவின் பணம் யாருக்கு வேண்டும்?''

''சுஜிதா வெகுநேர யோசனைக்குப் பின் மற்றவர்கள் இருந்த அறைக்கு வந்தாள். அவர்கள் அவள் என்ன சொல்லப்போகிறாள் என்ற ஆவலோடு அவளையே மௌனமாகப் பார்த்தார்கள்.''

''சுஜிதா அனைவரையும் தயக்கத்தோடு ஒரு பார்வை பார்த்துவிட்டு வாயைத் திறந்தாள்.''

''சாரிப்பா.. என் சாய்ஸ் ஆகாஷ்தான். நாங்க பின்னால இன்னும் நல்லார்ப்போம்ங்கற நம்பிக்கை எனக்கிருக்கு. என் படிப்பு முடிஞ்சதும்தான் எங்க கல்யாணம் நடக்கும். நா இப்டி ஒரு முடிவெடுத்துட்டேங்கறதுக்காக நீங்க இப்போலேர்ந்தே

எனக்கு எதுவும் செய்ய மாட்டீங்களா? இல்ல படிப்பு முடியறவரை பணம் தருவீங்களா...?''

அவர்கள் அவளை வெறித்துப் பார்த்தார்கள்.

''உன் இஷ்டம். இதான் உன் தலையெழுத்துன்னா யாராலமாத்த முடியும். நீ பயப்பட வேண்டாம். உன் கழுத்துல தாலி ஏற்ற வரை நீ என் பொண்ணுதான் எப்படியும் ஒண்ணு ரெண்டு வருஷமாவது ஆகாதா உங்க கல்யாணம் நடக்க? அதுவரை பணம் வந்துக்கிட்டே இருக்கும். கவலைப்பட வேண்டாம். கல்யாணத்துக்கு முந்தி உன் மனசு எப்ப மாறினாலும் நீ தாராளமா எங்ககிட்ட ஓடி வரலாம். தப்புத்தண்டா மட்டும் எதுவும் பண்ணிடாம இருந்தா. ஆனா தாலின்னு உன் கழுத்துல ஏறிடுச்சுன்னா உயிரே போற நிலைன்னாலும் எங்கிட்ட வராதே. ஒரு உதவியும் உனக்கு கிடைக்காது. இப்பவே சொல்லிடறேன். ஓகே நீ கிளம்பு இனிமே உன்னைத் தேடி நாங்க வரமாட்டோம். முகூர்த்த தேதி வெச்சுட்டன்னா ஒரு தகவல் கொடு. நகையும், பணமும் யார் மூலமாவது அனுப்பி வெக்கிறோம்.''

''அவர் அதற்கு மேல் பேச எதுவுமில்லை என்பது போல் எழுந்து ஜன்னலருகில் போய் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார். மற்றவர்கள் யாரும் வாயைத் திறக்கவில்லை. எக்கேடும் கெட்டுப் போ என்ற பாவனையில் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். அம்மா மட்டும் முகத்தை மூடிக்கொண்டு கண் கலங்கினாள்.''

''சுஜிதா வெளியில் வந்து ஒரு ஆட்டோ பிடித்தாள். சடாரென்று ஒரு முடிவெடுத்து அதை தைரியமாக சொல்லியும் விட்டாளே தவிர ஏதோ ஒரு பிடிப்பு நழுவி அந்தரத்திலிருந்து விழுவது போல் ஒரு உணர்வு அவளையும் மீறி ஏற்படத்தான் செய்தது.''

வாழ்க்கையில் எதையுமே கிழக்காதவருக்கு சோதனை,
வேதனை என்னவென்று தெரியாது தான் எவ்வளவு பொலியானவர்
என்பதும் கோர்களுக்குத் தெரியாது.

-ஜோஷ் பில்லிங்ஸ்.

அன்றிரவே சுஜிதா திரும்பி வந்து விடுவாள் என்று ஆகாஷ் எதிர்பார்க்கவில்லை. ஆட்டோ வந்து நின்ற சப்தம் கேட்டதும் வேகமாய் வாசலுக்கு வந்தவன் அதிலிருந்து இறங்கிய சுஜிதாவைப் பார்த்ததும் முகம் மலர்ந்தான்.

''என்னாச்சு சுஜி... அங்க ஒண்ணும் பிரச்சனை இல்லையே. எப்டி உன்னை விட்டாங்க..?''

சுஜிதா சிரித்தாள். ''எனக்கு முன்னாடி ரெண்டு சாய்ஸ் வெச்சாங்க ஆகாஷ். ஒண்ணு ராஜ வாழ்க்கை. அரண்மனை மாதிரி வீடு, ரெண்டு கப்பல், சொந்த ஹெலிகாப்டர், உலகம் முழுக்க சொத்துக்கள், இன்னொரு சாய்ஸ் ஒரு சின்ன பங்களாவும், ரெண்டு காரும், கொண்ட ஆகாஷ். இது ரெண்டுல எது வேணுமோ தாராளமா செலக்ட் பண்ணிக்க. நாங்க தடுக்க மாட்டோம். ஆனா முதலாவதை செலக்ட் பண்ணினா நீ எங்க பொண்ணு. கடசி வரை புகுந்த வீடு பிறந்த வீடு ரெண்டு இடத்துலயும் மகாராணி மாதிரி வாழலாம். மரியாதையும் மதிப்பும் ஏராளமா இருக்கும். இல்ல ஆகாஷ்தான் உன் சாய்ஸ்னா பெத்த கடனுக்கு உன் ஆகாஷோட தகுதிக்கேத்தா மாதிரி சீர் சினத்தி மட்டும் அனுப்பி வெக்கறோம். ஆனா கல்யாணத்துக்கு நாங்க வரமாட்டோம். எப்போ கல்யாணம்னு சொல்லு சீர் வரிசை

வந்து சேரும். யோசிச்சு சொல்லுன்னாங்க. இதுல யோசிக்க என்ன இருக்கு? ஆகாஷ்தான் எனக்கு வேணும்னு சொல்லிட்டு கிளம்பி வந்துட்டேன். நா சொன்னது சரிதானே ஆகாஷ்?''

''ஆகாஷ் ஒரு வினாடி நெகிழ்ந்து போனான். அவளையே வியப்போடு பார்த்தான். அத்தனை பேரையும், அரண்மனை வாழ்வையும் உதறி விட்டு, நீ போதும் எனக்கு என்று அவனை நம்பி வந்திருக்கிறாள் அவள் என்கிற உண்மை ஒரு நிமிடம் அவனை புல்லரிக்கச் செய்தது. ஆணுக்கு இது மிகப்பெரிய கௌரவம். காதலிக்கப்படுவதை விட, காதலிக்கும் அந்த பெண் அவனுக்காக அனைத்தையும் துறப்பதுதான் அவனுக்கு கிடைக்கும் மிகப்பெரிய கௌரவம். அப்படி ஒரு கௌரவத்தைதான் சுஜிதா அவனுக்கு அளித்திருக்கிறாள்.''

''என்ன சார்... இப்டி நின்னுட்டீங்க..? நான் செஞ்சது தப்பா..?''

''ச்சேச்சே... என் மேல உனக்கு இவ்ளோ அன்பான்னு உருகிப்போய் நிக்கறேன். சரி உள்ள வா.''

''ஆமா நா எங்கன்னு உங்கம்மா கேட்டாங்களா..? என்ன சொன்னீங்க?''

''உங்கம்மா வந்திருக்காங்க. உடம்பு சரியில்லாம இருக்காங்க, உங்கப்பா வழிலபார்த்து கூட்டிட்டு போயிருக்கார்னு சொன்னேன்.''

''நான் இப்டி எல்லாத்தையும் உதறிட்டு வந்துட்டேன்னு தெரிஞ்சா அவங்க ரியாக்ஷன் என்னவா இருக்கும் ஆகாஷ்?''

''அதைப்பத்தி இப்போ என்ன? நம்ம கல்யாணத்துக்கு இன்னும் மூணு வருஷமாவது ஆகாதா? அப்ப பார்த்துக்கலாம் விடு. அது வரை எதைப் பத்தியும் வருத்தப்படாம சந்தோஷமா இரு.''

பேச்சு சத்தம் கேட்டு சாரதா தூக்கக் கலக்கத்தோடு தன் அறைக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள்.

''சுஜி வந்தாச்சா...? அம்மாக்கு உடம்பு சரியில்லன்னானே...?''

''இப்போ பரவால்ல ஆண்ட்டி. சாதாரண ஜுரம்தான். நாளைக்கு காலேல ஊருக்கு போறாங்க...''

''ஏன் சுஜி அவங்களை இங்க கூட்டிட்டு வரக் கூடாதா...

''அவங்க வர மாட்டாங்க ஆண்ட்டி, விடுங்க''

''வர மாட்டாங்கன்னா..? நம்ம வீடு அவங்களுக்கு ரொம்ப சாதாரணம்னா.. இல்ல நீ எம்பிள்ளையை விரும்பறது அவங்களுக்கு பிடிக்கலையா..?''

''அதெல்லாம் இல்ல. அவங்க அர்ஜன்ட்டா கிளம்பறாங்க. இன்னொரு சமயம் வருவாங்கன்னு சொன்னேன்.''

''சரிம்மா அவ படுக்கட்டும். காலேல பேசிக்கலாம்'' ஆகாஷ் அவளை அனுப்பி விட்டு தன் அறைக்கு வந்தான். சற்று நேரத்தில் அம்மா அவனைத் தேடிக் கொண்டு வந்தாள்.

''என்ன விஷயம்மா..?''

''இந்தா இதைக் குடுத்துட்டு போலாம்னுதான் வந்தேன்'' அவனுடைய கிரெடிட் கார்டை நீட்டிய அம்மாவை வியப்போடு பார்த்தான் ஆகர்ஷ்.

''இதெப்டி கிடைச்சுது..?''

''உண்மையைச் சொல்லணும்னா நாந்தாண்டா உங்க ரெண்டு பேரோட கார்டையுமே எடுத்து வெச்சேன்.''

''எதுக்கும்மா..?''

''காரணத்தோடதான்.'' தனக்கு மிஞ்சிதான் தான தர்மம்னு சொல்லுவாங்க. உங்கப்பாவோட சில நடவடிக்கைகள் எனக்கு பிடிக்கல. நம்ம வீட்டு பணம் அந்த கோபாலன் வீட்டுக்கு அளவுக்கு மீறி வழிஞ்சு ஓடிட்ருக்குன்னு உனக்கு தெரியுமா தெரியாதான்னு எனக்கு தெரியாது. இவ்ளோ நாள் தெரியாட்டியும் இனிமேயாவது நீ தெரிஞ்சுக்கணும். அந்த

பொண்ணு என்ன அனாதையா இல்ல ஊனமுற்றவளா? பரிதாபப்படவோ கொட்டிக் கொடுக்கவோ..? அப்பா செத்துட்டா என்ன? அக்கா இல்ல..? அல்லது படிப்பில்ல..? பிழைச்சுக்க வேண்டியதுதானே? இதுவரை உங்கப்பா எவ்ளவோ கொடுத்தாச்சு. நானும் பேசாம இருந்துட்டேன். ஆனா இனி மேலும் ஒரு கணக்கில்லாம இவர் அந்த பொண்ணுக்கு குடுக்கறதை நா அனுமதிக்க மாட்டேன். அதனாலதான் கிரெடிட் கார்டை எடுத்து வெச்சேன். உங்கார்டுல சாமான் வாங்கி அவங்களுக்கு கொடுப்பார். நீயும் பேசாம இருப்பன்னுதான், உங்கார்டையும் எடுத்து வெச்சேன். வேணும்னா அவளுக்கு ஒரு வேலை வாங்கி கொடுத்து பிழைச்சுக்கோன்னு சொல்லட்டும் வேணாங்கல. நாமளே முழுக்க முழுக்க தலைல சுமக்கணும்னா எப்டி..?''

''அப்பா அப்டி என்ன குடுத்துட்டார்னு நீ...''

''உனக்கு தெரியாதுடா. உனக்கு எப்பவுமே அவர் பேர்ல ஒரு அன்பு. அதான் நம்ப மாட்டேன்ற. நானும் அவரை பொல்லாதவர்னு சொல்லல. அந்த பொண்ணைத் தாங்கறதை நிறுத்திட்டா நல்லவர்தான். ஒண்ணே ஒண்ணு மட்டும் சொல்றேன் கேட்டுக்க. இப்பவே அவரை கட்டுப்படுத்தலன்னா, நாளைக்கு சுஜிதாவை வெளிய அனுப்பிட்டு சரண்யாவை உள்ள கூட்டிட்டு வரல... எம் பேரை நா மாத்தி வெச்சுக்கறேன். இது நடக்குதுன்னுஎழுதி வேணா தரேன். அப்போ புரியும் உனக்கு.''

ஆகாஷ் திகைப்போடு அவளைப் பார்த்தான். ''சரி அதுக்கு இப்போ நா என்ன செய்யணுங்கற!''

''நா சொல்றபடி கேட்டா போதும்.''

''என்ன?''

''உங்கப்பா கார்டு எங்கிட்ட இருக்குன்னு அவருக்கு சொல்ல வேண்டாம். அவர் பணம் கேட்டாலும் கொடுக்கக் கூடாது. சுஜிதாகிட்ட கணக்கு வழக்கை எல்லாம்

ஒப்படைச்சுட்டதா அவர்கிட்ட சொல்லிட்டேன். பணம் வேணும்னா அவர் அவகிட்டதான் கேக்கணும். அதுக்கு முன்னோடியா நீயே நாலஞ்சு தரம் சுஜிகிட்ட பணம் கேட்டு, அப்டி ஒரு பழக்கத்துக்கு இந்த வீட்டைக் கொண்டு வந்துடணும். உன்னால தான் முடியும் இது. உங்கப்பாவும் சங்கீதாவும் சுஜியை மதிக்கணும்னா இது ஒண்ணுதான் வழி.''

ஆகாஷ் யோசித்தான். அம்மா சொல்வதும் சரி என்றுதான் தோன்றியது. சரண்யா நல்ல பெண்தான். இருந்தாலும் அவள் கஷ்டத்தை எல்லாம் தலை மேல் ஏற்றுக் கொள்வது நடைமுறை வாழ்க்கைக்கு சரிப்படாதுதான். சத்யாவுக்கும் அவள் புருஷனுக்கும்தான் முழுப் பொறுப்பும். அவர்கள் இருக்கும் போது அப்பா ஏன் மேலே போய் விழ வேண்டும்..? அம்மா சொல்வது போல் சுஜிதாவை வெளியேற்றுவதுதான் அப்பாவின் நோக்கம் என்றால் நிச்சயம் அவன் அவரை எதிர்ப்பான்.''

''என்னடா யோசிக்கற?''

''அப்பா கேட்டா என் கார்டும் கிடைக்கலன்னே சொல்லிக்கறேன் போறுமா?''

''அப்பாடா... இப்பவாவது புரிஞ்சுக்கிட்டயே'' சாரதா ஒரு நிம்மதி பெருமூச்சோடு வெளியில் வந்தாள்.

''மறுநாள் அப்பா டிபன் சாப்பிடும் போது கீழே வந்த ஆகாஷ் அவர் எதிரில் அம்மாவிடம் ஆயிரம் ரூபாய் பணம் கேட்டான்.''

''எதுக்குடா ஆயிரம்..?''

''குடுன்னா குடேன்!''

''எங்கிட்ட கேக்காதே. சுஜிகிட்ட கேளு. அவதான் இப்போ நிதி மந்திரி. நா பொறுப்புலேர்ந்து விலகிட்டேன்.''

''ஓஹோ... வருங்கால மருமகளுக்கு டிரெயினிங் குடுக்கறயாக்கும். சுஜி, டைம் ஆறது, ரூபா குடு.''

''எதுக்கு ஆயிரம்? கணக்கு சொன்னாதான் தருவேன்.''

''சரிதான் அம்மாக்கு மேல இருக்க நீ!''

''பின்ன... பணமா தண்ணியா..? ஆயிரத்துக்கு என்ன செலவுன்னு சொல்லுங்க தேவையான செலவார்ந்தா தரேன்.''

''கொஞ்சம் புக்ஸ் வாங்கணும் அஃபிஷியல் பர்ப்பஸ்க்கு.''

''ஓகே தரேன்'' சுஜிதா எழுந்து உள்ளே போய் ஆயிரம் ரூபாயோடு திரும்பி வந்தாள்.

''தேங்க் யூ...''

''ஆகாஷ் அம்மாவை ஓரக்கண்ணால் போதுமா நடிப்பு என்பது போல் பார்த்தபடி வெளியேறினான். சம்பத் தன் திகைப்பையும் பொங்கலோடு சேர்த்து விழுங்க முயன்றார். ஏதோ ஒரு நாடகம் நடக்கிறது என்பது மட்டும் புரிந்தது அவருக்கு. சுஜிதா ராணியாக முடிசூட்டப்பட்டு விட்டாள் என்பதும் புரிந்தது. பார்ப்போம். எத்தனை நாள் இந்த நாடகம் நடக்கிறதென்று என்ன ஆனாலும் சுஜிதாவிடம் பணம் கேட்டு நிற்பதில்லை என்ற வைராக்கியம் உள்ளுக்குள் எழுந்தது. அதே நேரம் கூடிய வரை இந்த நாடகத்தைக் கண்டு கொள்ளாதது போலவே போய்விட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.''

''பொங்கல் சூப்பர்...'' படு கேஷிவலாக சொல்லி விட்டு எழுந்து சென்று கை கழுவி விட்டு கிளம்பினார். சாரதாவும் சுஜியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''இருங்கப்பா. போற வழில என்னை டிராப் பண்ணிட்டு போய்டுங்க'' சங்கீதாவும் கிளம்பினாள்.

''சாரி டியர், நா கார்ல போகல''

''ஆட்டோவா... பரவால்லப்பா''

''இல்ல. ஷெட்ல வேலைக்காரனுக்கு வாங்கிக் கொடுத்தோம் பார் சைக்கிள். அதுலதான் போகப் போறேன்.

பெட்ரோல் செலவு மிச்சம். நீ கூட உன்னோட சைக்கிளை துடைச்சு கிளீன் பண்ணி யூஸ் பண்ணிக்கப் பாரு.''

''அவர் வேகமாக வெளியேற, சாரதா அயர்ந்து போனாள். சங்கீதா அம்மாவை முறைத்துப் பார்த்து விட்டு சாவி ஸ்டாண்டிலிருந்து தன் சைக்கிளின் சாவியை எடுத்தாள். அப்பாவின் பின்னால் சென்று சைக்கிளை சுத்தம் செய்தாள். வண்டி நல்ல கண்டிஷனில்தான் இருந்தது. எப்பவாவது அவள் உபயோகிப்பது உண்டுதான் என்பதால் வித்யாசமாகத் தெரியவில்லை.''

''போலாமாப்பா...?''

''நா ரெடி..'' சம்பத் சைக்கிளில் ஏறியமர்ந்து பெடல் செய்தார்.

''கஷ்ட்டமார்க்காப்பா..?''

''சைக்கிளிங் நல்ல எக்ஸர்ஸைஸ்தானே. ஆல் ஃபார் குட். இதுல ஆரம்பிச்ச வாழ்க்கை தானே. அதனால இதுவும் ஒரு சுகம்தான்.''

''அப்பாவும் பெண்ணும் சிரித்துப் பேசியபடி சைக்கிளில் சென்ற காட்சியை வெறித்துப் பார்த்தாள் சாரதா.''

''பார்த்தயா சுஜி அவங்க திமிரை?''

''எவ்ளோ நாள்னு பார்த்துடலாம். நீங்க வருத்தப்படாதீங்க ஆண்ட்டி. ஆபீஸ்ல நாலு பேர் கேவலமா சிரிச்சா ஆட்டமேடிக்கா பெட்ரோலுக்கு காசு கொடுன்னு வருவார் பாருங்க.''

''சுஜி அவளுடைய மனது மாறி விடாதபடி அவசரமாக சமாதானப்படுத்தினாள்.''

''சங்கீதா அப்பாவை திரும்பிப் பார்த்தாள். எத்தனையோ வருடம் கழித்து சைக்கிள் ஓட்டுவதால் வியர்த்து வழிந்திருந்தது.''

''ஆபீஸ்ல எல்லாரும் ஏன்னு கேட்டா என்னப்பா சொல்வீங்க?''

''இந்தியா பயங்கர பொருளாதார நெருக்கடில இருக்கு. அதனால நாமளாவது சிக்கனத்தை கடை பிடிக்கலாம்னு, சைக்கிள்ள வந்தேன்னு சொல்லுவேன்.''

''சங்கீதா சிரித்தாள். முகம் சிரித்ததே தவிர உள் மனது அப்பாவைப் பார்த்து இரக்கமும் கவலையும் அடைந்தது. அம்மாவின் போக்கு எதில் முடியும் என்று தெரியவில்லை. ஆகாஷ் கூட இப்படி அவள் பக்கம் சாய்ந்து விடுவான் என்று நினைக்கவில்லை. இதைத் தான் நேரம் என்பதா..?''

''அக்கா வீட்டிற்கு வந்து ஒரு மாதமாகி விட்டது. எல்லாரும் அவளிடம் நன்றாகத்தான் நடந்து கொண்டார்கள் என்றாலும் சரண்யாவுக்குள் தான் அந்த வீட்டிற்கு பாரமாகி விட்டோமோ என்ற குறுகுறுப்பு இருக்கத்தான் செய்தது. அதன் காரணமாகவே பகுதி நேர வேலை ஏதாவது கிடைக்குமா என்று முயற்சி செய்து கொண்டிருந்தாள்.''

''உனக்கெதுக்கு இந்த வேண்டாத வேலை சரண்யா. இது உன் வீடு மாதிரி. நீ எனக்கு பாரமும் இல்ல. நிம்மதியா உன் படிப்பை முடி. மேற்கொண்டு படிக்கணும்னாலும் படி. நல்ல வேலை கிடைக்கும் போது போய்க்கலாம்'' அக்கா புருஷன் சரவணன் பல முறை சொல்லியும் கூட அவள் வேலை தேடுவதை நிறுத்தவில்லை. பேப்பரில் வாண்டட் காலம் பார்ப்பது தினசரி வழக்கமாகி விட்டது.''

''திருவான்மியூரில் புதுசாய் ஆரம்பிக்கப் போகும் டிபார்ட்மென்ட்டல் ஸ்டோருக்கு ஆள் வேண்டும் என்று கேட்டிருந்தது. சரண்யா அதன் விலாசம் குறித்துக் கொண்டிருந்த போது சத்யா அவள் அருகில் வந்தமர்ந்தாள்.''

''என்ன சத்யா?''

''சத்யா தன் உள்ளங்கை விரித்து நீட்டினாள். அவள் கையில் சாக்லேட் ஒன்று இருந்தது.''

''காலங்கார்த்தால சாக்லேட் நீட்டற. என்ன விஷயம்?''

''என்னவா இருக்கும்? நீயே சொல்லேன் பார்ப்போம்.''

''பர்த்டே..? வெட்டிங் டே..?'' சரண்யா ஒவ்வொன்றாய்ச் சொல்ல சத்யா தலையாட்டி மறுத்தபடி சிரித்தாள்.

''நீயே சொல்லிடேன்.''

''உனக்கு வேலை கிடைக்கப் போகுது''

''எங்கே நிஜம்மாவா..?''

''ம்.. ஆனா சம்பளமெல்லாம் கிடையாதாம்.''

''என்ன சொல்ற? எந்த வேலையை சம்பளமில்லாம என்னைப் பார்க்கச் சொல்ற?''

''சித்தி வேலை. இன்னிலேர்ந்து எட்டரை மாசத்துல உன்னை டிரில் வாங்க ஒரு ஆள் வந்துடும்.''

''சரண்யா குப்பென்று முகம் மலர அவளைப் பார்த்தாள். விழிகள் விரிந்தது.''

''அப்பா. வரட்டும்க்கா. அவரைப் பார்த்துக்கறதை விட எனக்கு வேறென்ன வேலை?'' கண்கள் பளபளத்தது.''

''சாயங்காலம் நீ வந்ததும் நாம கொஞ்சம் டாக்டர் வீட்டு வரை போய்ட்டு வரணும் சரண் உங்கத்தானுக்கு வேற ஏதோ வேலை இருக்காம்.''

''போய்ட்டா போச்சு''

''எத்தனை மணிக்கு நா ரெடியார்க்கட்டும்?''

''நாலுக்கெல்லாம் வந்துடறேன். வந்ததும் கிளம்பிடு வோம்.''

''சரண்யா குளித்து விட்டு கிளம்பினாள். பகுதி நேர வேலை விஷயமாக அந்த டிபார்ட்மென்ட்டல் ஸ்டோருக்கு சென்றவள், அவர்கள் சொன்ன சம்பளம் திருப்தியாக இல்லாததால் நேராக அங்கிருந்து கல்லூரிக்குச் செல்வதற்காக

[illegible] நோக்கி நடக்க ஆரம்பித்தவள், ஓரிடத்தில் [illegible] நின்றாள். தான் காண்பது கனவா நிஜமா என்பது [illegible] கண்களை மூடித் திறந்து விசாலமாக்கி பார்த்தாள்.''

ஒரு பெண்ணால் வாழ்க்கை மிகச்சியாகும் என நினைப்பவன் கவிஞனும். பெண்ணால் வாழ்க்கை துன்பமாகும் என நினைப்பவன் மந்திய வயதினன். பெண்ணால் தன் வாழ்வை ஒன்றும் செய்ய இயலாது என நினைப்பவன் வயதானவன்.

-பெர்னாட்ஷா.

''சரண்யாவைப் பார்த்ததும் நின்றார் சம்பத். அவரையும், அவரது சைக்கிளையும் மாறி மாறிப் பார்த்தாள் சரண்யா.''

''என்ன அங்கிள் இது?''

''சும்மாதான். ஆரம்பிச்ச இடத்துக்கே மனுஷன் திரும்பி வருவான்னு இயற்கையின் விதிகள் சொல்றது. நடை, பல்லக்கு, மாட்டுவண்டி, குதிரை வண்டி, சைக்கிள், ரிக்ஷா, டூ வீலர், கார், ஏரோப்ளேன் காற்று கெட்டுப் போயிடுத்தேன்னு யாருக்காவது கவலை இருக்கா? எனக்கு இருக்கு. அதான் சைக்கிள் பயணம்.''

''யார்ட்ட மாமா கதை விடறீங்க?'' சரண்யா சிரித்தாள்.

''பேசிக் கொண்டிருக்கும் போதே சங்கிதாவும் சைக்கிளில் வர சரண்யா அதிசயமாக வியந்தாள்.''

''கார் என்ன ஆச்சு சங்கிதா?''

''வீட்ல பத்திரமா இருக்கு?''

''அப்புறம்? சைக்கிள்ள போணும்னு வேண்டுதலா?''

''எங்களுக்கில்ல எங்கம்மாவுக்குதான் வேண்டுதல். எங்களை சைக்கிள்ள போக வைக்கணும்னு.''

''என்ன பிரச்சனை மாமா?''

''ஒன்றா இரண்டா எடுத்து சொல்ல?'' மாமா ராகத்தோடு பாடினார்.

''எங்க வீட்டுக்கு ஒரு பொண்ணு வந்து பேயிங் கெஸ்ட்டா உக்காந்திருக்கா சரண். அதான் பிரச்சனை?''

''எந்த பொண்ணு?''

''என் வருங்கால அண்ணின்னு ஆகாஷ் அண்ணா அறிமுகப்படுத்தி வெச்சான். அவளும் எங்கம்மாவும் சேர்ந்து செய்யற வேலைதான் இதெல்லாம்.''

''சரண்யா தன் முக வாட்டத்தை வினாடி நேரத்தில் மறைத்துக் கொண்டாள்.''

''எங்களுக்கு இது ஜாலியான விஷயமாய்டுச்சு சரண்யா. பணக்காரங்க எளிமையார்ந்தா உலகம் பாராட்டும் தெரியுமோ? அம்மாதான் பாவம் இஞ்சி தின்ன குரங்காட்டம் இருக்கா. அவ மானம் மரியாதையெல்லாம் சைக்கிள்ள சவாரி போறதேன்னு புலம்பறா.''

''என்ன நடந்துதுன்னு எனக்கு புரியல சங்கீதா. எதுவார்ந்தாலும், மாமா இப்டி சைக்கிள்ள போறது நல்லால்ல. மனசுக்கு ரொம்ப கஷ்டமார்க்கு. ஆகாஷ் கூடவா இதெல்லாம் பார்த்துக்கிட்டு பேசாம இருக்கார்?''

''கரைப்பார் கரைச்சா கல்லும் கரையும். அண்ணாவோட அறிவை காதல் மறைச்சிருக்குன்னும் சொல்லலாம். அவன் தலைக்கே ஆபத்து வரும்போது மயக்கம் தெளியுமோ என்னவோ?''

''அப்டியெல்லாம் சொல்லாதே சங்கீதா. அந்த பொண்ணு நல்லவளாவே இருக்கலாம் இல்லையா? ஒரு சில

விஷயங்களை மட்டும் வெச்சு ஒருத்தரைப் பத்தி ஒரு முடிவுக்கு வந்துடக் கூடாது.''

''அப்டிங்களா...? அப்பொ இன்னும் ஒரு நாலஞ்சு விஷயம் நடக்கட்டும். அப்பறம் நிதானமா நாம ஒரு முடிவுக்கு வருவோம். ஆனா என்ன... அதுக்குள்ள நானும் அப்பாவும் தெருவுக்கே வந்தாலும் வந்துருவோம்.''

''நம்ம கதையை ஸ்டாப் பண்ணேன் சங்கீத். நீ எப்டி இருக்க சொல்லு சரண். சத்யா வீடு உன்னை நல்லபடி நடத்துதா...? அங்க எல்லாரும் சௌக்யம்தானே? அடிக்கடி வரேன்னு சொன்னா மாதிரி வர முடியல. நிலமை அப்டி!'' மாமா சைக்கிளை தடவிக் கொடுத்தபடி சொன்னார்.

''எல்லாரும் ரொம்ப நல்லார்க்காங்க மாமா. எனக்கு ஒரு குறையும் இல்ல. அப்பறம் இன்னொரு சந்தோஷச் செய்தி, சத்யா மறுபடியும் கன்சீவ் ஆயிருக்கா.''

''இஸ் இட்... ஜாக்கிரதயா இருக்கச் சொல்லு. இப்போதைக்கு ஹெவி ஒர்க் எதுவும் செய்ய விடாத அவளை. நா அப்பறம் வந்து பாக்கறேன்னு சொல்லு. உங்க மாமி மட்டும் நல்லவளார்ந்தா பெத்த தாயார் ஸ்தானத்துல இருந்து வாய்க்கு ருசியா அவளுக்கு ஏதாவது செய்து கொடுத்தனுப்பலாம். ஆனா எங்கே...?'' மாமா பெருமூச்சு விட்டார்.

''சேர்த்து வெச்சுதான் நீங்க இருக்கீங்களே அப்பறம் என்ன குறை மாமா...?''

''சரி சரண். டைம் ஆறது. நீ புறப்படு'' மாமா சைக்கிளை மிதித்தார்.

''சரண்யா இருவரும் செல்வதையே சற்று நேரம் வேதனையோடு பார்த்தாள். என்னாயிற்று இந்த மாமிக்கு? கம்பீரமாய் காரில் போய்க் கொண்டிருந்தவர் சைக்கிளில் போகும் அளவுக்கு அப்படி என்னதான் நடந்திருக்கும்?

நிச்சயம் விஷயம் பெரிதாகத்தான் இருக்க வேண்டும் என்பது மட்டும் புரிந்தது.''

''அக்காவுக்காக அன்று மாலை சீக்கிரமே வீட்டுக்கு வந்து விட்டாள். சரியாக ஐந்து மணிக்கு டாக்டர் வீட்டுக்கு சென்றார்கள்.''

''டாக்டர் பரிசோதித்து விட்டு கர்ப்பத்தை உறுதி செய்தாள். ஒரு சில, விட்டமின் டானிக்குகள் எழுதிக் கொடுத்து விட்டு அடுத்த செக்கப்பிற்கு எப்பொழுது வர வேண்டும் என்றும் சொன்னாள்.''

''கொஞ்ச நாளைக்கு நீ எந்த வேலையும் செய்ய வேண்டாங்க்கா. நா பாத்துக்கறேன். ஒரு நாலு மாசமாவது கேர்ஃபுல்லா இருந்தா நல்லது.''

''இப்ப மட்டும் நா என்ன வேலை செஞ்சு கிழிக்கறேனாம்? பாதி எங்க மாமியார் செய்யறாங்க. மீதி நீ செஞ்சுடற?''

''சும்மா..! நீதான் பாதி வேலை செய்யற.''

''அதை விடு நீ போன வேலை என்ன ஆச்சு?''

''சம்பளம் சரிப்படல. வேலை அதிகம் கூலி ரொம்ப கம்மி.''

''வேணாம் சரண். உன்னை யாரு இப்போ வேலை தேடச் சொன்னது? அப்டி ஒண்ணும் இப்பொ கஷ்டம் வந்துடல.''

''கஷ்டத்துக்கா போறேன்றேன்? பாதி நாள் சும்மா தான் இருக்கேன்.''

''சம்பத் மாமாகிட்டயோ ஆகாஷ்கிட்டயோ சொல்லி வெச்சா நல்ல சம்பளத்துல நல்ல வேலை வாங்கித் தருவாங்க இல்ல?''

''எதுக்கெடுத்தாலும் அவங்களை சிரமப்படுத்த வேண்டாம்னு தான்... தவிர மாமா நம்மகிட்ட அன்பா இருக்கறதோ உதவி செய்யறதையோ மாமி சுத்தமா விரும்பல. அப்டியிருக்கும் போது நாமளும் அவங்களை அடிக்கடி தொந்தரவு செய்வானேன்...?''

''அப்பாக்கு உன்னை ஆகாஷ்க்கு கட்டி வெக்கணும்னு ரொம்ப ஆசை. மாமாக்கும் அது தெரியும். அப்பா போய்ச் சேர்ந்துட்டார். அவர் ஆசையை மாமா நிறைவேத்தினா நல்லார்க்கும். இது பத்தி அவர்கிட்ட பேசணும்னு நினைக்கறேன். ஆனா எப்டி ஆரம்பிக்கறதுன்னு தெரியல.''

''நீ எதுவும் ஆரம்பிக்க வேணாம். எனக்கு அப்டியெல்லாம் எந்த எண்ணமும் இல்ல. அசட்டு பிசட்டுன்னு எதுவும் கேட்டு கீட்டு வெச்சுடாதே'' சரண்யா அவசரமாக சொன்னாள்.

''ஏண்டி... ஆகாஷ்க்கென்ன குறை?''

''அவருக்கொண்ணுமில்ல. நமக்குதான் குறை. அக்கா ப்ளீஸ்... வேற ஏதாவது விஷயம் பேசேன்.''

''சத்யா அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தபடி நடந்தாள். அதன் பிறகு வீடு வந்து சேரும் வரை எதுவும் பேசவில்லை.''

''அப்பாவின் அறைக்கதவைத் தட்டி விட்டு உள்ளே போனான் ஆகாஷ். மெல்லிய இருட்டுக்குள் மென்மையான வீணையிசையைக் கேட்டபடி சாய்வு நாற்காலியில் கண்மூடி படுத்திருந்தார் சம்பத். ஆகாஷைப் பார்த்ததும் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார்.''

''என்னடா..?''

''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்ப்பா!''

''பேசேன்''

''ஆகாஷ் அவர் அருகில் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.''

''இதெல்லாம் நல்லாவாப்பா இருக்கு?''

''எதெல்லாம்?''

''நீங்க இப்டி சைக்கிள்ள போறது வரது எல்லாம்.''

''நாட்டுக்கும், இயற்கைக்கும் நல்லதுதானே?''

''நல்லதுதான். இந்த எண்ணம் முதல்லேர்ந்தே உங்களுக்கிருந்தா பாராட்டியிருப்பேன். இயற்கை மேல இவ்ளோ நாள் இல்லாத அக்கறை இப்பொ என்ன புதுசா?''

''சம்பத் மௌனமாக அமர்ந்திருந்தார்.''

''மனசு விட்டு பேசுங்கப்பா. உங்களுக்கு அப்டி என்ன கஷ்டம்?''

''இல்லடா ஆகாஷ். என் பேச்சுக்கு இப்பொ எந்த பவரும் இல்லாத நிலைல நா எதுக்கு பேசணும்? நா சைக்கிள்ள போறது உனக்கு கஷ்டமார்ந்தா சொல்லு. நாளேலேர்ந்து நடந்து போகப் பார்க்கறேன்.''

''புரியுதுப்பா. சுஜிதா இங்க இருக்கறது உங்களுக்குப் பிடிக்கல. அப்டித்தானே?''

''அப்டியெல்லாம் எதுவுமில்ல. ஆனா அவகிட்ட காரணம் சொல்லிட்டுதான் செலவுக்கு பணம் வாங்கிட்டு போகணும்னா அது என்னால முடியாது. ரொம்ப இக்கட்டான நிலமை ஏற்பட்டாலும் என் தாத்தாவை மாதிரி மறுபடியும் பீச்சுல சுண்டல் விக்கப் போனாலும் போவேனே தவிர யார்கிட்டயும் கையேந்திக்கிட்டு நிக்க மாட்டேன்.''

''ஆகாஷ் அவரை வேதனையோடு பார்த்தான்.''

''உங்களுக்கு என்னதாம்ப்பா வேணும்? சுஜிதாவை வெளிய அனுப்பிட்டா நீங்க சந்தோஷமாய்டுவீங்களா?''

''எனக்காக யாரும் வெளில போக வேணாம். சங்கீதாவுக்கு ஒரு வரன் பார்த்து அவ கல்யாணத்தை முடிச்சதும் நா போயிடறேன் வெளில. எனக்கு ஒரு வேளை சோறும், ரெண்டு செட் உடுப்பும் சம்பாதிக்கற அளவுக்கு எனக்கு தைரியமும் சக்தியும் இருக்கு.''

''நீங்க இப்டி மாறிடுவீங்கன்னு நா நினைச்சுக் கூடப் பார்க்கலப்பா.''

''நா பேச வேண்டிய டயலாக்கை நீ பேசறடா ஆகாஷ். வேடிக்கையார்க்கு'''

''ப்ளீஸ்ப்பா குத்திக்காட்டாதீங்க. காதல்ங்கறது யாரையும் கேட்டுட்டு வரதில்ல. மத்தவங்களுக்காக ஒருத்தரைக் காதலிக்கவும் முடியாது. தெரிஞ்சோ தெரியாமயோ நா சுஜிதாவை விரும்பிட்டேன். எனக்காக, தன் ராஜ போக வாழ்க்கையை எல்லாம் உதறித் தள்ளிட்டு என்னையே நம்பி வந்திருக்கறவளை என்னால வெளில போன்னு சொல்ல முடியாதுப்பா. மத்தபடி வீட்டுச்சாவியை நா அவகிட்ட குடுக்கல. அதெல்லாம் அம்மாவோட வேலை. கணக்கு கேக்கறது அவ்ளோ ஒண்ணும் தப்பா விஷயமில்லையேன்னு தான் எனக்கும் தோணிச்சு. நானும் வெட்கத்தை விட்டு அவகிட்ட பணம் கேட்டு வாங்கிட்டு போறேன். உங்களுக்கு அவகிட்ட கேக்க கஷ்டமாதான் இருக்கும். ஒத்துக்கறேன். அதுக்காக இந்த வயசுல சைக்கள்ள போய்ட்டு வரது நல்லாவா இருக்கு? எங்கிட்ட பணம் கேட்டா நா வாங்கித் தர மாட்டேனா...? என்ன பிடிவாதம்ப்பா இது?''

''இப்பொ கூட இன்னொரு கிரெடிட் கார்டு வாங்கிட்டு ஜாலியா செலவழிக்க எனக்கு ரெண்டு நாள் ஆகாதுடா ஆகாஷ். ஆனாலும் வேணாம்னுதான் பேசாம இருக்கேன். எவ்ளோ நாள் இந்த நாடகமெல்லாம் நடக்குதுன்னு பார்த்துடலாம்னுதான் நானும் வேஷம் கட்ட ஆரம்பிச்சுட்டேன்.''

''ஸோ... நீங்க இப்டியேதான் இருக்கப் போறீங்க?''

''இது கூட ஒரு விதத்துல நல்லாதான் இருக்கு. எனக்கு உன் மேல ஒரு கோவமும் இல்ல. என்னால சில விஷயங்களுக்கு இறங்கி வர முடியலையே தவிர, மத்தபடி நா உன் காதலை நிச்சயமா மதிக்கறேன். ஒரு சின்ன ரிக்வெஸ்ட் உங்க கல்யாணத்துக்கு முந்தி சங்கீதா கல்யாணம் நடந்துட்டா நல்லார்க்கும்.''

''நிச்சயமா! என்னால உங்களைப் புரிஞ்சுக்க முடியலப்பா. மதில் மேல பூனை மாதிரி ஒரு நிலமைல எல்லாருமா சேர்ந்து என்னை நிறுத்தி வெச்சுட்டீங்க. யாரைக் குத்தம் சொல்றது, யாரை சமாதானப்படுத்தறதுன்னே எனக்கு புரியல. இது இவ்ளோ பெரிய பிரச்சனையாகும்னு தெரிஞ்சிருந்தா நிச்சயமா முதல் நாளே இதுக்கு முட்டுக்கட்டை போட்ருப்பேன். இவ்ளோ தூரம் ஆனப்பறம் நா சொல்லி அம்மா கேப்பாளான்னு தெரியல. இதெல்லாம் எதுல போய் முடியுன்னும் புரியல. எனக்காக நீங்க உங்க பிடிவாதத்தை கொஞ்சம் தளர்த்திக்கிட்டா நல்லார்க்கும். உங்ககிட்ட கை கூப்பி வரம் கேக்கறேன்னு வெச்சுக்குங்களேன்.''

ஆகாஷ் கண்கள் பளபளக்க அவரை நோக்கி கை கூப்ப, சம்பத் பதறிப் போனார். ''என்னடா இது... குழந்தை யாட்டம்...? இது பிடிவாதமில்லடா ஆகாஷ். ஒரு தவம்னு வெச்சுக்கயேன். உங்கம்மாவை என் வழிக்கு கொண்டு வர நா கடைபிடிக்கற விரதம்னு நினைச்சுக்க. புருஷனுக்காக பெண்டாட்டிதான் விரதம் இருக்கலாமா? பெண்டாட்டி மனசு மாற புருஷன் விரதமிருக்கக் கூடாதா என்ன? நீ இதுக்கெல்லாம் வருத்தப்படாதே. கொஞ்ச நாள்ள எல்லாம் சரியாய்டும். போ, போய் நிம்மதியா தூங்கு.''

''சம்பத் அவன் முதுகில் தட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தார்.''

''அதற்கடுத்த வாரம் சங்கீதாவை அழைத்துக் கொண்டு அஷ்டலட்சுமி கோயிலுக்குச் சென்றார்.''

''திடீர்னு எதுக்குப்பா இங்க கூட்டிட்டு வந்தீங்க?''

''காரணமாதான். நம்ம வீட்டு நிலமை சரியில்லன்னு தெரிஞ்சப்பறம் உன் கல்யாணத்தை சீக்கிரமே முடிச்சுடறதுன்னு வெச்சுட்டேன். உனக்காக நா பாத்திருக்கற பையனை உனக்கு பிடிக்க வேண்டாமா..? அவனை இந்த கோயிலுக்கு வரச் சொல்லியிருக்கேன். உங்க ரெண்டு

பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சா மேற்கொண்டு சம்பிரதாயப்படி பெண் பார்க்க வரச்சொன்னா போதும்னுதான் இந்த ஏற்பாடு அந்த பையனுக்கும் இந்த ஏற்பாடு பிடிச்சிருந்தது. நாலு பேர் பார்க்க பிடிக்கலன்னு சொல்றதை விட இப்டி தனியா பார்த்து பிடிச்சுதா பிடிக்கலையான்னு சொல்றது பெட்டர் இல்லையா? ஒரு விஷயம் நிச்சயம். உங்க ரெண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சிருந்தாதான் கல்யாணம். பிடிக்காட்டி தைரியமா சொல்லிடலாம். எனக்கு பயந்துக்கிட்டோ, இல்ல என்னை சந்தோஷப்படுத்தறதா நினைச்சுக்கிட்டோ பொய் சொல்ல வேணாம் சரியா?''

''என்னப்பா இப்டி திடீர்னு... எனக்கு பயம்மார்க்கே. பாரு நெஞ்செல்லாம் படபடன்னு அடிச்சுக்குது.''

சம்பத் சிரித்தார். ''அதோ பார் அந்த பையன்தான் எம்.பி.ஏ, பி.ஹெச்.டி.ன்னு ஏதேதோ படிப்பு. சொந்தமா அட்வர்டைசிங் கம்பெனி வெச்சு நடத்திட்ருக்கான். நம்பர் ஒன் கம்பெனி. சென்னை, மும்பை, பெங்களூர், ஹைதராபாத் எல்லா இடத்துலயும் பிராஞ்ச்சஸ் இருக்கு. கூடப் பிறந்தவங்க ரெண்டு அண்ணன். எல்லாரும் கல்யாணமாகி நல்லபடியா செட்டில்டு. அப்பா கிடையாது. அம்மா மட்டும்தான். இவனோடதான் இருக்காங்க. நமக்கேத்த குடும்பம். முக்கியமா பையன் நல்ல மாதிரியா இருக்கான்.''

''அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவன் அவர்களை நெருங்கினான். நல்ல உயரம், மாநிறம், கறுப்புக் கண்ணாடி அணிந்து புன்னகை படர கிட்டே வந்தான். கண்ணாடியைக் கழட்டி விட்டு ''ஹலோ'' என்று அவர்களைப் பார்த்து சிரித்தான். கம்பீரமாயிருந்தது அவன் குரல், அவனைப் போலவே.''

''இவதான் என் பொண்ணு சங்கிதா. ஹீ இஸ் பிரவீண் சங்கிதா. நீங்க பேசிட்ருங்க. நா கோயிலுக்குள்ள போய்ட்டு வந்திடறேன்.''

''சம்பத் மெல்லநகர, சங்கீதாவின் படபடப்பு நூறு மடங்காயிற்று. இதயத்தின் சப்தம் வெளியிலேயே கேட்கும் போலிருந்தது. அவனை பார்ப்பதற்காக தலையை நிமிர்த்தியவள், அது முடியாமல் விழிகளை சட்டென்று தாழ்த்திக் கொண்டாள்.

''அவளது அவஸ்தையைப் பார்த்து அவன் சிரித்தான்.''

''என்னைப் பிடிக்கலையா சங்கீதா?''

''எடுத்த எடுப்பில் அவன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல இயலாமல் திணறினாள்.''

தங்கம் வேண்டாம் என்று கூறிய ஒரே ஒரு பெண்ணைப் பற்றி நான் அறிவேன். அவள் தங்கம் வேண்டாம் வைரம் வேண்டுமென்றாள்.

– வால்போல்

''என்னைப் பத்தி நீ முழுசும் தெரிஞ்சுக்கிட்டு அப்பறம் சொன்னா போதும் பிடிச்சிருக்கா இல்லையான்னு'' அவன் தொடர்ந்து சொல்ல சங்கீதா படபடப்பு சற்றும் குறையாமல் அமர்ந்திருந்தாள்.

''ரொம்ப..., ரொம்ப கஷ்டப்பட்ட குடும்பம் எங்களோடது. மாற்றுபுடவை கூட இல்லாம, ஒரு புடவையையே துவைச்சு காய வெச்சு கட்டிப்பாங்க எங்கம்மா. எங்களை வளர்க்கறதுக்காக நாய் படாத பாடு பட்ருக்காங்க. கிடைக்கற வேலையெல்லாம் அஞ்சு பத்து வருமானத்துக்காக செய்வாங்க. நாங்க இன்னிக்கு இந்த நிலமைல இருக்கறகோம்னா இதுக்கு அஸ்திவாரம் அம்மாவோட

உழைப்பும் நம்பிக்கையும், அவங்க எங்களுக்கு குடுத்த தைரியமும்தான். மத்தபடி என் பழக்க வழக்கங்கள், விருப்பு வெறுப்புகள்னு சொல்லணும்னா, டென்ஷன் அதிகமானா, ரொம்ப அபூர்வமா ஒண்ணோ ரெண்டோ சிகரெட் பிடிப்பேன், அதனாலேயே இப்பல்லாம் டென்ஷன் வராம பாத்துக்கறேன். ஸோ... சிகரெட் தொட்டு ஒரு வருஷமாச்சு. நோ டிரிங்க்ஸ். ஏன்னா எங்கப்பா செத்ததே குடியாலதான். அதனால அம்மாக்கு நாங்க எல்லாருமே சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கோம் டிரிங்க்ஸை மட்டும் தொடறதில்லன்னு. நிறைய புக்ஸ் படிப்பேன். பசிக்காக சாப்டுவேன். டேஸ்ட் பார்த்து வித விதமா சாப்படற ஆசையெல்லாம் கிடையாது. உப்பில்லாம சமைச்சிருந்தா கூட சொல்லத் தெரியாது. அதனால நீ சமையலறைல கஷ்டப்படவே வேண்டாம்.''

அவன் சிரித்தபடி நிறுத்த, சங்கீதாவின் முகம் சிவந்தது.

''உங்க குடும்பத்தைப் பத்தி, உன்னைப் பத்தி எல்லாம் எனக்கு ஏற்கனவே தெரியும். சொல்லப் போனா நா உன்னை ஏற்கனவே பார்த்துட்டேன். நீ என்னைப் பார்க்கணுங்கறதுக் காகத்தான் இந்த ஏற்பாடு. உனக்கு பிடிச்சிருந்தா அம்மாட்ட சொல்லி பெண் பார்க்க கூட்டிட்டு வருவேன். இல்லாட்டா ஜஸ்ட் நண்பர்களா பிரிஞ்சு போய்டலாம். எதுவார்ந்தாலும் பளிச்சினு பேசறதுதான் எனக்கு பிடிக்கும்.''

சங்கீதா முதல் முறையாக நிமிர்ந்து அவனை நேருக்கு நேர் பார்த்தாள்.

''உங்களுக்கு உங்கம்மா எப்டியோ அதே மாதிரி எனக்கு எங்கப்பா. அவர் எது சொன்னாலும் என் நன்மைக் காகத்தாங்கற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு. ஒருத்தரை புரிஞ்சுக்க ஒரு நிமிஷம் போதும்னு சிலர் சொல்வாங்க. எனக்கு அவ்ளோ புத்திசாலித்தனம் எல்லாம் கிடையாது. இருந்தாலும் உங்களை எனக்கு பிடிச்சிருக்கு சொல்லிக்கும் படியா எங்கிட்ட எந்த சிறப்பம்சமும் கிடையாது. நா ஒரு சராசரி பொண்ணு.''

''தேங்க்யூ..''

''எதுக்கு?''

''பிடிச்சிருக்குன்னு சொன்னயே.. அதுக்குதான். போலாமா? மிச்சத்தை கல்யாணத்துக்கப்பறம் பேசுவோம்.''

அவன் எழுந்தான். இருவரும் சம்பத்தைத் தேடிப் போனார்கள்.

''என்னம்மா? என் செலக்ஷன். ஓகேயா?'' கண் சிமிட்டி கேட்டார்.

''போங்கப்பா''

''அடேயப்பா... எம்பொண்ணு வெட்கப்படறா..!''

''ஓகே அங்கிள். நீங்க சாயங்காலம் வீட்டுக்கு வாங்க. நா நாளன்னிக்கு மும்பை போறேன். அதனால அநேகமா நாளைக்கே பெண் பார்க்க வந்தாலும் வந்துடுவோம்னு நினைக்கறேன்.''

பிரவீண் விடைபெற்று கிளம்பினான். அவன் கார் கண்ணுக்கு மறையும் வரை சங்கீதாவின் பார்வை தொடர்ந்தது.

''இப்பவே துரத்த ஆரம்பிச்சாச்சா?'' அப்பா கிண்டலடித்தார்.

''ஏம்பா நீங்க பாட்டுக்கு வரன் பாக்கறீங்க...அம்மா இதுக்கெல்லாம் ஒத்துப்பாளா..?''

''உங்கம்மாக்கு பணம் இருந்தா போதும். ஒத்துக்காம என்ன? இல்லாவிட்டாலும் இருக்கவே இருக்கு இன்னோரு அஸ்திரம்!''

''என்ன?''

''நீ பிரவீணை லவ் பண்றதா எடுத்துவிடு. ஆகாஷ் லவ் பண்ணலாம். சங்கீதா லவ் பண்ணக் கூடாதா..? பிள்ளை

காதலுக்கு பச்சைக் கொடி காட்டறவ, பொண்ணு காதலுக்கும் காட்டித்தானே ஆகணும்.''

''என்னமோ போங்க. ஆசை காட்டி மோசம் பண்ணாம இருந்தா சரி''

''இதப்பார்ரா..! சம்பத் வாய் பிளந்தார். அப்ப காதலிக்கவே ஆரம்பிச்சாச்சா..?''

''சும்மார்ந்த சங்கை ஹதிக்கெடுத்துட்டு கேள்வியைப் பாரேன்''

சம்பத் சிரித்தபடி அவள் தலையை வருடினார். ''கவலைப்படாதே. இந்த கல்யாணத்தை நடத்திட்டுதான் மறுவேலை. போலாமா?''

அவர்கள் அங்கிருந்து கிளம்பினார்கள்.

சாரதா முறைத்தாள். ''யாரைக் கேட்டுக்கிட்டு நீங்க அவளுக்கு வரன் பாக்கறீங்க? என்ன வயசாய்டுச்சு அவளுக்கு? படிப்பு முடியட்டும் அப்பறம் பாத்துக்கலாம்''

''நா வரன் பார்க்கல. அவளா பார்த்துக்கிட்டா''

''என்ன சொல்றீங்க?''

''நா என்ன சொல்றது? எல்லாம் அண்ணன் காட்டிய வழி! நீ வேண்டாம்னு சொன்னா, ஆகாஷ் அந்த பெண்ணைக் கூட்டிட்டு வந்தா மாதிரி அவன் இவளைக் கூட்டிட்டு போய் வெச்சுக்குவான். பரவாயில்லயா..?''

அவர் சொல்ல, சாரதாவின் முகம் அஷ்டகோணலாயிற்று.

''அதனாலதான் நாமளே கௌரவமா கல்யாணம் பண்ணி வெச்சுடலாம்னு சொல்றேன். நாளைக்கு அவங்க பெண் பார்க்க வராங்க எல்லா ஏற்பாடும் பண்ணிடு. ஏடா கூடமா ஏதாவது பேசின... உனக்குதான் அவமானமாகும் சொல்லிட்டேன்.''

அவர் மாடிக்குச் செல்ல, அவரையே வெறித்துப் பார்த்தாள் சாரதா. வேறு வழியில்லை. ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். நல்லகாலம் பையன் பணக்காரன் தான் என்கிறார். அந்த வரைக்கும் அவளுக்கு ஆறுதலாக இருந்தது. அன்றிரவு ஆகாஷ் வந்ததும் அவனிடமும் விஷயத்தை சொன்னாள்.

ஆகாஷ் ஆச்சர்யப் பட்டான். சங்கீதாவுக்கு காதலிக்கக் கூடத்தெரியுமா..? என்று வியந்த படி அம்மாவைப் பார்த்தான்.

''அவளுக்கு பிடிச்சிருக்குன்னா அப்பறம் பேச என்ன இருக்கும்மா. அப்பாவும் அவனைப் பார்த்து பேசிட்டுதானே வர சொல்லியிருப்பார். அப்பொ நல்ல இடத்து பையனாதான் இருப்பான். நீ ஏற்பாடு பண்ணு'' அம்மாவுக்கு தைரியம் கொடுத்துவிட்டு தன் அறைக்குச் சென்றான்.

மறுநாள் காலை சுஜியிடமும் விஷயத்தை சொன்னாள் சாரதா.

''அவங்க வரும்போது நா இருக்கட்டுமா வேண்டாமா?''

''நீ பாட்டுக்கு இரேன்''

''என்னை யாருன்னு கேப்பாங்களே''

''சொல்லிட்டு போறேன். அவங்க பையன் லவ் பண்ணும்போது என் பையன் பண்ணக் கூடாதா..?''

''இந்த மாதிரி மாமியார் யாருக்கு கிடைப்பாங்க''

''ஒரு ஆயிரம் ரூபா பணம் கொண்டு வா சுஜி. ஸவீட் காரம் எல்லாம் வாங்கணும்.''

''ஆயிரம் எதுக்கு ஆண்ட்டி. அவ்ளோ ஸ்வீட்டா சாப்ட போறாங்க.''

''பூ, பழமெல்லாம் வேற வாங்கணும்மா.''

''நீங்க கவலையை விடுங்க. நா வரும்போது எல்லாமே வாங்கிட்டு வரேன்''

வாசல் வரை போன சுஜிதா திரும்பி வந்தாள். ''ஏன் ஆண்ட்டி, அங்கிளோட கார் சும்மாதானே இருக்கு. இன்னிக்கு ஒரு நாள் நா அதை எடுத்துக்கிட்டு போகவா?''

அவள் அப்படிக் கேட்டதும் ஒரு வினாடி தயங்கினாள் சாரதா.

''உங்களுக்கிஷ்டமில்லாட்டி வேணாம் ஆண்ட்டி. நா வழக்கம் போல ஆட்டோலயே போய்க்கறேன்.''

''இரு சுஜி...இந்தா சாவி. நீ எடுத்துட்டு போ... சும்மாதானே இருக்கு''

''தேங்க்ஸ் ஆண்ட்டி. அப்பா எனக்கொரு ஃபாரின் கார் வாங்கி வெச்சிருக்காராம், நாப்பது லட்சத்துக்கு. படு சொகுசா இருக்குமாம். எப்பொ அனுப்பி வெக்கட்டும்னு கேட்டுக்கிட்டே இருக்கார். இங்க நிறுத்த இடமில்லை யேன்னுதான் இப்போதைக்கு வேணாம்னு சொல்லி வெச்சேன். கார் மட்டும் அனுப்பினா எப்டி, அதை நிறுத்தற அளவுக்கு அழகான ஒரு வீடும் வாங்கிக் கொடுத்துட்டு அப்பறம் காரை அனுப்புங்கன்னு சொல்லிட்டேன். நா சொன்னது சரிதானே ஆண்ட்டி? மும்பைல எங்க வீட்டுல தாராளமா முப்பது கார் நிறுத்தலாம். அந்த நினைப்புல அப்பா பாட்டுக்கு கார் வாங்கிட்டார் போல்ருக்கு''

சுஜிதா கார் சாவியை சுழற்றியபடி செல்ல சாரதா பிரம்மிப்போடு அவளைப் பார்த்தாள்.

இது பிறந்த வீட்டுப் பெருமையா... அல்லது புகுந்த வீட்டை மட்டம் தட்டும் பேச்சா..? ஒன்றும் புரியவில்லை அவளுக்கு. எதுவாயிருந்தாலும் அவளிடம் கடுமையாகப் பேசுவதென்பது இனி இயலாது. பிள்ளையின் காதலி என்பதைவிட அவள் ஒரு கோடீஸ்வரனின் பெண் என்பதுதான் இதற்கு காரணம். சுஜிதா காரில் சென்ற அரை மணிக்கெல்லாம் சம்பத் சைக்கிளில் ஏறிச்செல்ல அதைப் பார்த்துக் கொண்டிருந்த சாரதாவின் மனம் குறுகுறுத்தது. தான் செய்வதெல்லாம்

சரியாதவறா என்ற கேள்வி உள்ளே குடைய ஆரம்பித்தது. புருஷன் சைக்கிளில் சென்ற காட்சி சித்ரவதை செய்தது. இவ்வளவு வைராக்கியம் அவருக்குள் இருக்குமென்று அவளே எதிர்பார்க்கவில்லை. எதையோ நினைத்து இழுத்துப் பிடிக்கப் போக, அது விபரீத வைராக்கியமாய்ப் போய் விட்டது நன்றாகப் புரிந்தாலும், அதிலிருந்து அவரை விடுவிக்க அவளாலேயே முடியவில்லை.

இது எதில் போய் முடியுமோ என்று கவலையாக இருந்தது. நாலு நாள் முன்பு கிரெடிட் கார்டைக் கூட அவரிடம் எடுத்துக் கொடுத்து விட்டாள். சுத்தம் செய்யும் போது கிடைத்தது என்று பொய் சொன்னாள். ஆனால் சம்பத் அதைத் தொடக்கூட இல்லை. ''நீயே வெச்சுக்க எனக்குன்னு நா எதுவும் வாங்கிக்கறதில்ல. என்னுடைய தேவைகளும் கம்மிதான். சைக்கிள்ள போய்ட்டு வரது ஒரு விதத்துல ஆரோக்கியம்தான். பழகியும் போச்சு. எல்லாத்தையும் பழகிக்கறது நல்லதுதானே'' விட்டேற்றியாக பதில் சொல்லி விட்டுப் போய்விட்டார். சாரதாவுக்கு அன்று முழுக்க ஒரு மாதிரியாக இருந்தது. ச்சே கார்டை எடுத்தே வைத்திருக்க வேண்டாமோ என்று தோன்றியது. அவர் மறுபடியும் காரில் போக மாட்டாரா என்றிருந்தது.

''என்னம்மா மாப்ள வரப்போறாரா..? இப்பவே சைலன்ட்டா உக்காந்துட்ட'' ஆகாஷின் குரல் கேட்க திரும்பினாள்.

''என்னமோ உங்கப்பா சொல்றார். வந்தாதான் தெரியும் யார், என்ன எப்டிப்பட்டவங்கன்னு''

''அதெல்லாம் கவலையே படாத. நல்ல இடமாதான் இருக்கும். நா சாயங்காலம் வந்துடறேன். வரும்போது ஏதாவது வாங்கிட்டு வரணுமா?''

''சுஜி வாங்கிட்டு வந்துடறேன்னு சொன்னா''

''ரைட். அப்பொ நா கிளம்பறேன்''

ஆகாஷ் சென்ற பிறகு வேக்வ்ம் கிளீனர் கொண்டு வீட்டை சுத்தம் பண்ணினாள். கர்ட்டன், சோபா கவர் அனைத்தையும் மாற்றினாள். ஓரளவுக்கு திருப்தி ஏற்பட்டதும் மற்ற வேலைகளை கவனிக்கப் போனாள்.

சரியாய் ஆறு மணிக்கு, பிரவீண் அம்மாவோடு தன் காரில் வந்து இறங்கினான். ஆகாஷ் கைகுலுக்கி வரவேற்றான். சம்பத், சாரதாவை அறிமுகப்படுத்தினார். சுஜிதா பிரவீணை கிச்சனில் நின்றபடி கவனித்தாள். அந்த உயரமும், மிடுக்கும், கண்ணியமான பேச்சும் சிரிப்பும், சங்கிதாவின் மீது ஒரு வித பொறாமையை ஏற்படுத்தியது. ஆகாஷ் விடவே கூடுதல் அழகும் கம்பீரமும் அவனிடம் இருப்பதாய்த் தோன்ற, இவ்வளவு நல்ல மாப்பிள்ளையா உனக்கு என்று சங்கிதாவின் மீது எரிச்சல் ஏற்பட்டது.

''அந்த பொண்ணு யாரு?'' பிரவீணின் அம்மா சுஜிதாவை சுட்டிக் காட்டி கேட்டாள்.

''எம் பையனுக்கு பார்த்து வெச்சிருக்கற பொண்ணு. மும்பைல அவங்கப்பா கோடீஸ்வரர். அவ இங்கதான் பேஷன் டிஸைன் படிச்சுட்ருக்கா. எதுக்கு ஹாஸ்டல்ல தங்கணும்னு சொல்லி இங்கயே இருக்க சொல்லிட்டேன். படிப்பு முடிஞ்சதும் அவங்க கல்யாணமும் பண்ணிடணும். பல கோடி ரூபாய் சொத்து இருந்தாலும் எங்க சுஜி ரொம்ப சிம்பிள். அலட்டிக்கவே மாட்டா'' சாரதா பெருமை பொங்க சொன்னதை அந்த அம்மாள் ரசிக்கவில்லை என்பது அவள் முகம் போன போக்கிலேயே தெரிந்தது.

''பொண்ணை வரச் சொல்லுங்களேன்''

''சுஜி, சங்கிதாவை கூட்டிட்டு வாயேன்''சாரதா குரல் கொடுத்தாள்.

''வா சங்கிதா'' சுஜி அவள் தோளைத் தொட்டு அழைத்துச் செல்ல முயல, சங்கிதா விலகினாள். ''நானே போறேன். நீங்க வரணும்னு இல்ல'' பட்டென்று சொல்லிவிட்டு தனியாகவே

போனவளை சுஜிதா வெறித்துப் பார்த்தாள். தன்னை அவமானப்படுத்தி விட்டு அவள் போனதைத் தாங்க முடியாமல் முகம் சிவக்க உதட்டை கடித்தாள். வெக்கமேண்டி உனக்கு வேட்டு..! உள்ளுக்குள் கறுவினாள்.

''எம் பையனுக்கு பொண்ணை பிடிச்சப்பறம் எனக்கு சொல்ல எதுமில்ல. நாம மத்த விஷயங்கள் பேசுவோமே''

'ஓ.. பேசலாமே''

''உங்க பெண்ணுக்கு என்னல்லாம் செய்யறதா இருக்கீங்க''

''நீங்க என்னல்லாம் எதிர்பார்க்கறீங்கன்னு சொல்லுங்க. செஞ்சுடறோம்''

''பெரிசா ஒண்ணும் வேணாம். உங்க கோடீஸ்வர மருமக உங்க வீட்டுக்கு என்னல்லாம் கொண்டு வரப்போறாளோ, அதே மாதிரி உங்க பொண்ணுக்கு நீங்க கொடுத்தனுப்பினா போதும்''

பிரவீணின் அம்மா கத்தரித்தாற்போல் பேச, ஒரு வினாடி அங்கே மௌனம் பரவியது. பிரவீண் திகைப்போடு அம்மாவைப் பார்த்தான். ஆகாஷும் சம்பத்தும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சாரதா திருதிருவென்று விழித்தாள். இதற்கு என்ன பதில் சொல்வது?

''அது.. அவங்க கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டு மூணு வருஷமாகும். நாங்க இன்னும் சீர் சினத்தி விவகாரமே பேசல.''

''கல்யாணம் எப்போ ஆனா என்ன..? என்னல்லாம் செய்யப்போறாங்கன்னு கேட்டுட்டு அது மாதிரி செய்துடுங்க. ஏறக்குறைய இருக்கறதை அவங்க கல்யாணம் முடிஞ்சதும் செஞ்சுடுங்க.''

சாரதா திகைப்போடு சம்பத்தைப் பார்த்தாள்.

''அவங்க சொல்றதும் நியாயம் தானே சாரதா. நம்ம வீட்டுக்கு ஒரு பொண்ணு கொண்டு வரதை, நம்ம பொண்ணுக்கு நாமளும் கொடுத்தனுப்பறதுதானே நியாயம்.''

சம்பத் நியாயம் பேசுகிறாரா? அல்லது மாட்டிவிடுகிறாரா என்பது புரியாமல் சாரதா பரிதாபமாக ஆகாஷைப் பார்த்தாள்.

ஒரு நிமிஷம் என்றபடி அவனை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

''என்னடா இப்டி சொல்றாங்க?''

''அவங்க கேக்கறது நியாயமே இல்லம்மா. எங்க கல்யாணத்தையும் இந்த கல்யாணத்தையும் ஏன் முடிச்சு போடணும்?''

''நீ இப்டி சொல்ற. உங்கப்பாவைப் பாரு. ஸேம் ஸைடு கோல் போட்டுட்ருக்காரு.''

''அதான் எனக்கு ஒண்ணும் புரியல. இதுக்கு பின்னாடி மனுஷன் ஏதாவது திட்டம் வெச்சிருக்காரா?''

''அதெல்லாம் ஒண்ணும் இருக்காது. சங்கீதாக்கு நிறை சீர் சினத்தி குடுத்தனுப்பணுங்கற ஆர்வத்துல பேசறார்.''

''அவங்களுக்கு என்ன பதில் சொல்லப் போற?''

''என்ன சொல்லட்டும்''

''ஒரு வாரம் டைம் கேளு. சுஜிதா வீட்ல இது பத்தி பேசிட்டு அப்பறம் சொல்றோம்னு சொல்லு.''

''அவங்கப்பா ஆயிரம் பவுன்போடுவார்டா. நம்பளால முடியுமா..?''

''இப்போதைக்கு சொல்லேன். மத்ததை அப்பறம் யோசிப்போம்.''

''எதுக்குடா குழையணும்? அதெல்லாம் முடியாது நாங்க செய்யறதைத்தான் செய்வோம்னு கண்டிஷனா சொல்லிட்டா?''

''உம் பொண்ணு அவனை லவ் பண்றா. அதை மறந்துடாதே. அவ ஓடிப்போனா அது நமக்கு நல்லதா..?''

சாரதாவின் முகம் வெளிறியது. பிள்ளை சொல்லிக் கொடுத்தபடி வெளியில் வந்து அவர்களிடம் சொன்னாள்.

''அப்பொ சரி நாங்க புறப்படறோம்.''

''எதுவும் சாப்டாம போறீங்களே''

''நிச்சயம் ஆனப்பறம் கை நனைச்சா போச்சு''

''வரோம்'' பிரவீண் கை கூப்பி விடை பெற்றான். சம்பத்தும் ஆகாஷும் வாசல்வரை வந்து வழியனுப்பினார்கள்.

சுஜிதா சாரதாவிடம் வந்தாள்.

''எனக்கென்னமோ இந்த இடம் நல்ல இடமா தோணல. இப்பவே இவ்ளோ சட்டமா பேசறாங்க! நாளைக்குபொண்ணைக் குடுத்தா படுத்தாம நல்லபடியா வெச்சுக்குவாங்களா...? இந்த இடம் வேணாம்மா. சங்கீதாகிட்ட பக்குவமா சொன்னா புரிஞ்சுக்குவா''

சாரதாவும் ஆமாம் என்பது போல் தலையாட்டினாள்.

நான் மனிதர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறேன்.
உலகத்தில் செயல்களை செய்து காட்டுபவர் சிலர்;
செய்து காட்டும் செயலைப் பார்த்துக் கொண்டிருப்பவர் பலர்;
என்ன நடக்கிறது என்றே அறியாமல் இருப்பவர் அநேகர்.

-பட்லர்

''பிள்ளைக்கு கல்யாணம் பண்ணும்போது எல்லா அம்மாவும் மாறி போய்டுவாங்கன்னு கேள்விப் பட்ருக்கேன். ஆனா நீ கூட அந்த லிஸ்ட்டுல சேருவன்னு நா நினைச்சுக் கூடப் பார்த்ததில்லம்மா''

வீட்டுக்கு வந்த சற்றுநேரத்தில் பிரவீண் வேதனையோடு சொன்னான். சம்பத்தின் வீட்டிலிருந்து கிளம்பியது முதல் வீடு வந்து சேரும் வரை வழியில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. பெண் பார்த்த இடத்தில் அம்மா போட்ட கண்டிஷனில் அவன் ஆடிப் போயிருந்தான். அம்மாவா இப்படி என்று திகைத்துப் போனான். பெண் வீட்டுக்காரர்களுக்கு முன்னிலையில் குறுக்கிட்டுப் பேசி அம்மாவை அவமானப் படுத்த அவன் மனம் இடம் கொடுக்காததால் தற்காலிகமாய் தன்னை ஊமையாக்கிக் கொண்டான். சங்கீதாவும் சம்பத்தும் அவனைப் பற்றி என்ன நினைத்திருப்பார்கள்! தாயின் முந்தானையில் மறைந்து கொண்டு வரதட்சணை கேட்கும் கோழையே என்று உள்ளுக்குள் நகைத்திருப்பார்களோ? நினைக்கும் போதே உடலும் மனமும் கூசியது.

இத்தனை காலம் கஷ்டப்பட்டு சேர்த்து வைத்திருந்த நற்பெயரும், மதிப்பும் ஒரு வினாடியில் கரைந்து காணாமல் போய்விட்டது போலிருந்தது. ஒரு ஆணின் உண்மையான மதிப்பும் கௌரவமும், அவனுக்கு மனைவியாய் வரப்போகிறவள் அவனைப் பற்றி என்ன நினைக்கிறாள் என்பதில்தான் இருக்கிறது. அப்படிப் பார்த்தால் இந்நேரம் அந்த வீடும், சங்கீதாவும் அவனைப் புழுவாய் நினைத்து ஒதுக்கியிருப்பார்கள். இப்போதே இப்படி என்றால் பின்னால் நீ இன்னும் என்ன பாடு படுத்துவாய் என்று பயந்திருப்பாள் சங்கீதா. இந்த இடம் வேண்டாம் என்று அப்பாவிடம் சொன்னாலும் சொல்லியிருப்பாள். இதை விட ஒரு ஆணுக்கு வேறு என்ன அவமானம் வேண்டும்.

பிரவீண் உள்ளுக்குள் நொறுங்கிப் போனான். அந்த வேதனையோடுதான் வீட்டுக்கு வந்ததும் அம்மாவிடம் அப்படி சொன்னான்.

அம்மா மௌனமாய் அவனைப் பார்த்தாள்.

''ஏம்மா பேசாம இருக்க? நா சம்பாதிச்சு சேர்த்து வெச்சிருக்கறதெல்லாம் உனக்கு பத்தலையா? பத்தலன்னா

என்கிட்டயே சொன்னா நானே இன்னும் அதிகம் சம்பாதிச்சு கொடுத்திருப்பேன் இல்ல? அதை விட்டுட்டு பெண் வீட்ல போய் என்னை காட்டி பேரம் பேசறயே நியாயமாம்மா...? இப்டி என்னைக் கேவலப்படுத்தவா இவ்ளோ நாள் கஷ்டப்பட்டு வளர்த்த..? இதை விட என்னை குப்பத்து புழுதியிலயே படிப்பு எழுத்து எதுவும் கொடுக்காம புரள விட்ருக்கலாமே. மஞ்சத் தண்ணி ஊத்தி மாலை போட்டு, குங்குமப் பொட்டு வெச்சு, கற்பூரம் காட்டி பலி கொடுக்கற ஆட்டோட நிலைமைதானா கடசீல எனக்கும்..?''

''இதுக்கு மேல ஒரு வார்த்தை கூட பேசாதே... நிறுத்திடுடா பிரவீண்...'' அம்மா கண்கள் பள பளக்க குறுக்கிட்டாள். மேற்கொண்டு அவனிடம் எதுவும் பேசாமல் விறுவிறுவென்று தன் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

பிரவீண் வேதனை மாறாமல், வேறு வேலையும் ஓடாமல் சோர்ந்து போய் சோபாவில் சாய்ந்து கொண்டான். நீங்களுமா பிரவீண்..? உள்ளுக்குள் சங்கீதா கிண்டலாகக் கேட்டுச் சிரிக்க கண்களை இருக மூடிக் கொண்டான்.

மொட்டை மாடியில் பிரம்பு சேரில் சாய்ந்து வானத்தை யோசனையோடு பார்த்துக் கொண்டிருந்த பெண்ணின் அருகில் வந்தார் சம்பத். காற்று மென்மையாய் வீசிக் கொண்டிருந்தது. மொட்டை மாடித் தொட்டிகளிலிருந்த மலர்களின் நறுமணம் காற்றில் கலந்திருந்தது.

''என்னம்மா பலமான யோசனையோ?'' அப்பாவின் குரல் கேட்டு சட்டென்று திரும்பினாள்.

''என்ன யோசனை..?''

''ஒரே குழப்பமார்க்குப்பா?''

''என்ன குழப்பம்..? எங்கிட்ட சொல்லு. தெளிய வெக்க முடியுதான்னு பார்க்கறேன்''

''அவங்க நல்லவங்க தானாப்பா..?''

''உனக்கெப்டி தோணுது?''

''நல்லவங்க மாதிரி தான் தெரியுது. ஆனா ஏம்பா அப்டி ஒரு கண்டிஷன் போட்டாங்க? அண்ணி வீட்ல அவங்களுக்கு குடுக்கறதெல்லாம் நானும் கொண்டு வரணும்னு சொல்றது சரியாப்பா..?''

''எனக்கென்னமோ சரின்னு தான் படுது''

''உண்மையைச் சொல்லுங்கப்பா. குழப்பாதீங்க''

சம்பத் சிரித்தார். அவளை உற்றுப் பார்த்தபடி அவள் எதிரில் அமர்ந்தார்.

''கவலையே படாத நாங்க உனக்கு என்னல்லாம் கொடுத்துனுப்பணும்னு நினைச்சுட்ருக்கோமோ அதை விட ரொம்ப ரொம்ப கம்மியா தான் அந்த பொண்ணு கொண்டு வரப்போறா''

''அதெப்டி சொல்றீங்க?''

''எனக்குத் தெரியும்?''

''எப்டி தெரியும்னு சொல்லுங்க''

''எனக்குத் தெரியாதுன்னு நினைச்சு இந்த வீட்லு நிறைய காரியம் நடக்குதும்மா. எல்லாம் எனக்குத் தெரியும்னு பாவம் அவங்களுக்குத்தான் தெரியாது''

''ஓசில விசு படம் பாக்கறா மாதிரி. இருக்குப்பா. இப்டி குழப்பறீங்களே''

சம்பத் அடக்க முடியாது சிரித்தார்.

''உனக்கு பையனைப் பிடிச்சிருக்குல்லம்மா? அப்புறம் மத்ததைப் பத்தி நீ ஏன் யோசிச்சு உடம்பைக் கெடுத்துக்கற?''

''அவர் அப்டி பேசாம இருந்தது எனக்கு கஷ்ட்ட மார்ந்துதுப்பா. சீர் சினத்தி விஷயம் பேசும் போது மட்டும் ஏன் எல்லா ஆண்களும் சைலன்ட்டா ஆயிடறாங்கன்னு தெரியல''

''பிரவீண் பாவம் சங்கீதா. உண்மையச் சொல்லப் போனா அவங்கம்மா அப்டி கேப்பாங்கன்னு அவனே எதிர் பார்த்திருக்க மாட்டான். அவன் முகத்துல அப்பொ ஏற்பட்ட தர்ம சங்கடத்தை நீ கவனிக்கலையா?''

''ஓகே. பிரவீண் நல்லவராவே இருக்கலாம். ஆனா அவங்கம்மா அப்டி கேட்டது சரியா? இப்டி ஒரு பேரம் அவங்க பேசினதால அவங்களைப் பத்தின அபிப்ராயம் என் மனசுல குறைஞ்சில்லப் போகுது. அதுக்கப்பறம் எப்டி அவங்களோட கல்மிஷமில்லாம பழக முடியும்? நெஞ்சுல கசப்பும் நாக்குல தேனுமா என்னால நடமாட முடியாதுப்பா. இந்த கல்யாணம் எனக்கு வேண்டாம்.''

''அவசரப்படாதே சங்கீதா... நீ இப்பொ அவசரப்பட்டு, எங்கிட்ட சொன்னதை உங்கம்மாட்ட போய்ச் சொன்னா என் திட்டமெல்லாம் தவிடு பொடியாய்டும்''

''திட்டமா?'' சங்கீதா அவரை வீழித்துப் பார்த்தாள்.

''ஆமாம்மா. திட்டம்தான். பணம் பணம்னு அலையற உங்கம்மாவுக்கு சில நிஜங்களைப் புரிய வெக்க நா போட்ட திட்டம்தான். வாழ்க்கைங்கறது பணத்தை நம்பியில்ல, மனசை நம்பி, நல்ல மனசுகளை நம்பின்னு அவ புரிஞ்சுக்கணும். அந்த சுஜிதா மேல எனக்கொண்ணும் வெறுப்பில்ல. எப்பொ ஆகாஷ் மனசை அவ கவர்ந்துட்டாளோ அப்பறம் நா அதுல குறுக்கிட விரும்பல. எவ்ளோ பெரிய கோடீஸ்வரங்கன்னு உங்கம்மாவேனா அவங்களைப் பார்த்து வாயப்பிளக்கலாம். சம்பந்தம் வெச்சுக்க பெருமைப்படலாம்.''

''அதே பெருமை அவங்களுக்கும் இருக்கணும் இல்ல? ஒரு வேளை இவங்க காதலுக்கு அந்த பொண்ணோட வீடு எதிர்ப்பு தெரிவிச்சுதுன்னா இந்த பொண்ணு வீட்டை விட்டு வெளிய வரலாம். அப்டி வெறுங்கையோட வெளில வர பொண்ணை உங்கம்மா சிரிச்ச முகத்தோட வரவேற்று ஆகாஷ்க்கு கட்டி

வெப்பான்னு நினைக்கறயா? நிச்சயம் மாட்டா. உண்மையைச் சொல்லணும்னா, இப்பவே அந்த பொண்ணு வீட்டை பகைச்சுக் கிட்டுதான் நம்ம வீட்ல வந்து தங்கி இருக்குன்னு நா சொன்னா நம்புவயா நீ...?''

சங்கீதா ஆச்சர்யமாக அப்பாவைப் பார்த்தாள்.

''நிஜம்மாவாப்பா..? இதெப்டிப்பா உங்களுக்குத் தெரிஞ்சுது? ஆகாஷ்க்கு இது தெரியுமா?''

''தெரியும். அன்னிக்கு அவங்கப்பாவை வழில பார்த்ததாகவும், அவங்கம்மாக்கு உடம்பு சரியில்லன்னு அவ போயிருக்கறதாவும் ஆகாஷ் வந்து சொன்னானே நினைவிருக்கா?''

''ஆமா...''

''அன்னிக்கு ராத்திரியே அந்த பொண்ணு திரும்பி வந்துட்டா. அதுவரை நிலை கொள்ளாம தவிச்சுட்ருந்தான் ஆகாஷ். அவளைப் பார்த்ததும் வாசலுக்கு ஓடினான். தோட்டத்து பக்கம் நின்னு அவங்க பேசினதையெல்லாம் மாடிலை இருந்த நான் எதேச்சை கேட்டதை பாவம் அவங்க கவனிக்கல. எனக்கு ஒரே கவலையாய்டுச்சு. ஒரு வேளை அந்த பொண்ணு வெறுங்கைய வீசிட்டு வந்தாலும் உங்கம்மா இப்பொ காட்டற இதே அன்பை, மரியாதையை அந்த பொண்ணுக்கு கொடுக்கணும் இல்லையா? அதான் என் கவலை. இந்த விஷயம் தெரிஞ்சா நிச்சயம் உங்கம்மா குணம் மாறும். ஏமாந்துட்டமேன்னு கொதிச்சு போவா. அந்த பொண்ணை கட்டிக்கக் கூடாதுன்னு ஆகாஷை நச்சரிப்பா.''

''ஆனா அவன் கேக்க மாட்டான். நம்ம எல்லாரையும் உதறிட்டு வெளில போவான் அவளைக் கூட்டிக்கிட்டு. இதான் நடக்கும். இது நடக்கக் கூடாதுன்னா உங்கம்மாக்கு உண்மை தெரியணும், பணம் முக்கியமில்லன்னு புரிஞ்சுக் கிட்டு அவ மனுஷங்களை நேசிக்க ஆரம்பிக்கணும். ஆகாஷோட காதலை மட்டும் மதிக்கத் தெரிஞ்சுக்கணும். அந்த

பொண்ணை பிடிச்சுதோ பிடிக்கலையோ நல்ல படியா நடத்தணும். இதுக்காக நா போட்ட திட்டம்தான் இது. பிரவீணோட அம்மகிட்ட இப்டி கேக்கச் சொல்லி சொன்னதே நான்தான். எனக்காகத்தான் அவங்க தன் பேரை கெடுத்துக்கறா மாதிரி நாடகமாடினாங்க. ஏன் நா சொல்லி அவங்க கேக்கணும்னு உனக்கு தோணினா அதுக்கும் பதில் இருக்கு. அவங்க புருஷன் என் பால்ய கால நண்பன்தான். அந்தம்மா கஷ்டப் பட்டப்பொ என்னால முடிஞ்ச சில உதவிகளை நானும் செய்திருக்கேன். அவங்க பிள்ளைதான் பிரவீண்ங்கற விஷயம் எனக்கே சமீபத்துலதான் தெரிஞ்சுது. அவங்க வீட்டுக்கு கல்யாண விஷயம் பேசப் போனப்பொ உங்கம்மாவைப் பத்தி மனசு விட்டுப் பேசி நா சொல்றபடி கேக்கச் சொன்னேன். பிள்ளைக்குத் தெரிஞ்சா வருத்தப்படுவான்னு அவங்க தயங்கினாங்க ஒரு நல்ல காரியத்துக்காகத்தானே இந்த நாடகம்னு, நாந்தான் சமாதானப்படுத்திட்டு வந்தேன். உண்மைல அவங்க எதுக்கும் டிமாண்டு பண்ணவும் இல்ல.''

''பண்ணப்போறதும் இல்ல. இதை ஒரு காரணமா வெச்சு உங்கம்மா சுஜிதாவோட அப்பா அம்மாகிட்ட கல்யாணம் பேசணும். பேசினாதான் அவளுக்கு உண்மை தெரியும். அவங்களுக்கு இந்த கல்யாணத்துல இஷ்டமில்லங்கறதையும் எலும்புத் துண்டு மாதிரி, நம்ம அந்தஸ்துக்கு இது போதும்னு அவங்கப்பா போடப்போற நகையும் குடுக்கற பணமும்தான் சுஜிதா கொண்டு வரப்போற சீர்னு அவ தெரிஞ்சுக்கணும். முதல்ல பிரச்சனை வந்தாலும் எல்லா பிரச்சனையும் அவங்க கல்யாணத்துக்கு முன்னாலயே தீரணும். உங்கம்மா தன் எதிர்ப்பார்ப்புகளை நிறுத்தி எல்லாத்துக்கும் தயாரா தன்னை மாத்திக்கணும். அந்த பொண்ணோட ஆகாஷ் இதே வீட்ல சந்தோஷமா வாழணும். இதான் என் கவலை. இதுக்காகத்தான் என் திட்டம்.''

அப்பா நிறுத்த, சங்கீதா இமைக்க மறந்து அமர்ந்திருந்தாள். சுஜிதாவை பிடிக்காவிட்டாலும் பிள்ளையின் காதலை மதிக்க நினைக்கும் அவருடைய பண்பில் நெகிழ்ந்து நின்றாள்.

''இப்பொ குழப்பமெல்லாம் தீர்ந்து தெளிஞ்சாச்சா?'' அப்பா அவளை அசைத்ததும் வெட்கத்தோடு சிரித்தாள்.

''இன்னும் கூட ஒரு சந்தேகம் இருக்கே''

''என்ன அது?''

''பூவோட சேர்ந்த நாரும் மணக்கும்னு சொல்லுவாங்க. இவ்ளோ வருஷம் உன்னோட வாழ்ந்தும் அம்மா மட்டும் எப்டி மணக்காம அதே குணத்தோட இருக்காங்க?''

''நா எப்டி நாறிப்போகாம இருக்கேனோ அதே மாதிரிதான்'' அப்பா குறும்பாகச் சொல்லி சிரிக்க சங்கீதா அடக்க முடியாமல் சிரித்தாள்.

''உங்கம்மாவை ரொம்பவும் தப்பா நினைச்சுடக்கூடாது சங்கீதா. பண விஷயத்துல மட்டும்தான் அவ பலவீனமானவ. பணமும் பங்களாவும், நகையும், பட்டுப்புடவையும், பகட்டு காரும்தான் மத்தவங்களோட மரியாதையையும் மதிப்பையும் சம்பாதிச்சுத் தரும்னு தப்புக்கணக்குப் போட்டு வெச்சுட்ருக்காளே தவிர அடி மனசுக்குள்ள அவளும் நல்லவதான். அந்த தப்புக்கணக்கை புரிஞ்சுக்கிட்டு சரி செயிதுட்டான்னா நம்பளை விட அவதான் நல்லவ. புரிஞ்சுதா..?''

''புரியுதுப்பா''

''குட்...இப்பொ நா போறேன். நீ உன் கனவு டூயட்டை கன்டின்யூ பண்ணு. பிரவீண் கோச்சுக்கப் போறான்'' அவர் கீழே இறங்கிச்சென்றார்.

சரண்யா வீட்டிற்கு வரும்போது வீட்டில் யாருமில்லை. வீடு பூட்டியிருந்தது. அடுத்த வீட்டுப் பெண்மணி இவள் தலையைக் கண்டதும் சாவி எடுத்துக் கொண்டு வந்தாள்.

''உங்கக்காக்கு ஏதோ உடம்பு முடியல போலருக்கு. டாக்டர்கிட்ட போறதா சொல்லிட்டு போனாங்க.''

''எந்த டாக்டர்..?''

''அது தெரியலையேம்மா. நீ வந்தா சாவி மட்டும் குடுத்துடச் சொன்னாங்க.''

சரண்யா கவலையோடு கதவு திறந்து உள்ளே வந்தாள். வீட்டில் எல்லாம் போட்டது போட்டபடி இருந்ததைப் பார்த்தால் ஏதோ அவசரமாய் போனாற்போலிருந்தது. சாமான்களை ஒதுக்கி வீட்டை பெருக்கி துடைத்தபடியே அக்காவுக்கு ஒன்றும் இருக்கக் கூடாதே என்று வேண்டிக் கொண்டாள். எட்டு மணிக்கு சத்யாவின் புருஷன் மட்டும் திரும்பி வந்தான்.

''அக்காக்கு என்ன உடம்பு?'' சரண்யா அவசரமாய் கேட்டாள். சரவணின் முகம் வேதனையில் சுருங்கியது. கண்ணில் நீர் துளிர்த்தது.

''என்னாச்சு..?'' சரண்யா பதறினாள். அப்படியும் இருக்குமோ என்று மனசு நடுங்கியது.

''அதென்னமோ தெரியல சத்யா...ஏன்னு புரியல''

''மறுபடியுமா...?'' சரண்யாவின் குரல் நடுங்கியது.

''அதேதான். இந்த முறை இன்னும் சீக்கிரமாவே கலஞ்சுடுச்சு. கர்ப்பப்பை புண்ணாகியிருக்கு. டாக்டரம்மாவே கவலைப்படறாங்க. டெஸ்டுக்கு குடுத்திருக்காங்க. நாளைக்குதான் எதுவும் சொல்ல முடியும்ங்கறாங்க!''

சரண்யாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. எத்தனை பேருக்கு எவ்வித பிரச்சனையுமின்றி திரும்பிப் பார்ப்பதற்குள் குழந்தை பிறக்கிறது. இதில் கூடவா தன் உடன் பிறந்தவள் சிரமப்பட வேண்டும்? அடுத்தடுத்து இப்படி கரு தங்காமல் கலைந்து கொண்டிருப்பது உடம்புக்கு நல்லதல்லவே. எவ்வளவு சக்தி வீணாகிறது..! ஏன் இப்படி சோதனைகளாகவே கொடுக்கிறது தெய்வம்?

இனம் புரியாத வேதனையோடு அவனுக்கு காப்பியும் டிபனும் கொண்டு வந்து கொடுத்தாள்.

சரவணன் காப்பி மட்டும் எடுத்துக் கொண்டான். பசியில்லை என்று டிபன் வேண்டா மென்றான். மன வேதனையோடு இருப்பவனை வற்புறுத்தாது டிபன் தட்டை மேடையில் வைத்து மூடி விட்டு வந்தாள்.

''நா வேணா போய்ட்டு அம்மாவை வீட்டுக்கு அனுப்பிடறேனே. பாவம் அவங்க ஏன் சிரமப்படனும்?

''அம்மாவும் அதான் சொன்னாங்க. நீ கிளம்பு''

அடுத்த பத்து நிமிடத்தில் சரவணன் அவளையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

தங்கையைப் பார்த்ததும் கண் கலங்கினாள் சத்யா.

''பரவால்லக்கா. எல்லாம் நல்லதுக்குன்னு நினைப்போம். உடம்பு முதல்ல சரியாகட்டும். ஏதோ காரணத்தோடதான் கடவுள் இதை செய்திருப்பான். அடுத்தாப்பல இப்டியாகாது. கொழு கொழுன்னு ஒரு குழந்தை நம்ம வீட்லயும் பிறக்கும் பார்''

''அப்பொ நாங்க கிளம்பவா சரண்யா... நீ பார்த்துப்ப இல்ல? நாங்க காலேல வரோம்''

சரவணன் அம்மாவை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு கிளம்பினான்.

மறுநாள் எட்டு மணிக்கெல்லாம் காப்பி டிபனை எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள். பத்து மணிக்கு டாக்டர் சரவணனை அழைத்தாள். அவனோடு அத்தையும் கூடச் சென்றாள். சற்று நேரத்தில் திரும்பி வந்தவர்கள் முகம் பேயறைந்தாற்போல் வெளிறிப் போயிருந்தது.

பிறப்பு, இறப்பு, மரணம்...இவைகளைத் தடுப்பதற்கு மருத்துவம் இல்லை.
அதனால் இவற்றுக்கு நடுவே இருக்கும்
இடைவேளைகளை ரசிக்கக் கற்பது நன்று.
– ஜார்ஜ் சாண்டயானா.

''ஏண்டா ஆகாஷ் அவங்களுக்கு ஏதாவது பதில் சொல்ல வேணாமா? அவங்க வந்துட்டு போய் நாலஞ்சு நாளாகுதே.'' வெளியில் கிளம்பிக் கொண்டிருந்தவனை நிறுத்திக் கேட்டாள் சாரதா.

''என்ன சொல்லப்போற?''

''எனக்கென்னமோ இந்த இடம் சரிப்படும்னு தோணல.''

''உம் பொண்ணுக்கு பிடிச்சிருக்கே''

''அப்படின்னா அவங்க கண்டிஷனுக்கு ஒத்துக்கச் சொல்றயா?''

''இதோ பாரும்மா இதையெல்லாம் முடிவு செய்ய வேண்டியது நீயும் அப்பாவும்தான். நீங்க என்ன முடிவெடுத்தாலும் எனக்கு ஒண்ணுமில்ல. அப்பாகிட்ட நீ இது பத்தி பேசினயா?''

சாரதா இல்லையென்பது போல் உதடு பிதுக்கினாள். ''எங்கே... அந்த மனுஷன்தான் இப்பல்லாம் எங்கூட நின்னு பேசறதேல்லயே. அப்டியே கேட்டாலும் அவர் நம்ம பக்கமா பேசப் போறார். அவங்க கேக்கறது நியாயம்னு அன்னிக்கு அவங்க எதிர்க்கயே சொன்னவர்தானே. இப்பவும் அதையேதான் சொல்லுவார்.

''நீயா எதையாவது கற்பனை பண்ணி பேசாதம்மா. முதல்ல அப்பாவோட பேசு.. அவர் என்னதான் சொல்றார்னு கேளேன். அதுக்கப்பறம் நாம ஒரு முடிவுக்கு வருவோம்'' சொல்லிக் கொண்டே காரில் ஏறியமர்ந்தான் ஆகாஷ்.

சாரதா யோசனையோடு உள்ளே வந்தாள். சம்பத் மாடியில்தான் இருந்தார். போய்ப் பேசினால்தான் என்ன? ஒரு தீர்மானத்தோடு மாடி ஏறினாள். பேப்பர் படித்துக் கொண்டிருந்தவர் அவளைக் கண்டதும் அதை மடித்து டீபாய் மீது வைத்துவிட்டு என்ன என்பது போல் அவளைப் பார்த்தார்.

''அந்தம்மாக்கு என்ன பதில் சொல்லி அனுப்பறது?''

''பரவால்லயே! எங்கிட்ட கன்ஸல்ட் பண்ற!''

''குதர்க்கமெல்லாம் வேண்டாம். வரவர உங்க பேச்சு நடவடிக்கை எதுவும் சரியில்ல. அப்டி என்ன நா உங்களுக்கு கெடுதல் பண்ணிட்டேன்னு விலகி விலகிப் போறீங்க?''

''நா விலகிப் பேறேன்? உன் நடவடிக்கைகள் என்னை விலகிப் போகச் சொல்லுது. பணத்துக்கும் பகட்டுக்கும் மரியாதையை அளவுக்கதிகமா கொடுக்காதே, மனுஷங்களை நீ இழந்துடுவன்னு எவ்வளவோ முறை எப்டி எப்டியெல்லாமோ சொல்லிப் பார்த்துட்டேன். நீ கேட்டாதானே? பணம்ங்கற அந்த மூணெழுத்துலயே தொங்கிட்டு நிக்கற! அதுதான் பரமசுகம்னு தீர்மானம் பண்ணிட்ட. பணம்தான் எல்லாம்னு உனக்கு தோண்றா மாதிரி அந்தம்மாக்கும் தோணுது போல்ருக்கு. அதை எப்டி தப்புன்னு சொல்ல முடியும்? தப்புன்னு சொல்ல நினைச்சா முதல்ல நம்பளை திருத்திக்கணும், அப்பறம் சொல்லணும்.''

''இருந்தாலும் நா என்ன அந்தம்மாவை மாதிரி பேராசையா படறேன்? இல்ல கண்டிஷன் போடறேனா?''

''இந்த ஆசையே தப்புங்கறேன். இதுல பேராசை என்ன சின்ன ஆசை என்ன?''

''இப்ப அதைப்பத்தி என்ன..? அந்தம்மாக்கு என்ன பதில் சொல்லலாம்னு சொல்லுங்க?''

''என்ன சொல்லலாம்னு நீ நினைக்கற?''

''எனக்கென்னமோ. இந்த இடம் சரிப்படும்னு தோணல.''

''அப்பொ?''

''வேணாம்னு சொல்லிட வேண்டியது தான்''

''இதைச் சொல்றதுக்கு எங்கிட்ட கலந்தாலோசிப்பானேன்? சொல்லிட வேண்டியதுதானே?''

''நா ஏன் சொல்லணும்? நீங்கதானே இந்த வரனைக் கூட்டிட்டு வந்திங்க. சரிப்படாதுன்னு நீங்கதான் அவங்ககிட்ட சொல்லணும்''

''எனக்கு சரிப்படும்னு தோணுதே''

''அப்படின்னா அவங்க என்ன கேட்டாலும் குடுக்கத் தயாரா நீங்க?''

''அவங்க அப்டி ஒண்ணும் பெரிசா கேட்டுடலையே உங்க மருமக என்னல்லாம் கொண்டு வராளோ அதை மகளுக்கும் கொடுத்தனுப்புங்க போதும்ங்கறாங்க அவ்ளோதானே?''

''அவ்ளோதானேன்னு சாதாரணமா சொல்லிட்டீங்க! சுஜிதா கோடீஸ்வரி. நாலஞ்சு கோடிக்கு கூட அவங்கப்பா அவளுக்கு சீர் செய்வார். நம்பளால முடியுமா?''

''நீ ஏன் சுஜிதாகிட்ட சீரை எதிர்பார்க்கற? எதுவும் வேணாம்னு சொல்லிடேன். பிரச்சனை தீர்ந்திடும் இல்ல? நீயும் சங்கீதாக்கு எதுவும் செய்ய வேண்டாமே!''

''ஆவற காரியமா பேசுங்க. அவங்க அந்தஸ்துக்கு அவங்க சும்மா அனுப்புவாங்களா? இல்ல நாமதான் சங்கீதாவை சும்மா அனுப்பிடுவோமா?''

''அப்படின்னா ஒரே ஒரு வழிதான் இருக்கு!''

''என்ன?''

''உன்னால சங்கீதாக்கு என்ன செய்ய முடியுமோ அதையே சுஜிதா வீட்ல செய்தா போறும்னு அவங்கப்பாகிட்ட ஸ்டிரிக்டா சொல்லிட வேண்டியதுதான். அப்பறம் என்ன? உனக்கும் சிரமமிருக்காது, சங்கீதா மனசுப்படியும் கல்யாணம் நடக்கும், சம்பந்தியம்மாவும் வாயத்திறக்க மாட்டாங்க. இதைத்தவிர வேற வழியில்ல''

''அதெப்டிங்க. நம்பளால சங்கீதாக்கு ஒரு அம்பது பவுன் நகை போட முடியும். ஒரு அஞ்சாறு லட்சத்துக்கு சீர் செஞ்சு சிறப்பா கல்யாணம் பண்ண முடியும். நம்ம பொண்ணுக்காக அந்த பொண்ணு தனக்கு கிடைக்கற சீரை வேண்டாம்னு சொல்லுவாளா? அப்டி சொல்லச் சொல்றதுதான் நல்லார்க்குமா?''

''அவ ஏண்டி கஷ்டப்படணும். அதுக்கப்பறம் அவளுக்கு வேண்ங்கற நகையெல்லாம் நீ செய்து போடேன். என்ன தேய்ஞ்சு போச்சு? இதோ பார் சாரதா இந்த விஷயத்துல நா சொல்றதைக் கேக்கலன்னா, சங்கீதா ஓடிப்போனாங்கற அவமானத்தை நீ சந்திச்சுதான் ஆகணும். பரவல்லன்னா உன் இஷ்டப்படியே செய்! நா போய் எங்களுக்கு சரிப்படாதுன்னு சொல்லிட்டு வந்துடறேன்.''

சம்பத் கிளம்ப சாரதா ரெண்டுங்கெட்டானாய் அவரைப் பார்த்தாள். ''இருங்க இருங்க... நா யோசிக்கிறேன். அப்பறம் சொல்லலாம்'' என்றபடி கீழே செல்ல, சம்பத் புன்முறுவலோடு அவள் செல்வதைப் பார்த்தார்.

உடனடியாய் கர்ப்பபையை நீக்காவிட்டால் உயிருக்கு ஆபத்தாகி விடும் என்று டாக்டர் சொன்னதற்கு காரணம், கர்ப்பப்பையில் பரவ ஆரம்பித்திருந்த புற்றுநோய்.

குடும்பமே ஆடிப் போயிற்று. புற்றுநோய் என்ற வார்த்தை ஏற்படுத்திய அதிர்ச்சி ஆயிரம் மடங்கு என்றால், இனி குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை அடியோடு தகர்க்கப்படப்

போகும் அதிர்ச்சி இரண்டாயிரம் மடங்கு தாக்கியது. சரவணன் சின்னக் குழந்தை மாதிரி ஒரு பக்கமாய் சாய்ந்து நின்று அழுதான். யாரை யார் தேற்றுவது, யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று புரியாமல் மூவரும் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தனர். மேற்கொண்டு என்ன செய்வதென்று கூடப் புரியவில்லை. சரண்யா ஒரு வழியாய் தன்னை சமாளித்துக் கொண்டு சரவணனிடம் வந்தாள்.

''இப்படியே நின்னுட்டா எப்டி மாமா? டாக்டருக்கு உடனடியா பதில் சொல்ல வேணாமா? வாங்க போய் ஆபரேஷனுக்கு எவ்ளோ பணம் ஆகும் என்னன்னு கேட்டுக்கிட்டு வருவோம். வசதிப்படும்னா இங்கயே வெச்சுக்குவோம். இல்லாட்டி வேற ஏதாவது ஆஸ்பத்திரிக்காவது போவோம்''

சரவணன் கண்ணைத் துடைத்துக் கொண்டு அவளோடு நடந்தான். அவன் அம்மா பெஞ்சில் சுருண்டு அமர்ந்திருந்தாள்.

''டெஃபனட்டா அம்பதாவது கைல வெச்சுக்கணும் மிஸ்டர் சரவணன்'' டாக்டர் சொன்னதும் தலை சுற்றியது. அவ்வளவு பணத்திற்கு எங்கே போவது?

''என்ன யோசனை? பணப் பிரச்சனைன்னா தாராளமா நீங்க கேன்ஸர் இன்ஸ்டிடியூட் கொண்டு போகலாம். அங்க இவ்ளோ ஆகாது. யோசிச்சுக்குங்க'' டாக்டர் அடுத்த கேஸ் பார்க்க கிளம்ப, இருவரும் எழுந்து வெளியில் வந்தனர்.

அம்மாவிடம் விஷயத்தை சொல்லி ஆலோசனை கேட்டான்.

''புள்ள பொறந்தா வளர்க்கணும் படிக்க வெக்கணும், கட்டிக் கொடுக்கணும்னு எவ்ளோ செலவு! அதெல்லாம் சந்தோஷமா செய்யலாம் அந்த புள்ள வளர வேண்டிய பையையே அறுத்தெடுத்து வெளிய போடப் போறாங்கன்னா மனசு ஆடுதடா சரவணா. உன் சக்தி என்னன்னு பார்த்து செய்.

எனக்கொண்ணும் சொல்லத் தெரியல.'' ஈனஸ்வரத்தில் பதில் சொன்னாள் அவள்.

சரவணன் சத்யாவைப் பார்த்தான். ''நிச்சயம் அம்பதுன்னா ரொம்ப கஷ்டமாய்டும் சத்யா. நாம கேன்ஸர் இன்ஸ்டிடியூட்க்கே போய்டுவோம். அதான் சரி. டாக்டர்கிட்ட சொல்லி டிஸ்சார்ஜ் பண்ணச் சொல்லிட்டு வந்துர்றேன்'' என்றபடி போனான். கதறியழுத சத்யாவை சமாதானப்படுத்தி, மறுநாளே புற்றுநோய் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். கர்ப்பப்பையில் புற்றுநோய் இருப்பது அங்கு உறுதி செய்யப்பட்டது. ''ஆரம்ப கட்டம்தான். வேற எங்கயும் பரவறதுக்கு முன்னாடி யூட்ரஸ் ரிமூவ் பண்ணிட்டோம்னா உயிருக்கு ஆபத்தில்லாம இருக்கலாம்''

சரவணன் சம்மதித்தான். கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான்.

பலவித பரிசோதனைகளுக்குப் பிறகு ஐந்தாவது நாள் சத்யாவுக்கு ஆபரேஷன் நடந்தது. சரவணனின் அலுவலகம் மருத்துவச் செலவுகளுக்கு பண உதவி அளிக்க முன்வந்தது ஒரு ஆறுதலான விஷயம்.

கிழித்துப் போட்ட நாராய்க்கிடந்தாள் சத்யா. எல்லா சக்தியும் போய்விட்டாற் போலிருந்தாள். இனி மருந்து மாத்திரை நல்ல உணவு என்று கொடுத்து மெல்ல மெல்ல அவள் உடல் நிலையைத் தேற்ற வேண்டும்.

இனி குழந்தை பிறக்காது என்ற சோகம் ஒட்டுமொத்த குடும்பத்தையும் பாதித்திருந்தது. முக்கியமாக சரவணனின் அம்மா ரொம்பவே ஆடிப் போயிருந்தாள். ஒரு தாய்க்கு தாயாவதைக் காட்டிலும் அதிக சந்தோஷம் பாட்டியாவதுதான். அந்த சந்தோஷம் தனக்கு இனி கிடைக்கவே போவதில்லை என்ற உண்மை அவளுக்குள் ஹிஸியாய்க் குத்தி வலி ஏற்படுத்தியது. அந்த வலி அவள் மனநிலையைக் கூட பாதித்து விட்டதோ என்று

தோன்றுமளவுக்கு நாள் செல்லச் செல்ல அவளது பேச்சும் நடவடிக்கைகளும் மாறிப் போயிற்று. திருப்திதான் மனிதனின் நற்குணங்கள் வெளிப்பட காரணமாயிருக்கிறது. திருப்தியில்லாதவனுக்கு மனம் அலைபாய்கிறது. அதிருப்தி ஆட்டி வைக்க வைக்க மனம் மேலும் கீழும் புரட்டிப் போட்டாற் போல் ஆகிவிடுகிறது.

மேலேயிருக்கும் நற்குணம் பின்னால் சென்று புதைய அடி ஆழத்தில் இருக்கும் மிருகம் கிடைத்த இடைவெளியில் எட்டிப் பார்க்க ஆரம்பித்து விடுகிறது. நோண்டிப் பார்த்தால் மனிதனின் எல்லா செயல்களுக்கும் காரணமாயிருப்பது அவனது ஆசைகள்தான் என்பது புரிந்து விடும். ஆசைகள் நிறைவேறி திருப்தியடையும்போது மனம் அமைதி நிலை அடைந்துவிட, அவனது குணமும் நற்குணமாகவே அமைதியாய் வெளிப்படும். ஆசை நிராசையாகி அதிருப்தி ஏற்படும்போது அதே மனது அலைபாய்ந்து குழம்பி அழுத்தமும் புயலும் அதிகமாக அந்த சிற்றத்தில் முதலில் சின்னாபின்னப்பட்டுப் போகும் முக்கியமான ஒன்று அவனுடைய குணம்தான். சத்யாவின் மாமியாரும் அதே நிலையில்தான் இருந்தாள்.

பேரனோ பேத்தியோ என்ற ஆசை, நிராசையாகிப் போனதில் அவளுக்குள் உறங்கிக் கொண்டிருந்த மிருகம் புரட்டி போடப்பட்டு தடக்கென்று விழித்துக் கொண்டது. ஏதாவதுசெய், ஒரு பேரனுக்கு வழியா இல்லாமல் போய்விட்டது? என்று அவளுக்குள் அந்த மிருகம் தூண்டி விட்டுக் கொண்டே இருந்தது. முதலில் அதை சட்டை செய்யாதவள் நாளடைவில் சோர்ந்து போய் அந்த குரலுக்கு செவிசாய்க்க ஆரம்பித்தாள். அவள் பேச்சிலும் நடவடிக்கைகளிலும் அந்த மனமாற்றம் மெல்ல மெல்ல வெளிப்பட ஆரம்பித்தது. ஆரம்பத்தில் அதை யாரும் உற்று கவனிக்கவில்லை அல்லது பொருட்படுத்தவில்லை என்றுதான் கூறவேண்டும். போகப் போக சரண்யாவுக்கு,

மாமியின் போக்கு லேசாய்ப் புரிய, அவளுக்குள் கவலை சூழ்ந்தது.

சாரதாவின் முடிவு சுஜிதாவுக்கு வியப்பாயிருந்தது. மிகப் பெரிய பிரச்சனை ஒன்று இதனால் தானாகத் தீர்ந்து விடும் என்று அவள் சுத்தமாய் எதிர்பார்க்கவில்லை. அப்பாவுக்கும் தனக்கும் ஏற்பட்ட விரிசலும் தன் குடும்பம் தன்னை ஒதுக்கி வைத்த விஷயமும் தெரிந்தால், எங்கே தங்கள் காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பிப்பாளோ என்ற பயம் போய் அவளே இப்போது, என் பொண்ணுக்கு நான் என்ன செய்கிறேனோ அதையே உன் வீட்டில் உனக்கும் செய்தால் போதும் என்று சொல்கிறாள் என்றால் ஆச்சர்யப்படாமல் எப்படி இருக்க முடியும். ஆக மொத்தம் சங்கீதாவின் மாமியார் போட்ட கண்டிஷன் தனக்கு மறைமுகமாக நன்மையே செய்திருக்கிறது என்பது புரிந்ததும் உள்ளுக்குள் சந்தோஷமடைந்தாள். இதற்கு மேல் சங்கீதாவின் திருமணத்தைத் தடுக்கப் பார்த்தால் அது தனக்குத்தான் ஆபத்து என்பதும் அவளுக்குப் புரிந்தது.

''என்ன யோசனை சுஜி? என் பெண்ணுக்காக உனக்கு கிடைக்க வேண்டிய பணம் பொருள் சுகம் எல்லாத்தையும் இழக்கச் சொல்றேனேன்னு வருத்தமார்க்கா?''

''ம்... அதெல்லாம் இல்ல ஆண்ட்டி...உங்க முடிவை மறுத்துப் பேச நான் யார்? என் பணம் எங்கயும் போகாது. எவ்ளோ நாள் அந்தம்மா இதை கவனிச்சுட்ருக்க முடியும்? வருஷங்கள் போகப் போக மறந்துடுவாங்க. அதுக்கப்பறம் எங்கப்பா எது கொடுத்தாலும் அவங்களுக்கென்ன தெரியவா போகுது? அப்டியே தெரிஞ்சாலும் அது நீங்க எனக்கு வாங்கிக் கொடுத்ததுன்னு சொல்லிட்டா போச்சு. வாயே திறக்கமாட்டாங்க. ஏன்னா நீங்க எனக்கு செய்தா, அவங்க சங்கீதாக்கு செய்யணுமே, அதுக்கு மனசு வந்துடுமா என்ன?

ஓசில கிடைச்சா வாங்கிப் போட்டுக்கு வாங்களே தவிர காசு போட்டு யாராவது மருமகளுக்கு செஞ்சுடுவாங்கன்னு நினைக்கறீங்க? நிச்சயம் மாட்டாங்க!''

சங்கீதாவின் மாமியாரைத்தான் அவள் தாக்கிப் பேசினாள் என்றாலும் அது தனக்கும் சேர்த்து தான் சொல்லப்பட்டதோ என்று துணுக்குற்றது சாரதாவின் மனம். அசட்டு சிரிப்பினால் அதை மறைத்துக் கொண்டு நகர்ந்தாள்.

ஒரு நல்ல நாள் பார்த்து நால்வரும் பிரவீணின் வீட்டுக்கு போய் பேசினார்கள். ஐம்பது பவுன் நகையும் ஐந்து லட்ச ரூபாய்க்கு மற்ற சீர் வரிசைகளும் மட்டும்தான் சுஜிதாவின் வீட்டில் தான் கேட்டிருப்பதாகவும், அதே அளவுக்கு சங்கீதாவுக்கும் செய்து விடுவதாகக் கூறினாள். பிரவீணுக்கு இந்த பேரமே பிடிக்கவில்லை என்று அவன் முகம் சொல்லியது. பெண் பார்த்து விட்டு வந்த அன்று அம்மாவிடம் பேசியதோடு சரி. அதற்குப் பிறகு இன்று வரை அம்மாவிடம் பேசவில்லை அவன் சங்கீதாவை இனி மறக்க முடியாது என்பதால்தான் இந்த திருமணத்திற்கு ஒப்புக் கொண்டான் அவன். அம்மாவே பேசிக் கொள்ளட்டும் என்பது போல் எழுந்து சென்று சிட் அவுட்டில் வந்து அமர்ந்து விட்டான் அவன்.

''எனக்கு சம்மதம்தான். நிச்சயதார்த்தம் அடுத்த வாரமே வெச்சுக்குவோம். அடுத்த முகூர்த்தத்துலயே கல்யாணத்தையும் நடத்திடலாம்'' பிரவீணின் அம்மா ஒரு வழியாய் பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைத்தாள். அனைவருக்கும் இனிப்பும் காரமும் காபியும் கொண்டு வந்து கொடுத்தாள். தானே பஞ்சாங்கம் எடுத்து வந்து நல்ல நாள் பார்த்து சொன்னாள்.

தனியே அமர்ந்திருந்த பிரவீணின் மனநிலை புரிய சம்பத் மெதுவாக எழுந்து அவனிடம் வந்தார்.

''என்ன பிரவீண் டல்லார்க்க...? உடம்பு கிடம்பு சரியில்லையான்ன?''

''இ... இல்லையே... ஒண்ணுல்ல'' பிரவீண் மரியாதை நிமித்தம் எழுந்தான்.

''எதுவார்ந்தாலும் பளிச்சுனு பேசறவன் நீ! இப்பொ உன் மனசுல இருக்கறதையும் பளிச்சுனு சொல்லிட்டா நல்லார்க்கும். எதுவும் இல்லன்னு மட்டும் சொல்லிடாதே.'' அவர் புன்னகையோடு சொன்னார்.

''யெஸ் சார்... இருக்கத்தான் இருக்கு. வேதனை! அதான் இருக்கு''

''என்ன வேதனை?''

''அம்மா உங்ககிட்ட பேரம் பேசினதுக்காக நா உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுக்கறேன் சார்''

''அடடே என்னப்பா இது...

''எனக்கு சங்கீதா வேணும்ங்கறதால என்னால அவங்களை எதிர்க்க முடியல. நாங்க பேசி பதினைஞ்சு நாளாறது''

''தப்பு பண்ணிட்ட பிரவீண். உங்கம்மா நிரபராதி. ரொம்ப நல்லவங்க. பின்ன குற்றவாளி யாருன்னு கேட்டா அது நான்தான். இதுக்குப் பின்னால இருக்கற உண்மைகளை முதலிரவன்னிக்கு சங்கீதா கிட்ட கேட்டுத் தெரிஞ்சுகோ யேன்'' சம்பத் கண்ணடித்து சிரிக்க, பிரவீண் திகைப்போடு அவரைப் பார்த்தான்.

உள்ளே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாய்
கேரக்டர்! கேரக்டர் அடிப்படைக் காரணம்
நேர்களுக்கும் ஆசைகளுக்கும் விதிப்பாடு
தெரியாமல் வாழ்வதுதான். நேர்கள் ஆசைகள்..

-டாக்டர் ருத்ரன்.

லொட்டு லொட்டென்று கார்ப்பரேஷன் பம்பில் யாரோ தண்ணீர் அடிக்கும் ஓசையில் சத்யா விழித்துக் கொண்டாள். அருகில் சரவணன் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான். எழுந்து கூடத்துக்கு வந்தாள். சரண்யாவும் நன்கு தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் அருகில் இருக்க வேண்டிய அத்தையைத்தான் காணவில்லை. சத்யா பின்பக்கம் வந்தாள். வியர்க்க விறுவிறுக்க தண்ணீர் அடித்துக் கொண்டிருந்த அத்தையைப் பார்த்ததும் பதறினாள்.

''நீங்க எதுக்கு அத்தை இந்த வேலையெல்லாம் செய்றீங்க?''

''பின்ன யார் செய்வாங்க? நீ சீக்காளி. அவ சின்ன பொண்ணு, எம்பிள்ளைய வேல வாங்க எனக்கு மனசு வராது''

''சரி நகருங்க நா அடிக்கறேன்''

''வேணாண்டி தாயே. உனக்கு ஏதாவது ஆச்சுன்னா எம் பிள்ளைக்கு யாரு பதில் சொல்றது?''

''எனக்கு ஒண்ணும் ஆகாது நகருங்க''

''வேணாம்... வேணாம் நீ போ, நானே அடிச்சுக்கறேன்'' மாமியார் பிடிவாதமாய் பம்ப்பை இறுக்கமாகப் பிடித்துக்

கொண்டு அடிக்க, சத்யா என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு சில வினாடிகள் மலங்க மலங்க நின்றாள். அதற்குள் சத்தம் கேட்டு சரண்யாவும் எழுந்து வந்தாள்.

''எனக்கா இங்க நிக்கற..?''

''கொஞ்சம் தண்ணியடி சரண். என்னை அடிக்க விட மாட்டேன்றாங்க அத்தை''

''நகருங்கத்தை நா அடிக்கறேன்''

''வேணாந்தாயி.. அவன் கத்துவான்''

''ஒண்ணும் கத்தமாட்டார். வயசானவங்களை தண்ணியடிக்க விட்டுட்டு வேடிக்கை பாக்கறீங்களான்னு எங்களைத்தான் கத்துவார். நகருங்க'' சரண்யா பலவந்தமாய் அத்தையை நகரச் செய்து தண்ணீர் அடிக்க ஆரம்பித்தாள்.

''அவதான் அடிக்கறா இல்ல. இன்னும் ஏன் நிக்கற? போய் படுக்கைல விழுந்து கிடக்க வேண்டியதுதானே''

சத்யாவை பார்த்து எர்ச்சலோடு சொல்லிவிட்டுச் சென்றாள் மாமியார். கொஞ்ச நாளாகவே இப்படித்தான் எதற்கெடுத்தாலும் எரிந்தெரிந்து விழுகிறாள். இவள் ஒரு வியாதிக்காரியாகி விட்டாளே என்ற எரிச்சலா அல்லது இனி தனக்கு பேரக்குழந்தையே பிறக்கப் போவதில்லை என்ற ஆத்திரமா தெரியவில்லை. உடம்பென்னும் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டு விட்டால் மரியாதை அன்பு எல்லாமே குறைந்து போய்விடும் போலும். எதற்கெடுத்தாலும் சுருக் சுருக்கென்று ஏதாவது சொல்வது இப்போதெல்லாம் வாடிக்கையாகி விட்டது.

சரவணனிடம் மாமியாரைப் பற்றி எதுவும் சொல்ல முடியவில்லை. தலையணை மந்திரம் என்றுதான் சொல்லுவானே தவிர நம்ப மாட்டான். முதலாவதாக ஒருவரைப் பற்றி ஒருவரிடம் குறை சொல்லி எல்லாம் பழக்கமில்லை. அப்பா அவர்களை அப்படி

வளர்க்கவில்லை. மாமியாரின் எரிச்சலுக்கு காரணம் பேரக்குழந்தை பிறக்க வழியில்லையே என்பதுதான் என்று புரிந்த பிறகு அவள் மீது பரிதாபம்தான் ஏற்பட்டது. எந்த ஒரு தாய்க்கும் இயல்பாய் ஏற்படும் நியாயமான ஆசைதானே பாட்டியாக வேண்டுமென்பது! அந்த ஆசையில் மண் விழுந்துவிட்டதால் எரிச்சல்படுகிறாள். இதைப்போய் குற்றம் என்று அவளைப் பற்றி புருஷனிடம் எப்படி குறை சொல்வது? போகட்டும் அம்மா இருந்திருந்தால் எதற்காவது கோபப்படமாட்டாளா? அந்த மாதிரி நினைத்துக் கொண்டு விடுவோம்! சத்யா தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டு உள்ளே வந்தாள். சரவணன் இன்னும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

'ஏங்க... மணியாகலையா..? இன்னிக்கு சீக்கிரமே போணும்னு சொல்லிட்டு இன்னும் தூங்கறீங்க!'' அவனை அசைக்க அவன் சட்டென்று எழுந்து மணியைப் பார்த்தான். பிறகு அரக்க பரக்க எழுந்து பின் பக்கம் வந்தான். தண்ணீர் அடித்துக் கொண்டிருந்த சரண்யாவைப் பார்த்து சிரித்தபடி பிரஷ்ஷில் பேஸ்ட்டைப் பிதுக்கினான். சத்யா பின்பக்கம் வந்து அவன் குளிப்பதற்கு நீர் எடுத்து வைக்க பக்கெட்டை எடுத்தாள். அந்த நேரம் அங்கு வந்த அத்தை சத்யாவை முறைத்துப் பார்த்தாள்.

''அடடாடா! உம் பொண்டாட்டிக்கு எத்தனை தரம் சொன்னாலும் புரியாதாடா சரவண்ணா..? இவ தண்ணி எடுத்து வெக்காட்டி நீ குளிக்க மாட்டாயா..?''

''நா ஒண்ணும் எடுத்து வெக்கச் சொல்லலம்மா. அவளேதான்...''

அதான் எதுக்குன்னு கேக்கறேன். உடம்பு முடியல இல்ல..? ஒரு இடமா கிடக்க வேண்டியதுதானே..? நாங்க இல்ல... உனக்கு தண்ணி எடுத்து வெக்க. இவ எதுக்கு கிடந்து அல்லாடறா...?

''நீ போ சத்யா உள்ள..

சரவணன் உத்தரவிட சத்யா கண் கலங்கியதை மறைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

''சரண்யா அவனுக்கு கொஞ்சம் தண்ணி எடுத்து வெச்சுட்டு வா'' அத்தை சரண்யாவிற்கு உத்தரவிட சரண்யா மறு பேச்சு பேசாமல் ஒரு பக்கெட் தண்ணீரை எடுத்து பாத்ரூம் உள்ளே வைத்துவிட்டு வந்தாள். சரவணன் குளிக்கப் போனான். அவன் குளித்துவிட்டு வந்ததும் அத்தை மறுபடியும் சரண்யாவை அழைத்தாள்.

''இந்த காப்பிய அவனுக்கு ஆத்திக்குடுத்துட்டு வா''

சரண்யா காப்பி டம்ளரை வாங்கிக் கொண்டு கூடத்திற்கு வந்தாள்.

''வெச்சுட்டு போ சரண். நா ஆத்திக்கறேன்'' சரவணன் தலை சீவியபடி சொன்னான்.

''வேணாம் அத்தை திட்டு வாங்க. நானே ஆற்றித்தரேன்''

''ஆச்சா சரண்யா? இந்தா இந்த டிபனைக் கொடு அவனுக்கு. அப்டியே அவன் டிபன்பாக்ஸ்ல கொஞ்சம் தயிர்சாதம் கட்டிக் கொடுத்துடு''

அடுத்தடுத்து சரண்யாவுக்கு அம்மா போட்ட உத்தரவில் சரவணன் திகைத்தான். இந்த அம்மாவுக்கு என்ன ஆயிற்று? எதற்காக அந்த பெண்ணை விரட்டி விரட்டி வேலை வாங்குகிறாள்?

''ஏம்மா இதெல்லாம் சத்யா செய்யமாட்டாளா. சின்னச் சின்ன வேலைதானே. அவளுக்கு படிக்கற வேலை இருந்தா படிக்கட்டுமே''

''நெனச்சேன்! என்னடா நீ இன்னும் எதுக்கும் வாய்த் திறக்கலையேன்னு! நா இந்த வீட்ல இருக்கறது பிடிக்கலன்னா சொல்லுடா. நா வேணா ஏதாவது ஹோம்ல சேந்துக்கறேன்''

''இப்ப நா என்னம்மா சொல்லிட்டேன்?''

''பின்ன என்னடா அவளுக்கு உடம்பு முடியலையேன்னு இவகிட்ட வேலை சொன்னா தப்புங்கற? வேண்டாம்ப்பா உம் பெண்டாட்டி, மச்சினி ரெண்டு பேரையுமே நா வேலை வாங்கல. இந்த தேகத்துல தெம்பிருக்கற வரை நானே செய்துட்டு போறேன்''

''உனக்கென்னமா ஆச்சு..? ஏன் ஏதேதோ பேசற..?

''அப்பொ இங்க நடக்கறதையெல்லாம் பாத்துக்கிட்டு ஊமையார்க்கணுங்கறயா..?''

''அப்டி இங்க என்ன நடக்குதுன்ற..?''

''எதுவும் நடக்கலடாப்பா! நாந்தான் தப்பு பண்ணிட் ருக்கேன். இந்த வீட்ல எனக்கும் உரிமையிருக்குன்னு பேசிட்ருக்கேன் பாரு அதான் தப்பு''

''கடவுளே... நீ ஏன் இப்டி ஏறுக்குமாறா பேசறன்னு புரியல. எனக்கு டிபனும் வேணாம் ஒரு எழவும் வேணாம்!'' சரவணன் எரிச்சலோடு சொல்லிவிட்டு கிளம்பிச் சென்றான்.

வீடு ஒரு வினாடி படு நிசப்தமாயிருந்தது.

சரண்யா என்ன பேசுவதென்று புரியாமல் நின்றாள். அத்தை சொல்வதைத் தட்டமுடியாமல்தான் அவள் சொன்ன வேலைகளைச் செய்கிறாள் என்றாலும் சரவணனுக்கு அது சுத்தமாய்ப் பிடிக்கவில்லை என்பது புரிந்தது. சரண்யாவின் உதவிகளை அவன் விரும்பவில்லை. அம்மா தன் மனைவியை உதாசீனப்படுத்துவது அவனுக்கு வருத்தத்தைக் கொடுத்தது. அம்மா ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள் என்பது புரியவில்லை என்றாலும் இதற்கெல்லாம் முடிவு கட்ட வேண்டும் என்பது போல்தான் அவனும் இன்று சட்டென்று படபடத்து விட்டான். அதன் பின் விளைவாக அத்தையின் கோபம் சத்யாவின் மீதுதான் பாய்ந்தது. ''இப்ப திருப்தியா..? உம்புருஷன் சாப்டாம

போறான். இதுக்குத்தானே குறுக்கும் நெடுக்கும் நடமாடிட்டு இருந்த!''

சத்யா மௌனமாக அமர்ந்திருந்தாள். சரண்யா என்ன செய்வதென்று புரியாமல் திகைத்துப் போனாள். அத்தையை எதிர்த்துப் பேச முடியாது. அக்காவைப் பார்த்தாலும் மனதுக்கு கஷ்டமாக இருந்தது. சரவணனாவது கொஞ்சம் பேசாமல் இருந்திருக்கலாம். அவன் பாட்டுக்கு படபடவென்று பேசிவிட்டுப் போய்விட்டான். இதனால் சத்யாவுக்கும் சரண்யாவுக்கும்தான் கஷ்டம் என்றுயோசிக்க வேண்டாமா..? ஒரு வேளைதான் இங்கு வந்து தங்கியிருப்பது அத்தைக்குப் பிடிக்கவில்லையா? இப்படியெல்லாம் வேலை வாங்கினால், வீட்டை விட்டு தான் கிளம்பிடுவோம் என்று நினைக்கிறாளா? ஒன்றும் புரியவில்லை அவளுக்கு. அதற்கு மேல் பேசாமல் நின்றிருந்தால் அதற்கும் ஏதாவது சொல்லப் போகிறாள் என்று பயந்து, தன் உடைகளை எடுத்துக் கொண்டு குளிக்கப் போனாள்.

அவள் குளித்துவிட்டு வரும்போது அத்தை அடுக்களையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். சரண்யா பதறிப்போய் கிட்டே வந்தாள்.

''என்னத்த எதுக்கு அழறீங்க..? மாமா சாப்டாம போனதுக்கா..?''

''எல்லாத்துக்கும் சேர்த்துதான் அழுவறேன்''

''எங்கிட்ட ஏதாவது கோவமா அத்தை?''

அத்தை இல்லையென்பது போல் தலையாட்டியவள், கண்ணைத் துடைத்துக் கொண்டு அவளைப் பார்த்தாள்.

''இப்டி உக்காரு சரண்''

சரண்யா அவளருகில் அமர்ந்தாள்.

''எனக்கு யார் மேலயும் கோவமில்ல. உங்கக்கா உடம்பிருக்கற நிலையில அவளை வேலையெல்லாம் செய்ய வேணாம்னு சொல்றேன். அது தப்பா சொல்லு..''

''தப்பில்ல''

''நீ புரிஞ்சுக்கிட்ட! புரிஞ்சுக்க வேண்டியவங்களுக்கு எங்க புரியுது''

''அக்காகிட்ட நா சொல்றேன் அத்தை. அவ புரிஞ்சுப்பா''

''அது மட்டும் போதாது சரண். சரவணனுக்கு வேணுங்கற உதவியெல்லாம் நீயே செய்துட்டா என் வேலை குறையும். அவனுக்கு எல்லாமே நானே செய்து பழக்கிட்டேன். இப்போ சத்யாவுக்கும் முடியலதானே செய்துக்கறேன்னுதான் அவன் சொல்லுவான். ஆனா மூணு பொம்பளைங்க வீட்ல இருக்கும்போது அது நல்லார்க்குமா சொல்லு''

''சரி அத்தை. அவ்ளோதானே..? நா பாத்துக்கறேன் விடுங்க முதல்ல நீங்க டிபன் சாப்பிடுங்க. மாமா ஒண்ணும் பட்னி கிடக்கமாட்டாரு. ஹோட்டல்ல மூக்கு பிடிக்க சாப்ட்டுட்டு போயிருப்பார். அதை நினச்சு உங்க உடம்பைக் கெடுத்துக்காதீங்க வாங்க.''

சரண்யா அவளை உட்கார வைத்து டிபன் கொடுத்தாள். சத்யாவுக்கும் டிபன் கொடுத்து சாப்பிட வைத்தாள்.

''உம்மேல இருக்கற அக்கறைல தான் வேலை செய்யாதேன்னு சொல்றாங்க சத்யா. எதுக்கு அனாவசிய பிரச்சனை? நீ பேசாமதான் இரேன். மாமாக்கு வேணுங்கறதைச் செய்ய மாட்டோமா நாங்க..

சத்யா மௌனமாகச் சாப்பிட்டாள்.

சரண்யா தானும் டிபன் சாப்பிட்டு விட்டு கிளம்பினாள். இங்கு இருப்பதற்கு லைப்ரரிக்குச் சென்றால் நாலு புத்தகங்களாவது ரெஃபர் செய்யலாம் என்ற எண்ணத்தோடு பிரிட்டிஷ் கவுன்ஸிலுக்குக் கிளம்பிச் சென்றாள்.

அவள் போனதும் அத்தை சத்யாவிடம் மாத்திரைகளோடு வந்தாள்.

''இதை சாப்டு'' மாத்திரைகளையும் தண்ணீரையும் நீட்டினாள்.

''என்னால் உங்களுக்கு ரொம்ப கஷ்டம் இல்லத்தே...? போறாததுக்கு சரண்யா வேற ஒரு பாரம்!''

அத்தை எந்த பதிலும் சொல்லாமல் எழுந்து போனாள். சத்யாவுக்கு அப்படி அவள் பேசாமல் போனது என்னவோ போலிருந்தது. அந்த வீட்டில் திடீரென்று தான் அன்னியமாகப் போய்விட்டாற் போலிருந்தது. சரவணன் எப்போதும் போல்தான் இருக்கிறான். அத்தையின் பேச்சும் போக்கும்தான் காயப்படுத்துவதாயிருந்தது. அவள் மனதில் என்ன இருக்கிறதென்றே புரியவில்லை. பேரக்குழந்தைக்கு ஏங்கும் அந்தக் காலத்து மனுஷியாதலால் அது கிடைக்க வழியில்லை என்றானதும் அந்த ஆத்திரத் தால் இப்படி நடந்து கொள்கிறாள் என்பது மட்டும் புரிந்தது. ஒரு குழந்தைக்காக மனிதன் முயற்சிக்கலாமே தவிர ஒரு உயிரின் ஜனனமும், மரணமும் இறைவனின் ஆணைப்படிதான் ஏற்படும் என்பதை புரிந்து கொண்டு விட்டால் தேவையின்றி இவள் மீது ஆத்திரம் ஏற்படாது. அத்தை அப்படி யோசிக்க முற்படவில்லை. அவளுக்கு புரிய வைக்க சத்யாவிற்கு வயதும் இல்லை. எனக்கே புத்தி சொல்கிறாயா என்று ஆங்காரப்படுவாள். அது ஒரு புது பிரச்சனையாகும் சத்யா பெருமூச்சு விட்டாள்.

அத்தை ஒரு முறத்தில் ரேஷன் அரிசி கொண்டு வந்தாள்.

''இதைக் கொஞ்சம் சுத்தம் பண்ணிக் கொடு... முடியுமில்ல?''

''குடுங்க...''

அத்தை முறத்தை அவளிடம் கொடுத்துவிட்டு காய்கறி நறுக்க அமர்ந்தாள். நெல்லும் களிமண் உருண்டைகளும் பொறுக்கிப் போட்டுக்கொண்டிருந்த சத்யாவையே ஒரு சில வினாடிகள் உற்றுப் பார்த்தாள்.

''நா ஒரு விஷயம் சொன்னா காது கொடுத்து கேப்பியா சத்யா?''

''சொல்லுங்கத்தை'' சத்யா நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னடா இப்டி சொல்றாளே இவன்னு கோவப்படாம பிராக்டிகலா யோசிச்சு நீ ஒரு முடிவுக்கு வரணும் சரியா?''

இவ்வளவு பீடிகையோடு அப்படி என்ன விஷயம் பேசப் போகிறாள்? சத்யாவின் இதயம் திடீரென்று படபடக்க ஆரம்பித்தது பயத்தில்..

அத்தை வார்த்தைகளை சாதுர்யமாய் தேர்ந்தெடுத்து தன்னுடைய எண்ணங்களைச் சொல்லச் சொல்ல சத்யாவின் முகம் பேயறைந்தாற்போல் ஆயிற்று. விழி பிதுங்க அத்தையைப் பார்த்தவள் பிறகு முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

சுகம் என்பது இருவகையானது. ஒன்று பிரயேஸ்; மற்றொன்று சிரேயஸ். பிரேயஸ் என்பது நம் மனம் விரும்பிப் பெறுவது. மற்றது நமக்கு நன்மை பயப்பது. தொடக்கத்தில் இன்பம் தந்து இறுதியில் துயரம் தருவது பிரயேஸ். தொடக்கத்தில் துயரமும் இறுதியில் இன்பமும் தருவது சிரேயஸ்.

-கடோபநிஷத்.

சாரதா குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தாள்.

மண்டபம் கிடைத்ததும் போன் பண்ணுகிறேன் என்று சொன்ன சம்பத்திடமிருந்து இதுவரை போன் வரவில்லை. ஒருவேளை சத்திரம் கிடைக்கவில்லையோ? சாரதா

கவலையோடு அமர்ந்தாள். நிச்சயதார்த்தத்தையே பாதி கல்யாணம் அளவுக்கு கிராண்டாக நடத்திவிட வேண்டும் என்று சம்பந்தியம்மாள் சொன்னதும் சம்பத் உடனடியாக ஒப்புக் கொண்டார். தங்களது சக்தியும் செல்வாக்கும் என்னவென்று சம்பந்தியம்மாளுக்கு காட்ட இது ஒரு வாய்ப்பு என்பதால் சாரதாவும் மறுக்கவில்லை. தன் பெண்ணின் திருமணமும் சரி நிச்சயதார்த்தமும் சரி சிறப்பாக நடத்த வேண்டுமென்பதுதான். அவளது நெடுநாளைய ஆசை. இன்னும் பத்து நாளே நிச்சயதார்த்தத் தேதிக்கு இருக்க கல்யாண மண்டபம் கிடைப்பது பெரும்பாடாய் இருந்தது.

''என்ன ஆண்ட்டி என்ன யோசனை?''

பின்னால் சுஜிதாவின் குரல் கேட்க திரும்பினாள்.

''மண்டபம் கிடைச்சுதான்னு தெரியலையே சுஜி''

''எதுக்கு மண்டபம்?''

''என்னம்மா இப்டி கேக்கற? நிச்சயதார்த்தத்தை மறந்துட்டயா?''

''அதுக்கு மண்டபம் எதுக்கு ஆண்ட்டி''

''கிராண்டா பண்ணனும்னு மாப்ள வீட்ல சொல்லியிருக்காங்களே.''

''அப்படியா சொன்னாங்க?''

''ஆமாம்மா. நாந்தான் உங்கிட்ட சொல்ல மறந்துட்டேன் போல்ருக்கு''

''அவங்க பண்ற டிமாண்டுக்கெல்லாம் ஏன் ஆண்ட்டி ஒத்துக்கறீங்க? எனக்கென்னமோ அவங்களை நல்லவங்களாவே நினைக்க முடியல. ஏதோ உள் நோக்கத்தோடயே ஒவ்வொண்ணா டிமாண்ட் பண்றா மாதிரியிருக்கு.''

''போய்ட்டு போகுது சுஜி. நம்ம பொண்ணுக்கு எல்லாமே கிராண்டா பண்ணனும்னு எனக்கும் ஆசைதான்.''

''என்னமோ செய்ங்க ஆண்ட்டி. உங்க வீட்டு காசு, உங்க பொண்ணு. நா என்ன சொல்ல? இல்ல நா சொல்றதைத்தான் நீங்க நம்பிடப் பொறீங்களா?''

''நம்பாத அளவுக்கு என்ன சொல்லப் போற சுஜி?''

''நிச்சயம் பண்ற அளவுக்கு ஆனப்பறம் எனக்கு சொல்லவே கஷ்டமார்க்கு''

''என்ன விஷயம் சுஜி?''

''ரெண்டு நாள் முந்தி என் டாக்டர் பிரண்டு ஒருத்தரைப் பார்க்க அவரோட நர்ஸிங்ஹோம் போயிருந்தேன் ஆண்ட்டி. அங்க இந்த பிரவீண் டாக்டரோட பேசிட்ருந்தான். அவங்க உள்ள பேசிக்கிட்டது எனக்கு நல்லாவே கேட்டுது. டாக்டர் அவங்கிட்ட கல்யாணம் பண்ணிக்கிட்டா உங்க உயிருக்கு நா கியாரண்ட்டி இல்லன்னு சொல்லிட்ருந்தார். எனக்கு ஷாக்காய்டுச்சு. பிரவீண் எழுந்து வெளிய வரதைப் பார்த்ததும் நா ஓடி வந்துட்டேன். அதுக்கப்பறம் டாக்டர் கிட்ட அவனுக்கு என்ன உடம்புன்னு கேக்கனும்னு ஆனவரை டிரை பண்ணினா டாக்டர் அன்னி நைட்டே லண்டன் போய்ட்டாராம்.''

சாரதாவின் முகம் மாறியது. ''என்ன சொல்ற சுஜி நீ? என்னால நம்ப முடியலையே.''

''தெரியும். நா சொல்லல? நீங்க நம்ப மாட்டீங்கன்னு.''

''சரி அப்டியே நம்பினாலும் நா என்ன செய்ய? என்னன்னு காரணம் கேட்டா என்ன சொல்ல? அப்டியே கேட்டாலும் அவங்க ஆமாம்னு உண்மையை ஒத்துக்குவாங்கன்னா நம்பற? அப்டியெல்லாம் எதுவுமில்லன்னு சாதிப்பாங்க''

''சாதிக்கட்டும். அதை நாம நம்பனும்னா நமக்கு தெரிஞ்ச டாக்டர்கிட்ட உடம்பை ஃபுல் செக்கப் பண்ணிக்க சொல்லுங்க. ஒண்ணுமில்லன்னு அந்த டாக்டர் சொல்லட்டும்.''

''இதுக்கு அந்த பையன் ஒத்துப்பானா?''

''ஒத்துக்காட்டி பயப்படறான்னு அர்த்தம்''

''நாம அவனை அவமானப் படுத்தறோம்னு நினைச்சா?''

''இது நம்ம வீட்டு பொண்ணு வாழ்க்கை பிரச்சனையாச்சே. விட்டுட முடியுமா?''

''அவங்களை விடு சுஜி. எம்புருஷனே இதை நம்பமாட்டாரே! நீ சொல்றதை நா வேணா நம்பலாம். ஆனா எம்புருஷன் நம்புவார்னா நினைக்கற?''

''இப்டியெல்லாம் அனாவசிய சந்தேகம் வரும்னுதான் நா வாய மூடிட்ருந்தேன். நீங்கதான் என் வாயப்பிடுங்கினீங்க.'' ஏற்கனவே குழம்பிக்கிடந்த மனக்குளம் இன்னும் குழம்ப, சாரதா யோசனையோடு அமர்ந்தாள். சுஜிதா சொன்னதை நம்பவும் முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. இப்போது அலட்சியப்படுத்திவிட்டு ஒருவேளை இவள் சொன்னது உண்மைதான் என்பது பின்னால் தெரிய வந்தால் வருத்தமல்லவா பட வேண்டியிருக்கும்.

''யோசனை பண்ணி செய்ங்க ஆண்ட்டி. நம்ம வீட்டு பொண்ணு நல்லார்க்கணும்னுதான் சொல்றேன். என்னைக் கேட்டா இனிவர காலத்துல கல்யாணத்துக்கு ஜாதகம் பார்க்கறதை விட, பிளட் குரூப் பாக்கறதும் மெடிகல் ஃபிட்னஸ் பாத்தும் கல்யாணம் பண்றதுதான் பெட்டராக்கும். ஜாதகத்துல உடம்புக்குள்ள இருக்கற வியாதியெல்லாம் தெரிஞ்சுடுமா என்ன?''

சுஜிதா மாடிக்கு செல்ல, சாரதா கலக்கத்தோடு அவளைப் பார்த்தாள்.

போன் அடித்தது.

எழுந்து சென்று எடுத்தார். சம்பத்தான் எதிர்முனையில் பேசினார்.

''மூணு மண்டபம் ஃபிரியார்க்கு அந்த தேதில சாரதா. ஒண்ணு சிட்டிலயே இருக்கு. ஆனா சின்னது. மத்த ரெண்டும் அண்ணாநகர்லயும், தாம்பரத்துலயும் இருக்கு இருபதாயிரத்து கிட்ட வாடகை. எதை புக் பண்ணட்டும்?''

''எதுவும் பண்ண வேண்டாம். முதல்ல வீட்டுக்கு வாங்க. உங்ககிட்ட ஒரு முக்கயமான விஷயம் பேசணும்.''

''என்ன சாரதா''

''முதல்ல வீட்டுக்கு வாங்க''

சாரதா ரிஸீவரை வைத்தாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் சம்பத் ஒரு ஆட்டோவில் வீட்டுக்கு வந்தார்.

''என்ன சாரதா.. திடீர்னு குண்டைத் தூக்கி போடற? ஏன் மண்டபம் வேணான்ன?''

''அதுக்க முன்னாடி எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சாகணும்.''

''என்ன?''

''மாப்ள பிரவீணுக்கு உடம்புல எந்தக் கோளாறும் வியாதியும் இல்லன்னு கம்ப்னிட்டா மெடிகல் செக்கப் பண்ணி சர்ட்டிபிகேட் தரணும். நம்ம டாக்டர்கிட்டதான் செக்கப் பண்ணிக்கணும்.''

''உனக்ககென்ன பைத்தியம் கிய்த்தியம் பிடிச்சிடுச்சா?''

''அப்டிதான் வெச்சுக்குங்க. எனக்குத் தேவை டாக்டர் சர்ட்டிபிகேட். அந்த பையனுக்கு ஏதோ வியாதின்னு நா கேள்விப்பட்டேன். சந்தேகப்பட்டுக் கிட்டே எம்பொண்ணை அவனுக்கு கட்டி வெக்க முடியாது. நா கேக்கறதுல ஒண்ணும் தப்பில்லயே.''

''அந்த பையனை எனக்குத் தெரியும் சாரதா. அவனுக்கு எந்தக் குறையும் இல்ல.''

''அதை டாக்டர் சொல்லட்டும். அப்பறம்தான் நிச்சய தார்த்தம்!'' சாரதா பிடிவாதமாக இருந்தாள்.

''நாம்ப இப்டி கேட்டா அவங்க என்ன நினைச்சுப்பாங்க சாரதா? நம்ம பொண்ணுக்கு குறையிருக்கான்னு அவங்க கேட்டா? இவளையும் மெடிகல் செக்கப்புக்கு அனுப்புவயா?''

''அனுப்பிட்டா போச்சு. நம்ம கிட்ட குறையிருந்தாதானே பயப்படணும்''

சம்பத் அவளை வெறித்துப் பார்த்தார்.

''அந்த பையனுக்கு வியாதின்னு உனக்கு யார் சொன்னாங்க சாரதா?''

''யாரோ சொன்னாங்க அதைப் பத்தி என்ன இப்போ?''

''யாருன்னு சொல்லு. அதை வெச்சே அவங்க சொல்றது உண்மையா புரளியான்னு சொல்றேன். தெருவுல போறவங்க சொல்றதையெல்லாம் கேட்டுக்கிட்டு ஆடக்கூடாது சாரதா.''

''தெருவுல போறவங்க ஒண்ணுமில்ல''

''பின்னே?''

''இந்த வீட்டுக்கு வரப் போறவங்கதான்''

''யாரைச் சொல்ற...?''

''நம்ம சுஜிதான்''

''அவளுக்கெப்டி தெரியுமாம்?''

''இவனும் அவங்க டாக்டரும் பேசிட்ருந்ததை இவ கேட்டாளாம்.''

''அந்த பொண்ணு உன்னை குழப்பியிருக்கா சாரதா.''

''அவ ஏன் என்னைக் குழப்பணும்? இதுல அவளுக்கென்ன லாபம்? உங்களுக்கு அந்த பொண்ணு மேல என்னிக்குமே பாசம் கிடையாது. அவ வந்ததுலேர்ந்து வெறுப்புதான். ஆனா நா அவளை நம்பறேன்.''

''அப்பொ என்னைக் கூட நம்பமாட்ட..?''

''சந்தேகத்தோட ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டாம்ங்கறேன். புரிஞ்சுக்கிட்டா சரி''

''ஓ.கே. ஆகாஷ் வரட்டும். அவங்கிட்டயும் உன் சந்தேகத்தை சொல்லு. அவன் என்ன சொல்றான்னு பார்ப்போம். அதுக்கப்பறம் முடிவெடுப்போம்.''

இதற்குமேல் உன்னிடம் பேசத் தயாராயில்லை என்பது போல் சம்பத் வெறுப்போடு மாடிக்குச் சென்றார். அவர் வருவது கண்டதும் சுஜிதா தன் அறைக்குள் சட்டென்று நகர்ந்து மறைவதை வினாடி நேரத்தில் அவர் கண்கள் கவனித்தது. ஏன் இந்தப் பெண் இப்படி குட்டையைக் குழப்பகிறாள். இவளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தானே பிரவீணின் அம்மாவிடம் தன் வீட்டு நிலவரத்தை எல்லாம் வெளிப்படையாக சொல்லி, சுஜிதாவின் வீட்டில் தன் மனைவி எதையும் எதிர்பார்த்து ஏமாந்து போய், அந்த ஏமாற்றம் காதலர்களை பிரித்து விடும் அளவுக்கு போய்விடக்கூடாது என்பதால் சுஜிதாவின் வீட்டில் குறைந்த சீர் வரிசை கேட்டால் போதும் என்ற அளவுக்கு சாரதாவின் மனதை மாற்ற வைத்தார் என்றால் அது இந்த பெண்ணின் நல்வாழ்வுக்காகத்தானே.

ஆனால் இந்தப் பெண் மட்டும் யாருக்கும் நல்லது செய்யக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டாற்போல் ஏன் நடந்து கொள்கிறாள்? இவளுடைய சுபாவம் தெரிந்துதான் ஆகாஷ் இவளைக் காதலிக்கிறானா அல்லது காதல் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்கவிடாமல் செய்துவிட்டதா? இன்று சங்கீதாவுக்கு பிரச்சனை தரும் குணம் நாளைக்கு ஆகாஷுக்கே பிரச்சனை கொடுக்க ஆரம்பித்தால் என்ன செய்வான்? காதலி என்ற அந்தஸ்தில் இருக்கும்போதே இந்த வீட்டை ஆட்டி வைக்கிறவள், மனைவி என்ற மரியாதை கிடைத்ததும் எவ்வளவு ஆட்டி வைப்பாள்! இப்போதே அடக்க முடியாத

நிலையில், அப்போது யாரால் இவளை அடக்க முடியும்..? சம்பத் பெருமூச்சு விட்டார்.

அப்பா மூலம் அன்றிரவு விஷயம் கேள்விப்பட்ட சங்கீதா கொதித்துப் போனாள். நேராக அம்மாவிடம் வந்தாள். சுஜிதா ஹாலில் உட்கார்ந்து ஆங்கில இதழ் ஒன்றை படித்துக் கொண்டிருந்தாள்.

''ஏம்மா என்ன சொன்ன நீ அப்பாகிட்ட?''

சாரதா நிமிர்ந்து அவளை முறைத்துப் பார்த்தாள்.

''நீ சின்னப் பொண்ணு. தேவையில்லாத விஷயத்துலல்லாம் தலையிடாம போய் வேலையைப் பாரு''

''யாரோ ஏதோ சொன்னாங்கன்னு நீயும் தலைகால் புரியாம ஆட வேண்டாம்''

''சொலறவங்க உன் நன்மைக்காகத்தான் சொல்றாங்கன்ற நினைப்பிருக்கட்டும்''

''ஆடு நனையுதேன்னு எந்த ஓநாயும் வருத்தப்பட வேண்டாம்னு சொல்லி வை''

''ஷட் அப் சங்கீதா! யாரைப் பார்த்து ஓநாய்ங்கற?'' சுஜிதா ஆத்திரத்தோடு குறுக்கிட்டாள்.

''ஆமா நா யாரையோ ஓநாய்னா உங்களுக்கு ஏன் பொத்துக்கிட்டு வருது!''

''வாய் மூட்றி... அவ உன் அண்ணியாகப் போறவன்ற மரியாதை இருக்கட்டும்''

''முதல்ல அண்ணியாகட்டும். இப்பொ சாதாரண பேயிங் கெஸ்ட்தானே..? அந்த நினைப்போட அவங்களை இருக்கச் சொல்லு அனாவசியமா நம்ம வீட்டு விஷயத்துல எல்லாம் தலையிட வேண்டாம்''

சுஜிதா முகம் சிவக்க ஏதோ சொல்ல முற்பட சாரதா அவளை கையமர்த்தி விட்டு கோபத்தோடு பெண்ணைப் பார்த்தாள்.

''அந்த பையனுக்கு உண்மையிலயே ஒரு வேளை பெரிய வியாதியோ வேற குறையோ இருந்தா என்னடி செய்வ? ஏம்மா இப்டி பண்ணி வெச்சன்னு என்னைத்தானே கேப்ப?''

''மாட்டேன். தாலி கட்டின அடுத்த நிமிஷமே அவருக்கு ஏதாவது ஆச்சுன்னாலும் பரவால்ல... எந்த கஷ்டமானாலும் அனுபவிக்கத் தயாரார்க்கேன். எனக்காக யாரும் உருகத் தேவையில்லை''

பெண் இப்படி பேசுவாள் என்பதை எதிர்பார்க்காத சாரதாவின் முகம் அதிர்ச்சியில் உறைந்து போயிற்று. அவளை வேறு விதமாகத் தான் வழிக்கு கொண்டு வரவேண்டும். என்ன வழி? அவள் யோசித்த நேரம், சுஜிதா விறுவிறுவென்று மாடிக்குச் சென்றாள். ஒரு சிறிய சூடசேஸில் தன் துணிமணிகளை அடைத்துக் கொண்டு போன வேகத்தில் கீழே இறங்கி வந்தாள்.

''நா கிளம்பறேன் ஆண்ட்டி. இவ்ளோ நாள் எனக்கு சோறு போட்டதுக்கு ரொம்ப நன்றி''

''என்னம்மா சொல்றே... எங்க கிளம்பிட்ட நீ?''

''மரியாதையில்லாத வீட்ல இனிமே இருக்கறது கஷ்டம் ஆண்ட்டி. ஆகாஷ் வந்தா சொல்லிடுங்க, எல்லாரும் நல்லார்க்கணும்னு நாந்தான் பைத்திம் மாதிரி ஆசைப்பட்டேனே தவிர, நா நல்லார்க்கணும்னு மத்தவங்க யாரும் விரும்பலங்கறது எனக்கு புரியவேல்ல. உங்க பொண்ணு, உங்க வீட்டு கல்யாணம். நா சொன்னதை யெல்லாம் மனசுலேர்ந்து அழிச்சுடுங்க. நா வரேன்'' சுஜிதா கிளம்ப சாரதா பதைபதைத்துப் போனாள்.

''என்ன சுஜி... நா உன்னை ஏதாவது சொன்னேனா? அவ கிடக்கா விடு. ஆகாஷ் வந்தா என்னை இல்ல கோவிச்சுப்பான். நா திட்டு வாங்கணும்னு ஆசையார்ந்தா போ. எம்மேல அன்பிருந்தா இரு. இனிமே உனக்கு எந்த மரியாதைக் குறைவும் வராம நா பார்த்துக்கறேன்''

''இல்ல ஆண்ட்டி. அன்பு நிறைய இருக்கு. ஆனாலும் இங்க இனிமே இருக்கறது கஷ்டம். தப்பா நினைச்சுக்காதிங்க''

சுஜிதா கிளம்பினாள்.

''ஆகாஷ் வந்ததும் சொல்லிட்டு கிளம்பு சுஜி''

''வேணாம் ஆண்ட்டி பிரச்சனை இன்னும் பெரிசாகும் என் பிரண்டுக்கு போன் பண்ணி சொல்லிட்டேன். அவ எனக்காக காத்துட்ருப்பா''

சாரதா எவ்வளவு சொல்லியும் கேட்காமல் சுஜிதா அந்த வீட்டை விட்டுக் கிளம்பி வாசலுக்கு வந்தாள். ஆட்டோ ஏதாவது கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டிருக்கும் போது ஆகாஷின் கார் வந்து நின்றது.

''என்ன சுஜி... சூட்கேசும் கையுமா எங்க கிளம்பிட்ட இந்த நேரத்துல?'' ஆகாஷ் வியப்போடு கேட்டான். கார் சத்தம் கேட்டு வாசலுக்கு வந்தாள் சாரதா.

சங்கீதா அப்பாவைப் பார்த்தாள்.

''நாடகம் பிரமாதமா இருக்குல்ல?'' சம்பத் சிரித்தார்.

பத்து நிமிடம் கழித்து ஆகாஷ் கோபமாக உள்ளே வந்தான். சங்கீதாவை முறைத்துப் பார்த்தான். சுஜிதாவை உள்ளே அழைத்தான். அவள் தயங்கியபடி உள்ளே வர அவள் பின்னால் சாரதாவும் வந்தாள். ஆகாஷ் சங்கீதாவைப் பார்த்தான்.

''இவ இங்க இருக்கறது உனக்கு பிடிக்கலையா?''

''என் விஷயத்துல தலையிடறதுதான் பிடிக்கலன்னு சொன்னேன்''

''ஓகே தலையிட அவளுக்கு உரிமையில்லன்னு நீ நினைச்சா, இனிமே நானும் உன் விஷயத்துல தலையிடல. நானும் வீட்டைவிட்டுப் போறேன். உங்கல்யாணத்துக்குக் கூட வரமாட்டேன். சந்தோஷம்தானே. இரு சுஜி... நானும்

வரேன்'' ஆகாஷ் விறுவிறுவென்று மாடிக்குச் செல்ல சங்கிதா பதறிப்போய் அப்பாவைப் பார்த்தாள்.

எத்தனை விழுகுகள் வந்து விழுந்தாலும் அணையாத நெருப்புதான் பெண்.
எத்தனை நதிகள் வந்து கலந்தாலும் நிரம்பாத கடல்தான் பெண்.
-உபநிடதம்

''இப்ப நா என்ன சொல்லிட்டேன்னு நீ இப்டி அழுற?'' அழுது கொண்டிருந்த சத்யாவைப் பார்த்து எரிச்சலோடு கேட்டாள் அத்தை.

''இதோ பார் சத்யா ஊர்ல உலகத்துல நடக்காத விஷயத்தையா நா சொல்றேன். அவங்கவங்களுக்கு ஆசாபாசம் இருக்கக் கூடாதுன்றயா? வேற எவளோ வரதுக்கு உன் தங்கச்சியே இருந்துட்டுப் போகட்டும்ங்கறேன். இதுல என்ன தப்பு? உன்னைக் கட்டிக்கிட்ட தோஷத்துக்கு எம்பிள்ளை ஆயுசுக்கும் அவதிப்படணுமா சொல்லு. எனக்கிருக்கறது ஒரே பிள்ளை. அவன் வம்சம் பூத்துக்குலுங்கணும்ங்கற ஆசை எனக்கிருக்காதா? ஒரு ஆம்பளை அக்கா தங்கச்சி ரெண்டு பேரையும் கட்டிக்கறது வழக்கத்திலுள்ள விஷயம்தானே? அழுகைய நிப்பாட்டிட்டு நிதானமா யோசி. சரண்யாவைக் கட்டிக்குடுக்க உங்கப்பா ஏதாவது சேர்த்து வெச்சுட்டு போயிருக்காரா? இல்ல உங்கிட்டதான் காசு இருக்கா? நா சொல்றபடி நடந்தா, உன் கடமையும் முடிஞ்சிடும்! காசும் மிச்சமாகும். நம்ம வீடும் நிறையும். நீ இதுக்கு ஒத்துக்காட்டியும் நா விடறதால்ல. சரவணனுக்கு நா வேற பெண்ணைப் பார்த்து கட்டி

வெக்கத்தான் போறேன். வரவ உன்னையும் உன் தங்கச்சியவும் சேர்த்து வெளிய விரட்டுவா. பரவால்லன்னா சொல்லு''

அத்தை மிரட்டலாகச் சொல்லிட்டு எழுந்து செல்ல சத்யா பிரமை பிடித்தவள் மாதிரி அமர்ந்திருந்தாள். அத்தை சொன்னதையெல்லாம் கேட்டு மிரண்டு போயிருந்தது அவள் மனசு. உரிமைகளை தங்கையிடமே இழப்பது மேலா அல்லது வேறு யாரோ ஒருத்தியிடம் இழந்துவிட்டு தங்கையின் திருமண பாரத்தை தலையில் சுமந்து கொண்டு புருஷனைப் பிரிந்து செல்வது மேலா? நினைக்கும்போதே கதிகலங்கியது. அந்த அளவுக்கெல்லாம் அவளுக்குத் துணிச்சல் இல்லை. அப்படியே உரிமைகளை விட்டுக் கொடுத்துவிட்டு சரண்யாவுடன் வெளியில் போய், எப்படியோ சரண்யாவுக்கும் ஒரு திருமணம் ஆகி, அவளும் போயிவிட்டால் தன் நிலை? தனியாக வாழ முடியுமா தன்னால்? நிச்சயம் முடியாதென்று தோன்றியது. வியர்த்தது. நெஞ்சுக்குள் பக்பக்கென்று ஒரு படபடப்பு.

அத்தை மறுபடியும் கையில் ஹார்லிக்ஸோடு வந்தாள்.

''இந்தா இதைக்குடி'' டம்ளரை சத்யாவிடம் கொடுத்து விட்டு அவளையே பார்த்தாள்.

''யோசிச்சயா?''

''எனக்கு ஒண்ணும் புரியலத்த''

''இதுல புரிய என்ன இருக்கு?

சரண்யாவை அவனுக்கு கட்டி வெச்சுட்டா அவளே உன்னை நல்லா கவனிச்சுக்குவா. சரவணன் உங்கிட்ட ஆசையா பேசினாலும் தடுக்க மாட்டா. இதுதான் உனக்கு நல்லது. அவங்களுக்கு குழந்தை பிறந்தா நீயும் வித்யாசமில்லாம தூக்கிக் கொஞ்சலாம். என் மனசும் நிறைஞ்சிடும். அதனால நா சொன்னா மாதிரியில்லாம

நீயாவே அவங்களை ஒண்ணு சேர்த்து வைக்க முயற்சி செய். ரெண்டு பேர்கிட்டயும் நைச்சியமா பேசி அவங்க மனசை மாத்தற பொறுப்பு உன்னோடது சரியா?''

சத்யா கண்ணீர் பளபளக்க தலையசைத்தாள்.

''இப்பத்தான் நல்ல பொண்ணு! இந்த கல்யாணம் நடந்தாலும் உன் கிரீடத்துக்கு ஆபத்து வராது. அதுக்கு நா கேரண்ட்டி. சரியா?''

அத்தை காலி டம்ளரை எடுத்துக் கொண்டு சந்தோஷமாக உள்ளே சென்றாள்.

சரவணன் அன்று சீக்கிரமாகவே வந்து விட்டான். காலையில் கோபித்துக் கொண்டு போனதில் அவனுக்கே வருத்தமாக இருந்தது. இத்தனை வருடத்தில் அம்மாவிடம் இப்படி கோபித்துக் கொண்டு சாப்பிடாமல் வந்ததில்லை. அவன் வெளியில் வந்த பிறகு அம்மா சத்யாவிடம்தான் இந்த எரிச்சலைக் காட்டியிருப்பாள். சத்யாவை என்னவெல்லாம் திட்டினாளோ? பாவம் சத்யா மிகவும் நொந்து போயிருப்பாள். சீக்கிரமே வீட்டுக்கு போய் சத்யாவை வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும். சினிமா பார்த்து எவ்வளவு நாளாகிறது. சேது படம் பார்க்க வேண்டும் என்று பலமுறை சொல்லிவிட்டாள் தியேட்டருக்குப் போய் அட்வான்ஸ் புக்கிங் பண்ணிக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

அவனைப் பார்த்ததும் அம்மா கோபத்தோடு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அம்மாவை பிறகு சமாதானப்படுத்திக் கொள்வோம் என்று நினைத்தவன் சத்யாவிடம் வந்தான்.

''சினிமா போலாம் கிளம்பு சத்யா.''

''நானா?''

''பின்ன நீதான் வரணும்''

''என்ன படம்?''

''நீ பாக்கணும் பாக்கணும்னு சொன்னயே அந்த படம்தான்.''

''எத்தனை மணி ஷோ''

''ஏழு மணி.''

''அதுக்கெதுக்கு இப்பவே கிளம்பச் சொல்றீங்க?''

''கிளம்பும்மா. அப்டியே ஜாலியா போய்ட்டு வருவோம்''

''குளிச்சுட்டு வந்துடவா?''

''சீக்கிரம் வா''

''அம்மா கோவமார்க்காங்க. போய் சமாதானப்படுத்தி சினிமாக்கு போறோம்னு சொல்லுங்க''

''சினிமாக்கு போறோம்னா இன்னும் கோவம் அதிகமாகும். வந்து சொல்லிக்கலாம்.''

''காப்பி கிப்பி குடிக்க வேணாமா?''

''எல்லாம் வெளிய பார்த்துக்குவோம். சீக்கிரம் கிளம்பி வா''

சத்யா பீரோ திறந்தாள். புடவை தேடும் சாக்கில் நேரம் கடத்தினாள்.

''என்ன சத்யா புடவை தேடறயா நெய்யறயா?''

''ஜாக்கெட் எல்லாம் போட்டு போட்டு கலர் மங்கிடுச்சுங்க.''

''ஏதாவது ஒண்ணைப் போட்டுக்கிட்டு வாம்மா.''

சத்யா கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஐந்தே கால். இன்னும் அரை மணியில் சரண்யா வந்துவிடுவாள். அதுவரை புறப்படக் கூடாது. எப்படியாவது சமாளிக்க வேண்டும் என்று நினைத்தபடி குளிக்கச் சென்றாள். நிறுத்தி நிதானமாக குளிக்க ஆரம்பித்தாள்.

சரவணன் பேப்பர் பிரித்து படிக்க ஆரம்பித்தான். பேப்பரில் ஆழ்ந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. ஐந்தே

முக்காலுக்கு சரியாக சரண்யா உள்ளே வந்தாள். சரவணனைப் பார்த்து வியந்தாள்.

''அட அதிசயமா சீக்கிரம் வந்துர்க்கீங்க! அக்கா எங்கே?''

''குளிக்கப் போனா'' என்றபடி மணி பார்த்தவன் எழுந்தான்.

''எவ்ளோ நாழியா குளிப்பா இவ? ஒரு இடத்துக்கு கிளம்புன்னா சுறுசுறுப்பு வேணாம்'' என்றபடி பாத்ரூம் பக்கம் வந்தான்.

''எவ்ளோ நாழி சத்யா? மணி ஆறாகப் போவுது. சரண்யா கூட வந்தாச்சு.''

அவன் குரல் கேட்டதும் சத்யாவின் முகம் மலர்ந்தது. உடைகளை அணிந்து கொண்டு கதவைத் திறந்தவள் முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

''யப்பா வந்தயா. ஒரு வழியா? சரி போய் சீக்கிரம் கிளம்பு. நா முகம் கழுவிக்கிட்டு வரேன்''

''ஒரு நிமிஷம்ங்க''

''என்ன?''

''சோப்புல கால் வெச்சு உள்ள விழுந்துட்டேன். கால் நல்ல சுளுக்கிடுச்சு. நடக்க முடியல.''

''அடடா.. என்ன சத்யா இது.. ஜாக்ரதையா குளிக்கக் கூடாது? காலை நல்லா உதறு. சரியாய்டும்.''

''இல்லைங்க. முடியல.'' சத்யா மிகுந்த சிரமத்தோடு நொண்டினாள். சரவணன் சலிப்போடு அவளைப் பார்த்தான். அவளைத் தாங்கிப் பிடித்து உள்ளே அழைத்து வந்தான்.

''என்னாச்சு?'' சரண்யா பதறினாள்.

''சினிமாக்கு கூட்டிட்டு போலாம்னு சீக்கிரம் வந்தா காலைச் சுளுக்கிட்டு நிக்கறா. ஒண்ணு பண்ணு சரண் டிக்கட் வேஸ்ட் ஆக வேண்டாம். நீயும் அம்மாவும் போய்ட்டு வாங்க. நா அம்மாட்ட சொல்றேன்.''

சத்யாவின் கால் சுளுக்கு வெறும் நடிப்புதான் என்பதைப் புரிந்து கொண்ட அத்தை உள்ளுக்குள் அவளை மெச்சியபடி தானும் நடிக்கத் தயாரானாள்.

''எனக்கு காலேலேர்ந்தே மண்டை இடிக்குது. என்னால முடியாதுடா. மூணு மணி நேரம் அங்க போய் உக்காந்தா மண்டை வெடிச்சுடும்.''

''இந்த டிக்கெட்டை கிழிச்சுப் போடு சரண்'' சரவணன் டிக்கெட்டை அவளிடம் கொடுத்துவிட்டு சத்யாவின் கால் சுளுக்கை எடுக்க முடியுமா என்று பார்த்தான்.

''ஏய் ஏய்... சரண்...நீ பாட்டுக்கு கிழிச்சுடாதே. இப்ப என்ன குடிமுழுகிப் போச்சு. அம்மாவாலயும் முடியலன்னா கிழிச்சுடறதா? சரணும் நீங்களும் போய்ட்டு வரது! வாங்கின டிக்ககெட்டை வேஸ்ட் பண்ணுவானேன். காசென்ன கொட்டிக் கிடக்குதா கிழிச்சு பறக்கவிட?''

சத்யா சொல்ல சரண்யா, சரவணன் இருவருமே திகைத்தார்கள். சரவணன் சத்யாவை உற்றுப் பார்க்க, அவள் அவசரமாய் விழிகளைத் திருப்பிக் கொண்டாள்.

''அவ சொல்றதும் சரிதானேடா. நீங்க ரெண்டு பேரும் போய்ட்டு வாங்க'' அம்மாவின் ஜால்ராவில் சரவணனின் முகம் யோசனையில் ஆழ்ந்தது. ஒரு நிமிட யோசனைக்குப் பிறகு சரண்யாவைப் பார்த்தவன், ''சரி கிளம்பு சரண். நாம போய்ட்டு வருவோம்'' என்றான். சரண்யா தயங்கியபடி சத்யாவைப் பார்த்தாள்.

''போய்ட்டு வா சரண்''

சத்யா அழுத்தமாகச் சொல்ல வேறுவழியின்றி கிளம்பினாள். அவர்கள் இருவருமே ஜோடியாகச் செல்வதை நிறைவோடு பார்த்தாள் அத்தை. சத்யா அழுவதற்கு இடம் தேடி டாய்லட்டுக்குச் சென்றாள்.

''சினிமா போணுமா சரண்?'' சற்று தூரம் வந்ததும் கேட்டான் சரவணன்.

''நீங்கதானே கூப்ட்டீங்க! எனக்கு போணும்னு இல்ல. வாங்க வீட்டுக்கே போய்விடுவோம்''

''இல்ல வேணாம். நா உங்கிட்ட கொஞ்சம் பேசணும் சரண். ஏதாவது ரெஸ்ட்டாரண்ட் போலாமா?''

''ம்..''

சரவணன் நல்ல ஹோட்டலாகப் பார்த்து நுழைந்தான். டிபன் ஆர்டர் பண்ணிவிட்டு சரண்யாவைப் பார்த்தான்.

''நம்ம வீட்டுல கொஞ்ச நாளா ஒரு நாடகம் நடக்குது கவனிச்சயா சரண்?''

''எதைச் சொல்றீங்க?''

''எங்கம்மாவும் உங்கக்காவும் செய்யற கூத்தைத்தான் சொல்றேன்.''

சரண்யாவுக்கு அவன் சொல்வது புரியவில்லை.
''காலையில் நடந்த தகராறையா?''

''சத்யாவோட கால் சுளுக்கு நிஜம்னு நினைக்கறயா?''

''பின்னே?''

''நாடகம். எங்கம்மாவோட மண்டையிடியும் அப்படித்தான். எதுக்கு இந்த நாடகம்னு புரியுதா?''

''எதுக்கு?''

''உன்னையும் என்னையும் ஜோடி சேர்க்கத்தான்!''

சரவணன் சொன்னதும் சரண்யா தூக்கிவாரிப்போட அவனைப் பார்த்தாள்.

''இந்த பொம்பளைங்க புத்திய என்னன்னு சொல்றது? எங்கம்மாக்கு பாட்டியாகணும். அதுக்காக என்ன வேணா செய்யத் தயாராய்ட்டாங்கன்னு நினைக்கறேன்.''

சரண்யா திகைப்போடு அவனை மலங்க மலங்க பார்த்தாள்.

''நா ஒண்ணு சொன்னா வருத்தப்படுவயா சரண்?''

''என்ன?''

''இனிமேலும் நீ எங்க வீட்ல இருக்கறது உனக்கு நல்லதில்லன்னு நினைக்கறேன்.''

''ஹாஸ்டல்ல சேர்ந்துக்கறேன்னு அப்பா போனதுமே நான் சொன்னேன். நீங்கதான் பிடிவாதமா கூட்டிட்டு போனிங்க.''

''தப்புதான் சரண். இப்டியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சிருந்தா கூட்டிட்டு போயிருக்கமாட்டேன். அந்த தப்பை நானே சரி செய்துடறேன்.''

''ஹாஸ்டல்ல பணம் கட்டணுமே. சம்பத் மாமாவோட நிலைமையே இப்ப சரியில்ல. எனக்கும் வேலையில்ல. உங்களுக்கும் மாசா மாசம் அவ்ளோ பணம் கட்டறது கஷ்டமாச்சே''

''கஷ்டம்தான் நா வேற ஒரு வழி யோசிக்கிறேன். அதுக்கு இன்னும் ரெண்டு மூணு நாள் ஆகலாம். ஏற்பாடு பண்ணிட்டு அப்பறம் உன்னைக் கூட்டிட்டு போறேன். அதுவரை இவங்க நாடக மெல்லாம் நமக்கு தெரிஞ்சதாவே காட்டிக்க வேண்டாம் சரியா?''

சரண்யா அவனை நன்றியோடு பார்த்தாள். ''எங்கக்கா புண்ணியம் செய்திருக்கா. உங்களை மாதிரி நல்ல புருஷன் கிடைக்க. இதே இன்னொரு ஆம்பளையார்ந்தா அவளைத் தள்ளி வெக்க தயங்கியிருக்க மாட்டான்.''

சரவணன் புன்னகைத்தான். ''எனக்கு வேற ஒரு ஆச்சர்யம் சரண்.''

''என்ன?''

''நீ சம்பத் மாமாவோட பையன் ஆகாஷை விரும்பறன்னு சத்யாவே எங்கிட்ட பலமுறை சொல்லியிருக்கா. அப்டியும் என்னையும் உன்னையும் சேர்த்து வெக்கணும்னு முடிவுக்கு

வந்திருக்கான்னா அவ புத்தி கெட்டுப் போச்சா இல்ல இது எங்கம்மாவோட நிர்பந்தமா?''

அவன் கேட்க சரண்யாவின் முகம் மாறியது.

''என்ன சரண் ஒரு மாதிரியாய்ட்ட? உங்கக்கா சொன்னது நிஜம்தானே?''

''நிஜம்தான். ஆனா இப்பொ எதுவும் இல்லை.''

''ஏன் சரண்?''

''நாம நினைக்கறதெல்லாம் நடந்துடறதில்லையே''

''ஆகாஷ்க்கு உன்னைப் பிடிக்கலையா?''

''நாம வேற ஏதாவது பேசுவோமே''

சரண்யா விரக்தியோடு சொல்ல சரவணன் அவளை இரக்கத்தோடு பார்த்தான்.

சினிமா முடியும் நேரத்திற்கு இருவரும் வீட்டுக்கு கிளம்பினார்கள். அதுவரை மவுண்ட்ரோடு முழுக்க நடந்தார்கள்.

''சினிமா எப்டி இருந்துச்சுடுடி?''சத்யா கேட்டாள்.

''எனக்கும் பைத்தியம் பிடிச்சுட்டா நல்லார்க்கும்னு தோணுது''

சரண்யாவின் பதிலில் சத்யா ஸ்தம்பித்துப் போனாள். ஏன் அப்படிச் சொன்னாள் என்பது புரியாமல் குழம்பி நின்றாள்.

காதல் - மழையைப்போல மகத்துவமானது பூக்களைப் போல புனிதமானது. மனிதர்களிடம்தான் சில நேரங்களில் அது மனிதத்தை இழந்து அசிங்கமாகிறது.

-கிழக்குதாரமல்ல-ஜோமல்லூரி.

ஆகாஷ் மாடிக்குப் போய் தானும் ஒரு சூட்கேஸ் சகிதம் கீழிறங்கி வந்தான்.

''நா கிளம்பறேம்ப்பா. இவளுக்கு மரியாதை தராத வீடு எனக்கு மட்டும் எப்டி தரும்.''

''அவசரப்படறடா நீ. சுஜிதாகிட்ட உங்கம்மா மெடிகல் ஃபிட்னஸ் கேட்டா. உனக்கு கோவம் வராதா? உடனே அவ அதுக்கு ஒத்துப்பாளா?''

ஆகாஷின் முகம் சுருங்கியது.

''கோவம் வருதுல்ல? அதே மாதிரிதாண்டா உணர்வுகள் எல்லா மனுஷனுக்கும் இருக்கும். சுஜிதாக்கு மட்டும் உள்ளுக்குள்ள ஒரு வியாதியும் இருக்காதுன்றது என்ன நிச்சயம்? எம்பிள்ளைய மட்டும் நா சந்தேகப்பட்டுக்கிட்டா கட்டிக் கொடுக்க முடியும்? அப்டியே நா போய் பிரவீண்கிட்ட கேட்டாலும், அவங்கம்மாவும் நா கேக்கறதைத் தானே கேப்பாங்க. உங்க மருமகளா வரப்போறவகிட்ட மெடிகல் ஃபிட்னஸ் வாங்கிட்டீங்களான்னு. அதுக்கு நா என்ன பதில் சொல்லுவேன்? அப்டி ஒரு கேள்வி வந்தா ஆமா வாங்கிட்டேன்னு நெஞ்சு நிமிர்த்தி காட்டறதுக்கு, முதல்ல நீ இவளை செக்கப்பண்ண வெச்சு மெடிகல் ஃபிட்னஸ் வாங்கிட்டு வந்துட்டு அப்பறம் எங்களைத் திட்டு. நியாயம்னா நியாயம்தானே.''

ஆகாஷ் அப்பாவை வெறித்துப் பார்த்தான். அவர் பேசுவது நியாயம் தான் என்பதை உள்மனம் ஒப்புக் கொண்டாலும் வெளிப்படையாய் அதை ஒப்புக் கொள்ள ஏதோ ஒன்று தடுத்தது. அவனது திடீர் மௌனம் சுஜிதாவை முகம் சுளிக்கச் செய்தது.

''ஓகே ஆகாஷ். நா போறேன். நீங்க வர வேணாம். உங்க தங்கையோட நன்மைக்காக நா சொன்ன விஷயம் இவ்ளோ பெரிய விஷயமாகும்னு தெரிஞ்சுருந்தா எனக்கென்ன போச்சுன்னு பேசாம இருந்திருப்பேன். அவங்கவங்க தலையெழுத்தை யாரால் மாத்த மடியும்? கல்யாண சமயத்துல உங்களை நா கூட்டிட்டு போய்ட்டேன்னு கெட்ட பேரு வரவேண்டாம். நீங்க இருங்க. நா போறேன்.''

ஆகாஷ் என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறினான். சுஜிதா வாசல் நோக்கி நடந்தாள்.

''நில்லு சுஜி. உன்னை உன் பிரண்டு வீட்டுல நானே டிராப் பண்ணிட்டு வரேன். தனியா போக வேண்டாம்.''

தன் சூட்கேஸை வைத்துவிட்டு கார் சாவியை மட்டும் எடுத்துக் கொண்டு யாரையும் பார்க்காமல் நடந்தான். சற்று நேரத்தில் கார் கிளம்பியது.

சுஜிதா வீட்டை விட்டுப் போனதில் சந்தோஷமும், ஆகாஷ் அவளோடு போகவில்லை என்பதில் நிம்மதியும் ஏற்பட சம்பத்தும் சங்கீதாவும் ஒருவரை ஒருவர் நமுட்டுச் சிரிப்போடு பார்த்துக் கொண்டார்கள்.

''இப்ப திருப்தியா? நம்ம வீட்டுக்கு வந்த ஒரு பெண்ணை இப்டி விரட்டி அடிச்சுட்டீங்களே. ஏன் உங்க புத்தி இப்டி போவுது?''

''உன் புத்தி எப்டி எப்டியோ போறதுக்கெல்லாம் நா காரணமா கேட்டுட்டுருக்கேன்?''

''இப்டியெல்லாம் பேசிட்டா நா அந்த பையன்கிட்ட மெடிகல் சர்டிபிகேட் வேண்டாம்னு விட்ருவேன்னு

நினைச்சிங்களா? நா கல்யாணத்துல பெத்த தாயா பக்கத்துல நிக்கணும்னா அவனோட ஃபிட்னஸ் சர்டிபிகேட் வாங்கிட்டுதான் வரணும். இல்லாட்டி நீங்களே உங்க பொண்ணு கல்யாணத்தை நடத்திக்குங்க. அம்மா எங்கேன்னு யாராவது கேட்டா செத்துட்டான்னு சொல்லுங்க.''

சாரதா உறுமி விட்டு உள்ளே செல்ல சங்கீதா அப்பாவை கவலையோடு பார்த்தாள். அவர் சைகையால் கவலைப்படாதே என்று சொல்லி விட்டு, மனைவிக்கு பதில் சொன்னார்.

''சரி அப்டியே சொல்லிடறேன். நீ இல்லாமயே என் பொண்ணு கல்யாணம் நடக்கட்டும். இந்த பிளாக்மெயில் எல்லாம் வேற எங்கயாவது வெச்சுக்க!''

சாரதா உள்ளிருந்து வேகமாய் வெளியில் வந்தாள்.

''எப்டி பண்ணுவிங்க. உங்ககிட்ட பணமிருக்கா. உங்க அக்கௌண்ட்ல இருக்கற பணத்துல வரவங்களுக்குத் தாம்பூலம் கூட வாங்க முடியாது நினைவிருக்கட்டும்.''

''எங்கிட்ட இல்லாட்டா என்ன? ஆகாஷ் விட்டுக் கொடுத்துடுவானா?''

''கிழிப்பான். அவனே சுஜிதாகிட்டதான் காசு வாங்கிட்டு போறான். பொறுப்பை அவகிட்ட ஒப்படைச்சு ரொம்ப நாளாச்சு.''

''ஏன் அவ வீட்டை விட்டுப் போகும்போது சார்ஜை மறுபடியும் உங்கிட்ட ஹேண்ட் ஓவர் பண்ணலையாக்கும். என்ன கெட்டுப் போச்சு. மறுபடியும் பொறுப்பை நீ வாங்கிக்க வேண்டியதுதானே''

''மாட்டேன். அப்டியே வாங்கிக்கிட்டாலும் ஒத்தைப் பைசா தரதால்ல. உங்களால ஆனதைப் பார்த்துக்குங்க!'' சாரதா திமிராகச் சொன்னாள்.

''அவ்ளோதானே விடு! பிரவீணைப் பத்தி. எனக்கு தெரியும். நம்மகிட்ட இப்ப பணமில்லைன்னு சொன்னா அதுக்காக கல்யாணத்தை நிறுத்திட மாட்டான். ரெண்டு மாலை, ஒரு. மஞ்சக்கயிறு, அதுல கோர்த்த தாலி, இது போதும். ஏதாவது ஒரு கோயில்ல இவ கழுத்துல தாலி கட்ட அவன் ரெடியார்ப்பான். உன்னை மாதிரி பணப்பிசாசில்ல அவங்க''

''அப்டின்னா எதுக்கு சுஜிதா வீட்ல அவளுக்குப் போடறதெல்லாம் வேணும்னு கேட்டாங்களாம்? அதுக்கு பேர் பேராசை இல்லாம என்னவாம்?''

''உன் பேராசையை அடக்கத் தாண்டி அவங்களை அப்டி கேக்கச் சொன்னேன். எல்லாம் நா போட்ட நாடகம்தான். என் தலையெழுத்து எம்பிள்ளை, காதலிச்சவளை எந்த பிரச்சனையுமில்லாம கைபிடிக்கணும்ங்கற நல்ல எண்ணத்துல எம்பொண்டாட்டிய பத்தி நானே அந்தம்மாட்ட சொல்ல வேண்டியதாப்போச்சு. நா சொல்லிக் கொடுத்த வசனத்தைதான் அந்தம்மா உங்கிட்ட ஒப்பிச்சாங்க!'' சம்பத் நிறுத்த சாரதா அதிர்ச்சியோடு அவரைப் பார்த்தாள். ''நாடகமா? ஏன் எதற்கு?'' அழுகையும் அவமானமும் மேலிட ஆத்திரத்தோடு அவரைப் பார்த்து கத்தினாள்.

''நீ ரொம்ப ரொம்ப பெருமையா கொண்டாடிட்ருக்கயே அந்த பொண்ணு சுஜிதா. அவ கோடீஸ்வரிதான். ஆனா நீ கனவு காண்றாப்பல அவ காதலை அங்கீகரிக்கல. நம்மளை விட கோடீஸ்வர சம்பந்தத்தை பார்த்து வெச்சிருக்கார் அவளுக்கு. இந்த பொண்ணு வேணாம்னு சொல்லிடுச்சு. அப்டின்னா பெத்த கடனுக்கு அம்பது பவுன் நகையும் அஞ்சு லட்சம் பணமும் தரேன். அதோட உனக்கும் எனக்கும் உறவு அத்துப் போச்சு. எக்கேடும் கெட்டு ஒழின்னு விட்டுட்டான் அவப்பன். இது தெரிஞ்சா நீ எங்க அவங்க காதலுக்கு குறுக்க நிப்பயோன்னு பயந்துதான் அந்த பொண்ணுக்கு நல்லது செய்ய நினைச்சு சம்பந்தியம்மா கிட்ட பிரச்சனையைச்

சொல்லி உதவி கேட்டேன். நமக்கு உதவப்போய் அம்மாக்கும் பிள்ளைக்கும் அங்க மனஸ்தாபமே வந்துடுச்சு. இவ்ளோ எல்லாம் நாம நல்லது நினைச்சும் அந்த பணக்கார எச்சக்கலை புத்தி திருந்துதா என்ன? உன்கிட்ட இல்லாததும் பொல்லாததும் சொல்லி இந்த கல்யாணத்தை நிறுத்தறதுல அவளுக்கு என்ன ஆனந்தம்னு தெரியல. நாத்தனார் கல்யாணத்துல இந்த வீட்டு சொத்தெல்லாம் கரைஞ்சு போய்டுச்சுன்னா? அதுவும் தவிர சங்கிதா அவளை மதிக்கறதில்ல இல்ல? அந்த ஆத்திரம் இவ சந்தோஷமா இருந்துடக் கூடாதுன்னு தேவையில்லாத குழப்பங்களை உண்டாக்கிட்ருக்கா. இப்டியெல்லாம் வதந்தியப் பரப்பி உன் மனசைக் கலைச்சுட்டா. கட்டின துணியோட சங்கிதா அவங்கூட போயிடுவான்ற நம்பிக்கை. அப்பறம் எல்லாம் இவளுக்குதானே!''

சம்பத் சொல்லச் சொல்ல சாரதா குழம்பிப் போனாள். சுஜிதாவைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. அதே நேரம் சம்பத் சொல்வதை எல்லாம் நம்பாமலும் இருக்க முடியவில்லை. ஒருவேளை இவர் சொல்வதுதான் உண்மையா? நான்தான் ஏமாந்து விட்டேனா? தலை சுற்றியது அவளுக்கு. எதுவுமே பேசாமல் குழம்பிய முகத்தோடு தனிமையை நாடிச் சென்றாள்.

''எந்த பிரண்டு வீட்டுக்குப் போகப் போற சுஜி?'' ஆகாஷ் கொஞ்ச தூரம் வந்ததும் கேட்டான்.

''நிஷா வீட்டுக்குதான் வேறெங்க?''

''நீ அவசரப்பட்டுட்ட சுஜி. இப்டி சட்டுனு கிளம்பியிருக்க வேண்டாம்''

''பின்ன என்ன ஆகாஷ். நீங்களும் உங்கம்மாவும் மட்டும்தான் எங்கிட்ட அன்பா இருக்கீங்க. உங்கப்பாக்கும் சங்கிதாக்கும் ஆரம்பத்துலேர்ந்தே என்னைப் பிடிக்கல. நா அங்க இருக்கறதும் பிடிக்கல. பல விதத்துல என்னை

அவமானப்படுத்தியிருக்காங்க. நா உங்ககிட்ட எதுவும் சொன்னதில்ல. எவ்ளோ நாள்தான் நானும் பொறுத்துக்கறது. சரி சங்கீதாக்கு கல்யாணமாகி அவ போய்ட்டா பிரச்சனை குறைஞ்சுடும்னு நினைச்சேன். ஆனா பாருங்க. அதுலயும் பிரச்சனை. உங்க தங்கச்சி வாழ்க்கை எக்கேடும் கெட்டா என்னன்னு எனக்கு ஒதுங்கிப் போகத் தெரியல. என் காதுல ஒரு செய்தி விழுந்தும் பேசாம இருக்க முடியல. அது உண்மையா பொய்யான்னு நிச்சயமா தெரியாட்டாலும் சந்தேகம்னு ஏற்பட்ட பிறகு அதை தெளிவு படுத்திக் கறதுதானே நல்லதுன்னு நினைச்சுதான் உங்கம்மாகிட்ட விஷயத்தைச் சொன்னேன். ஏண்டா சொன்னோம்னு இப்பொ தோணுது. எவ எக்கேடு கெட்டுப் போனா என்னன்னு விட்ருந்திருக்கணும்.''

''எல்லாம் சரிதான் சுஜி. ஒருவேளை இதெல்லாம் வெறும் சந்தேகமாவே இருந்து அந்த பையனுக்கு எந்த நோயும் இல்லன்னு ஆய்ட்டா, நாம அவங்க மனசை நோகடிச்சுட்டதா ஆகாதா? அப்பா சொல்றா மாதிரி செக்கப்புக்கு நீ ஒத்துப்பாயா?''

''ஓய் நாட்! நா ரெடி.. இப்பவே வேணாலும் வரத் தயார்.''

''ச்சீச்சீ சும்மா கேட்டேன். விடு சுஜி. அவளே அதைப் பத்தி கவலையில்லன்னு சொன்னப்பறம் உனக்கென்ன? உனக்கே ஏதாவது நோய்னு யாராவது சொன்னாலும் நா கவலைப்படமாட்டேன். உன்னைத் தான் கட்டிக்குவேன். ஒரு வாரம் இல்ல ஒரு நாள்தான் வாழ்க்கைன்னாலும் சந்தோஷமா வாழ்ந்துட்டு போய்டணும். அதே மாதிரிதான் சங்கீதாவும் நினைக்கறா போல்ருக்கு. காதலிக்கற நாம, அவங்க காதலையும் மதிக்கத்தானே வேணும்''

''உங்கம்மாகிட்ட இந்த சாவியையும் கணக்கு வழக்கு எழுதின நோட்புக்கையும் கொடுத்துடுங்க. நா மறந்து கையோட எடுத்துட்டு வந்துட்டேன்.''

''ஏதாவது சாப்படறயா சுஜி. வீட்ல எதுவுமே சாப்டலையே நீ?''

''நீங்களும்தான் சாப்டல''

''அப்பொ வா அந்த ரெஸ்ட்டாரண்ட்ல சாப்டுவோம்.''

ஆகாஷ் காரை அந்த ஏஸி ரெஸ்ட்டாரண்ட்டின் ஓரமாக நிறுத்தினான். இருவரும் உள்ளே நுழைந்தனர். மங்கிய வெளிச்சத்தில் காலியாயிருந்த ஒரு மூலையில் போய் அமர்ந்தனர்.

சற்று நேரத்தில் இன்னும் இருவர் உள்ளே நுழைந்தனர். அவர்களைப் பார்த்ததும் ஆகாஷின் புருவம் மேலெழும்பியது. சரவணனையும் சரண்யாவையும் அந்த நேரத்தில் அங்கே அவன் எதிர்பார்க்கவில்லை. சுஜிதாவுக்கு எதிரில் அவர்களோடு பேசவோ நலம் விசாரிக்கவோ தயங்கினான். நல்ல காலம் அவர்கள் இவர்களைப் பார்க்கவில்லை.

சீக்கிரமே சாப்பிட்ட விட்டு எழுந்தான் ஆகாஷ். சரண்யா பார்ப்பதற்கு முன் வெளியில் வந்தான். தான் சரண்யாவுக்கு பயப்படுகிறோமா சுஜிதாக்கு பயப்படுகிறோமா என்று அவனுக்கே புரியவில்லை. சிரிப்பு கூட வந்தது.

சுஜிதாவை நிஷாவின் வீட்டில் இறக்கி விட்டான்.

''நீங்களும் உள்ள வாங்க.''

''வேணாம் சுஜி. நீ மட்டும் போ. அவ என்னன்னு கேட்டா என்ன சொல்லுவ?''

''ஏதாவது சொல்லி சமாளிச்சுக்கறேன்.''

''நீ எங்க வீட்லயே இருந்தப்பொ நாம அதிகம் பேசிக்கக் கூட இல்ல சுஜி. இனிமே மறுபடியும் வெளில அடிக்கடி சந்திக்கணும். அடிக்கடி போன் பண்ணு.''

''சரி கிளம்புங்க''

சுஜிதா அந்த பல மாடி குடியிருப்பின் லிஃட்டை நோக்கி நடந்தாள்.

ஆகாஷ் காரை வீடு நோக்கி கிளப்பினான். ஹோட்டல் சாப்பாடு நெஞ்சைக் கரிப்பது போலிருந்தது. பீடா ஒன்று போட்டுக் கொண்டால் தேவலை என்று நினைத்தபடி வண்டியை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு எதிர் திசையிலிருந்த பிளாட்பார பீடா கடையை நோக்கி நடந்தான். அவனிடம் பீடாவுக்கு சொல்லிவிட்டு அதுவரை பெட்டிக்கடையில் தொங்கிய போஸ்டர் செய்திகளைப் படித்தான். நாலைந்து பேருக்கு பீடா மடித்துக் கொடுத்துவிட்டு கடைசியாகத்தான் ஆகாஷுக்குக் கொடுத்தான்.

இருபது ரூபாய் தாள் ஒன்றை எடுத்து நீட்டினான்.

"சில்ற இல்லையே சார்."

ஆகாஷ் பெட்டிக்கடைக்காரரிடம் சில்லறை வாங்கினான். அதிலிருந்து ஐந்து ரூபாய் நாணயம் ஒன்றை பீடாக்கடைக்காரரிடம் வைத்துவிட்டு நடந்தான். ரோடை கடக்கத் தொடங்கியவனை கடைக்காரனின் குரல் நிறுத்த திரும்பினான்.

"சார் மிச்ச காசு.. பீடாக்கடைக்காரன் சொன்னது சரியாய் காதில் விழவில்லை. பஸ் ஒன்று ஹாரனை அலறவிட்டபடி சிக்னல் கிடைத்து சீறி வர வினாடி நேரத்தில் ஆடிப்போனான் ஆகாஷ். பயத்தில் புத்தி வேலை செய்யவில்லை. பின்னால் ஓடி வர வேண்டியவன் என்ன செய்வதென்று புரியாமல் நடுரோடுக்கு ஒதுங்க எதிர் திசையிலிருந்து வந்து கொண்டிருந்த வேன் ஒன்று இவன் திடுதிப்பென்று இந்தப் பக்கம் ஒதுங்குவான் என்று எதிர்பாராமல் அவன் மேல் மோதி சடன் பிரேக் போட்டு நின்றது. ஆகாஷ் தூக்கி எறியப்பட்டு சற்று தள்ளி சாலையில் விழ டிராஃபிக் ஸதம்பித்தது. ரத்தம் குபுகுபுவென்று குட்டை கட்டியது. யார் யாரோ கத்தியபடி பதறியடித்துக் கொண்டு அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

ஆகாஷ் நினைவிழந்தான். டிராபிக் போலீஸ்காரர் ஒருவர் ஓடி வந்தார்.

''உயிர் இருக்குப்பா. சீக்கிரம் ஆஸ்பத்திரி கொண்டு போனா காப்பாத்திடலாம்'' யாரோ சொன்னார்கள்.

''யாரு என்னன்னு ஒரு விவரமும் தெரியலையே!''

''அந்த கார்லேர்ந்து இறங்கி வந்து பீடா வாங்கினாருங்க. மிச்ச சில்ற வாங்காம போறாரேன்னு கூப்ட்டேன். அதுங்காட்டியும் இப்டி அடிபட்டு விழுந்துட்டார்'' பீடாக்கடைக்காரன் சொல்ல கார் நம்பரைக் குறித்துக் கொண்டு ஆகாஷை ஒரு ஆட்டோவில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள்.

''இன்னும் அவனைக் காணலையே'' சாரதா மணி பார்த்தபடி புருஷனிடம் கவலையோடு சொல்லிய நேரம், டெலிபோன் அடித்தது.

மனித வாழ்க்கை என்பது ஒயாத போராட்டம்.
மனிதன் பசியொரு போராடியாக வேண்டும்.
நோயொரு போராடியாக வேண்டும்.
எதிரிகளொரு போராடியாக வேண்டும்.
கேற்கெல்லாம் மேலாக அஞ்ஞானத்தொரு போராடியாக வேண்டும்.
-சுவாமி பிரபவானந்தர்

சம்பத் டெலிபோனை எடுத்தார். தன் பெயர் சொன்னார்.

''சார் நாந்தான் சரவணன் பேசறேன்.

''சொல்லு. என்ன விஷயம்.''

''உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் கன்சல்ட் பண்ணணும் சார்.

சம்பத் ஓரக்கண்ணால் மனைவியைப் பார்த்தார்.

''யாருங்க?''

''கிளையண்ட் ஒருத்தர்'' என்றபடி வாசற்பக்கம் வந்தார் கார்ட்லெஸ்ஸோடு. சாரதா அடுக்களைப் பக்கம் சென்றாள்.

''என்ன விஷயம் சரவணா? சத்யா எப்டியிருக்கா?''

''அவ நல்லாதான் இருக்கா சார். ஆனா அம்மாதான் புதுசு புதுசா பிரச்சனை பண்றாங்க.''

''என்ன?''

''சத்யாக்கு இனி தாயாகற சக்தியில்லன்ற விஷயம் அம்மாவோட புத்தியை ஆட்டி வெக்குதுன்னு நினைக்கறேன். அவங்க புத்தி கெட்டுப் போச்சு. அசிங்க அசிங்கமா திட்டம் போடுது. அக்காவால முடியலன்னதும் தங்கையை எனக்கு தாரமாக்கிடணும்னு முயற்சி பண்றாங்க. தன் திட்டத்துக்கு சத்யாவையும் கூட்டு சேர்த்துக்கிட்டாங்க. சத்யா எப்படி இதுக்கு சம்மதிச்சான்னு புரியல. ஒருவேளை பயமோ என்னவோ. மொத்தத்துல சரண்யாவை இனிமேயும் எங்க வீட்ல வெச்சிருக்கறது நல்லதில்லன்னு தோணுது. அந்த பொண்ணு நல்லார்க்கணும்னு நா மனசார நினைக்கறேன். அதனால அவளை ஹாஸ்டல்ல சேர்த்துடலாங்கற முடிவுக்கு வந்துட்டேன். இதைத் தவிர எனக்கு வேற வழி தெரியல. உங்ககிட்ட சொல்லாம இதைச் செய்யக் கூடாதுன்னு தான் போன் பண்ணினேன். தயவு செய்து என்னைத் தப்பா எடுத்துக்காம நீங்க இதுக்கு சம்மதிக்கணும். ஏன்னா நீங்களும் அவளுக்கு ஒரு கார்டியன் இல்லையா?''

சம்பத் ஒரு வினாடி கனத்துப் போனார். சூழ்நிலைகளும், ஆசைகளும் மனிதர்களை என்னமாய் மாற்றி விடுகிறது என்று

பெருமூச்சு விட்டார். சரவணனின் இக்கட்டான நிலைக்கு வருந்தினார். அவன் சலனப்படாதவனாக இருப்பதாலும் உறுதியாயிருப்பதாலும் இப்படி ஒரு நல்ல முடிவுக்கு வந்திருந்தான். இதே வேறு ஒரு சராசரி ஆணாயிருந்தால் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டிருக்க மாட்டான்.

''என்ன அங்கிள் ஸைலன்ட்டாய்ட்டீங்க?''

''ஒண்ணுல்லப்பா'' சம்பத் அவசரமாக அவனுக்கு பதில் சொன்னார்.

''நா எடுத்த முடிவு சரிதானே அங்கிள்''

''மாமான்னு நா ஒருத்தன் கல்லு மாதிரி இருந்தும் அந்த பெண்ணுக்கு எந்த விதத்துலயும் உதவ முடியலையேன்னு வெக்கமார்க்கு சரவணா. ஆனா இனிமே வெக்கப்படறதுல அர்த்தமில்ல. ஹாஸ்டல் வேண்டாம் சரவணா. என்ன ஆனாலும் பரவால்ல அவளை நா இங்கயே கூட்டிட்டு வரேன். எங்க வீட்லயே இருக்கட்டும். இங்க என்ன பிரச்சனை வந்தாலும் சமாளிச்சுக்கறேன். நாளைக்கு நானே உங்க வீட்டுக்கு வரேன். அவளை தயாரா இருக்கச் சொல்லு. ஆமா உங்கம்மா அவளை அனுப்புவாங்க இல்ல?''

''அவளை அனுப்பி வெக்க வேண்டியது என் பொறுப்பு அங்கிள். நானும் யாருக்கும் பயப்படறதால்ல. நீங்க எத்தனை மணிக்கு வரிங்க அங்கிள்?''

''பத்து மணிக்கு வரேன்.''

சம்பத் போனை வைத்தார். வைத்த ஐந்து நிமிடத்தில் மறுபடியும் போன் அடித்தது. அவரே வந்து எடுத்து ஹலோ என்றார். எதிர்முனையில் வந்த செய்தியில் கார்ட்லெஸ் நழுவியது. உடல் தள்ளாட சோபாவில் சரிந்து அமர்ந்தார்.

டைனிங் டேபிளில் எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டிருந்த சாரதா பதறிப் போய் இட்டே வந்தாள்.

''என்னாச்சுங்க?''

''ஆகாஷ்க்கு ஆக்ஸிடென்ட் ஆய்டுச்சுன்னு போன்ல தகவல் வந்திருக்கு.''

''கடவுளே..! எங்கயாம் எப்டியாம். யார் சொன்னாங்க?''

''கிளம்பு. சங்கீதா எங்க?''

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவர்கள் மூவரும் கிளம்பினார்கள்.

நல்ல காலம் அருகிலிருந்த தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தான் ஆகாஷ்

அழுது கொண்டிருந்த அம்மாவை சங்கீதா பார்த்துக் கொள்ள சம்பத் ஆகாஷ் பற்றி விசாரிக்கச் சென்றார்.

சாரி மிஸ்டர் சம்பத். அடி பலம்தான். விழுந்த வேகத்துல முதுகெலும்பு பாதிக்கப்பட்டிருக்கு. இப்போதைக்கு வேண்டிய முதலுதவிகளை செய்து ரத்தப்போக்கை நிறுத்தியிருக்கோம். இனிமேதான் என்னென்ன பாதிப்புன்னு பார்த்து மத்த விஷயங்களை டிஸைட் பண்ணனும். கவலைப்படாதீங்க. ஸ்பெஷலிஸ்டுகள் எல்லாரும் பார்த்துட்ருக்காங்க.''

''உயிருக்கு...''

''உயிருக்கு எந்த ஆபத்துமில்ல. மூளையும் இதயமும் நல்லாவே இருக்கு. பார்ப்போம்.''

டாக்டர் எமர்ஜென்ஸிக்குள் நுழைய சம்பத் கவலையோடு திரும்பி வந்தார்.

''என்னப்பா சொல்றாங்க?''

''உயிருக்கு ஆபத்தில்லன்றாங்க. மத்தபடி எதுவும் சரியா சொல்ல மாட்டேன்றாங்க. டாக்டர்ஸ் பார்த்துட்ருக் காங்களாம். பரி சோதனைக்கப்பறம் சொல்றேன்னுட்டு பொய்விட்டார்.''

''எல்லாம் உங்களாலதான். அந்த பொண்ணை வீட்டை விட்டு வரட்டாம இருந்திருந்தா எம் பிள்ளைக்கு இந்த நிலை வந்திருக்குமா?''

''யார்ரி இவ... எதையும் எதையும் முடிச்சு போடற நீ? உம் பிள்ள என்ன இருபத்தி நாலு மணி நேரமும் வீட்டுக்குள்ளயா இருக்கான். இன்னிக்கு அவளைக் கொண்டு விடப் போனப்பொ இந்த விபத்து நடந்ததால பழி எனக்கா?''

''அப்பா ப்ளீஸ்... நம்ம சண்டையை அப்பறம் வெச்சுக்கலாம். முதல்ல அண்ணா எப்டியிருக்கான்னு வேற யார்கிட்டயாவது கேட்டுட்டு வாங்க'' சங்கீதா கண்ணீரோடு அவரை சமாதானப் படுத்தி அனுப்பினாள். அவர் போனதும் அம்மாவை எரிச்சலோடு பார்த்தாள்.

''எப்பொ என்ன பேசறதுன்னு உனக்கு விவஸ்தையே இல்லாம போச்சும்மா. அப்பாக்கு என்ன ஆசையா ஆகாஷ்க்கு ஆக்ஸிடென்ட் ஆகணும்னு? இல்ல அடிபடப் போறதுன்னு அவருக்கு ஜோசியம் தெரியுமா? அவனுக்கு ஆபத்து வரணும்னு விதியிருந்தா வீட்லயே இருந்தாலும் வரும். சும்மா எதையாவது பேசி மத்தவங்க மனசை புண்படுத்தறதை முதல்ல நிறுத்து!''

மனசிலிருந்த துயரத்தால் சங்கீதா கடிந்து கொண்டதை பெரிசாக எடுத்துக் கொள்ளவில்லை சாரதா.

சங்கீதா அப்பா சென்ற திசையில் நடந்தாள்.

ஐ.சி.யூ.வில் கிழித்துப் போட்ட துணி மாதிரி கிடந்தான் ஆகாஷ். நினைவு வருவதும் போவதுமாக இருந்தது.

முதுகுத்துண்டுல உடனடியா ஒரு ஆபரேஷன் பண்ணணும் நாளைக்கு காலேல ஒன்பது மணிக்கு ஆபரேஷன். உடனடியா இந்த பணத்தைக் கட்டிடுங்க.''

டாக்டர் போய்விட்டார்.

''உம்பிள்ளை ஆபரேஷன்க்கு பணம் கட்டணும். பணம் நீ தருவயா இல்ல அந்த சுஜிதாகிட்ட போய் கேக்கணுமா?''

''அப்பா ஒரு நிமிஷம். இன்ஸ்பெக்டர் நம்ம காரை கொண்டு வந்து விட்டுட்டு சாவியைக் கொடுத்துட்டு போனார். கார்ல நம்ம கஜானா சாவி இருக்கு. அவ அண்ணாகிட்ட கணக்கையும் சாவியையும் ஒப்படைச்சுட்டான்னு தோணுது.''

''நல்ல காலம்தான். அந்த சாவியை எங்கிட்ட குடு சங்கீதா. இன்னும் கொஞ்ச நாளைக்கு அது எங்கிட்டயே இருக்கட்டும்'' அப்பா சாவியை வாங்கிக் கொண்டு காரிலேறிச் சென்றவர் ஒரு மணி நேரத்தில் பணத்தோடு வந்தார்.

''யாராவது ஒருவர் இருந்தால் போதும்'' என்று டாக்டர் சொல்ல சாரதாவை அங்கு விட்டு விட்டு சம்பத்தும் சங்கீதாவும் கிளம்பினார்கள்.

''எனக்கென்னமோ பயம்மார்க்குப்பா ஆகாஷ் நல்லாய்டுவான் இல்ல?''

''நல்லாகணும்.''

''காரை விட்டிறங்கி எங்க போனான் அவன். எப்பவும் கேர்ஃபுல்லாதானே இருப்பான். எப்டி நடந்திருக்கும் இந்த விபத்து''

''அவன் கண் விழிச்சு பேசினாதான் எல்லா விவரமும் தெரியும்.

''சுஜிதாக்கு சொல்ல வேணாமா?''

''காலேல சொல்லிக்கலாம். அவ இப்பொ எங்க இருக்கான்னு யாருக்கு தெரியும்? காலேல காலேஜுக்கு போன் போட்டு தகவல் சொல்லு. அதுக்கு முன்னாடி அவளா எதுக்காவது பேசினா சொல்லு. ஆகாஷோட செல் உங்கிட்ட இருக்கட்டும். அநேகமா அவ பேசுவான்னு நினைக்கறேன். அப்பறம் இன்னொரு விஷயம் சங்கீதா. சரவணன் போன்

பண்ணினான். அங்க ஏதோ பிரச்சனையாம். சரண்யாவை ஹாஸ்டல்ல சேர்த்துடப் போறேன்னு சொன்னான். நா, வேண்டாம்னு சொல்லிட்டேன். அவளை இங்கயே கூட்டிட்டு வந்துடறேன்னு அவனுக்கு வாக்கு கொடுத்துட்டேன்.''

''அம்மா...

''இனிமே பயப்படப் போறதில்லம்மா, நாமள்ளாம் இருக்கும்போது அந்த பொண்ணு எதுக்காக அனாதையாட்டம் ஹாஸ்டல்ல தங்கணும். யாரோ ஒரு சுஜிதா இந்த வீட்ல வந்து தங்கி நம்மளையே அதிகாரம் பண்ணலாம். என் தங்கை பொண்ணு வரக்கூடாதா என்ன? அவ ஒருத்தி இங்க வந்து இருக்கறதுனால இந்த வீடு ஒண்ணும் முழுகிடாது. நா காலேல ஆஸ்பத்திரிக்கு போறேன். சரவணன் கிட்ட நா அங்க வரதா சொல்லியிருந்தேன். நீ போய் ஆகாஷ்க்கு நடந்த விபத்தைச் சொல்லி அவசர உதவிக்கு சரண்யாவைக் கூட்டிட்டு போக வந்ததா சொல்லி அவளை அழச்சுக்கிட்டு வந்துடு. மிச்சத்தை அப்பறமா நா பாத்துக்கறேன்.''

சங்கீதா சரி என்று தலையாட்டினாள். இரவு முழுக்க தூங்காமலே கரைந்தது. மறுநாள் விடியற்காலையிலேயே சம்பத் கிளம்பி விட்டார். சற்று நேரத்தில் சங்கீதாவும் சரவணனின் வீட்டுக்கு கிளம்பினாள்.

அந்த வலியிலும் ஆகாஷ் அப்பாவைப் பார்த்து சிரித்தான்.

''என்னடா ஆச்சு.''

''நேரம்ப்பா..''

''ரொம்ப வலிக்குதா? ஜாக்ரதையா வர வேணாமா?''

''அசையவே முடியல.''

''எல்லாம் சரியாய்டும். பயப்பட ஒண்ணுமில்லன்னார் டாக்டர். சின்ன சர்ஜரிதான்.''

''சுஜிக்கு சொன்னிங்களாப்பா?''

''சங்கிதாட்ட சொல்லிட்டு வந்திருக்கேன் அவ சொல்லிடுவா.''

''சார் கொஞ்சம் வெளில இருக்கீங்களா டாக்டர்ஸ் வராங்க'' நர்ஸ் வந்து சொல்ல சம்பத்தும் சாரதாவும் வெளியில் வந்தார்கள்.

''எனக்கென்னமோ பயம்மார்க்கு. எம்பையன் நல்லாய்டுவான் இல்ல?''

''கண்டிப்பா குணமாய்டுவான்''

''அசையவே முடியலன்றானே''

''இப்பொ எப்டி முடியும்? முதுகெலும்புல அடிபட்ருக்கில்ல? அதுக்குதானே ஆபரேஷன்! அப்பறம் எல்லாம் சரியாய்டும். நீ கவலைப்பட்டு உன் உடம்பை கெடுத்துக்காதே!''

''சங்கிதா எங்கே?''

''கொஞ்சம் நேரம் கழிச்சு வருவா. நீ ஏதாவது சாப்ட்டயா?''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம்''

''காபியாவது குடி வா''

''வேணாம்னா வேணாம் விடுங்க. அவன் ஆபரேஷன் நல்ல படியா முடியட்டும்.''

சாரதா பிடிவாதம் பிடித்தாள்.

எட்டு மணிக்கு சங்கிதாவோடு, சரவணனும் சரண்யாவும் பதறியபடி வந்தார்கள். அவர்கள் வருவதைப் பார்த்ததும் சம்பத் அவசரமாகச் சென்று அவர்களை சாரதாவின் கண்ணில் படாமல் ஆகாஷிடம் அழைத்துச் சென்றார். டாக்டர் அவன் உடல் நிலையை பரிசோதித்து விட்டு நர்ஸிடம் ஏதோ சொல்லியபடி செல்ல சம்பத் ஆகாஷிடம் நெருங்கினார். சரண்யாவைப் பார்த்ததும் ஆகாஷ் வியந்தான்.

''உனக்கு யார் சொன்னாங்க? ஏம்ப்பா எல்லாரையும் பயமுறுத்தறீங்க? எனக்கு ஒண்ணுல்ல சரவணன். சின்ன அடிதான்.''

''இருந்தாலும் மனசு கேக்கலை. அதான் வந்தோம்.''

''சார் ப்ளீஸ் இங்க கூட்டம் போடாதீங்க.'' நர்ஸ் அதட்ட, அனைவரும் வெளியில் வந்தனர்.

''டாக்டர் என்ன சொல்றார்?''

''மாமி எங்க சங்கீதா?''

''அங்க இருக்காங்க வா'' சம்பத் சரவணனோடு பேசிக் கொண்டிருந்த நேரம் சங்கீதா சரண்யாவை அழைத்துக் கொண்டு அம்மாவிடம் சென்றாள். சரண்யாவைப் பார்த்ததும் சாரதாவின் முகம் மாறியது. இவள் எங்கே இங்க வந்தாள் என்ற எரிச்சலோடு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அவளை அலட்சியப்படுத்தி விட்டு சங்கீதாவைப் பார்த்தாள்.

''சுஜிதாக்கு தகவல் சொல்லச் சொன்னா யார் யாரையோ கூட்டிட்டு வர! மொதல்ல போய் அவளைக் கூட்டிட்டுவா''

சங்கீதா பரிதாபமாக சரண்யாவைப் பார்த்தாள்.

''நீ கிளம்பு சங்கீதா'' சரண்யா நகர்ந்து மாமாவிடம் வந்தாள்.

''நாம கிளம்பலாமா?'' சரவணனைப் பார்த்து கேட்டாள். அவன் சம்பத்தைப் பார்த்தான்.

''எனக்கு ஒரு உதவி பண்ணுவயா சரண்?''

''என்ன மாமா?''

''மறுக்க மாட்டயே''

''அய்யோ என்ன மாமா இப்டி கேக்கறீங்க. என்னன்னு சொல்லுங்க''

''கொஞ்ச நாள் நீ என் வீட்ல இருக்கணும். அதான் உதவி.''

சரண்யா திகைப்போடு அவரைப் பார்த்தாள். ''மாமி இதுக்கு ஒத்துப்பாங்களா?''

''மாட்டா. ஆனா அவ என்ன முகத்தைக் காட்டினாலும் எனக்காகப் பொறுத்துக்கிட்டு அங்க இருக்கணும். கொஞ்ச நாளானா அவளே தானா மாறிடுவா''

சரண்யா என்ன சொல்வதென்று புரியாமல் குழம்பினாள்.

''என்ன சரண் யோசிக்கற?''

''இல்ல மாமா. வரேன்.''

''குட். இது வீட்டு சாவி. சரவணன் உன்னை விட்டுட்டு போவான். வீட்டை சுத்தம் பண்ணி ஏதாவது சமைச்சு வை. ஆபரேஷன் முடிஞ்சதும் நாங்க வருவோம் சாப்ட.''

சம்பத் வீட்டு சாவியைக் கொடுத்து அவர்களை அனுப்பி வைத்தார்.

ஒன்பது மணிக்கு ஆரம்பித்த ஆபரேஷன் மூன்று மணி நேரம் நடந்தது. டாக்டர்கள் வெளியில் வர சம்பத் வேகமாக அருகே சென்றார். அவரைத் தொடர்ந்து சாரதா ஓடி வந்தாள்.

''ஹவ் இஸ் ஹி டாக்டர்''

''ஏகப்பட்ட சிக்கல் மிஸ்டர் சம்பத். இன்னும் ரெண்டு மூணு ஆபரேஷன் பண்ண வேண்டியிருக்கும்.''

''என்ன சொல்றீங்க டாக்டர்?''

''உங்க பையன் எழுந்து நடக்கறது கடவுள்கிட்டதான் இருக்கு. நாங்க எங்களால மேக்ஸிமம் என்ன முடியுமோ செய்யப் பார்க்கறோம். கடவுளை நம்புங்க!'' டாக்டர் தன் ஜூனியரோடு ஆகாஷின் உடல்நிலை பற்றி பேசியபடி செல்ல சம்பத் சிலையாய் நின்றார். சாரதா நெஞ்சைப் பிடித்தபடி கீழே விழுந்ததைக் கூட அவர் கவனிக்கவில்லை.

நீ மற்றவர்களுக்கு பரிசளிக்க விரும்பினால் – உன் பகைவனுக்கு மன்னிப்பைப் பரிசளி. உன் நண்பனுக்கு உன்னுடைய பரிசளி. உன் குழந்தைக்கு நல்ல முடித்தலைப் பரிசளி. உன் தந்தைக்கு மரியாதையைப் பரிசளி. உன் தாய்க்கு உன் உயர்வைப் பரிசளி. உன் மனைவிக்கு சிறப்புத்தன்மையைப் பரிசளி. எல்லோருக்கும் நாராள குணத்தைப் பரிசளி. உனக்கு நீ நம்பிக்கையைப் பரிசளித்துக் கொள்.

–பால்போர்

சந்தோஷம், சங்கடம், இன்பம், துன்பம் எதுவும் மனிதனைக் கேட்டுக் கொண்டு வருவதில்லை. வரப்போவதை மனிதன் அறிவதுமில்லை. வந்தபின்தான் அவற்றோடு போராடி ஜெயிப்பதோ அல்லது தோற்பதோ நடக்கிறது. பயமிருப்பவனால் ஜெயிக்க முடிவதில்லை. பயத்தை வெல்கிறவன் தோல்வியை வெல்லுவான். அச்சம் தவிர் என்று எவ்வளவுதான் முழங்கினாலும் மனித மனம் பயத்தை உதறுவதில்லை. பயத்திற்கு காரணம் பற்று, பாசம், ஆசை பிடிப்பு. தனக்கு விருப்பமான ஒன்றை இழக்க மனித மனம் ஒருபோதும் விரும்புவதுமில்லை சம்மதிப்பதுமில்லை. தேகம் வெறும் சட்டை என்று தெரிந்தாலும் மரணத்தை எவரும் வரவேற்பதில்லை. போராட்டங்களில் மிகப் பெரியது காலனோடு அவன் நடத்தும் போராட்டம் தான். ஆகாஷ் அத்தகைய போராட்டத்தில்தான் ஈடுபட்டிருந்தான். அவன் மட்டுமல்ல சாரதாவும் ஒரு பக்கம் போராடிக் கொண்டிருந்தாள் நெஞ்சுவலியோடு. பிள்ளைப் பாசமும், பற்றும், பற்றினால் ஏற்பட்ட பயமும் அவளை

சாய்த்திருந்தது. கீழே விழுந்தவளை அதே மருத்துவ மனையில் அவசரமாக பரிசோதித்ததில் அவள் இதயத்தின் பலவீனம் புலப்பட்டது. தேகத்திற்குள் இருந்த சிற்சில குறைகள் எல்லாம் பரிசோதனையில் ஒவ்வொன்றாய்த் தெரிய வர சம்பத் ஆடிப் போனார். ஒரு பக்கம் மகன், இன்னொரு பக்கம் மனைவி என்ற நிலையில் என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறினார்.

''சாரி மிஸ்டர் சம்பத். உங்க மனைவிக்கும் உடனடியா பைபாஸ் பண்ணிடறது நல்லது. இவ்ளோ நாளா அவங்களுக்கு எந்த பிரச்சனையும் இருந்ததில்லையா?''

''எதுவும் இருந்தா மாதிரி தெரியலையே டாக்டர்.''

''ஆனா இருக்கே. எவ்ளோ சீக்கிரம் பண்றீங்களோ அவ்வளவு நல்லது.''

டாக்டர் செல்ல சம்பத் வேதனையோடு அமர்ந்தார். யாரை கவனிக்க? யாருக்காக வருத்தப்பட? ஆகாஷுக்கே இதுவரை ரெண்டு லட்சம் கட்டியாகி விட்டது. இன்னமும் கூட அவனுக்கே பணம் தேவைப்படும் என்ற நிலையில் திடீரென்று சாரதாவின் ஆபரேஷனுக்கு இரண்டரை லட்சம் கட்ட வேண்டும் என்பது மலைப்பாக இருந்தது. பணம் பலவிதத்தில் முடங்கியிருந்தது. கைவசம் அவ்வளவு தொகை ரெடிமேடாக இல்லை. ஒரு நிமிடத்தில் பத்து லட்சம் கூட அவரால் புரட்டி விட முடியும். இதுவரை யாரிடமும் எதற்கும் கை நீட்டிப் பழக்கமில்லாத நிலையில் கேட்பதற்கு மனம் ஒரு வினாடி தயங்கியது. ஆனாலும் வேறு வழியில்லை. எப்படியாவது பணத்திற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். சம்பத் யோசித்தார். உடனடியாக யாரிடம் கேட்டால் கிடைக்குமென்று.

''என்னப்பா யோசனை?''

''தற்சமயம் நம்ம கைல கேஷ் இல்லம்மா. இருந்த அஞ்சு லட்சத்துல ஆகாஷ்க்கே ரெண்டு லட்சம் கட்டியாச்சு. இன்னும் ரெண்டு மூணு லட்சம் கூட அவனுக்கு தேவைப்

படும். அம்மாவோட ஆபரேஷன்க்கு யார்கிட்டயாவது அவசரத்துக்கு வாங்கிட்டு அப்பறம் திருப்பிக் கொடுக்கணும். அதான் யார்கிட்ட கேக்கலாம்னு யோசிக்கறேன்.''

''அம்மாவோட ஆபரேஷன் செலவு எதிர்பாராதது இல்லப்பா?''

''அப்படி சொல்லாதே. அவளுக்குள்ள ஏற்கனவே பிரச்சனை இருக்கு. யாருக்கும் தெரியல. இப்ப தெரிஞ்சதும். நல்லதுதான். என்ன எல்லா செலவும் ஒட்டு மொத்தமா வந்து அழுத்தறதுனால திணறலா இருக்கு. பொருளா அசையா சொத்துக்களா எவ்ளவோ இருக்கு. ஆனா அவசரத்துக்கு உதவாது அதை நம்பி தைரியமா கடன் வாங்கலாம். அவ்ளோதான்.''

''நீ இருந்து இங்க கவனிச்சுக்க. நா ஒரு மணி நேரத்துல வந்துடறேன்.''

சம்பத் காரை எடுத்துக் கொண்டு கிளம்பி நேராக வீட்டுக்கு வந்தார். உடம்பு கசகசவென்றிருந்தது. இப்படியே போய் யாரையும் பார்க்க முடியாது. குளித்து உடைமாற்றிக் கொண்டு செல்லும் எண்ணத்தோடு வீட்டுக்கு வந்தவரைக் கண்டதும் சரண்யா ஓடி வந்தாள்.

''எப்டி மாமா இருக்கார்?''

''ஒண்ணும் புரியல சரண். அவனுக்கு இன்னும் ரெண்டு மூணு ஆபரேஷன் செய்யணுங்கறார் டாக்டர். அப்டியும் எழுந்து நடந்தா அது கடவுளின் அருள்ங்கறார். அதைக் கேட்டதும் உங்க மாமி நெஞ்சைப் பிடிச்சுக்கிட்டு கீழே விழுந்தா. சாதாரண அதிர்ச்சி மயக்கம்னு நினைச்சா டாக்டர் உடனடியா பைபாஸ் பண்ணணும் ஹார்ட்ல அடைப்பு இருக்குன்றார்.''

''கடவுளே..! என்ன மாமா சோதனை இது?'' சரண்யா ஸ்தம்பித்துப் போனாள்.

''சோதனைதாம்மா. இல்லாட்டா எல்லா கஷ்டமும் ஒண்ணா வருமா? கைல உடனடியா அவ்ளோ பணம் வேற இல்ல. இருந்ததெல்லாம் ஆகாஷ்க்கு கட்டியாச்சு. பத்து நாள் முந்திதான் தங்கம் விலை குறைஞ்சுதேன்னு சாரதா போய். சங்கீதா கல்யாணத்துக்கு வேணுங்கற நகையெல்லாம் வாங்கி வெச்சா. ஸோ.. இப்போதைக்கு பணமா கைல இல்ல.''

''என்ன செய்யப் போறீங்க மாமா?''

''அதுக்காக விட்ர முடியுமா? அவசரத்துக்கு அம்பது லட்சம் கூட தரதுக்கு ஆள் இருக்காங்க. ஜஸ்ட் ஒரு மூணு லட்சம் கிடைக்காதா என்ன? நா குளிச்சுட்டு கொஞ்சம் வெளில போய்ட்டு வரேன். சூடா ஒரு காபி ரெடி பண்ணி வை.''

அவர் குளிக்கப் போனார். பத்தே நிமிடத்தில் குளித்து உடை மாற்றி கீழே வந்தார்.

''பணம் எப்பொ கட்டணும்?''

''நாளைக்கு காலேல கட்டினா போதும். இப்பவே சொன்னாதான் கிடைக்கும்.'' சம்பத் காபியை உறிஞ்சினார்.

சரண்யா உள்ளே சென்றவள் ஐந்து நிமிடம் கழித்து அவரிடம் வந்து எதையோ நீட்டினாள்.

''என்னம்மா இது?''

''செக்! மூணு லட்சத்துக்கான செக்.''

''யார் கொடுத்தா?''

''அப்பா கொடுத்தனுப்பியிருக்கார்னு வெச்சுக்கோங் களேன்.''

சம்பத் அவளை வியப்போடு பார்த்தார்.

''அவன் சாவுக்கு கிடைச்ச நஷ்டஈடா சரண்?''

''ம் ரெண்டு லட்சம் நஷ்டஈடு. ஒரு லட்சம் அவருக்காக கலெக்ஷன் பண்ணி நல்லவங்க சிலர் கொடுத்தது. மொத்தம்

மூணு லட்சம் ரெண்டு மாசம் முந்திதான் கிடைச்சுது. சத்யாக்கு கூட தெரியாது. நியாயமா அவளுக்கு பாதி சேரணும். ஆனா சரவணன் வேண்டவே வேண்டாம்னு சொல்லி என் வாயைக் கட்டிப் போட்டுட்டார். இந்த பணம் உன் கல்யாணத்துக்குதான் உபயோகப் படணும்னு கண்டிப்பா சொல்லி என் பேர்லயே போட்டுட்டார். இப்டி ஒரு அவசரத்துக்கு உபயோகப்படாத பணம் வேறெதுக்கு? யார்கிட்டயும் நீங்க கைநீட்டவே கூடாது. காலேல இந்த பணத்தை வாங்கி கட்டிடுங்க. யார்க்கும் இந்த விஷயம் தெரிய வேண்டாம்.''

சம்பத் கண்கலங்க அவளைப் பார்த்தார். ''கடனா கொடுத்தா வாங்கிக்கறேன். இல்லாட்டா வேண்டாம்''

''அதெல்லாம் அப்பறம் பார்த்துக்கலாம். முதல்ல பணத்தை கட்டுங்க. அவங்க ரெண்டு பேரும் நல்லபடியா வீடு திரும்பட்டும். உங்க பணம் ஓடியா போய்டப் போறது?''

சரண்யா காலி டம்ளரை வாங்கிக் கொண்டு போனாள்.

சம்பத் சங்கீதாவின் கைவசமிருந்த ஆகாஷின் செல் நம்பரை தொடர்பு கொண்டு சங்கீதாவோடு பேசினார்.

''அம்மா எப்டி இருக்கா?''

''ரொம்ப அழறாப்பா. என்னால வேற தண்டச் செலவான்னு புலம்பறா. டாக்டர் திட்றார். பணம் கிடைச்சுதாப்பா?''

''கிடைச்சுதும்மா.''

''யார்ப்பா கொடுத்து?''

சம்பத் சரண்யாவைப் பார்க்க, அவள் யாருக்கும் தெரிய வேண்டாமே என்று கைகூப்பி கெஞ்சினாள்.

''கஷ்டத்தைக் குடுக்கற கடவுள், யாராவது நல்லவங்க மூலமா ஏதாவது ஒரு கதவை திறந்து விடுவான். அப்டி ஒரு நல்ல ஆத்மா தான் அவசரத்துக்கு உதவி செய்தது. டாக்டர் வேற ஏதாவது சொன்னாரா? ஆகாஷ் எப்டியிருக்கான்.''

''அண்ணா ரொம்ப அப்ஸெட் ஆகியிருக்கான். இன்னும் ரெண்டு மூணு ஆபரேஷன் பண்ணியாகணும்னு டாக்டர் சொன்னதுல மிரண்டு போயிருக்கான். நீங்க சீக்கிரம் வாங்களேன்.''

''சுஜிதாவைப் பிடிக்க முடிஞ்சுதா?''

''காலேஜுக்குப் போன் பண்ணி தகவல் சொன்னேன். இன்னும் வரல. தகவல் கிடைச்சுதா கிடைக்கலையான்னு தெரியல. அவங்களைப் பத்தி வேற கேட்டுக்கிட்டே இருக்கான். அப்பா அவங்களுக்கு நூறு ஆயுஸ். இப்பதான் ஆட்டோல வந்து இறங்கறாங்க. நா அப்பறம் பேசறேன்.''

''சரி இன்னும் அரை மணில நா வந்துடறேன்''

சம்பத் சரண்யாவின் வற்புறுத்தலுக்காக ஒரு பிடி தயிர் சாதம் மட்டும் சாப்பிட்டு விட்டு கிளம்பினார்.

அவர் ஆஸ்பத்திரிக்கு வந்த போது ஆகாஷின் அருகில் பேயறைந்தாற்போல் நின்றிருந்தாள் சுஜிதா.

''பயப்பட ஒண்ணுமில்லன்னார் டாக்டர். இன்னும் ரெண்டு மூணு மாசத்துல ஹி வில் பி ஆல்ரைட்.'' சம்பத் அவளுக்கு தைரியம் சொல்ல, சுஜிதா அதை சட்டை செய்யாதது போல் அவனுக்கு அருகில் அமர்ந்தாள்.

''நீ வந்ததே எனக்கு அசுர பலம் சுஜி. ப்ளீஸ் நீ இங்கயே இரேன்.''

''ஏண்டா அவள் காலேஜு போக வேண்டாமா? நாங்கள்ளாம் தான் இருக்கோமே. அவ முடிஞ்சப்பொ எல்லாம் வருவா. உங்க ஆண்ட்டிய பாத்தயா சுஜிதா?''

''இல்ல...''

''வா. உன்னைப் பார்த்தா சந்தோஷப்படுவா'' சம்பத் அவளை அழைத்துக் கொண்டு சாரதாவிடம் வந்தார். சுஜிதாவைப் பார்த்ததும் சாரதாவின் முகம் மலர்ந்தது. அவள்

கையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். ''நீ வீட்டை விட்டுப் போன ஒரே நாள்ள என்னல்லாம் ஆய்டுச்சு பாத்தயா சுஜி. வீட்டுக்கு மருமகளாகப் போறவ வீட்டை விட்டுப் போனா அந்த வீட்டுக்கு நல்லதில்லன்னு நிரூபணாமாய்டுச்சு. நீ மறுபடியும் வந்துடு சுஜி. இனிமே நீதான் எல்லாம். எல்லா பொறுப்பையும் நீதான் ஏத்துக்கணும். எங்க ரெண்டு பேரையும் உன்னாலதான் நல்லபடியா கவனிச்சுக்க முடியும். அவனை எழுந்து நடக்க வெக்க வேண்டியது இனி உன் பொறுப்பு.''

சாரதா பேசிக் கொண்டே போக சுஜிதா எவ்வித பதிலும் சொல்லாது சலனமின்றி நின்றிருந்தாள்.

''என்ன சுஜி வந்துடுவ இல்ல?''

''காலேஜில இப்பொ ரொம்ப டைட்டா இருக்கு ஆண்ட்டி. புராஜக்ட் ஒர்க் மென்னியப் பிடிக்குது. முடிஞ்சப்ப எல்லாம் நா வந்து பாத்துக்கறேன். கவலைப் படாதிங்க'' பட்டும் படாமலும் சொல்லிவிட்டு வெளியில் வந்தாள்.

''டாக்டர் என்ன சொல்றார்?'' சம்பத்திடம் கேட்டாள். சம்பத் கூறினார். ''ஓ.கே. நா போய்ட்டு அப்பறம் வரேன்.'' சுஜிதா கிளம்பி விட்டாள். ஆகாஷுக்கு இப்படி ஒரு விபத்து ஏற்படும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. மறுபடியும் அந்த வீட்டுக்குப் போக ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் போக முடியுமா தன்னால்? யோசித்தாள் அவள். இதுவரை அங்கே இருந்ததில் எந்த பிரச்சனையும் இல்லை. வேளா வேளைக்கு சாப்பாடு, சௌகர்யமான இருப்பிடம், சாரதாவின் தனி உபசரிப்பு, அவள் கொடுத்த உரிமைகள் என்று ஒரு ராணி மாதிரி இருந்த நிலை வேறு. அதே நிலை இனி இருக்குமா என்பது சந்தேகம்தான். முதுகில் அடிபட்டு நடமாட இயலாத நிலையில் ஆகாஷ், பைபாஸ் அறுவை சிகிச்சை பெற்று மிக மிக கவனமாக பார்த்துக் கொள்ளப்பட வேண்டிய சாரதா என்று இரு நோயாளிகளையும் மாறி மாறிப் பார்த்துக் கொள்ள

தன்னால் இயலுமா? கோடீஸ்வர குடும்பத்தில் பிறந்து ராஜ வாழ்வு வாழ்ந்தவள் அவள். யாருக்கும் சிச்ருஷைகள் செய்து பழக்கமில்லை. செருப்பெடுத்துப் போடக் கூட அங்கே ஆட்கள் உண்டு.

ஆகாஷை பிடித்துவிட்ட காரணத்தால் தன் வீட்டை விட சௌகர்யங்கள் குறைந்த அந்த வீட்டில் அவள் இருந்தாள். அதற்காக அந்த வீட்டில் நர்ஸ் உத்யோகமெல்லாம் பார்க்க முடியுமா என்ன? காதலித்து விட்ட காரணத்திற்காக கஷ்டப்பட அவள் தயாராக இல்லை. பொறுப்புகளை சுமக்கிறேன் பேர்வழி என்று வேலைகளில் அழுந்திப் போய் விடக்கூடாது. ஏதாவது காரணம் சொல்லி தள்ளியே இருப்பதுதான் நல்லது. வீட்டை விட்டு வந்ததும் ஒரு விதத்தில் நல்லதாகப் போயிற்று. இதெல்லாம் நடந்த பிறகு கிளம்பினால் வேறு மாதிரி பேச்சுக்கிடமாகியிருக்கும். அந்த வரைக்கும் நிம்மதி. நோயாளிகளை கவனிக்கும் அறுவையான வேலைகளிலிருந்து தப்பித்தோம். அவ்வப் போது அங்கு போனால் போதும். ஆகாஷ் உடம்பு சரியான பிறகு மற்றதைப் பார்த்துக் கொள்ளலாம். அதுவரை, சிரமப்படவும் கூடாது. அதேநேரம் தொடர்பிலும் இருக்க வேண்டும். எவ்வித கஷ்டங்களும் படாது காதலில் ஜெயிக்க வேண்டும். இப்படி ஒரு முடிவுக்கு வந்தாள் அவள். சங்கீதாவுக்கு தினசரி போன் பண்ணி இருவரைப் பற்றியும் அக்கறையோடு விசாரித்தாள்.

தன்னால் வந்து இருக்க இயலாத நிலையை வருத்தத்தோடு வலியுறுத்தினாள். ஆகாஷும் சாரதாவும் சீக்கிரமே உடல் நலம் தேற வேண்டி வருவதாய் உருகினாள். எப்பொழுதாவது ஒரு சமயம் திடீரென்று வந்து அரை மணி நேரம் அவனோடு இருந்து தன் அக்கறையை அவனுக்கு வெளிப்படுத்தினாள். பத்தாவது நாள் சாரதாவை டிஸ்சார்ஜ் செய்தார்கள். இந்த பத்து நாளில் ஆகாஷுக்கு இரண்டாவது அறுவை சிகிச்சையும் முடிந்தது. வலி, வேதனை, அசைய இயலாமை எல்லாமாய்

சேர்ந்து உடலாலும் மனதாலும் சோர்ந்து போயிருந்தான் அவன். தான் நல்லபடியாய் எழுந்து நடப்போமா என்ற சந்தேகம் அவனுக்கே ஏற்பட்டது. இன்னும் எவ்வளவு நாள் இந்த ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும் என்ற அலுப்பேற்பட்டது. வெளி உலகைப் பார்க்கத் தவித்தது. துள்ளி எழுந்து ஓடி, பழையபடி ஆகி விட மாட்டோமா என்ற ஏக்கம் அதிகரித்தது.

ஒரே நாளில் தன் வாழ்க்கை இப்படி திசைமாறி கட்டிலோடு கட்டிப் போடப்பட்டு விட்டதே என்று எண்ணி புழுங்கினான். கஷ்ட காலத்தில் கிட்டே காதலி இருந்தாலாவது மனசுக்கு இதமாக இருக்கும். பலம் சேர்க்கும். ஆனால் சுஜிதாவோ எப்பொழுதாவது வருகிறாள். போகிறாள். அவள் அன்போடு பணிவிடை செய்யமாட்டாளா என்றிருந்தது. அப்பாவும் சங்கீதாவும் நன்றாகத்தான் கவனித்துக் கொள்கிறார்கள். இருந்தாலும் மனசு சமாதானமடைய மறுத்தது. சுஜியின் அருகாமைக்கு ஏங்கியது.

''இன்னிக்கு அம்மாவை டிஸ்சார்ஜ் பண்றாங்க'' சங்கீதா அவனுக்கு ஹார்லிக்ஸ் கொடுத்தபடி சொன்னாள்.

''நீ இங்க இருக்க. அவங்களை யார் கவனிச்சுப்பாங்க? டோட்டலா நம்ம நேரமே சரியில்ல பார்த்தயா?'' கவலையோடு சொன்னான் அவன். ''பணமிருந்துட்டா மட்டும் போறாது சங்கீதா மனுஷங்க வேணும். ஒரு கஷ்டம்னா நாலு பேர் ஓடி வரணும். ஆனா அம்மா யாரையும் கிட்டே சேர்க்காததன் பலனை இப்பொ நாம அனுபவிக்கறோம் பார். எல்லார்க்கும் கஷ்டம். அவளை கவனிக்கவே இப்பொ ஆள் இல்ல!''

''அப்படின்னு யார் சொன்னா?''

''யார் இருக்காங்க சொல்லு!''

''வீட்ல சரண்யா இருக்கா தெரியுமோ?''

ஆகாஷ் விழி விரித்தான். ''அவ எப்பொ...? அம்மாக்கு தெரியுமா?''

''அன்னிக்கே அவ வந்தாச்சு. வீட்டை அவதான் பாத்துக்கறா. அம்மாக்கு இன்னும் தெரியாது. தெரிஞ்சாலும் இப்ப இருக்கற நிலைல அவளை வெளிய போகச் சொல்ல முடியாது. வேலை செய்ய ஆள் வேணுமே!''

''ச்சே! தப்பு சங்கீதா. பாவம் அந்த பொண்ணு. அவளுக்கு நாம என்ன செஞ்சோம்னு அவ வந்து நம்ம வீட்ல கஷ்டப்படணும்''

''அவ கஷ்டமாவே நினைக்கலையே!''

''இருந்தாலும்...''

''என்ன பண்ணச் சொல்ற. சுஜிதாவை கூப்ட்டு பாத்துட்டோம். அவங்களால வர முடியல.''

''நீங்கள்ளாம்தானே அவளை வெளில அனுப்பினீங்க. இப்பொ எப்டி வருவா? போன்றதுக்கும் வான்றதுக்கும் அவ என்ன பொம்மையா?'' ஆகாஷ் அந்த நிலையிலும் விட்டுக் கொடுக்காமல் பேச, சங்கீதா அட அசடே என்பது போல் அவனைப் பார்த்தாள். சுஜிதாவின் நடவடிக்கைகளிலிருந்து அவளது எண்ண ஓட்டம் நன்றாகவே புரிந்தது. சிரம்ப்படவோ, சிச்ருஷை செய்யவோ அவள் விரும்பவில்லை என்பதும் புரிந்தது. ஆகாஷுக்கு இன்னும் இது புரியவில்லை. காதல் மேகம் அவன் அறிவை மறைத்திருக்கிறது.!''

நல்ல இதயமுள்ள பலர் அறிவற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களால் யாருக்கும் தீமையில்லை. அவர்கள் வாழலாம். அதிக அறிவுள்ள அநேகர் தீயவர்களாக இருக்கிறார்கள் அவர்களால் பிறருக்கு ஆபத்துண்டு. அவர்கள் வாழக்கூடாது. நல்ல இதயமும் நல்ல அறிவும் கொண்டவர்கள் மிகச் சிலரே. அவர்கள் வாழ்வதினால்தான் உலகம் வாழ்கிறது.

-ஆர்தர்சான்றிரம்

"போலாமா?" சம்பத் உள்ளே வந்து கேட்டார். இரண்டு ஹெல்ப்பர்கள் வந்து சாரதாவை சக்கர நாற்காலியில் உட்கார வைத்து வெளியில் அழைத்து வந்தார்கள். சம்பத் அவள் பின்னால் நடந்தார்.

"ஆகாஷைப் பாக்கணுமே எனக்கு?"

"டாக்டர் அலவ் பண்ண மாட்டார். அப்பறம் பார்த்துக் கலாம் கிளம்பு."

"பத்து நாளாச்சுங்க என் பையனைப் பார்த்து!"

சம்பத் பதில் சொல்லவில்லை. முன்பை விட ஆகாஷ் இளைத்து கறுத்து வாடிப் போயிருந்தான். இந்நிலையில் அவனைப் பார்த்தால் நிச்சயம் அழுவாள். அனாவசிய பிரச்சனைகள் ஏற்படக்கூடும் என்றுதான் டாக்டர் பேர் சொல்லி இவரே மறுத்து விட்டார்.

"வீட்டுக்கு போனா என்னை யார் கவனிச்சுப்பாங்க? நர்ஸ் யாராவது வருவாங்களான்னு கேக்றது தானே?"

"இதோ பார் சாரதா. உன்னை கவனிக்க ஆள் வேணும்னு எங்களுக்குத் தெரியாதா? வேண்டாத கவலையெல்லாம் நீ படாதே. உன்னை கவனிக்க ஆள் இருக்கு வீட்ல. போதுமா?"

''யாரு?''

''அதை அங்க வந்து பார்த்துக்க''

சாரதா அது யார் என்ற யோசனையோடு வீடு வந்தாள்.

கார் நின்ற சத்தம் கேட்டதுமே உள்ளிருந்து ஓடி வந்த சரண்யாவைப் பார்த்ததும் அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தவள் முகம் கடுகடுப்பாயிற்று.

''வாங்க மாமி'' சரண்யா அவள் கைப்பிடித்து அழைத்துச் செல்ல அருகே வர சாரதா நதர்ந்து கொண்டாள்.

''என் வீட்டுக்கு வந்து என்னையே வரவேற்கறயா? நேரம்தான்! இவ எப்பொ இங்க வந்தா? எதுக்காக வந்தா? எனக்கு தெரியாம இன்னும் என்னல்லாம் நடக்குது? மொதல்ல இவளை கிளம்பச் சொல்லுங்க''

''நீ முதல்ல உள்ள வா. இப்டி டென்ஷன் ஆகக் கூடாதுன்னு தெரியாது உனக்கு?'' சம்பத் அவளை சமாதானப்படுத்தி உள்ளே அழைத்து வந்தார். ஏஸியை ஓடவிட்டு அவளை படுக்குச் சொல்லிவிட்டு அருகில் அமர்ந்தார்.

''இதோ பார் சாரதா. நா சொல்றதைக் கவனமா கேளு. காசை விட்டெறிஞ்சா ஆயிரம் பேர் கால் பிடிக்க வரலாம். ஆனா கரிசனத்தோட பிடிச்சு விடமாட்டாங்க. பத்து நாளா இந்த வீட்டை இவதான் பாத்துக்கறா. உனக்கு பிடிக்கலன்றதுக்காக ஒரு நல்ல பொண்ணை கெட்டவ, சரியில்லன்னு சொல்லிட முடியுமா? பத்து நாள் அவளை கவனிச்சு பார். உனக்கு திருப்தியில்லன்னா வேற யாரையாவது தேடிப் பிடிக்கறேன். ஆனா அப்பவும் சரண்யா இந்த வீட்லதான் இருப்பா. அதையும் சொல்லிட்டேன்.''

சாரதா முகம் சுருங்க அவரைப் பார்த்தாள். ''அவ இங்கதான் இருப்பான்னா? என்ன அர்த்தம் அதுக்கு? இருக்கக் கூடாதுன்னு நா சொன்னா?''

''இருப்பா!'' சம்பத் அழுத்தந்திருத்தமாக சொல்லிவிட்டு எழுந்தார். உனக்கு அவ பணிவிடை செய்யணுமா வேண்டாமான்னு மட்டும் தீர்மானிச்சு சொல்லு. வேண்டாம்னா காசுக்கு ஒரு ஆள் போடறேன். இவ உன் எதிர்க்கயே வரமாட்டா.''

''உங்க நோக்கம் என்னன்னு எனக்கு புரியல. அவ இப்பொ இங்க இருக்க வேண்டிய அவசியம் என்ன? இத்தனை நாள் அவ எங்க இருந்தாளோ அங்கயே இருக்க வேண்டியதுதானே?''

''நம்ம வீட்டு நிலையை உத்தேசிச்சு நாந்தான் அவளை இங்க கூட்டிட்டு வந்தேன் சாரதா. இப்பொ நானே எப்டி வேண்டாம் போய்டுன்னு சொல்ல முடியும்? என் கௌரவத்தை பார்க்க வேண்டாமா? தயவு செஞ்சு இந்த விஷயத்தை பெரிசு பண்ணாதே. அந்த பொண்ணு ஒருத்தி இருக்கறதால நாம ஒண்ணும் குறைஞ்சுட மாட்டோம்''

சம்பத் வெளியில் வந்தார். தேகத்தில் பழைய தென்பு இல்லாததாலும், படுக்கையில் இருக்க வேண்டிய நிலையிலும் சாரதாவால் அவரை எதிர்க்க முடியவில்லை. இவள் இருக்கும்போது காசுக்கு வேறு ஆள் போடுவானேன். இவளே செய்யட்டுமே என்று தோன்றியது. ஒரு வேலைக்காரியைப் போல் அவளை நடத்தினால் போதும் என்று முடிவு செய்தாள். அதற்குப் பிறகும் அவள் இங்கு இருப்பாளா என்ன? தானாக ஓடிவிட மாட்டாள்!

சம்பத் அடுக்களைக்கு வந்தார். டாக்டர் கொடுத்திருந்த டயட் லிஸ்ட் படி சாரதாவுக்கு சமைத்துக் கொண்டிருந்தாள் சரண்யா.

''மாமியோட கோபம் தீர்ந்துதா?''

''அவ கிடக்கா நீ எதுவும் பேசிக்க வேண்டாம். அவ ஏதாவது வெடுக்கு வெடுக்குனு சொன்னா கூட எனக்காக நீ சகிச்சுக்கணும். அன்புன்னா என்னன்னு அவளுக்கு புரிய

வெக்கணும். ஆகாஷை உனக்கு கட்டி வெக்க முடியுமோ இல்லையோ என்னால சொல்ல முடியல. அட்லீஸ்ட் சாரதா உன்னைதன் பெண்ணா நினைக்கற அளவுக்கு மாறணும் சரண். நீ அவளை மாத்தணும். அதான் எனக்கு வேணும்.''

சரண்யா அவருக்கு நம்பிக்கையளிப்பது போல் புன்னகைத்தாள்.

''சரி நீ போய் அவளுக்கு டிபன் கொடு. நா ஒரு குளியல் போட்டுட்டு கொஞ்ச நேரம் படுக்கறேன். கண் எல்லாம் எரியுது.''

சம்பத் மாடிக்கு சென்றார்.

சரண்யா சற்று நேரத்தில் சாரதாவுக்கு டிபன் கொண்டு போனாள்.

ஒரு நேப்கின் எடுத்து அவள் மார்பின் மேல் போட்டு தானே டிபனை ஊட்டிவிடப் போனாள். ''தேவையில்ல நானே சாப்ட்டுக்கறேன்''சாரதா முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''உங்களால முடியாது மாமி. தயவு செய்து அடம் பிடிக்காம சாப்டுங்க.''

''வேணாம்னா வேணாம் விடு.''

''என்னை ஏன் உறவுன்னு நினைக்கறீங்க. வேலைக்கு வந்திருக்கறதா நினைச்சுக்கிட்டு சாப்டுங்க. டாக்டர் உங்களை ஸ்ட்ரெயின் பண்ணக்கூடாதுன்னு சொல்லியிருக்கார்.''

சரண்யா வற்புறுத்தி தானே ஊட்டிவிட வேறு வழியின்றி வாய் திறந்தாள். பூ மாதிரி இரண்டு இட்லிகள் உள்ளே சென்றது.

''போறும்''

சரண்யா வாய் துடைத்து குடிக்க நீர் கொடுத்துவிட்டு காலிபிளேட்டோடு வெளியில் வந்தாள்.

ஆரம்பத்தில் எரிச்சல் பட்டாலும் போகப் போக அவளுடைய கவனிப்பிலும் உபசரணையிலும் குளிர்ந்து போகாவிட்டாலும் மௌனமாய் ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தாள். உடம்பு சரியானதும் இவளை வெளியே அனுப்பி விட்டுதான் மறுவேலை என்ற எண்ணம் உள்ளுக்குள் இருந்தது.

அடுத்த ஒரு வாரத்தில் ஆகாஷுக்கு மூன்றாவது அறுவை சிகிச்சையும் நடந்தது. எனினும் எந்த முன்னேற்றமும் ஏற்பட்டாற் போல் தெரியவில்லை. ''இதுக்கு மேல செய்ய எதுவும் இல்ல மிஸ்டர் சம்பத். உங்க பையனோட நம்பிக்கையும் உங்க எல்லாரோட அனுசரணையும் இருந்தா நாளாக நாளாக அவர் எழுந்து நடக்க ஆரம்பிக்கலாம். பிஸியோதெரபி ரொம்ப முக்கியம். அவருடைய தன்னம்பிக்கைதான் அவரை தூக்கி நிறுத்தணும். இன்னும் ஒரு வாரத்துல நீங்க அவரை வீட்டுக்கு கூட்டிட்டு போயிடலாம். மெதுவாதான் பிக்அப் ஆகும். நம்பிக்கை முக்கியம்.''

டாக்டர் கைகுலுக்கி விட்டுச் செல்ல சம்பத் செயலிழந்து நின்றார். 'ஆகாஷ் எழுந்து நடப்பானா?' மனசு பயம் கொண்டது. 'என் ஒரே பிள்ளையை இப்படி படுக்கப் போட்டு விட்டாயே தெய்வமே. நியாயமா இது?'

சங்கீதா சோர்ந்து நின்றிருந்த வரை ஆறுதலாகத் தொட்டாள்.

''நீங்களே இப்டி ஃபங்க் ஆய்ட்டா எப்டிப்பா? நாம யாருக்கும் எந்த கெடுதலும் செய்யல. நிச்சயம் ஆகாஷ் சீக்கிரமே பழையபடி ஆய்டுவான் பாருங்க''

பெண்ணின் தைரியத்தில் சம்பத் பெருமூச்சு விட்டார். இதுவரையே ஏகப்பட்ட லட்சங்கள் கரைந்திருந்தது. ஒரே நேரத்தில் வீட்டில் இருவருக்கும் பெரிய அளவுக்கு அறுவை சிகிச்சை என்றால் சும்மாவா? பணக்காரர்களாயிருந்தாலும் மூச்சுத்திணறும். சங்கீதாவின் கல்யாணச் செலவு, பைபாஸ்

ஆபரேஷன், ஆகாஷின் ஆபரேஷன்கள், தவிர இருவரது உடல்நிலை என்று ஒரே நேரத்தில் பலவித பாரங்கள் அழுத்தியதில் சம்பத் சோர்ந்து போனார்.

''பிரவீண்க்கு சொல்லலையப்பா?'' சங்கீதா கேட்டாள்.

''இல்லம்மா மாத்தி மாத்தி டென்ஷன்''

''தப்பா நினைச்சுக்கப் போறாங்கப்பா''

சம்பத் அவளை புன்னகையோடு பார்த்தார்.

''உனக்கு பிரவீணைப் பார்க்கணும்! புரியுதும்மா. சொல்லிடறேன் சரியா?''

''ச்சி போங்கப்பா.'' சங்கீதா அழகாக வெட்கப்பட்டாள்.

''பாவம்மா நீ. ஒரு மாசமா ஒரு என்டர்டெய்ன்மென்ட்டும் இல்லாம ஆஸ்பத்திரியே கதின்னு இருக்க. உன் படிப்பு காலேஜ் எதையும் கவனிக்கல. பரிதாபமா இருக்கு உன்னைப் பார்த்தா.''

''இங்க எல்லாரும் ரொம்ப ஃபிரண்டாய்ட்டாங்க. டாக்டர்ஸ்லேர்ந்து பேஷண்ட்ஸ் வரை டைம் போனதே தெரியல.''

''பிரவீணோட செல் நம்பர் ஞாபகமிருக்கா உனக்கு?''

சங்கீதா கடகடவென்று சொல்ல சம்பத் விஷமமாய் சிரித்தபடி அவளிடமிருந்த செல்லை வாங்கி அவன் எண்களை அழுத்தினார்.

''ஹவ் ஆர் யூ பிரவீண்.''

''பைன் அங்கிள் நீங்க எப்டியிருக்கீங்க. என்னாச்சு. ஒரு மாசமா ஒரு போன் கூட வரல? நானும் ரொம்ப பிஸியார்ந்துட்டேன். சாரி''

''ஆகாஷுக்கு ஆக்ஸிடெண்ட் ஆய்டுச்சு பிரவீண்.''

''மை காட்... எப்டி?''

''உனக்கு டைம் இருந்தா நேர்ல வாயேன் விவரமா சொல்றேன்'' சம்பத் ஆஸ்பத்திரி பெயர் சொன்னார்.

''ஷ்யூர் அங்கிள். உடனே வரேன்''

''உன் ஆள் வராணாம்'' பெண்ணைப் பார்த்து கண்ணடித்தார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அவசரமாக வந்திறங்கினான் பிரவீண்.

விவரங்களை சம்பத் சொல்லச் சொல்ல மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தான். அடுத்தடுத்து இப்டி கஷ்டம் வருமா? வியந்தான்.

ஆகாஷைப் பார்த்து தைரியம் சொன்னான். ''எனக்கு தெரிஞ்ச எல்லா ஸ்பெஷலிஸ்ட்டையும் நாம கன்ஸல்ட் பண்ணுவோம். கவலைப் படாதீங்க அங்கிள். சீக்கிரமே அவர் எழுந்து நடப்பார் பாருங்க.''

வெளியில் வந்து அவரிடம் சொன்னான். ''ஆண்ட்டி எப்டியிருக்காங்க?''

''பரவால்ல. அவங்க படுக்கைல அவதிப்படறாங்க. நாங்க நடமாடிக்கிட்டு அவதிப்படறோம். ஒரு மாசமா இந்த பொண்ணு இங்கயே இருக்கா!''

''இஸ் இட்? ஒரு சேஞ்சுக்கு என்னோட கொஞ்சம் வெளில அனுப்புங்களேன்.''

''போறயாம்மா?''

''எதுக்குப்பா?''

''வாய் இப்டி கேட்டாலும் போகத்தயார்னு கண்ணு சொல்லுதே. சும்மா போய்ட்டு வா. போ. முகம் கழுவி டிரெஸ் மாத்திக்கணும்னா மாத்திட்டு வா''

''நல்லாதான் இருக்க. இப்டியே வா'' பிரவீண் சொல்ல கூச்சத்தோடு கிளம்பினாள்.

''ஒரு மணி நேரத்துல வந்துடறோம் அங்கிள்.''

''போய்ட்டு வாங்க'' சம்பத் அவர்கள் போவதையே புன் சிரிப்போடு பார்த்தார்.

'எங்க போலாம்?' காரைக் கிளப்பியபடி கேட்டான்.

''என்னைக் கேட்டா?''

''அதுவும் சரிதான். அப்பொ நா எங்க கூட்டிட்டு போனாலும் வந்துடுவதானே?''

''ஒரு மணி நேரத்துல திரும்பி வரதா சொல்லியிருக்கீங்க. நினைவிருக்கட்டும்''

''ஒரு மணி நேரத்துல எவ்ளோ சாதிக்கலாம் தெரியுமா?'' விஷமாகச் சிரித்தான் அவன்.

''சதி வேலையெல்லாம் வேண்டாம். சமத்தா நடந்துக்கணும்''

''சரி தாயி!'' பவ்யமாகச் சொன்னான்.

''ஆமா கல்யாண தேதி தள்ளிப் போய்டும் இல்ல? அம்மா, ஆகாஷ் ரெண்டு பேர்க்கும் உடம்பு சரியில்லையே''

''தெரியல. அப்பாட்டதான் கேக்கணும். அவரே உங்க வீட்டுக்கு வருவார்னு நினைக்கறேன்.''

''அந்த பொண்ணு இன்னும் வீட்லதான் இருக்காளா?''

''நீங்க வேற அவளைக் கொண்டு விட்டுட்டு வர வழிலதான் ஆக்ஸிடெண்ட்டே ஆச்சு. அண்ணாக்கு!''

''இப்பொ அவதான் ஆகாஷைப் பார்த்துக்கறாளா?''

''அப்பப்பொ வருவாங்க!''

''இந்த நேரத்துல இல்ல கிட்ட இருக்கணும். காதல்னா என்ன ஜாலியா ஊர் சுத்தறது மட்டும்தானா? கஷ்டத்துல இல்ல கூட இருக்கணும்''

''இது உங்களுக்கு தெரியுது. அண்ணாக்கு தெரியலையே. இன்னமும் அவ நாம ஜெபம்தான்.''

''அவளை விடு. நீ என் நாம ஜெபம் சொல்றதுண்டா இல்லையா?''

''வேற வழி! இனி சொல்லித்தானே ஆகணும்?''

''அவ்ளோ எல்லாம் அலுத்துக்க வேணாம்மா''

''ஆனா அலுக்கல. அது ஒண்ணுதான் ஆறுதலா இருக்கு''

சங்கீதா மெல்லிய குரலில் சொல்ல, பிரவீண் நெகிழ்வோடு அவளைப் பார்த்தான். இடது கரத்தால் அவள் கரத்தை இறுகப் பற்றி வாயருகில் கொண்டுச் சென்று மணிக்கட்டில் மென்மையாய் இதழ் பதித்தான்.

சற்று நேரம் இருவரும் எதுவும் பேசவில்லை.

''அப்பா இப்பொ ரொம்ப பண நெருக்கடில இருக்கார். பிரவீண். அநேகமா கல்யாணம் தள்ளிப் போகும்'' சற்று பொறுத்து சொன்னாள்.

''எனக்கு ஆடம்பரம் வேணாம் சங்கீதா. உங்க வீடலயே அமைதியா எளிமையா நம்ம கல்யாணம் நடந்தா ரொம்ப சந்தோஷப்படுவேன். உங்கப்பாவை எந்த விதத்துலயும் நாங்க சிரமப்படுத்த மாட்டோம்''

''தேங்க்ஸ். இப்டி சொல்ற மனசு யாருக்கு வரும்?''

வெறும் தேங்க்ஸ் மட்டும் தானா?''

''பின்னே?''

''பதிலுக்கு என் கைல நீயும் ஒரு முத்தம் கொடுத்தா குறைஞ்சா போய்டுவ?'' பிரவீண் தன் இடது கையை அவள் இதழருகில் கொண்டு செல்ல அவள் மறுக்காமல் சிரித்தபடி முத்தமிட்டாள்.

கார் டிரைவ் இன்னில் நுழைந்து நின்றது.

''லான்ல உக்காந்து சாப்பிடலாம்''

அவன் காரை விட்டிறங்கி அவளோடு நடந்தான். சற்று தள்ளி சிநேகிதி ஒருத்தியோடு டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த சுஜிதா கம்பீரமாய் நடந்து சென்ற பிரவீணையும் அவனோடு உரசியபடி நடந்த சங்கீதாவையும் வெறித்துப் பார்த்தாள். அவள் கண்களில் வெறுப்பும் குரோதமும் மின்னியது.

மனம் ஒரு மாளிகை. உள்ளே சென்றவர்கள் வெளியே வர விரும்புவர். வெளியே இருப்பவர் உள்ளே செல்ல விரும்புவர்.

-ஆல்பர்ட்.

இயக்கம் என்பது இந்த பிரபஞ்சத்தின் ஜீவ நாடி! அணுவிலிருந்து அண்டம் வரை எல்லாம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இயங்குவதையே விரும்புகின்றன. நின்று போக எதுவும் விரும்புவதில்லை. இயக்கம் சுகம். சும்மா இருத்தல் கொடுமை. அதிலும் நோய் கண்டு கிடத்தல் கொடுமையிலும் கொடுமை. அதனிலும் கொடுமை இளமையில் படுக்கையில் கிடத்தல். அந்த கொடுமையைத் தான் ஆகாஷ் அனுபவித்துக் கொண்டிருந்தான். அடுத்தடுத்து நாலு ஆபரேஷன்கள் நடந்தும் ஒன்றும் சரியாகவில்லை. எங்கே பிரச்சனை? எதனால்? என்பது மருத்துவர்களுக்கே சவாலாக இருந்தது. ஏன் இயங்க இயலவில்லை என்பது விடுபடாத புதிராயிருந்தது. எத்தனை பரிசோதனைகள்! எவ்வளவு வலிகள்! போதும் போதும் என்று கதறினான் அவன். ''விட்ருங்க டாக்டர்...என்னை விட்ருங்க... என்னால முடியல!'' வலி தாங்காமல் அவன் அழுதபோது வீடே

அழுதது. ''இனி ஆயுசுக்கும் இப்டித்தான் கிடக்கணும்னா, ஒரே ஒரு ஊசி போட்டு என்னைக் கொன்னுடுங்களேன்! ப்ளீஸ்...!'' கெஞ்சினான்.

''என்ன பேசறீங்க ஆகாஷ். எந்த வியாதியும் மருந்துகள்ள ஒரு பங்கு குணமாகும்னா நம்பிக்கையிலதான் நாலு பங்கு குணமாகும். நம்பிக்கை ரொம்ப முக்கியம் நிச்சயமா நீங்க எழுந்து நடப்பீங்க''

டாக்டர் அவனைத் தட்டிக் கொடுத்தார்.

சம்பத் டாக்டரிடம் மனம் விட்டு பேசினார்.

''எம்பிள்ளைக்கு என்னதான் ஆச்சு டாக்டர்? எங்கிட்டயாவது சொல்லக்கூடாதா?''

''சில விஷயங்கள் மருத்துவர்களுக்கு அப்பாற்பட்டது மிஸ்டர் சம்பத். நாங்களும் போராடிக்கிட்டு தான் இருக்கோம் சரி செய்ய. ஆகாஷோட கேஸ் ஃபைல், ஸ்கேன் ரிப்போர்ட்ஸ், சர்ஜரி டீடெய்ல்ஸ் எல்லாத்தையும் லண்டன்ல இருக்கற எனக்கு தெரிஞ்ச ஒரு ஸ்பெஷலிஸ்ட்டுக்கு இன்டர்நெட் மூலம் அனுப்பியிருக்கேன். அவர் என்ன சொல்றார், அவரோட சஜஷன் என்னன்னு பார்ப்போம். பட் நா சொன்னா மாதிரி நம்பிக்கைதான் மிகச்சிறந்த மருந்து''

டாக்டர் கிளம்பினார். சம்பத் சோர்வோடு உள்ளே வந்தார். ஒரு பக்கம் மனைவி, மற்றொரு பக்கம் மகன் என்று இருவரும் படுக்கையில். ஏராளமான பணம் தண்ணீராய்ச் செலவழிகிறது. என்று இந்த பிரச்சனை தீரும் என்று தெரியவில்லை. பழையபடி எப்போது ஆகப் போகிறது இந்த வீடு? பெருமூச்சு விட்டார் அவர்.

சரண்யா ஆகாஷுக்கு ஹார்லிக்ஸும், பிரெட் துண்டுகளும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

''டாக்டர் என்ன சொன்னார் மாமா?''

''வழக்கமா சொல்றதைத்தான் சொல்கிறார்'' சம்பத் அலுத்துக் கொண்டார்.

''எல்லாம் சரியாய்டும் மாமா''

''உனக்குத்தான் சரியான வேலை இல்ல சரண்? இங்க வந்து இந்த ஒரு மாசத்துல இளைச்சுப் போய்ட்ட. நல்லார்ந்தப்பொ எல்லாம் உன்னைக் கூப்ட்டு நல்லா வெச்சுக்க முடியல இப்ப வேலக்காரிக்கு பதிலா கூட்டிட்டு வந்தாப்பல இருக்கு. மனசுக்கு ரொம்ப உறுத்தலார்க்கும்மா''

''இப்ப வந்ததுான் எனக்கு சந்தோஷமா இருக்கு. அனாவசியமா குழப்பிக்காதிங்க.'' சரண்யா ஆகாஷின் அறைக்குச் சென்றாள். புத்தகம் படித்துக் கொண்டிருந்த ஆகாஷ் அவளைப் பார்த்ததும் புத்தகத்தை மூடி வைத்தான்.

''சுஜிதாவோட பேசினயா சரண்?''

''நாலு தரம் டிரை பண்ணினேன். எப்பக் கேட்டாலும் இல்லன்றாங்க. நா வேணா நேராவே போய்ப் பார்த்து கூட்டிட்டு வரவா ஆகாஷ்?''

''ஒரு வேளை ஊருக்கு எங்கயாவது போய்ட்டாளா? இல்லாட்டா வராம இருக்க மாட்டாளே. நீ இன்னொரு முறை நம்பர் போட்டுக்குடேன். நானே பேசிப்பாக்கறேன்''

''இதைக் குடிங்க போட்டுத் தரேன்''

ஹார்லிக்ஸை அவன் கையில் கொடுத்துவிட்டு கார்ட்லெஸ்ஸில் சுஜிதாவின் நம்பரை அழுத்தனாள்.

''ஹலோ நிஷா ஹியர்''

''மிஸ் நிஷா ஐ ஆம் ஆகாஷ். சுஜிதா இல்லையா?''

''ஹவ் ஆர் யூ மிஸ்டர் ஆகாஷ்? உங்களை வந்து பார்க்கணும்னு நினைச்சேன். டைமே கிடைக்கல. அடுத்த வாரம் வரேன்''

''பரவால்ல. சுஜி இல்ல?''

''குளிச்சிட்ருக்கா. வந்ததும் உங்களை கூப்ட சொல்லட்டுமா?''

''ப்ளீஸ் கண்டிப்பா கூப்ட சொல்லுங்க''

கார்ட்லஸ்ஸை சரண்யாவிடம் கொடுத்தான். ''பத்து நிமிஷத்துல கால் வரும்''

''அதுக்குள்ள இந்த பிரெட்டையும் சாப்ட்டுடலாமே''

''அம்மா எப்டியிருக்காங்க. அவங்களைப் பார்த்து எவ்ளோ நாளாச்சு''

''அவங்களும் உங்களைப் பத்திதான் கேட்டுட்ருக்காங்க. உங்களைப் பார்த்தா அவங்க ஃபங்க் ஆயிடறாங்க. அது அவங்க ஹெல்த்துக்கு நல்லதில்லன்னுதான் அவங்களை கொஞ்ச நாள் உங்களை பார்க்க வேணாம்னு சொல்லியிருக்கார் டாக்டர்''

''எங்க வீட்டு மேல யார் கண் பட்டுது சரண்? கல்லெறிஞ்ச தேன்கூடு மாதிரி இப்டியாய்டுச்சு!''

''வாழ்க்கைன்னா எல்லாம் தான் இருக்கும் ஆகாஷ். சந்தோஷம் வந்தா தடுக்கறோமா? வா வான்னு வரவேற்ப்பு கொடுக்கறோம். கஷ்டம்னா மட்டும் வராதேன்னு கதவு சார்த்திடப் பாக்கறோம். ஆனாலும் ரெண்டுமே மாறி மாறி வரத்தான் செய்யும். இது உங்களுக்கு கஷ்ட காலம். இது நிச்சயம் மாறும். மறுபடியும் சந்தோஷம் வரும்''

''அம்மா உங்கிட்ட எப்டி நடந்துக்கறாங்க?''

''ஏன்? நல்லாத்தான் பேசிட்ருக்காங்க!''

''குதிரைப்பசி!'' ஆகாஷ் சிரித்தான்.

''புரியலையே''

''வேற வழியில்ல. பேசிட்ருக்காங்கன்னு சொல்றேன்''

''அப்டியெல்லாம் இல்ல''

போன் அடித்தது. எடுத்து அவனிடம் கொடுத்தாள். ''கூப்ட்டீங்களா ஆகாஷ்?'' எதிர்முனையில் சுஜிதாவின் குரல் கேட்டதும் அவன் முகம் பிரசன்னமாயிற்று. அதற்கு மேல் அங்கிருப்பது அநாகரீகம் என்று சரண்யா காலி டம்ளரோடு வெளியில் வந்துவிட்டாள்.

''என்ன சுஜி என்னை மறந்துட்டயா? இந்த பக்கமே வரல நீ!''

''அப்டியெல்லாம் இல்ல ஆகாஷ். எனக்கு எக்ஸாம்ஸ் நடந்துட்ருக்கு இல்ல! பெண்டு நிமிருது. நா தூங்கி பத்து நாளாச்சு''

''எக்ஸாம்ஸ் எப்பொ முடியுது?''

''இன்னும் டென் டேஸ்ல முடிஞ்சுடும்''

''அதுக்கப்பறமாவது இந்த பக்கம் தரிசனம் தருவாயா?''

''ஷ்யூர். எப்டியிருக்கிங்க ஆகாஷ். எனி இம்ப்ரூவ் மென்ட்?''

நீ கிட்டக்க இருந்தா நிச்சயம் இம்ப்ரூவ் ஆய்டுவேன். எல்லாத்தையும் மறந்துட்டு நீ மறுபடியும் இங்கயே வந்து இருக்கணும் சுஜி''

''மரியாதையிருக்காது ஆகாஷ்''

''இல்ல சுஜி. அதான் எல்லாத்தையும் மறந்துடுன்னு சொல்றேனே! இந்த வீட்டோட ராணி நீ! அம்மாவும் இப்பொ படுக்கைல. நீ வந்தாதான் சரியாகும். மறுபடியும் நீ வந்து எல்லா பொறுப்பையும் ஏத்துக்கணும் சுஜி. இது என்னோட ஆசை! என் விருப்பத்தை நீ மதிப்ப இல்ல? மதிப்பன்னா மறுபேச்சு பேசக்கூடாது. எக்ஸாம் முடிஞ்சதும் வந்துடணும்''

அவள் எதுவும் பேசவில்லை. 'டேக் கேர்' என்று மட்டும் சொல்லிவிட்டு வைத்தாள். நிச்சயம் அவள் வந்துவிடுவாள் என்ற நம்பிக்கையில் சந்தோஷமாக போனை வைத்தான் ஆகாஷ்.

ஒவ்வொரு வேலையாக முடித்தாள் சரண்யா. மாமிக்கு சாப்பாடு கொடுத்து விட்டால் அதோடு நாலு மணிக்கு ஹார்லிக்ஸ் கொடுத்தால் போதும். இரண்டு மணிக்கு சங்கீதா வந்து விடுவாள். இவள் காலேஜுக்கு கிளம்ப வேண்டும்.

காலைப் பொறுப்பு இவளிடம் என்றால் மதியத்திற்கு மேல் சங்கீதா எல்லா வேலையும் பார்த்துக்கொண்டு விடுவாள். அதனால் இருவருக்கும் படிப்பு கெடாமல் நாட்கள் நகர்ந்தது. ஆகாஷிடம், அத்தை நன்றாகத்தான் பேசுகிறாள் என்று சொன்னாளே தவிர அது உண்மையில்லே. எப்போது எழுந்து நடப்போம், எப்போது இவளை வீட்டைவிட்டு துரத்தலாம் என்ற நினைப்பிலேயே இருந்தாள் சாரதா. இவள் முகத்தைப் பார்த்துக் கூடப் பேசுவதில்லை. அப்படியே பேசினாலும் ஏதாவது குத்தல் குதர்க்கமாகத்தான் வார்த்தைகள் வரும்.

எழுந்து வந்தாதானே தெரியும் வீட்ல என்னென்ன இருக்கு, என்னென்ன போச்சுன்னு! என்பாள் அடிக்கடி.

சில நேரம் அந்த வார்த்தைகளின் உஷ்ணம் தாங்காமல் ஓடி விடலாமா என்று கூடத் தோன்றும். ஆனாலும் ஆகாஷுக்காகவும் மாமாவுக்காகவும் சகித்துக் கொள்ளப் பழகிக் கொண்டாள். இன்னும் கொஞ்ச நாள். ஆகாஷ் எழுந்து நடமாடிவிட்டான் என்றால் எல்லாம் சரியாகிவிடும். சங்கீதாவுக்கு கல்யாணமாகி அவளும் போய்விடுவாள். சுஜிதா திரும்ப வந்துவிடுவாள். அவர்களது திருமணமும் நடைபெறும் அதன் பிறகு இவள் உதவி யாருக்கும் தேவைப்படப் போவது மில்லை, இவளும் யாருக்கும் பாரமாக இருக்க விரும்பமாட்டாள். படிப்பும் முடிந்துவிடும். படித்த படிப்புக்கு எங்காவது ஒரு சாதாரண வேலையாவது நிச்சயம் கிடைக்கும். ஹாஸ்டலில் போய் இருந்துகொண்டு விடலாம்.

சரண்யா சமாதானப்படுத்திக் கொண்டு அத்தைக்கு சாப்பாடு எடுத்து வைத்துக் கொண்டு போனாள்.

''நீ இங்க வந்து எவ்ளோ நாளாச்சு?'' சாரதா கேட்டாள்.

''ஒரு மாசம்''

''அந்த பீரோ திறந்து அதுல இருக்கற பர்ஸ் எடுத்துக்கிட்டு வா''

அவள் சொன்னபடி செய்தாள்.

சாரதா ஒரு ஆயிரத்தி ஐநூறு ரூபாயை எடுத்து நீட்டினாள்.

''எதுக்கு மாமி?''

''உன் சம்பளம்...

''பணமெல்லாம் வேணாமே!''

''பணம் குடுக்காட்டி நீ உரிமை கொண்டாட ஆரம்பிச்சுடுவ. அதெல்லாம் வேணாம். வேற யாராவதார்ந்தா ஆயிரம்தான் குடுத்திருப்பேன். நீ தூரத்து உறவாச்சேன்னு கூட ஐநூறு போட்டுத்தரேன். அதோட மூணு வேளை சாப்பாடு''

சரண்யா மறுக்காது ரூபாயை வாங்கிக் கொண்டு அவளுக்கு சாப்பாடு போட்டு விட்டு வெளியில் வந்தாள்.

இரண்டு மணிக்கு சங்கீதா வந்து விட்டாள். சம்பத்தும் அப்போதுதான் கிளம்பினார்.

''வா சரண். நா உன்னை டிராப் பண்ணிட்டே போறேன்''

சரண்யா காரில் ஏறியமர்ந்தாள்.

சற்று தூரம் வந்ததும் தன் கைப்பை திறந்து பணத்தை எடுத்து அவரிடம் நீட்டினாள்.

''என்னம்மா அது..?''

''என் முதல் மாச சம்பளம் மாமா. மாமி குடுத்தாங்க''

மாமா அவளையும் பணத்தையும் மாறி மாறிப் பார்த்தார்.

''சில ஜென்மங்கள் எவ்ளோ பட்டாலும் திருந்தாது உன் மாமியை மாதிரி! இன்னமும் பணத்திமிர் விட்ட பாடில்ல பார். இன்னிக்கு பாங்க் பாலன்ஸ் எவ்ளோன்னு தெரிஞ்சிருந்தா உன் நல்ல மனசுக்கு விலை வெச்சிருக்க மாட்டா''

''இந்த பணத்தை நா என்ன செய்யட்டும் மாமா?''

''அவ முகத்துலயே விட்டெறிஞ்சிருக்கணும் நீ!''

''என்னால அது முடியாதுன்ற தாலதானே வாங்கிட்டேன்''

''என்ன செய்யப்போற? நீயே சொல்லேன்''

''உங்ககிட்ட குடுத்துடலாம்னு தான் வாங்கிண்டேன்.''

''கொண்டா'' மாமா பணத்தை வாங்கி பாக்கெட்டில் வைத்துக் கொண்டார். ''உன் மனசு கஷ்டப் படக்கூடாதுன்னு வாங்கிக்கறேன். நீ கொடுத்த பணத்துக்கு இந்த பணம் வட்டிக்கு கூட காணாது. சம்பளம் குடுக்கறாளாம் சம்பளம்!''

''போறும் மாமா. விட்ருங்களேன்''

''இன்னும் ஒரு அஞ்சாறு மாசம் சரண். எனக்கு வர வேண்டிய பணமெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா வந்துடும். உன் படிப்பும் முடிஞ்சிடும். இனி நீ தனியா இருக்கறது சரியில்ல. நல்ல ஒரு ஆளா பார்த்து உனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டேன்னா நீயும் நல்லார்ப்ப, எனக்கும் சமாதானமாய்டும். போறும்மா நீ பட்ட கஷ்டமெல்லாம் இந்த வயசுக்கு உனக்கு இவ்ளோ கஷ்டம் தேவையேல்ல''

''ஒரு நிமிஷம்...'' சரண்யா குறுக்கிட்டாள்.

''என்ன..?''

''பணத்தை திருப்பிக் கொடுக்கறது உங்க தன்மானம் சம்பந்தப்பட்ட விஷயம். நா வேண்டாம்னு சொல்லல. ஆனா இந்த கல்யாண விவகாரத்தை விடுருங்களேன்''

''அப்டின்னா கடசி வரை இப்டியே இருந்துடலாம்னு எண்ணமா?''

''எனக்கு நிறை படிக்கணும் மாமா. நிறைய சாதிக்கணும், அதைத்தவிர வியாபார நோக்கமில்லாத நல்ல ஸ்கூல் ஒன்னு ஆரம்பிக்கணும்னு ஒரு ஆசையிருக்கு. ஏழை குழந்தை களுக்கு சுத்தம், சுகாதாரம், நல்ல இங்கிலீஷ், நல்ல தமிழ், நல்ல இலக்கியம் எல்லாம் குடுக்கணும். நம்பர் ஒன் ஸ்கூல்னு பேர் சொல்ல வெக்கணும். ஏழை குழந்தைகளும் தாட் பூட்னு

இங்கிலீஷ் பேசணும். அதோட நல்ல தமிழும் பேசணும். சர்வீஸ் மைண்ட் உள்ள படிச்சவங்க வந்து சம்பளமில்லாம பாடம் சொல்லிக்கொடுக்கத் தயாரார்ந்தா நிச்சயம் என் ஆசை நிறைவேறும்''

''ரொம்ப நல்ல விஷயம். அப்டி ஒரு ஸகூல் நீ ஆரம்பிச்சா நானும் கூட வந்து என்னால முடிஞ்ச சர்வீஸ் பண்ணுவேன். நீ சொல்றது கரெக்ட்தான் சரண். பணக்காரங்களுக்குதான் எல்லாம்ங்கற நிலை மாறணும். நல்ல கல்வி ஒருத்தனுக்கு எல்லாமே தேடிக் கொடுக்கும். அதனால கல்வியை நாம கொடுக்கறது உண்மையிலயே நல்ல சர்வீஸ்தான்''

மாமா மனமாறப் பாராட்டினார்.

''ஆமா காலேல சுஜிதாக்கு போன் எல்லாம் பண்ணிக்கொடுத்த போல்ருக்கு! என்ன சொல்றா அவ?''

''தெரியல, நா வெளில வந்துட்டேன்''

''எம்பிள்ள ஒரு மடையன்!''

'ஏன் அப்டி சொல்றீங்க?''

''நீயே சொல்லு சரண். அந்த பெண் இங்க வருவான்னு நினைக்கறயா நீ?''

''ஏன் வராம என்ன?''

''எனக்கென்னமோ சந்தேகமாதான் இருக்கு''

சரண்யா பதில் சொல்லவில்லை.

சரியாய் இரண்டு வாரம் கழித்து சுஜிதா ஒரு ஆட்டோவில் இறங்கிய போது சம்பத்தின் புருவம் உயர்ந்தது. தன் வியப்பை மறைத்துக் கொண்டு புன்சிரிப்போடு அவளை வரவேற்றார் அவர்.

உள்ளே வந்தவள் முகம் ஆகாஷின் உடம்பை துடைத்து விட்டுக் கொண்டிருந்த சரண்யாவைப் பார்த்ததும் சுருங்கியது.

எவ்வளவு ஆசைகள் வந்தாலும் அதை அடக்குகிறவன் அமைதியடைகின்றான்.
எல்லாவற்றையும் அடைய வேண்டுமென என்னுபவன்
அமைதிய கெடுக்கின்றான்.

-பகவத்கீதை

''சரண்யா வெளியில் சென்றதும் சுஜிதா கதவை சார்த்திவிட்டு வந்து ஆகாஷின் அருகில் அமர்ந்தாள். அவளைக் கண்டதில் அவன் முகம் மலர்ந்திருந்தது.''

''யாரவ..?''

''தூரத்து சொந்தம்... ஹெல்புக்காக வந்திருக்கா''

''இவதான் அந்த சரண்யாவா?''

''ம்...''

''என்ன 'ம்?' உடம்பு துடச்சு விட வேற ஆள் கிடைக்கலயா, இல்ல உங்களுக்கே இது வேண்டியிருக்கா?''

''ஹாஸ்பிடல்ல நர்ஸ் பண்றதில்லையா? அது மாதிரிதான் சுஜி. ஏன் பொறாமையார்க்கா? அப்பொ நாளைலேர்ந்து நீயே துடைச்சு விடு. நீயே எல்லாம் செய்! உன் கை பட்டாலாவது நா எழுந்து நடக்கறேனான்னு பார்ப்போம்.''

''டாக்டர் என்ன சொல்றார்?''

''நீ பக்கத்துல இருந்தா சரியாப் போய்டும்னு சொல்றார். அந்த பவுடரை எடுத்து போட்டுவிடேன் சுஜி''

''சுஜிதாவின் முகம் ஒரு மாதிரியாயிற்று.''

''இதெல்லாம் எனக்கு பழக்கமில்ல ஆகாஷ். ஒரு மேல் சர்வன்ட் போட்டுடுவோம். எனக்கு தெரிஞ்ச ஒரு பையன் இருக்கான். வரச்சொல்றேன். ஒரு ஆயிரம் ரூபா கொடுத்தா போதும் உங்களுக்கு வேணுங்கற எல்லா வேலையும் செய்வான்.''

''அம்மாட்டதான் கேக்கணும். அவங்க சரின்னு சொன்னா வரச் சொல்லு. ஆமா அம்மாவைப் பார்த்தயா?''

''பார்த்துட்டு வந்துடறேன்''

''சுஜிதா எழுந்து வெளியில் வந்தாள். சாரதாவின் அறைக்கு சென்றாள். இவளைப் பார்த்ததும் வாயெல்லாம் பல்லாக எழுந்து உட்கார்ந்தாள் சாரதா.''

''யப்பா..! எவ்ளோ நாளாச்சு சுஜி உன்னைப் பார்த்து! என்ன பரிட்சையா?''

''ம்... எப்டியிருக்கீங்க ஆண்ட்டி?''

''என்னத்த சொல்ல சுஜி. மகாலஷ்மி மாதிரி இருந்த நீ இந்த வீட்டை விட்டு எப்ப வெளில போனயோ அப்பொ பிடிச்சுது இந்த வீட்டுக்கு சனி. பாரேன் எவ்ளோ பெரிய கஷ்டம் வந்துடுச்சு. லட்ச லட்சமா பணம் போயாச்சு. இன்னும் ஆகாஷ் எழுந்து நடந்த பாடில்ல. இப்ப நீ வந்துட்ட இல்ல! இனி எல்லாம் சரியாப் போய்டும் பார். இனிமே எல்லா பொறுப்பும் மறுபடியும் உங்கிட்டதான். இந்த சாவிய வாங்கிக்க சுஜி. நீ போனதும் கண்ட தரித்திரங்களும் தங்கற கூடாரமாய்டுச்சு இந்த வீடு. அவ என்ன பிளான்ல உள்ள வந்துர்க்கான்னு தெரியல. அவளுக்கு முதல்ல கல்தா குடுத்து வெளில அனுப்ப வேண்டியது இனி உன் சாமர்த்தியம்.''

''கடைசி வரிகளை ரகசிய குரலில் சொல்லி நிறுத்தினாள். சற்று கழித்து கேட்டாள்.''

''ஆமா நீ உன் துணிமணிகள் எல்லாம் கொண்டு வந்துட்ட இல்ல? மாடி ரூம் கிளீன் பண்ணி வெச்சிருக்கும். ஏதாவது சாப்ட்டயா? டிபன் கொண்டு வரச் சொல்லவா?''

''இல்ல வேணாம் ஆண்ட்டி நா உடனே போணும்.''

''என்னம்மா போணுங்கற?''

''அதில்ல ஆண்ட்டி... அப்பா அம்மாவைப் பார்த்து ஏழெட்டு மாசமாச்சு. சித்தி பொண்ணுக்கு கல்யாணம் வேற! போகாட்டி நல்லார்க்காது. வரேன்னு ப்ராமிஸ் வேற பண்ணிட்டேன். இன்னிக்கு நைட் பிளைட்ல கிளம்பறேன். ஒரு மாசத்துல திரும்பி வந்துடுவேன். அப்பறம் இங்கதானே வரப் போறேன்.''

''சாரதாவின் முகம் ஏமாற்றத்தில் வாடியது.

''அப்பறம் ஆண்ட்டி ஆகாஷை கவனிச்சுக்க ஒரு மேல் சர்வன்ட் போட்டுக்க வேண்டியது தானே? ஆள் கிடைக்கலன்னா நா வேணா ஒரு பையனை அனுப்பறேன். ஆயிரம் ரூபாகிட்ட கேப்பான். ஆனா பெட்பான் வெக்கறதுலேர்ந்து எல்லாம் பக்காவா பண்ணிடுவான். இப்ப யார் பெட்பான் வெக்கறாங்க? அவளா?''

''அது மட்டும் அவங்கப்பா தான்''

''அப்பொ ஆள் அனுப்பவா வேணாமா?''

''வெச்சா நல்லாதான் இருக்கும். ஆனா வீடு இப்பொ இருக்கற நிலைல பணத்தை பார்த்து பார்த்து செலவழிக்க வேண்டியிருக்கு. இது வரைக்கும் ஆகாஷ்க்கே பதினஞ்சு லட்சம் செலவு பண்ணியாச்சு. எனக்கு ரெண்டரை.''

''சுஜிதா விழி விரித்து திகைப்பைக் காட்டினாள்.''

''பிஸினஸ் வேற டல்லடிக்குது. வசூல் ஆகாம நிக்கற பணமே நிறைய இருக்கு. ஆகாஷோட வருமானம் சுத்தமால்ல. சங்கிதா கல்யாணம் வேற கௌரவமா நடந்தாகணும். கஷ்டம்னு பெரிசா இல்லாட்டாலும் அனாவசிய செலவுகளை குறைச்சுக்கறது நல்லது இல்லையா'' அதனாலதான் அந்த பொண்ணை நா போனாப் போகட்டும்னு விட்டு வெச்சிருக்கேன். நீ வந்துட்டா அவளையும் அனுப்பிடலாம்னு இருந்தேன்.''

''அப்டின்னா இந்த வீட்டு வேலைக்காரியவா நா இருக்கணும்னு எதிர்பார்க்கறீங்க?''

''சுஜிதா பட்டென்று கேட்க ஒரு வினாடி திடுக்கிட்டுப் போனாள் சாரதா.''

''அய்யோ நா அப்டி சொல்லலம்மா...''

''சாரி ஆண்ட்டி. அப்டியே நா இங்க வந்தாலும் சமையலுக்கு ஆள், ஆகாஷை கவனிச்சுக்க ஒரு ஆள் மத்த வேலைகளுக்கு ஒரு ஆள்னு இருந்தாதான் என்னால பொறுப்பேற்றுக்க முடியும். கால் நகத்துல கூட தூசி படாம வளர்ந்தவ. இந்த ஊர்ல தான் நா நடக்கறேன். அங்கெல்லாம் பத்தடி போணும்னாலும் கார்தான். வேலை செஞ்செல்லாம் எனக்கு பழக்கமில்ல.''

''அதுக்கென்ன. நீ வந்தப்பறம் ஆள் போட்ரலாம். அதுக்காக வராம இருந்துடாதே''

''சுஜிதா எழுந்து மறுபடியும் ஆகாஷிடம் வந்தாள்.''

''பாத்தயா அம்மாவை? ரொம்ப சந்தோஷப்பட்ருப்பாங்களே! நீ எப்ப வருவன்னு நச்சரிச்சுட்டாங்க!''

''இன்னிக்கு நைட் பிளைட்ல நா ஊருக்கு போறேன் ஆகாஷ்''

''என்ன சுஜி...? நா இப்டியிருக்கும்போது நீ ஜாலியா ஊருக்கு போறயே, நியாயமா?''

''கஸின்க்கு கல்யாணம் ஆகாஷ். கண்டிப்பா போகணும்''

''எப்பொ வருவ?''

''ஒரு மாசமாகும்னு நினைக்கறேன்.''

''அதுக்கு முன்னாடி வர முடியாதா? அவ்ளோ நாளாகுமா?''

''நா ஊருக்குப் போய் ஒரு வருஷமாகுது ஆகாஷ். ஏற்கனவே எல்லாரும் எம்மேல ரொம்ப கோவமா இருக்காங்க. இப்பொ

கல்யாணத்துக்கும் போகாட்டி சுத்தமா எனக்கு தலமுழுகிடுவாங்க''

''ஆகாஷ் எதுவும் பேசவில்லை. தான் சொல்லி அவள் கேட்கப் போவதில்லை என்பது புரிந்தபின் எதற்கு பேச வேண்டும் என்று மௌனமாயிருந்தான்.''

''ஓ.கே. ஆகாஷ். நா வரட்டுமா? முடிஞ்சப்பொ பேசறேன். உடம்பை பார்த்துக்குங்க'' சுஜிதா சம்பிரதாயமாக சொல்லி விட்டு கிளம்பினாள்.''

''அவள் போனதும் சம்பத் சாரதாவின் அறைக்கு வந்தார்.''

''பரவால்லயே நீ கூட நம்ம கஷ்டத்தை எல்லாம் புட்டுப்புட்டு வெக்கற! ஆனா அப்படியும் அவ புரிஞ்சுக்கிட்ட மாதிரி தெரியலையே. தன் பிறந்த வீட்டு பெருமையை பேசிட்டுப் போறா. மாசம் மூவாயிரம் ரூபா குடுத்து மூணு வேலைக்காரங்களை எல்லாம் வெக்க முடியாது தாயே! அவ இங்க வரவே வேணாம்னு சொல்லிடு''

''என்ன பேசறீங்க நீங்க..? அவ ஆகாஷைக் கட்டிக்கப்போறவ. அவ சௌகர்யத்தை நாம பார்க்க வேண்டாமா?''

''இதோ பார் சாரதா முதல்ல ஆகாஷ் எழுந்து நடக்கட்டும். அதுக்கு முன்னாடி அவனுக்கு கல்யாணமும் பண்ண முடியாது. இந்த பொண்ணு அவனை பண்ணிக்கவும் மாட்டா.''

''அவளுக்கு அவன் மேல இருக்கறது அசைக்க முடியாத காதல். அவன் எப்டியிருந்தாலும் பரவால்லன்னு கட்டிக்கத்தான் நினைப்பா. ஏன்னா காதல் அந்த அளவுக்கு சக்தி வாய்ந்தது.''

''அடேயப்பா..! டெஃபனிஷன்லாம் குடுக்கற! காதல் சக்தி வாய்ந்ததுதான். அதுல சந்தேகம் எல்லாம் இல்ல. ஆனா இந்த பெண்ணுக்கும் ஆகாஷ் மேல இருக்கறது என்ன மாதிரி காதல்ங்கறது தான் என் சந்தேகம்!''

''நீங்க என்னிக்கு அவளை நல்ல பொண்ணுன்னு சொல்லியிருக்கீங்க! உள்ள ஒண்ணு வெளில ஒண்ணுன்னு இல்லாம மனசுல தோண்றதைப் பளிச்சுனு சொல்ற டைப் அவ. அதுல என்ன தப்பு...! அவ சொல்றாப்பல கோல்டன் ஸ்பூனோட பிறந்தவதான் அவ தூசி படாம வளர்ந்திருக் கான்றது நிஜம் தானே! அந்தஸ்து பாக்கறவளார்ந்தா நம்மா ஆகாஷையா லவ் பண்ணுவா அவ..! எத்தனை கோடீஸ்வரன் கிடைப்பான் அவளுக்கு!''

''உங்கிட்ட பேசி பிரயோஜனமில்ல. கஷ்டப்படத் தெரியாதுன்னு சொல்றவ எதுக்குடி காதலிக்கணும்? வாழ்க்கைன்னா எப்பவும் டூயட்டே பாடிட்ருக்கலாம்னு நினைச்சாளாமா? இதே ஆக்ஸிடென்ட் கல்யாணத்துக் கப்பறம் அவனுக்கு நடந்திருந்தா இப்டிதான் எதுவும் செய்ய மாட்டேன்னு ஓடிடுவாளாமா..? கல்யாணத்துக்கு முன்னால எந்த உரிமையோட இங்க வந்து தங்கி இருந்தாளோ அதே உரிமையோட அவனை கவனிச்சுக்க அவளுக்கு மனசில் லேன்னா அப்பறம் எப்டி அவ காதலை நல்ல காதல்னு சொல்ல முடியும்?''

''அவதான் ஊருக்குப் போணும்னு சொல்றா இல்ல? ஏன் எப்பப்பாரு அந்த பெண்ணை தப்பு சொல்லிக்கிட்டே இருக்கீங்க! வேற வேலை எதுவும் இல்லையா உங்களுக்கு?''

''சம்பத் 'ச்சே போ' என்ற மனசோடு வெளியில் வந்தார். தான் சொல்வதெல்லாம் உண்மை என்பது அவளுக்குப் புரியாமல் இல்லை. ஆனாலும் அதை ஒப்புக்கொள்ள மறுக்கிறாள். ஈகோவா அல்லது சுஜிதாவிடம் உள்ள பயமா? அவளை விட்டால் இனி தன் பிள்ளையை யாரும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டார்கள் என்ற எண்ணமா? எதுவோ இருந்துவிட்டு போகட்டும். யார் என்ன திட்டம் போட்டாலும் எது நடக்க வேண்டும் என்றிருக்கிறதோ அதுதான் நடக்கும். அவை நடக்கும்போது இவள் நிஜம் புரிந்து கொள்வாள்! அவர் மேற்கொண்டு எதுவும் பேச விரும்பாமல் வெளியில் கிளம்பிச் சென்றார்.

விமானம் பறக்க ஆரம்பித்ததும் அப்பாடா என்றிருந்தது. ஆகாஷின் வீட்டுக்குப் போன போது அங்கிருந்த நிலையில் தலைசுற்றியது. அசைவற்று படுக்கையிலேயே கிடக்கும். ஆகாஷின் நிலை சுத்தமாய் பிடிக்கவில்லை. அவள் விரும்பிய ஆகாஷ் வேறு. இவன் வேறு. அவன் துடிப்பானவன். குறும்பானவன். கம்பீரமானவன். அழகிய இளைஞன். இவனிடம் சோகம் தவிர வேறு எதுவும் தெரியவில்லை. எவ்வளவு நாள் இவன் இப்படி இருப்பான்? சரியாகி விடுவானா? ஒரு வேளை இது சரியாகவே ஆகாது இறுதி வரை படுக்கைதான் என்றால் நான் என்ன செய்யப் போகிறேன். காதலா, சந்தோஷமான வாழ்க்கையா? காதலித்து விட்டோமே என்று படுக்கையில் கிடப்பவனை கல்யாணம் பண்ணிக் கொண்டு எவ்வித சுகமுமில்லாது இயந்திர வாழ்க்கை வாழ தன்னால் முடியுமா? தியாகி, உத்தமி என்ற பட்டங்கள் வேண்டுமானால் கிடைக்கலாமே தவிர வேறு என்ன சந்தோஷம் அதில் எதிர்பார்க்க முடியும்? குழம்பியது அவளுக்கு அப்படி ஒரு குழப்பத்தோடுதான் மும்பைக்கு வந்தாள் அவள்.

அங்கே அவர்களது மாளிகை விழாக்கோலம் பூண்டிருந்தது. பூமியில்தான் இருக்கிறோமா அல்லது தேவலோகத்திலா என்ற சந்தேகம் ஏற்பட்டது. அந்த அளவுக்கு அலங்கரிக்கப் பட்டிருந்தது வீடு. எல்லோரும் சந்தோஷமாக இருந்தார்கள். பணத்திலும் செழிப்பிலும், வசதிகளிலும் நீச்சலடித்துக் கொண்டிருந்தார்கள். தான் மட்டும் ஏதோ ஒரு தீவில் இத்தனை நாள் கஷ்டப்பட்டு விட்டாற்போல் தோன்றியது சுஜிதாவுக்கு. ஏன் அப்படி தோன்றுகிறதென்று தெரியவில்லை. சித்தியின் பெண் தேவதை மாதிரி இருந்தாள். அவளுக்கு கணவனாகப் போகிறவன் இளம் சினிமா டைரக்டராம். அவனே சினிமா ஹீரோ போல அழகாக இருந்தான். கண்களில் குறும்பு மின்னியது. அவன் தன் வருங்கால மனைவியை ஓரக்கண்ணால் கண்கள் சிரிக்க பார்த்தபோதெல்லாம்

சுஜிதாவுக்கு என்னமோ செய்தது. தான் எதையோ இழந்து விட்டாற்போல் தோன்றியது. அவன் படா பணக்காரன் என்று சொன்னார்கள். பணமும் பணமும் ஒன்று சேரும் கோலாகலம் அந்த வீட்டின் மூலை முடுக்கெல்லாம் தெரிந்தது.

''அம்மா அவளிடம் ஆதங்கமாய்ப் பேசினாள்.''

''நீ எப்டி இருக்க தெரியுமாடி? உன்னை நீயே கண்ணாடில பாத்துக்கறயா இல்லையா? வெய்யில்ல வீசிப்போட்ட ஆப்பிள் மாதிரி சுருங்கி வெதும்பிப் போய்ட்டயே. என்னடி ஆச்சு உனக்கு? ஊர் விட்டு ஊர் போய் படிக்க வேணாம்னா கேட்டயா? இங்க ராணி மாதிரி அலுங்காம குலுங்காம இருக்கறதை விட்டுட்டு..! மத்தவங்களை எல்லாம் பார்த்த இல்ல? தகதகன்னு எப்டி இருக்காங்க பார் ஃப்ரெஷ்ஷா! அவங்கள்ளாம் பெரியவங்க பேச்சை மதிக்கறவங்க. அதான் அப்படியிருக்காங்க! உன்னை மாதிரி ஒத்தை கார் வெச்சிருக்கற சின்ன பணக்காரன் பின்னால சுத்தினா என்ன ஆவும்னு அவங்களுக்கு தெரியும். ஆனா உனக்கெங்க தெரியுது? உன் கண்ணைத்தான் எதுவோ மறைச்சிருக்கே! யார் யார் தலையெழுத்து எப்டியோ அப்டித்தான் இருக்கும். மாத்திடவா முடியும்? என்னமோ செய்! அப்பறம் உன்னோட அந்த ஆள் எப்டியிருக்கான்? எப்ப கல்யாணம்? அதைச் சொல்லிட்டா நாங்க சொன்னபடி பணமும் சீரும் அனுப்பிட்டு தலை முழுகிடுவோம்.''

''சுஜிதா எதுவும் சொல்லாமல் எழுந்து சென்றாள். அம்மாவின் பேச்சு அவளைக் குத்திக் குதறியிருந்தது. திருமணமாகும் வரை உறவு தொடரும் என்று அவர்கள் சொல்லியிருந்ததால்தான் இந்த கல்யாணத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறாள். இல்லாவிட்டால் இந்த பக்கம் கால் வைத்திருக்கக் கூட முடியாது. ஆகாஷ் நன்றாக இருந்த வரையில் எதுவும் தெரியவில்லை அவளுக்கு. தன் வீட்டில் பணம், செல்வாக்கு, அன்பு எதைப் பற்றியும்

நினைக்கவில்லை. காதல் கண்ணை மறைத்து தான் இருந்தது. இப்போது அவனும் படுக்கையில் என்றான பிறகு பிறந்த வீட்டிலும் ஒதுக்கப்பட்டு காதலிலும் பிடிப்பிழந்து போய் அனாதையாகி விடுவோமோ என்ற பயம் ஏற்பட்டது. எல்லோரும் நன்றாயிருக்க ஏன் நான் மட்டும் கஷ்டப்பட வேண்டும் என்று தோன்றியது. எல்லாமாய் சேர்ந்து அழுகை வர அவள் தனிமையை விரும்பி தன் அறைக்கு ஓடினாள். அவள் சென்ற அடுத்த நிமிடம் அப்பா உள்ளே வந்த அம்மாவை முறைத்துப் பார்த்தார்.''

''இப்டியா பேசுவ அவகிட்ட?''

''பின்ன எப்டி பேச?''

''அவளே இப்ப நொந்து போய் வந்திருக்கா தெரியமில்ல. அந்த பையனுக்கு ஆக்ஸிடென்ட் ஆகி முதுகெலும்புல அடி. இனி எழுந்து நடக்கறது கஷ்டம்னு எல்லா டாக்டரும் கை விட்டுட்டாங்க. இப்ப அந்த பையன் படுத்த படுக்கைல''

அம்மா அதிர்ந்தாள். ''இதெல்லாம் எப்டி உங்களுக்கு...?''

''இவளைப் பத்தி விசாரிச்சுக்கிட்டுதான் இருக்கேன். விட்ரவா முடியும்? இப்ப அந்தப் பையன் குடும்பம் ஏகப்பட்ட லட்சங்களை செலவழிச்சும் பிரயோஜனமில்லாம முழி பிதுங்கி நிக்குது. இந்த நிலைல அவங்க இருக்கும்போது எப்டி இவளை அவனுக்கு கட்டிக் கொடுக்க முடியும்?''

''ஆனா அவதான் பிடிவாதமா...''

''அதெல்லாம் அப்பொ! இப்பொ குழம்பிப் போயிருக்கா.. இந்த குழப்பம்தான் நமக்கு லாபம். இந்த நேரத்துல நாம பேசற விதமா பேசினா நிச்சயம் அவ மனசு மாறும். இந்த நேரத்துல இங்க வந்து மத்தவங்க சந்தோஷத்தையும், எல்லாரும் நல்லார்க்காங்கன்னும் கண்கூடா பார்த்தாலே, அவ மனசு தான் எவ்ளோ மோசமான வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்திருக்கோம்னு புரிஞ்சுக்கும். அதனாலதான்

அவளை கல்யாணத்துக்கு கண்டிப்பா வந்துடுன்னு நானே போன் பண்ணி கூப்ட்டேன். அவளோட அக்கா தங்கைகள், அண்ணன்கள்னு எல்லாரும் எவ்ளோ வசதியா வாழறாங்கன்னு அவ பார்க்க பார்க்க நம்ம வேலை சுலபமாய்டும்.''

''அப்பொ... ஏதோ திட்டத்துல தான் அவளை வரவழைச்சிருக்கீங்கன்னு சொல்லுங்க.''

'போகப் போகப் பார்!'' அப்பா சிரித்தார்.

ஒரு பெண்ணிடம் அவள் அழகாயிருக்கிறாள் என்று ஒரு தடவை சொல்லுங்கள். குட்டிச்சாத்தான் அதை ஒரு நாளைக்கு நூறு முறை அவள் காதுக்குள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும்.

-:. பிரெஞ்சுப் பழமொழி.

சங்கீதாவின் திருமணம் எளிமையாய் மிக நெருங்கிய நண்பர்கள், உறவினர்களின் முன்னிலையில் நடந்து முடிந்தது. மெடிகல் சர்ட்டிபிகேட் அது இது என்று கெடுபிடி செய்த சாரதாவால் இப்போது எதுவும் செய்ய முடியவில்லை. அன்று குடும்பம் இருந்த நிலை வேறு. இன்று இருக்கும் நிலை வேறு. இன்றைய நிலையில் பெண்ணுக்கு கல்யாணமானால் போதும் என்றிருந்தது. ஆனால் அது இவ்வளவு எளிமையாக நடக்கும் என்று அவள் நினைக்கவில்லை. அவள் ஏதேதோ கற்பனை செய்து வைத்திருந்தாள். அவைகள் நிறைவேறாமலே போய்விட்டது. சுஜிதாவின் பாராமுகமும், ஒதுங்கலும் அவள் அடி மனதைப் பிராண்டிக் கொண்டிருந்தது. ஆகாஷின் உடல்நிலை அதைவிட பிராண்டியது.

எப்படியிருந்த தன் குடும்பம் எப்படியாகிவிட்டது என்று உள்ளூர உருகினாள். அவள் பகட்டு, பந்தா, திமிர், கர்வம் எல்லாவற்றிற்கும் பலத்த அடி விழுந்திருந்தது. வலுவிழந்த புயல் மாதிரியாகியிருந்தாள். ஓரளவுக்கு எழுந்து நடமாட ஆரம்பித்திருந்தாலும் முன்போல் வேலை செய்ய இயலவில்லை. எனவே திட்டமிட்டபடி சரண்யாவை வீட்டை விட்டு வெளியேற்ற முடியவில்லை. அதே நேரம் அவள் அந்த வீட்டில் சகல உரிமைகளையும் எடுத்துக் கொண்டு விடுவாளோ என்ற முயமும் இருந்தது. அதற்கான தகுதி அவளுக்கு இல்லை என்றே அவள் இன்னமும் நினைத்தாள். அவள் தன் வீட்டின் அத்தனை வேலைகளையும் செய்கிறாள் என்ற இரக்கமெல்லாம் ஏற்படவேயில்லை. மூன்று வேளை உணவும், தங்க இடமும் கொடுத்திருக்கிறோம். செய்யட்டுமே! என்றுதான் நினைத்தாள். சமயம் கிடைத்த போதெல்லாம் வார்த்தைகளை திராவகத் தூறலாய் தெளிக்கவும் தவறவில்லை.

''இரண்டு முறை சரண்யா அந்த வார்த்தைகளில் வலி தாங்க முடியாமல் வீட்டை விட்டு கிளம்பத் தயாரானாள். சம்பத் சமாதானப்படுத்த இருதலைக் கொள்ளி எறும்பாய் அவரைப் பார்த்தாள்.''

''ஸோ... நீ போற...!''

''வருவேன் மாமா. தினமும் வருவேன். ஆனா தங்க மாட்டேன், சாப்ட மாட்டேன்.''

''வேலைக்கு வரா மாதிரி வருவேன்ற!''

''பின்னே... மாமி எனக்கு சம்பளம் தராங்க இல்ல...? கை நீட்டி சம்பளம் வாங்கறவ ரொம்பவும் உறவு கொண்டாடக் கூடாது!''

''ஒரு நிமிஷம் இரு. இதோ வந்திடறேன்'' சம்பத் அவளை வாசலிலேயே நிற்க வைத்துவிட்டு சாரதாவிடம் வந்தார்.''

''ஆக அந்த பெண்ணை ஒரு வழியா வெளிய அனுப்பறதுன்னு தீர்மானிச்சுட்ட அப்டித்தானே..?''

''நானா போகச் சொன்னேன்? அவளா கிளம்பினா, போகாதடின்னு கால்ல விழுவேனாக்கும்...!''

''யாரும் யார் கால்லயும் விழ வேணாம். நா இப்பொ வந்தது உன்னை அவ கால்ல விழச்சொல்ல இல்ல''

''பின்ன...?''

''அவ கடனைத் தீர்த்துட்டு அப்பறம் அவளை வெளிய அனுப்புன்னு சொல்ல!''

''சாரதா புருவம் சுருக்கிப் பார்த்தாள்.''

''என்ன பாக்கற...?''

''அவ வேலை செய்யறதுக்கு நாந்தான் சம்பளம் கொடுக்கறேனே. அப்பறம் என்ன கடன்..?''

''நீ உயிரோட நடமாடறதுக்கு நா வாங்கின கடனை அடைக்க வேணாமா?''

''யார்ட்ட வாங்கினீங்க?''

''சாட்சாத் சரண்யாகிட்டதான் பணம் வாங்கியிருக்கேன்.''

''சாரதா அதிர்ச்சியோடு நம்ப முடியாமல் அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.''

''ஒரு ரூபா ரெண்டு ரூபா இல்ல. மூணு லட்சம் குடுத்திருக்கா. அவப்பா சாவுக்கு அவளுக்கு வந்த நஷ்டஈடு. அதைத் திருப்பிக் கொடுக்காம அவளை வீட்டை விட்டு அனுப்பினா, பாவம் மட்டும் சேராது. மோசடிப் பேர்வழிகள்ங்கற பட்டமும் கிடைக்கும். பரவால்லன்னா அனுப்பு.''

''சாரதா விக்கித்து நின்றாள்.''

''இவ்வளவு பணம் இவள் கொடுத்திருக்கிறாளா..? இவளிடம் கை நீட்டி பணம் வாங்கும் அளவுக்கு தன் நிலை தாழ்ந்துவிட்டதா..? உள்ளுக்குள் குமுறிக்குமைந்தாள்.''

''சொல்லப்போனா நீ கொடுக்கறது சம்பளமில்ல. வட்டி! வட்டிக்கும் கூட காணாது! சம்பளம் கொடுக்கறாளாம் சம்பளம்..! பணக்காரத் திமிர் இன்னும் கூட குறையலடி உனக்கு''

''சம்பத் வெளியில் வந்தார். சரண்யா விழியோரம் நீர்த்துளிகளோடு ஆதங்கம் பரவிய முகத்துடன் மாமாவைப் பார்த்தாள்.''

''நல்லா நாக்கைப் பிடுங்கிக்கறா மாதிரி கேட்டுட்டு வந்துட்டேன்!''

''இதைவிட நீங்க என்னை கொன்னிருக்கலாம் மாமா''

''அவர் அடிபட்டாற்போல் அவளைப் பார்த்தார்.

''பணம் கொடுத்துட்டா நா பெரிய ஆள் ஆய்டுவேனா? இல்ல கடன்தான் தீர்ந்துடுமா?''

''நீ சும்மா இரு சரண்''

''இல்ல மாமா, நீங்க அப்டி பேசியிருக்கக் கூடாது. யாரையும் குத்திக்காட்டறதுக்கோ, புண்படுத்தறதுக்கோ நாம பிறக்கல. குறுகின வாழ்க்கைல முடிஞ்ச வரை எல்லாரையும் நேசிக்கத் தெரிஞ்சுக்கணும். இதான் என் பாலிஸி. பாவம் மாமி அவங்களை தலைகுனிய வெச்சுட்டீங்களே..! இனிமே எப்டி நா சகஜமா வந்து போவேன் இங்க?''

''வர வேண்டாம்... மாமியின் குரல் பின்னால் ஆக்ரோஷமாகக் கேட்க பதறிப் போய் திரும்பினாள்.''

''எவ்ளோ குடுத்த நீ...? மூணு லட்சமா..? இந்தா இதுல நாலு லட்சத்துக்கு சமானமான பொருள் இருக்கு. நகை, எம்ஃப்டி, எம்பேர்ல இருக்கற நிலங்கள். எல்லாம் நாலு லட்சம் தேறும். எடுத்துக்கிட்டு போய்டு''

''மாமி நா...''

''பேசாதே...! போய்டு...! இனிமே இங்க வரவேணாம். நீ உதவி செய்யாட்டா நாங்க ஒண்ணும் செத்துட மாட்டோம். காசை விட்டேறிஞ்சா ஆயிரம் பேர். இன்னும் பத்து இருபது நாள்ள என் மருமக வந்துடுவா. அவ வந்துட்டா அவ கவனிச்சுப்பா ஆகாஷை! உன்னை விட நல்லாவே!''

''சம்பத் திகைத்து நிற்க, சரண்யா பரிதாபமாக அவரைப் பார்த்தாள். ''வாங்க உள்ள...'' சாரதா அவரை இழுத்துக் கொண்டு வாசல் கதவை சார்த்தியபடி விறுவிறுவென்று உள்ளே போனாள். கையிலிருந்த பொருட்கள் கனக்க, என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறி நின்றாள் சரண்யா.''

''திடுதிப்பென்று வீட்டை விட்டு அனுப்பினால் எங்கே செல்வது? எங்கு தங்குவது?''

''சற்று நேரத்தில் மீண்டும் கதவு திறந்தது. சம்பத் அவளுடைய துணிமணிகள் அடங்கிய சூட்கேஸோடு வெளிப்பட்டார்.''

''தப்பு எம்பேர்லதான் சரண். அவசரப்பட்டுட்டேன். ஆனா அவ உடம்பு இப்ப இருக்கற நிலைல ரொம்ப முரட்டுத்தனமா பேசவும் முடியல. கொஞ்சம் விட்டுப்பிடிப்போம். அவளே உன்னை இந்த வீட்டுக்கு கூப்டுவா பார். அதுவரை சங்கீதா வீட்ல போய் இருந்துக்க. நா போன் பண்ணி சொல்லிடறேன்.''

''இதையெல்லாம் எப்டி மாமா... மாமிதான் அவசரப்பட்டுக் குடுக்கறாங்கன்னா அதுக்காக நானும் இதையெல்லாம் எடுத்துட்டு போயிட முடியுமா? அவங்களுக்குத் தெரியாம இதை உங்க ரூம்ல கொண்டு வைங்க...'' சரண்யா வற்புறுத்தி அவற்றை அவரிடம் கொடுத்துவிட்டு வெளியில் வந்தாள்.

சித்தி பெண்ணின் திருமணம் கனஜோராக நடந்தது. கோடீஸ்வரன் வீட்டு திருமணம் என்பது ஒவ்வொரு மூலை

முடுக்கிலும் தெரிந்தது. பணம் பாதாளம் வரை பாய்ந்திருந்தது. உலக அளவில் பணக்காரர்கள் விலை உயர்ந்த கார்களில சர் சர்ரென்று வந்திறங்கி தங்கமும் வைரமுமாய் லட்சக்கணக்கில் பரிசுகள் வழங்கிவிட்டுச் செல்ல பிரம்மித்துப் போனாள் சுஜிதா. அவள் குடும்பத்து செல்வமும் செல்வாக்கும் அவளுக்குத் தெரியாததல்ல என்றாலும் காதலென்ற பெயரில் தான் ஒரு தனித் தீவில் சேர்ந்து விட்டதால் எல்லாமே பிரம்மிப்பாயிருந்தது அவளுக்கு. வித விதமான உடைகளில் நவ நாகரீகமாய் வந்து வாழ்த்திய திரையுலக பிரமுகர்களும் நடிகைகளும், மேல் மட்ட நாகரீக மனிதர்களின் கூட்டமும் அவளைப் பார்த்து சிரிப்பது போல் தோன்றியது. இதுதான் சொர்க்கம், காதலென்ற பெயரில் நீ சேரப்போகும் இடம் நரகம் என்று சொல்லாமல் சொல்வது போலிருந்தது.''

''ஹலோ...'' பின்னால் ஒரு கரகரப்பான குரல் கேட்க திரும்பினாள். ஆறடி உயரத்திற்கு கனகம்பீரமான இளைஞனொருவன் புன்னகையோடு நின்றிருந்தான்.

''ஐ ஆம் சந்தீப். விஷ்வா ஆன்லைன்னு கேள்விப்பட்ருப்பீங்களே, கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் நிறுவனம். அதன் ஆர்கனைஸர் அண்ட் மானேஜிங் டைரக்டர் நான்தான்.''

''ஓ...!'' சுஜிதா விழி விரித்து அவனைப் பார்த்தாள்.

''இவ்வளவு அழகான கம்பீரமான ஆணை இதுவரை அவள் பார்த்ததில்லை. பணத்தால் ஏற்பட்ட மிடுக்கா, அல்லது இந்த மிடுக்கினால் இவ்வளவு பணமா...? எவ்வளவு தான் கட்டுப்படுத்திக் கொண்டாலும் கண்கள் அலை பாய்ந்தது.''

''யூ லுக் வெரி பியூட்டிஃபுல் மிஸ் சுஜிதா. இதைச் சொல்லத்தான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். எதையும் வெளிப்படையாக சொல்லிவிடுவது என் சுபாவம்'' அவன் புன்னகையோடு நகர சுஜிதா திகைப்போடு

அவனையே பார்த்தாள். அவன் சென்ற இடமெல்லாம் கண்கள் பின் தொடர்ந்தது. இவ்வளவு அழகான ஆண் பாராட்டுமளவுக்கு அவ்வளவு அழகாகவா இருக்கிறேன் நான்! வியந்தபடி ஆளுயரக் கண்ணாடியில் திரும்பித் திரும்பி தன்னைத்தானே பார்த்துக் கொண்டாள். அவன் சொல்லி விட்டதாலேயே அடுத்த வேளைக்கான உடையை இன்னும் நேர்த்தியாய் அணிந்து, இன்னும் அழகாய்த் தன்னை அலங்கரித்துக் கொண்டு நடமாடினாள். அவன் பார்வைக்காகவும், பாராட்டுக்காகவும் தவித்தாள். ஏதோ ஒரு புது லோகத்தில் பறப்பது போலிருந்தது. எல்லாமே புதுசாய்த் தெரிந்தது. சந்தீப் அவ்வப்போது மின்னலாய்த் தென்படுவான். அவளிடம் தணிந்த குரலில் ஏதாவது சொல்லிவிட்டுப் போனான். புளகாங்கிதமடைந்தாள், அவள். கம்பீரமான, அழகான, கோடீஸ்வரனான ஒரு ஆண் தன்னை கவனிக்கிறான் என்ற உணர்வு ரத்தம் முழுக்க பரவி ஒருவித பரவசத்தை ஏற்படுத்தியது. வடக்கத்திய முறையில் திருமணம் நடந்ததால மாற்றி மாற்றி ஏதோ சடங்குகளும், விருந்தும் கேளிக்கையுமாய் அரண்மனை மாதிரியிருந்த அந்த வீடு அமர்க்களப்பட்டது. சென்னை, ஆகாஷ், சாரதா, சம்பத் எல்லாவற்றையும் மறந்து அந்த ஆடம்பர சூழ்நிலை கொடுத்த சந்தோஷத்தில் ஆழ்ந்து போனாள்.

''என்னம்மா ரொம் சந்தோஷமார்க்க போல்ருக்கு...!'' அப்பா கிட்டே வந்து கேட்டார்.

''ம்... ரொம்ப..!'' அவள் இயல்பாகச் சொன்னாள்.

''தெரியுது. எல்லா சந்தோஷத்தையும் முடிஞ்ச வரை அனுபவிச்சுக்க, நாளைக்கு கல்யாணம்னு ஆகி அந்த சின்ன வீட்டுல அடைஞ்சுட்டன்னா இப்டியெல்லாம் சந்தோஷமா இருக்க முடியாதில்ல...?''

''சுஜிதாவின் முகம் சுருங்கியது.''

''அப்பா சாதாரணமாய்ச் சொல்லுகிறாரா, இளக்காரமாய்ச் சொல்லுகிறாரா? என்று புரியாமல்அவரை வெறித்துப் பார்த்தாள்.''

''என்னம்மா முகம் ஒரு மாதிரியாய்டுச்சு. நா ஏதாவது தப்பா சொல்லிட்டேனா...?''

''ம்... ஏன்... என் சந்தோஷத்துக்கென்ன?''

''ஓ...! தாராளமா நீ சந்தோஷமாதான் இருப்ப. எனக்கு ஒரு சந்தேகமும் இல்ல. படுத்த படுக்கையா புருஷன், பைபாஸ் ஆன மாமியார், செலவுகளை சமாளிக்க முடியாம தலைய பிச்சுட்ருக்கற மாமனார் இவங்களுக்கு நடுல சந்தோஷத்துக்கு பஞ்சமா இருந்துடப் போறது...?''

''சுஜிதாவின் முகம் அஷ்டகோணலாய் மாறியது. அப்பா கிண்டல்தான் செய்கிறார். அவருக்கு எப்படி இதெல்லாம் தெரிந்தது?... என்கிற அதிர்ச்சியோடு அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.''

''ஷாக்காய்ட்ட...! எனக்கெப்டி இதெல்லாம் தெரியம்னுதானே?''

''சுஜிதா எச்சில் விழுங்கினாள்.''

''பிள்ளைக்கு வைத்தியம் பார்க்க லட்சம் லட்சமா உங்க வருங்கால மாமனார் செலவழிச்சுட்ருக்கார். பணம் பத்தாம ஒண்ணு ரெண்டு நிலங்களை வந்த விலைக்கு வித்தார். வாங்கினது வேற யாருமில்ல. நாந்தான்''

''சுஜிதா திகைப்போடு பார்த்தாள்.''

''உனக்கு சீதனமா தரதுக்காக வாங்கல. நல்ல இடம் சீப்பா விலைக்கு வந்துச்சேன்னு வாங்கினேன். கஷ்டப்படணும்னு உன் தலைல எழுதியிருந்தா யாரால என்ன செய்ய முடியும்? ஏதோ இங்க இருக்கற வரை சந்தோஷமா இரு. வைகிளாஸ் சாப்பாடு சாப்டு. நல்ல நல்ல டிரெஸ் போட்டு அனுபவி. அங்க போய்ட்டா நர்ஸ் டிரெஸ்தான் போடணும். இல்ல வேலக்காரி டிரெஸ்...!''

அப்பா நிறுத்த சுஜிதாவின் முகம் பேயறைந்தாற் போலாயிற்று. அப்பா தொடர்ந்தார்.

''நா கவனிச்சேன் சுஜி. அந்த சந்திப்பை பார்க்கும்போது உன் முகம் பிரகாசமாறதையும் அவன் பின்னால உன் கண்கள் அலைபாயறதையும் கவனிச்சேன். இன்னோண்ணு சொல்லவா...? அவன்தான் நாங்க உனக்கு பார்த்த மாப்பிள்ளை. இவனைத்தான் நீ வேண்டாம்னு உதறிட்டு ஆகாஷ் பின்னால போன..!''

''ஸ்தம்பித்துப் போனாள் சுஜிதா.''

''இப்பவும் ஒண்ணும் கெட்டுடல சுஜி. ஆண்டவன் உனக்கும் சந்தீப்புக்கும்தான் முடிச்சு போட்டு வெச்சிருக்கான் போல்ருக்கு. அதனாலதான் விபத்துங்கற பேர்ல ஆகாஷை விலக்கிட்டான். எல்லாத்தையும் கெட்ட கனவா நினைச்சு மறந்துடு. அதான் உனக்கு நல்லது. காதல் எல்லாம் சும்மா ஃபேன்டஸி சுஜி. சினிமாலதான் அது ஜாலியா காட்டப்படும். நிஜ வாழ்க்கை வேற சுஜி. கஷ்டம்னு தெரிஞ்சு யாராவது மாட்டிப்பாங்களா...? மடத்தனம் இல்லையா அது...? உன் மேல எங்களுக்கில்லாத பாசமும் அக்கறையும் வேற யாருக்கு இருக்கும் சொல்லு. நாங்க உனக்கு கெடுதல் செய்வோம்னா நினைக்கற? யோசிச்சு பார் சுஜி. இதுக்கு மேல சொல்ல எதுவுமில்ல. சந்தீப் எப்டி பார்த்தாலும் ஆகாஷை விட பல மடங்கு உயர்ந்தவன். படிப்பு, பணம், அந்தஸ்து, கம்பீரம், குணம் எதுக்கும் அவன்கிட்ட குறைவில்ல. இன்னும் கொஞ்ச நாள் கூட இங்க இருந்தன்னா உன் மனசு முழுக்க முழுக்க ஆகாஷ்கிட்டேர்ந்து விடுபட்டு சந்தீப்கிட்ட சரண்டராய்டும். நா சும்மா சொல்லல சுஜி. இது நடக்கறதா இல்லையான்னு பார்.''

அப்பா நிறுத்த.. சுஜிதா ஆணியறைந்தாற்போல் நின்றாள். அப்பா சொல்வது போல் நடந்து விடுமா...?

புத்திசாலியான பெண் ஒரு ஆடவனின் மனதைக் கவர்ந்து விடுகிறாள்; அழகான பெண் ஆணை மயக்குகிறாள்; குணமுள்ள பெண் ஆணின் அறிவை ஒளிவீசச் செய்கிறாள். பாசமும் பரிவுமுள்ள பெண் அவனை தனக்கே சொந்தமாக்கிக் கொள்கிறாள்.

-அரிஸ்டாட்டில்.

"பசி வயிற்றைக் கிள்ளியது. ஆகாஷ் பொறுமையிழந்து நாலைந்து முறை அம்மாவை அழைத்து விட்டான். அதன் பிறகும் அரைமணி கழித்துதான் சாரதா டிபனோடு வந்தாள்."

"என்னம்மா இவ்ளோ நேரம்?" எரிச்சலோடு கேட்டான்.

"நா என்ன செய்யட்டும்...? ஆளா தேளா? முந்தி மாதிரி முடியுமா என்ன?"

"அது சரி அத்தனை வேலையும் பொறுமையா செஞ்சுட்ருந்த சரண்யாவை யார் வெளில அனுப்பச் சொன்னாங்க? நல்ல நாள்ளயே உனக்கு வேலைக்காரி கிடைக்கறது குதிரைக் கொம்பு. இப்ப இருக்கற நிலைக்கு எந்த வேலைக்காரி வருவா?"

"ஆரம்பிச்சுட்டயா... த பார்ரா ஆகாஷ். வேலைக்காரி கிடைக்காட்டி போறா. அதுக்காக நா ஒண்ணும் அவ கால்ல விழ மாட்டேன்."

"வேணாம். இப்டியே விறைச்சுக்கிட்டு இரு! என்னிக்குத் தான் நீ மனுஷங்களைப் புரிஞ்சுக்கப் போறயோ?"

"இன்னும் ஒரு வாரம்தாண்டா. சுஜி வந்துடுவா. அப்பறம் எனக்கென்ன... கஷ்டம்.. அவ கவனிச்சுப்பா உன்னை."

''அம்மா சொல்ல ஆகாஷ் மௌனமானான். சுஜிதாவின் வரவை அவன் மனமும் ஆவலோடு எதிர்பார்ப்பது நிஜம்தான் என்றாலும் இந்த ஒரு மாதத்தில் ஒரு முறை கூட அவள் அவனோடு தொலைபேசியில் தொடர்பு கொள்ளவில்லை என்ற உண்மை அவனை உறுத்தியது. அவனுக்காக பணம், அந்தஸ், பெற்றோர் அனைத்தையும் ஒதுக்கிவிட்டு வந்தவளுக்கு இப்போது என்னவாயிற்று? ஒருவேளை இனி அவன் எழுந்து நடமாட மாட்டான், இவனால் நமக்கென்ன சந்தோஷம் என்று நினைக்கிறாளா..? அல்லது போன இடத்தில் அவளது பெற்றோர் அவளை திரும்பிச் செல்லவிடாது சிறை வைத்து விட்டார்களா...? என்னதான் ஆயிற்று அவளுக்கு என்பதை எப்படி அறிவது...? மும்பைக்கு போன் பண்ணி பேசினால்...? முன்பொரு முறை அவள் கொடுத்த நம்பர் டைரியிலிருந்தது. தலையணைக்கு அடியிலிருந்த அந்த டைரியை எடுத்து நம்பர் பார்த்து அழுத்தினான். சிறிது நேர முயற்சிக்குப் பிறகுதான் லைன் கிடைத்தது.கரகரப்பாக பேசிய ஆண் குரலிடம் சுஜிதா வேண்டுமென்று ஆங்கிலத்தில் பணிவோடு கேட்டான்.''

''நீங்கள் யாரென்று அறியலாமா?''

''சென்னையிலிருந்து ஆகாஷ் என்று சொல்லுங்கள்.''

''மறுமுனை ஒரு வினாடி மௌனித்தது. பிறகு தொடர்ந்து பேசியது.''

''நான் அவளுடைய அப்பா பேசுகிறேன்.''

''நமஸ்தே சார்.''

''நமஸ்தே. உங்கூட நா முதல்ல பேசிடறேனே''

''என்ன விஷயம் சார்...?''

''உங்க உடம்பு எப்டி இருக்கு ஆகாஷ்? எழுந்து நடகக் ஆரம்பிச்சுட்டீங்களா?''

''இல்ல சார்...''

''டாக்டர்ஸ் என்ன சொல்றாங்க...?''

''அவங்களும் எல்லா முயற்சியும் செய்துக்கிட்டுதான் இருக்காங்க.''

''ஆக நீங்க எழுந்து நடப்பீங்களான்னு உங்களுக்கே சந்தேகமா இருக்கு அப்டித்தானே...?''

''அது... இல்ல...''

''ப்ளீஸ் மிஸ்டர் ஆகாஷ். நா அவ தகப்பன் என் கோணத்துலேர்ந்து இந்த விஷயத்தை பாருங்க. என் உணர்வுகளைப் புரிஞ்சுப்பீங்க. சுஜிதாவை கொஞ்ச நேரம் உங்க மகளா நினைச்சுக்குங்க. கட்டிக் குடுப்பீங்களா...? உங்களை மாதிரி படுத்த படுக்கையா இருக்கறவனுக்கு கட்டிக்குடுப்பீங்களா...?''

''ஆகாஷ் திகைத்தான். என்ன பதில் சொல்வது இதற்கு..? என்று அவன் யோசிப்பதற்குள் அவர் தொடர்ந்தார்.''

''காதல்னா என்ன ஆகாஷ்? ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கறதுதானே...? சந்தோஷமா இருக்கறதுக்காகத் தானே கல்யாணம்!''

''உண்மைதான் சார்.''

''இப்ப சொல்லுங்க. அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்கன்னா, அவ அங்க சந்தோஷமா இருப்பான்னு நினைக்கறீங்களா...? தாலி கட்டக்கூட எழுந்து உட்கார முடியாத நிலையில இருக்கறவனைக் கட்டிக்கிட்டு எம்பொண்ணு எப்டி ஆகாஷ் சந்தோஷமா இருப்பா...? உங்க காதல்க்கு நா சம்மதிச்சேன். எப்டியோ போன்னு வேண்டா வெறுப்பா ஒத்துக்கிட்டேன். அதுக்கு காரணம் அந்தஸ்துல குறைஞ்சவரா இருந்தாலும் ஆள் நல்லா இருக்கீங்கன்னுதான். இப்ப அதுவும் இல்லாம போய்டுச்சு. உங்களை கெஞ்சி கேட்டுக்கறேன் ஆகாஷ் எம்பொண்ணை தொந்தரவு பண்ணாதீங்க. ஒரு தகப்பனா அவளை நல்ல நிலமைல

பாக்கணும்னு ஆசைப்படறேன். அவளை உண்மையா நேசிச்சீங்கன்னா அவ நல்லார்க்கட்டும்னு விட்ருங்க. உங்க ட்ரீட்மெண்ட்டுக்காக எவ்ளோ வேணாலும் பணம் அனுப்பி வெக்கறேன் பதிலுக்கு. உடம்பு நல்லானப்பறம் உங்களுக்கேத்த பொண்ணா பார்த்து கட்டிக்கிட்டு நல்லாருங்க. வேற ஒண்ணுமில்லையே வெச்சுடவா...?''

''ஆகாஷ் வியர்வையைத் துடைத்துக் கொண்டான். துக்கம் தொண்டையை அடைத்தது. ஒரு தகப்பனாக அவர் பேசியதெல்லாம் நூற்றுக்கு நூறு ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்தான். ஆனா இதே நிலை அவளுக்கு ஏற்பட்டிருந்தால், தன் அப்பா இப்படி பேசியிருப்பாரா என்று யோசித்தான். அப்பா பேசுவது இருக்கட்டும். தான் அவளை ஒதுக்கி விடுவோமா..? நிச்சயம் மாட்டோம் அல்லவா? அதே எண்ணம்தானே அவளுக்கும் இருக்க வேண்டும்! ச்சேச்சே அவளுக்கு நிச்சயம் இருக்கும். இவர் அவள் மீது வைத்திருக்கும் பெற்ற பாசம் அவளை அணை போட்டு தடுத்து நிறுத்தியிருக்கிறது. அதனால்தான் அவள் வரவில்லை. இனி வரவும் மாட்டாள். போகட்டும். எங்கிருந்தாலும் நன்றாக இருக்கட்டும். அவர் சொல்வது போல் அவனால் அவளுக்கு என்ன சந்தோஷம் கிடைத்துவிடும்...? கஷ்டப்படுத்தவா கல்யாணம் செய்து கொள்வார்கள்? ஆகாஷ் தன்னை சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றான். அதையும் மீறி அழுகை வந்தது. ஒரு தலையணையை முகத்தின் மீது வைத்து மறைத்துக் கொண்டு துக்கம் கரைய அழுதான்.

''ஆகாஷ்..'' அப்பாவின் குரல் கேட்க தலையணையிலேயே கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அதை நகர்த்தி அப்பாவைப் பார்த்தான்.

''என்னடா தலகாணிய முகத்துல வெச்சுக்கிட்டு...'' என்றபடி கிட்டே வந்தவர் கலங்கிச் சிவந்திருந்த அவன் கண்களைப் பார்த்ததும் பதறினார்.

''என்னடா... அழுதயான்ன...?''

''இல்லயே...''

''என்னடா ஆச்சு..? உன் கண்ணு சொல்றதே அழுதன்னு! எதுக்குடா...?''

''அப்பா பரிவோடு கேட்க, மீண்டும் கண்கள் உடைந்தது.''

''இப்டி படுக்கை போட்டுடுச்சேன்னு அழறயா..?''

''ப்ஸு...''

''பின்னே..? சுஜிதாவைப் பார்க்க முடியலைன்னா...? போன் பண்ணி பேசறதுதானே?''

''போன் பண்ணினேன்''

''என்ன சொன்னா...?''

''அவகிட்ட பேசல''

''பின்னே..?''

''அவங்கப்பாதான் பேசினார்'' ஆகாஷ் தட்டுத்தடுமாறி அவர் பேசியதை அப்பாவிடம் சொன்னான். அனைத்தையும் கேட்டு விட்டு அவர் பரிவோடு அவன் கேசத்தை தடவினார்.

''இது நா எதிர்பார்த்ததுதாண்டா ஆகாஷ்! எந்த தகப்பனும் தெரிஞ்சே தன் பெண்ணை கஷ்டத்துல தள்ளமாட்டான். போகட்டும் விடு. இதை ஜீரணிக்க கொஞ்சம் கஷ்டமா தான் இருக்கும். உண்மைகள் எப்பவுமே கசப்பாத்தானே இருக்கும். தெரியாதா உனக்கு...? அதையும் விட முக்கியமான உண்மை ஒண்ணு இருக்கு. யாருக்கு யார்னு இறைவன் முடிச்சுப் போடறானோ அதன்படிதான் இங்க எல்லாமே! நீ விரும்பறதை விட உன்னை விரும்பறவளை ஏத்துக் கறதுதாண்டா ஆகாஷ் புத்திசாலித்தனம். இந்த நிலைலயும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஒரு மனசு துடிச்சுட்ருக்குன்னு தெரியுமா உனக்கு?''

''அப்பா நிறுத்த ஆகாஷ் திகைப்போடு அவரைப் பார்த்தான்.''

''நம்ப முடியல இல்ல? ஆனா அதுதான் உண்மை''

''யா... யாருப்பா..?''

''சரண்யா...!''

''ஆகாஷ் அதிர்ந்தான். நம்ப முடியாமல் அவரைப் பார்த்தான்.''

''உன் மனசு சுஜிதாகிட்ட போகப்போகுதுன்ற ஜோசியம் தெரியாம சரண்யாக்கு நா நிறைய நம்பிக்கையைக் கொடுத்து அவ மனசுல காதல் கனலை மூட்டி விட்டுட்டேண்டா ஆகாஷ். அதுக்கப்பறம் சுஜிதாவைப் பத்தி தெரிஞ்சதும் நானே அணைக்க வேண்டியதா போச்சு. அவ தன் மனசை மாத்திப்பான்னு நினைச்சேன். ஆனா நா மூட்டி விட்ட நெருப்பு முழுசும் அணையல நீறு பூத்த நெருப்பாவே இருக்குன்னு சொன்னா நம்புவயா...? நீ 'ம்'னு ஒரு வார்த்தை சொல்லுடா. சரண்யாவை உனக்கு கட்டி வெக்கறேன்.''

''ஆகாஷ் எவ்வித உணர்ச்சியுமின்றி அவரைப் பார்த்தான்.''

''என்னடா யோசிக்கற? உங்கம்மா அவளை வீட்டை விட்டு அனுப்பிட்டாளே அவ எங்க போனாளோ... நா எங்க போய்த் தேடுவேனோன்னு யோசிக்கறயா? அவ எங்கயும் போகல. சங்கீதா வீட்லதான் இருக்கா. இப்ப சொல்லு போய்க் கூட்டிட்டு வரேன். நீ சப்போர்ட் பண்ணினாதான் இந்த விஷயத்துல உங்கம்மாவை என்னால முழுமையா எதிர்த்து ஜெயிக்க முடியும்.''

''அப்பா ப்ளீஸ்... நா குழம்பிப் போயிருக்கேன். எதையும் யோசிக்கிற மனநிலைல இல்ல நான்.''

''குழம்பினாதாண்டா தெளிய முடியும்? கவலைப்படாதே. நல்லா யோசி. யோசிச்சு ஒரு முடிவுக்குவர நிஜத்தை

புரிஞ்சுக்கிட்டு நல்ல முடிவா எடு''. அப்பா வெளியேற ஆகாஷ் பிரமை பிடித்தவன் போல படுத்திருந்தான். சற்று நேரத்தில் அம்மா வந்தாள்.''

''நா கொஞ்சம் கடைக்குப் போய்ட்டு வரணும். உனக்கு ஏதாவது வேணுமா...?''

''போய்ட்டு வா...''

''போய்ட்டு வர ஒரு மணி ஒண்ற மணி ஆவும். உங்கப்பா இருக்கார். ஏதாவது வேணும்னா அவரைக் கேளு'' என்றபடி சாரதா கிளம்பினாள்.''

''அவள் அந்தப் பக்கம் போனதும் இந்தப் பக்கம் சம்பத் அவசரமாக சங்கீதாவின் வீட்டுக்குப் போன் செய்தார்.

''நாந்தாம்மா அப்பா பேசறேன். உங்கம்மா வெளில போயிருக்கா. வரதுக்கு ஒரு மணி ரெண்டு மணி ஆகும். நீ உடனே சரண்யாவையும் கூட்டிக்கிட்டு இங்க வா. உன்னால வர முடியாட்டி சரண்யாவையாவது அனுப்பி வை.''

''இல்லப்பா நானும் வரேன்'' சங்கீதா போனை வைத்துவிட்டு மாமியாரிடம் சொல்லிக் கொண்டு சரண்யாவோடு உடனே கிளம்பினாள். அவளுக்கென்று பிரவீண் வாங்கிக் கொடுத்திருந்த சிறிய மாருதி காரில் இருபதே நிமிடத்தில் அங்கு வந்தாள். அப்பா அவர்களை முதலில் தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.''

''எதுக்குப்பா இவ்ளோ அவசரமா... கூப்ட்டீங்க?''

''விஷயம் தெரியுமா உனக்கு. சுஜிதாவோட அப்பா ஆகாஷ்கிட்ட பேசியிருக்கார். பளிச் பளிச்சுனு பேசி தன் பெண்ணை இவனுக்கு தர இஷ்டமில்லன்னு சொல்லியிருக்கார். ஒரு அப்பாவா என் கோணத்துல நின்று யோசிச்சு பார். என் உணர்வு உனக்கு புரியும்னு சொல்லியிருக்கார்.''

''கஷ்டமே...! அண்ணா ரொம்ப அப்ஸெட் ஆய்ட்டானா...?''

''பின்னே...? ஆனா யோசிக்க ஆரம்பிச்சுட்டான்.. சுஜிதாவை இனி எதிர்பார்க்கறதுல எந்த அர்த்தமும் இல்லன்னு புரிஞ்சுக்கிட்டான். இதுதான் சரியான சமயம்னு நா சரண்யாவைப் பத்தி அவன் மனசுல உறைக்கறா மாதிரி பேசிட்டேன். அந்த நல்ல மனசு இன்னமும் உனக்காக காத்துட்ருக்குடான்னு சொல்லிட்டேன். நா சொன்னது சரிதானே சரண்? உன்னைக் கேக்காமயே சொல்லிட்டேன். எம்பிள்ளை எழுந்து நடப்பான்னு நீயாவது நம்புவயா..? நம்பி அவனுக்கு கழுத்தை நீட்டுவயாம்மா...?''

''மாமா....''

''அண்ணன் இதுக்கு ஒத்துப்பானாப்பா? சுஜிதா மாதிரி தானே சரண்யாவும், இவளை மட்டும் எதுக்கு கஷ்டப்படுத்தணும்னு கேட்டா...?''

''இது எனக்கு கஷ்டமில்ல சங்கீதா... சரண்யா சட்டென்று சொல்ல, சம்பத் புன்னகைத்தார்.

''நா சாதாரண மனுஷி மாமா... ஆகாஷ்க்கு இப்டி ஆனதுனாலதான் சுஜிதா விலகிப்போனான்னு சீப் ரேட்ல சந்தோஷப்படலன்னாலும் இது எனக்கு கிடைச்சிருக்கற ஒரு வாய்ப்புன்னு வெளிப்படையா ஒத்துக்கறதுலயோ ஏத்துக்கறதுலயோ எனக்கு எந்த தயக்கமும் இல்ல. கடசி வரை ஆகாஷோட அருகாமைல இருக்கறதுதான் என்னைப் பொறுத்தவரை சுகம்.''

''வெரிகுட் சரண். இந்த யதார்த்தம்தான் உங்கிட்ட எனக்கு பிடிச்ச விஷயமே. போ கீழ போய் ஆகாஷோட மனசு விட்டுப் பேசு. குழம்பிக் கிடக்கற அவன் மனசுக்கு தெளிவைக் குடு. மத்ததை நா பாத்துக்கறேன். இப்பதான் எனக்கு புது தெம்பே வந்திருக்கு. நாமள்ளாம் சேர்ந்து உற்சாகமும், நம்பிக்கயும்

கொடுத்தோம்னா ஆகாஷ் நிச்சயம் எழுந்து நடப்பான். அந்த நல்ல நாள் வெகு தூரமில்லன்னு எனக்குள்ள ஒரு குரல் சொல்லுது''

''சம்பத் சரண்யாவை கீழே அனுப்பி வைத்தார்.''

''இதுவரை எவ்வளவோ முறை அந்த அறைக்குள் சென்றிருக்கிறாள். எவ்வித தயக்கமும் இன்றி அவனுக்கு சிச்ருஷை செய்திருக்கிறாள். சர்வ சாதாரணமாக பேசிக் கொண்டிருந்திருக்கிறாள். ஆனால் இப்போது கால்கள் பின்னுக்கிழுத்தது. தேகத்தில் ஒருவித படபடப்பு ஊடுருவிற்று.''

தயங்கியபடி அவன் அறைக்கதவைத் தள்ளினாள். கதவு திறக்கும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த ஆகாஷ் சரண்யாவைக் கண்டதும் திகைத்தான். அப்பா சொன்னதெல்லாம் மனசுக்குள் முட்டி மோத, அவளையே இமைக்காமல் பார்த்தான். அவன் பார்வையின் தீட்சண்யம் தாங்காமல், அவள் விழிகளில் ஈரம் படர்ந்து உருண்டு திரண்டு கன்னத்தில் உருளத் தயாராயிற்று.

பணத்தினால் உண்மையான சுகம் பெற முடியாது. கணவனோ மனைவியோ, பிள்ளைகளோ அனைவரையுமே அவர்களுக்காக இல்லாமல் நமக்காகவே நேசிக்கிறோம். என் கணவன், என் பிள்ளை, என் மனைவி என்ற பற்றினால் நேசிக்கிறோம். இந்த 'நான்', 'என்னுடையது' என்பதே நாம் நேசிக்கக் காரணம். நமக்கும் அதற்கும் ஆன்மிகத் தொடர்பு இருக்கிறது. அந்த ஆன்மிக அறிவைப் பெறுவதே இன்பந்தருவதாகும்.

–தரகதாரண்யம்.

''சாரதா இருட்டில் அமர்ந்திருந்தாள். வீட்டில் யாருமில்லை. மனசைப் போலவே வீடும் இருந்தது. இடமாற்றம் தேவையென்று டாக்டர் சொன்னதைத் தொடர்ந்து ஆகாஷை சங்கீதா தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வதாக சொன்னபோது சாரதாவுக்கு மறுக்க முடியவில்லை. எப்படியோ பிள்ளை நல்லபடியாக தேறி எழுந்து நடமாடினால் போதுமென்றிருந்தது. தன்னாலும் பார்த்துக் கொள்ள இயலாத நிலையில் சங்கீதா அவனை அழைத்துச் சென்றதும் ஒரு விதத்தில் நல்லது என்றே நினைத்தாள் அவள். பாவம் அவனுக்கும் இங்கே யார் இருக்கிறார்கள் பேச்சுத் துணைக்கு! அங்கேயிருந்தாலும் சங்கீதாவும் பிரவீணும் சிரிக்க சிரிக்க ஏதாவது பேசி பொழுது போக உதவுவார்கள்.''

''சாரதா பெருமூச்சு விட்டாள். எப்படி இருந்த வீடு எப்படியாகி விட்டது! சங்கீதாவின் கல்யாணம் ஜாம்ஜாமென்று நடக்கும். அதைத் தொடர்ந்து ஆகாஷ் சுஜிதா திருமணமும் ஆடம்பரமாக நடக்கும். சுஜிதா வந்த பின் வீட்டில் கலகலப்புக்கு பஞ்சமிருக்காது. பேரன், பேத்தி என்று வீடு நிறையும் என்றெல்லாம் எவ்வளவு கனவுகள். எல்லாமே பொய்த்து விட்டது. சுஜிதா இப்படி ஆகாஷை ஒதுக்கித் தள்ளிவிடுவாள் என்று யார் நினைத்தார்கள். கஷ்டகாலம் வந்தவுடன் கழித்துக்கட்டி விட்டுப் போவதுதான் காதலா...? அல்லது சுஜிதாவின் காதல் அந்த ரகமா...? பாவம் குழந்தை! பட்ட காலிலேயே படுவது போல் அடுத்தடுத்து எத்தனை கஷ்டங்கள்...! என்று இந்த கஷ்டங்கள் தீர்ந்து விடியும்? என்று அவன் பழையபடி கம்பீரமாக நடப்பான்? கல்யாணம், குடும்பம் குழந்தை என்று எல்லோரைப் போலவும் எப்போது வாழ்வான்..? இந்த வீடு என்று பழையபடி ஆகும்?''

சாரதா மீண்டும் பெருமூச்சு விட்டாள். ''எதுக்கு லைட்டைக் கூடப் போடாம உக்கார்ந்திருக்க?''

''சம்பத்தின் குரல் கேட்க எழுந்தாள்.''

''நீங்க ஏன் இவ்ளோ லேட்...?'' லைட்டை போட்டபடி கேட்டாள்.

''ஆகாஷைப் பாத்துட்டு வரேன்.''

''ஏன் என்னைக் கூப்ட்டா நானும் வந்திருக்க மாட்டேனா?''

''அதுக்கென்ன அடுத்த வாரம் போய்ட்டா போச்சு.''

''ஏன் அதுக்கு நடுல போனா என்னவாம்...?''

''ஒண்ணுமில்லையே தாராளமா போய்ட்டு வா. என்னால கூட வர முடியாது.''

''சம்பந்தியம்மா மூஞ்சில முழிக்கவே என்னமோ மாதிரி இருக்கு.''

''எல்லாம் உன் பிரமை. அவங்க உன்னை விசாரிச்சுக்கிட்டே தான் இருக்காங்க. வரச் சொல்லுங்க. அவங்களும் இங்க கொஞ்ச நாள் இருக்கட்டுமேன்னு சொன்னாங்க இன்னிக்குக் கூட.''

''சாரதா பதில் சொல்லவில்லை. எல்லோரும் நல்லவர்கள்தானா..? தனக்குத்தான் யாரையும் புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டதா? இருந்தாலும் எல்லாரும் குறை சொல்லும் அளவுக்கு தான் அப்படி ஒன்றும் கெட்டவள் அல்லவே! பின் ஏன் தன்னை யாருக்கும் பிடிக்கவில்லை. பணம், அந்தஸ்து என்றிருப்பது அவ்வளவு பெரிய குற்றமா? ஊர் உலகத்தில் எத்தனை பேர் இப்படியில்லை? சின்ன வயதில் அவள் பட்ட கஷ்டம் அவளுக்குத் தானே தெரியும். பணம்தான் பெரிதென்று தோன்ற ஆரம்பித்ததும் அந்த கஷ்டங்களால் தானே! தான் பட்ட கஷ்டம் தன் குழந்தைகளுக்கு எந்த காலத்திலுமே வராமலிருக்க வேண்டும் என்று நினைப்பது தவறா? இது ஏன் யாருக்கும் புரியமாட்டேன் என்கிறது.''

''சாரதா, சம்பந்தி வீட்டுக்கு போகலாமா வேண்டாமா என்று யோசித்த அதே நேரம் சம்பத்திற்கு வேறு வித கவலை. ஒருவேளை இவள் அங்கே போனால் சரண்யாவை அங்கு பார்த்துவிட்டு ஏதாவது கலாட்டா பண்ணுவாளா? அங்கிருந்தும் விரட்டுவாளோ..? கூடியவரை இப்போதைக்கு இவள் அங்கு செல்லாமல் இருப்பதே உத்தமம் என்று நினைத்தார் அவர். போகாதே என்று சொல்லவும் முடியாது. அவள் தானாக புறப்பட்டுப் போகிறாள் என்று தெரிந்தால் முன்கூட்டி சங்கீதாவுக்கு தகவல் சொல்லி சரண்யாவை அவள் கண்ணில் படாதவாறு இருக்கச் சொல்லலாம். இப்படி நினைத்தவர் போனை எடுத்து பெண்ணின் வீட்டுக்கு பண்ணினார்.''

''நாந்தாம்மா பேசறேன்''

''என்னப்பா...? அதுக்குள்ள பிள்ளை ஞாபகமா?''

''அதில்ல... ஒரு வேளை உங்கம்மா அங்க வந்தா சரண்யாவை அவ கண்ல படாம பார்த்துக்கோன்னு சொல்லத்தான்.''

''அம்மா வரட்டும் நா பார்த்துக்கறேம்ப்பா''

''பிரச்சனை எதுவும் வேணாம் சங்கீதா..''

''பயப்படாதீங்கப்பா... அம்மா மனசு நோகாம நா பேசிக்கறேன் சரியா...?''

''சங்கீதா போனை வைத்தாள்.''

''யாரு...?'' ஆகாஷ் கேட்டான்.

''அப்பாதான். அம்மாக்கு உன்னைப் பாக்கணும் போல இருக்காம். வந்தாலும் வருவான்னார்.''

''எதுக்கு.. இங்கேர்ந்தும் சரண்யாவை விரட்டவா...? வர வேணாம்னு சொல்லு'' ஆகாஷ் சட்டென்று சொல்ல சங்கீதா புன்முறுவலோடு அவனைப் பார்த்தாள். இந்த அளவுக்கு

அவன் சரண்யாவிடம் கரிசனம் கொண்டிருந்ததைக் கண்டு சந்தோஷமாக இருந்தது. தன் பேச்சு நினைத்து ஆகாஷே வியந்துதான் போனான். சுஜிதா இனி வரமாட்டாள் என்பது புரிந்த பிறகு, சரண்யாவின் அன்பு பற்றி அப்பா அவனிடம் பேசிய பிறகு, அதுவரை சாதாரணமாகத் தெரிந்த சரண்யா ஆழ்ந்து கவனிக்கத்தக்கவாளாக மாறி விட்டாள். அவளறியா தவாறு அவளை கவனிப்பதில் ஒரு சுவாரசியமிருந்தது. அந்த எளிமையும், அமைதியும் இயல்பான அழகும் ஏதோ விதத்தில் அவனை ஈர்த்தது நிஜம்... அப்பா சொன்னதன் பிறகு அவளிடம் சகஜமாகப் பேச முடியவில்லை. ஒருவித லஜ்ஜை மேலிட்டது. அவளும் மெல்லிய கூச்சத்தோடுதான் அவனோடு பேசினாள். அவனது தேவைகள் முழுக்க அவள்தான் கவனித்துக் கொண்டாள். அவளது உதவியோடு தான் பிஸியோ தெரபிகளை செய்தான் அவன்.

''நா எழுந்து நடப்பேனா சரண்?'' தினமும் அவளிடம் அவன் கேட்கும் கேள்வி இது. ''கண்டிப்பா...!'' இது அவள் சொல்லும் பதில்.

''எனக்கு ஏன் இப்டியாச்சு சரண்? ஏன் எல்லாமே தப்பாய்டுச்சு...?''

''நல்லதோ கெட்டதோ நமக்கு வருவதைத் தடுக்க முடியாதுன்னு எங்கப்பா அடிக்கடி சொல்லுவார்.''

''சுஜிதாவைப் பத்தி நீ என்ன நினைக்கற?'' தைரியமாக ஒரு முறை அவளிடம் கேட்டுவிட்டான்.

''என்ன நினைக்கறேன்னா..?''

''இல்ல... திடீர்னு அவ இப்டி விலகிப் போய்ட்டாளே... அதைப் பத்தி...''

''அவ பிறந்த சூழல், வளர்ந்த சூழல் இதையெல்லாம் வெச்சுப் பார்த்தா அவ முடிவுல எனக்கு எந்த ஆச்சர்யமும் ஏற்படல. ஏன் உங்களுக்கு கஷ்ட்டமார்க்கா...? அவளை மறக்க முடியல இல்ல...?''

''இல்ல... வருத்தமா இருக்கு. தப்பான ஆள்கிட்ட என் காதலை வீணடிச்சுட்டேனேன்னு இருக்கு. நா சின்சியராதான் இருந்தேன் சரண். ஆனா அதே சின்சியாரிட்டி அந்த பக்கம் இல்லாததுக்கு நா என்ன செய்ய முடியும்? அப்பா ஆரம்பத்துலேர்ந்தே சொன்னார். நாந்தான் புரிஞ்சுக்கல. ஒரு விதத்துல இந்த ஆக்ஸிடென்ட் ஆனது கூட நல்லதுக் குத்தான்னு தோண்றது. கஷ்டம்னு வந்தாதானே, யார் கூட இருக்காங்க, யார் ஜூட் விடறாங்கன்னு தெரிஞ்சுக்க முடியுது! இருந்தாலும் யோசிச்சுப் பார்க்கும் போது சுஜிதா மேல கோவம் வரல. நா இருக்கற நிலைல எந்தப் பெண்தான் என்னைக் கட்டிக்க விரும்புவா...? அல்லது என் சுயநலத்துக்காக ஒரு பெண்ணோட வாழ்க்கையை வீணடிக்க எனக்கு தான் என்ன உரிமை இருக்கு...?''

''அவன் நிறுத்த சரண்யா திகைப்போடு அவனைப் பார்த்தாள். சற்று நேரம் மௌனமாய் நகர ஆகாஷே அந்த மௌனத்தைக் கலைத்தான்.''

''என்ன சரண் மௌனமாய்ட்ட...?''

''வெளிப்படையா உங்ககிட்ட ஒரு விஷயம் கேக்கலாமா ஆகாஷ்..?''

''தாராளமா...?''

''இப்பவும் ஒரு பெண் தானா விரும்பி உங்களை கல்யாணம் பண்ணிக்க நினைச்சா அவளுக்கு என்ன பதில் சொல்வீங்க...?''

''ஆகாஷ் அவளை உற்றுப் பார்த்தான். அவள் கேள்வியின் ஆழத்திலிருந்த அர்த்தம் அவனுக்கு நன்றாகவே புரிந்தது. அவன் சில வினாடிகள் கண் மூடி யோசனையிலாழ்ந்தான். யாராயிருந்தாலென்ன? நியாயங்கள் ஏன் மாற வேண்டும்...?''

''அவன் கண் திறந்து அவளைப் பார்த்தான்.''

''இல்ல சரண்யா. யாராயிருந்தாலும் என் பதில் நோ தான். எந்தப் பொண்ணும் என்னால கஷ்டப்பட வேண்டாம்.''

''நீங்க நிச்சயம் நடப்பீங்க ஆகாஷ்!''

''நடந்தப்பறம் அதைப் பத்தி யோசிக்கறேனே.''

''யோசிக்கறேன்னு சொன்னதுக்கே நன்றி.''

''நீ எதுக்கு நன்றி சொல்ற?''

''சரண்யா பதில் சொல்லாது புன்னகைத்தபடி அவன் பக்கத்தில் கிடந்த ஹிந்து பேப்பரை எடுத்தாள். இரண்டாம் பக்கத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் விழிகளை மேய விட்டாள். நேஷனல் ஜியாக்ரபிக் நிகழ்ச்சிகளை படித்தவள் விழிகள் சட்டென்று பிரகாசித்தன. கழுத்தை திருப்பி மணி பார்த்தாள்.''

''எட்டு மணிக்கு ஒரு நல்ல டாக்குமென்ட்டரி இருக்கு ஆகாஷ். நீங்க நிச்சயம் பார்க்கணும். இன்னும் பதினஞ்சு நிமிஷம் இருக்கு எட்டாக. நல்ல காலம் எதேச்சையா புரோக்ராம்ஸ் பார்த்தேனோ தெரிஞ்சுதோ''

''என்ன டாக்குமென்ட்ரி?''

''நீங்களே பாருங்க புரியும். நாலஞ்சு மாசத்துக்கு முந்தி நா பார்த்தேன். பார்த்துட்டு அப்டியே உக்காந்துட்டேன். என்ன சொல்றதுன்னு தெரியல.''

''அவள் சொல்லச் சொல்ல ஆகாஷின் ஆர்வம் அதிகரித்தது. எட்டாக இன்னும் பத்து நிமிடமிருந்தது.''

''சரண்யா ரிமோட்டை எடுத்து டி.வி.யை ஆன் பண்ணினாள். ஆகாஷின் தலைக்கடியில் இன்னும் இரண்டு தலையணைகளை வைத்து அவன் சற்றேதலை உயர்த்தி பார்க்க உதவினாள்.''

''டாக்குமென்ட்ரியின் முதல் இரண்டு நிமிடங்களிலேயே ஆகாஷ் அயர்ந்து போனான்.''

டான் எனும் இளைஞன், கிட்டத்தட்ட உடம்பின் எந்த அங்கமுமே இயங்காதவன். கடுமையான ஸ்பாஸ்டிக். தலை

முதல் கால் வரை எல்லா உறுப்பும் கட்டுப்பாடிழந்து ஆடிக் கொண்டிருந்தது. பேச முடியாது. நடக்க முடியாது. கைகால் அசைக்க முடியாது. அவனிடம் முழுதாக இருப்பது அவனுடைய எண்ணங்களும், நம்பிக்கையும் மட்டும்தான். அந்த எண்ணங்களையும் வெளிப்படுத்த அவனால் இயலவில்லை. அவனைப் புரிந்து கொள்ள யாரும் இல்லை. அவனுக்குள்ளும் சில கனவுகளும் லட்சியங்களும் இருப்பதை உணர்ந்து கொள்ள எவரும் இல்லை. இவனால் என்ன முடியும்? அய்யோ பாவம் என்ற இரக்கப் பார்வையைத் தவிர வேறு ஏதும் அவன் கண்டதில்லை. கிட்டத்தட்ட பூமியில் விழுந்து விட்ட வேண்டாத உயிர் என்று அனைவரும் கைவிட்ட நிலையிலும் அவன் நம்பிக்கையோடு தன்னைப் புரிந்து கொள்ளும் ஒரு ஜீவனைத் தேடுகிறான்.

அப்படி ஒரு ஜீவன் அவனுக்கு உதவ முன்வருகிறது. அவனுக்கு கம்ப்யூட்டர் கற்றுத்தர முன்வருகிறார் அந்த மனிதர். தலையில் ஒரு பெல்ட் கட்டி நெற்றிப் பக்கமிருந்து நீளும் ஒரு குச்சியினால் சிரமப்பட்டு குனிந்து கம்ப்யூட்டரில் அந்த குச்சியினால் எழுத்துக்களை அழுத்தி அழுத்தி தன் எண்ணங்களையும் ஆசைகளையும் அவன் வெளிப்படுத்த அந்த மனிதர் வியந்து போகிறார். ஒரு நல்ல ஓவியனாக வர வேண்டும், ஓவியப் பயிற்சியில் பட்டம் பெற வேண்டும். இதுதான் அந்த ஊனமுற்ற இளைஞனின் ஆசை, லட்சியம் முடியுமா உன்னால்? அவர் கேட்க அவன் முடியும் என்று கம்ப்யூட்டர் மூலமே பதில் சொல்ல அவர் அவனுக்கு உதவ தீர்மானிக்கிறார். ''உனக்கு இது வேண்டாத வேலை!'' தெரிந்தவர் அறிந்தவர் எல்லோரும் அவரை கேலி செய்கிறார்கள். அவனால் எதுவும் முடியாது. கை கால் இயங்குபவனுக்கே ஓவியம் சிரமமான விஷயம். இந்நிலையில் எதையுமே அசைக்க இயலாதவனுக்கு எப்படி இது சாத்தியமாகும்? நேரத்தை வீணாக்காதே விட்டுவிடு! என்று அவர்கள் அவருக்கு அறிவுரை சொல்ல, அவர்

இன்னும் உறுதியாய் அவனுக்கு உதவியே திருவது என்று முடிவு செய்கிறார்.

''வண்ணக்குப்பிகள், வரைவதற்கான பேப்பர், போர்டு, பிரஷ் எல்லாம் வாங்கி வருகிறார். அவன் தலையில் விசேஷ பெல்ட் கட்டி அதில்குச்சிக்கு பதிலாக தூரிகையைப் பொருத்துகிறார். லொட லொடவென்று ஆடிய தலையை தன் இரண்டு தோள் பட்டைகளால் இறுக்கிக் கொண்டு தலையைத் தாழ்த்தி வண்ணங்களில் தூரிகையை முக்கி ஓவியம் தீட்ட ஆரம்பிக்கிறான் டான். அந்த மனிதர் எடுத்த பிரயத்தனங்கள் வீண் போகவில்லை. நூறு பர்ஸன்ட் ஊனம் கொண்ட டான் தன் தலையில் பிரஷ் பொருத்தி வரைந்த ஓவியங்கள் ஊனமற்று பிரகாசித்தன.அற்புதமான ஓவியங்களை தீட்டுகிறான் அந்த இளைஞன். அதுமட்டுமல்ல, கம்ப்யூட்டரில் அவன் உருவாக்கும் வீடுகளின் மாடல்கள் ஒரு உதவியாளனால் மினியேச்சர் மாடல்களாக செய்யப்பட, அவனுடைய மாடல்களும், ஓவியங்களும் பல பரிசுகள் பெறுகிறது. ஏளனமாய் பார்த்தவர்கள் அவ்வளவு பேரும் பிரம்மிப்போடு அவற்றைப் பார்த்து வியக்கிறார்கள். டாஸன் பல்கலைக் கழகத்தில் டான் ஓவியப் படிப்பில் பட்டம் பெறுகிறான். பட்டமளிப்பு விழாவுக்கு சக்கர நாற்காலியில் அவன் வரும்போது அவ்வளவு விழிகளும் கண்ணீர் சிந்தி வரவேற்கிறது.''

''மேடையில் அவன் பட்டம் வாங்கிய போது அவன் தாய் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறாள். பார்வையாளர்கள் விழிகளிலும் கண்ணீர் கரகோஷம் விண்ணைப் பிளக்கிறது. உடலில் எவ்வித இயக்கமும் இல்லாத டான் இப்போது ஓவியப் பட்டதாரி கம்ப்யூட்டர் புலி. அவனைப் பற்றிய குறிப்புகளோடு டாக்குமென்ட்ரி நிறைவு பெற ஆகாஷ் விழிகள் பொங்கி வழிய பார்த்துக் கொண்டிருந்தான். யாரும் யாரோடும் பேசவில்லை. பிரம்மிப்பில் வாயடைத்துப் போயிருந்தது. கிட்டத்தட்ட அரைமணி நேரம் எவ்வித

பேச்சுமின்றி அந்த இளைஞனின் சாதனைகளையே அசை போட்டபடி கிடந்தான் ஆகாஷ். அவன் யோசிக்கட்டும் என்று நினைத்தபடி டி.வி.யை அணைத்துவிட்டு எழுந்தாள் சரண்யா.''

''இத்தனை கடுமையான ஜனத்திலும் இந்த இளைஞனால் இவ்வளவு சாதனை செய்ய இயலும்போது என்னால் முடியாதா? தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். முடியும் என்று பதிலும் சொல்லிக் கொண்டான். நிச்சயம் முடியும் எனக்கு பேச வரும், எழுத வரும், பாட வரும். இது பிறவி நோயல்ல. விபத்தினால் விளைந்தது. விதி என்று இதனை ஏற்றுக் கொள்வதை விடுத்து தன்னம்பிக்கையோடு இதனை எதிர்த்தால் நிச்சயம் என்னால் ஜெயிக்க முடியும். மனம் ஜனமானால், நம்பிக்கை ஜனமானால் வாழ்க்கை ஜனமாகி விடும். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. முயற்சி செய் ஆகாஷ்..! இப்படியே படுத்துக் கிடக்காதே. முயற்சி செய். சாவுவருமென்றாலும்பரவாயில்லை. முயற்சி செய்து விட்டு செத்துமடி! அமிர்தம் உண்டாற்போல் எங்கிருந்தோ ஒரு அசுர பலம் அவனுக்குள் புகுந்தது. அவன் மெல்ல மெல்ல உடலை அசைக்க முயற்சித்தான். கதவிடுக்கு வழியே அவனது முயற்சிகளை கண்ணீரோடு பார்த்தாள் சரண்யா. நிச்சயம் அவன் ஜெயித்து விடுவான் என்ற நம்பிக்கை அவளுக்குள் நிறைந்தது.''

''அடுத்த நாள் காலை அவன் அறைக்குச் சென்றவளுக்கு இனிய அதிர்ச்சி காத்திருந்தது. உடம்பெல்லாம் தெப்பலாக நனைந்திருக்க, ஆகாஷ் படுக்கையில் சாய்ந்தாற்போல் கைகளை ஜன்றிக் கொண்டு அமர்ந்திருந்தான். சரண்யா அவன் அருகில் ஓடினாள். கை எடுத்தால் விழுந்து விடும் நிலையிலிருந்தவனின் இடுப்பில் கை கொடுத்து அவன் சரியாக அமர உதவினாள்.''

''வெரிகுட்... ஆகாஷ்... எக்ஸலன்ட்..! இந்த தன்னம்பிக்கையைத்தான் நா உங்ககிட்ட எதிர்பார்த்தேன்'' என்றவள் சந்தோஷமாக டெலிபோனை எடுத்து அவசரமாக

சம்பத்தை அழைத்தாள். எதிர்முனையில் ரிஸிவர் எடுக்கப்பட்டதுமே சம்பத்தான் பேசுகிறார்'என்ற நினைப்பில், ''ஆகாஷ் தானா எழுந்து உக்காந்துட்டார் அங்கிள். சீக்கிரம் வாங்களேன்'' என்றாள் உற்சாகத்தோடு. ரிஸிவரை காதில் வைத்திருந்த சாரதாவின் முகம் மாறியது. பிள்ளை எழுந்து உட்கார்ந்தான் என்ற சந்தோஷச்செய்தியை விட சரண்யா அங்குதான் இருக்கிறாள் என்ற விஷயம்தான் அவளை தாக்கியது.''

என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையும் இறைவன் துணை நிற்பான் என்ற கடவுள் நம்பிக்கையும் செயல்படுவோம், நல்லன நடக்கும் என்ற பொது நம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கை நிச்சயம் வளமடையும்.

–ஜின்ஸ்.

''எல்லாரும் சேர்ந்து என்னை முட்டாளாக்கிட்டீங்க இல்ல?'' புருஷனிடம் சீறினாள் சாரதா. சம்பத் குத்துக்கல் மாதிரி அமர்ந்திருந்தார்.''

''அவளையும் அவனையும் சேர்த்து வைக்கத்தான் அவனை அங்க கூட்டிட்டு போனிங்களாக்கும் எல்லாரும்!''

''இதோ பார் சாரதா நீ வீட்டை விட்டு விரட்டி விட்டுட்டா அந்த பொண்ணு செத்துடணுமாக்கும். அவளைக் கொண்டு போய் தன் வீட்ல வெச்சுக்க சங்கீதாக்கு சகல உரிமையும் உண்டு. அதைக் கேக்க உனக்கு எந்த உரிமையும் இல்ல. புரிஞ்சுதா?''

''தாராளமா இருந்துட்டு போகட்டும். ஆனா என் பிள்ளையை அங்க கூட்டுட்டு போய் விட்ருக்கீங்க பாருங்க.

அதான் தப்பு. போதும் அவன் அங்க இருந்தது. போய் கூட்டிட்டு வாங்க இப்பவே.''

''அவன் இங்க வர விரும்பல சாரதா''

''அப்டின்னு அவன் சொன்னானா...?''

''பின்னே சந்தேகமிருந்தா போன் பண்ணித்தரேன். நீயே அவங்கிட்ட கேட்டுக்கயேன்.''

''நீங்க என்ன பண்ணிக் கொடுக்கறது? எனக்குத் தெரியாதாக்கும்?'' சாரதா ரிஸிவரை எடுத்து சங்கீதா வீட்டின் எண்களை அழுத்தினாள். எதிர்முனையில் சம்பந்தியம் மாளின் குரல் கேட்க சட்டென்று குரலை தணித்து பேசினாள்.

''சௌக்கியமா? நா சாரதா பேசறேன்''

''எப்டியிருக்கீங்க?''

''நல்லார்க்கேன். ஆகாஷ்கிட்ட கொஞ்சம் பேசலாம்னு...''

''பேசுங்களேன்... இதோ கொடுக்கறேன்''

''சற்று நேரத்தில் ஆகாஷ் லைனில் வந்தான். அவன் குரல் கேட்டதும் சாரதாவுக்கு அழுகை வந்தது.''

''எப்டிடா இருக்க...?''

''எழுந்து உக்கார ஆரம்பிச்சுட்டேம்மா. கூடிய சீக்கிரம் நடந்துடுவேன்.''

''பழனி முருகனுக்கு பாலாபிஷேகம் பண்றேன்னு வேண்டிக் கிட்டேண்டா. அந்த முருகன் கைவிடல. கூடிய சீக்கிரம் உன்னை மலை ஏற வெச்சுடுவான் பாரு. நீ உடனே இங்கே வந்துடுடா ஆகாஷ். நீ இல்லாம வீடே நல்லால்ல. சங்கீதாகிட்ட போனைக் குடு. நா சொல்றேன்.''

''அவசரப்படாதேம்மா. நா இன்னும் கொஞ்ச நாள் இங்க இருந்துட்டு வரேன்.''

''இந்த வீட்டையும் என்னையும் விட உனக்கு தங்கச்சி வீடு

உசத்தியா போய்டுச்சில்ல? வேணும்னா சங்கிதாவையும் மாப்ளயயும் இங்க வந்து கொஞ்ச நாள் இருக்கச் சொல்லேன்.''

''இன்னொரு ஆளும் அங்க வரணும்னு நா விரும்பறேன். அதுக்கு நீ அனுமதிப்பயாம்மா?''

''யாரு...?''

''சரண்யா! அவ அங்க வர நீ அனுமதிப்பன்னா சொல்லு. நா வரேன்.''

''சாரதா விக்கித்தாள். நேருக்கு நேர் ஆகாஷ் இப்படி கேட்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.''

''நிச்சயம் இதுக்கு நீ ஒத்துக்கமாட்டன்னு தெரியும்மா எனக்கு ஆகாஷ் சிரித்தான்.''

''அப்பொ... என்னைவிட உனக்கு அவ உசத்தியா போய்ட்டா இல்ல? வெளிப்படையா சொல்லுடா ஆகாஷ். நீ யாரைக் காதலிக்கற சுஜிதாவையா, இல்ல இந்த சரண்யாவையா?''

''சுஜிதாவை காதலிச்சேம்மா, அது நா நா செய்த தவறு. யோசிச்சு பார்த்தா காதல்ங்கற டெபனிஷன்க்கு அந்த காதல் கொஞ்சமும் பொருந்தலன்னு தான் சொல்லணும். நெருப்புல குதிச்சாலும், நீர்ல அடிச்சுக்கிட்டு போனாலும், புயல்ல சிக்கிக்கிட்டாலும் அழிஞ்சு போகாம இருக்கற அன்புதான் காதல்னா என் மேல சுஜிக்கு இருந்த அன்பு காதலே இல்ல. வெறும் தூரத்து பச்சை. இது அனுபவம் எனக்கு புரிய வெச்ச உண்மை! இத்தனை கஷ்டத்துக்கு அப்பறமும் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, எவ்வித சுகமும் கிடைக்காதுன்னு தெரிஞ்சுக்கிட்டும் என் கூட வாழத் தயாரா இருக்கா சரண்யா. எது காதல்னு எனக்கு புரிய வெச்ச தேவதை அவதாம்மா. அவளுக்கு அனுமதியில்லாத வீடு எனக்கும் வேண்டாம்'' ஆகாஷ் தீர்மானமாகச் சொன்னான்.

''சாரதா திகைத்தாள். பிள்ளை தன்னையே எடுத்தெறிந்து பேசி விட்டு சரண்யாவை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு பேசியதில் முகம் சிவந்தது.''

''வேணாம்டா.. எனக்குயாரும் வேணாம். எல்லாரும் எப்டியோ போங்க. பத்து மாசம் சுமந்து பெத்து வளர்த்து ஆளாக்கின பாவத்துக்கு அனுபவிச்சுதானே ஆகணும். அனுபவிக்கிறேன்!''

அழுகை பீறிட போனை வைத்தாள். எல்லா ஆத்திரமும் எதிரில் அமர்ந்திருந்த சம்பத்தின் மீது பாய்ந்தது.

''போய்த் தொலைய வேண்டிய தானே நீங்களும். போய் எல்லாரும் சந்தோஷமா இருங்க. நா செத்தா கூட யாரும் எட்டிப் பார்க்க வேண்டாம்.''

''சம்பத் புன்னகைத்தார்.''

''நீ மாறவே மாட்டயா சாரதா..? அந்த பொண்ணு உனக்கு என்ன கெடுதல் பண்ணினா''

''ஏன்? அவ மூணு லட்சம் கொடுத்துட்டா நா அவளுக்கு அடிமையாய்டணுமா...? அதைத்தான் திருப்பிக் கொடுத்தாச்சு இல்ல? எடுத்துக்கிட்டு எங்கயாவது ஒழிஞ்சு போய்ட வேண்டியதுதானே? எதுக்கு எம் பொண்ணு வீட்ல போய் உக்கார்ராளாம்? எப்படா என் பிள்ளை படுத்த படுக்கையாவான், வளைச்சு போடலாம்னு காத்துட்ருந் தாளாக்கும். இப்ப இவனைக் கட்டிக்க எந்த பொண்ணும் கிடைக்க மாட்டான்னு உடனே இவளை நா கட்டி வெச்சுடுவேன்னு கனவு காண்றாளாக்கும்! ஒரு நாளும் முடியாதுங்க! எனக்கு மருமகளாகற தகுதி எப்பவும் அவளுக்கு கிடையாது. நா பிச்சையே எடுத்தாக் கூட, இவ கோடியில புரண்டா கூட அவளை நா மருமகளேன்னு ஆசிர்வாதம் பண்ண மாட்டேன்!''

''பண்ணாட்டி போ...! யாரு கேட்டா உன் ஆசிர்வாதத்தை? நல்ல அம்மான்னா பிள்ளை இதயத்தையே அறுத்து எடுத்துக்கிட்டு போனாலும் நல்லாருடான்னு வாழ்த்துவா. உன்னைப் போல் ராட்சஸிகிட்ட போய் அதையெல்லாம் யாராவது எதிர்பார்ப்பாங்களா? நாய் வாலைக் கூட

நிமிர்த்திடலாம்டி சாரதா. நீ மட்டும் திருந்தவே போறதில்ல. அந்த நம்பிக்கையே எனக்கு போய்டுச்சு. ஆனா, பணத்தை விட்டெறிஞ்சுட்டேன்னு சொன்னயே. அந்த பணத்தை அவ எடுத்துக்கிட்டு போகல. எங்கிட்டயே திருப்பிக் கொடுத்துட்டு வெறுங் கையோடதான் போயிருக்கா. உன் பணத்தையும் நகையையும் மூட்டை கட்டி பத்திரமா வெச்சிருக்கேன். அதை எடுத்துத் தரேன். அதோட பேசு, சிரி, கொஞ்சு, மருமகளேன்னு கூப்டு. மனுஷங்க எதுக்கு உனக்கு?''

''சம்பத் வெறுப்போடு வார்த்தைகளை உமிழ்ந்துவிட்டு தன் பீரோவில் வைத்திருந்த அந்த சிறிய துணி மூட்டையைக் கொண்டு வந்து அவளெதிரில் பொத்தென்றுவைத்து விட்டு கிளம்பியவர், என்ன நினைத்தாரோ மறுபடியும் திரும்பி வந்து அந்த பணமூட்டையை எடுத்துக் கொண்டார்.''

''இதை எதுக்கு உங்கிட்ட கொடுக்கணும்? இது அவளோட பணம். அவங்கப்பா செத்து கொடுத்த பணம். இதை அவகிட்டயே சேர்க்கறேன். அதான் நியாயம். இந்த பணத்துலதான் அவ கல்யாணம் நடக்கணும். நடத்தி வைப்பேன்! மனசு மாறினா வந்து ஆசிர்வாதம் பண்ணு. இல்லாட்டி இங்கேயே இருட்டுல கிட. உன்னைக் கட்டிக் கிட்ட தோஷத்துக்கு கடசி வரை இங்க இருக்க வேண்டிய தலையெழுத்து எனக்கு மட்டும்தான். மத்தவங்களுக்கில்ல. நா போய் ஆகாஷை பார்த்துட்டு வரேன்.''

''அவர் பணத்தோடு கிளம்பிச் செல்ல சாரதா இடி விழுந்தாற்போல் சோர்ந்து அமர்ந்தாள்.''

டாக்டரே ஆச்சர்யப்பட்டார். ''உங்க வில் பவர்தான் ஆகாஷ். வேற ஒண்ணுமில்ல'' என்று பாராட்டினார்.

''சரண்யா கொடுத்த சக்தி டாக்டர்'' ஆகாஷ் அவளை சுட்டிக்காட்டினான்.

''அவ மட்டும் அன்னிக்கு அந்த டாக்குமென்ட்ரியப் பார்க்கச் சொல்லாம இருந்திருந்தா நா இவ்ளோ முயற்சி செய்திருப்பேனாங்கறது சந்தேகம்.''

''அப்டின்னா நீங்க அந்த டானுக்குத்தான் நன்றி சொல்லணும்'' சரண்யா சிரித்தபடி சொன்னாள்.

''அதென்ன டாக்குமென்ட்ரி..?'' டாக்டர் அவனை பரிசோதித்தபடி கேட்க ஆகாஷ் அந்த இளைஞனைப் பற்றி சொன்னான்.

''கிரேட்..!'' டாக்டர் வியப்போடு சொன்னார்.

''நாளைக்கு ஃபிஸியோதெரபிஸ்ட் வருவார் ஆகாஷ். உங்களை நிக்க வெக்கறது அடுத்த ஸ்டெப். நீங்க கோ ஆபரேட் பண்ணணும்.''

''நிச்சயமா''

''அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது சம்பத் வந்தார். பிள்ளையின் உடல் நிலையில் ஏற்பட்டிருந்த முன்னேற்றம் அவர் முகத்தில் மலர்ச்சியை ஏற்படுத்தியது.''

''டாக்டர் போனதும் அவர்கள் அனைவரும் ஆகாஷின் அருகில் அமர்ந்தார்கள். ஆகாஷ், அம்மா தன்னிடம் பேசியதைச் சொல்லி வருத்தப்பட, சம்பத் அதற்குப் பிறகு தனக்கும் அவளுக்கும் இடையில் நடந்த சம்பாஷணையைக் கூறினார்.

''கடவுளே மறுபடியும் அந்த பணத்தைக் கொண்டு வந்துட்டீங்களா...?'' சரண்யா சலித்துக் கொண்டாள்.

''உன் கூடப் பிறந்த அக்காவே இந்தப் பணத்துல பங்கு வேண்டாம், அது உன் பேர்லயே இருக்கட்டும்ன்னு பெருந்தன்மையா விட்டுக் கொடுத்திருக்கும் போது இதை நா மட்டும் எப்டி வெச்சுக்க முடியும் சரண்?''

சரண்யா பதில் சொல்லவில்லை. பணம் வந்தபோது ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொள்வோம். அதுதான்

நியாயம் என்று இவள் கூறியதும் சரவணன் மறுத்து விட்டான். ''உங்கப்பா உயிரோட இருந்து உங்கக்காவை எனக்கு கட்டிக் கொடுத்ததே பாக்கியம் சரண். உங்கக்காக்கு நா இருக்கேன். என்ன கஷ்டம் வந்தாலும் அவளை நல்ல படியா பார்த்துக்குவேன். இந்த பணம் அப்டியே உன் பேர்லயே இருக்கட்டும். உன் கல்யாணத்துக்கு ஆகும். இதுல பங்கு வாங்கறது மகா பாவம்!''

தீர்மானமாக சொல்லி விட்டான் சரவணன். சத்யா கொடுத்து வைத்தவள்தான். இப்படி ஒரு புருஷன் கிடைப்பது பூர்வ ஜென்ம புண்யம்.

''என்ன யோசிக்கற சரண்?'' மாமா அவள் தோளில் மெல்ல தட்டினார்.

''ம்... ஒண்ணுமில்ல நா இப்பொ என்ன செய்யணும் மாமா...?''

''அப்டி கேளு சொல்றேன்... நீ ஏதோ ஸ்கூல் ஆரம்பிக்கணும்னு சொன்ன இல்ல? இந்த பணத்தை வெச்சு அதை ஆரம்பி...''

''கரெக்ட்...!'' ஆகாஷும், சங்கீதாவும் அதை ஆமோதித்தார்கள். பிரவீண் தைரியம் கொடுத்தான்.

''வேளச்சேரில எனக்கு ஒரு வீடும் கொஞ்சம் நிலமும் இருக்கு சரண்யா. அந்த வீட்டை உன் ஸ்கூலா மாத்திக்க. உன் புண்யத்துல எனக்கும் கொஞ்சம் பங்குகிடைக்கட்டுமே!'' பிரவீண் சொன்னான்.

''முதல்ல அஞ்சுகிளாஸ் வரை நடத்த அனுமதி வாங்கிடுவோம். ஏழைக் குழந்தைகளுக்கு மட்டும்தான் இந்த ஸ்கூல். கல்வி இலவசம். ஆனா அதுக்காக டீச்சர்களுக்கு சம்பளம் கொடுக்க மாட்டோம்னு இல்ல. நல்ல சம்பளம் குடுப்பேன்.''

''சம்பளமில்லாம நா வந்து அங்க வேலை செய்ய விரும்பினா?'' சங்கீதா சிரித்தபடி கேட்டாள்.

''ம்... அப்டி யாராவது விருப்பப்பட்டு வந்தா வேணாம்னா சொல்லுவாங்க...?''

''உன் ஸ்கூல்ல எனக்கும் ஒரு வேலை தருவயா சரண்?'' ஆகாஷ் கேட்க சரண்யா முகம் மலர்ந்தாள்.''

''ஆக இது நம்ப ஸ்கூல். நம்ப ஸ்கூல்ல படிக்கற ஏழைக் குழந்தைகளும் ஆங்கிலம் பேசணும். நல்ல தமிழ் பேசணும்.''

''நல்லதைச் செய், அதை இன்றே செய்னு ஒரு வாக்கு இருக்கு. சீக்கிரம் வேலைகளை ஆரம்பிச்சுடுவோம்'' பிரவீண் நிஜமான உற்சாகத்தோடு சொன்னான். ஆரம்ப கட்ட வேலைகளை தான் பார்த்துக் கொள்வதாகக் கூறினான்.

''ஏம்பா வீட்டுக்குப் போனா டோஸ் விழுமா...? உம் பொண்டாட்டி சமைச்சு வெச்சிருப்பாளா?'' சங்கீதா கிண்டலாகக் கேட்டாள்.

''இல்லாட்டி நா சமைச்சு அவளுக்கு போட்டுட்டு போறேன்.''

''அம்மா எப்பொப்பா மனசு மாறுவா?''

''மாறுவா, நிச்சயம் மாறுவா. எனக்கு சரண்யா மேல நம்பிக்கை இருக்கு. ஆகாஷ் விஷயத்துலயே தன் பொறுமையாலயும் உறுதியான காதலினாலயும் ஜெயிச்சிருக்கறவ உங்கம்மா விஷயத்துல ஜெயிக்காமயா போய்டுவா? நிச்சயம் அவ அன்பை இவ வெளில கொண்டு வந்துடுவா பார். இதென்ன சினிமாவா சங்கீதா, கடைசி சீன்ல எல்லாரும் மனம் திருந்தி கை பிடிச்சுக்கிட்டு நெகிழ்ந்து உருகறதுக்கு...? இது ரியல் லைஃப்மா! மாற்றங்கள் மெதுவாதான் ஏற்படும். ஆனா நிச்சயம் ஏற்படும் என்ன சரண்..? ஜெயிப்ப இல்ல...?'''

''கண்டிப்பா மாமா. மாமியை விட்ர முடியுமா என்ன...?''

''அப்பொ நா கிளம்பறேன்'' சம்பத் எழுந்தார்.

''அடுத்த நாள் பிஸியோதெரபிஸ்ட் வந்தார். ஒரு பக்கம் சரண்யாவும், மறுபக்கம் சுவருமாகச் சேர்ந்து ஆகாஷை மெல்ல தூக்கி நிற்க வைத்தனர். நிற்க முடியாமல் அவன் தேகம் தடதடவென்று ஆடியது. பயத்தில் சரண்யாவைப் பிடித்திருந்த பிடி இறுகியது.

''அப்டிதான் இருக்கும் மிஸ்டர் ஆகாஷ். உங்க தன்னம்பிக்கையும் முடியும்ங்கற மந்திரமும்தான் இதுக்கு மருந்து. உங்க நரம்புகள் செயல்பட முயற்சி செய்ங்க...'' பிஸியோதெரபிஸ்ட் உற்சாகப்படுத்த ஆகாஷ் கடுமையாய் முயற்சித்தான். வியர்த்துக் கொட்டியது. அரைமணி நேர பிரயத்தனத்தில் அரை இன்ச் காலை நகர்த்தினான்.

''குட் வெரிகுட்... இதுவே முன்னேற்றம்தான். நா வேணா எழுதித்தரேன். சரியா ஆறாவது மாசம் நீங்க ஓடுவீங்க பாருங்க. கொஞ்சம் கொஞ்சம் நடக்க ஆரம்பிச்சதும் ஒரு வாக்கிங் ஸ்டிக் வெச்சுக்குங்க. போகப் போக அது தேவையிருக்காது'' பிஸியோதெரபிஸ்ட் பலவிதமான உடற்பயிற்சிகளை அவனுக்கு சொல்லிக் கொடுத்து தானே சிலவற்றை அவனுக்கு செய்ய வைத்தார். எப்படி செய்ய வைக்க வேண்டுமென்று சரண்யாவுக்கும் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போனார்.

''பதினைந்தாவது நாள் யாரையாவது பிடித்துக் கொண்டு இரண்டடி நடந்தான். அவனுக்கே சந்தோஷம் தாங்கவில்லை. உடற்பயிற்சிகளை சின்சியராகச் செய்தான்.

''சீக்கிரமே கல்யாணத்துக்கு நாள் பார்த்துடலாமா...?'' பிரவீண் உற்சாகமாகக் கேட்டான்.

''நோ... நா நல்லா நடக்கணும். டாக்டர்கிட்ட ஒரு சர்ட்டிபிகேட் கேட்கலாம்னு இருக்கேன். அவர் ஓகேன்னு சொன்னாதான் கல்யாணம்.''

அவன் சொல்ல சரண்யாவின் முகம் மாறியது. அன்று மதியம் அவனுக்கு சாப்பாடு கொடுக்கும் போது மௌனமாயிருந்தவளை வியப்போடு பார்த்தான் ஆகாஷ்.

''மௌன விரதமா...?''

''ப்ஸ்ஸ்..!''

''கோவமா...?''

''நா நடக்க ஆரம்பிச்சட்டேன்னு கோவமா...?''

அவன் கிண்டலாகக் கேட்க பக்கென்று சிரித்தாள்.

''இப்பொ சொல்லு எதுக்கு இந்த மௌனம்?''

''பின்னே...? டாக்டர் ஓகே சொன்னாதான் கல்யாணம்னு சொன்னா..?''

''உன் நல்லதுக்காகத்தான் அப்டி சொன்னேன்.''

''என் நல்லது எதுன்னு எனக்கு தெரியும்.''

''அப்டியா, எது... சொல்லேன் கேப்போம்.''

''பேசாதீங்க ஆகாஷ், வேணும்னே என்னை வம்புக்கு இழுக்கறீங்க.''

''அப்டியா தோணுது.. உனக்கு...?''

''பின்ன...?'' சரண்யா ஜன்னலருகில் சென்று நின்றாள்.

''இங்க வாயேன் சரண்''

''மாட்டேன்''

''உனக்கு ஒண்ணு தரேன். வந்து வாங்கிக்க''

''எதுவும் வேணாம்''

''அவ்ளோதானா எம்மேல ஆசை உனக்கு?''

''போகட்டும். உனக்கு ஆசையில்லாட்டா என்ன? எனக்கு இப்பதான் பொத்துக்கிட்டு வருது. நானே அங்க வரேன் பார்''

ஆகாஷ் படுக்கையிலிருந்து மெல்ல எழுந்தான். வாக்கிங் ஸ்டிக்கை பிடித்தபடி பல்லைக் கடித்துக் கொண்டு மிக மிக மெதுவாக நடந்தான். ஓரிடத்தில் தடுமாறி விழப் போக சரண்யா சட்டென்று தாங்கிப் பிடிக்க அவள் தோளில் சாய்ந்தவன் தன் இதழ்களுக்கு வெகு அருகாமையிலிருந்த அவள் கன்னத்தில் முத்தமிட்டான். உடலெங்கும் ஒரு இன்ப அதிர்ச்சி பரவ சரண்யா கண்களை மூடிக் கொண்டாள். பரவசத்தில் விழிகளிலிருந்து நீர் உருண்டு வழிந்தது. இந்த அன்புக்குத் தானே அவள் ஏங்கினாள், தவமிருந்தாள், காத்திருந்தாள். இதோ இப்போது அது கையில் கிடைத்திருக்கும் நேரத்தில் இதைப் பார்த்து சந்தோஷப்பட அப்பா இல்லாமல் போய்விட்டாரே..! சந்தோஷமும் சங்கடமும் சமமாய் மனசில் பொங்க, உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''ஆகாஷ் வியந்தான். வருஷக்கணக்காக காதலித்தும் சுஜிதாவிடம் அவன் மறந்தும் கூட எல்லை மீறியதில்லை. ஒரு வேளை பிரிந்து விடுவார்கள் என்று தெரிந்ததால்தான் தெய்வம் அவன் மனசில் விபரீத சலனங்களை ஏற்படுத்தவில்லையோ என்று தோன்றியது. அவளிடம் அப்படி இருந்தவன் இதோ இந்த பெண்ணிடம் எப்படி நெகிழ்ந்து விட்டேன் என்று நினைத்தவனுக்கு சிரிப்பு வந்தது. இதுதான் காதலாக இருக்க வேண்டும். இவள் என்னுடையவள் என்ற உரிமையில் கொடுத்ததுதான் இந்த முத்தம்.''

''இப்டியே நின்னுட்டா எப்டி...? இன்னோண்ணு வேணும்னு அர்த்தமா...?''

''அவள் காதருகில் கிசுகிசுத்தான். சட்டென்று விலகினாள். இதுவரை ஏற்படாத வெட்கம் குப்பென்று பொங்கியதில் முகம் ரத்தமாய்ச் சிவந்தது.''

''சரியாய் ஆறாம் மாதம் ஓரளவுக்கு நன்றாகவே நடக்க ஆரம்பித்தான் அவன். பள்ளி ஆரம்பிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டது. அட்மிஷன் மும்முரமாக நடந்தது. ஆகாஷை அழைத்துச் சென்று ஸ்கூலைக் காட்டினாள்.''

''நா ரொம்ப சந்தோஷமா இருக்கேன் சரண்யா. இந்த அளவுக்கு சந்தோஷமா இதுவரை நிச்சயம் இருந்ததில்ல. நாம நாளைக்கு அம்மாவைப் போய்ப் பார்த்து பேசுவோம். கல்யாணத்துக்கு நாள் பார்க்கச் சொல்லுவோம். சட்டுனு சம்மதிக்க மாட்டாங்கதான். சம்மதிக்கற வரை தினமும் போவோம். எறும்பு ஊர ஊர அம்மியே தேயும்போது அம்மா கரைய மாட்டாளா என்ன...?''

''அதானே... கரையாம யார் விட்டா?'' சரண்யா சிரிக்க, ஆகாஷ் அவள் கைகளை கோர்த்துக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அந்த இறுக்கத்தில் தெரிந்த அன்பில் கரையத் தயாரானாள் அவள்.

வருவாள் காதல் தேவதை...

வித்யா சுப்ரமணியம்